கழக வெளியீடு, ககககூ

தனிப்பாடல் திரட்டு

உரைக் குறிப்புக்களுடன்

(முதற் பகுதி)

ஆசிரியர்:
கருப்பக்கிளர் சு அ இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.
1963

சுப்பிரமணிய அருட்டிரு சதாசிவ இராமசாமிப் புலவர் (1907)

Ed 1 Feb 1963

O31,1xN7
K3·1

TANIPPAADAL TIRATTU
(Vol I)

Appar Achakam, Madras-1.

91/4

பதிப்புரை

வடவேங்கடம் தென்குமரி கீழ்கடல் மேல்கடல் என்ற எல்லையுட்பட்ட தமிழகத்துப் பண்டைக்கால முதல் வாழ்ந்த பாவலர் பலராவர். அவராற் பாடப்பட்ட பாக்கள் பல தொகுக்கப்பட்டு, அகமும் புறமுமாக் வகுக்கப்பட்டு முறையே நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு எனவும்; பதிற்றுப்பத்து, புறநானூறு எனவும் வழங்குகின்றன. அகமும் புறமுங் கலந்த பாடல்களாகக் கலித்தொகையும் பரிபாடலும் வழங்கக் காண்கின்றோம். பத்துப் பாட்டும் கீழ்க்கணக்கும் ஒவ்வொரு புலவர் பாடிய தனித்தனி நூல்களாம். நாலடியார் மட்டுமே தொகை நூல் எனத் தோன்றுகிறது. எட்டுத்தொகை என்ற பெயரே தொகை நூல் என்பதை நன்கு விளக்கும். இவை சங்ககாலத் தொகைநூல்களாக நின்று தமிழகத்தின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றன.

இடையிற் பல ஆண்டுகளாகப் பாவலர் பாடிய பாக்கள் தொகுக்கப்படாது மறைந்துபோயின போலும். துஞ்சியவையொழிய எஞ்சிய பாடல்களை இவ்விருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த இராமநாதபுரம் மன்னர் பொன்னுச்சாமித் தேவர் தம் பெருமுயற்சியால் சந்திர சேகர கவிராச பண்டிதர் தமிழகம் எங்கணுஞ் சென்று மிக முயன்று தேடித் தொகுத்துத் தரத் தனிப்பாடற்றிரட்டு எனப் பெயரிட்டு அச்சிற்பதித்து வெளியிட்டனர். அப் பாடல்களுக்கு உரையும் அவரே எழுதுவித்தனர் போலும்.

அதனை யடிப்படையாகக் கொண்டு அப்புத்தகத்திலுள்ள பல பாடல்களுடன் புதிய பல பாடல்கள் சேர்த்து

முதற்பாகம் இரண்டாம் பாகம் எனக் குறிப்புரையுடன் புஷ்பரத செட்டியார் பதித்து வெளியிட்டனர். பின்னரும் அப்புத்தகங்களில் உள்ள பாக்களை எடுத்தும் விடுத்தும் புதிய சில பாடல்களைத் தொகுத்தும் தனிச்செய்யுட் சிந்தா மணி எனப் பெயரிட்டுச் சண்முகஞ் செட்டியார் வெளியிட்டனர். மதுரைப் பதியிற் சிலகாலம் வதிந்த மு. ரா. கந்த சாமிக் கவிராயரவர்களும் பல பாடல்களைத் தேடிக் கண்டு தொகுத்து மூவாயிரத் தெண்ணூற்றுப் பதினைந்து பாடல்கள் கொண்ட புத்தகமாகத் தனிச் செய்யுட் சிந்தாமணி என்ற பெயரையேயமைத்து வெளியிட்டனர்.

இவ்வாறு தமிழ் நாட்டில் தனிப்பாடல்கள் பல உலவுவன தமிழ் மொழியின் தெய்வத் தன்மைக்கும் தொன்மைக்கும் வன்மைக்கும், புலவர் பன்மைக்கும் எடுத்துக்காட்டாக இலங்குகின்றன. வாழ்வு நன்மைக்கும் இவையே வழிகாட்டுவனவாம்.

தனிப்பாக்கள் சொல்லின்பம், பொருளின்பம், அமை யத்திற்கேற்ற சொல்லாற்றல் பலவகைக் கற்பனை அலங் காரம் அமைந்தவைகளாகக் காணப்படுவதால் அவற்றிற் பலவற்றை ஆய்ந்து நல்லன தொகுத்து நம் கழக வாயிலாக வெளியிடக் கருதினம். கருப்பக்கிளர். திரு. சு. அ. இராம சாமிப் புலவர் அதற்குத் தகுதியுடையவரெனத் தெரிந்து தொகுத்துத் தருமாறு கூறினம். அவர்கள் பழைய பாக்களோடு புதியவைகளைத் தேடியும் தற்கால அறிஞர்கள் பாடல்களையும் தொகுத்துக் குறிப்புரை வரைந்துதவினர். அதுவே இப்பொழுது “தனிப்பாடல் திரட்டு” என்ற பெயருடன் முதற் பகுதியாகக் கழகவாயிலாக வெளிவரு கின்றது. தொகுத்த அருமையும் பெருமையும் இந்நூலினை ஆயும் புலவர் பெருமக்கட்கே புலனும். ஏனையோர்க்குத் தோன்று என்பது இயற்கையே.

மேலும் பாடல்கள் பல தொகுத்து இரண்டாம் பகுதி, மூன்றும் பகுதி, நான்காம் பகுதியெனப் பதித்து வெளியிட அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. விரைவில் அவையும் வெளியிடுவாம். தமிழன்பர்கள் பலரும் கழகப்பணியைப் போற்றி அவற்றை வாங்கியும் வாங்குவித்தும் கற்றும் கற்பித்தும் தமிழ்நாடு முன்னேற்றமுற முயல்வார்கள் என முன்னுகின்றேம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

நூல்வடிவில் தொடர்நிலைச் செய்யுளாகச் செய்யப் பெறுமல் யாதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டுத் தனியாகச் செய்யப்பட்ட பாடல்கள் தனிப்பாடல் என்னும் பெயரைப்பெறும். பழங்காலத்துச் சான்றோர்கள் அவ்வப்போது பாடிய பாடல்கள் தனிப்பாடல்களாகவே அமைந்தன. அவை அக்காலத்திலேயே ஒன்று சேர்த்துத் திரட்டப்பட்டன. அதனுல் அவைகள் நூல்வடிவை யடைந் தன. சங்கநூல்கள் தனிப்பாடல்களால் அமைந்தனவேயாம். அப்பாடல்கள் அக்காலத்தில் தொகுக்கப்பெறுமல் விடப் பட்டிருக்குமாயின் இந்நாளில் நாம் கிடைத்தற்கரிய பெருஞ் செல்வத்தை இழந்த வறியவர்கள் ஆகியிருப் போம். அவைகள் ஒன்றுசேர்க்கப்பட்டமையே இன்று நமக்கு அருநிதிக்குவியல்களாக அமைந்துள்ளன.

இடைக்காலத்திலே தனிப்பாடல்களைத் திரட்டுவதில் யாரும் ஊக்கங்காட்டவில்லை. இதனுல் இடைக்காலத்தில் வாழ்ந்த எண்ணற்ற புலவர் பெருமக்களின் அரிய தனிப் பாடல்கள் நமக்கு அகப்படாமலே போயின. கம்பர், காள மேகப்புலவர் முதலியவர்களின் தனிப்பாடல்களும் நமக்கு முழுவதுங் கிடைத்துவிடவில்லை. ஒரு சில கிடைத்தன. எஞ்சியவை மறைந்துபோயின.

இராமநாதபுரத்தில் இந்நூற்ருண்டின் தொடக்கத்திலே வாழ்ந்திருந்த பொன்னுச்சாமித்தேவர் தனிப்பாடல்களிற் சிந்தையைச் செலுத்தினுர். தம்மீது பல புலவர்களும் பாடிவருந் தனிப்பாடல்களையும் பிற தனிப்பாடல்களையும் ஒன்று சேர்த்துத் திரட்டி நூல்வடிவாக்க வேண்டும் என்று விரும்பினுர். அப்பணியினைச் செய்யுமாறு சந்திரசேகர

கவிராசபண்டிதர் என்னும் புலவரைக் கேட்டுக்கொண்டார் சந்திரசேகரகவிராச பண்டிதர் பலவிடங்களில் முயன்று அரிய தனிப்பாடல்களைத் திரட்டித் தனிப்பாடல் திரட்டு என்னும் பெயரோடு வெளியிட்டார். இப்பாடல் திரட்டு உரையெழுதப்பட்டு முதல் பாகம் இரண்டாம் பாகம் என்னும் பெயர்களோடும் வெளியிடப்பட்டன.

முறையூரில் வள்ளலாக விளங்கியிருந்த சண்முகஞ் செட்டியார் என்பவருந் தனிப்பாடல்களைத் திரட்டி வெளியிடுவதிற் கருத்துச் செலுத்தினர். தம்முடைய அவைக்களப் புலவராக இருந்த கொட்டாம்பட்டி கருப்பையாப் பாவலர் என்பவரைக்கொண்டு மேலுந் தனிப்பாடல்களைத் திரட்டச் செய்தார். இத்திரட்டில் சந்திரசேகர கவிராசர் திரட்டிய பாடல்களும் உள்ளடங்கின. கருப்பையாப் பாவலர் தாம் திரட்டியவைகட்குத் 'தனிச்செய்யுட் சிந்தாமணி' என்று பெயர் கொடுத்து வெளியிட்டார்.

இதன்பின் மதுரைமாநகரில் வாழ்ந்திருந்த மு. ரா. கந்தசாமிக்கவிராயர் தனிப்பாடல்களைத் தொகுக்கும் வேலையில் ஈடுபட்டார். தனிச்செய்யுட் சிந்தாமணியில் உள்ள சில பாடல்களுடன் வேறு பல பாடல்களையும் புதியனவாகச் சேர்த்து மூவாயிரத்து எண்ணூற்றுப் பதினைந்து பாடல்களைக் கொண்ட பெரிய நூலாகத் தனிச் செய்யுட் சிந்தாமணி என்னும் பெயருடனேயே புத்தகமாக வெளியிட்டார். ஆயினும் இத் தொகுதியிலும் சேராத நூற்றுக் கணக்கான பாடல்கள் பல விடங்களிலும் வழங்கிக்கொண்டிருந்தன. சிலர் செந்தமிழ் முதலிய திங்களிதழ்களில் தனிப்பாடல்கள் பலவற்றை வெளியிட்டனர்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சிப்பொறுப்பாளர் உயர்திரு வ. சுப்பையா

பிள்ளையவர்கள் தனிப்பாடல் திரட்டு, தனிச்செய்யுட் சிந்தாமணி ஆகியவைகளில் இடம்பெறுமல் திங்களிதழ் முதலியவற்றில் வெளியாகியுள்ள பாடல்களையும், தற்காலப் புலவர் பெருமக்களின் சிறந்த பாடல்களையும் தொகுத்து மேற்படி பாடல் திரட்டுகளோடு இணைத்துத் தனிப்பாடல் திரட்டின் ஒன்றிரண்டு பாகங்களோடு மூன்று நான்கு பாகங்களையும் முடித்து வெளியிடவேண்டுமென்றும் நூல் விரியாவாறு பதவுரையின்றிப் பாடல்கள் விளங்கும் அளவுக்கு மட்டும் இன்றியமையாக் குறிப்புரையோடு வெளியிட வேண்டும் என்றும் விரும்பினர்.

செந்தமிழ் முதலிய திங்களிதழ்களில் வெளியாகியிருந்த சில பாடல்களைத் திரட்டியதோடு தற்காலத்தில் வாழ்ந்துவரும் புலவர் பெருமக்களிடமிருந்தும் சிறந்தபாடல்களைப்பெற்று இதனை முடிவுசெய்தேன். இம்முதற்பகுதி 110 புலவர்களின் 1113 பாடல்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இனிவரும் இரண்டு மூன்று நான்காம் பகுதிகளில் பழம்புலவர்களின் பாடல்களும் தற்காலம் வாழ்ந்திருக்கும் புலவர்பெருமக்களின் பாடல்களும் அடங்கியிருக்கும்.

பாட்டு முதற்குறிப்பகராதியை ஒவ்வொரு பகுதிகளினும் வெளியிடின் எல்லாப்பகுதிகளும் வெளியான பிறகு பாடல்களைத் தேடியெடுப்பது தொல்லையாக இருக்குமாதலின் பாட்டு முதற்குறிப் பகராதியை நான்கு பகுதிகட்கும் ஒன்ருக வெளியிட்டுவிட முடிவு செய்து நிறுத்தியுள்ளேன். இறுதிப்பகுதியில் பாட்டு முதற்குறிப் பகராதி வெளிவரும். சிறந்த கருத்துக்களமைந்த பாடல்களும் அறநெறியை விளக்குவனவாகிய பாடல்களுமே இப்பகுதிகளில் அமைந்துள்ளன. பொருளற்ற பலபாடல்களைப் பயனின்மை கருதி நிறுத்திவிட்டேன்.

நான் தனிப்பாடல்களைத் திரட்ட முயற்சி செய்து பல நூல்நிலையங்களில் திரட்டியதோடு தனிப்பட்ட புலவர்கட்கும் எழுதினேன். சிலர் உள்ளக் கிளர்ச்சியோடு மனமுவந்து பாடல்களை அனுப்பினர். சிலர் அனுப்புவதாக எழுதியதோடு மனநிறைவு கொண்டனர். அறிஞர்கள் தங்களிடம் உள்ள அரிய பாடல்களை அனுப்புவார்களாயின் அவைகளை இப்பகுதிகளிற் சேர்த்து என்றும் நிலைபெறும் வண்ணஞ் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

13-2-63
பைந்தமிழ்ப்பண்ணை
கருப்பக்கிளர்
தஞ்சைமாவட்டம்

சு. அ. இராமசாமிப் புலவர்

பாடிய புலவர்கள்

எண்	பெயர்	பக்கம்	பாடல் தொகை
க.	திருவாலவாய்க் கடவுள்	உ	ங
உ.	தில்லைக்கூத்தப் பிரான்	ச	க
ங.	சிவகாமியம்மையார்	,,	க
ச.	முருகக் கடவுள்	,,	உ
ரு.	கலைமகள்	ரு	க
சு.	சங்கப் புலவர்கள்	,,	ங
எ.	நக்கீரர்	எ	ச
அ.	திருவள்ளுவர்	கூ	கஉ
கூ.	உப்பை	கங	க
க0.	அதிகமான்	,,	க
கக.	உறுவை	,,	ச
கஉ.	கபிலர்	கச	க
கங.	வள்ளி	,,	க
கச.	இடைக்காடர்	,,	ங
கரு.	திருஞானசம்பந்தர்	கரு	க
கசு.	திருமங்கையாழ்வார்	கசு	க
கஎ.	திருமழிசையாழ்வார்	,,	ரு
கஅ.	ஔவையார்	கஅ	க0உ
சகூ.	கச்சியப்ப சிவாசாரியார்	ரு0	க
உ0.	குகனேரியப்ப நாவலர்	ருக	உ
உக.	தத்துவப்பிரகாசர்	ருஉ	க0
உஉ.	செயங்கொண்டார்	ருசு	உ
உங.	சடகோபர்	ருஎ	க
உச.	இராமாநுசர்	,,	க
உரு.	மணவாள மாமுனிவர்	ருஅ	உ
உசு.	மணக்கால் நம்பி	,,	க
உஎ.	திருக்கச்சி நம்பி	ருகூ	க
உஅ.	பொய்கையாழ்வார்	,,	உ

எண்	பெயர்	பக்கம்	பாடல் தொகை
௬௦.	படிக்காசுத்தம்பிரான்	௨௪௮	௩௦
௬௧.	சொக்கநாதப் புலவர்	௨௬௧	௪௧
௬௨.	பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்	௨௭௧	௭௬
௬௩.	சுப்ரதீபக்கவிராயர்	௩௦௮	௧௩
௬௪.	காளிமுத்துப் புலவர்	௩௧௩	௧௫
௬௫.	நமச்சிவாயப் புலவர்	௩௨௦	௧௭
௬௬.	மதுரகவிராயர்	௩௨௮	௧௧
௬௭.	சவ்வாதுப் புலவர்	௩௩௨	௩
௬௮.	நையாண்டிப் புலவர்	௩௩௩	௩
௬௯.	சுப்பிரமணியப் புலவர்	௩௩௫	௧
௭௦.	கடிகைமுத்துப் புலவர்	௩௩௬	௩௭
௭௧.	நாகூர்முத்துப் புலவர்	௩௫௩	௨௪
௭௨.	இராமச்சந்திரக் கவிராயர்	௩௬௬	௨௫
௭௩.	எல்லிசுதுரை	௩௭௯	௧
௭௪.	தாச்சி அருணாசல முதலியார்	,,	௨
௭௫.	சொக்கநாதப் புலவர்	௩௮௧	௧
௭௬.	திருக்கண்ணபுரம் தாசி	௩௮௨	௧
௭௭.	திருவழுந்தூர்த் தாசி	,,	௧
௭௮.	சோணாசல தேவர்	௩௮௩	௧
௭௯.	சின்னத்தம்பிப் புலவர்	,,	௧
௮௦.	புவனேக வாகு	௩௮௪	௧
௮௧.	பரமேசுவரப் புலவர்	,,	௧
௮௨.	உண்ணாமுலை எல்லப்ப நயினார்	௩௮௫	௧
௮௩.	கழைக்கூத்தி	,,	௩
௮௪.	வீரை அம்பிகாபதி	௩௮௬	௨
௮௫.	வீரை ஆசுகவிராயர்	௩௮௭	௨
௮௬.	சீர்காழி அருணாசலக் கவிராயர்	௩௮௮	௩௦
௮௭.	குருநமச்சிவாய தேவர்	௩௯௮	௧
௮௮.	சிவஞான முனிவர்	௪௦௧	௧
௮௯.	சிவஞான முனிவர் முதலிய நால்வர்	௪௦௨	௧
௯௦.	தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர்	,,	௧
௯௧.	அம்பலவாணத் தம்பிரான்	௪௦௮	௧

உ

முருகக்கடவுள் துணை

தனிப்பாடல் திரட்டு

உரைக் குறிப்புக்களுடன்

(முதற் பகுதி)

காப்பு

நேரிசை வெண்பா

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானேரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

(அரும்பதவுரை.) திருவாக்கும் - செல்வப் பெருக்கினை யுண்டாக்கும். பெருவாக்கு - தங்கு தடையின்றிச் செல்லும் அறிவுப்பெருக்கு. பீடு - பெருமை. உருவாக்கும் - நன்மையுறச் செய்யும். வானோர் - தேவர்கள். காதலால் - அன்பினால். (க)

ஏரானைக் காவிலுறை என்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றுதனைப் போற்றினால்—வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரஉற் பத்திவரும்
சத்திவருஞ் சித்திவருந் தான்.

(அ - ரை.) ஏர் - அழகிய. ஆனைக்கா - திருவானைக்கா. என் ஆனைக்கு - என் இறைவியாகிய பெண்யானைக்கு. போர் ஆனைக்கன்று - போர்செய்யும் ஆனைமுகக்கடவுள். வாராத - எளிதில் வாராத. புத்தி - அறிவு. பத்தி - அன்பு. சத்தி - ஆற்றல். சித்தி - செயல்களில் வெற்றி. (உ)

க. திருவாலவாய்க்கடவுள்

[தம்மீது பேரன்பு பொருந்தியவராய் இசைத்தொண்டு புரிந்துகொண்டிருந்த பாணபத்திரருடைய வறுமை நோய் நீங்கப் பொருள் வழங்குமாறு, சேர மன்னனுக்கு எழுதிக் கொடுத்தது]

திருமுகப்பாசுரம்

அகவற்பா

1. மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிற (கு)
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிந்திடும் மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க் (கு)
ஒருமையின் உரிமையின் உதவி அணிதிகழ்
குருமா மணிதிகழ் குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

(அ-ரை.) *மதிமலி - திங்கள் தவழும். புரிசை - மதில். மாடம் - வீடு (மேல் வீடு). கூடல் - மதுரை. பதிமிசை - ஊரில். மாற்றம் - மொழி. பருவக் கொண்மூ - கார்காலத்து முகில். படியென - தன்மையைப் போல. ஒருமையின் - ஒரே உள்ளத்துடன். குரு மா மணி - நல்ல நிறமுடைய மணிகள். செருமா உகைக்கும் - போரில் யானையைச் செலுத்துகின்ற. தன்போல் - உன்னைப் போல. தன்பால் - உன்னிடத்திற்கு. மாண்பொருள் - மிகுந்த பொருள்.*

மதுரைக் கடவுளாகிய யாம் சேரநாட்டரசனுக்கு எழுதியது: பாணபத்திரனுக்கு மிகுந்த பொருள் கொடுத்து அனுப்புக என்பது கருத்து. (க)

[அக்கடவுள் சண்பக மாறனுடைய உள்ளக்கருத்தை அமைத்துப் பாடித் தருமி என்னும் மணமாகாப் பார்ப்பனனுக்குப் பண உதவியின் பொருட்டுக் கொடுத்தது.]

2. கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயில் இயல்
செறிஎயிற்(று) அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே.

(அ - ரை.) கொங்கு தேர் வாழ்க்கை - தேனை நாடும் வாழ்க்கையினையுடைய. அம்சிறை - அழகிய சிறகு. காமம் செப்பாது - விருப்பத்தால் ஒருதலையாகப் பேசாமல். மோ: முன்னிலையசைச் சொல். பயிலியது கெழீஇய - பழக்கத்தால் பொருந்திய. மயில் இயல் - மயில் போன்ற தன்மை. செறி - நெருங்கிய. எயிறு - பல். நறியவும் - நறுமணம் உடையனவும்.

கூந்தலைப் பார்க்கினும் நன்மணம் பொருந்திய மலர் பிறவும் உளவோ? என்க (உ)

['கொங்குதேர் வாழ்க்கை' என்னுஞ்செய்யுள் பொருட்குற்றம் உடையது என்று கூறிய நக்கீரர் முன் இறைவன் பார்ப்பனக் கோலத்தினராய்த் தோன்றி நக்கீரரை இழித்துப் பாடியது.]

நேரிசை வெண்பா

3. அங்கம் வளர்க்க அரிவாளில் நெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீருகீர் என்றறுக்கும் கீரனோ என்கவியைப்
*பாரிற் பழுதென் பவன்

(அ - ரை.) அங்கம் வளர்க்க - உடலைப் பேண. பங்கப் பட - பிறர் பழிக்கும்படி. கீருகீர்: ஒலிக்குறிப்பு.

தம்பாட்டின் சிறப்பை நக்கீரனார் உணரமுடியாதென்றார் இறையனார். (௩)

---

* 'ஆராயும் உள்ளத் தவன்.' என்றும் வழங்கும்.

உ. தில்லைக் கூத்தப்பிரான்

[பெத்தான் சாம்பான் என்பவனுக்குத் தீக்கை செய்து வீடு பேறளிக்குமாறு, உமாபதி சிவாச்சாரியருக்கு எழுதியனுப்பிய சீட்டுக் கவி.]

4. அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

(அ - ரை.) *படியின் மிசை - இந்நிலவுலகில். பேதம் அற - இழிந்தவன் என்னும் மாறுபாடு இல்லாமல். முத்தி - வீடு.*

பெத்தான் சாம்பானுக்கு வீடுபேற்றினை யளிக்க என்பது கருத்து. (க)

ங. சிவகாமியம்மையார்

[குரு நமச்சிவாயர் என்னும் பெரியார் பசியால் வருந்திச் சோறு கொண்டு வருமாறு வேண்டினர். சிவகாமி அம்மையார் சோற்றைக் கொண்டுவந்து கொடுத்துப் பாடியது.]

5. கொண்டுவந்தேன் சோறு குகைநமச்சி வாயரது
தொண்டர் அடியார் சுகிக்கவே—பண்டுகந்த
பேய்ச்சிமுலை உண்ட பெருமாள் உடன்பிறந்த
நாய்ச்சி சிவகாமி நான்.

(அ - ரை.) *தொண்டர் அடியார் - தொண்டராகிய அடியார். பண்டு - முன் நாளில்; உகந்த - விரும்பிய. நாச்சி - தலைவி.* (க)

ச. முருகக்கடவுள்

[திருச்செந்தூர் முருகக்கடவுள் பகழிக் கூத்தர் என்னும் புலவரிடஞ் சென்று, தம் மீது பிள்ளைத் தமிழ் பாடும் படி கூறியது.]

6. பூமாதும் போற்றிப் புகழ்பகழிக் கூத்தாநின்
பாமாலை யாம்கேட்கப் பற்றேமோ—யாமும்
கொடுக்க அறியேமோ கூற்றுவன்தான் வந்தால்
தடுக்க அறியேமோ தான்.

(அ - ரை.) பூமாது - கலைமகள். பற்றேமா - போதமாட்டேமா? (க)

["கோழியைப் பாடிய வாயால் அதன் குஞ்சையும் பாடுவேனோ? இறைவனைப் பாடிய வாயால் உன்னைப் பாடமாட்டேன்' என்று - முருகக் கடவுளைப் பாடுவதில்லை என்று பொய்யாமொழிப் புலவர் உறுதி பூண்டிருந்தார். முருகக் கடவுள் ஒரு சூழ்ச்சியால் புலவரைப் பாடச் செய்தார். அப்பாடல் தவறுடையதாக இருந்தது. அப்போது முருகக்கடவுள் தாம் பாடிக் காட்டியது.]

7. விழுந்ததுளி அந்தரத்தே வேம்என்றும் விழின்
எழுந்து சுடர்சுடுமென் (று) ஏங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தில் பெய்வளையுஞ் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்.

(அ - ரை.) அந்தரம் - விண். சுடர் சுடும் - நிலத்திலுள்ள புழுதியின் சூடு சுடும். பெய்வளை - வளையல் அணிந்த கையினை உடையாள். (உ)

ரு. கலைமகள்

[திருவள்ளுவருடைய திருக்குறள் கடைச்சங்கத்தில் அரங்கேறிய காலை, கலைமகள் உருவமற்ற விண்வாக்காகப் பாடியது.]

8. நாடா முதல்நான் மறைநான் முகன்நாவில்
பாடா இடைபா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாறபின்
வள்ளுவன் வாய(து)என் வாக்கு.

(அ - ரை.) நாடா - விரும்பி. பாடா - மறைகளைப் பாடி. இடை - நடுவில். கூடார் - பகைவர் எள்ளிய - இகழ்ந்த. வென்றி - வெற்றி. மாற - பாண்டிய (உ)

சுஎ. சங்கப் புலவர்கள்

[வற்கட (பஞ்ச) காலத்திலே பாண்டியன் சங்கப்புலவர்களைக் காப்பாற்ற இயலாமல், வேறு செழிப்புள்ள நாடுகட்குச் சென்றிருந்து வற்கடந் தீர்ந்த பின்னர் வருமாறு பணித்தான். அவர்களும் அவ்வாறே சென்றிருந்து பாண்டிநாடு பண்டு

போற் செழித்ததுணர்ந்து மீண்டு வந்தனர். வற்கட காலத்தில் நீங்கள் எங்கிருந்தீர்களென்று பாண்டியன் கேட்டான் அப்போது சங்கப்புலவர்கள் பாடியது.]

அகவற்பா

9. காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையும் குளனும் வெடிபடச் சுவறித்
தந்தைதாய் மக்கள் முகம் பாராமே
வெந்த சாகமும் வெவ்வே றருந்திக்
குணமுள தனையுங் கொடுத்து வாழ்ந்த
கணவனை மகளிர் கண்பா ராமே
விழித்தவிழி எல்லாம் வேற்றுவிழி யாகி
அறவுரை இன்றி மறவுரை பெருகி
உறைமறந் தொழிந்த ஊழிகா லத்தில்
தாயில் லவர்க்குத் தாயே யாகவும்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத்தில் இடுக்கண் தீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரும் நெடுமால் போல்வன்
ஆலஞ் சேரி அயிந்தன் என்பான்
ஊருண் கேணி நீரே போலத்
தன்குறை சொல்லான் பிறர்பழி உரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
இறந்து போகா(து) எம்மையுங் காத்தான்
வருந்தல் வேண்டா வழுதி
இருந்தனம் இருந்தனம் இடர் கெடுத் தனமே.

(அ - ரை.) வேலை - கடல். சுவறி - வறண்டு. வெந்த சாகம் - வெந்த கீரை. மறவுரை - தீய சொல். உறை - நீர்த்துளி. ஊழிகாலத்தில் - உலகமுடிவுக்காலம் போன்ற காலத்தில். ஞாலம் - உலகம். இடுக்கண் - துன்பம். குன்றான் - குறைவுபடான். வழுதி - பாண்டியன். இது அன்மை விளி.

[நம்மாழ்வாரைப் புகழ்ந்து பாடிய நேரிசை வெண்பா.]

10. சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசனே நாரணனே—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கோ
உளவோ பெருமான் உனக்கு

(அ - ரை.) சேமம் - பாதுகாப்பான இடம். குருகையோ - திருக்குருகூரோ. நாமம் - பெயர். தாமம் - மாலை. துளவு - துளசி. வகுளம் - மகிழம். (உ)

[இதுவும் அது]

11. ஈயா டுவதோ கருடற் கெதிரே
இரவிக் கெதிர்மின் மினியா டுவதோ
நாயா டுவதோ உறுமிப் புலிமுன்
நரிகேசரிமுன் னடையா டுவதோ
பேயா டுவதோ எழிலூர் வசிமுன்
பெருமா னடிசேர் வகுளா பரணன்
ஓரா யிரமா மறையின் தமிழின்
ஒருசொற் பொருமோ உலகிற்கவியே.

(அ - ரை.) இரவி - ஞாயிறு. கேசரி - அரிமா. எழில் ஊர்வசி - அழகிய ஊர்வசி.

எ. நக்கீரர்

[இவர் மதுரைக் கணக்காயனுர் மகனர். இவருடைய நூல்கள், கைலைபாதி காளத்திபாதி யந்தாதி, திருவீங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம், காரெட்டு போற்றிக் கலிவெண்பா, திருமுருகாற்றுப் படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம் முதலியன. இவருடைய நூல்களிற் பெரும்பகுதி பதினொன்ருந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன. இறையனர் அகப்பொருளுக்கு விரிவுரை செய்தவருமிவரே.]

[தம்மை இழித்துரைத்த மதுரைக் கடவுளைத் தாமும் இழித்துரைத்தது.]

நேரிசை வெண்பா

12. சங்கறுப்ப(து) எங்கள் குலம் சங்கரனுர்க்(கு) ஏதுகுலம்
பங்கமுறச் சொன்னுற் பழுதாமோ—சங்கை
அரிந்துண்டு வாழ்வோம் அரனே! நின் போல
இரந்துண்டு வாழ்வ(து) இலை.

(அ - ரை.) பங்கம் உற - இழிவுண்டாக. (க)

[திருக்குறளுக்குக் கூறிய சிறப்புப் பாயிரம்.]

13. தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண்குறளால்
ஆனு அறமுதலா அந் நான்கும்—ஏனேருக்(கு)
ஊழின் உரைத்தார்க்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல(கு) என்னுற்றும் மற்று.

(அ - ரை.) ஆனு - அடங்காத. ஏனேருக்கு - மற்றவர்களுக்கு. ஊழின் - முறைப்படி. முகிலுக்கும் - காருக்கும். (உ)

[சங்கத்திற்கு வந்த வேட்கோ குயக்கொண்டான் என்பவன், வடமொழியை உயர்த்தியும் தென்மொழியை இழித்தும் உரைத்தான். அவன் இறந்து படுமாறு இவர் பாடியது.]

14. முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—முரணிய
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்கசுவா கா.

(அ - ரை.) முரண் இல் - மாறுபாடில்லாத. பொதியின் முதற் புத்தேள் - அகத்தியர். ஆனந்த வேட்கையான் - இறக்க விரும்புவோன். ஆனந்தம் - இறப்பு. (ங)

[தமிழை இழித்துரைத்த பேதை இறந்தொழிந்தான். அவன் மீண்டும் உயிர்பெற்றெழுமாறு செய்தல் வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர் சங்கப்புலவர்கள். நக்கீரரும் உள்ளமிரங்கினுர். அவன் உயிர் பெறுமாறு பாடினுர்.]

15. ஆரியம் நன்று தமிழ்தீ தெனஉரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனர் ஆணையால்
செந்தமிழே தீர்க்கசுவா கா.

(அ - ரை.) ஆரியம் - வடமொழி. காலக்கோள் - இறப்பு. (௬)

அ. திருவள்ளுவர்

[திருக்குறள் செய்தவராகிய இவர் ஆதிக்கும் பகவனுக்கும் தோன்றியவர் என்ப. இவருடைய மனைவியார் வாசுகியார். இவர் குற்றமற்ற தொழில் நெய்தல் தொழிலே யென்று அதனைக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர். மெய்யறிவுமிக்க இப் பெரியாரின் பெருமை அவர் இயற்றியருளிய தமிழ் மறையாகிய திருக் குறளால் இனிது விளங்கும். இவருடைய மனைவியார் கற்பினுக் கோர் அணிகலனாகத் திகழ்ந்தவர். இவருடைய வரலாறு பல வகையாக வழங்கும். கடைச் சங்கத்தாருடைய செருக்கை அடக்கியவரும் இவரே யென்பர். உப்பை, ஔவை முதலியோரும் இவரொடு பிறந்தவர்கள் என்பர்.]

[பிரிந்து செல்லுதற்கு வருந்திய தாயைப்பார்த்துக் கூறியது.]

நேரிசை வெண்பா

16. எவ்வுயிரும் காக்கவொரு ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யானொருவன் அல்லனோ—வவ்வி
அருகுவது கொண்டிங்(கு) அலைவதேன் அன்னாய்
வருகுவது தானே வரும்.

(அ - ரை.) வவ்வி - விரும்பி, அருகுவது - குறைவது. (க)

[திருக்குறளை அரங்கேற்றச் சென்றபோது சங்கப்புலவர்கள் திருவள்ளுவரைப்பார்த்து, 'நீர் எந்தவூர்' என்று கேட்டனர் அப்போது பாடியது.]

17. எந்தவூர் என்றீர் இருந்தவூர் நீர்கேளீர்
அந்தவூர்ச் செய்தி அறியீரோ—அந்தவூர்
முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலும் பாழென் றறி.

(அ - ரை.) சூனியம் - வெறும்பாழ். (உ)

[திருக்குறட் சுவடியைப் பார்த்து 'அஃது என்ன சுவடி' என்று கேட்டபோது பாடியது.]

18. என்ன சுவடியென்று கேட்டீர் இதன் பெருமை
பன்னுவன் கேளீர் பராக்கென்னே—முன்னம்
மருக்கோல மேனி மலர்வாணி வாழும்
கருக்கோலை யின்சுவடி காண்.

(அ - ரை.) பன்னுவன் - கூறுவேன். பராக்கு - பாராமுகம்
(கூ)

[சாதி முதலியவைகளைக் குறித்துக் கூறியது.]

எண்சீர் விருத்தம்

19. சாதியிலே தொண்ணூற்றேன் பானுஞ் சாதி
சமயத்தில் பதின்மூன்றுஞ் சமய மாகும்,
நீதியிலே சிவனுடைய நீதி யாகும்
நிலைமையிலே வேதாந்த நிலைமை யாகும்,
ஆதியிலே எங்கள்ஊர் கருவூராகும்
அந்தத்தில் போயடைவோம் பேரூர் தன்னில்,
சோதியிலே பரஞ்சோதிக் கூட்டமாகும்
சொல்லுதற்கும் எங்கள்குலம் சுக்கிலம தாமே.

(அ - ரை.) கருவூர் - தாயின் கருப்பையூர். அந்தம் - இறுதி; பேரூர் - பெருவெளியாகிய வீடுபேறு. சுக்கிலம் - விந்து.

[சங்கப் புலவர்கள் திருவள்ளுவரை நிற்கவும் இருக்கவும் போகவும் சொன்னபொழுது கூறியன.]

அறுசீர் விருத்தம்

20. நில்லுநில் லென்று சொன்னீர் நேசபா சங்களைந்தும்
புல்லறி வோடும் வாங்காப் புலைகொலை களவு மற்றுச்
சொல்லுதற் கரிய ஞானச் சுழிமுனை முடியின் மீதில்
எல்லையும் கடந்தே அப்பால் ஏகமா னவர்கள் நிற்பார்.

(அ - ரை.) நேசபாசங்களைந்து - ஐம் பொறி மேற் செல்லும் விருப்பங்கள். ஏகமானவர்கள் - எல்லாவற்றையும் ஒன்ருய்க்கண்ட மெய்ஞ்ஞானிகள்.

21. இரும்இரும் என்று சொன்னீர் ஏற்குமோ ஏழை யேற்குத்
தருபொருள் உணர்ந்து சைவ சமயமும் அனைத்தும் நீங்கி
மருள்தரும் வினையும் நீங்கி மாசிலா உண்மை ஞானம்
பொருந்தினர் இருப்பர் பின்பு பொருதவர் இறப்பர் தாமே.

(அ - ரை.) ஏற்குமோ - தகுமோ. மருள் - தியக்கம். உண்மையறிவுடையவர்கள் சிறந்து விளங்கியிருப்பார்கள், அஃதில்லாதவர்கள் இறப்பார்கள் என்பது கருத்து. (சு)

22. போம்என உரைத்தீர் என்னைப் பொறியொடு புலன்கள் ஐந்தும்
ஆம்எனும் அவிச்சை யோடும் அங்ஙனே மதித்துக் கொண்டே
ஏமமும் சாம மற்றே இரவொடு பகலும் அற்றுச்
சோமனுர் பதியை விட்டுத் துறந்தவர் போவ ரன்றே

(அ - ரை.) அவிச்சை - அந்த அறிவு. அங்ஙனே - அவ்வாறே. ஏமம் - பாதுகாப்பு. சாமம் - சூழ்ச்சி. சோமனுர்பதி - யோகத்தில் திங்கள் மண்டலம். (எ)

[சங்கப் புலவர் திருவள்ளுவரை, 'ஐயர்' என்றும், 'ஞானவான்' என்றும் கூறியபோது பாடியன.]

23. ஐயரென் றுரைத்தீர் நாயேற்கு அடுக்குமோ அருளி லேனைப்
பொய்யொடு களவு மற்றுப் புலன்களை ஒடுக்கிக் கொண்டு
உய்யவே புலன்க ளைந்தும் உயர்பர வெளிக்குள் ளாக்கி
வெய்யவன் மதியம் போல விரவுவர் ஐய ராவார்.

(அ - ரை.) அடுக்குமோ - தகுமோ. உய்ய - கடைத்தேற. பரவெளியுள் - அருள் வெளியில். வெய்யவன் மதியம் போல ஞாயிற்ருெளியில் திங்கள் ஒளி அடங்கி விடுதலைப் போல. விரவுவர் - கலப்பவர். (அ)

24. ஞானவான் என்று சொன்னீர் நாதவிந் துவுங்க டந்து
கானல்ஐ வரையும் சுட்டுக் கடுவெளி பரமா னந்தம்
தான்எனும் அவைஇ ரண்டும் தவிர்ந்துதன் வசமும் கெட்டு
மோனமுங் கடந்தே அப்பால் முடிந்தவர் ஞானி யாவார்.

(அ - ரை.) நாதவிந்துவுங்கடந்து-நாதம் விந்து என்று சொல்லப்படுகிற மூலதத்துவங்களைக் கடந்து. கானல் ஐவரையும் - நிலையற்ற ஐம்பொறிகளையும். மோனம் பேசாத நிலைமை. (௯)

[இறைவன் திரு ஆலங்காட்டில் கூத்து இயற்றிய போது அவர் காதுக் குழைகழன்று நிலத்தில் விழுந்தது. அதனை மீண்டும் காதிற் சேர்க்கும்படி மெள்ள அசைந்தாடிப் பிறர் அறியாவாறு காலாலெடுத்துக் காதில் அணிந்து கொண்டார். அதைப் பற்றி ஐயங் கொண்ட தேவர்கள் இறைவன் கட்டளைப் படி திருவள்ளுவரையடைந்து கேட்டனர். அப்போது திருவள்ளுவர் பாடியது.]

நேரிசை வெண்பா

25. பூவில் அயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூல்நெருடும் ஏழை அறிவேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

(அ - ரை.) அயன் - நான்முகன். புரந்தரன் - தேவர் தலைவன். இழை - நூல் இழை. குழை - குண்டலம். பிஞ்ஞகன் - இறைவன். (௧0)

[மனைவியாகிய வாசுகியார் இறந்த போது வருந்திப் பாடியது.]

நேரிசை வெண்பா

26. அடிசிற் கினியாளே! அன்புடை யாளே!
படிசொல் தவறாத பாவாய்!—அடிவருடிப்
பின்தூங்கி முன்எழுந்த பேதையே! போதியோ
என்தூங்கும் என்கண் இரா.

(அ - ரை.) அடிசில் - உணவு. படிசொல் - சொற்படி; நடத்தல், பாவாய் - பதுமையைப் போன்றவளே. போதியோ - போகின்றாயோ? (௧௧)

27. குறு முனிவன் முத்தமிழும் என்குறளும் நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்.

(அ - ரை.) குறுமுனிவன் - அகத்தியர். நங்கை - இறைவி. சிறுமுனிவன் - முருகன். வாய்மொழியின்சேய் - வாய் மொழியின் வழித்தோன்றல்.

அகத்தியருடைய முத்தமிழ் இலக்கண நூலும் திருக்குறளும் முருகக்கடவுள் அறவுரையின்பயனும் என்பது கருத்து. (கஉ)

கூ. உப்பை

[இவர்கள் ஆதிக்கும் பகவனுக்கும் தோன்றியவர்களெனவும் திருவள்ளுவரின் உடன் பிறந்தவர்களெனவுங் கூறப் பெறுவர்]

[பிறந்தபோது விட்டு நீங்குவதற்கு வருந்திய தாயைப் பார்த்துப் பாடியன.]

28. அத்தி முதலெறும்பீ (று) ஆனஉயிர் அத்தனைக்கும்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனனே காக்கக் கடனிலையோ
அற்பனே அன்னாய்! அரன்.

(அ - ரை.) அத்தி - ஆனை. கற்பித்தான் - அறிவு புகட்டியவன். அற்பனோ - எளிமையானவனோ.? அரன் - சிவன். (க)

கo அதிகமான்

29. கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற் (று) அமுதளிக்கும் மெய்யன்—உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்கானோ ஓகெடுவாய் அன்னாய்! கேள்
வாட்டம் உனக்கேன் மகிழ்.

(அ - ரை.) மெய்யன் - கடவுள். உருப்பெற்றால் - உடல் எடுத்தால். கெடுவாய் - மனம் கெட்டு வருந்துபவளே. (க)

கக. உறுவை

30. சண்டப்பைக் குள்ளுயிர்தன் தாயருந்தத் தானருந்தும்
அண்டத் துயிர் பிழைப்ப தாச்சரியம்—மண்டி
அலைகின்ற அன்னாய்! அரனுடைய உண்மை
நிலைகண்டு நீயறிந்து நில்.

(அ - ரை.) சண்டப்பை - கரு உண்டாகும் பை. அண்டத்து உயிர் - முட்டையிலடங்கிய உயிர். மண்டி - துன்பம் மிகுந்து. (க)

கஉ. கபிலர்

31. கண்ணுழையாக் காட்டில் கருங்கல் தவளைக்கும்
உண்ணும் படியறிந்(து) ஊட்டுமவர்—நண்ணும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குத் தொழிலென்ன தான்.

(அ - ரை.) கண்ணுழையாக் காடு - மரம் அடர்ந்தகாடு. நாரியோர் பாகர் - இறைவியைப் பக்கத்தில் உடையவர். (க)

கங. வள்ளி

32. அன்னை வயிற்றில் அருத்தி வளர்த்தவன்தான்
இன்னும் வளர்க்கானோ என்தாயே!—மின்னரவம்
சூடும் பெருமான் சுடுகாட்டில் நின்றுவிளை
யாடும் பெருமா(ன்) அவன்.

(அ - ரை.) மின்அரவம் - விளங்குகின்ற பாம்பு. (க)

கச. இடைக்காடர்

[இவர் பாண்டிநாட்டினர். இவரைப் பாண்டியன் மதியாமையின் அவன்மாட்டுப் பிணக்குக் கொண்டு சென்று, மதுரைக் கடவுளையும் வேற்றிடஞ் செல்லுமாறு செய்தார். ஊசிமுறி சங்கப்பாட்டு என்னும் நூலினை இயற்றிச் சங்கத்தாரைத் தோற்கடித்த வருமிவரே யென்ப.]

33. ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளும் பெய்தமைந்த
செம்பொருளை யெம்மறைக்குஞ் சேட்பொருளைத்—
தண்குருகூர்ச்
சேய்மொழிய தென்பர் சிலரியான் இவ்வுலகில்
நாய்மொழிய தென்பேன் தகைந்து.

(அ - ரை.) ஐம்பொருள் - இறைவனது ஐவகை வடிவம். நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு. முப்பொருள் - கடவுள், உயிர், உலகம். செம்பொருள் - கடவுளைக் கூறும் பாடல். குருகூர்ச்சேய் - திருக்குருகூரிலவதரித்த குழந்தை. தகைந்து - மறுத்து. (க)

34. சேய்மொழியோ தாய்மொழியோ செப்பில் இரண்டும்ஒன்றே
வாய்மொழியை யாரும் மறையென்பர்—வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சால உளஎனினும் அம்மொழியும்
சாய்மொழிய தென்பேன் தகைந்து.

(அ - ரை.) வாய் மொழியை - திருவாய் மொழியை. ஆய் மொழிகள் சால உள எனினும் - ஆயத்தக்க நூல்கள் மிகுதியாக உள்ளன எனினும். தகைந்து - அச்சொல்லைத் தடுத்து. சாய் மொழி - சார்பான சொற்கள். (௨)

35. ஆற்றங் கரையின் அருகிருக்கும் மாமரத்தில்
காக்கை இருந்துகஃ கஃஎனக்—காக்கைதனை
எய்யக்கோல் இல்லாமல் இச்சிச் செனவெய்தான்
வையக்கோ னுரின் மகன்.

(அ - ரை.) இதனை ஊசிமுறிப் பாட்டென்பர். காக்கை இருந்து - காக்கையானது தங்கி. கஃ கஃ என - கா கா கா என்று கத்த. (௩)

கரு. திருஞானசம்பந்தர்

[சீர்காழிப்பதியின்கண் தோன்றி மூவாண்டில் அம்மையருளிய ஞானப்பாலை அருந்தித் தேவாரம் பாடியருளியவர். சைவ சமயாச்சாரியர்களில் முதல்வர்.]

[ஒரு தாய் தன் மகளின் இயல்பை அவளுடைய தலைவனுக்குத் தெரிவிக்கும் துறையமைத்துத் திருமங்கையாழ்வார்மீது பாடியது.]

36. கடியுண்ட நெடுவாளை கராவில் தப்பிக்
கயத்துக்குள் அடங்காமல் விசும்பில் பாய,
அடியுண்ட உயர்தெங்கின் பழத்தால் பூகம்
அலையுண்டு குலைசிதறும் ஆலி நாடா!
படியுண்ட பெருமானைப் பறித்துப் பாடிப்
பதம்பெற்ற பெருமானே! நமியேன் பெற்ற,
கொடியொன்று நின்பவனிக் கெதிரே சென்று
கும்பிட்டாள் உயிரொன்றுங் கொடுவந் தாளே.

(அ - ரை.) கரா - முதலை. கயம் - குளம். விசும்பு - விண். பூகம் - பாக்கு. ஆலிநாடு - திருவாலி என்னும் பெயரை யுடைய நாடு. படி உண்ட - உலகை விழுங்கிய. பறித்து - வழிப்பறிக் கொள்ளைசெய்து. பதம் - திருவடிப்பேறு. கொடி - கொடி போன்றவளாகிய பெண். பவனி - திருஉலா.

திருமங்கையாழ்வார் வழிப்போக்கர்களை மறித்துப் பறித்த பொருளைக்கொண்டு திருத்தொண்டு செய்தவர். ஒரு சமயம் திருமால் திருமகளுடன் மணக்கோலத்துடன் வர அவரையும் வழிமறித்துப் பறித்தார். (க)

கசு. திருமங்கையாழ்வார்

37. வருக்கைநறுங் கனிசிதறிச் செந்தேன் பொங்கி
மடுக்கரையில் குளக்கரையின் மதகி லோடப்,
பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுங் காழிப்,
பிள்ளையார் சம்பந்தப் பெருமான் கேளீர்,
அருட்குலவு மயிலைதனில் அனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவை ஆக்கி னேமென்(று),
இருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இவளையும்ஓர் பெண்ணுக்கல் இயல்பு தானே,

(அ - ரை.) வருக்கை - பலாமரம். மடு - சிறு குட்டை. ஓலம் செய்யும் - பேரொலி செய்யும். மயிலை - மயிலாப்பூர். தகவு - தகுதி. இரு பெரியார்களும் எதிர்ப்பட்ட ஞான்று அன்பு மிகுதியால் ஒருவர் மீது ஒருவர் இவ்வாறு பாடிக்கொண் டார்கள் என்று இப்பாடல்கள் இரண்டும் வழங்குகின்றன.

கள. திருமழிசையாழ்வார்

[இவர் தொண்டைநாட்டில் திருமழிசையில் இருந்தவர்; கணிகண்ணர் என்பவர் இவருடைய மாணவர். நாலாயிரப் பிரபந்தத்தில் திருச்சந்த விருத்தம் நான்முகன் திருவந்தாதி என்பன இவர்செய்த நூல்கள்.]

[தம்முடைய மாணவராகிய கணிகண்ணரைக் காஞ்சிபுர மன்னன் பல்லவராயன் ஊரைவிட்டு நீங்கக் கூறியதை யறிந்து, தாமும் புறப்பட எண்ணித் திருமாலை நோக்கிப் பாடியது.]

வெண்பா

38. கணி கண்ணன் போவென்ருன் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீயிங் கிராதே—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்.

(அ - ரை.) காமரு பூங்கச்சி - யாவரும் விரும்பும்படியான அழகிய காஞ்சி. பைந்நாகப் பாய் - பாம்புப் படுக்கை. (க)

[ஆழ்வார் பாட்டைக்கேட்டுக் கச்சித்திருமாலும் புறப்பட்டுச் சென்ருர். கச்சி ஒளியிழந்து நின்றது. கணிகண்ணரை அரசன் திரும்பக் கட்டளையிட்டான். ஆழ்வாரும் திரும்பினர்; அப்போது பாடியது.]

39. கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீ கிடக்க வேண்டும்—துணிவுடைய
செந்நாப்புலவன் செலவொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்.

(அ - ரை.) செலவு - செல்லுதல்.

ஆழ்வார் பாட்டைக்கேட்டுத் திருமாலும் திரும்பி விட்டார் காஞ்சி பழமைபோல் ஒளிபெற்று விளங்கியது. (உ.

[சமய ஆராய்ச்சிகளைக் குறித்துப் பாடியது]

40. சாக்கியங் கற்ருேஞ் சமண்கற்ருேம் சங்கரனுர்
ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்—பாக்கியத்தால்
செங்கட் கரியானைச் சேர்ந்தியாம் தீதிலோம்
எங்கட்(கு) அரிய தொன்(று) இல்

(அ - ரை.) செங்கட்கரியான் - சிவந்த கண்ணையும் கரிய உடலையுமுடைய திருமால். (ஙா)

[பெரும்புலியூரில் ஒரு வேள்வி நடந்தது. அதில் அவருக்கு முதல் வழிபாடு செய்தனர். சிலர் அது பொருது இகழ்ந்துரையாடினர். அக்காலை பாடியது.]

41. அக்கரங்கள் அக்கரங்கள் என்றே ஆவ தென்கொலோ
இக்குறும்பை நீக்கிஎன்னை ஈசனுக்க வல்லையேல்
சக்கரங்கொள் கையனே சடங்கர்வா யடங்கிட
உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்து காட்டிடே.

(அ - ரை.) சடங்கர் - வேள்வி புரிவோர். புறம் பொசிந்து வெளிப்பட்டு. (௬)

42. தேவராய் நிற்குமத் தேவுமத் தேவரின்
மூவரா நிற்கு முதுபுணர்ப்பும்—யாவராய்
நிற்கின்ற எல்லாம் நெடுமாலென்(று) ஓராதார்
கற்கின்ற எல்லாங் கடை.

(அ - ரை.) முதுபுணர்ப்பு - தொடர்பு. (௭)

கஅ. ஔவையார்

[இவர் திருவள்ளுவருடைய உடன் பிறந்தவர் அன்று. ஔவை யென்னும் பெயரையுடையவர்கள் இரண்டு மூன்று பேர்களுக்கு மேல் பெரும் புலவர்களாக இருந்ததாக அறியப்படுகின்றனர். அவர்களுள் இவ் வௌவையார் யாவர் என்பது விளக்கமாகப் புலப்படவில்லை. சேரமான் பெருமாள் நாயனார் காலத்து ஔவையாரும் நல்வழி முதலிய நீதி நூல்களைப் பாடிய ஔவையாரும் வெவ்வேறுவர் என்பது பலருடைய கொள்கையாகும். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக் கோவை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ் மாலை, ஞானக்குறள், பந்தனந்தாதி முதலிய தனி நூல்களும் புறநானூறு முதலிய நூல்களிற் பல தனிப்பாடல்களும் ஔவையார் பெயரால் வழங்குகின்றன.]

43. இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

(அ. - ரை.) முட்டமுட்ட - மிகவும் கடுமையாக. (க)

[சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமானாயனாரும் திருவெள்ளி மலைக்குச் சென்றனர். செல்லும்போது விநாயகரைப் பூசித்துக் கொண்டிருந்த ஔவையையுந் தம்முடன் வரும்படி யழைத்தனர். ஔவையார் பூசையை விரைவில் முடித்துப்போக எண்ணினதை விநாயகரறிந்தார். 'அவர்களுக்குமுன் உன்னைக் கைலையில் சேர்க்கிறேன்; வழக்கம் போல் பூசை செய்' என்றார். ஔவையார் அவ்வாறே பூசித்துச் "சீதக்களப" என்னும் அகவலைப்பாடி வணங்கினார். விநாயகர் பெருவடிங்கொண்டு ஔவையாரைத் துதிக்கையாற் றூக்கிக் கைலையில் வைத்தார். தமக்குமுன் ஔவையார் வந்திருப்பதைக் கண்டு சேரமானாயனார் வினவினார் அப்போது பாடியது.]

44. மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை
முதிரநினைய வல்லார்க்(கு) அரிதோ முகில்போல் முழங்கி
அதிரவருகின்ற யானையுந் தேரு(ம்) அதன்பின் சென்ற
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.

(அ - ரை.) மதுரமொழி - இனிய சொல். முதிர - அழுத்தமாக. முகில்போல் முழங்கி - கார்போல் இடித்து. அதிர - அதிர்ச்சி யடையும்படி. (சேரமானாயனார் திருக்கைலையில் ஆதியுலாவை அரங்கேற்றினர்.) (உ)

[சோழன் ஔவையை எந்த ஊரென்று கேட்டதற்குப் பாடியது.]

45. கால்நொந்தேன் நொந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான்வந்த தூரம் எளிதன்று—கூனல்
கருந்தேனுக்(கு) அண்ணாந்த காவிரிசூழ் நாடா!
இருந்தேனுக்(கு) எங்கே இடம்.

(அ - ரை.) கூனல் - சங்கு. கருந்தேனுக்கு அண்ணாந்த - மிகுதியாகிய தேனைப் பருகுதற்கு வாய்திறந்த, கடுகி - விரைந்து.

[சோழன் ஔவையென்றறியாமற் கம்பர் பாட்டை வியந்தபோது பாடியது.]

46. விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று.

(அ - ரை.) விரகர் - அன்புடையோர். ஆரவார நீர்மையோ டிருந்தால் மதிப்புண்டாம் என்பது கருத்து. (சு)

[சோழன் கம்பர்போலப் பெருநூல் பாடுவோர் ஒருவரு மில்லை என்றபோது பாடியது.]

47. வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்(று) எளிது.

(அ - ரை.) வான்குருவியின்கூடு - தூக்கணங் குருவியின் அழகிய கூடு. வல்லரக்கு - வலிய அரக்கு. தொல்கறையான் - பழமையான கறையான் புற்று. தேன்சிலம்பி - தேன்கூடும் சிலந்திக் கூடும். (௬)

48. சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

(அ - ரை.) கல்வி மனப்பழக்கம் - கல்வித்தேர்ச்சி உள்ளப் பயிற்சியினாலுண்டாகும். நடையும்-நல்லொழுக்கமும். கொடை-கொடுக்குங் குணம். (சு)

[சோழன் கம்பனை யார் வெல்வார் என்றபோது பாடியது.]

49. காணமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணமல் வாய்திறக்கக் கூடாதே—நாணமல்
பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி.

(அ - ரை.) காணமல் வேணதெல்லாம் கத்தலாம் - படித்தவர்கள் பாராதவிடத்து விரும்பியவற்றையெல்லாம் உரத்துப் பேசலாம். கோணமல் - பணியாமல்.

இச் செய்யுளால் ஔவையார், கம்பர் அறிவாளிகள் இல்லாத இடத்தில்தான் ஆரவாரஞ் செய்வார் என்றும் அறிவாளிகள் முன்பு யாதும் பேசமாட்டார் என்றும் குறிப்பிட்டார். (எ)

[சோழன் பொருளை எவ்வாறு செலவிடலாமென்றதற்குப் பாடியது.]

50. நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்.

(அ - ரை.) நம்பன் - சிவன். நல்காத் திரவியங்கள் - அளிக்கப்படாத பொருள்கள். பம்பு - மாரணவித்தை. பரத்தையர் - பொதுமாதர் வம்பு - வீண் செயல். கோவுக்குஆம் - வேந்தன்பொருட்டு வசூலிக்கப்படும். (அ)

[ஒரு குறவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தார்கள். அவர்களுள் குறவனுக்கு இளையாள்பேரில் மோகம். ஒருநாள் அவன், "ஓரூருக்குப் போய்வருகிறேன்; நான் அன்பாக வளர்க்கும் பலாவை நீங்களிருவரும் பார்த்துக்கொள்ளுங்க"ளென்று சொல்லிப் போயினன். இளையாள் அம்மரத்தை வெட்டிவிட்டு மூத்தாள்மேற் பழிசுமத்தினள். குற்றமற்றவளாகிய மூத்தாள் கணவன் என்ன செய்வானோவென்று வருந்திக்கொண்டிருந்தாள். ஔவையார் அவளை வினவி அஞ்சாதே என்று பலாத்தழைக்கப் பாடியது.]

51. கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றாய் உயர்மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோல் நிற்கப் பணி.

(அ - ரை.) குறைத்திட்ட - தறிக்கப்பட்ட. கூன்பலா - வளைந்த பலா மரம். ஓர்இதழாய் - ஓர் இலை உடையதாய். கன்றுஆய் - சிறு செடியாகி. கொட்டைஆய் - வித்துடையதாகி. வண்காய் - செழிப்பான காய். பண்டுபோல் - முன்போல. (கூ)

[ஔவை கையில் இருந்த மூட்டையை என்னவென்று சோழன் கேட்டதற்குப் பாடியது.]

52. கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக் குழக்குத் தினைதந்தாள்—சோழாகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒருகவிதை
ஒப்பிக்கும் என்றன் உளம்.

(அ - ரை.) கூழைப்பலா - வெட்டுப்பட்ட சிறு பலா. மூழக் குழக்குத்தினை - ஒரு படி தினை.

மூழக்கு என்பது மூவுழக்கு என்பதன் மரூஉ. மூன்றுழக்கும் ஓர் உழக்கும் சேர்ந்து நான்கு உழக்காகும். அஃது ஒரு படி.

[கொடியவளை மனையாளாகப் பெற்றவன் அவளுக்குத் தொண்டு செய்து, ஔவைக்கு உணவிட வேண்டும் என்றுகூற, அவள் அவனைத் தாக்கினாள்; அப்பொழுது பாடியது.]

53. இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்.

(அ - ரை.) முகம் திருத்தி-முகத்தைத் தடவிச் சீர்செய்து.

[கணவன் மிகவும் வேண்டிக்கொள்ள அவள் சோறிட்ட போது பாடியது.]

54. காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ
அன்பில்லாள் இட்ட அமுது.

(அ - ரை.) மாண் ஒக்க வாய் - பெருமை நிறைந்தவாய்.

[ஔவையார் நான்முகனை இகழ்ந்து பாடியது.]

55. அற்றதலை போக அறாததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ—வற்றும்
மரமனை யானுக்கிம் மானை வகுத்த
பிரமனை யான் காணப் பெறின்.

(அ - ரை.) வற்றும் மரம் - பட்ட மரம். அற்ற தலைபோக- முன்னால் சிவனால் கிள்ளப்பட்ட ஒரு தலை தவிர. (கரு)

[மனைவாழ்க்கையை விட எண்ணியபோது ஔவையார் அவனுக்குச் சொன்ன அறிவு.]

56. பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானல்
எத்தாலுங் கூடி இருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாயிற்
கூறாமற் சந்நியாசங் கொள்.

(அ - ரை.) பத்தா - கணவன். எத்தாலும் - எந்த வகையிலும். ஏறுமாறாக - முறைகேடாக. சந்நியாசம் கொள் - துறவு பூணுவாயாக. (கச)

[இதுவும் அது]

57. சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே—தொண்டா!
செருப்படிதான் செல்லாஉன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்.

(அ - ரை.) சண்டாளி - புலைச்சி. தொண்டர் செருப்படி தான்செல்லா - அடியார்களின் மிதியடியின் சுவட்டிற்குக்கூட ஒப்பாகாத. (கரு)

[சிலம்பி என்னுந் தாசி 500 பொன் கொடுக்கக் கம்பர் பாடிய பாதிப் பாட்டை ஔவை நிறைவாகக் கூழுக்குப் பாடியது.]

58. "தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணா வதுஞ்சோழ மண்டலமே"—பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

(அ - ரை.) தார்வேந்தன் - வெற்றிமாலை தரித்த மன்னன். சிலம்பு - காற் சதங்கை. அரவிந்தம் - தாமரை மலர். (கசு)

[இதைக் கண்டு கம்பர் பொருமையால் ஔவையை அடீ யென்று சொல்ல விரும்பி, "ஒருகாலடீ நாலிலைப் பந்தலடீ" என்று சிலேடையாகச் சொல்லிப் பொருள் கேட்டபோது பாடியது.]

59. எட்டேகா லட்சணமே! ஏமனே றும்பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே!—முட்டமேற்
கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே!
ஆரையடா சொன்னய் அடா.

(அ - ரை.) எட்டேகா லட்சணம் - அவலட்சணம். ஏமன் ஏறும்பரி - எருமை. பெரியம்மை வாகனம் - கழுதை. கூரையில்லா வீடு - குட்டிச்சுவர். குலராமன் தூதுவன் - அனுமான் (குரங்கு). ஆரை - ஆரைக் கீரை. (கஎ)

[திருக்கோவலூரில் பெண்ணை நதிக்குத் தென்கரையில் குடிசை போட்டுக் கொண்டிருந்த பாரி யென்னும் இடையன் வீட்டிற்கு ஔவை மழையில் நனைந்து நடுங்கிக்கொண்டு போயினள். அவ்வீட்டிலிருந்த அங்கவை, சங்கவை என்னும் பெண்கள், தங்கள் கறுப்புச் சிற்றுடையைக் கொடுத்ததன்றிப் பிறகு குளிர் காயச் செய்து, முருங்கைக் கீரையை நெய் விட்டுச் சமைத்துக் கேழ்வரகு களிக் கிளறிச் சாப்பிடச் செய்தனர். ஔவையார் அதை வியந்து பாடியது.]

60. வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம்பசந்த—பொய்யா
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்
*கடகஞ் செறிந்த கையார்.

(அ - ரை.) கடகம் - வளையல். வெய்தாய் - வெப்பமுடைய தாய். நறுவிதாய் - நல்ல மணமுடையதாய். (கஅ)

[நீலச் சிற்றுடையை வியந்து பாடியது.]

61. பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக்கொட்டும்—சேரமான்
வாராய் எனஅழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றுடைக்கு நேர்.

(அ - ரை.) களைக்கொட்டு - களைபிடுங்கு கருவி. வாய்மை- உண்மை அன்பு. (கக)

* "கடகஞ் செறியாதோ கைக்கு" என்றும் பாடம்.

[அங்கவை சங்கவை யென்னும் பெண்களைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் மணஞ்செய்து கொடுக்க எண்ணி மணவோலை எழுத விநாயகரை வரும்படி பாடியது.]

62. ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்
கரியுரிவைக் கங்காளன் காளாய்!—பரிவுடனே
கன்னுல ஓலை கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீர்ப்பன் சபித்து.

(அ - ரை.) நால்வாய் - தொங்கும் வாய். கரியுரிவை கங்காளன் காளாய் - யானைத் தோற்போர்வையையும் என்பையும் அணிந்த சிவபிரானது குமாரராகிய விநாயகக் கடவுளே. கண்ணுலஓலை - திருமண ஓலை. கடிது எழுத வாராயேல் - விரைவாய் வரைதற்கு நீ வரமாட்டாயானுல். (உ0)

[சோழனை மணத்துக்கு வரும்படி பாடியது.]

63. புகார்மன்னன் பொன்னிப் புனல்நாடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடிதின் வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டா நாள்.

(அ - ரை.) புகார் - காவிரிப்பூம்பட்டினம். பொன்னிப் புனல் - காவிரியின் நீர். நகாதே - நகைத்துக்கொண்டிராமல். கடிக்கோவலூர்க்கு - காவல் அமையப்பெற்ற திருக்கோவலூருக்கு. (உக)

[பாண்டியனை மணத்துக்கு வரும்படி பாடியது.]

64. வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியவி ரோன்பானுள்
ஈண்டு வருக இசைந்து.

(அ - ரை.) வையைத் துறைவன் - வைகை நதித்துறைக்குத் தலைவன். மதுராபுரித் தென்னன் - மதுரையில் வீற்றிருக்கும் பாண்டியன். தேம்பாது - வாடாமல். தையலர்க்கு-மணப்பெண்டிர்க்கு. (உஉ)

[சேரனை வரும்படி பாடியது.]

65. சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக உட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசர் மனமிசைந்தார்
சங்கவையை யுங்கூடத் தான்.

(அ - ரை.) சேரலர்கோன் சேரன் - சேர நாட்டினர்க்குத் தலைவனாகிய சேரமன்னன். உட்காதே - அஞ்சாதே. (உங)

[வருணனைப் பொன்மாரி பெய்யப் பாடியது.]

66. கருணையால் இந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே! மாமலையன் கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யு முதுமாரி யைமாற்றிப்
பொன்மாரி ஆகப் பொழி.

(அ - ரை) மாமலையன்கோவல் - மலையமானுக்குரிய திருக்கோவலூரில். முன்மாரி பெய்யும் முதுவாரியை மாற்றி - பழைய கடல்நீரை முன்னே முகந்து பின்னர் மழையாகப் பெய்வதை மாற்றி. (உச)

[பெண்ணை நதியைப் பால் நெய்யாகிப் பெருகி வரும்படி பாடியது.]

67. முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் விகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா.

(அ - ரை.) முத்தெறியும் பெண்ணை-முத்துக்கள் கொழிக்கின்ற பெண்ணையாறு. முதுநீர் அதுதவிர்ந்து - நெடுங்காலமாக வருகின்ற தண்ணீரை அகற்றி. (உரு)

[திருக்கோவலூரைச் சிறப்பித்துப் பாடியது.]

68. பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம்
அந்நாள் வயலரிசி யாகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்குந் திருக்கோவ லூர்.

(அ - ரை.) தேங்கு - நிறைந்த. பொன்மாரி பெய்யும் ஊர்- பொன்மழை பெய்கின்ற திருப்பதி. பூம்பருத்தி ஆடையாம் - அழகிய பருத்திச் செடியே புடவையாகக் காய்க்கும். வயல் அரிசியாகும் - நெல் வயலே அரிசியைத் தரும். (உசு)

[பனந்துண்டந் தளிர்க்கப் பாடியது.]

கலித்தாழிசை அல்லது அந்தத்தடி நீண்டிசையாமையின் ஐந்தடிக் கலித்துறை என்னலுமாம்.

69. திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக்கு அறுகிட வந்துநின் றூர்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே!

(அ - ரை.) மங்கைக்கு அறுகிட - மணப்பெண்டிர்க்கு அறுகிட்டு வாழ்த்துதற்கு. சங்குஒக்க வெண்குருத்து ஈன்று - சங்கைப்போல வெள்ளிய குருத்துவிட்டு. பச்சோலை சலசலத்து- சலசலவென்ற ஒலியுடன் பச்சையோலை தழைக்கப்பெற்று. ()

[அங்கவை சங்கவை யென்னும் பெண்களுக்கு இடையர் மரபின்படி சீதனங் கொடுக்கச் சேரனை ஆடு கேட்டனர். அவன் பொன் ஆடு கொடுத்தான். அதைச் சிறப்பித்துப் பாடியது.]

70. சிரப்பான் மணிமௌலிச் சேரமான் தன்னைச்
சுரப்பாடி யான்கேட்கப் பொன்னாடொன் றீந்தான்
இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தங்கொடையின் சீர்.

(அ - ரை.) சிரப்பான் - தலையின்மீது. மணிமவுலி - மணி முடி. சுரப்புஆடு - பால் கொடுக்கின்ற ஆடு. (உஅ)

[சோழனையும் பாண்டியனையும் வாழ்த்திப் பெண்களை எப்போதும் அன்பாகப் பாதுகாக்கும்படி பாடியது.]

71. ஆயன் பதியில் அரன்பதிவந் துற்றளகம்
மாயன்ஊ துங்கருவி ஆனாலும்—தூயமணிக்
குன்றுபோல் வீறு குணமுடையார் தம்முடவீர்
இன்றுபோல் என்றும் இரும்.

(அ - ரை.) ஆயன்பதியில் அரன்பதி வந்துற்று - கண்ணன் இருப்பிடமாகிய ஆலிலைபோன்ற வயிற்றின்மீது, சிவபெருமானது இருப்பிடமாகிய மலைபோன்ற தனங்கள் சரிந்து பொருந்தி. அளகம் - கூந்தலானது. மாயன் ஊதுங் கருவி - சங்கு. (உக)

72. சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய்! கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

(அ - ரை.) குலாமாலை - அசைகின்ற மாலை. கயவர் - கீழ்மக்கள். உவமை - ஒப்பு. (உ௦)

73. இலக்கணக் கவிஞர்சொல் இன்பந் தேடுவர்
மலக்குசொல் தேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறுங் கமலத்தை நீளும் வண்டதீ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்.

(அ - ரை.) கமலத்தை - தாமரைப் பூவினை. ஈதலைக்குறை கமலத்தைச் சாரும் தன்மைபோல் - ஈயானது மலத்தைச் சேருகின்ற இயற்கைபோல. வன்கணாளர்கள் - புல்லறிவுடைய கொடியர்கள் மலக்குசொல் - கலக்க முண்டாக்கக்கூடிய சொற்கள். சாரும் என்பதை முன்னும் கூட்டுக.

தலைக்குறை கமலமென்பது, கமலமென்பதில் முதலெழுத்துக் குறைந்தவிடத்துண்டாகும் சொல்லைக் குறிக்கும். அச்சொல் மலமென்பது. (உக)

74. நிட்டூர மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா இரவலனும்—முட்டவே
கூசிநில்லா நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்.

(அ - ரை.) நிட்டூரம் - கொடுமை. மெச்சா - புகழாத. குலக்கொடியும் - இல்லறப் பெண்டிரும்.

அரசன் கொடுங்கோலனாக இருக்கக்கூடாதென்பதும், இரவலன் பெற்றதைக்கொண்டு மனநிறைவடைய வேண்டுமென்பதும், நாணத்தை விலைமகளிர் விட்டுவிடவேண்டுமென்பதும் இதனாற் பெறப்பட்டன. (உஉ)

[சோழன் ஒரு சேலையைப் பார்த்துக்கொண்டு ஔவையார் பாடலைக் கருத்துடன் கேட்காமலிருந்தான். அப்போது பாடியது.]

75. நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினு நூற்சிலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும்—மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா!
என்றுங் கிழியாதென் பாட்டு.

(அ - ரை.) மாற்றலர் - பகைவர்கள். பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா-போர் செய்யவல்ல விசாலமான கைகளில் வெற்றிதரும் வேலையுடைய களங்கமில்லாத மன்னனே. கிழியாது - அழியாது நிலைபெறும். (௭௫)

[வேளூர்ப் பூதன் விருந்திட்டதைப் புகழ்ந்து பாடியது.]

76. வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டசோ(று)
எல்லா உலகும் பெறும்.

(அ - ரை.) புரிந்து - விரும்பி. திரமுடன் - உறுதியுடன். வழுதுணங்காய் வாட்டும் - கத்தரிக்காய்த் துவட்டலும். முரமுரெனவே புளித்த மோரும் - வாசனை கெடாத நுரைத்த புளிப்புடைய மோரும். (௭௬)

[இதனினுமிது நன்றெனல்.]

77. ஏசி யிடலில் இடாமையே நன்(று) எதிரில்
பேசு மனையாளில் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தில் நன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று.

(அ - ரை.) ஏசி - கடுஞ்சொற் சொல்லி. நேசம்இலா வங்கணத்தில் - அன்பில்லாத நட்பில். வாழ்வில்லா சங்கடத்தில் - உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத பொருளில்லாது துன்புறுவதில். (௭௭)

[கோரைக்காலில் இருக்கும் ஆழ்வான் கொடையை இகழ்ந்து பாடியது.]

78. கரியாய்ப் பரியாகிக் காரெருமை தானய்
எருதாய் முழப்புடவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகால் ஓய்ந்ததே
கோரைக்கால் ஆழ்வான் கொடை.

(அ - ரை.) கரி - யானை. பரி - குதிரை. தேரைக்கால் பெற்று - தேரையின் காலைப்போல் சிறுத்து. (௩௯)

[ஈகையில்லானைக் குறித்துப் பாடியது.]

79. பாடல் பெருனே பலர்மெச்ச வாழானே
நாடிய நன்மணங்கள் நாடானே—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை இருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்.

(அ - ரை.) சேடன் - சேடனென்பவன். கவிழ்ந்தென் மலர்ந்தென்ன - ஒழிந்தாலும் கெடுவதில்லை நினைந்தாலும் பயனில்லை. காண் : அசை. (௩௭)

[முல்லான் என்பவனைப் புகழ்ந்து பாடியது.]

80. காலையில்ஒன் ருவர் கடும்பகலில் ஒன்ருவர்
மாலையில்ஒன் ருவர் மனிதரெல்லாம்—சாலவே
முல்லானைப் போல முகமுமக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம்.

(அ - ரை.) முல்லானைப்போல - முல்லானென்னும் வள்ளலைப்போல. சாலவே - நன்ருக. (௩௮)

[ஒரு புலவன் கையில் மண்ணை வைத்துக்கொண்டு. இஃ தென்னவென்று கேட்டதற்குப் பாடியது.]

81. கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து)உல களவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிருள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவிர் !
எறும்புந்தன் கையாலெண் சாண்.

(அ - ரை.) கலைமடந்தை - நாமகள். கற்றது - தான் படித்தது. (ருக)

[அரசன் அமைச்சராக யாரை வைக்கலாமென்று கேட்டதற்குப் பாடியது.]

82. நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ ஆங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியும் ஆவான் வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு.

(அ - ரை.) நூல் எனிலோ கோல் சாயும்-பூணூல் அணிந்த பார்ப்பனன் அமைச்சனானால் நீதிமுறை மாறும். நும் தமரேல் வெம்சமராம் - அமைச்சர் உன்னினத்தவராயிருந்தால் பெரிய போருண்டாகும். கோல் எனிலோ அங்கே குடிசாயும் - தராசு கோலையுடைய வைசியன் அமைச்சனானால் உடனே குடிகளுக்குக் கேடுண்டாகும். நாலாவான் மந்திரியுமாவான் - நாலாவதாகக் கருதப்படும் வேளாளன் அமைச்சனாவதற்குந் தகுதியானவன்.

83. செம்மான் கரத்தனருள் சேயா ! நெடியோனை
அம்மான் எனப்பெற் றருள்வேலா !—இம்மான்
கரும்பிறைக்கும் வெண்பிறைக்கும் கண்ணம் பிறைக்கும்
அரும்பிறைக்குங் கூந்தல் அணை.

(அ - ரை.) செம்மான் கரத்தன் - சிவபெருமான். சேயா - செவ்வேளே. இம்மான் - இந்த மாது கரும்பு இறைக்கும் - கரும்பினை வில்லாகக்கொண்ட மன்மதன் காரணமாகவும். வெண் பிறைக்கும் - வெள்ளிய நிலவைப் பார்த்தும், கண் அம்பு இறைக்கும் - கண்ணீரைச் சிந்தும். அரும்பு இறைக்கும் - அரும்பு தங்கிய. (சக)

[ஒவ்வொன்று கோடி பெறுமென்று பாடியது.]

84. மதியாதார் முற்றம் மதித்துஒருக்காற் சென்று
மிதியாமை கோடி பெறும். (சஉ)

உண்ணீர்உண் ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும். (சரு)

கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும். (௪௪)

கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும். (௪௫)

(அ - ரை.) மதியாதார் முற்றம் - பொருட்படுத்தாதவர்களுடைய வீடு. உண்ணீர் உண்ணீர் - உண்ணுங்கள் உண்ணுங்கள். கோடி கொடுத்தும் - கோடி பொருளை அளித்தாயினும். நாகோடாமை கோடிபெறும் - நாவானது பிறழாதிருத்தல் ஒரு கோடி பொன் பெறத்தக்கது.

85. வாதக்கோன் நாளையென்றான் மற்றைக்கோன் பின்னையென்றான்
ஏதக்கோன் யாதேனும் இல்லையென்றான்—ஓதக்கேள்
வாதக்கோன் சொல்லதிலும் மற்றைக்கோன் சொல்லதிலும்
ஏதக்கோன் சொல்லே இனிது.

(அ - ரை.) வாதக்கோன் - வாதத்தின் தலைநாடி. மற்றைக்கோன் - அதற்கு வேறாகிய பித்தத்தின் தலைநாடி. ஏதக்கோன் - சிலேத்தும நாடி. வாதநாடியைப்போல நாளையென்று கூறுவதைப் பார்க்கிலும், சிலேத்தும நாடிபோலக் கொடுக்க யாதுமில்லாதிருந்தால் உடனே இல்லையென்று சொல்லிவிடுவது நல்லது.

வாதநாடி யடங்கின் ஒருநாளிலும், சேத்தும நாடி யடங்கின் ஒரு நாழிகையிலும், பித்தநாடி யடங்கில் ஒரு நிமிடத்திலும் உயிர் நீங்கும். (௪௬)

86. சுற்றுங் கருங்குளவி சூரைத்தூறு ஆரியப்பேய்
எற்றுஞ் சுடுகாடு இடிகரையின்—புற்றின்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததேன் ஒக்கும்
தளர்ந்தோர்க்கொன்(று) ஈயார் தனம்.

(அ - ரை.) கருங்குளவி - கொடிய வண்டு. சூரைத்தூறு - சூரைச்செடியின் தூறு. ஆரியப்பேய் எற்றும் சுடுகாடு - மிலேச்சப் பிசாசு தாக்கிய சுடுகாடு. புற்றில் - பாம்புப் புற்றில். மடல் பனை - ஓலை கழியாத பனை எளிதில் எடுக்கமுடியாதென்பது கருத்து. (௪௭)

[பொற்கிழி அறும்படி பாடியன.]

87. ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே! தாதாகோ டிக்கொருவர்
உண்டாயின் உண்டென் றறு.

(அ - ரை.) தாமரைதிரு - திருமகள். ஆர்த்தசபை நூற்றொருவர் - நூறுபேரில் ஒருவர்தாம் தக்க சபையில் இருப்பதற்கு உரியவராவார். ஆயிரத்தில் ஒன்றாம் புலவர் - ஆயிரம்பேரில் ஒருவர்தாம் கல்வியறிவு உடையவராய் இருப்பர். வார்த்தை பதினாயிரத்தில் ஒருவர் - அவருள்ளும் தக்க மொழியைத் தக்க இடத்தில் சொல்லக்கூடியவர்கள் பதினாயிரம்பேரில் ஒருவரே ஆகும். தாதா கோடிக்கு ஒருவர் - கோடிபேரில் ஒருவரே வள்ளலாய் இருப்பார். (சஅ)

88. தண்டாமல் ஈவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை—அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி பின்சென்றும்
ஈயானெச் சம்போல் அறு.

(அ - ரை.) தண்டாமல் - கேளாதபோது. தண்டி அடுத்தக்கால் ஈவது வண்மை - ஒன்றைக்கேட்டு நெருங்கிய பிற்பாடு அளிப்பது ஈகை. கால்கூலி - கால்நடைக்குக் கொடுக்கும் கூலி. ஈயான் எச்சம்போல் - தராதவனுடைய மக்களைப்போல. (சகூ)

89. உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சமறும் என்றால் அறு.

(அ - ரை.) உள்ள வழக்கு-உண்மையான வழக்கு. ஊரார் பொதுஇருக்க - ஊரில் உள்ளவர்களின் சபை அவ் வழக்கிற் குதவியாக இருக்கவும். கைக்கூலி - பரிதானம். கால்அறுவான் தன்கிளையும் - பிள்ளையில்லாமற் போவானுடைய உறவினரும். எச்சம்அறும் என்றால்-வழித்தொடர்பு அற்றுப்போவாரென்பது உண்மையானால். (ூ0)

90. வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை அழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறும் என்றால் அறு.

(அ - ரை.) வழக்குடையான் நிற்ப - வழக்குக்கு உரியவன் இருக்கவும். வழக்கை அழிவழக்குச் செய்தோன் - வழக்குத் தோல்வியுறும்படி செய்தவனும். (௯௧)

[ஓர் அரசன் மகள் ஒரு அரசிளங் குமரனைக் கல்வியறிவில்லாதவனென்றறியாமல், 'ஓர் அறச்சாலையில் இன்ன காலத்தில் நீ வந்திருந்தால் நான் வருகிறேன்' என்றெழுதினள். அதை அவன் கல்வியறிவுள்ள ஒருவனுக்குக் காண்பித்தனன். அவன் அதன் கருத்தையறிந்து அரசிளங்குமாரனை 'நீ யிவ்விடத்திருந்தால் அரசன் உன் தலையை வெட்டுவா'னென்று அவனைப் போகச்செய்து, தான் அக்காலத்தில் அந்த அரசிளங்குமாரனைப் போலக் கோலங்கொண்டு அங்கிருந்தனன். அரசன் மகள் அவ்வாறே வந்து பிறன் என்று அறியாமற் கூடிய பின்பு தெரிந்து தற்கொலை செய்துகொண்டு இறந்து, வருகிறவர்களைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்தாள்; அவ்வறச்சாலைக்கு ஔவையார் ஒருநாள் வந்தனர். அவரையுஞ் சாமந்தோறும் துன்பஞ் செய்யத் தொடங்கியபோது நான்கு சாமத்திலும் பாடியன.]

91. வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

(அ - ரை.) கல்லானை - படித்துக்கொள்ளாதவனை. வெள் ஓலை - வெள்ளிய ஓலை. எற்று எற்று எற்று - மூக்காலும் தாக்குவாயாக. (௯௨)

92. கருங்குளவி சூரைத்தூ (று)ஈச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன்(று) ஈயாதான் வாழ்க்கை-அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

(அ - ரை.) சூரைத்தூறு - சூரைச்செடியின் தூறு புதர். தாயத்தார் - பங்காளிகள். (௯௩)

93. வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தான முளதால் தயையுளதால்—ஆனபொழு(து)
எய்த்தோம் இளைத்தோம் என்(று)ஏமாந் திருப்பாரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

(அ - ரை.) வானம் - விண். தானம் - கொடை. எய்த்தோம் - சோம்பேறிகளாயிருந்தோம். (௯௪)

94. எண்ணு யிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்ருக் கிடையேபோல்—பெண்ணுவாய்
பொற்றொடி மாதர் புணர்முலைமேற் சாராரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

(அ - ரை.) உள்நீரம் பற்ருக் கிடையேபோல்-உள்ளே ஈரம் ஏறப்பெருத நெட்டியைப்போல. (௯௫)

[மாடு மேய்க்கும் சிறுவனைப்போல் வந்த முருகக் கடவுளிடத்தில் ஔவையார் தோல்வி யடைந்தபொழுது பாடியது.]

95. கருங்காலிக் கட்டைக்கு நாணுக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற(து)
ஈரிரவு துஞ்சா(து) என்கண்.

[முருகர் கொடியது முதலியன கேட்க ஔவையார் பாடிய ஆசிரியப்பா.]

[கொடியது]

96. கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய் !
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றெணுக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது
இன்புற அவர் கையில் உண்பது தானே.

(அ - ரை.) நெடிய - நீண்ட. கொடியது - கொடுமையானது. (குள)

[இனியது]

97. இனியது கேட்கில் தனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளாரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.

(அ - ரை.) ஏகாந்தம் - தொந்தரவின்றித் தனியே இருப்பது. ஆதியைத் தொழுதல் - முதல்வனாகிய கடவுளைத் தொழுதல். அறிவினர்ச் சேர்தல் - அறிவுடையாரைப் போயடைதல்.

[பெரியது]

98. பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

(அ - ரை.) எரிதவழ் - வெப்பம் பரவிய. பெரியது-பெரிய பொருள். புவனம் - உலகம். கரியமால் உந்தி - கருநிறமுடைய பெருமாளின் உந்திக்கமலம். குறுமுனி - அகத்தியர். கலசத்தில் - குடத்தில். புவியோ அரவினுக்கு ஒருதலைப்பாரம் - நிலமோ பாம்பாகிய ஆதிசேடனது தலையிலுள்ள ஒரு சுமை. (குக)

[அரியது]

99. அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானிட ராதல் அரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்தல் அரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான்செயல் அரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

(அ - ரை.) வடி - கூர்மையான. பேடு - அலி. நயத்தல் - விரும்புதல். வானவர் நாடு வழிதிறந் திடுமே - விண்ணுலகம் அவர்கள் தம்முள் புகுவதற்கு வழிதிறந்து காட்டும். (௬0)

[வீணானவைகளைக் குறித்துப் பாடியது]

100. மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபநல்
நாடில்லான் செங்கோல் நடாத்துவதுங்—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டிர்
விருந்தில்லான் வீடும் விழல்.

(அ - ரை.) மாடு - செல்வம். மதி இல்லான் வாணிபம்- அறிவற்றவன் செய்யும் வணிகமும். கூடும் குருவில்லா வித்தை - கைகூடுதற்கு இன்றியமையாத ஆசாரியன் உதவியில்லாமல் கற்ற கல்வியும். விருந்து இல்லா வீடும் - விருந்தினரை உபசரியாத வீடும். விழல் - பயனற்றவையாகும். (௬௧)

[பாராட்டுப்பெறற்கு உரியவர்கள் பாரட்டப்பெற வேண்டிய இடங்கள்]

101. நேசனைக்கா ணுவிடத்து நெஞ்சார வேதுதித்தல்
ஆசானை எவ்விடத்தும் அப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில்.

(அ - ரை.) மைந்தர்தமை நெஞ்சில் - பிள்ளைகளை மனத்தினுள்ளே மதித்துக்கொள்க. வினையாளை வேலைமுடிவில் - வேலைக்காரரைக் காரியம் முற்றுப்பெற்ற பிறகே பாராட்டுக. (இன்றேல் நன்மை விளையாது) (சுஉ)

102. ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்கல் ஆமோ கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ.

(அ - ரை.) சுணங்கன் - நாய். (சுங)

[சோமனென்னும் செல்வன்மேற் பாடியது]

103. நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டில் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்.

(அ - ரை.) ஈசன்கழல் அருமைவெவ் வினையில் காண்மின் - இறைவன் திருவடியை வழிபடுவதினுலுண்டாகும் அருமையான பயனைக் கொடிய தீவினையின் வழியில் இருக்கும்பொழுது காண்பீர்களாக. பழகு தமிழ்ச்சொல் அருமை நாலிரண்டில் - கற்றவர்கள் பயிலுகின்ற நற்றமிழின் நயத்தை நான்கு அடிகளாலாகிய நாலடியாரிலும், இரண்டடியாற் செய்யப்பட்ட திருக்குறளிலும் கண்டுகொள்க. (சுச)

[பாவாணர்களுக்கு அருமையானவைகளைப் பற்றிப்பாடியது]

104. காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்
பேசுமுலா விற்பெரும் பைபுலி—ஆசு
வலவர்க்கு வண்ணம் புலியாமற் றெல்லாப்
புலவர்க்கும் வெண்பாப் புலி.

(அ - ரை.) காசினியில் - உலகில். புலியாம் - அரிய செயலாகும். உலாவில் - உலாவென்னும் நூலில். ஆசுவலவர்க்கு வண்ணம் புலியாம் - நினைத்ததை உடனே பாடவல்ல ஆசுகவிகளுக்கு வண்ணப் பாட்டுப் பாடுதல் கடினமாகும். (சுரு)

[அறம் பொருள் இன்பம் வீடு நான்கையும் ஒரு செய்யுளிற் பாடியது.]

105. ஈதல்அறந் தீவினைவிட்டு ஈட்டல் பொருள்—எஞ்ஞான்றுங்
காதல் இருவர் கருத் தொருமித்து—ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

(அ - ரை.) *ஈதல் அறம்-கொடுத்தல் அறச் செய்கையாகும். ஈட்டல் - தேடப்படுவது. எஞ்ஞான்றும் - எப்போதும்.* (௬௬)

106. தாயோடு அறுசுவைபோந் தந்தையோடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்வு
உற்ருர் உடன்போம் உடற்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்ருலி யோடெவையும் போம்.

(அ - ரை.) *சேயோடு தான்பெற்ற செல்வம்போம்-குழந்தை இறந்தபின் ஒருவன் பெற்ற செல்வம் நிலைபெறுது ஒழியும். ஆயவாழ்வு - சிறப்பாக வாழும் வாழ்க்கை. பொற்ருலியோடு - பொன்னினுலாகிய மங்கல நாணணிந்த மனையாளிறந்தபோது.* (௬எ)

107. போந்த உதாரனுக்குப் பொன்துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி அருந்துரும்பாம் இல்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு.

(அ - ரை.) *போந்த உதாரனுக்கு - ஈகைக் குணத்தோடு பிறந்தவனுக்கு. ஆய்ந்த அறிவோர்க்கு - சிறந்த நூல்களை நுட்பமாயாராய்ந்த புலவர்கட்கு. நாரி அரும் துரும்பு - பெண்கள் அற்பமான துரும்பு.* (௬அ)

[நன்னிலத்துப் பெருங்கோயில் இறைவனைப் பாடியது.]

108. மேற்பார்க்க மைந்தரும் மூவாளருதும் விளங்குகங்கை
நீர்ப் பாய்ச்சலுநன் விலமுமுண்டாகியு நின்னிடத்தில்
பாற்பாக் கியவதி நீங்காதிருந்தும் பலிக்குழன்றீர்
ஏற்பார்க் கிடாம லன்ருேபெருங் கோயில் இறையவனே.

(அ - ரை.) மேற்பார்க்க மைந்தரும் - செல்வத்தைக் கவனித்துப் பார்க்கப் பிள்ளைகளும். மூவா எருதும் - ஊர்தியாக இளங்காளையும். பால் பாக்கியவதி நீங்காதிருந்தும் - அன்பர்கட்குப் பாலமுதம் அளிக்கின்ற செல்வியாகிய உமாதேவி பிரியாதிருந்தும். ஏற்பார்க்கு - ஐயம் கேட்பார்க்கு. பலிக்கு உழன்றீர் - ஐயம் கேட்டுத் திரிவீராயினீர். யாவரேயாயினும் ஐயமிடார் ஐயமேற் றுண்ணுங் கதியை அடைவர் என்பது கருத்து. (சுகூ)

[தம்மைப் புகழ்ந்து பாடவேண்டும் என்ற சிலரின் தன்மையைக் குறித்துப் பாடியது.]

அகவல்

109. மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய என்றன் பனுவல் வாயால்
என்னையும் பாடுக என்றனிர் எங்ஙனம்
பாடுது மியாங் களிறுபடு செங்களம்
கண்ணிற் காணீர் வெளிறுபடு நல்யாழ்
விருப்பமாய்க் கேளீர்
இலவ வாய்ச்சியர் இளமுலை புல்லீர்
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கலீர்
ஊடீர் உண்ணீர் கோடீர் கொள்ளீர்
ஓவாக் கானத் துயர்மரம் போலத்
தாவாக் கனியில் தோன்றி னீரே.

(அ - ரை.) மூவர் கோவையும் மூவிளங்கோவையும்-அயன் அரிஅரன் என்னும் மூவருக்கும் தலைவராகிய கடவுளையும் இளமையுடைய தமிழ்நாட்டு மூவேந்தர்களையும். பனுவல் வாயால்-பாட்டு மணங்கமழும் வாயினாலே. களிறுபடு செங்களம் கண்ணில் காணீர் - யானைகள் போரிட்டுச் சாகின்ற குருதியால் சிவந்த போர்க்களத்தை நீர் கண்ணால்கூடப் பாத்திருக்கமாட்டீர். வெளிறுபடு நல்யாழ் விருப்பமாய்க் கேளீர் - குற்றம் நீங்கிய நல்ல யாழினிசையை விரும்பிக் கேட்க மாட்டீர். கோடீர் - நற்பொருள்களை ஏற்றுக்கொள்ள மாட்டீர். ஓவாகானத்து உயர் மரம்போல - மரங்கள் நீங்காத காட்டிலுள்ள நெடிய மரம் போலவும். தாவாக் கனியில் - எட்டி எடுக்க முடியாத அதன் பழம் போலவும். (எO)

110. கல்வி யுடையீர்! கருங்கான கத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதெவன்—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போல் மாண்டு.

(அ - ரை.) வல்லாய் கேள் கல்வியுடையீர் - திறமையான ஆராய்ச்சியும் கேள்வியுமுடைய கல்விமான்களே. விலை வாங்கி வெல்விக்கும்-கைக்கூலி வாங்கி வெற்றி பெறுவிக்கும் வல்லாளன் சுற்றம்போல் மாண்டு - திறமையாளனது இனத்தாரைப்போலப் பட்டுப் போய். (எக)

[பாண்டியன் திருமணத்தில் விருத்துண்டது.]

111. வண்டமிழைத் தேர்ந்த வழுதிகலி யாணத்(து)
உண்ட பெருக்கம் உரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்.

(அ - ரை.) அண்டி நெருக்குண்டேன் - அண்மையிற்போய்க் கூட்டத்திற் கசங்கினேன். சுருக்குண்டேன் - வயிறு சுருங்கப் பெற்றேன். (எஉ)

[நாட்டு வளங்களைப் பாடியது.]

112. வேழமுடைத்து மலை நாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னுடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றெண்டை
நன்னுடு சான்றோ ருடைத்து.

(அ - ரை.) வேழம் உடைத்து-யானைகளைப் பெற்றிருப்பது. மேதக்க - மேம்பாடுடைய. பூழியர்கோன் தென்னுடு - பாண்டியனது அழகிய நாடு. (எங)

113. நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்வு
இல்லந் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்.

(அ - ரை.) சித்தன் வாழ்வு - பழநி. மூன்று எரி - முத்தீ. நல் அரவப்பாட்டு-நல்ல இனிய ஓசையையுடைய பாட்டு. (எச)

[வருங்காலத்தில் எதுவும் வலிய வரும். போங்காலத்தில் தானே போகும் என்று பாடியது.]

114. ஆங்காலம் மெய்வருந்த வேண்டாம தேதென்னில்
தேங்காய்க் கிளநீர்போற் சேருமே—போங்காலம்
காட்டானை உண்ட கனியதுபோல் காணுமே
தாட்டாளன் தேடும் தனம்.

(அ - ரை.) காட்டானை உண்ட கனி - யானையுண்ட விளாங் கனி; உருவு கெடாதிருப்பினும் பயனற்றிருப்பதைப்போலாகும் என்பது கருத்து. தாட்டாளன் - முயற்சியுடையவன். (எரு)

[ஈயாத புல்லரைச் சினந்து பாடியது.]

115. இறுக முடிந்தே இரப்பார்க்கொன்(று)ஈயாத்
தறுகணரைக் கொல்லத் தகாதோ—சிறுகை
வடுகனையும் பேதை வரதனையுங் கொன்றாய்
நடுவாமோ இஃதுநம னே.

(அ - ரை.) இறுக - கெட்டியாக. தறுகணர் - அஞ்சத் தக்கவைகளுக்கு அஞ்சாதவர். நடுவு - நடுவுநிலைமை. (எசு)

[கைக்குறி காட்டி ஔவையார் கேட்ட கேள்விக்குச் சங்கப் புலவர்கள் கூறிய விடையை மறுத்துப் பாடியது.]

116. ஐயம் இடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவேனும் அன்னம் இட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே என்ன உணரவல் லீரேல்
அருவினைகள் ஐந்தும் அறும்.

(அ - ரை.) அருவினைகள் - கெடுத்தற்கரிய வினைகள். (எஎ)

[கல்வி நிலைமையைக் குறித்துப் பாடியன.]

117. எழுபிறவி யோதி உணர்ந்தார் தமக்கே
வருபிறவி தோறும் வலிதே—இருள்தீர்
கலைவாணர் எல்லாங் கழறினர்காண் நெஞ்சில்
மலைவாகக் கொள்ளேல் மதித்து.

(அ - ரை.) எழுபிறவிதோன்றியுள்ள பிறப்பில். கழறினர்-கூறினர். மலேவு - ஐயம். (எஅ)

118. எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்
பழுதறவா சிப்பரிது பண்பாய்—முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தான்அந் நிலே.

(அ - ரை.) கல்வி நிலேயில் எல்லாம் அருமையான செய்கைகளாம் என்பது கருத்து. (எகூ)

[திருக்குறளே வியந்து கூறியது.]

119. அணுவைத் துளேத்தேழ் கடலேப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

(அ. - ரை.) அணு - மிகச் சிறிய பொருள். (அ0)

[நெல்லிக்கனி கொடுத்ததைச் சிறப்பித்து அதிகமானேப் பாடியது.]

120. பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனேயும்
ஆங்குவரு பாற்பெண்ணே ஆற்றினேயும்—ஈங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றை நாவை
அறுப்பித்தாய் ஆமலகம் தந்து.

(அ - ரை.) வாவி - தடாகம். வாள்அதிகா - வாட்படையையுடைய அதிகனே. ஆமலகம் - நெல்லிக்கனி. (அக)

[ஏழிற்கோவைச் சினந்து பாடியது.]

121. இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே!
குருடேயும் அன்றுநின் குற்றம்—மருடீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனஇரண்டு
ஓட்டைச் செவியும் உள.

(அ - ரை.) ஏழிற்கோ - மன்னன். ஏழில் - கொண்கான நாட்டில் உள்ள அவன் மலே. (அஉ)

[ஔவையார் ஒருவனைப் புகழ்ந்து பாடினர். பாட்டருமை தெரியாத அப்புல்லன் ஔவையாரை இகழ்ந்தான். அப்போது ஔவையார் சினந்து பாடிய அங்கதம்.]

122. எம்மிகழ் வோரவர் தம்மிகழ் வோரே
எம்மிக ழாதவர் தம்மிக ழாரே
தம்புகழ் இகழ்வோர் எம்புகழ் இகழ்வோர்
பாரி ஒரி நள்ளி எழினி
ஆஅய் பேகன் பெருந்தோள் மலையனென்(று)
எழுவருள் ஒருவனும் அல்லை யதனல்
நின்னை நோவ தெவனே
அட்டார்க் குதவாக் கட்டி போல
நீயும் உளையே நின்னன் னோர்க்கே
யானும் உளனே தீம்பா லோர்க்கே
குருகினும் வெளியோய் தேளத்துப்
பருகுபால் அன்னவென் சொல்லுகுத் தேனே.

(அ - ரை.) அட்டார்க்கு - சமைத்தவர்க்கு. உகுத்தேன் - சிந்தினேன். (அங)

[பந்தன் என்னும் வணிகனைப் பாடியது.]

123. யானவ்வை யென்றிரந் தேத்தினேன் மற்றவனும்
ஏனவ்வை யேயென் றிரங்கினன்—நானுங்கேள்
மன்னும் புகார்வணிகன் மாநகரன் பந்தனெனும்
பொன்னனருள் பெற்றேனிப் போது.

(அ-ரை.) மன்னும் - நிலைபெறும். புகார் - காவிரிப்பூம் பட்டினம். (அச)

[சேரமானைப் பிரிந்தபின் பாடியது.]

124. சிறுக்கீரை வெவ்வடகும் சேதாவின் நெய்யும்
மறுப்படாத் தண்டயிரும் மாந்தி—வெறுத்தேனை
வஞ்சிக்குங் கொற்கைக்கும் மன்னவனேற் பித்தானே
கஞ்சிக்கும் புற்கைக்குங் கை.

(அ - ரை.) வெவ்அடகு - விரும்பத் தக்க கீரைக் கறியும். சேதா-சிவப்புப் பசு. மறு - குற்றம். மாந்தி - உண்டு. புற்கை - புல்லரிசிச் சோறு. (அரு)

[புராந்தகச் சோழன்மீது பாடியது.]

125. கோலெடுத்துக் கோத்துரத்துங் கோகனகச் செங்கைவடி
வேலெடுத்துங் கோத்துரத்தல் விட்டிலனே—சீலமிகு
பூபாலர் ஆனாலும் போமோ புராந்தகற்குக்
கோபாலர் ஆன குணம்.

(அ - ரை.) கோத்துரத்தும் - ஆவை விரட்டும். பூபாலர் - அரசர். புராந்தகன் - புராந்தகச் சோழன். கோத்துரத்தல் - அரசர்களை விரட்டுதல். (ஆவை விரட்டியது கிருட்டிணனாய்த் தோன்றிய போதென்க.) அரசர்கள் திருமாலின் கூறாதலின் இவ்வாறு கூறினார். (அசு)

[திருக்குடந்தையில் கொடையாளனைப் புகழ்ந்தும் பிசினனை இகழ்ந்தும் பாடியது.]

126. திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் திருக்குடந்தை வாழை—குருத்தும்
இலையுமிலை பூவுமிலை காயுமிலை என்றும்
உலகில் வரும்விருந்தோ டுண்டு.

(அ - ரை.) திருத்தங்கி - திருத்தங்கி என்பவன் (இவன் கொடையாளன்.) மருத்தன் - மருத்தன் என்பவன் (இவன் பிசினன்.) (அஎ)

[உழவுக்குரிய நன்மைகளை உரைத்தது.]

127. ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரஎளிதாய்ச் செய்வாருஞ் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது.

(அ - ரை.) வித்து-விதை. செய்வார் - பணியாளர்கள். (அஅ)

[தத்துவங் கூறியது.]

128. ஒன்றுகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்தன் வீரமே வீரமற்(று)—ஒன்றுனும்
சாகாமற் கற்பதே வித்தை தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்.

(அ - ரை.) ஒன்றுகக் காண்பதே காட்சி-ஒரு பொருளாகிய கடவுளை எங்கும் பார்ப்பதே அறிவாகும். மற்றொன்றுனுஞ் சாகாமற் கற்பதே வித்தை - எவ்வகையினுலும் கெடாதபடி கற்பதே கல்வியாகும். (அசு)

[கைப்பொருளின் பெருமையைக் கூறியது.]

129. உடையராய்ச் சென்றக்கால் ஊரெல்லாஞ் சுற்றம்
முடவராய்க் கோலூன்றிச் சென்றக்கால் சுற்றம்
உடையரனும் வேறு படும்.

(அ - ரை.) உடையராய்-பொருளுடையவர்களாய். சுற்றம்-சூழ்ந்திருக்கும் உறவினர். வேறுபடும் - மனம் திரியும். (கூ0)

[சோழமன்னன் மனிதர்கட்கு எது எதுபற்றி அழகுண்டாகும் என்று கேட்டபோது பாடியது.]

130. சுரதந் தனில்இளைத்த தோகை சுகிர்தம்
விரதந் தனில்இளைத்த மேனி—நிரதம்
கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரில் பட்ட
வடுத்துளைத்த கல்லபிரா மம்.

(அ - ரை.) சுரதம் - காமவின்பம். தோகை - பெண். சுகிர்தம் - சிறப்புடையவள். விரதம் - நோன்பு. நிரதம் - எப்பொழுதும். தாதா - கொடையாளி. வடு - தழும்பு. அபிராமம் - அழகு. (கூக)

131. சென்றுமு துண்பதற்குச் செய்வ தரிதென்று
மன்றுமு துண்பான் மனைவாழ்க்கை—முன்றிலில்
துச்சில் இருந்து துடைத்தெழுகண் நீராலேழ்
எச்சம் இறுமேல் இறு.

(அ-ரை.) மன்று உழுது - மன்றத்தில் இருந்து வீண் சொற்போர் செய்து. முன்றில் - முன்னிடம். துச்சில் - ஒதுக்கிடம். எச்சம் - வழிமுறை. (கஉ)

[யாதவர்களைப் புகழ்ந்து பாடியது]

132. மெய்வந்த கோவலர் தங்குலத்
தாரை வெறுங்குலத்தோர்
கைவந் தனஞ்சொலின் வாய்வெந்
திடும்அந்தக் காரணங்கேள்
ஐவந்த வேள்வியில் ஐவர்க்குந்
தெய்வமும் ஆகிநின்ற
தெய்வம் பிறந்த குலங்காணும்
நந்தன் திருக்குலமே.

(அ-ரை.) மெய்வந்த - உண்மையான சீர்த்திபொருந்திய. கோவலர் - இடையர். வெறுங்குலத்தோர் - வீண்குலத்தோர். கைவந்தனம் - பழிப்புரை. ஐவர் - பாண்டவர். ஐவர்க்குந் தெய்வம் கண்ணன். (கந)

[ஐவேல் அசதியின்மீது பாடிய கோவையில் கிடைத்த சில செய்யுட்கள்.]

133. ஆடுங் கடைமணி ஐவேல் அசதி அணிவரைமேல்
நீடுங் கயற்கண்ணி னுள்தந்த ஆசை நிகழ்த்தரிதால்
கோடுங் குளமும் குளத்தரு கேநிற்குங் குன்றுகளுங்
காடுஞ் செடியும் அவளாகத் தோன்றும்என் கண்களுக்கே.

(அ-ரை.) கடைமணி - கடைவாயிலில் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணி. கோடு - நீர்க்கரை, மரக்கொம்பு. இது தலைவியின்பால் வேட்கைமிக்கான் ஒருவனுடைய கூற்று. (கச)

134. அற்றுரைத் தாங்கிய ஐவேல்
அசதி அணிவரைமேல்
முற்று முகிழ்முலை எவ்வாறு
சென்றனள் முத்தமிழ்நூல்

கற்ருர் பிரிவுங்கல் லாதார்
இளமையும் கைப்பொருளொன்(று)
அற்ருர் இளமையும் போலே
கொதிக்கும் அருஞ்சுரமே.

(அ - ரை.) அற்ருர் - வறியவர். ஐவேல் - ஐந்து வேல மரங்கள். அசதி - மறதி. "தனக்கு உணவிட்டுப் போற்றிய யாதவன் மீது செய்யுள் இயற்ற விரும்பிய ஔவையார் அவனுடைய பெயரை வினவினர். அவன் பெயர் மறந்துபோய் விட்டதென்றனன். ஊர்ப்பெயரையும் அவன் அறிந்திலன். ஐந்து வேலமரங்கள் தன் ஊரில் இருந்த நினைவு உள்ளது என்று மட்டுங் கூறினன். ஆகவே ஔவையார் அவனுடைய பெயரை ஐவேல் அசதி என்று கொண்டு கோவை பாடினர்" என்று கூறுகின்றனர். அருஞ்சுரம் - கொடிய பாலைநிலம். (கூடு)

135. அருஞ்சஞ் சலங்கொண்ட ஐவேல்
அசதி அகல்வரையின்
இருஞ்சஞ் சலஞ்சொல்ல வேண்டுங்
கொலோ எனதன்னைமொழி
தருஞ்சஞ் சலமுந் தனிவைத்துப்
போனவர் சஞ்சலமும்
பெருஞ்சஞ் சலங்கொண்டு யானிருந்
தேனொரு பெண்பிறந்தே.

(அ - ரை.) அருஞ் சஞ்சலம்-வருத்தமின்மை. அகல்வரை-அகன்றமலை. இருஞ் சஞ்சலம் - பெரிய துன்பம். (கூசு)

136. அலைகொண்ட வேற்கரத் தைவேல்
அசதி அணிவரைமேல்
நிலைகொண்ட மங்கைதன் கொங்கைக்குத்
தோற்றிள நீரினங்கள்
குலையுண் டடியுண்டென் கையினில்
எற்றுண்டு குட்டுமுண்டு
விலையுண் டடியுண்டு கண்ணீர்
ததும்பவும் வெட்டுண்டவே.

(அ - ரை.) அலைகொண்டவேல் - அலைத்தலைச் செய்கிற வேல். நிலைகொண்ட - நிலையாகக் குடியிருத்தலைக்கொண்ட. விலையுண்டு - விற்கப்பட்டு. கண் நீர் ததும்பவும் - கண்களிடத்திலே நீரானது வெளிப்படவும். கண் - தேங்காய்க் கண். (கஎ)

137. அழற்கட்டுக் கட்டிய ஐவேல் அசதி அணிவரையின்
மழைக்கட்டுக் கட்டிய மாளிகை மேல்ஒரு மங்கைநல்லாள்
உழக்கிட் டுரியிட்டு முவ்வுழக் கிட்டுரி நாழியிட்டுக்
குழற்கட் டவிழ்த்துடன் அங்ஙன்நின் றேமயிர் கோதினளே.

(அ - ரை.) மழைக்கட்டுக் கட்டிய-முகில்களுந் தங்குமாறு உயரமாகக்கட்டிய. குழற்கட்டு-கூந்தலின் கொண்டை முடிச்சு. (கூஅ)

138. அறங்காட் டியகரத் தைவேல்
அசதி அகன்சிலம்பில்
நிறங்காட்டுங் கஞ்சத் திருவனை
யிர்முகம் நீண்டகுமிழ்த்
திறங்காட்டும் வேலுஞ் சிலையுங்கொல்
யானையுந் தேருங்கொண்டு
புறங்காட் டவும்தகு மோசிலைக்
காமன்தன் பூசலிலே.

(அ - ரை.) அறங்காட்டிய - அறத்தைச் செய்துகாட்டிய. அகன் சிலம்பு-பெரிய மலை. நிறங்காட்டும்-அழகைக் கொடுக்கும். கஞ்சத்திரு - திருமகள். வேல் - கண். சிலை - வில். கொல்யானை - தனம். தேர் - அல்குல். புறங்காட்டுதல் - தோற்றல். பூசல் - காமப்போர். (கூகூ)

139. ஆலவட் டப்பிறை ஐவேல் அசதி அணிவரைமேல்
நீலவட் டக்கண்கள் நேரொக்கும் போதந்த நேரிழையாள்
மாலைவிட் டுச்சுற்றி வட்டமிட் டோடி வரவழைத்து
வேலைவிட் டுக்குத்தி வெட்டுவ ளாகில் விலக்கரிதே.

(அ - ரை.) ஆலவட்டப் பிறை-பிறைத் திங்களைப்போன்ற ஆலவட்டம். நீலவட்டக் கண்கள் - வட்டமாகிய கரிய கண்கள். நேர் ஒக்கும்போது - நேரே பார்த்தற்கியையும்போது. மாலை விட்டுச் சுற்றி - மயக்கத்தாற் கலங்கச் செய்து. (க00)

140. ஆரா யிரங்கொண்ட ஐவேல்
அசதி அகன்கிரியில்
நீராடப் போகும் நெறிதனி
லேயந்தி நேரத்திலே
சீரான குங்குமக் கொங்கையைக்
காட்டிச் சிரித்தொருபெண்
போராள் பிடிபிடி என்றே
நிலாவும் புறப்பட்டதே.

(அ - ரை.) ஆர் ஆயிரம்கொண்ட - பல சீர்த்திகளைக் கொண்ட. குங்குமக் கொங்கை - குங்குமச் சாந்தணியப் பெற்ற கொங்கை. போராள் - போகிருள். (௧0௧)

141. ஆய்ப்பாடி ஆயர்தம் ஐவேல்
அசதி அணிவரையில்
கோப்பாம் இவள்எழிற் கொங்கைக்குத்
தோற்றிபக் கோடிரண்டும்
சீப்பாய்ச் சினுக்கரி யாய்ச்சிமி
ழாய்ச்சின்ன மோதிரமாய்க்
காப்பாய்ச் சதுரங்க மாய்ப்பல்லக்
காகிக் கடைப்பட்டவே.

(அ - ரை.) கோப்பு - பெருமைக் குணம். இபக்கோடு இரண்டும் - யானைத் தந்தங்கள் இரண்டும். சினுக்கரி - சிக் கெடுக்குங் கருவி; இதனை ஈருளி எனவுங் கூறுப. சதுரங்கம் - சதுரங்க விளையாட்டுக்காய். (௧0௨)

௩௬. கச்சியப்ப சிவாசாரியார்

[இவர் காஞ்சி குமரகோட்டத்துப் பூசகராக இருந்தவர். முருகப்பெருமான் திருவருளால் கந்தபுராணத்தை இயற்றியவர். இவருடைய காலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்ப.]

தம்முடைய மாணவராகிய குகனேரியப்ப நாவலர் பாடிய உபதேச காண்டத்தை வியந்து கூறியது.

142. அன்ருழி நின்றுதித்த ஆரமுதை ஒப்பிடுவர்
பொன்ருமைக் கேதுவாம் புந்திநினைந்—தொன்ற
உகுநேரில் தாருவெனல் ஒக்குமால் வேறென்
குகனேரி நாவலவ னுற்கு.

(அ - ரை.) ஆழி - கடல். பொன்ருமை - இறவாமை. உகும் - பொருளைப் பொழிகின்ற. நேர்இல் - எதிரில்லாத. தாரு - கற்பகமரம். (கOங)

உ0. குகனேரியப்ப நாவலர்

[இவர் கந்த புராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியாருடைய மாணவர். தம் ஆசிரியர் கட்டளைப்படி கந்தபுராணத்தின் இறுதிப் பகுதியாகிய உபதேச காண்டத்தைப் பாடியவர்.]

முருகன் விழாவில் பெய்த மழை நிற்குமாறு பாடியது.

143. கார்க்கு மழைக்குங் கவலேங் கடுஞ்சிறையால்
சூர்க்குடைந்த நின்னைச் சுகத்திருத்தி—ஊர்க்குள்விடுங்
கந்தன் விழாவைக் கருதாது பெய்வித்தல்
அந்தமோ ஆகண்ட லா.

(அ - ரை.) கார்க்கும் - மழை முகிலுக்கும். கவலேம் - வருந்தேம். சூர்க்குடைந்த - சூரபதுமனுக்குத் தோற்றழிந்த. அந்தமோ - அழகோ. ஆகண்டலா - இந்திரா. (கOச)

[திருத்தணிகைக்குச் சென்றபோது சில அன்பர்களுடைய வேண்டுகோளின்படி மூன்று பிறை வரப் பாடியது.]

144. அம்பிறைக்கும் ஐந்துமலர் அம்பிறைக்கு நொந்துமிக
அம்பிறைக்குங் கண்ணுட்(கு) அருள்புரிவாய்—நம்புதணி
கைக்கிரிக்குள் உற்றசித்ர கச்சுடைத்த ளக்குறத்தி
யைக்களித்த ணைத்தஅத்த னே.

(அ - ரை.) அம்பிறைக்கும் - அழகிய பிறைத் திங்களுக்கும். ஐந்து மலர் அம்பு இறைக்கும் - ஐந்து மலர்க் கணைகளை ஏவும் காமனுக்கும். அம்பு இறைக்கும் கண்ணுட்கு - நீரைப் பொழி கின்ற கண்ணை உடையவளுக்கு. (கOரு)

உக. தத்துவப் பிரகாசர்

[இவர் கி. பி. கடுoக-ஆம் ஆண்டு முதல் உக ஆண்டுவரை விசய நகரத்தை ஆட்சிபுரிந்த கிருட்டிண தேவராயர் காலத்தில் திருவாரூரில் சிறந்து விளங்கியதாகத் தெரிகிறது. கல்விச் சிறப்போடு செயற்கருஞ் செயல்கள் புரிவதினும் இவர் அந்நாளிற் சிறந்து திகழ்ந்தார்.]

[இழிந்தோர் இயல்பைக் குறித்துப் பாடியன.]

145. குரங்குமாய் நண்டுகட்டித் தேளுங்கொட்டிக்
குடியாத மதுக்குடித்துப் பேயும்ஏறி
இரங்கவருங் காஞ்சொறியின் பொடியுந்தூவி
இஞ்சிதின்று கொள்ளிபிடித் தெழுந்தாற்போலத்
தருங்கருணை இல்லாத புல்லர்வாழ்வில்
தண்டிகையின் மீதேறிச் சம்பத்தேறிக்
கருங்கைமதக் களிறேறிக் கழுவிலேறிக்
காடேறி நாடேறித் திரிவார் கண்டீர்.

(அ - ரை) *காஞ்சொறியின் பொடி* - பட்டவிடத்தில் மிகுந்த அரிப்பை உண்டாக்கும் ஒருவகை மூலிகையின் தூள். *தண்டிகை* - பல்லக்கு. *சம்பத்து* - செல்வம். (க)

146. பாம்புகடித் தாலதுவு மீட்க வல்லோம்
பசாசறைந்தால் நீறிட்டுப் பார்க்க வல்லோம்
வேம்புகசப் பறக்கறியும் ஆக்க வல்லோம்
விறல்வேழத் ததிகமதந் தணிக்க வல்லோம்
சாம்பொழுது திடமாகப் பேச வல்லோம்
தரணியின்மேற் கல்லாத தொன்று மில்லை
தீம்பரைநல் லவராக்கிக் குணமுண் டாக்கும்
திறமறியா தேநின்று திகைக்கின் றோமே.

(அ - ரை.) *விறல்வேழம்* - வலிமையுடைய யானை. *தீம்பர்* - தீமை செய்குவோர். (உ)

[ஒருவருக்கொருவர் உள்ள அறிவின் பெருமை.]

147. ஆயிரம் புலவோரில் ஒருவன்ப்ர பந்தகவி
அவராயி ரர்க்குள் ஒருவன்
அந்தாதி தூதுலா பரணிகோ வைக்கமகன்
அவராயி ரர்க்குள் ஒருவன்,
போயிடம் பொருள்நா டகபுரா ணிகனவன்
போலாயி ரர்க்குள் ஒருவன்,
பொருட்பெருங் காப்பியம் புகல்வாக்கி மற்றவன்
போலாயி ரர்க்குள் ஒருவன்,
பாயிரந் தருபஞ்ச லட்சண விதானியிப்
படியாயி ரர்க்குள் ஒருவன்
பரசமய தர்க்கநூல் பகர்வாதி மற்றுமப்
படியாயி ரர்க்குள் ஒருவன்,
தேயமெண் டிசைபரவு தேசிகோத் தமன்மனத்
திறத்தாயி ரர்க்குள் ஒருவன்
சிவனைத்து தித்துண்டு டுத்துக்கொ டுத்திடும்
தெய்வச்சி வக்கியா னியே.

(அ - ரை.) *பிரபந்தகவி-நூல்கள் பாடும் புலவன். கமகன்-பாராமற் கூறுவோன். பஞ்சலட்சணவிதானி - ஐந்திலக்கணங்களையும் பாராமல் சொல்வோன்.* (௩)

[தமது தன்மையைக் கூறியது.]

148. நினைவுகவி சொல்வோ மெனச்சொலிப் பலகவிதை
நினைவினைத் திருடி வையோம்
நீடுலகின் மனிதரைப் பாடிலோம் நாமென்று
நீள்வசைகள் பாட அறியோம்,
பினையினைய நாவலரு டன்பங்கு பேசிப்ர
பந்தங்கள் பாடிக்கொ டோம்
பேசுவது தேவார மேயலால் வாய்க்கெளிய
பேய்க்கிரந் தங்கள் பேசோம்,

இனிமைதரு குலத்துக்கு ருக்களை மறந்தெட்
டிடங்களில் தீட்சை போகோம்
இட்டசிறு பேர்மாற்றி மாதமொரு பேரிட்ட
மைக்கநாம் இறுமாந்தி ரோம்,
தனியிருந் தெம்மைப்பு றங்கூறு வார்பாடு
தணிந்திடக் கவிபாடு வோம்
சமணூல்க ளைப்பொருள்ள னக்கொளோந் திருஞான
சம்பந்த ரடியர் நாமே.

(அ - ரை.) பாடுதணிந்திட - பெருமை குறைய. சமண் நூல் - சமணசமய நூல். குலக்குருக்கள் - ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு குலத்தாருக்கென்று தொன்றுதொட்டு இருந்து வரும் குருக்கள். (௬)

[திருவாரூர்க்கொடி இறங்காமல் பாடியது.]

149. மருவுபுகழ்க் ருட்ண மகராசர் ஆணை
அரிய வடமலையார் ஆணை—திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதத் திருவாணை
தியாகக் கொடிஇறங்கா தே.

(அ - ரை.) பாகற்கொடி யறுத்தல் - திருவாரூரில் நடக்கும் ஒரு திருவிழா. (௭)

[கிருட்டிணராயரைப் பாடியது.]

150. ஊழித் துலுக்கல்ல ஒட்டியான் தானுமல்ல
விழித் துலுக்குவந்து மேலிட்டே—ஆழி
சிறந்ததேர் ஆரூர்த் தியாக ருடைப்பூசை
இறந்ததே கிருட்டிண ராயா.

(அ - ரை.) ஆழித்தேர் - திருவாரூர்த் தேர்க்குப் பெயர். கிருட்டிணதேவராயர் பட்டம் பெறுமுன் ஒட்டியருந் துலுக்கருஞ் சேர்ந்து தென்னாட்டைக் கொள்ளையிட்டனர். திருவீழிமிழலையிலிருந்து வந்த அருச்சகரது தீச்செய்கையை நோக்கி அவரை, 'வீழித்துலுக்கு' என்றார். (௮)

[மேற்படி பாட்டைக் கேட்டுக் கிருட்டிணராயர் பட்டரை மாற்றியபோது பாடியது.]

151. உண்ட வயிற்றில் உமிக்காந்தல் இட்டதே
தொண்டரே விழித் துலுக்கரே—பண்டெல்லாம்
அப்பம்அவல்எள் அதிரசமுந் தோசைகளும்
கப்புவது போச்சே கவிழ்ந்து.

(அ - ரை.) கப்புவது - திணிப்பது. (எ)

[சாளுவ நாயக்கர் படுத்துக்கொள்ளக் கொடுத்த இடத்தைப் பற்றிப் பாடியது.]

152. மூட்டை கலம்புழுதி முக்காலுஞ் சுத்தப்பாழ்
விட்டை விடுதியாய் விட்டாயே—போட்ட
தடுக்கெல்லாம் பிறல் தலையணையோ வைக்கோல்
படுக்கலா மோசொல்லப் பா.

(அ - ரை.) மூட்டைகலம் - கலக்கணக்கான மூட்டைப் பூச்சி. (அ)

[ஒருவர் உமக்கு இலக்கணந் தெரியுமோ என்று கேட்டபொழுது பாடியது.]

153. கவடிகளா கத்திரியும் கள்ளர்காள்! நன்னூல்
சுவடியிருந் தாவதென்ன சொல்வீர்—குவலயத்துக்
காட்டுக் கெறித்தநிலாக் கண்ணிரண்டும் இல்லாதான்
வீட்டுக்கு எரித்த விளக்கு.

(அ - ரை.) கவடிகள் - வஞ்சனையுடையவர்கள். குவலயம் - உலகம். (கூ)

[சீநக்க அரசர் தந்த ஆடையைப் பார்த்துப் பாடியது.]

154. வெற்றிப்பாடுங் குணப்பாடும் வீரப்பாடும் ஒருகவியில்
தெற்றிப்பாடும் அதுகேட்டுச் சீநக்கரசர் துகிலீந்தார்
பற்றிப்பார்க்க அதனூடே பலதேவிசர் வீற்றிருந்தார்
சுற்றிப்பார்க்கப் பயப்பட்டுத் தூரவைத்துத் தொழுதோமே.

(அ - ரை.) தெற்றிப்பாட - சேர்த்துப்பாட. பலதேவீசர் - பல தேவர்களுக்குந் தலைவனாகிய இந்திரன். இந்திரன் ஆயிரங் கண்கள் உடையவன். ஒட்டை யிருந்ததென்பது குறிப்பு. ஆடை வாங்கிப் பலநாள் பாராமல் வைத்திருந்தமையின் செல் லரித்து ஒட்டையாக இருந்தது. (௧0)

௨௨. செயங்கொண்டார்

[கலிங்கத்துப்பரணி பாடியவர்.]

[செயங்கொண்டாரை அபயன், 'உமதூர் யாது?' என்று கேட்டபொழுது பாடியது.]

155. செய்யும் வினையும் இருளுண் பதுவும்
தேனும் நறவும் ஊனுங் களவும்
பொய்யும் கொலையும் மறமும் தவிரப்
பொய்தீர் அறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் இதழும் விழியும்
காலும் நிறமும் போலுங் கமலம்
கொய்யும் மடவார் கனிவாய் அதரம்
கோபம் கமழும் தீபங் குடியே.

(அ - ரை.) பெண்களுடைய கை, முகம், இதழ், விழி, கால் முதலியவைகளுக்குத் தாமரை மலர்உவமை. (௧௧)

['புகார் தங்கட்கு ஊர்' என்று பாடுமாறு செக்கார்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்கப் பாடியது.]

156. ஆடுவதுஞ் செக்கே அளப்பதுவும் எண்ணெயே
கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே—நீடுபுகழ்க்
கச்சிச்செப் பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தாம்
உச்சிக்குப் பின்புகார் ஊர்.

(அ - ரை.) செக்கார் - வாணியர். (௧௨)

உங. சடகோபர்

[சங்கப் புலவர்களிடம் கூறிப் பொருள் கேட்டது.]

அகவற்பா

157. அண்ட கோளத் தார்அணு வாகிப்
பிண்டம் பூத்த பேரெழில் ஒருமை
ஈருயிர் மருங்கில் ஆருயிர் தொகுத்து
நித்தி லத்தன்ன வெண்மணல் பரப்பி
வேரும் வித்தும் இன்றித் தானே
தன்வலி அறியாத் தொன்மிகு பெருமரம்
வேறி முப்பழ முறைமுறை தருதலின்
ஒன்றுண் டொண்சுவை தருவது மற்றது
கல்லில் எழுந்து கடலில் அழுந்தி
அறுகாற் குரவன் நீரற விளக்கும்
நிறைபொழிற் குப்பை தறுகட் பொன்றுவித்(து)
அறுகோட் டாமா விளக்கு நாடன்
அவனே தலையிலி அவன்மகண் முலையிலி
தானும் ஈனுள் ஈனவும் படாஅள்
எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள்
அவள் இவள் உவளென்(று) அறிதல்
துகளறு காட்சிப் புலவரது கடனே.

(அ - ரை.) மறைமுடிவின் உயர்பொருளை இப்பாடல் விளக்குகின்றது. நித்திலம் - முத்து. துகளறு காட்சிப்புலவர் - குற்றமற்ற அறிவினையுடைய புலவர்கள்.

உச. இராமாநுசர்

[ஆழ்வார் திருநகரியை அடைந்தபோது பாடியது]

158. இதுவோ நகரி இதுவோ பொருநல்
இதுவோ பரமபதத் தெல்லை—இதுவோதான்
வேதம் தமிழ்செய்து மெய்ப்பொருட்கும் உட்பொருளாய்
ஓதுஞ் சடகோபன் ஊர்.

(அ - ரை.) பொருநல் - தாம்பிரபரணி. சடகோபன் - நம்மாழ்வார். (க)

உரு. மணவாள மாமுனிவர்

[சீபெரும்பூதூரை அடைந்தபோது பாடியது]

159. இதுவோ பெரும்பூதூர் இங்கே பிறந்தோ
எதிராசர் எம்மிடரைத் தீர்த்தார்—இதுவோதான்
தேங்கும் பொருநல் திருநகரிக் கொப்பான
ஓங்கும் புகழ்படைத்த ஊர்.

(அ - ரை.) இடர் - துன்பம். (க)

160. எந்தை எதிராசர் எம்மை எடுத்தளிக்க
வந்தபெரும் பூதூர்க்கு வந்தோமோ—சிந்தை
மருளோ தெருளோ மகிழ்மாலை மார்பன்
அருளோஇப் பேற்றுக்(கு) அடி.

(அ - ரை.) மருள் - மயக்கம். தெருள் - அறிவு. பேறு - பெற்ற பெருமை.

உசு. மணக்கால்நம்பி

[பாம்புக் குடத்தில் கையிட்டவன்]

கலித்துறை

161. ஆரங் கெடப்பரன் அன்பர்கொள்
ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாம்பிற்கை
இட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி
காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடி
வேந்தர் சிகாமணியே.

(அ - ரை.) ஆரங்கெட - முத்துத்தொங்கல் களவுபோய் விட. குடப்பாம்பு - பாம்புகள் நிறைந்த குடம். கொல்லி காவலன் - கொல்லிமலைத் தலைவன். (க)

உஎ. திருக்கச்சிநம்பி

[அப்பொழுது பதித்த செங்கழுநீர் மலரும்படி பாடியது]

கலிவிருத்தம்

162. வாக்கி னுல்நன் மனத்தால் எனையுனக்(கு)
ஆக்கி னுய்நீ அருளாள அண்ணலே!
தேக்கும் ஓடையில் செங்கழு நீர்இன்று
பூக்கு மாறுஅருள் பூமகள் நாதனே.

(அ - ரை.) தேக்கும் ஓடை - நீர் தேங்கிய ஓடை.

உஅ. பொய்கையாழ்வார்

[அரனையும் அரியையும் ஒன்றுபடுத்திப் பாடியன]

163. அரனு ரணநாம மாவிடைபுள் ளூர்தி
உரைநூன் மறைஉறையுங் கோயில்—வரைநீர்
கருமம் அழிப்பளிப்புக் கைமழுவே நேமி
உருவம்எரி கார்மேனி ஒன்று.

(அ - ரை.) விடைபுள் ஊர்தி - காளையுங் கருடனும் ஊர்தி. உரை நூன்மறை - திருவாக்கு ஆகமமும் மறையுமாகும். உறையுங்கோயில் வரைநீர் - தங்குமிடம் கைலையும் பாற்கடலுமாகும். கருமம் அழிப்பு அளிப்பு - தொழில் அழித்தலுங் காத்தலுமாகும். கைமழுவே நேமி - கையிலுள்ள ஆயுதங்கள் மழுவும் உருளையுமாகும். உருவம்எரி கார்மேனி ஒன்று - வடிவம் நெருப்பு நிறமும் கறுப்பு நிறமும் கூடிய ஒன்று. (க)

164. பொன்திகழு மேனிப் புரிசடைஎம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேனும் ஒருவன்
ஒருவரங்கத் தென்றும் உளன்.

(அ - ரை.) நின்று உலகம்தாய நெடுமாலும் - உலகத்தைப் பெருவடிவாய் நின்று கடந்த நெடிய மேனியுடைய திருமாலும் என்றும் இருவர் அங்கத்தால் பிரிவரேனும், இருவரும் உடம்பினுலே வேறுபட்டிருந்தாலும், ஒருவன் ஒருவர் அங்கத்து என்றுமுளன் - ஒருவர் மற்ருெருவருடைய திருமேனியில் எப்பொழுதுமிருக்கிருர். (உ)

உகூ. பூதத்தாழ்வார்

165. அவன்கண்டாய் நன்னெஞ்சே ஆரருளுங் கேடும்
அவன்கண்டாய் ஐம்புலனய் நின்றன்—அவன்கண்டாய்
காற்றுநீர் வானங் கருவரைமண் காரோதம்
சிற்றத்தீ யாவானுஞ் சென்று.

(அ - ரை.) *காற்றுநீர் வானம் கருவரைமண் காரோதம் சீற்றத்தி - காற்றும் நீரும் வானமும் கரிய மலைநில முதலியனவும் கருங்கடலும் சினந்தெரிகின்ற தீயும்.* (க)

ஙo. பேயாழ்வார்

166. தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவுஞ் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணுந் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயுந் திருமலைமேல் எந்தைக்(கு)
இரண்டுருவும் ஒன்ருய் இசைந்து.

(அ - ரை.) *சூழ்அரவும் பொன்னுணும் - இடுப்பைச்சுற்றியுள்ள பாம்பும் பொன்னுலாகிய அரைஞாணும்.* (க)

ஙக - ஙஉ. புகழேந்திப் புலவரும் ஒட்டக்கூத்தரும்

[புகழேந்திப் புலவர் தொண்டைமண்டலத்திற் பொன்விளைந்த களத்தூரில் வேளாண்குடியிற் பிறந்தவர். மதுரையிற் பாண்டியன் அவைக்களப் புலவராக அமர்ந்திருந்தவர். பாண்டியன் மகளோடு சோழநாட்டை யடைந்த இவருக்கும் ஒட்டக்கூத்தருக்கும் பகைமை மூண்டு நெடுநாள் நீடித்திருந்து பின்னர் ஒழிந்தது. இவர் செய்த நளவெண்பா என்னும் அரிய நூல் இப்புலவர் பெருமானுடைய சீர்த்தியை உலகில் என்றென்றும் நிலைநிறுத்திப் புகழுடலைத் தந்து விளங்குகின்றது. அல்லியரசாணிமாலை முதலிய நங்கையர் நூல்களும் இவர் இயற்றினவென்பர்.]

[ஒட்டக்கூத்தர், இவருடைய குலம் செங்குந்தர் குலம் என்ப. உறையூரிலிருந்து அரசுபுரிந்த இராசேந்திர சோழனுடைய அவைப்புலவராக இருந்த இவர் அவ்விராசேந்திர

சோழனுடைய மகன் குலோத்துங்க சோழனுக்குத் தமிழாசிரியருமாவர். இவர் கலைமகள் திருவருளைப் பெற்றவரென்பது சிலர் துணிபு. இராமாயண உத்தரகாண்டம், குலோத்துங்கன் கோவை, ஈட்டி யெழுபது, தக்கயாகப் பரணி முதலியன இவருடைய நூல்களாகும். இந்நூல்களைப் பாடியதற்கான காரணமும் விரிவாகக் கூறப்படுகிறது. பூவுலகில் புகழுடலை நிலை நிறுத்திச் சென்றவர்களில் இவரும் ஒருவர். இவருடைய வரலாற்றைப் படிப்பவர் இவர் மிகுந்த கொடுமைக் குணமுடையவர் என்று எண்ணுப.]

[தலைகளாலாகிய அரியணையிலிருந்து ஒட்டக்கூத்தர் பாடியது]

167. கலைவாணி நீயுலகில் இருப்பதுவுங்
கல்வியுணர் கவிவல் லோரைத்
தலையாகக் காப்பதுவும் அவர்நாவில்
வாழ்வதுஞ்சத் தியமே யன்றே
சிலைவாணன் நாவிருந்தா யிரம்புயங்கள்
துணிந்துமுயர் சீவனுற்றுள்
தலையாவி கொடுத்திடுஞ்செங் குந்தருயிர்
பெற்றிடநீ தயைசெய்வாயே.

(அ - ரை.) கலைவாணி - கலைமகள். தலையாகக் காப்பதுவும் - முதன்மையாகக் காப்பாற்றுவதும். சிலைவாணன் - வாணசுரன். புயங்கள் - தோள்கள். உயர்தலையாவி கொடுத்திடும் செங்குந்தர் - தலையையே பாட்டுக்குப் பரிசாகக் கொடுத்ததால் உயிரையும் அளித்த செங்குந்தர். ஈட்டியெழுபது என்னும் நூல் பாடுவதற்காக ஒட்டக்கூத்தர்க்குத் தமது தலைகளைப் பரிசாக அளிக்க அத்தலைகளாலாகிய அரியணையிலிருந்து. அவர் இப்பாட்டைப் பாடினரென்ப. (௧).

[ஒட்டக்கூத்தர் கைக்கோளரைப் புகழ்ந்து பாடியது]

168. நிலைதந்தா ருலகினுக்கு மியாவருக்கு
மானமதை நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய்
திடவென்றே கையில் தந்தார்

விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த
ரென்கவிக்கே விலையா கத்தந்
தலைதந்தார் எனக்கும்ஒட்டக் கூத்தனெனப்
பெயரினையுந் தாந்தந் தாரே.

(அ - ரை.) செங்குந்தர் - கைக்கோளர்கள். மானமது விலைக்கத் தந்தார் - (ஆடை) அளிப்பதால் மானத்தைக் காத்தார்கள். கலைதந்தார் வணிகருக்கு-வியாபாரிகட்கு விற்கும்பொருட்டு ஆடை கொடுத்தார்கள். (உ)

[சோழமன்னன் ஒரு புலவருக்கு விருது கொடுத்தபோது ஒட்டக்கூத்தர் பாடியது.]

169. பத்துக் கொண்டன திக்கும் பதறிப்போ யுலையப்
பைம்பொன் தாரகை சிந்தப் பகிரண் டத்திடைநீள்
மத்துக் கொண்டும திக்குந் திரையா ழிநெடுமால்
வடிவா கிப்புவிகைக் கொண் டருண்மா னுபரனு!
முத்துப் பந்தரில் நிற்குங் குருளைக்குஞ் சினவேல்
முருகற் கும்பொதியைக் கோமுனிவற் குஞ்ச டிலக்
கொத்தற்கும் பதுமக்கொந் தயனுக்கு மலதிக்
கூழைத் தண்டமி ழுக்கேன் கொடியுங் காளமுமே.

(அ - ரை.) பதறிப்போய் உலைய - அஞ்சி நடுங்கவும். தாரகை சிந்த-விண்மீன் விழும்படியாகவும் பகிரண்டத்து இடை நீள்மத்துக் கொண்டு - வெளியே புலனாக இருக்கின்ற பெரிய அண்டத்தின் உச்சிவரை நீண்ட (மந்திரமலை யென்னும்) மத்தை நாட்டி. மதிக்கும் - கடையப்படுகின்ற. மானுபரனு - மானத்தை அணியாகக் கொண்ட மன்னனே! முத்துப் பந்தரில் நிற்கும் குருளைக்கும் - முத்துப்பந்தரின் கீழே யுலாவும் குழந்தையாகிய திருஞானசம்பந்தப் பெருமானுக்கும். பொதியைக்கோ முனிவற்கும் - பொதியமலையில் தங்கும் முனிவர் தலைவராகிய அகத்தியர்க்கும். சடிலக்கொத்தர்க்கும் - சடைத்தொகுதியை யுடைய சிவபெருமானுக்கும். பதுமகொந்து அயனுக்கும் - தாமரைப் பூங்கொத்திலிருக்கும் நான்முகனுக்கும். கூழை - குறையுடைய. (ந)

[ஒட்டக்கூத்தர் கம்பரைப் பற்றிப் பாடிய இரங்கற்பா.]

170. இன்றல்லோ கம்பன் இறந்தநாள் என்கவிதை
இன்றல்லோ ராசசபைக் கேற்குநாள்—இன்றல்லோ
பூமடந்தை வாழப் புவிமடந்தை விற்றிருக்க
நாமடந்தை நூல்வாங்கு நாள்.

(அ - ரை.) நாமடந்தை - கலைமகள். நூல் வாங்கும்நாள் - மங்கலநாண் இழக்கும் நாள். இன்று அல்லோ-இந்த நாளல்லவா. (ரு)

[கம்பரை ஒட்டக்கூத்தர் புகழ்ந்தது.]

171. இன்றல்லோ கம்பன் எழுந்தநாள் என்கவிதை
இன்றல்லோ ராசசபைக் கேறுநாள்—இன்றல்லோ
பூமடந்தை வாழப் புவிமடந்தை விற்றிருக்க
நாமடந்தை நூல்பூட்டும் நாள்.

(அ - ரை.) நூல் பூட்டும் நாள் - மங்கலநாண் அணியும் நாள். (கு)

[கம்பைக் காவலன் என்னும் செல்வன்மீது பாடியது.]

கட்டளைக் கலித்துறை

172. மாங்குயி லால்வில்லி தன்னம்பி னுற்கம்ப வாரிதியார்
ஓங்கிய பூமெல் லணையொன்றி னுலும்பர் ஊர்மதியால்
தீங்குறு மேநல் எழில்குன்று மேகொம்பு சீர்கெடுமே
காங்கைய னேசொல் அகளங்க னேகம்பைக் காவலனே.

(அ - ரை.) கம்பைக் காவலன் - கம்பைநாட்டு மன்னன். காங்கையன்-கங்கை மைந்தனுகிய வேளாளன். கம்பவாரிதியால்- அலைகடலொலியால். உம்பர் - வானில். கொம்பு - பெண். (சு)

[சோழன் கண்டதைக் கண்டசுத்தியாகப் பாடியது.]

173. கரண்டகண் டத்தொனிக்கு அஞ்சிய
மான்கருங் கங்குலிலே
திரண்டவெள் ளத்திற் பிணமீது
சென்றனன் சேர்ந்தவனே

அரண்டஇன் பங்கொடு மீளக்க
ராம்பற்ற அங்கொலுசால்
குரண்டகன் னத்தில் உதைத்தனள்
காரைங் குலோத்துங்கனே.

(அ - ரை.) கரண்ட கண்டத்தொனிக்கு அஞ்சிய மான் - நீர்க்காக்கையின் குரலினால் அச்சமுற்ற மாதானவள். கருங் கங்குலிலே - இருள்நிறைந்த இரவிலே. அரண்ட இன்பம் - அச்சத்தோடு கூடிய இன்பம். கரா பற்ற - முதலை காலைக் கவ்வ. அம்கொலுசால் - அழகிய காற்சதங்கையினால். குரண்ட - சுருங்கிய. (எ)

[ஒட்டக்கூத்தன் சோழனுக்குப் பெண் கேட்டபோது பாண்டியன் சோழனுக்கு என்ன பெருமை என்றபோது பாடியது.]

174. கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானை
கூறுவதுங் காவிரிக்கு வையையோ அம்மானை
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானை
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானை
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானை
வெற்றிப்பு லிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை
ஊருக்கு றந்தைநிகர் கொற்கையோ அம்மானை
ஒக்குமோ சோனாட்டைப் பாண்டிநாடு அம்மானை.

(அ - ரை.) கோரம் - சோழன் குதிரை. கனவட்டம் - பாண்டியன் குதிரை. ஆர் - ஆத்திமாலை. ஆதித்தனுக்கு நிகர் அம்புலியோ - சோழகுலத் தலைவனாகிய கதிரவனுக்குப் பாண்டிய குலத் தலைவனாகிய சந்திரன் சமமாவனோ? உறந்தை - உறையூர். (அ)

[அதற்கு மாறாகப் புகழேந்தி பாடியது.]

175. திருநெடுமால் அவதாரஞ் சிறுபுலியோ அம்மானை
சிவன்முடியில் ஏறுவதுஞ் செங்கதிரோ அம்மானை
ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்தது அம்மானை
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானை

கரையெதிரே டேறியது காவிரியோ அம்மானை
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானை
பரவைபடிந் ததுஞ்சோழன் பதந்தனிலோ அம்மானை
பாண்டியனூர் பராக்கிரமம் பகரேளிதோ அம்மானை.

(அ - ரை.) ஒரு முனிவன் உரை தெளிந்தது நேரியிலோ - ஒப்பற்ற அகத்திய முனிவர் தமிழ்மொழியிற் றெளிவுபெற்றது (பொதியை மலையிலா) அல்லது சோழனுடைய நேரிமலையிலா. கடிப்பகைக்குத் தாதகி அம்கண்ணியோ - பேய் முதலியவற்றின் எதிர்ப்பை நீக்கிக் காவல்செய்வதற்குப் பயன்படுவது (வேம்போ) அல்லது ஆத்திமாலையோ. பரவை - கடல். (கூ)

[குலோத்துங்க சோழன் முடிசூடும்போது ஒட்டக்கூத்தர் அரசனைப் புகழ்ந்து இரண்டடி பாடச் சோழன் இரண்டடி பாடியது.]

176. ஆடுங் கடைமணி நாஅசையாமல்
அகிலமெங்கும்
நீடுங் குடையைத் தரித்தபிரான்இந்த
நீணிலத்தில்
பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன்
பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென்றேயென்னைச்
சொல்லுவரே.

(அ - ரை.) கடைமணி - தலைவாசலிலுள்ள மணி. பதாம் புயத்தை - திருவடிக்கமலங்களை (கo)

[ஒட்டக்கூத்தர் சோழனேறிய யானைச்சங்கிலி அவிழ்க்கப் பட்டதைக் குறித்துப் பாடியது.]

177. இன்னங் கலிங்கத்(து) இகல்வேந்தர் உண்டென்றோ
தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா உன்றன் அயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு.

(அ - ரை.) சென்னி அகளங்கா - சோழமன்னனாகிய அகளங்கனே. நிகளம் - தளை. கால்விட்ட நினைவு - அதன் காலினின் றெடுக்கப்பட்டதற்குக் கருத்து. (கக)

[புகழேந்தி பாண்டியனேறிய யானைச்சங்கிலி யவிழ்க்கின் வரும் பயன் பாடியது.]

178. தென்னவன் தென்னர் பெருமான் திறல்மதுரை
மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னிநா(டு)
ஆலிக்கும் வேந்தாம் அபய குலன்மகளிர்
தாலிக்கும் ஒன்றே தளை.

(அ - ரை.) தென்னவன் - பாண்டியன். கோகளிற்றின் வல்லிக்கும் - பட்டத்து யானையின் விலங்கிற்கும். பொன்னிநாடு ஆலிக்கும்-காவிரிபாயும் நாட்டில் மகிழ்ந்து வீற்றிருக்கும். (கஉ)

[அரசன் யாரென வினவ ஒட்டக்கூத்தர் புகழேந்தியைப் பித்தனென்றதற்குப் புகழேந்தி பாடியது.]

179. சத்தம் பயிலும் புலவோர்
கதலித்தண் தோட்டம்புகும்
பித்தன் இவனென்பர் என்னைக்கண்
டாற்பெருத் துப்பணைத்த
தத்தம் பிறகிடும் பார்வேந்தர்
தங்கள் தடமகுட
சத்தம் அபசத்தங் காண்கங்குல்
யானைச் சயதுங்கனே.

(அ - ரை.) கங்குல் யானை - இரவினிருள்போலக் கருநிற முடைய யானை. பெருத்துப் பணைத்து - மிகப்பெரியவர்களா யிருந்தும். தடமகுட சத்தம் - பெரிய முடிகள் ஒன்றோடொன்று தாக்கி உண்டாகும் ஒலி. அபசத்தங்காண்-இழிவான ஒலியாகும். சத்தம் பயிலும் புலவோர் - நல்லவொலியி னிலக்கணத்தை யாய்ந்தறிந்த கல்விமான்கள். (கங)

[அரசன் நல்ல புலவன் என, ஒட்டக்கூத்தன் அல்ல வென்று பாடியது.]

180. மானிற்கு மோஇந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோஇவ் வெரியுந் தழல்முன் கனைகடலின்
மீனிற்கு மோஇந்த வெங்கட் சுருமுனம் வீசுபனி
தானிற்கு மோஇக் கதிரவன் தோற்றத்தில் தார்மன்னனே.

(அ - ரை.) வாள்அரி வேங்கை - ஒளியுள்ள வரிகள் விளங்கும் பெரும்புலி. எரியும் தழல்முன் வற்றிச் செத்த கான் நிற்குமோ - கொழுந்துவிட் டெரிகின்ற தீயின் முன்னே ஈர மற்றுக் காய்ந்துபோன காடு நிலைபெறுமா? வெங்கண் சுரு முனம் கனைகடலின் மீன் நிற்குமோ? - கொடிய சுறுமீனின் முன்னே ஒலி மிகுகின்ற கடலிலுள்ள மீன்கள் தலைகாட்ட முடியுமா? (௧௪)

[அரசன் சொற்படி புகழேந்தி ஒட்டியும் வெட்டியும் பாடியது.]

181\. மான்அவன் நான்அந்த வாளரி
வேங்கைமுன் வற்றிச்செத்த
கான்அவன் நான்அவ் வெரியுந்
தழல்முன் கனைகடலின்
மீன்அவன் நான்அந்த வெங்கட்
சுருமுனம் விசுபனி
தான்அவன் நான்அக் கதிரவன்
றேற்றநற் ருர்மன்னனே.

இச் செய்யுளில் ஒட்டக்கூத்தர் கூறியவற்றைப் புகழேந்தி அப்படியே திருப்பிப் பாடியுள்ளார். (௧௫)

[அரசன் மனைவி கதவை மூடிக்கொள்ளக் கதவு திறக்கும் படி ஒட்டக்கூத்தர் பாடியது.]

182\. நானே இனிஉன்னை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய இரவிகு லாதிபன் வாயில்வந்தால்
தானே திறக்குநின் கையித ழாகிய தாமரையே.

(அ-ரை.) நளினமலர்த் தேனே-தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் போன்ற இனிய சொல்லுடைய பெண்ணே, கபாடம் திறந்திடுவாய் - கதவைத் திறப்பாயாக! வான்ஏறு அனைய இரவிகுலாதிபன் - முகிலிலுள்ள பகைவர்கட்கு இடிபோன்ற ஞாயிறு வழித்தோன்றிய மன்னன். (௧௬)

[அரசன் மனைவி ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று போடப் புகழேந்தி கதவு திறக்கும்படி பாடியது.]

183. இழையொன் றிரண்டு வகிர்செய்த
நுண்ணிடை யேந்துவள்ளைக்
குழையொன் றிரண்டு விழியணங்
கேகொண்ட கோபந்தணி
மழையொன் றிரண்டுகை மானு
பரணனின் வாசல்வந்தால்
பிழையொன் றிரண்டு பொறுரோ
குடியிற் பிறந்தவரே.

(அ - ரை.) *இழை ஒன்று இரண்டு வகிர்செய்த நுண்ணிடை* - நூலிழை ஒன்றை இரண்டு கூறுசெய்தால் அதன் ஒரு கூறுபோல மிகச்சிறு அளவினையுடைய இடையை உடையவளே. *ஏந்து வள்ளைக் குழையொன்று இரண்டு விழியணங்கே* - காது தாங்குகின்ற கொடி நுழைந்தாற்போன்ற தோட்டினைச் சென்று பொருந்துகின்ற இரண்டு கண்களையுடைய மாதே. *மழை ஒன்று இரண்டுகை மானஆபரணன்* - முகிலின் இயல்பு பொருந்திய இரு கைகளினாலும் கொடுக்கின்ற மானத்தை அணியாகப் பூண்ட மன்னன். (கஎ)

[ஒட்டக்கூத்தரை முப்பிறை வர ஔவையார் பாடச் சொல்லிய போது அவர் பாடியது.]

184. வெள்ளத் தடங்காச் சினவாளை
வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத்
துளியோ டிறங்குஞ் சோணுடா
கள்ளக் குறும்பர் குலம்அறுத்த
கண்டா அண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டப்பேதை
பெரிய மதியும் இழந்தாளே.

(அ - ரை.) *வெள்ளத்து* - ஆற்றுநீரில். *வேலிக் கமுகின் மீது ஏறி* - வேலி கட்டப்பட்ட கரையிலுள்ள பாக்குமரத்தில் தாவி. *மழைத்துளியோடு இறங்கும்* - மழைநீருடன் கீழே வருகின்ற. *கள்ளக்குறும்பர் குலம் அறுத்த* - வஞ்சகம் பயின்ற சிற்றரசர்களது கூட்டத்தைத் தொலைத்த. *கண்டா*-கைவாளினை

உடையவனே. அண்டர் கோபாலா-இடையர்களின் பசுக்களைக் காப்பாற்றின திருமால் வடிவானவனே. பிள்ளை மதி கண்டு - பிறைச்சந்திரனைப் பார்த்து. (கஅ)

[ஔவையார் ஒட்டக்கூத்தரைப் பார்த்து, 'ஒட்டா ஒருமதி கெட்டாய்' என்று சொல்லிப் புகழேந்தியை மூன்று பிறை வரப் பாடச்சொல்லிய போது அவர் பாடியது.]

185. பங்கப் பழனத் துழும்உழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கைக் கமரா பதியளித்த
கோவே ராச குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே.

(அ-ரை.) பங்கப்பழனத்து உழும் உழவர்-சேறு நிறைந்த வயலில் உழவு செய்கின்றவர்கள். சங்கிட்டு எறிய - அவ் வயலிலுள்ள சங்குகளை எடுத்து அதன்மீது வீசவும். கொங்கு ஐக்கு அமராபதி அளித்த கோவே - கொங்குதேசத்து அரசனை வென்று அவனுக்கு விண்ணுலகம் கொடுத்த மன்னனே. வெம்கண் பிறைக்கும் - வெப்பமுள்ள பிறைத்திங்களின் நில வொளிக்கும். கரும்பு இறைக்கும் - கரும்பு வில்லினையுடைய மன்மதன் காரணமாகவும். விழிவேல் - வேல் போன்ற. அம்பு - கண்ணீர். (கக)

[ஒட்டக்கூத்தர்.]

186. புள்ளிருக்குந் தார்மார்பன் பூம்புகார் வாழ்களியேம்
சுள்ளிருக்குங் கள்ளையுண்டு சோர்விலேம்—உள்ளபடி
சொல்லவா வாலி துரோபதையை மூக்கரிந்த
தல்லவா மாபா ரதம்.

(அ - ரை.) புள்ளிருக்குந் தார்மார்பன் - வண்டுகள் தங்கும் மாலையை அணிந்த மார்பினையுடைய சோழன். பூம்புகார் - சிறந்த காவிரிப்பூம்பட்டினம். வாழ்களியேம் - குடியிருக்கின்ற மகிழ்ச்சியையுடைவர்கள் நாங்கள். சுள்ளிருக்குங் கள்ளை உண்டு-

மயக்கந் தருகின்ற கள்ளைக் குடித்து. வாலி துரோபதையை மூக்கு அரிந்தது அல்லவா - வாலுடைய பாம்பெழுதிய கொடியினையுடைய துரியோதனன் துரோபதையை அவமானஞ் செய்யக் கருதிய வரலாறல்லவா? (உ௦)

[தலைவி திங்களை நோக்கி இரங்கிக் கூறியது.]

187. என்று பெறுவேன்யான் ஈசன் திருமுடிமேல்
சென்றுவிளை யாடுகின்ற தீபமே—என்றும்
செருப்புக்குத் தோல்வாங்கும் சென்னி அகளங்கன்
பொருப்புக்குத் தோலாப் புயம்.

(அ - ரை.) தீபமே - விளக்குப்போன்ற பிறைத்திங்களே. செருபுக்கு - போர்க்களத்திற் போய். தோல் வாங்கும் - எதிரிகளின் யானைகளைத் தன்வழிப்படுத்திக் கொள்ளுகின்ற. சென்னி அகளங்கன்-சோழனாகிய அகளங்கனது. பொருப்புக்கு-மலைக்கு. மிதியடியாகிய செருப்புச் செய்வதற்குத் தோலை வாங்கும் என்னும் நயத்தினையுங்காண்க.

(உக)

[கொலுவிலிருக்கும்போது ஒட்டக்கூத்தன் கேட்டதற்கு வேளாளன் முதலிய புலவர்கள் பாடியது,]

188. கோக்கண்டு மன்னர் குரைகடல்
புக்கிலர் கோகநகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா
தொழிந்தில பூதலம்ஏழ்
காக்கின்ற மன்ன கவியொட்டக்
கூத்தநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ்
பாடிய பாவலரே.

(அ - ரை.) கோ கண்டு-பெரிய சக்கிரவர்த்தியைப்பார்த்து. கோகநகப்பூக் கண்டு கொட்டியும் பூவாதொழிந்தில - தாமரைப் பூவினைக் கண்டு கிழங்குப்பூண்டு பூக்கள் பூவாதிருக்கவில்லை. நின் கட்டுரையாம் பாக்கண்டு - உனது வன்மையான சொல்லமைந்த பாட்டுக்களைப் பார்த்து. (உஉ)

[கருமான் பாடியது.]

189. செல்வன் புதல்வன் திருவேங்
கடவன் செகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொல்லு
வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட
மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன்
கவியிருப் பாணிகொண்டே.

(அ-ரை.) செல்வன் புதல்வன் திருவேங்கடவன்-செல்லப்பனுடைய மகனாகிய திருவேங்கட ஆசாரியாகிய நான். சகத்குருவாகிய கொல்லன் - கொல்தொழிலில் உலகத்திற்கு ஆச்சாரியனாயிருக்கிற என்னுடைய. குறடுகொண்டு-இடுக்கியினாலே. (உங)

[பாதிப்பாட்டு ஒட்டக்கூத்தனும் பாதிப்பாட்டு அம்பட்டனும் பாடியது.]

190. விண்பட்ட கொக்கென வெல்லும்வல்
லூறின் விலவிலத்துப்
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின்
ருய்பொட்டை யாய்புகல்வாய்
கண்பொட்டை யாயினும் அம்பட்டன்
நான்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந்
திடுக்கிடப் பாடுவனே.

(அ-ரை.) பொட்டையாய்-குருடா. விண்பட்ட வெல்லும் வல்லூறின் கொக்கு என - தன்னை வெல்லக்கூடிய ராசாளிப் பறவையை வானத்திற் பொருந்திய கொக்கானது பார்த்து அஞ்சுவதுபோல. விலவிலத்து - நடுநடுங்கி. (உச)

[குயவன் பாடியது.]

191. மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
ஆனை முன்வந் தெதிர்த்தவன் ஆரடா

கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானை யும்வனை அங்குசப் பையல்யான்.

(அ - ரை.) மோனை முத்தமிழ் - சீரின் முதலெழுத்து ஒற்றுமையாகி மோனை முதலிய பாட்டுறுப்புக்க ளமைந்த இயல், இசை, நாடகம் எனும் மூன்றிற்கு முரிய கவிகளாகிய. மும்மதமும் பொழி - மூன்று வகை மதங்களையும் பொழிகின்ற. கூனையும் - வனைந்த பாண்டமும். அம்குசப் பையல்யான் - அழகிய குயவகுலத்து ஆண்மகன் நான். (அல்லது) அங்குசம் பையல்யான் - யானையை அடக்குகின்ற தோட்டிபோன்ற ஆண் மகன் (நான்). (உகு)

[தச்சன் பாடியது.]

192. சொன்னசந் தக்கவி யாவருஞ்
சொல்லுவர் சொற்சுவைசேர்
இன்னசந் தக்கவி யேதென்ற
போதில் எதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக்
கிழித்திந்த வாய்ச்சியினுல்
கன்னசந் தங்களி னிற்கவி
யாப்பைக் கடாவுவனே.

(அ - ரை.) சொற்சுவைசேர் இன்ன சந்தக்கவி ஏதென்ற போதில் - சொன்னயம் பொருள்நயம் அமைந்த என்னுடைய இந்த அழகான பாட்டினை இது என்ன பாட்டென்று இகழ்ந்த காலத்தில். வன்னசந்தம் கெட - அவர்களுடைய நிறமும் வனப்பும் குலையும்படியாக. வாய்ச்சி - மரம் வெட்டி. கன்ன சந்தங்களினில் - அவர்களுடைய செவித் துளைகளிலே. கவி ஆப்பைக் கடாவுவனே - என் பாட்டாகிய ஆப்பினை அடித்துச் செலுத்துவேன். (உசு)

[தட்டான் பாடியது.]

193. திகிரிவட் டக்குடைச் செங்கோல்
அபயன் செழுஞ்சிலம்பில்
பகுதியோட் டக்கூத்த பட்டனை
நானப் பணைக்கவியில்

மிகுதவொட் டத்தட்டி விட்டகை
யோட்டில் உருக்கிக்குத்திப்
புகுதவொட் டித்தட்டி மேல்அனு
காவண்ணம் போர்செய்வலே.

(அ - ரை.) பணைக்கவியில் - நான் அந்தப் பாட்டாகிய கொம்பினால். மிகுத வொட்டத்தட்டி - மிகுதியும் பொருந்தும் படியாக அடித்து. விட்ட கையோட்டில் உருக்கி - இற்றுவிழுந்த சிறு ஓட்டுத்துண்டில் வைத் துருகச்செய்து. குத்தி - அடக்கி. புகுத ஒட்டித்தட்டி - நகையாவதற்குத் தக்கபடி இசைத்துச் சேர்த்து. (உஎ)

[ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் பாடியது.]

194. வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக்(கு) இடான்கவசம்—துன்றும்
வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கின் என்று.

(அ - ரை.) துன்றும் வெறியார் தொடைகமழும் மீனவர் கோன் - மிகுந்த தேன் நிறைந்த மலர்மாலையின் வாசனை வீசப் பெற்ற பாண்டியன். வளவன் - சோழன். (உஅ)

[விற்கொடியும் மீனக்கொடியும் சோழனுக்குத் தோற்றாலும் பெண்ணின் புருவமும் கண்ணுமாக உருவெடுத்துச் சோழனை வெல்கின்றன என்று பாடியது.]

195. பழியும் புகழும் எவர்க்கும்உண்
டாம்இந்தப் பாரிலுனக்(கு)
அழியுஞ் சிலையுங் கயலுமென்
ருல்அக ளங்கதுங்கா
மொழியும் பொழுதெங்கள் பெண்சக்ர
வர்த்தி முகத்திரண்டு
விழியும் புருவமும் ஆகிஅந்
தோஉனை வெல்கின்றவே.

(அ - ரை.) அகளங்க துங்கா - அகளங்கனாகிய சிறந்த மன்னனே. எங்கள் பெண்சக்ரவர்த்தி முகத்து இரண்டு விழியும்

புருவமுமாகி - எங்கள் பேரரசியின் திருமுகத்திலுள்ள இரு கண்களும் புருவங்களுமாக உருவெடுத்து. (உக)

[புகழேந்தி பாடியது.]

[தொண்டைமண்டலத்தார் தலைவிக்கு வருத்தம் வரும்படி பொய் சொல்லாரென்று பாடியது.]

196. நையும் படியே நாங்கொற்ற
நங்கோன் செஞ்சி வரைமீதே
ஐயம் பெறுநுண் இடைமடவாய்
அகிலின் தூப முகிலன்று
பெய்யுந் துளியோ மழையன்று
பிரசத் துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டாரே.

(அ - ரை.) நாம் கொற்றம் நையும்படியே - நாம் தோல்விப் படும்படியாக. ஐயம்பெறும் நுண் இடை மடவாய் - உண்டோ இல்லையோவென்று ஐயுறும்படியாக அவ்வளவு சிறிய இடையினை யுடைய மாதே. அகிலின் தூபம் - அகிற்கட்டை யெரிவதனு லுண்டாகிய புகை. பிரசத்துளியே - தேன் திவலையே. வையம் பெறினும் - உலகமெல்லாம் பெற்றாலும். (ங௦)

[செங்கலங்கை வடுகநாத முதலியார் மேற் பாடியது.]

197. தன்னுடன் கூடப் பிறந்தச
கோதரத் தம்பிஉயிர்
அந்நிலை மாண்டது தோன்ருமல்
முடிவைத் தன்னமிட்டான்
மன்னவர் போற்றிட வாழ்செங்
கலங்கை வடுகனுக்குக்
கன்னனுஞ் சோமனு மோஇணை
யாகக் கழறுவதே.

(அ - ரை.) அந் நிலை உயிர்மாண்டது தோன்ருமல் - விருந் துண்ணப்போன அந்தவிடத்தில் இறந்துபோனது தெரியாதபடி. (ஙக)

[இவர் மகனுடைய வீட்டில் நன்மையற்றது நடந்த காலத்தில் புகழேந்திப் புலவர் தமது மணத்துக்கு வரச் சொன்னது.]

198. முந்தஇளை யோன்மாள முத்தமிழோர்க்(கு) அன்னமிட்ட
அந்த வடுகன் மகனுயின்—வந்தென்
தலைக்கலியா ணத்துக்கே தான்பிணத்தை மூடி
இலக்கணமாச் செய்குவைநீ யே.

(அ - ரை.) முந்த இளையோன் மாள முத்தமிழோர்க்கு அன்னமிட்ட - விருந்தினர்க்கு உணவளிக்கு முன் தம்பி சாகவும், அதனை மறைத்து மூன்று தமிழிலும் தேர்ச்சியுடையவர்கட்குச் சோறளித்த. என் தலைக்கலியாணத்துக்கேதான் வந்து - என்னுடைய முதல் திருமணத்திற்கு வந்து சேர்ந்து. இலக்கணமாச் செய்குவை - முறையாக எல்லாம் நடாத்துவாயாக. (௧௨)

[வெண்ணாறு வெள்ளம் பெருகியபோது அடங்கும்படி பாடியது.]

199. பள்ளமாஞ் செய்யிற் பயிரையெலாங் கொள்ளைகொள்ளும்
வெள்ளமே உன்றனைநாம் வென்றேமே—புள்ளலம்பு
பொற்காவி வாவிவல்லைப் பூபதிகா ளத்தியெனும்
நற்கா ரெனுங்கரையை நட்டு.

(அ - ரை.) பள்ளமாம் செய்யில் - ஆழமாகிய வயலில். புள் அலம்பு - பறவைகள் சூழ்ந்து ஒலிக்கின்ற. பொற்காவி வாவிவல்லை-அழகிய நீலோற்பலங்கள் பொருந்திய பொய்கையையுடைய வல்லை நகரிலே வாழ்கின்ற. (௧௧)

[கூவம் தியாகசமுத்திர மென்னும் ஊரிலுள்ளவர்கள் புலவர்கட்குத் தொண்டுசெய்து பாடல் பெற்றமையைப் புகழேந்தி பாடியது.]

200. ஓங்கிய செந்தமிழ்த் தாதற்
கடிமையவ் வூரதனுல்
நாங்கவி சொல்வது மில்லையென்
றேகம்ப நாடன்சொல்ல

ஆங்கவன் ஏறுஞ் சிவிகை
சுமந்தும் அடப்பையிட்டும்
தாங்கவி கொண்டது கூவந்
தியாக சமுத்திரமே.

(அ - ரை.) தாதனுக்கு - வாணியன் தாதன் என்பவனுக்கு. சிவிகை-பல்லக்கு. அடைப்பை இட்டும்-தம்பலப் பாத்திரத்தை ஏந்தியும். கூவன் தியாக சமுத்திரமே - கூவமெனப்படும் கொடைக்கடலே. (௩௪)

[கூவமென்னும் ஊரிலுள்ளவர்களின் தியாகத்தைப்பற்றிப் பாடியது.]

201. மட்டாருஞ் செங்கழு நீர்மணி
மார்பரை வாழ்த்தும்அந்தக்
கிட்டாத யாசகர் கிட்டிவந்
தால்அதைக் கேட்டுமுன்னுள்
பட்டோலை வாசித் தவரவர்க்
குள்ள பரிசிலெல்லாம்
தட்டா தளிப்பதுங் கூவந்
தியாக சமுத்திரமே

[திருக்குறுங்குடி யென்னும் பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய பெருமாளின்மேல் வலிய ஓசை தரும்படி கட்டளைக் கலித்துறை யியற்றுமாறு சோழமன்னன் புகழேந்திப் புலவர்க்கும் ஒட்டக்கூத்தருக்குங் கட்டளையிட்டபோது ஒட்டக்கூத்தர் பாடியது.]

202. திக்குளெட் டுக்கயந் துக்கமுற்
றுத்திடுக் கிட்டலற
மைக்கடற் குட்சரந் தைக்கவிட்
டோர்க்கிட மாமதுர
இக்குமுற் றிக்கனுச் சற்றுவிட்
டுத்தெறித் திட்டமுத்தைக்
கொக்குமொக் கிக்கக்கு விக்குமச்
சோலைக் குறுங்குடியே.

(அ - ரை.) திக்குள் எட்டுக் கயம் - எட்டுத் திசைகளினு முள்ள யானைகள். மைக்கடற்குள் - கருநிறமுடைய கடலுள். தைக்க - அழுந்தும்படி. சரம் - அம்பு. இடம் - பதி. கரும்புகள் கணுச் சற்றுவிட்டு - அதன் வரைகள் சிறிது விரிய. தெறித்திட்ட முத்தை - உள்ளிருந்து வெளியே பாய்ந்த முத்துக்களை. மொக்கி - எடுத்துக்கொண்டு. கக்குவிக்கும் - வெளியே உமிழ்ந்து விக்கலுறுகின்ற. அச் சோலை - அழகிய பொழில்கள் நிறைந்த. குறுங்குடியே - திருக்குறுங்குடியே ஆகும். (ருடு)

[ஒட்டக்கூத்தர் பாடியதைக் கேட்ட புகழேந்திப் புலவர் பாடியது.]

203. எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத் தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.

(அ - ரை.) அவ் வட்ட நெட்டைப்பணி மெத்தை-அழகிய வட்டமாகச் சுற்றும் நெடிய ஆதிசேடனாகிய பாயினையுடைய. அத்தற்கு இடம் - அப்பனுக்குரிய தலமாவது. வாரிச பொகுட்டில் - தாமரைப்பூவிலுள்ள கொட்டையில். நத்துக்குலம் தத்தி முத்து ஈனும் - சங்கினங்கள் பாய்ந்து தங்கி முத்துக்களைப் பெற்றளிக்கின்ற. (ருசு)

[நெய்த்தானப்பெருமானை ஒட்டக்கூத்தர் பாடியது.]

204. விக்கா உக்கா வித்தா விப்போய்
விட்டால் நட்டார் சுட்டூர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
இல்தே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சூ
ழப்பா டத்தீ வெப்பா டப்பூண்
நெக்கா டக்கா னத்தா டப்பேர்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

(அ - ரை.) விக்கா - விக்கி. உக்கு - தளர்ந்து. ஆவி தாவி போய்விட்டால் - உயிர் உடலைக் கடந்து போய்விட்டால். நட்டார் - உறவினர். சுட்டு ஊர்புக்கார் - பிணத்தைத் தகனஞ்

செய்துவிட்டு ஊர்க்குள் புகுந்துவிடுவர். இக் காயத்து ஆசைப் பாடு உற்றே - இந்த இயல்புடைய உடம்பில் பற்று வைத்து. இல் தேடிப்போய் வைப்பீர்-செல்வத்தைச் சம்பாதித்து வீட்டிற் கொண்டு வைக்கின்றவர்களே! அக்காட - தாம் அணிந்திருக்கும் எலும்புமாலை அசையவும். பேய் தொக்காட - பேய்கள் ஒருங்கு கூடிக் கூத்தாடவும். சூழ்அப்பு ஆட - சடையிற் சூழ்ந்திருக்கும் கங்கையானது அசையவும். தீவெப்பு ஆட - திருக்கையில் வைத் திருக்கும் வெப்பமான நெருப்பு அசையவும். பூண் நெக்குஆட - காதிலணிந்திருக்கும் அணிகள் நெகிழ்ந்து அசையவும். அக் கானத்து ஆடு - அந்தச் சுடுகாட்டினிடத்தில் நடனஞ்செய் கின்ற. அப்பேர் நெய்த்தானத் தானை சேவித்தே - அந்தப் பெருமை பொருந்திய நெய்த்தானமென்னுந் திருப்பதியில் வீற் றிருக்கும் சிவபெருமானை வழிபட்டு. நிற்பீர்-நிலையான கதியைப் பெற்றுய்வீராக. (௩எ)

[நெய்த்தானப்பெருமானைப் புகழேந்திப் புலவர் பாடியது.]

205. தற்கோ லிப்பூ சற்பா சந்தே
தப்பா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே
முட்டா மற்சே வித்தே நிற்பீர்
வற்ரு நெட்டோ டைப்பா ரைச்சேல்
மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்ரு ளுற்ரு லைப்பா கிற்சேர்
நெய்த்தா னத்தா னைத்தியா னித்தே.

(அ - ரை.) தன் கோலி - தன்னைச் சுற்றியிருப்பதாகிய, பூசல் பாசத்தையே தப்பாமல் - சண்டையிடும் பாசங்களி னிடையே அகப்பட்டு அவற்றினின்று விலகிப்போகாமல், சாகைக்கே நிற்பீர் - மரணமடைதற்கே தகுதியா யிருப்பீர்கள், (நீங்கள்) முற்கோலி - முன்னதாகவே, வற்ரு நெட்டோடை - வற்றிப்போகாத நீண்ட நீர்க் கால்வாய்களிலுள்ள, பாரைச்சேல்- பெரிய சேல்மீன்கள், மைப்பூகத்து ஏறித் தாவிப்போய் - கரிய முகிலைத் தொடக்கூடிய உயர்ந்த பாக்குமரத்தில் பாய்ந்து சென்று, நெல்தாள் உற்று - நெற்கதிரினடியிற் சேர்ந்து, ஆலைப் பாகில் சேர் - ஆலையிலிருந்தெடுத்துக் கொதிக்கவைக்கப்படும் கருப்பஞ்சாற்றிற் கலக்கின்ற, நெய்த்தானத்தானைத் தியானித்து- நெய்த்தானப் பெருமானை மனதில் நினைத்து, கோலிப் பூசித்தே-

பூசைக்கு வேண்டுவன தயார்செய்து பூசனை புரிந்து, முட்டாமல் சேவித்தே நிற்பீர் - தவருமல் வழிபட்டு நிலையான கதியைப் பெறுவீர்களாக. (ந௲அ)

[வைகை கடலிற் சென்று கலத்தலில்லாத ஆறு என்று ஒட்டக்கூத்தர் இகழ்ந்தபோது புகழேந்திப் புலவர் பாடியது.]

206. நாரியிடப் பாகருக்கு நஞ்சளித்த பாவியென்று
வாரியிடம் புகுதா வைகையே—வாரி
இடத்தும் புறத்தும் இருகரையும் பாய்ந்து
நடத்துந் தமிழ்ப் பாண்டி நாடு.

(அ - ரை.) நாரியிடப் பாகர்-சிவபெருமான். வாரி-கடல். (ந௲க)

[ஔவையார் இரண்டு கால்களையும் நீட்டிக்கொண்டிருந்த காலையில் புகழேந்திப் புலவருக்குக் கால்களை மடக்கியும் தமக்கு மடக்காமலும் இழிவுபடுத்தியதாக ஒட்டக்கூத்தர் சோழனிடம் கூறியது.]

கட்டளைக் கலித்துறை

207. இருகாலை நீட்டினள் என்றனக்
கேகம்பன் என்பவர்க்கங்(கு)
ஒருகால் மடக்கிமற் றோர்காலை
நீட்டினள் ஒவியமாய்
அருகாக வந்த புகழேந்தியைக்கண்
டகமகிழ்ந்தே
இருகால் மடக்கினள் கானுன்றன்
ஊரில் இலைமகளே.

(அ - ரை.) ஒவியமாய் - அழகாய். இலைமகள் - ஔவையார். (௨0)

[பாண்டியன்மீது படையெடுத்துப் போருக்குச் சென்ற சோழன் புறங்காட்டி யோடினன். கூத்தர் ஓடமுடியாமல் அகப் பட்டுக்கொண்டார். பாண்டியன் கூத்தரை வெட்ட வாளை ஓங்கினன். அப்போது ஒட்டக்கூத்தர் பாதி பாடினர் பாண்டியன் பாதி பாடினன்.]

வெண்பா

208. மேவலரை வெட்டி விருதுபெறும் வேல்வேந்தே
நாவலரை வெட்டுவது நன்ருமோ—பாவலவ
ஆடவர்கோன் சண்டைதனக் கஞ்சியா வையும்போட்(டு)
ஓடலாம் பாடொனு தோ.

(அ - ரை.) மேவலர் - பகைவர். விருது - வெற்றி. நாவலர் - புலவர். ஆடவர் கோன் - ஆடவர்களுக்குத் தலைவன். பிற்பகுதி பாண்டியன் பாடியது. (சக)

[பிறகு சோழனை இகழ்ந்து பாடியது.]

209. ஆறெல்லாங் கண்ணீர் அடியெல்லாஞ் செங்குருதி
தூறெல்லாஞ் சோழன் சொரிகுடுமி—மீறிவரு
கன்னிக்கோன் பின்தொடரக் காரிக்கோன் செய்கையினுல்
பொன்னிக்கோன் சென்ருன் புகார்.

(அ - ரை.) ஆறு - வழி. தூறு - புதர். கன்னிக்கோன் - கன்னிவள நாட்டையுடைய பாண்டியன். காரிக்கோன்; பொன்னிக்கோன் - சோழன். (சஉ)

[சோழன் வரிசை யளித்தபோது ஒட்டக்கூத்தர் பாடியது.]

210. இடுக்கட்புண்படு நிரப்புக் கொண்டுழன்
றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களம்
திடுக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன்
திருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தந்தனன்
படுக்கக் கம்பளம் பதக்கக் குங்குமம்
பதிக்கக் கங்கணம் பரிக்கக் குஞ்சரம்
கடுக்கக் குண்டலம் கலிக்கச் சங்கினம்
கவிக்குப் பஞ்சரங் கவிக்கத் தொங்கலே.

(அ - ரை.) இடுக்கண் - துன்டம். நிரப்பு - வறுமை. செம்பியன் - சோழன். திருக்கைப்பங்கயம் - கைத்தாமரை. பரிக்கக் குஞ்சரம் - தாங்குவதற்கு யானை. கலிக்கச் சங்கினம் - ஊதுவதற்குச் சங்கு வகைகள். (சங)

[அரசன் கைகொடுத்தபோது கூத்தர் பாடியது.]

211. கொலையைத் தடவிய வைவேலரக்கர் குலமடியச்
சிலையைத் தடவிய கையேஇதுசக தண்டத்துள்ள
மலையைத் தடவிய விந்தத் தடவி மலைந்தவொன்னர்
தலையைத் தடவி நடக்குங்கொல் யானைச் சயதுங்கனே.

(அ - ரை.) கொலையைத் தடவிய - கொலையைப் புரிந்த. அரக்கர் - இராவணன் முதலியோர். சிலை - வில். மலைந்த - பொருத. ஒன்னர் - பகைவர். அ விந்தத்து அடவி - அந்த விந்த மலைக்காடு. (உசு)

[புலவர்கள் வெகுளப் பாடியது.]

212. பாட்டுத் தொடுக்கும் புலவோர்க்குக்
கூத்தன் பயப்படல்பே
தாட்டுக் கடற்புலி அஞ்சலன்றோ
அறுத்துக் கிடந்த
சூட்டுக் கதிர்கள் நிலத்தடங்காமல்
தொகுத்து மள்ளர்
மேட்டுக்கு வாலிடும் பொன்னிநன்
னுடை வேற்கண்டனே.

(அ - ரை.) பேது ஆட்டுக்கு - பேதைமையுள்ள ஆட்டுக்கு. அடல் புலி - வலிமையுள்ள புலி. குவால் - நெற்போர். (சுஎ)

[அரசன் மனைவி ஊடல் கொண்டு கதவடைத்தபோது பாடியது.]

213. கரத்துஞ் சிரத்தும் களிக்கும் களிறுடைக்
கண்டன் வந்தான்
இரத்துங் கபாடம் இனித்திறப் பாய்பண்
டிவன ணங்கே
உரத்துஞ் சிரத்துங் கபாடந் திறந்திட்ட
துண்டிலங்கா
புரத்துங் கபாட புரத்துங் கல்யாண
புரத்தினுமே.

(அ - ரை.) கரத்தும் சிரத்தும் களித்தல் - கைம்மதம் கன்னமதங்களாற் களிப்புறுதல். இரத்தும் - இரக்கின்றோம். இவன் முன்பு மூன்று நகர்களிலே கபாடங்களைத் திறந்தவன் என்பதை எண்ணிக் 'கபாடந் திறப்பாய்' என்றார். கல்யாண புரம் - சளுக்கரசர் தலைநகர். (சசு)

[அப்போது புகழேந்திப் புலவர் பாடியது.]

214. தூபங் கமழும்பைங் கோதையன்விக்ரம சோழன்மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின்றான்நின் திருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப்பத்தலை சாய்த்துநின்ற
கோபந் தணிஅன்னமே எளிதோநங் குடிப்பிறப்பே.

(அ - ரை.) மன்னர் தீபன் - மன்னர்கட்கு விளக்குப் போன்றவன். புறங்கடை - புறவாயில். புருவச்சாபம் - புருவ வில். (சஎ)

[இரவிற் குடைநிழலிற் பவனிவருதல் தவறு அன்று என்று அரசனிடம் பாடியது.]

215. அண்டமீ துலவி வாழும் அருந்ததிக் கற்பாள் உன்னைக்
கண்டதால் உவகை பொங்கிக் கற்பழிந் திடுவள் என்றே
எண்டிசை புரக்கும் வேந்தாய் இரவினிற் கவிகை நீழல்
கொண்டுமா நடாத்து மாறு குலோத்துங்கா நீதி தானே.

(அ - ரை.) அண்டம்மீது - விண் உலகில். அருந்ததிக் கற்பாள் - கற்பினையுடைய அருந்ததி. (சஅ)

[அரசன் துலாபுருடதானம் செய்தபோது பாடியது.]

216. பொருந்த ஒருதட்டு மேருப் புகினும்
இருந்த திருத்தட் டெழாதால்—திருந்து
மறைபுக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறைபுக்க தெவ்வாறு நீ.

(அ - ரை.) நீ மிகவும் கனமுடையவனாக இருக்கின்றாய். நீ ஒரு பக்கத்தில் இருக்கும்போது மற்றொரு பக்கத்தில் பொன் மலையாகிய மேருமலையையே எடுத்துவைப்பினும் அத் தட்டு மேலெழாதிருக்கின்றது. அவ்வாறாக நீ ஒரு புறாவின் நிறைக்குத் தக நிறை கோலில் சரியாக ஏறிநின்றது எவ்வாறு என்றபடி. (சகூ)

[கவியரசரின் சினக்குறிப்பைக் குறித்துரைத்தது.]

217. கவியரசர் தம்முனிவு கண்டாற் புகழ்கொள்
புவியரசர் தாமே பொறுப்பர்—புவியரசை
உன்னுல் முனியில் அவர்பொருர் ஒதுமவர்க்
கெந்நாடுஞ் செல்லாத தில்.

(அ - ரை.) கவியரசர்-புலவர். புவியரசர்-வேந்தர். முனிவு-சினம். (௬0)

[ஆரியசேகரன் இறந்தது கேட்டு விசனமுற்றுப் பாடியது.]

218. ஆகா விதியோ அடல்ஆ ரியர்கோமான்
ஏகா வலனற் றிழிந்தநாள்—ஓகோ
தருக்கண்ணி லுங்குளிர்ந்த தண்ணளிதந் தாண்ட
திருக்கண்ணி லுஞ்சுடுமே தீ.

(அ - ரை.) அடல்-வலிமை பொருந்திய. தருக்கண்ணிலும்-கற்பக தருவின் கண்ணைப் பார்க்கினும். தண்ணளி - குளிர்ந்த அருள். (௬௧)

[ஆரியசேகரன் பரிசாக ஆயிரம் பொன்ஞெடு கொடுத்த யானையை விரும்பிப் பாண்டியன் கேட்டபோது பாடியது.]

219. பாவலன் வாசலில் வந்தியம்
வாங்கப் படிபுரக்கும்
காவலன் நிற்கும் படிவைத்த
வன்கண்டி என்பதினும்
மேவலர் மார்பினும் திண்டோளி
னுஞ்செம்பொன் மேருவினும்
சேவகங் கோட்டிய மால்சிங்கை
ஆரிய சேகரனே.

(அ - ரை.) பாவலன் வாசல் - புகழேந்திப் புலவரின் இல்லத்து வாயில். இயம் - யானை. படிபுரக்கும் காவலன் - பாண்டியன். சேவகங் கோட்டிய - தன் வீரத்தன்மையை எழுதிய. மேவலர் - பகைவர். (௬௨)

[மடையனைத் தண்டஞ்செய்ததை விலக்கக் கூத்தர் பாடியது.]

220. மீனகம் பற்றிய வேலையு மண்ணையும் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலையோ பொருந் தாஅரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள் பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த வயதுங்கனே.

(அ - ரை.) மீனகம் பற்றிய வேலை - கடல். போனகம் - உணவு. மாலலையோ - திருமாலின் கூறல்லவோ? (உரு)

[விக்கிரமசோழன் மீது பாடியது.]

221. நடித்தது நச்சர உச்சியில் நச்சி மதில்இலங்கை
இடித்தது வென்ற இருபது தோள்பதின் எண்பகலே
முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்சென்டால்
அடித்தது பொற்கிரி விக்ரம சோழ அகளங்கனே.

(அ - ரை.) நச்சரவு - நஞ்சுபொருந்திய பாம்பு. நச்சி - விரும்பி. திருமால் செயலை அரசன்மேல் ஏற்றிக் கூறியது அரசர் திருமாலின் கூருவரென்னுங் கொள்கையைக்கொண்டு என்க. பொற்கிரி - இமயமலை. (உசு)

[கண்டன் துலாபுருட தானஞ் செய்தபோது பாடியது.]

222. தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற்
றுலாத்திடைவண்
டுழுகின்ற தார்க்கண்டன் ஏறிய ஞான்றின்
உவாமதிபோய்
விழுகின்ற தொக்கும் ஒருதட்டுக் காலையில்
வேலையில்வந்
தெழுகின்ற ஞாயிறொத் தான்குல தீபன்
எதிர்த்தட்டிலே.

(அ-ரை.) துலாபுருட தானமாவது நிறைகோலில் தன்னைப் பொன் வெள்ளி முதலியவைகளைக் கொண்டு நிறுத்துத் தானஞ் செய்வது. தொழுகின்ற மன்னர் - தன்னை வணங்குகின்ற அரசர்கள். உவாமதி - முழுத்திங்கள். குலதீபன் - குலம் விளங்குதற்கு விளக்கைப்போல வந்தவன். (உஎ)

[சோழன் பரிசளித்தபோது பாடியது.]

223. கையும் மலரடியும் கண்ணும் கனிவாயும்
செய்ய கரிய திருமாலே—வையம்
அளந்தாய் அகளங்கா ஆல்இலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாள்என் மான்.

(அ - ரை.) இச் செய்யுளும் மன்னர்கள் மாலின் கூறுவர் என்பதைக் கூறி நின்றது. (உசு)

[திரிபுவனம் என்னும் ஊரில் இருந்த சோமன் என்னுஞ் செல்வன்மீது பாடியன.]

224. அடையென்பார் தள்ளென்பார் அன்பொன்றில் லாமல்
புடைஎன்பார் தங்கடைக்கே போகேம்-கொடையென்றால்
முந்துஞ்சோ மாபுவன முன்னவனே நின்கடைக்கீழ்
வந்துஞ்சோ மாதலான் மற்று.

(அ - ரை.) புடை என்பார் - அடி என்று சொல்வார்கள். கடை - வாயில். உஞ்சோம், உய்ந்தோம் - பிழைத்தோம். (உஎ)

225. தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் தான்உரைப்ப
துன்னுடைய சீர்த்தி உயர்நலமே—துன்னுபுகழ்ச்
சோமா திரிபுவனத் தோன்றலே நின்புகழை
யாமார் உரைக்க இனி.

(அ - ரை.) வளவன் - சோழன். துன்னுபுகழ் - பொருந்திய புகழ். திரிபுவனத் தோன்றல் - திரிபுவனம் என்னும் ஊரில் தோன்றியவன். (உஅ)

[சோழன் குதிரையேற்றத்தை வியந்து பாடியது.]

226. கண்டன் பவனிக் கவனப் பரிநெருக்கால்
மண்டுளங்கா தேயிருந்த ஆறென்னே—கொண்டிருந்த
பாம்புரவி தாயல்ல பாருரவி தாயல்ல
வாம்புரவி தாய வகை.

(அ - ரை.) கண்டன் - சோழன். கவனப் பரி நெருக்கால் - குதிரை செல்லும் விரைவினால். (உகூ)

[இராமபிரான்மீது வணக்கமாகப் பாடியது.]

227. ஆரேனும் முன்னென்று சொல்லத் தொடங்கினும்
அவ்விடத்துன்
பேரே சொலவரும் பேறுபெற் ருய்பெரு
நான்மறையின்
வேரே மிதிலையின் மின்னுட னேவெய்ய
கான்நடந்த
காரே கடல்கொளுந் தச்சிலை வாங்கிய
காகுத்தனே.

(அ - ரை.) பேரே சொலவரும் பேறு பெறுதலாவது இராமசெயம் என்று சொல்லப்பெறுதல். நான்மறையின் வேர் - நான்கு மறைகட்கும் மூலமாக இருப்பவன். மிதிலையின்மின் - சீதை. காரே - முகில்வண்ணனே. காகுத்தன் - இராமன். (சுo)

௩௩ - ௩௬. கம்பரும் அம்பிகாபதியும்

[கம்பர்: இவருடைய பிறப்பு விளக்கமாகப் புலப்படவில்லை. பிறப்பைப்பற்றிப் பலர் பலவிதமாகக் கூறுப. திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர் என்பது மட்டும் ஐயமற அறியப்படுகிறது. இவர் செய்த இராமாயணம் இவருடைய புகழை என்றென்றும் நிலைநிறுத்துவதாயிற்று. சடகோபரந்தாதி, ஏரெழுபது முதலிய நூல்களும் இவருடைய பெயரால் வழங்குகின்றன. ஒட்டக்கூத்தர் ஔவையார் புகழேந்தி முதலியோர் கம்பர் காலத்திருந்தவர்களென்பர்.]

[அம்பிகாபதி: இவர் கம்பருடைய திருமகனுவர். சோழன் மகளைக் காதலித்து அதனுல் உயிரிழந்தவர். அம்பிகாபதிக் கோவை யென்னும் நூல் இவருடைய பெயரால் வழங்குகின்றது.]

[சோழநாட்டு எல்லையைக் குறித்துப் பாடியது.]

228. கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏனுட்டுப் பண்ணை இருபத்து நாற்காதம்
சோனுட்டுக் கெல்லை யெனச் சொல்.

(அ - ரை.) குடதிசையில் கோட்டைக்கரை-மேலைத்திக்கில் கோட்டைக்கரை யென்பது எல்லையாகும். ஏனாட்டுப் பண்ணை - ஏண் நாட்டினுடைய வயல் நிலங்களாகும். (க)

[பாண்டியநாட்டு எல்லையைக் குறித்துப் பாடியது.]

229. வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்
பாண்டி நாட் டெல்லைப் பதி.

(அ - ரை.) தெள்ளார் புனல்கன்னி தெற்காகும்-தெளிந்த நீரோடும் கன்னிநதி தெற்கெல்லையாகும். உள்ளார ஆண்ட - உள்ளே பொருந்தித் துறைமுகமாகப் பயன்பட்ட. (உ)

[சேரநாட்டு எல்லையைக் குறித்துப் பாடியது.]

230. வடக்குத்திசை பழனி வான்கீழ்தென் காசி
குடக்குத்திசை கோழிக் கோடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லை யெனச் செப்பு.

(அ - ரை.) வான்கிழ் தென்காசி - சிறந்த கீழ்த்திசையில் தென்காசி. கோழிக்கோடாம் - கோழிக்கோடு, கள்ளிக்கோடு. ()

[தொண்டைநாட்டு எல்லையைக் குறித்துப் பாடியது.]

231. மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்குப் பினுகிதிகழ் இருபதின் காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு.

(அ - ரை.) அணிகிழக்கு ஆர்க்கும் உவரி-அழகிய கிழக்குத் திசையில் ஒலிக்கின்ற கடல். (ச)

[பாம்புநஞ்சு இறங்கப் பாடியன.]

232. ஆழியான் பள்ளி அணையே அவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே அகல நட.

(அ - ரை.) மணித்தாம்பே - அழகிய கயிறே. பூழியான் பூணே - திருநீற்றுத்தூளைப் பூசிய சிவபிரான் அணியும் அணியே. பூட்டுகின்ற நாணே - கட்டப்பட்ட கயிறே. (கூ)

233. மங்கை யொருபங்கர் மணிமார்பி லாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களையும்
சீறியதன் மேலூருந் தெய்வத்திருக் கோளே
ஏறிய பண்பே இறங்கு.

(அ - ரை.) ஏறிய பண்பே இறங்கு - விடமேறிய முறையிலேயே அதனை இறக்குவாயாக. (சு)

234. பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கு மெல்லணையே—ஈரமதிச்
செஞ்சடையான் பூணுந் திருவா பரணமே
நஞ்சுடையாய் தூர நட.

(அ - ரை.) பங்கயக்கண் வீரன் - கமலம்போன்ற கண்ணையுடைய பெருமாள். (எ)

[சீராமனெனும் வண்ணான் தமக்குத் துணி வெளுத்துக் கொடுத்ததை வியந்து பாடியது.]

235. சிரம்பார்த்தான் ஈசனயன் தேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன்—உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு.

(அ - ரை.) உரம்சேர் மலை வெளுத்த - திண்மையுடைய கைலைமலையும் வெளுத்துப்போவதற்குக் காரணமான. திண் புயத்து வண்ணான் சீராமன் - உறுதியான தோள்களையுடைய சீராமனென்னும் பெயருடைய வண்ணான். கலை - ஆடை.

[சிதம்பரத்திலிருந்த தம்பிபுகான் என்னும் மயிர்வினைஞன் இவருக்கு மயிர் கழித்ததை வியந்து பாடியது.]

236. ஆரார் தலைவணங்கார் ஆரார்தாங் கையெடார்
ஆரார்தாஞ் சத்திரத்தில் ஆருதார்—சீராரும்
தென்புலியூர் மேவும் சிவனருள்சேர் அம்பட்டத்
தம்பிபுகான் வாசலிலே தான்.

(அ - ரை.) அம்பட்டத் தம்பி புகான் வாசலிலே - தம்பி புகான் என்னும் பெயருடைய நாவிதன் வாயிலிற் சென்று. சத்திரத்தில் ஆறுதார் - கத்திவேலையினால் சூடு தணிந்து சுகம் பெறுதவர்கள். (கூ)

[தாமும் தம் மனைவியும் படுக்கையறையில் இருக்கும்போது காற்றுக் கதவை மோதியது. யாரென்று பார்த்துக் காற்றெனத் தெளிந்தபோது பாடியது.]

237. கொற்கையான் மாறன் குலசேகரப் பெருமான்
பொற்கையான் ஆனகதை போதாதோ—நற்கமல
மன்றலே வாரி மணிவாசலை யசைக்கத்
தென்றலே ஏன்வந்தாய் செப்பு.

(அ - ரை.) தென்றலே - தென்றற்காற்றே! கொற்கையான் மாறன் குலசேகரப் பெருமான் - கொற்கையி லரசாண்ட பாண்டியனாகிய குலசேகர மன்னன். நல்கமலம் மன்றலே வாரி - நல்ல தாமரைப்பூவின் வாசனையைத் தாங்கிக்கொண்டு. (க0)

[அரசன் காட்டிற் கழுகோட்டுங் கை யென்று சொல்லியதைப் பாடிய கண்டசுத்தி.]

238. கண்டாயோ பார்வேந்தா கானகத்துக் கள்ளியின்கீழ்
வெண்டாழை பூத்து விளக்கெரியப்—பெண்தாலி
பூட்டுதற்கு முன்னமொரு புத்திரனைப் பெற்றெடுத்தாள்
காட்டிற் கழுகோட்டுங் கை.

(அ - ரை.) கானகத்துக் கள்ளியின் கீழ் - வனத்திலுள்ள கள்ளிச்செடியினடியில். வெண்தாழை பூத்து விளக்கு எரிய - வெள்ளை நிறமுடைய தாழம்பூ விளக்குப்போல் நிமிர்ந்து தோன்ற. (கக)

[கம்பர் மங்கையர்க்கரசியாரைப் புகழ்ந்து பாடியது.]

239. உமையாளு நீயு மொருங்கொப்பே யொப்பே
உமையாளுக் குண்டங்கோ ரூனம்—உமையாடன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனின்
ஆகந்தோய்ந் தாண்டா னரசு.

(அ - ரை.) உமையாள்தன் பாகந்தோய்ந்து ஆண்டான் - உமையாளைப் பாகத்திற்கொண்ட ஆண்டவன். பலிக்கு உழன் ருன் - ஐயமேற்று அலேந்தான். (கஉ)

[கம்பர் சடையப்ப முதலியாரைப் புகழ்ந்து பாடியது.]

240. மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
விட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும்
உடையான் சடையப்பன் ஊர்.

(அ - ரை.) மோட்டு எருமை - பருத்த எருமைகள். வாவி புக - பொய்கைகளிற் சென்றபோது. முட்டுவரால் - அவற்றை மடுவில் தாக்கிய வரால்மீன்கள். விட்டளவும் - வீடு வருகிற வரையில். (கஙு)

[ஆதொண்டைச் சக்ரவர்த்தி கம்பருக்கு வழிபாடு செய்த போது பாடியது.]

241. வெற்றிபுனே தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்கும்
சூற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே—கற்றோர்
திறந்தாங்குந் தாங்குஞ் செகமுழுதுந் தாங்கும்
அறந்தாங்குந் தொண்டை அரசு.

(அ - ரை.) தொண்டை அரசு - ஆதொண்டை வேந்தன். பெண்ணை - பனம்பூ. கற்றோர் திறம்தாங்கும்-படித்தவரினத்தைப் போற்றுவன். (கச)

[வல்லி யென்னும் தாசியை இகழ்ந்து பாடியது.]

242. கந்தமலர்ப் பிரமன் கன்னிமட வார்க்கெல்லாம்
அந்தஇளநீரைமுலை யாக்கினன்—சுந்தரஞ்சேர்
தோற்றமிகு வல்லிக்குத் தோப்பைமுலை யாக்கினன்
ஏற்றமிதில் யார்தாம் இயம்பு.

(அ - ரை.) கந்தம் - மணம். (கரு)

[கத்தரிக்காயும் முளைக்கீரையும் கொடுத்த தோட்டக்கார மாத்தத்தன்மேற் பாடியது.]

243. இருந்தவளைப் போனவளை என்னை அவளைப்
பொருந்த வளைபறித்துப் போனன்—பெருந்தவளை
பூத்தத்தத் தேன்சொரியும் பொன்னிவள நன்னுட
மாத்தத்தன் வீதியினில் வந்து.

(அ - ரை.) மாதத்தன் - மாதத்தனென்னும் ஆடவன். இருந்தவளை போனவளை என்னை அவளை - அங்கே இருந்தவள் போனவள் யான் என் பக்கத்திலுள்ளவள். பொருந்துஅ வளை - பொருந்திய அழகிய வளையல்கள். (௧௬)

[எழுத்தாணி செய்துகொடுத்த மாவண்டூர்க் கருமாரச் சிங்கன்மேற் பாடியது.]

244. ஆழியான் ஆழி அயன்எழுத் தாணி யென்பான்
கோழியான் குன்றெறிய வேலென்பான்—பூழியான்
அங்கைமழு வென்பான் அருள்பெரிய மாவண்டூர்ச்
சிங்கன் உலைக்களத்தில் சென்று.

(அ - ரை.) அருள் பெரிய-இரக்கத்தில் மிகுந்த. ஆழியான் ஆழி - பெருமாள் உருளையைச் செய்து கொடுக்கவேண்டு மென்பான். அயன் எழுத்தாணி என்பான் - நான்முகன் எழுத்தாணி அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்பான். கோழியான் - கோழிக்கொடியையுடைய குமரக்கடவுள். பூழியான் - திருநீற ணிந்த சிவபெருமான். (௧௭)

[அச்சுதன் கடைவாயிலில் முழங்கும் பேரிகையோசையைக் கேட்டுப் புகழ்ந்து பாடியது.]

245. குடகர் குணகடல் என்பர் குடகுக்கு
இடகர் வடகடல் என்பர்—வடகடலோர்
தென்கட லென்பர் திருந்துதார் அச்சுதநின்
முன்கடைநின் றார்க்கு முரசு.

(அ - ரை.) திருந்துதார் அச்சுத - செவ்வையான மாலை யைச் சூடிய அச்சுத வள்ளலே. நின்முன் கடைநின்று ஆர்க்கும்

முரசு - உன் முற்றத்தி லொலிக்கின்ற முரசினை. குடகர் குணகடல் என்பர் - மேலைத்திக்கில் வாழ்பவர் கீழ்க்கடலின் முழக்கமெனக் கூறுவர். குடகுக்கு இடகர் - குடகுக்குத் தென்திசையில் இருப்பவர்கள். வடகடல் என்பர் - வடக்குக் கடலின் ஒலியென்பர். வடகடலோர் தென்கடல் என்பர் - வடகடலிலுள்ளவர்கள் அதனைத் தென்சமுத்திரத்தின் ஒலியென்பர். (கஅ)

[அச்சுதனைப் புகழ்ந்து பாடியது.]

246. தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானும்—கனையு
முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை
அரசுணங்கும் அச்சுதன் முற்றம்.

(அ - ரை.) தினை உணங்கும் - தினையானது காயும். மூரித் தேர்த்தானை - பலமுள்ள தேரும் படையுமுடைய. அரசு உணங்கும்-மன்னர்கள் அடங்கி வாடி நிற்கும். கனையும் முரசு உணங்க சங்கு உணங்கும் - ஒலிக்கின்ற பேரிகையும் வெற்றிச் சங்கங்களும் காய்ந்து கிடக்கும். (கக)

[அச்சுதன் தலைவாயிலைப் புகழ்ந்து பாடியது.]

247. குறையுளார் எங்கிரார் கூர்வேலி ராம
இறையாறு திங்கள் இருந்தான்—முறைமையால்
ஆலிக்குந் தார்மார்பா அச்சுதா அந்நாளில்
வாலிக் கிளையான் கடை.

(அ - ரை.) ஆலிக்கும் - அசைகின்ற வாலிக்கு இளையான் கடை-வாலி தம்பியாகிய சுக்கிரீவன் வாயிலில். கூர்வேல் இராம இறை - தீட்டிய வேலாயுதத்தையுடைய இராமனாகிய அரசன். (உ0)

[இதுவுமது.]

248. அரசன் அகளங்கன் அச்சுதன் முற்றத்(து)
அரசர் அவதரித்த அந்நாள்—முரசதிரக்
கொட்டிவிடும் ஓசையினும் கோவேந்தர் கால்தளையை
வெட்டிவிடும் ஓசை மிகும்.

(அ - ரை.) முரசு அதிரக் கொட்டிவிடும் ஓசையினும் - பேரிகை முழங்கும்படியாக அடிக்கும் ஒலியிலும். கோவேந்தர் கால்தளையை - பெருமன்னரது கால்களிற் பூட்டிய விலங்கை. (உக)

[உலாக் கண்ட பெண்ணின் கூற்று.]

249. தளையவிழ் நாண்மாலைத் தாயரே ஆவி
களையினுமென் கண்திறந்து காட்டேன்—வளைகொடுபோம்
வன்கண்ணன் மாவிசயன் மால்யானை தன்னெடும்வந்(து)
என்கண் புகுந்தான் இனி.

(அ - ரை.) தளைஅவிழ் நாண்மாலைத் தாயரே - முறுக்கு நெகிழ்ந்த அன்றெடுத்த பூமாலையைச் சூடிய அன்னைமாரே, ஆவி களையினும் - எனது உயிரைப் போக்கினும். (உஉ)

[வாணன் வீரத்தைப் புகழ்ந்து பாடியது.]

250. வாட்டானைத் தென்னவர்கோன் மாகதற்குத் தோற்றசெய்தி
கேட்டான்அத் தீங்குரலும் கேட்டதற்பின்—நாட்டம்
பொருந்தா யிரவிழியான் பொன்முடியைச் சாய்த்தங்(கு)
இருந்தானிங் கென்னுகும் என்று.

(அ - ரை.) வாள்தானை-வாளாயுதத்தைத் தரித்த படையை யுடைய. மாகதற்கு - மகதநாட்டு மன்னனாகிய ஏகம்பவாணனுக்கு. நாட்டம் பொருந்து ஆயிரம் விழியான் கேட்டான் - கவலையோடு கூடிய ஆயிரங் கண்ணனாகிய இந்திரன் கேள்விப் பட்டான் இங்கு என்னுகுமோ என்று - இந்த விண்ணுலகில் அவன் வந்தால் என்னநேருமோ என்று அஞ்சி. (உங)

[திருவிடைமருதூர்த் தாசிகளைச் சிறப்பித்துப் பாடியது.]

251. வாசமலர் மடந்தை போல்வார் மருதவனத்(து)
ஈசன் அடியார் எழுபதின்மர்—நேசத்(து)
இரவலர்மேல் நீட்டுவர்கை யின்டுஉலகை யாளும்
புரவலர்மேல் நீட்டுவர்பொன் தாள்.

(அ - ரை.) மருதவனம் - திருவிடைமருதூர். வாசமலர் மடந்தை போல்வார் - மணம் பொருந்திய தாமரைப்பூவில் வீற்றிருக்கும் திருமகளைப் போன்றவர்கள். இரவலர்மேல் கை நீட்டுவர்-ஐயமெடுப்பவர்களுக்கு அமுதமளிக்கும் பொருட்டுத் தங்கள்

கையை நீட்டுவர். புரவலர்கள் - மன்னர்கள். பொன்தாள் நீட்டுவர் - தம் அழகிய அடிகளை வைப்பர். (உச)

[கம்பர் கற்றுச் சொல்லி.]

252. மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின எங்கண்மாவிரு கண்ணுறங்கிலள் ஐயகோ
கோவுறங்கு கடைத்தலைக்குல தீபவள்ளைகு தட்டிவாய்
ஆவுறங்கு புகார்அசஞ்சல அஞ்சலென்ன அடுக்குமே.

(அ - ரை.) கோ உறங்கு கடைத்தலை குலதீப - (கப்பங் கொணர்ந்த) அரசர்கள் (அதைச் செலுத்தச் சமயம்பெருது) தூங்குகின்ற முற்றத்தையுடைய அரசர் கூட்டத்திற்கு விளக்குப் போன்றவனே. வள்ளை குதட்டிவாய் - வள்ளைக் கொடியை வாயில் அசைபோட்டுக்கொண்டு. அசஞ்சல - மனக்கவலையற்றவனே. மா - விலங்குகள் புள் - பறவைகள். தண்தலைகா - குளிர்ந்த நிலமுடைய பொழில்கள். மான் - மகள். (உரு)

253. நில்லாத பல்லும் பறிபட்ட
கூந்தலும் நீண்டகரிப்
பொல்லா அழுக்குப் புடவையும்ஆய்
வெகுபூச்சியம் போய்ச்
செல்லாப் பணத்துக்குத் தேட்டுனு
மற்றுத்தியங்கி யொன்றும்
இல்லாதபாவி தனக்கார்
துணைபொன்னி ராட்டினமே.

(அ - ரை.) நில்லாத - அசைந்து விழக்கூடிய. வெகு பூச்சி யம்போய் - மதிப்பிழந்து. தேட்டு - செல்லாக்காசினை மாற்றத் தேடுபவளாய். பொன் இராட்டினமே - அழகிய நெசவுக்கருவி.

[சோழ மன்னனிடத்தில் கம்பர் போனபோது அரசன் எதிர் கொண்டு ஏழடி வந்து வழிபாடு செய்தான். அப்போது பாடியது.]

254 படுபருந்துஞ் சூர்ப்பேயும் பன்மிருகஞ் செந்நாய்
கொடிகழுகும் இத்தனையுங் கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

(அ - ரை.) வடிவுடைய கோமான் களப்பாளன் - நல்ல தோற்றமுடைய சக்கரவர்த்தியாகிய சோழனுடைய. போமாறு போமாறு போமாறு - செல்லும் வழிகளெங்கும் விடாது தொடர்ந்து. படுபருந்தும் - பெரிய பருந்துகளும். (உஎ)

255. அன்றையிலும் வையம் அகன்றதோ அல்லவென்று
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டனையோ—என்றும்
அடைந்தாரைக் காக்கும் அகளங்கா துங்கா
நடந்தாயோ நாலா றடி.

(அ - ரை.) வையம் அகன்றதோ - நிலவுலகம் அதிகமாக இப்போது அகலமாயிற்ரு? குன்று எடுத்து நீ திருத்திக் கொண்டாயோ - மலைகளை எடுத்தெறிந்துவிட்டு நீ நிலத்தைத அகலப் படுத்திக்கொண்டாயோ? (உஅ)

[ஆறை நகரிலிருக்கும் வாணனைப் புகழ்ந்து பாடியது.]

256. பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்தம்
மார்பகலங் கண்டு மகிழ்வரே—போர்புரிய
வல்லான் அகளங்கன் வாணன் திருநாமம்
எல்லாம் எழுதலாம் என்று.

(அ - ரை.) பெற்ற மதலையர்தம் - ஈன்ற பிள்ளைகளுடைய. அகளங்கன் - வாணன் - களங்கமில்லாதவனுகிய ஏகம்பவாணன்.

[யானைப்பரிசு கிடைத்தபோது பாடியது.]

257. உலைக்குரிய பண்டம் உவந்திரக்கச் சென்ருல்
கொலைக்குரிய வேழங் கொடுத்தான்—தலைக்குரிய
வாணர்கோன் ஆறை மகதேவ னுக்(கு)இந்தப்
பாணனே டென்ன பகை.

(அ - ரை.) உலைக்குரிய பண்டம் உவந்து இரக்கச் சென்ருல், சமையலுலைக்கு வேண்டிய சரக்காகிய அரிசியைப் பிரியப் பட்டு ஏற்பதற்குப் போனல். ஆறை - ஆறை என்னும் ஊர். ()

258. வாணன் பெயரெழுதா மார்புண்டோ மாகதர்கோன்
வாணன் புகழுரையா வாயுண்டோ—வாணன்
கொடிதாங்கி நில்லாத கொம்புண்டோ உண்டோ
அடிதாங்கி நில்லா அரசு.

(அ - ரை.) மாகதர்கோன் - மகதநாட்டிற்குத் தலைவனாகிய ஏகம்பவாணன். வாணன் கொடிதாங்கி நில்லாத கொம்பு உண்டோ - ஏகம்பவாணனது கொடி கட்டப்பெறாத மரக்கிளை இருக்கின்றதா. (௩௧)

259. பாண்டியனைப் பேர்மாற்றிப் பாணர்க்(கு) அரசளித்த
ஆண்டகை என்றுன்னை அறியேனே—மூண்டெழுந்த
கார்மாற்றுஞ் செங்கைக் கடகரிவா ணாஉனது
பேர்மாற் றுவதரிதோ பேசு.

(அ - ரை.) கார்மாற்றும் - முகிலின் ஈகையை மாற்றுவிக்கின்ற. (௩௨)

260. பாணன் மதுரைப் பதியாள வைத்தபிரான்
வாணர் புகழவரும் ஏகம்ப—வாணன்
கரும்போ தகமேநின் கால்பணிவேன் மீண்டு
வரும்போ(து) அகமே வரின்.

(அ - ரை.) கரும்போதகமே - பெரிய யானையே; மீண்டு வரும்போது அகமே வரின் - மீளப்போகுங் காலத்தில் என் வீட்டிற்கு வந்தால். (௩௩)

261. என்சிவிகை என்கவிகை என்துவசம் என்கவசம்
என்பரியிது என்கரியிது என்பரே—மன்கவன
மாவேந்தன் வாணன் வரிசைப் பரிசுபெற்ற
பாவேந்தரை வேந்தர் பார்த்து.

(அ - ரை.) மன்கவனம் - அதி விரைவினையுடைய. கவிகை - குடை. சிவிகை - பல்லக்கு. கவசம் - அங்கி. துவசம் - கொடி. கரி - யானை. பரி - குதிரை. (௩௪)

262. சேற்றுக் கமலவயல் தென்னுறை வாணனையான்
சோற்றுக்கு அரிசிதரச் சொன்னக்கால்—வேற்றுக்
களிக்குமா வைத்தந்தான் கற்றவர்க்குச் செம்பொன்
அளிக்குமாறு எவ்வாறு அவன்.

(அ - ரை.) வேற்றுக்களிக்கு மாவைத் தந்தான் - அதற்கு மாறாகக் களி கிண்டுவதற்குரிய மாவினை (அல்லது களிப்புடைய யானையை.) (௩௫)

[ஏகம்பவாணன்பாற் பரிசு பெற்றுவந்த புலவன் மற்ருெரு புலவனுக்கு அடையாளஞ் சொன்னதுபோற் பாடியது.]

263. தேரு ளைப்புரவி வார ணத்தொகுதி
திறைகொ ணர்ந்துவரு மன்னநின்
தேச மேதுனது நாம மேதுபுகல்
செங்கை யாழ்தடவு பாணகேள்
வாரு மொத்தகுடி நீரு நாமுமக
தேவ னுறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளிக்கவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்
நீரு மிப்பரிசு பெற்று மீளவர
லாகு மேருமவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்கும்உயர் வேப்பு நிற்கும்வளர்
பனையும் நிற்கும்அதன் அருகிலே
அரசு நிற்கும்அர சைச்சு மந்தசில
அத்தி நிற்கும்அடை யாளமே.

(அ - ரை.) உளைப்புரவி - பிடரி மயிருடைய குதிரை வாரணத்தொகுதி - யானைத்திரள் செங்கையாழ் தடவு-செந்நிறமான கையினலே யாழினைத் தடவுகின்ற. அவன் முன்றில்வாய் ஏகும் - அவனது முற்றத்திற்குப் போய் வாரும். அடையாளம் - அறிகுறி. ஆரும் நிற்கும் - ஆத்திமரம் நிற்கும். உயர் வேம்பும் நிற்கும் - நீண்ட வேப்பமரங்கள் வளர்ந்திருக்கும். வளர்பனையும் நிற்கும் - பெரிய பனைமரமும் நிலைபெறும். அதன் அருகிலே - அதன் பக்கத்திலே. அரசு நிற்கும் - அரசமரமுண்டு. அரசைச் சுமந்து சில அத்தி நிற்கும் - அரசமரத்தைச் சுமக்கும் சில அத்தி மரங்களுமுள்ளன. ஆர் வேம்பு பனையென்பன சோழ பாண்டிய சேரர்களையும், அரசமரமென்பது பிற அரசர்களையும், அத்தியென்பது யானைகளையும் குறிப்பாக உணர்த்தும். (இப்பாடல்களும் வேறு சில பாடல்களும் பிறர் பாடியதாகவும் வழங்குகின்றன.) (நசுஉ)

264. அலங்கலணி மார்பன் ஆறையர்கோன் வாணன்
விலங்கு கொடுவருக வென்றான்—இலங்கிழையிர்
சேரற்கோ சோழற்கோ தென்பாண்டி நாடாளும்
வீரற்கோ யார்க்கோ விலங்கு.

(அ - ரை.) அலங்கல் - மாலே. விலங்கு - தளே. (நூஎ)

265. வாணன் புகழ்க்கெல்லே வாழ்த்துவோர் நாவெல்லே
வாணன் செயத்தெல்லே மண்ணெல்லே—வாணன்
படைக்கெல்லே திக்கெல்லே பைந்தமிழ்தேர் வாணன்
கொடைக்கெல்லே ஏற்பவர்தங் கோள்.

(அ - ரை.) வாணன் செயத்து எல்லே மண் எல்லே - ஏகம்ப வாணனது வெற்றியினளவு நில உலகத்தினளவேயாகும். ஈகையி னளவு ஏற்பவர்தம் கோள் - ஏற்றுக்கொள்பவருடைய ஆற்றலே. (நூஅ)

[பொன்னிக்குக் கம்பரெழுதிக் கொடுத்த முறிச் சீட்டைச் சோழன் கம்பருக்குக் காட்டியபோது கம்பர் இது பொன்னிக் கல்ல, திருமகளுக்கென்று பாடியது.]

266. கன்னிக் கலச முலேயாள்தன்
காமக் குரோத பஞ்சத்தில்
என்னுக் கெழுதிக் கொடுத்தே னென்(று)
இயம்பக் கேளா யிகல்வேந்தே
மின்னுக் கெழுதி யிடைக்கெழுதி
வேண்டும் பொருட்கும் எழுதியருட்
பொன்னுக் கெழுதிக் கொடுத்தேன்யான்
பொய்யு முரையேன் புகர்வேந்தே.

(அ - ரை.) என்னுக்கு - ஏன். அருள் பொன்னுக்கு-அருள் சுரக்கக் கூடிய திருமகளுக்கு. மின்னுக்கு எழுதி - ஒளியைப் பற்றி எழுதியும் சிலேடை பொருளாக வைத்துக் கம்பர் தக்க வாறு மறுமொழி கூறினர். இத்தகைய ஆற்றல் சிறந்த புலவர் கட்கே அமைவதாம். (நூகூ)

[அதற்குச் சோழ மன்னன் சொன்னது.]

267. போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடில்
தூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே.

(அ - ரை.) பாவலர் - பாடவல்ல புலவர்கள். வன்கணாளர்கள் - கொடுமையுடையவர்கள். (சo)

[சோழ மன்னன் என் நாட்டைவிட்டுப் போவென்று சொல்லியபோது கம்பர் பாடியது.]

268. மன்னவனு நீயோ வளநாடு முன்னதோ
உன்னை யறிந் தோதமிழை ஓதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு.

(அ-ரை.) குரங்கு ஏற்றுக்கொள்ளாத கொம்பு உண்டோ- குரங்கு தாவும்போது அதனைத் தாங்காத மரக்கிளையுளதோ ? ()

[இதுவுமது]

269. காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ—மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியுங் கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ எங்கட்கு இடம்.

(அ - ரை.) ஓதக் கடல் - முழங்குகின்ற கடல். (சஉ)

[கம்பர் கொங்கு நாட்டிற்குப் போனபோது அந்நாட்டிலுள்ளோர் அவரைப் போற்றுமையால் அந்நாட்டையும் அந்நாட்டவரையும் இழித்துப் பாடியது.]

270. நீரெலாஞ் சேற்று நாற்றம் நிலமெலாங் கல்லு முள்ளும்
ஊரெலாம் பட்டி தொட்டி உண்பதோ கம்பஞ் சோறு
பேரெலாம் பொம்மன் திம்மன் பெண்களோ நாயும் பேயும்
காருலாங் கொங்கு நாட்டைக் கனவிலு நினைக்கொ ணாதே.

(அ - ரை.) ஊரெலாம் பட்டி தொட்டி - அங்குள்ள ஊர்களெல்லாம் சிறியனவாய்ப் பட்டி தொட்டி என்னும் பெயரினை உடையன. பெண்களோ நாயும் பேயும் - மாதர்கள் நாய் குரைப்பதுபோலக் கூக்குரலிட்டுக் கொண்டு பேய்போல விரித்த தலையுடன் திரிவார்கள். கார் - முகில். (௨௩)

[கம்பர் வன்னியரை இகழ்ச்சியும் புகழ்ச்சியுமாகப் பாடியது.]

271. குமிண்டியும் பண்ணையுங் கூட முளைக்கின்ற
கொல்லைக்கம்பை
நிமிண்டியு மூதியுந் தின்னவல் லோரிந்த
நீள்நிலத்தில்
துமிண்டியங் காய்தன்னை மொட்டையம் பாலெய்யுஞ்
சூரர்கண்டீர்
நமிண்டியிற் பள்ளிகள் அத்தனை பேர்களு
நல்லவரே.

(அ - ரை.) குமிண்டியும் பண்ணையும் - குமுட்டித் தழையும் வயற்கீரையும். கம்பை - கம்பங் கதிரை. நிமிண்டியும் ஊதியும் தின்னவல்லோர் - கையினாற் கசக்கியும் ஊதியும் அருந்தக் கூடியவர்கள். துமிண்டியங்காய் தன்னை - துமிண்டிக்காயை. மொட்டை அம்பால் எய்யும் - மழுங்கிய பாணத்தை வீசிப் பறிக்கின்ற. நமிண்டியில் - நமிண்டி யென்னும் பதியிலிருக்கும். பள்ளிகள் அத்தனை பேர்களும் நல்லவரே-வன்னியர் யாவரும் தக்கவர்களே. (௨௪)

[பார்ப்பான் வீட்டிற்கும் வணிகன் வீட்டிற்கும் வாணியன் வீட்டிற்கும் போனபோது அவர்கள் போற்றுமையால் அவர்களை இகழ்ந்தும் வேளாளரைப் புகழ்ந்தும் பாடியது.]

272. செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே—முட்டிபுகும்
பார்ப்பார் அகத்தையெட்டிப் பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்.

(அ - ரை.) செக்காரப் பொட்டி மக்கள் - செக்கோட்டிப் பிழைக்கும் வாணியர். முட்டிபுகும் - ஐயமேற்றுண்ணும். (௨௫)

[செல்லனென்னும் வேளாளன் மனைவி கம்பஞ் சோறிட்டதைப் புகழ்ந்து பாடியது.]

273. கல்லங் காடு தனில்விளையாக்
கடுக நிலத்தில் தான் முளையா
அல்லங் கிருந்த கருங் கூந்தல்
அணங்குக் கணங்கு போலாவாள்
செல்லன் தேவி மனைகடொறுந்
தேடித் திரிந்துங் காணுத
நெல்லஞ் சோறே கம்பஞ்சோற்
றினைநீ சுமந்து திரிவாயே.

(அ - ரை.) கல்லங்காடுதனில் விளையா - பாறைக்காட்டில் உண்டாகா. அல் அங்கு இருந்த கரும் கூந்தல் - இருள்போன்ற கருநிறமுடைய தலைமயிரைக் கொண்டிருந்த. (சகு)

[வேளாளர்களைப் புகழ்ந்து பாடியது.]

274. மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழி தரித்தே அருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை என்றும் நிலைக்குங்கை நீடூழி
காக்குங்கை காராளர் கை.

(அ-ரை.) காராளர் - முகிலை ஆளுகின்ற உழவர்கள். (சஎ)

[வேலியென்பவள் வைக்கச் சொல்லிய சுவர் விழாமலிருக்கப் பாடியது.]

275. மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவார் ஈங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள் வேலி தருங்கூலி
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ் சுவரே.

(அ - ரை.) மல் கொண்ட திண்புயத்தான் - மற்போரில் வளம்பொருந்திய வலிய தோள்களையுடைய மன்னன். வில் கொண்ட பிறை நுதலாள் வேலிதரும் - வில்லைப்போன்ற வடிவுள்ள ஒளியுள்ள நெற்றியினளாகிய வேலியென்பாள் தருகின்ற. (சஅ)

[சோழனுடைய மனைவி அரசன் சால்வையைக் கம்பர் போர்த்துக் கொண்டிருந்ததால் அரசனென் றெண்ணிப் படுத்துக் கொண்டிருந்தபோது பாடியது.]

276. தேரையார் செவ்விளநீர் உண்ணூர் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவார் நாமவரை நத்தாமை
கோரைவாய்ப் பொன்சொரியுங் கொல்லிமலை நன்னுடா
ஊரைவாய் மூட உலைமூடி தானில்லையே.

(அ - ரை.) கோரைவாய்ப் பொன் சொரியும் - கோரைச் செடியின் அடிகளிலே ஆறு பொன்னைச் சொரிகின்ற. நாரியார் நாமவரை நத்தாமை தாமறிவார்-அரசன் தேவியார் அருகிருந்தும் நாம் அவர்பால் ஆசை வையாமையைத் தாமே தெரிவார். (௬௯)

[சோழ மன்னன் பெண்ணை அம்பிகாபதி சிறப்பித்துப் பாதிப் பாட்டுப் பாட மற்றைப் பாதியுங் கம்பர் பாடியது.]

277. இட்டடி நோவ எடுத்தடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து மருங்கசையக்—கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று கூறுவாள் நாவில்
வழங்கோசை வையம் பெறும்.

(அ - ரை.) வட்டில் சுமந்த மருங்கு அசைய - உண்ணும் கலத்தை இடையானது தாங்கியலையவும். (௭0)

[அம்பிகாபதி பாடியது.]

278. சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடந்
துற்றே அசையக் குழையூச லாடத் துவர்கொள் செவ்வாய்
நற்றே னொழுக நடனசிங் கார நடையழகின்
பொற்றேர் இருக்கத் தலையலங் காரம் புறப்பட்டதே.

(அ - ரை.) தரளவடம் துற்றே அசைய - முத்துச்சரடு நெருங்கியாடவும். துவர்கொள் செவ்வாய் - பவளம் போன்ற சிவந்தவாய். அரசன் மகள் செய்யுளை எண்ணிக் கணக்கிட் டிருந்தபோது எட்டிப் பார்க்க இப்பாடல் பாடப்பட்டது. (௭௧)

[அம்பிகாபதி தனக்குத் தண்டனை கிடைத்தபோது வருந்திப் பாடியது.]

279. வீரமுண் டோமதன் கையம்பினுல் வெந்து விழுகைக்கு
நேரமுண் டோவஞ்சி நேர்பட்ட காலையில் நெஞ்சைவிடப்
பேரமுண் டோசொல வொண்ணுத காமப் பெருநெருப்புக்(கு)
ஈரமுண் டோஐய னேஎன்ன பாவம் இனிச்சொல்வதே.

(அ - ரை.) வஞ்சி நேர்பட்ட காலையில் நேரமுண்டோ - பெண்ணின் காட்சி நேர்பட்ட பொழுது (தடையை நினைப் பதற்குப்) பொழுதுண்டா? (ருஉ)

[அம்பிகாபதி அரசன் மகளைப் புகழ்ந்து பாடியது.]

280. உருகி உடல்கருகி உள்ளிரல் பற்றி
எரிவ தவியாது என்செய்கேன்—வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே இட்ட நெருப்பு.

(அ - ரை.) வரி அரவம் நஞ்சிலே தோய்ந்த - வரிகளை யுடைய பாம்பினது விடத்திலே நனைந்த. நளினவிழி - தாமரை போன்ற கண். (ருங)

[இதுவுமது.]

281. மைவடிவக் குழலியர்தம் வதனத்தை
நிகரொவ்வா மதியே மானே
செய்வடிவைச் சிற்றிடையைத் திருநகையை
வேய்த்தோளைத் தெய்வ மாக
இவ்வடிவைப் படைத்தவடிவு எவ்வடிவோ
யானறியேன் உண்மை யாகக்
கைபடியத் திருமகளைப் படைத்திவளைப்
படைத்தனன்நல் கமலத் தோனே.

(அ - ரை.) மதி மைவடிவக் குழலியர்தம் வதனத்தை நிகர் ஒவ்வா-திங்கள் கருநிறக் கூந்தலையுடைய பெண்களின் திருமுகத் திற்குச் சமமாகாது. திருநகையை - அழகான பற்களை. வேய்த் தோளை-மூங்கில் போன்ற மென்மையான தோள்களை. கைபடிய - கை பழகுவதற்கு. (ருச)

[அதைக்கண்டு அரசன் ஒட்டக் கூத்தருக்குச் சொல்லியது.]

282. கண்டீரோ காண் அம்பி காபதிசெய் யும்பிழையைக்
கண்டீரோ நம்மீதிற் கள்ளமில்லை—உண்டோகாண்
ஆற்ருது கோபம் அடங்க இவனையொட்டக்
கூத்தாஎன் செய்திடலாங் கூறு.

(அ - ரை.) நம்மீதில் கள்ளம் இல்லை - நம்மிடத்திற் களங்கமில்லை. உண்டோ காண் - களங்க மென்னிடத்திலுண் டாஞல் கூறும். (இல்வரசன் இலக்கண இலக்கியங்களை ஒட்டக் கூத்தர்பால் கற்றுப் புலமைபெற்றிருந்தான் ஒட்டக்கூத்த ருடைய மாணவன். (ருரு)

[அதற்கு ஒட்டக்கூத்தர் உரைத்தது.]

283. பனிப்பகையோன் மாமரபின் பார்த்திபனே சோழா
உனக்கினியான் சொல்லுவதொன் றுண்டோ—கனத்த
பிழைசெய்தான் அன்னைக்குப் பின்பார்க்க வேண்டாம்
கழுவினிலே ஏற்றிவிடல் காண்.

(அ - ரை) பனிப்பகையோன் மாமரபின் பார்த்திபனே சோழா - சூரியனது பெரிய வழியில் தோன்றிய பெரிய அரச ஞகிய சோழனே. அன்னைக்குக் கனத்தபிழை செய்தான் - தாய் போன்ற நம்முடைய மகளுக்குப் பெரிய குற்றத்தை இழைத்தான். (ருசு)

[அம்பிகாபதியை அரசன் யானையின் காலில் இடறச் சொன்னபோது பாடியது.]

284. வெங்கண் சிவந்து வெடிவால் முறுக்கி வெகுண்டெழுந்தென்
அங்கம் பிளக்க வருங்களி றேஅன் றிரணியனைப்
பங்கம் படஉரங் கீண்டே உதிரம் பருகுநர
சிங்கம் இருக்குது காண்கெடு வாய்என்றன் சிந்தையிலே.

(அ - ரை.) வெம்கண் சிவந்து - வெப்பமான கண்கள் சினத்தால் சிவக்கப் பெற்று. என் அங்கம் - என் உடல். உரம் கீண்டு - மார்பைக் கீறி, நரசிங்கம் - நரசிங்கப் பெருமாள். (ருஎ)

[கம்பர் பாடியது.]

285. இந்நாள் இதுவிளையும் என்றெழுத்துத் தானிருக்க
என்னுலே யாவதொன்றும் இல்லையே—உன்னுலே
வந்ததுதான் அப்பா மகனே தவிர்ப்பவரார்
முந்தையில்நீ செய்தவினை யே.

(அ - ரை.) எழுத்துத் தானிருக்க - நான்முகன் எழுதிய எழுத்துத் தலையிலிருக்கும்பொழுது. (ருஅ)

[அம்பிகாபதி விடை.]

286. இந்நாள் இதுவிளையும் என்றெழுத்துத் தானிருக்க
என்னுலே யாவதொன்றும் இல்லையே—என்னுலே
வந்ததுகாண் ஐயா வரும்விதியை யார்தடுப்பார்
எந்தைமக தேவர்செய லே.

(அ - ரை.) எந்தை மகதேவர் செயல் - அஃது எம் அப்பனுகிய மகாதேவரது கட்டளை. (ருகூ)

[அம்பிகாபதியை வெட்டினபோது கம்பர் பாடியது.]

287. மட்டுப்ப டாக்கொங்கை
மானுர் கலவி மயக்கத்திலே
கட்டுப்பட் டாயென்ன காதல்பெற்
ருய்மதன் கையம்பினுல்
பட்டுப்பட் டாயினுந் தேறுவை
நீயென்று பார்த்திருந்தேன்
வெட்டுப்பட் டாய்மக னேதலை
நாளின் விதிப்படியே.

(அ - ரை.) மானுர் - மான்போன்ற பெண்டிரது. தலைநாளின் - ஊழின் முறைப்படி. (இந்நிகழ்ச்சிக்குப்பின் சோழமன்னனுக்கும் கம்பருக்குப் பகையாகிவிட்டது.) (கூ0)

[அம்பிகாபதி இறந்ததைப் பற்றிக் கம்பர் பாடியது.]

288. பரப்போத ஞாலம் ஒருதம்பி
யாளப் பனிமதியம்
துரப்போன் ஒருதம்பி பின்வரத்
தானுந் துணைவியுடன்
வரப்போன மைந்தற்குத் தாதை
பொருதுயிர் மாய்ந்தனன் நெஞ்(சு)
உரப்போ வெனக்கிங் கினியார்
உவமை உரைப்பதற்கே.

(அ - ரை.) பனி மதியம் துரப்போன் - தண்மையுடைய திங்களைத் தோற்கடிப்போன். தாதைபொருது உயிர் மாய்ந்தனன்- தகப்பனாராகிய தசரதன் மகன் போய்வருமளவும் பொறுத்திராது இறந்தனன். நெஞ்சுரப்போ - மன வலிமையோ. (சுக)

[வேளாளரைப் புகழ்ந்து பாடியது.]

289. காலப் புயல்நிகர் காராளர் தம்மைக் கடலுடுத்த
தாலக் குலமங்கை பெற்றத னுல்தலைக் காலத்திலே
கோலத் திருமுகத் தாலே முகந்தனன் கூடலிலே
சூலக் கரப்படை யான்தலை மீது சுமந்தனனே.

(அ - ரை.) காலப்புயல் நிகர் காராளர் தம்மை - உரிய காலத்தில் மழைபொழிகின்ற முகிலுக்குச் சமமான வேளாளரை. கடல் உடுத்த தாலக் குலமங்கை பெற்றதனுல் - கடலாகிய உடையைத் தரித்த மேன்மையான பூமகள் தோற்றுவித்தமையால். தலைமீது சுமந்தனன் - (பிட்டுக்கு மண்சுமந்தபோது) தனது தலைமேல் தாங்கினுன். (சுஉ)

[ஒரு கைக்கோளனிடத்தில் அகப்பட்டுக் கொண்டபோது பாடியன.]

290. மய்க்கிளை யான விழிக்களை
கொண்டு மருட்டி அழைத்திடலால்
பொய்க்கள வாகப் புகுந்தது
முண்டு புணர்ந்ததும் இல்லையடா

கய்க்கிசை வான குறுந்தடி
கொண்டு கழுத்தை நெரிக்கவரும்
கய்க்கள வாளன் தங்கைய
டாநின் தாரம டாவிடடா.

(அ - ரை.) மய்க்கு இணையான விழிக்கண் கொண்டு மருட்டி - மை போன்ற கருங் கண்ணுகிய அம்பினுல். கைக்களவா - செங்குந்தனே. (சுங)

291. இருளை இருள்விழுங்கி எவ்விடமுந் தோன்ருது
இருவிழியுங் கோல்வழியே செல்ல—வருமெல்லை
வந்ததுண்டு சேர்ந்ததில்லை மாலேயல் லாமலே
அந்தமனை உந்தன்மனை யே.

(அ - ரை.) இருவிழியும் கோல்வழியே செல்ல - இரண்டு கண்களும் வழிகாட்டுகின்ற கைத்தடியைப் பின்பற்றவும். வரும் அல்லில் - ஏற்பட்ட இரவில். (சுச)

[சோழ மன்னன் கணை எய்தபோது பாடியது.]

292. வில்லம்பு சொல்லம்பு மேதினியில் ரண்டுண்டு
வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்—வில்லம்பு
பட்டதடா என்மார்பிற் பார்வேந்தா நின்குலத்தைச்
சுட்டதடா என்வாயிற் சொல்.

(அ - ரை.) வில்லம்பில் சொல்லம்பே மேலதிகம் - வில் லம்பைப் பார்க்கினும் சொல்லம்பே மிகக் கடுமையானது. (சுரு)

[நெல்மலி தச்சனைப் பாடியது.]

293. நெற்படி விளைகழனி புடைசூழ் நென்மலி வாழ்தச்சன்
கற்படி பணைதோளான் பெயரோ கங்கண கணகணவன்
விற்படி வாணுதலாள் மனைவி மின்மினி மினிமினிமி
சொற்படி வேலைசெய்யும் அவளோ துந்துமி துரிதுரிதி.

(அ - ரை.) கல்படி பணை தோளான் - கல்லைப் போன்ற வலிமையான தோள்களையுடையவன். விற்படி வாள்நுதலாள் மனைவி வில்லைப் போன்ற வடிவுடைய ஒளியுடைய நெற்றியினளாகிய அவன் இல்லாள். (சுசு

[கம்பர் வீட்டு வேலைக்காரி அம்பல சோமாசிப் புலவரைப் பார்த்துப் பாடியது.]

294. வட்டமதி போலிருக்கும் வன்னிக் கொடிதாவும்
கொட்டுவார் கையினின்று கூத்தாடும்—சுட்டால்
அரகரா என்னுமே அம்பல சோமாசி
ஒரு நாள்விட் டேன்ஈ(து) உரை.

(அ - ரை.) அம்பல சோமாசி - அம்பல சோமாசியென்னும் பெயருடைய கல்விமானே. வட்டமதி - வட்டமான திங்கள். வன்னிக்கொடி தாவும் - தீயின் உச்சியைக் கடந்து செல்லும். சுட்டால் - வேகவைத்தால். (சுஎ)

[வாணியன் தாதன் விருது காளம் பிடிக்கப் பாடியது.]

295. கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப்
பானெங் குலக்கவிக்குக்
காளம் பிடித்திடிற் சின்னம்
படுமன்பர் காதலிமார்
வேளம் பிடித்தகண் வெள்ளம்
பிடிக்கவெம் பேய்க்கிளம்பேய்
தாளம் பிடிக்கத் தனிவேல்
பிடித்த சயதுங்கனே.

(அ - ரை.) கூளம் - கழிவு. கோது - சக்கை. காளம் - திருச்சின்னம். வேள் அம்பு இடித்த கண் - காமபாண நீலோற்பலத்தை வென்ற கண். (சுஅ)

[இராமாயணத்தை இரவிற் பாடுங்கால் திருவொற்றியூர்க் காளியைப் பந்தம் பிடிக்கப் பாடியது.

296. ஒற்றியூர் காக்க உறைகின்ற காளியே
வெற்றியூர் காகுத்தன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவில் மாணுக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி.

(அ - ரை.) காகுத்தன் - இராமன். நந்தாது - கெடாது. ()

[சடையப்பர் காலமானபோது பாடியது.]

297. ஆன்பாலும் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய உண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா கம்பன்
இறக்கும்போ தேனும் இனி.

(அ - ரை.) அரம்பை முதல் முக்கனி - வாழை மா பலா ஆகிய கனிகள். தெவிட்டுமனம் - தேக்கெறியும் உள்ளம். (எ0)

[காவிரி எச்சில் நீரென்று பாடியது.]

298. மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவு நீர்போலுங் காவிரியே—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் தன்புகழை
ஆர்போற்ற வல்லார் அறிந்து.

(அ - ரை.) மெய்கழுவி - நீராடி. கைகழுவும் - எச்சிற் கையலம்பும். பொய்கழுவும் - பொய்யைவிட்ட. போர்வேள் - காமன். (எக)

[திருவொற்றியூரில் கண்ட விலைமகளை வியந்து பாடியது.]

299. இல்லென்பார் தாமவரை யாமவர்தம் பேரறியோம்
பல்லென்று செவ்வாம்பல் முல்லைமுறை பாரித்துக்
கொல்லென்று காமனையுங் கண்காட்டிக் கோபுரக்கீழ்
நில்லென்று போனரென் நெஞ்சைவிட்டுப் போகாரே.

(அ - ரை.) இல்லென்பார்-வீட்டிற்குப் போய் வருவதாகச் சொன்னவர். பாரித்து - புலப்படுத்தி. (எஉ)

[ஒரு விலைமகளை இகழ்ந்து பாடியது.]

300. சொல்லியைச் சொல்லி னமுதான
செல்வியைச் சொற்கரும்பின்
வில்லியை மோக விடாய்தவிர்ப்
பானை விழியம்பினுற்

கொல்லியைக் கொல்லியம் பாவையொப்
பாளைக் குளிரொற்றியூர்
வல்லியைப் புல்லிய கைக்கோ
விவர்வந்து வாய்ப்பதுவே

(அ - ரை.) சொல்லியை - பேச்சில் வல்லவளை. கொல்லியம் பாவை - கொல்லிப்பாவை. புல்லிய - தழுவிய. (எங)

[காவிரியின் பெருக்கடங்கப் பாடியது.]

301. கன்னி அழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனளென்—றிந்நீர்
உரை கிடக்கலாமோ உலகுடைய தாயே
கரை கடக்க லாகாது காண்.

(அ - ரை.) பொன்னி - காவிரி. (எச)

[அரசன் கண்டவையைக் கண்ட சுத்தியிற் பாடியது.]

302. கரைக்கு வடக்கிருக்குங் காடுகாள் அம்மைக்
கரைத்துவழி சாந்தைத்தொட் டப்பேய்—உரைத்தும்
மறைக்க அறியாத வன்பேயின் கையைக்
குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு.

(அ - ரை.) காடுகாள் அம்மை - காளியம்மை. அரைத்து வழிசாந்தை - அரைத்து வழித்த சந்தனத்தை. குறைக்கும் - வெட்டிக் குறைக்கும். சேரன் ஒருநாள் இரவில் நகர் சோதனை செய்து வரும்போது காளி கோயிலில் ஒருவன் சந்தனம் அரைக்க அது வழிவதைக் கண்ட பேய் ஒன்று அதனைத் தீண்ட அரைப் பவன் கத்தியைக் கொண்டு அப் பேயின் கையை வெட்டினன். (எடு)

[கம்பர் வல்லி வீட்டிற்கு எருமை வாங்கிவரப்போய் காளிம் பன் நிரை மேய்ப்பானைக் கண்டு அவன்பேரிற் பாடியது.]

303. புக்கு விடைதழுவிக் கோடுழுத புண்ணெல்லாம்
திக்குளுயர் காளிம்பன் தென்புழல்மான்—அக்கணமே
தோள்வேது கொண்டிலனேல் சுந்தரப்பொன் தோன்றலுக்கு
வர்ழ்வேது கண்டிலமே மற்று.

(அ - ரை.) புக்கு-புகுந்து. விடை தழுவி-ஆனேற்றினைத் தழுவி. கோடுழுத - கொம்பு குத்திய. தென்புழல் - தெற்கிலுள்ள புழற்கோட்டம், அழகிய புழற் கோட்டமுமாம். வேது-வெதுவெதுப்பான ஒத்தடம். (எசு)

[தாதன் எனும் புலவன்மேற் பாடியது.]

304. தாதாஎன் றுலும் தருவென்று சொன்னுலும்
தாதாஎன் றுலும் தருவனே தாராதான்
தாதாஎன் றுலும் தருவென்று சொன்னுலும்
தாதாஎன் றுலும் தருவன்நம் தாதனே.

(அ - ரை.) தாதா - கொடையாளி. தரு - கற்பக தரு. தாராதான் - ஈயாத புல்லன். தா தா - கொடு கொடு. (எஎ)

[களத்தூர் மின்னுளைக் கலந்து பாடியது.]

305. வில்லி களந்தைமின்னை விண்ணவர்தம் கோவினையும்
வல்லிநெடுஞ் சேடனையும் வாணனையும்—புல்லியுறப்
பார்க்கும்போ தும்அதரம் பற்றும்போ தும்அணைத்துச்
சேர்க்கும்போ துந்நினைப்பஞ் சென்று.

(அ - ரை.) களந்தைமின் - களத்தூரில் உள்ள பெண். விண்ணவர்தம் கோ - தேவேந்திரன். (எஅ)

[சடையப்ப பிள்ளையைப் புகழ்ந்து பாடியது.]

306 பொதுமாதர் விட்டைப் புகழ்பெறவே செந்நெற்
கதிராலே வேய்ந்தருளுங் கங்கைப்—பதிநேர்
வருவெண்ணெய் நாடன் மகிழ்நா வலர்க்கைந்
தருவா னவன்சடையன் தான்.

(அ - ரை.) செந்நெல் கதிர் - வைக்கோல். ஐந்தரு-கற்பகம் பாரிசாதம் முதலிய ஐந்தரு. விலைமகள் வீட்டிற்கு நெற்கதிர் வேய்ந்ததைக் குறித்துப் பாடியது. (இவ்விலைமகள் கம்பரால் காதலிக்கப்பட்டுக் காமக்கிழத்தியாக விளங்கியவள்.) (எகூ)

[மயிலாப்பூர்த் தட்டான் திருவாலிமேற் பாடியது.]

307. அண்ணல்திரு வாலி அணிமயிலை அத்தனையும்
வெண்ணிலவின் சோதி விரித்ததே—நண்ணும்
தடந்துப்பு விற்பாள்நந் தன்முகத்தே கொண்டு
நடந்துப்பு விற்பாள் நகை.

(அ - ரை.) அண்ணல் திருவாலி - பெருமையிற் சிறந்த திருவாலி. திருவாலி : தட்டான் பெயர். அணிமயிலை - அழகிய மயிலாப்பூர். வெண்ணிலவு - வெள்ளிய நிலவு. உப்புவிற்பாள் நகை - உப்பு விற்பவள் அணிந்துள்ள அணிகலம். (அ0)

௩௫. ஏகம்பவாணர் மனைவியார்

[கம்பருடைய மாணவர் ஏகம்பவாணர். ஏகம்பவாணர் பெரும்புலவராக விளங்கியதுடன் செல்வச் சிறப்பிலும் சிறந்து விளங்கினர். ஏகம்பவாணரைப் போன்றே அவர் மனைவியும் செய்யுள் பாடுஞ் சீர்த்தியமைப் பெற்றவள்.]

[சேர சோழ பாண்டியர்கள் ஏகம்பவாண முதலியார் வீட்டிற்குவந்து முதலியாரெங்கே யென்றனர். அவர் மனைவி கழனிக்குப் போனரென அரசர்கள் முடிநடப் போனரோ என்ற போது பாடியது.]

308. சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றில்—மானபரன்
பாவேந்தர் வேந்தன் பறித்துநட்டான் ஏகம்பன்
மூவேந்தர் தங்கள் முடி.

(அ - ரை.) மானபரன் - மேலான பெருமையுடையவன். ()

௩௬. ஏகம்பவாணர் பணிப்பெண்கள்

309. தென்னவா மீனவா சீவிலிமா றமதுரை
மன்னவா பாண்டி வரராமா—துன்னும்
சுரும்புக்குத் தாரளித்த துய்ய தமிழ்நாடா
கரும்புக்கு வேம்பிலே கண்.

(அ - ரை.) தென்னவா - பாண்டியனே. மீனவா - மீன் கொடியையுடையவனே. சீவிலி மாறு-ஸ்ரீவில்லிபுத்தூரினையுடைய பாண்டியனே. கரும்புக்கு வேம்பிலே கண் - கரும்பு போன்ற என் மகளுக்கு நீ யணிந்திருக்கும் வேப்பந்தாரிலே நோக்கமிருக்கின்றது. (க)

310. மாப்பைந்தார்க்(கு) அல்லமுத்து வண்ணத்தார்க்(கு) அல்லவஞ்சி
வேப்பந்தார்க் காசை கொண்டு விட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கு நெல்வேலிச் சீவிலிமா றுதமிழை
ஆய்ந்திருக்கும் விர மாறு.

(அ - ரை.) முத்து வண்ணத்தார்-அழகிய முத்துமாலை. (உ)

311. வேம்பா கிலுமினிய சொல்லுக்கு நீபுனைந்த
வேம்பாகி லும்முதவ வேண்டாமோ—மின்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா நின்புயத்து
மாலையிலே மாலை வைத்தாள் மான்.

(அ - ரை.) வேலையிலே வேலைவைத்த மீனவா - கடல் சுவறும்படி வேலாயுதத்தை வீசிய பாண்டியனே. மான் - என் மகள். மாலை வைத்தாள் - விருப்பங்கொண்டாள். வேம்பாகிலு மினிய சொல்லுக்கு - வேகின்ற கருப்பஞ் சாற்றுப்பாகிலும் இனிய மொழியையுடையாளுக்கு. நீ புனைந்த வேம்பாகிலும் உதவ வேண்டாமோ - நீ யணிந்துள்ள வேப்பந்தாரையாவது அளிக்கக் கூடாதோ? (ங)

312. இலகுபுகழ் ஆறை ஏகம்ப வாணன்
அலகை வரும்வருமென் றஞ்சி—உலகறிய
வானவர்கோன் சென்னிமிசை வண்கை வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு.

(அ - ரை.) வண்கை வளையெறிந்த - வலிமை வளம் பொருந்திய கையிலுள்ள வளையினைச் செலுத்திய. ஆறை ஏகம்பவாணன் - ஆற்றூருக்கு அதிபனாகிய ஏகம்பவாணன். (ச)

௧௭. வாணியன் தாதன்

[இவர் கம்பர் காலத்திருந்தவர். கம்பருக்கும் இவருக்கும் பகை முதிர்ந்திருந்தது.]

[கம்பர் பாடிய மும்மணிக்கோவை பிழையென்று பாடியது.]

313. கைம்மணிச் சீரன்றிச் சீரறியாக் கம்பநாடன் சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழைமுனை வாளெயிற்றுப்
பைம்மணித் துத்திப் பணமணிப் பாந்தட் படம்பிதுங்கச்
செம்மணிக் கண்பதம் பேரக்கக்கோல் யானைச் செயதுங்கனே.

(அ - ரை.) வாணியன் தாதன் செக்கார் குலத்துத் தோன்றிய ஒரு புலவர். இவருக்கும் கம்பருக்கும் பகைமை யுண்டு. துத்தி - படப்பொறி. பாந்தள் - பாம்பு. (௫)

௧௮. காளமேகப்புலவர்

[வசை பாடுதலில் வல்லவராகிய இவர் முதலில் பெருமாள் கோவில் மடைப்பள்ளித் தொழிலில் இருந்தவரென்றும் பின்னர்ச் சிவன் கோவில் மடைப்பள்ளித் தொழிலில் அமர்ந்தாரென்றும் வரலாறு கூறும். இவர் அம்மையின் அருளைப் பெற்றவரென்பது இவருடைய பாடல்களின் சிறப்பால் நன்கறியப்பெறும். இவர் திருமலைராயன் பட்டினத்துப் புலவர்களோடு எதிர்த்து எமகண்டம் பாடி வெற்றிபெற்றும் அரசன் நடுநிலை பிறழ்ந்தவனாய் நேரிய முறையில் நில்லாதொழிந்தமையின் அவனுடைய பட்டினத்தை மண்மாரி பெய்யப் பாடி அழித்தனரென்ப. இவருடைய செய்யுட்கள் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கழிபேருவகையளிப்பன வாம். திருவானைக்கா உலா, கடல் விலாசம் முதலியன இவருடைய நூல்களென்பர்.]

[திருமலைராயன் அவையில் அரியணை வளர்ந்து
இடங்கொடுத்தபோது பாடியது.]

314. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து விற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ(டு) என்னைச்
சரியாசனத்து வைத்த தாய்.

(அ - ரை.) கலை - ஆடை. பணி - அணிகலம். அரியாசனத்தில் - அரியணைமீது. இப்பாடல் பிறர் பாடியதாக வேறு நூல்களினுங் காணப்படுகின்றன. (க)

[ஆமணக்குக்கும், யானைக்கும், இருபொருள்.]

315. முத்திருக்குங் கொம்பசைக்கு மூரித்தண் டேந்திவரும்
கொத்திருக்கு நேரே குலைசாய்க்கும்—எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம்.

(அ - ரை.) தேமணக்கும்-இனிய வாசனை வீசும். வரையில்-மலைமீது. ஆமணக்கு - ஆமணக்கு மரம். மூரித்தண்டு - வலிமையான மரக்கிளைகள். ஏந்திவரும் - தாங்கிவரும். கொத்திருக்கும் - பூங்கொத்துக்கள் விளங்கும். (பெரிய யானையானது) முத்திருக்கும் கொம்பசைக்கும் - முத்துக்கள் விளையக் கூடிய தந்தக் கொம்புகளை அசைத்துக்கொண்டு நிற்கும். மூரித் தண்டு ஏந்திவரும்-வலிமையான கட்டைகளைத் துதிக்கையில் தூக்கிக்கொண்டு வரும். கொத்திருக்கும் - அங்குசத்தால் குத்திய வடுக்கள் இருக்கும். குலை - வாழைக்குலை. ஆமணக்கின் கொட்டையை கொட்டை முத்து என்றும் முத்துக்கொட்டை என்றும் உரைப்பது உலகவழக்கு. (உ)

[வைக்கோலுக்கும் யானைக்கும்.]

316. வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்.

(அ - ரை.) செக்கோல - சிவந்த. வாரிக்களத்தடிக்கும் - வயலில் இருந்து எடுக்கப்பட்டு நெற்களத்திலிட்டுத் துவைக்கப்படும். போரிற் சிறந்து பொலிவாகும் - பெரிய குவியலாகிக் குவிக்கப்பட்டு (மலைபோல) உயர்ந்து தோன்றி விளங்கும். மால்யானை - பெரிய யானையானது. களத்து - போர்க் களத்தில். வாரியடிக்கும் - (எதிரியின்) படைகளை நிலத்தில் தாக்கிக் கொல்லும். பொலிவாகும் - நன்கு விளங்கும். (ங)

[பாம்புக்கும் வாழைப் பழத்துக்கும்.]

317. நஞ்சிருக்குந் தோலுரிக்கு நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

(அ - ரை.) விஞ்சுமலர் - மிகுதியான பூக்கள். தேம்பாயும் - தேன்பொழிந்து செல்லும். பாம்பு - பாம்பானது. நஞ்சிருக்கும் - விடத்தையுடையதாய் இருக்கும். தோலுரிக்கும் - சட்டை கழற்றும். நாதர் முடிமேல் இருக்கும் - சிவபெருமானது முடிமீது அணியப்பட்டிருக்கும். வெஞ்சினத்தில் - அது கொடிய சினமாயிருக்கும்போது. பல்பட்டால் - யார் உடம்பின் மேலாவது தன் பல் படுமானால். மீளாது - அதன் விடம் தீராது. (இறப்பை விளைவிக்கும்) வாழைப் பழமானது, நைந்து கனிவாய் இருக்கும் தோல் உரித்து உட்கொள்ளப்படும். பஞ்சாமிர்தமாகக் கலந்து சிவபெருமான் முடிமீது அபிடேகம் செய்யப்படும். மிகுந்த சினமுண்டாக்கும் பசிநேரத்தில் மனிதர்கள் பல்லில் அது படுமானால் அவர்கள் வயிற்றினிற் செல்லுவதன்றி வெளியே துப்பப்படுவதில்லை. (சு)

[பாம்புக்கும், எள்ளுக்கும்.]

318. ஆடிக்குடத் தடையும் ஆடும்போதே யிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற் பிண்ணாக்கு முண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது.

(அ - ரை.) பாம்பு - பாம்பானது. ஆடிக்குடத்தடையும் - படமெடுத்து ஆடிக் குடத்தினுள் புகும். மூடித்திறக்கின் - குடத்திலிட்டு மூடிய பின் அதைத் திறந்து பார்த்தால். முகம் காட்டும் - தனது தலையை எடுத்துக் காட்டும். ஓடிமண்டை பற்றில் - அது ஓடித் தலையில் தீண்டுமானால், பரபரெனும் - பர பரென்ற உணர்ச்சி உண்டாகும். பிள் நாக்கு உண்டாம் - அதற்குப் பிளவுள்ள நாக்கும் உண்டு. எள் - எள்ளானது, செக்கிலே ஆட்டப்பட்டுக் குடத்தில் எடுத்து எடுத்து அடைக்கப்படும். செக்கிலே ஆட்டும்போதே இரைச்சல் ஓசையை உண்டாக்கும். குடத்தில் அசையாமல் வைத்து மூடித்திறந்து பார்த்தால் பார்ப்பவர்களுடைய முகம் அதில் தெரியும். தலையில் ஊன்றித் தேய்க்கப்

பட்டால் குளிர்ச்சியான உணர்ச்சி உண்டாகும். எள்ளுப் பிண்ணாக்கு எண்ணெய் ஆட்டும்போது உண்டாகும். (கு)

[பாம்புக்கும், எலுமிச்சம் பழத்துக்கும்.]

319. பெரிய விடமே சேரும் பித்தர் முடியேறும்
அரியுண்ணும் உப்புமேல் ஆடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பும் எலுமிச்சம் பழம்.

(அ - ரை.) பெரிய விடமே சேரும் - உயிரைக்கொல்லக் கூடிய நஞ்சை உடையதாகும். பித்தர் - பித்தன் என்னும் பேரையுடைய சிவபெருமான். அரியுண்ணும் - காற்றைப் புசிக்கும். உப்பும் - காற்றினாலே உடல் பருக்கும். மேல் ஆடும்- தலைதூக்கி ஆடும். எரிகுணமாம் - சினக்குணமுடையதாகும். எலுமிச்சம் பழம்-எலுமிச்சம்பழமானது. பெரியவர்கள் கையிற் கொடுக்கப்படும். அதன்சாறு சிவபெருமான் முடியின்மீது அபிஷேகஞ் செய்யப்படும். ஊறுகாய்க்காக அது துண்டுதுண்டாக அரியப்படும். உப்பு அதன்மேல் தூவப்படும். அதன் சாறு பட்டால் எரிச்சல் உண்டாகும். (சு)

[முகுந்தனுக்கும், முறத்துக்கும்.]

320. வல்லரியா யுற்றிடலால் மாதர் கையிற் பற்றிடலால்
சொல்லரிய மாப்புடைக்கத் தோன்றுதலால்—வல்லோர்
அகந்தனிலே வாழ்தலால் அன்றுலக ளந்த
முகுந்தனுமே யாகு முறம்.

(அ - ரை.) முகுந்தன்-திருமால். வல்லரியாய் உற்றிடலால்- வலிமையுடைய நரசிம்ம வடிவமாகத் தோன்றியபடியால், மாதர் கையில் பற்றிடலால் - பெண்கள் கையாற் பிணிக்கப்பட்டமையால். சொல்லரிய மாப்புடைக்கத் தோன்றுதலால் - சொல்லுதற்கு அருமையான வலிமையுடைய குவலயா பீடமென்னும் யானையைக் கொல்ல அவதரித்தமையாலும். வல்லோர் அகந்தனிலே வாழ்தலால் - பெரியவர்களுடைய உள்ளத்திலே வீற்றிருத்தலாலும். முறம் - முறமானது, கொழித்தற்குரிய நல்ல கருவியாய் அமைதலாலும் பெண்கள் கையிற் பிடித்துப் பயன் படுத்தப்படுதலாலும் சொல்லுதற்கு அருமையான மாவைத் தெள்ளுவதற்குப் பயன்படுதலாலும். வல்லோர் அகந்தனிலே வாழ்தலால் - பலருடைய வீட்டில் இருப்பதால். (எ)

[திங்களுக்கும், மலைக்கும்]

321. நிலவாய் விளங்குவதால் நீள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று—தலைமேல்
உதித்து வரலால் உயர்மா மதியை
மதிக்கு நிகரா வழுத்து.

(அ-ரை.) நிலவாய் விளங்குதலால்-நிலத்தின்மீது தோன்றி உயர்வாய் விளங்குதலால். நீள்வான் படிந்து - பெரிய கார் மண்டலத்தை அளாவி. சில போது - சில பூக்கள். தலைமேல் உதித்து வரலால்-நிலத்தின்மீது தொடர்ச்சியாகப் பரவி அழகாக விளங்குதலால். மதி - திங்கள். நிலவொளி கொடுப்பதால். நீண்ட விண்ணிற் பொருந்திச் சில காலங்களில் திரிவதால். சென்றுதலைமேல் உதித்து வரலால் நிலத்திற்கு மேலாகத் தோன்றி நமதுதலைக்குமேல் உச்சியில் வருதலால். (அ)

[நாய்க்கும், தேங்காய்க்கும்.]

322. ஓடு மிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது—சேடியே
தீங்கான தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயு நாயுமெனச் செப்பு.

(அ - ரை.) சேடி - தோழி. ஓடும் இருக்கும் - சிரட்டை யோடு கூடியிருக்கும். அதன் உள்வாய் - அதன் உட்பக்கம். வெளுத்திருக்கும் வெண்மையான பருப்போடு கூடியிருக்கும். நாடுங்குலை தனக்கு நாணாது - எல்லாராலும் விரும்பப்படும் தேங்காய் குலைப்பளுவில் நாணாமல் இருக்கும். நாய் - நாயானது. விரைவாக ஓடிச்செல்லும் இளைத்தால் ஓரிடத்தில் இருக்கும் அதன்வாயின் உட்பக்கம் வெண்மையாயிருக்கும். இரைதேடி அதனை விரும்பிச் செல்லும். (கூ)

[மீனுக்கும், பேனுக்கும்.]

323. மன்னீரிலே பிறக்கு மற்றலையி லேமேயும்
பின்னீச்சிற் குத்தும் பெருமையால்—சொன்னேன்கேள்
தேனுந்து சோலைத் திருமலைரா யன்வரையில்
மீனும்பே னுஞ்சரியா மே.

(அ - ரை.) தேனுந்து தேனைக் கொப்பளிக்கின்ற. மன்னீரிலே பிறக்கும் - நிலைபெற்ற நீரிலே (அஃதாவது) நீர்நிலையிலே உண்டாகும். பேன்-பேனானது. மன் ஈரிலே பிறக்கும்-தலையிலே நிலைத்த பேன் முட்டையிலே உண்டாகும். மன் தலையிலே மேயும்-தலைமயிரிலே திரிந்து செல்லும். பின் ஈச்சில் குத்தும் - பிற்பாடு மக்களால் எடுத்து ஈச்சு என்று ஒலியோடு குத்தப்படும். (கO)

[பனைமரத்துக்கும், வேசைக்கும்.]

324. கட்டித் தழுவுதலால் கால்சேர ஏறுதலால்
எட்டிப் பன்னுடை இழுத்தலால்—முட்டப்போய்
ஆசைவாய்க் கள்ளை அருந்துதலால் அப்பனையும்
வேசையென லாமே விரைந்து.

[தென்னமரத்துக்கும், வேசைக்கும்.]

325. பாரத் தலைவிரிக்கும் பன்னுடை மேற்சுற்றும்
சோர இளநீர் சுமந்திருக்கும்—நேரேமேல்
ஏறியிறங்கவே இன்பமாந் தென்னைமரம்
கூறுங் கணிகை யென்றே கொள்.

[வெற்றிலைக்கும், வேசைக்கும்]

326. கொள்ளுகையால் நீரிற் குளிக்கையால் மேலேறிக்
கிள்ளுகையால் கட்டிக் கிடக்கையால்—தெள்ளுபுகழ்ச்
செற்றலரை வென்ற திருமலைரா யன்வரையில்
வெற்றிலையும் வேசையா மே.

(அ - ரை.) தெள்ளுபுகழ் - தெளிவான சீர்த்தியையுடைய. (கக)

[கண்ணாடிக்கும், அரசனுக்கும்.]

327. யாவருக்கும் ரஞ்சனைசெய் தியாவருக்கு மவ்வவராய்ப்
பாவனையாய்த் தீதகலப் பார்த்தலால்—மேவும்
எதிரியைத்தன் உள்ளாக்கி ஏற்ற ரசத்தால்
சதிருறலால் ஆடி யரசாம்.

(அ - ரை.) ஆடி - கண்ணாடி. ரஞ்சனை - களிப்பு. பார்த்தலால் - பார்க்கப்படுவதால். மேவும் எதிரியை - தன்பால் எதிர்ப்பட்டாரை. தன்னுள்ளாக்கி - தன்னுள்ளே தோற்றுவித்து. ஏற்ற ரசத்தால் - தனது பின்பக்கம் பூசிய பாதரசத்தால். சதிர் உறலால் - சிறப்புப் பொருந்துவதாலும். அரசு - அரசன். எல்லாருக்கும் மகிழ்ச்சியுண்டாக்கித் தன்பால் வரும் எல்லாருக்கும் அவரவர் மனதிற்கு ஏற்றபடி நடக்கும் தோற்றமுடையவனாய்க் குறைகள் நீங்கும்படி குடிகளைக் கவனித்தலாலும் தன்னை எதிர்க்கும் பகைவனைத் தனக்குக் கீழ் அடங்கும்படி செய்து அனுபவிக்கும் நவரசப் பொருள்களால் சிறப்பு அடைதலாலும். (கசு)

[கூத்தியாருக்கும், குரங்குக்கும்.]

328. ஒட்டங் கடியதால் உள்ளவரை மேவுதலால்
சேட்டை யெவரிடத்துஞ் செய்தலால்—நாட்டமுடன்
காத்திரத்திற் குட்டியுறக் கட்டுதலால் தெட்டுதலால்
கூத்தியர்க்கு நேரராங் குரங்கு.

(அ - ரை.) ஒட்டம் - ஓடுதல், உதடு. கடி - விரைவு, கடித்தல். உள்ளவரை - பொருள் உள்ளவர்களை, இருக்கிற மலைகள். காத்திரம் - உடல். சேட்டை - குறும்பு. தெட்டுதல் - ஏமாற்றுதல். (கரு)

[குதிரைக்கும், காவிரியாற்றுக்கும்.]

329. ஓடுஞ் சுழிசுத்தம் உண்டாகுந் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும்—நாடறியத்
தேடு புகழான் திருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா மே.

(அ - ரை.) பரி - குதிரை. சுழிச்சுத்தம் உண்டாகும் - குற்றமற்ற சுழிகளை உடையதாகும். துன்னலரைச் சாடும் - எதிரிகளைத் தாக்கும். பரிவாய்த் தலைசாய்க்கும் - அன்பாய்த் தலையைச் சாய்த்துநிற்கும். காவிரியானது, ஓடும் நீரை உடையதாகும், தன்மீது போடப்பட்ட மலர்களைத் தாக்கி இழுத்துச் செல்லும், நிலத்தைக் குழித்தெடுத்து இடங்களைப் பெயர்க்கும். (கசு)

[கீரைப்பாத்திக்கும், குதிரைக்கும்.]

330. கட்டி யடிக்கையால் கான்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால்—முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே.

(அ - ரை.) வண்கிரைப் பாத்தி - வளமாகிய கீரைப்பாத்தி. கட்டி - கீரைத் தண்டுகள் கட்டுகளாகக் கட்டப்பெற்று. அடிக்கையால் - வேரில் உள்ள சேறு போகும்படி அடிக்கப்படுதலாலும். கால் மாறிப் பாய்கையால் - நீர்க்கால்வாயானது அதில் மாறி மாறிச் செல்லுவதாலும். வெட்டி மறிக்கின்ற மேன்மையால் - ஓடையானது வெட்டப்பட்டுத் தண்ணீர் மறிக்கப்படுகின்ற சிறப்புடைமையாலும் முட்டப்போய் மாறித் திரும்புகையால் - கால்வாயில் நீரானது ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் மீளத் திரும்புவதாலும். பரி - குதிரையானது தேரிற் கட்டி அடிக்கப்படுகையாலும், குதித்துப் பாய்வதாலும் எதிரிகளைத் தாக்கிக் கொல்லுகின்ற சிறப்புடைமையாலும் நேரே சென்று முட்டுப்பட்ட இடத்திலே மீளத் திரும்புவதாலும் (கஎ)

[கதவுக்கும், ஆட்டுக்கும்.]

331. செய்யுட் கிடைமறிக்குஞ் சேர்பலகை யிட்டுமுட்டும்
ஐயமற மேற்று ளடர்க்குமே—துய்யநிலை
தேடும் புகழ்சேர் திருமலைரா யன்வரையில்
ஆடுங் கதவு நிக ராம்.

(அ - ரை.) துய்யநிலை தேடும்புகழ் சேர் - சுத்தமான தன்மையை நாடுகின்ற புகழையுடைய. செய்யுள் - வயலில். கிடைமறிக்கும் - மந்தையாகக் கிடக்கும் சேர் பலகையிட்டு முட்டும்-பலருடைய கைகளால் தடுக்கப்பட்டபோது தலையினால் முட்டும். ஐயமற - திண்ணமாக. மேற்று ஆள் - மேல் வந்த ஆள்களை. அடர்க்கும் - தாக்கும். கதவு - கதவானது: வீட்டின் உள்ளிடத்தில் தடுத்து மூடி நிற்கும் - பலகைகள் சேர்த்துச் செய்யப்பட்டு மூடுந் தன்மையதாகும். திண்ணமாக மூடுவதற்கு அதன் பின்புறமுள்ள தாழ்ப்பாள் பிணிப்பாகத் தடுக்கும். ஆடுகளில் முரடுகளாகவுள்ளவை பழகாதவர்களை முட்டத் தொடங்குவது இயற்கை. (கஅ)

[குதிரைக்கும், ஆட்டுக்கும்.]

332. கொம்பிலையே தீனிதின்னுங் கொண்டதன்மேல் வெட்டுதலால்
அம்புவியி லன்னடைய தாதலால்—உம்பர்களும்
தேடுநற் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆடுங் குதிரையு நேராம்.

(அ-ரை.) கொண்டு அதன்மேல் வெட்டுதலான் - தீனியை உட்கொண்டு அதனை வாயில் வைத்து அசைபோடும். அம்புவியில்- அழகிய உலகில். அன்னடையது - ஒன்றைப் பின் பற்றி அது போல மற்றொன்று நடக்குந் தன்மையுடையது. குதிரை-குதிரை யானது: கொம்பு இல்லாததாகும் தனக்கு வைக்கும் கொள்ளு முதலிய தீனியை உட்கொள்ளும். வாயில் கொண்ட கடி வாளத்தைக் கடிக்குந் தன்மையுடையது. அழகிய உலகத்தில் விரைவாகச் செல்லும் நல்ல கதியை யுடையது. (கசு)

[துப்பாக்கிக்கும், ஓலைச் சுருளுக்கும்]

333. ஆணிவரையுறலா லானகுறிப் பேதரலால்
தோணக் கருமருந்தைத் தோய்த்திடலால்—நீணிலத்தில்
செப்பார்க் குதவாத் திருமலைரா யன்வரையில்
துப்பாக்கி ஓலைச் சுருள்.

(அ - ரை.) ஆணிவரையுறலால் - ஆணியாலே செப்பஞ் செய்து அமைக்கப்படுதலாலும். ஆனகுறிப்பே தரலால் - குறிப் பிட்ட குறியின்மீது குண்டினைச் செலுத்தலாலும், தோணக்கரு மருந்தைத் தோய்த்திடலால் - தன் தொழில் தோன்றும் பொருட்டுக் கருமையான வெடிமருந்து இடப்படுதலாலும். ஓலைச்சுருள் - ஓலைச் சுருளானது: எழுத்தாணியால் எழுதப் படுதலாலும் குறிப்பிட்ட கருத்தை தெரிவித்தலாலும் தன் எழுத்துக்கள் விளங்க மை தீட்டப்படுதலாலும். (உ0)

[வானவில்லுக்கும், திருமாலுக்கும், வெற்றிலைக்கும்.]

334. நீரி லுளவால் நிறம்பச்சை யால்திருவால்
பாரில் பகைதீர்க்கும் பான்மையால்—சாருமனுப்
பல்வினையை மாற்றுதலால் பாரீர் பெருவான
வில்விண்டு நேர்வெற் றிலை.

(அ - ரை.) நீரில் உளவால் - முகில் நீரில் தோன்றுவது. நிறம் பச்சையால் - பச்சை நிறத்தையும் உடையது. திருவால் - மழைபெய்வதற்கு மங்கலமான அடையாளமானது. பாரில் பகை தீர்க்கும் பான்மையால் - உலகத்தில் மழைபொழியச்செய்து வறுமை நோயைத் தீர்க்கும் தன்மையுடையது. சாருமனுப் பல் வினையை மாற்றுதலால் - மனிதர்கள் சம்பந்தமாய்ச் செய்யப்படும் பல முயற்சிகளையும் செய்விப்பது. விண்டு-திருமால்: பாற்கடலில் பள்ளிகொள்வார் பச்சை நிறம் உடையவர்; திருமகள் தேவியாக உடையவர். உலகத்திலுள்ள அசுரர்களை யொழித்துப் பகை தீர்க்கும் திறமையுடையவர். மக்களைச் சார்ந்த பலவினையையும் ஒழிக்கின்றவர். வெற்றிலையானது: நீரில் நனைத்துப் பயன் படுத்தப்படுவது பச்சை நிறம் உடையது; மங்கலப் பொருளாய் உள்ளது; உலகத்தில் பகை தீர்த்துச் சமாதான அடையாளமாய் உள்ளது. மக்களைச் சார்ந்த பல் நோயை ஒழிப்பது. (உக)

[பூசணிக்காய்க்கும், பரமசிவனுக்கும்.]

335. அடிநந்தி சேர்தலால் ஆகம் வெளுத்துக்
கொடியுமொரு பக்கத்திற் கொண்டு—வடிவுடைய
மாசுணத்தைப் பூண்டு வளைத்தழும்பு பெற்றதனுல்
பூசுணிக்காய் ஈசனெனப் போற்று.

(அ - ரை.) அடிநந்தி சேர்தலால் - அடியிற் காம்பு உடையது. ஆகம் வெளுத்து-மேற்பாகம் முற்றிலும் வெண்மை நிறம் உடையதாய். கொடியும் ஒரு பக்கத்திற் கொண்டு - ஒரு பக்கத்தில் கொடிபடரப் பெற்று. வடிவுடைய மாசுணத்தைப் பூண்டு - காயைக் கெடாது பேணும் பளபளப்பான சாம்பல் பூசப்பட்டு. வளைத்தழும்பு பெற்றதனுல் - தான் கிடக்கும் பொங்தின் அடையாளத்தைப் பெற்றுள்ளது. பரமசிவன் - சிவ பெருமான். திருவடியைக் காளையின்மீது வைத்திருப்பவர் பூசிய திருநீற்றினுல் திருமேனி வெளுக்கப் பெற்றவர் கொடிபோல்பவ ராகிய உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவர். பருத்த பாம்பை அணியாக அணிந்து உமையம்மையின் வளையல் தழும்பு திருமேனியில் பதியப் பெற்றவர். (உஉ)

336. பலகை யிடுமுள்ளே பருமாணி தைக்கும்
சலமிறைக்கும் ஆளேறித் தள்ளும்—உலகறிய
ஓடமு மொன்றே உலகநாதன் பெண்டீர்
மாடமு மொன்றே மதி.

337. இட்டிட்டு வாங்குதலால் இன்பவெள்ளை தோன்றுதலால்
மட்டிட்டு மூடி மறைத்தலால்—முட்டத்
தெருண்டோர்கள் போற்றுந் திருமலைரா யன்சீர்க்
கரண்டகமும் பெண்குறியுங் காண்.

338. அரகர திருச்சிற் றம்பலவா னுவந்
தரரூ பமகேச சிதம்—பரதே
வசிதம் பரதே வசிதம் பரதே
வசிதம் பரதே வனே.

(அ - ரை.) அரகர - பாவத்தை அழிக்கின்றவனே. பாசத்தை ஒழிக்கின்றவனே. திருச்சிற்றம்பலவாணு - வீடு தரும் ஞானசபையில் வாழ்கின்றவனே. அந்தரரூப-சிதாகாய வடிவுடையவனே. மகேச - பெருமுதல்வனே. சிதம்பர தேவ - சிதம்பரத்தில் வாழ்கின்ற தெய்வமே. சிதம்பரதேவ-ஞான ஆடையை அணிந்த கடவுளே. சிதம்பரதேவ - ஞான ஆகாசத்தில் நடஞ் செய்பவனே. சிதம்பரதேவனே - சிதம்பரன் என்னும் திருப்பெயருடைய பெருமானே. (உரு)

339. எங்கண் மடத்துக் கெரிகரும்பு வெட்டுதற்குப்
புங்கங்கொம் பங்கிங்கொன் புதுபுளி—யங்கொம்பங்
கிங்கொன் பதுவெட்டி நறுக்கிய வெள்வேலங்
கொம்பங் கிங்கொன் பது.

(அ - ரை) எரிகரும்பு - விறகு. அங்கு இங்கு - அங்கும் இங்குமாய்த் தறிக்கப்பட்ட. புங்கங் கொம்பு ஒன்பது - புங்க மரத்தின் கிளைகள் ஒன்பதும். அங்கு இங்கு புளியங் கொம்பு ஒன்பது - இருமுனையிலும் தறிக்கப்பட்ட புளிய மரத்தின்கட்டை ஒன்பதும். அங்கு இங்கு வெட்டி நறுக்கிய இருமுனையிலும் தறித்துச் செய்த. வெள்வேலங் கொம்பு ஒன்பது - வெள்ளிய வேலமரத்தின் கொம்பு ஒன்பதும். (உசு)

[எழுத்தாணி என்று எடுத்துச் சூரிக்கத்தி என்று முடித்தது.]

340. எழுத்தா ணிதுபெண் ணிதனைமுனி காதில்
வழுத்தா ரணைக்குகனை வாதுக்—கழைத்ததுவும்
மாரன்கை வின்மான்முன் காத்ததுவு நன்றருகுந்
தீரமுள்ள சூரிக் கத்தி.

(அ - ரை.) எழுத்து ஆண் இது பெண் இது - எழுத்துக்களுள் ஆண் எழுத்து இன்னது பெண் எழுத்து இன்னது என்று. அனை முனி காதில் - தமிழுக்கு அன்னை போன்ற குறுமுனிவன் திருச் செவியில். ஆரணக் குகனை - மறை முதல்வனை முருகப் பெருமானை. நன்றாகத் தீரமுள்ள சூர் - நலமிக்க வீரமுடைய சூரபன்மனே. மாரன்கை மன்மதன் கையிலுள்ள வில்லானது. இக்கு - கரும்பாகும். மால்முன் காத்ததுவும் - பெருமாள் முற்காலத்தில் காப்பாற்றியதும். அத்தி - யானையே. (உஎ)

[ராமா ராமா கோவிந்தா வேங்கடவா நாராயணா என்று பாடியது.]

341. இந்தோ திலகநுதல் ராமரா மாவனசக்
கொந்தோ களபமுலை கோவிந்தா—சந்ததமும்
வேலோ இணைவிழிகள் வேங்கடவா நல்லவயி(று)
ஆலோகா னாராய ணா.

(அ - ரை.) திலகநுதல் - பொட்டணிந்த நெற்றியானது. இந்தோ - பிறைத் திங்களோ. வனசக்கொந்தோ - தாமரைப் பூங்கொத்தோ. சந்ததமும் - எப்போதும். ஆலோ-ஆல் இலையோ. (உஅ)

[ஒன்றுமுதல் பதினெட்டு வரைவரப் பாடியது.]

342. ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு ஏழெட்டு
ஒன்பதுபத் துப்பதி னொன்று—பன்னி
ரண்டுபதின் மூன்றுபதி னான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழ்பதி னெட்டு.

(அ - ரை.) அடையின்றி அமைந்திருக்கும் அழகைக் காண்க (உகூ)

[ஐந்து டு வரப் பாடியது.]

343. ஒ கா மா வி தோ உரைப்பன் டு டு டு டு டு
நாகார் குடந்தை நகர்க்கதிபர்—வாகாய்
எடுப்பர் நடமிடுவ ரேறுவ ரன்பர்க்குக்
கொடுப்பர் அணிவர் குழைக்கு.

(அ - ரை.) வாகாய் - அழகாக. ஓடு எடுப்பர் - திரு ஓட்டினை எடுத்து ஐயம் எடுப்பர். காடு நடம் இடுவர் - சுடுகாட்டில் கூத்து ஆடுவர். மாடு ஏறுவர் - காளைமீது எழுந்தருளுவர். வீடு அன்பருக்குக் கொடுப்பர் - வீட்டின்பத்தைப் பக்தர்களுக்கு அளிப்பார். முதல் வரியின் இறுதியில் உள்ள ஐந்து டு வையும் ஓ கா. மா. வீ. தோ. என்பவற்றோடு தனித்தனி ஒட்டுக. (௩0)

[குடத்திலே கங்கை யடங்குமெனப் பாடியது.]

344. விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கை யடங்கும்.

(அ - ரை.) வெற்புக் கடங்காமல் - இமயமலையில் அடங்கி நில்லாமல். மண்ணுக்கடங்காமல் - நிலம் தாங்காதபடி. (௩க)

[பச்சைவடம் பாகுசேலை சோமன என்று பாடியது.]

345. மாயன் துயின்றதுவும் பாமலராள் சொல்லதுவும்
ஏய குருந்திற்கொண் டேகியதும்—தூயை
இடப்பாகன் சென்னியின்மே லேறியதும் பச்சை
வடப்பாகு சேலைசோ மன்.

(அ - ரை.) பச்சை வடம் - பசிய நிறமுள்ள ஆல். பாகு சர்க்கரை - பாகுபோன்ற இனிமையுடையது. சேலை - கோபிகைகளின் புடைவை. தூயை - புனித வடிவான உமையம்மை. சோமன் - திங்கள். (௩உ)

[கின்னரி வாசிக்குங் கிளியெனப் பாடியது.]

346. ஆடல் புரிந்தானென்று மந்நாளிலே மூவர்
பாடல் உகந்தானென்றும் பான்மையினல்—கூடலிலே
நன்னரி வாசிக்கு நடைபயிற்றி னனென்றும்
கின்னரி வாசிக்குங் கிளி.

(அ - ரை.) பான்மையினல் - தகுதிபற்றி. கூடலில் - மதுரையில். நரிவாசிக்கு - நரிக்குதிரைகளுக்கு. நடை பயிற்றி

ஞன் - கதிகள் பழக்குவித்தான். கிளி - கிளியானது அல்லது கிளிபோன்ற மொழியாள். கின்னரி வாசிக்கும் - வீணை வாசிப்பாள். (ருரு)

[பொன்னுவரை யிலைகாய் பூவென்று பாடியது.]

347. உடுத்ததுவு மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னுல்
எடுத்ததுவும் பள்ளிக் கியையப்—படுத்ததுவும்
அந்நாள் எறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும்
பொன்னு வரையிலை காய் பூ.

(அ - ரை.) பொன் - பீதாம்பரம். ஆ - பசு. உம்பர் கோன் - இந்திரன். வரை - கோவர்த்தனமலை. இலை - ஆல் இலை. காய் - விளாங்காய். அன்பின் இரந்ததுவும் - அன்பரின் பொருட்டு மாவலிபாற் சென்று கேட்டதுவும். பூ - நிலம். (ருச)

[இதுவுமது.]

348. தோய்ந்தான் மேய்த்தான் குடையாத் தூக்கினுன் மேன்மேலா
சாய்ந்தான் எறிந்தான்பின் சாப்பிட்டான்—ஆய்ந்து சொலும்
மன்னு வரத்தில்வரு மால்சாமி நாதாகேள்
பொன்னு வரையிலை காய் பூ.

(அ - ரை.) மால் - திருமால். பொன் - திருமகளை. தோய்ந்தான் - கலந்து அநுபவித்தார். ஆ - பசு. வரை - கோவர்த்தன மலை. பூ - உலகம். (ருரு)

[செங்கழுநீர்க் கிழங்கென்று பாடியது.]

349. வாதமண ரேறியது மாயன் துயின்றதுவும்
ஆதிதடுத் தாட்கொண்ட அவ்வுருவும்—சீதரனுர்
தாள்கொண் டளந்ததுவுந் தண்கச்சிக் காவலா
கேள்செங் கழுநீர்க் கிழங்கு.

(அ - ரை.) செங்கழு - நேராக நாட்டப்பட்ட கழுக்கள். ஆதி தடுத்தாட்கொண்ட அவ்வுரு - முதல்வனுகிய சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனுரைத் தடுத்தாட் கொள்ளுவதற்கு எடுத்துவந்த வடிவம். கிழம் - முதுமை வடிவமாகும். சீதரனுர் - திருமால். தாள்கொண்டு - திருவடியைக்கொண்டு. கு-நிலம். (ருசு)

[நா நீ நூ நே என்று பாடியது.]

350. அரையின் முடியில் அணிமார்பில் நெஞ்சில்
தெரிவை யிடத்தமர்ந்தான் சேவை—புரையறவே
மானூர் விழியீர் மலரண வொற்றிற்கும்
ஆனலா நா நீ நூ நே.

(அ - ரை.) மானுர் விழியீர் - மான்போன்ற பார்வையை யுடையவர்களே! நேம் - நேயத்தை. அஃதாவது அடியவர்களுடைய அன்பை. அமர்ந்தான் - விரும்பினுன். அணி - அழகிய. நூல் - பூணூலில் அணிந்தவன். முடியில் - தனது திருமுடியின் மீது. நீர் - கங்கையை. நாண் - (பாம்பை.) அரை நாணுக அணிந்தவன். இடத்து - இடப்பாகத்தில் வைத்துக்கொண்டவன். புரையறவே - குற்றம் நீங்கவே. சேவை - காளைமீது அமர்ந்தான் - வீற்றிருந்தவன்.

கடைசி அடியிலுள்ள ஒவ்வோர் எழுத்தோடும் மூன்ருவது அடியிலுள்ள மெய்யெழுத்தை எதிர்நிரல் நிறையாகச் சேர்ப்பதால் நேம், நூல், நீர், நாண், என்ற சொற்களாதலை அறிக. (௩௭)

[ஈயேற மலை குலுங்கப் பாடியது.]

351. வாரணங்கள் எட்டும் மகமேரு வுங்கடலும்
தாரணியும் எல்லாஞ் சலித்தனவால்—நாரணனைப்
பண்வா இடைச்சி பருமத்தி னுல்அடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது.

(அ - ரை.) வாரணங்கள் எட்டும் - எட்டுத் திக்கு யானைகளும் கடலும். தாரணியும் - நிலமும். சலித்தன - குலுங்கி வருத்தமுற்றன. (௩௮)

[கடுங்காற்று மழைகாட்டும் கடுநட்புப் பகைகாட்டும் எனப் பாடியது.]

352. நீரோ பிறவா நெறிகாட்டி யாரெமக்கு
நீரோ சமுசை நிலையிட்டீர்—நீரேயிவ்
விங்களமேன் செய்தீர் விடுங்கடுங்காற் றும்மழைகாட்
டுங்கடுநட் புப்பகைகாட் டும்.

(அ - ரை.) பிறவா நெறி காட்டியார் - பிறவாத வீட்டு நெறியைக் காட்டக் கூடியவர்கள். சமுசை நிலைநாட்டினீர் - சோதனைக் கேள்வியை அமைத்து நிலைநாட்டக் கூடியவர்கள். இவ்விங்களம் - வேறுபாடு. கடு நட்பு - அளவுக்கு நெருங்கிய நட்பு. (௩௧)

[விநாயகருக்கும் முருகனுக்கும் பரமசிவனுக்குஞ் சிலேடை.]

353. சென்னிமுக மாறுளதாற் சேர்கரமுன் னுலுகையால்
இந்நிலத்தில் கோடொன் றிருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுத லானும் கணபதியுஞ் செவ்வேளும்
எண்ணரனு நேராவ ரே.

(அ - ரை.) முன்சேர் கரம்-முன்னே பொருந்திய துதிக்கை. நாலுகையால் - தொங்குதலால். மன்னு குளக்கண் உறுதலானும் - வெல்லம் நிலைத்த நிவேதனமாக இருத்தலாலும். செவ்வேள்-முருகப் பெருமானுக்கு. தலையில் திருமுகம் ஆறு உள்ளன ஆனதாலும். அமைந்த திருக்கைகள் பன்னிரண்டாதலாலும், கொம்புபோன்ற வள்ளி நாயகி இருத்தலால். குளக்கண்-சரவணப் பொய்கையில். சிவபெருமானுக்கு சென்னிமுகம் ஆறு உளதால் - தலையிடத்தே கங்கையாறு இருப்பதாலும், விரும்பப்படும் திருக் கைகள் நாலு உள்ளன வாதலானும், கொம்பையுடைய காளை யொன்று ஊர்தியாய் இருத்தலானும் நெற்றியிலே நிலைபெற்ற திருக்கண் இருப்பதாலும் கணபதியும் முருகப்பெருமானும் எல்லாராலும் தியானிக்கப்படும் சிவபெருமானுக்குச் சமமாவார்கள். (௪0)

[மும்மூர்த்திகளின் உணவு முதலியன.]

354. சிறுவ னளைபயறு செந்நெற் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூல்—பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றுழம் பூவே கறி.

(அ - ரை.) வேதன் அரன் மாலுக்கு - அயன் அரன் அரி என்பவர்களுக்கு. பயறு அளை சிறுவன்கறி - சிறுபயற்றின் சுண்டலும் வெண்ணெயும் சிறுத்தொண்டர் இட்ட பிள்ளை ஊனும் கறியாகும். செந்நெல் கடுகு - செந்நெல்லும் பூமியும் விடமும் உணவாகும். தண்டு திகிரி மறி - தண்டாயுதமும் சக்கரமும் மானும் திருக்கைகளில் தரிக்கப்படும். நூல் மணி பொறியரவம்-

பூணூலும் கவுத்துவ மணியும் புள்ளிகளுடைய பாம்பும் மார்பில் அணியப்படும். அன்னம் புள் வெற்றேறு - அன்ன ஊர்தியும் கருட ஊர்தியும் புனிதமான காளை ஊர்தியும் உரியன. பூ தாழும் கல் - தாமரைப் பூவும் ஆழமான நீராகிய கடலும் மலையும் இருப்பிடங்களாம். (சுக)

[இராசியை அடை சொல்லில்லாமற் பாடியது.]

355 பகருங்கால் மேடமிட பம்மிதுனங் கர்க்க
டகஞ்சிங்கங் கன்னிதுலாம் விர்ச்—சிகந்த
நுசுமகரங் கும்பமீ னப்பன்னி ரண்டும்
வசையறுமி ராசி வளம்.

(அ - ரை.) பகருங்கால் - சொல்லுமிடத்து. மேடம் இடபம் முதலிய பன்னிரண்டும். வசையறு - குற்றமற்ற. இராசி வளம்- இராசித் தொகுதியாகும். (சுஉ)

[தை மாசி பங்குனி மாதமென்று பாடியது.]

356. பாணர்க்குச் சொல்லுவதும் பைம்புனலை மூடுவதும்
தானு உரித்ததுவுஞ் சக்கரத்தோன்—ஊணதுவும்
எம்மானை யேத்துவது மீசனிடத் துஞ்சிரத்தும்
தைம்மாசி பங்குனிமா தம்.

(அ - ரை.) பாணர்க்குச் சொல்லுவது - தையற்காரர்களுக்குச் சொல்லப்படுவது. தை - (துணியை)த் தையென்பதே. பைம்புனலை மூடுவதும் - பசுமையான நீரை மூடுவதும். மாசு - பாசியாகிய அழுக்கே. தானு உரித்ததுவும் - சிவபெருமான் உரித்துப் போர்த்துக்கொண்டது. இபம் - (வேள்வியில் வந்த) யானையே. சக்கரத்தோன் ஊணதுவும் - திருமாலுக்கு உணவாவது. கு - பூமி. எம்மானை யேத்துவதும் - எம்பெருமானை வழிபடுவது. உனி - மனத்தில் எண்ணி. ஈசனிடத்தும்-ஈசன் இடப்பாகத்திருப்பது. மாது - உமையம்மை. (சுங)

[சிதம்பரத்தில் இருக்கும் சின்னங்களைப் பாடியது.]

357. ஞான சபைக னகசபைசிற் றம்பலம்பே
ரானந்தக் கூடந் திருமூலட்—டானம்பே
ரம்பலம்பஞ் சாவரண நாற்கோபு ரம்பொன்செய்
கம்பமண்ட பஞ்சிவகங் கை.

(அ - ரை.) ஞானசபை - சிற்சபை. [இதில் கூத்தப் பெருமான் வீற்றிருப்பது.] கனகசபை - பொன்னம்பலம். [சிற்சபைக்கு முன்னுல் இருப்பது.] சிற்றம்பலம் - நுட்பமாகிய அம்பலம் [இதில் கூத்தப் பெருமான் அருவாய் இருப்பது.] பேர் ஆனந்தக்கூடம் - பேரின்பசபை. [இதில் கூத்தப் பெருமான் ஊர்த்துவ தாண்டவஞ் செய்வது.] திருமூலட்டானம் - திருமூலத்தானம் (இதில் சிவலிங்கப் பெருமான் வீற்றிருப்பது.) பேர் அம்பலம் - தேவசபை - இது தேவர்கள் நடராசப் பெருமானைத் துதித்து வணங்கும் இடம்.) பஞ்சாவரணம் - ஐந்து பிராகாரம். நாற்கோபுரம்-நாற்றிசையிலுள்ள நான்கு கோபுரம். பொன்செய்-அழகு செய்கின்ற. கம்பமண்டபம் - ஆயிரக்கால் மண்டபம். சிவகங்கை - சிவகங்கையென்னும் திருக்குளத் தீர்த்தம் என்பன. (சச)

[திருவாரூர்ச் சின்னங்களைப் பாடியது.]

358. சங்குதீர்த் தந்திருச் சாளரவா யில்வீர
சிங்காச னந்திருவந் திக்காப்புப்—பங்குனிமா
தத்திருநாள் தீர்த்தம் திருவினு தன்கோயில்
உத்தரபா கந்திருவா ரூர்.

(அ-ரை.) வீரசிங்காசனம் - தியாகராயப் பெருமான் வீற்றிருக்கும் அரசிருக்கை. திருவந்திக்காப்பு - அந்தி மாலையில் வணங்கப்படும் திருக்காப்பு வடிவம். திருவின் தீர்த்தம் - கமலாலயம் என்னும் திருக்குளத் தீர்த்தம். உத்தரபாதம் நாதன் கோயில் - அதற்கு வடபாகத்திலுள்ள சிவபெருமான் திருக்கோயில். (சடு)

[கேட்ட சமிகைக்கு அப்பா என்று முன்னும், யார்க்குமினிது என்று பின்னுங் கூட்டச் சொன்னது.]

359. அப்பா குமரகோட் டக்கீரை செவ்விலிமேட்
டுப்பாகற் காய்பருத் திக்குளநீர்—செப்புவா
சற்காற்றுக் கம்பத் தடியிற் றவங்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்கு மினிது.

(அ - ரை.) குமரகோட்டக் கீரை - குமரகோட்டத்தின் பக்கத்தில் பயிர் செய்யப்படும் கீரை. செவ்விலி மேட்டுப் பாகற் காய் - செவிலிமேடு என்னும் கிராமத்திற் பயிர் செய்கின்ற

பாகற்காய். பருத்திக் குழிநீர் - திருப்பருத்திக் குன்றத்தின் அருகிலுள்ள முழுகுதற்குரிய ஆற்றுநீர். கருமாறிப் பாய்ச்சல் - கருமாரி என்பதன் நீர்ப்பாய்ச்சல். (சசு)

[பாதி வெண்பாவில் திருமால் அவதாரம் பத்தும் சொன்னது.]

360. மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் சன்மம் எடுக்கவா—மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய்

(அ - ரை.) மச்சா - மீன் அவதாரம் எடுத்தவா. கூர்மா - ஆமை அவதாரம் எடுத்தவா. கோலா - பன்றி வடிவெடுத்தவா. சிங்கா - நரசிங்க அவதாரம் எடுத்தவா. வாமா - வாமனு. ராமா- பரசுராமா. ராமா - தசரத ராமா. ராமா - பலராமா. கோபாலா- கண்ணு. மா ஆவாய் - (இனிக் கலியுகத்திலே) குதிரையாய் அவதரிப்பாய். (சஎ)

[கும்பகோணத்தின் சின்னங்களைப் பாடியது.]

361. திருக்கு டந்தையா திருப்பேசர் செந்தா
மரைக்குளங் கங்கை மகங்கா—விரிக்கரையின்
ஓரங்கீழ்க் காட்டங்கா ரோணமங்கை நாயகியார்
சாரங் கபாணி தலம்.

(அ - ரை.) கங்கை மகம் - கங்கை வந்து கூடும் மகாமகக் குளம். காவிரி கரையின் ஓரம் - காவிரிக் கரையின் சார்பிலுள்ள. கீழ்க் கோட்டம் - குடந்தைக் கீழ்க் கோட்டம் என்னும் திருப் பதி. (சஅ)

[மன்னென் றெடுத்து மலுக்கென்று முடித்தது.]

362. *மன்னுதிரு வண்ணு மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னுந் தலைச்செளளம் பண்ணுவதேன்—மின்னின்
இளைத்த இடைமாதர் இவன் குடுமிபற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.

---

* இஃது இரட்டையர் பாட்டாகவும் வழங்கும்.

(அ - ரை.) மன்னு - நிலைபெற்ற பன்னு - சிறப்பாகப் பேசும்படி. மின்னின் இடை - மின்னலைப்போன்ற இடை. (சுகூ)

[சோ கா மா ஏ வா தா வென்று பாடியது.]

363. சோ கா மா ஏ வா தா சொல்லின் மனைக் கூட்டியுமை
பாகார்ந்த தில்லைப் பரமேசர்—வாகாய்த்
தரித்தார் எரித்தார் தறித்தார் உதைத்தார்
உரித்தார் கணைபடைத்தார் ஊர்க்கு.

(அ - ரை.) வாகாய் - அழகாக. சோமன் - சந்திரன். காமன் - மன்மதன். மாமன் - மாமனாகிய தக்கன். வாமன் - யானை. தாமன் - நாராயணன். கணை படைத்தார் - திரிபுரம் எரிக்க அம்பாய்க்கொண்டார். (கூO)

[கொட்டைப் பாக்கென் றெடுத்துக் களிப்பாக் கென்று முடித்தது.]

364. கொட்டைப்பாக் கும்மொருகன் கூடையைப்பாக் கும்படியில்
பிட்டைப் பார்க்கும்பாகப் பெண்பார்க்கும்—முட்டநெஞ்சே
ஆரணனு நாரணனும் ஆதிமறை யுந்தேடும்
காரணனைக் கண்டுகளிப் பாக்கு.

(அ - ரை.) காரணன் - எப்பொருட்குங் காரணமான சிவபெருமான் (மதுரையிலே மண்சுமக்கச் சென்ற காலை) கொட்டைப் பாக்கும் வேலை வாங்குகின்றவர்கள் அடிக்குங் கொட்டைப் பார்க்கும். பிட்டைப் பார்க்கும் - (பிட்டு வாணிச்சி கூலியாகக் கொடுத்த உதிர்ந்த பிட்டினைப் பார்க்கும்.) (கூக)

[செருப்பென் றெடுத்து விளக்குமாறென்று முடித்தது.]

365. செருப்புக்கு வீரர்களைச் சென்றுழக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகனைப் புல்ல—மருப்புக்குத்
தண்டேன் பொழிந்ததிருத் தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே விளக்கு மாறே.

(அ - ரை.) செருபுக்கு - போர்க்களத்திற் புகுந்து - சென் றுழக்கும் - போய்த் துன்புறுத்தும். பொருப்புக்கு நாயகனை -

மலைக்குத் தலைவனாகிய முருகப்பெருமானை. புல்ல - தழுவுவதற்கு. ஆறு - வழியை. மரு புக்கு - வாசனை பொருந்தி. விளக்கும் - தெளிவாகக் காட்டும். (கூஉ)

[கரியென் றெடுத்து உமியென்று முடித்தது.]

366. கரியதனையே உரித்த கையா வளையேந்
தரியயற்கு மெட்டாத ஐயா—பரிவாக
அண்டரெல்லாங் கூடி அமுதங் கடைந்தபொழு(து)
உண்டநஞ்சை இங்கே உமி.

(அ - ரை.) கரி - யானை. வளையேந்து - சங்கை யேந்திய. எட்டாத ஐயா - அடிமுடி காணமுடியாத ஐயனே. அண்டரெல்லாங்கூடி தேவர்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து. இங்கே உமி - இவிடத்தில் துப்புவாயாக. (கூ௩)

[இதுவுமது.]

367. கரிக்காய் பொரித்தாள் கன்னிக்காயைத் தீய்த்தாள்
பரிக்காயைப் பச்சடியாய்ப் பண்ணுள்—உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினுள் அத்தைமகள்
உப்புக் காண் சிச்சி உமி.

(அ - ரை.) கரிக்காய் - அத்திக்காய். கன்னிக்காய் - வாழைக்காய். பரிக்காய் - மாங்காய். அப்பைக்காய் - அழகிய கத்தரிக்காய். (கூ௪)

368. கூதிக்கட் டேழுங் குலைந்து நடுநடுங்கிப்
பூதிக்கொப் பாகவன்றே போய்விடுமே—ஆதி
நரக்காட் டகவரியை நற்சரப மாகிச்
சுருக்கா விடினஞ் சுணி.

(அ - ரை.) நஞ்சு உணி - ஆலகால விடத்தை உண்டவனாகிய ஆதி முதல்வன். நரவரியை - நரசிங்கத்தை. நற்சரபமாகி - வலிமையுள்ள சிம்புட் பறவையாகி. சுருக்காவிடின் - அடக்காவிட்டால். கூதிக்கு எட்டு - பூமியின் திக்கெட்டும். ஏழும் - ஏழு உலகங்களும். பூதிக்கு - புழுதிக்கு. (கூ௫)

[சீத்துப் பூத்தென்று பாடியது.]

369. அப்பூருஞ் செஞ்சடைமேல் அம்புலியைப் பார்த்துப்பார்த்(து)
எப்போதுஞ் சீத்துப்பூத் தென்னவே—முப்போதும்
ஆலங் காட்டாநிற்கும் வாயங்காக் காநிற்கும்
ஆலங் காட் டான்பூண் அரா.

(அ - ரை.) பூண் - அணிகின்ற. அரா - பாம்பானது. அப்பூரும் - கங்கை செல்லுகின்ற. சீத்துப் பூத்து என்னவே - சீத்துப் பூத்து என்று இரைவதுடன். அங்காக்கா நிற்கும் - வாயைத் திறந்துகொண்டு இருக்கும். (ருசு)

[பாற்கடலிற் செந்தூளெழும்பப் பாடியது.]

370. சுத்தபாற் கடலின் நடுவினில் தூளி
தோன்றிய அதிசய மதுகேள்
மத்தகக் கரியை உரித்தவன் மீது
மதன்பொரு தழிந்திடு மாற்றம்
வித்தகக் கமலை செவியுறக் கேட்டாள்
விழுந்துநொந் தயர்ந்தழு தேங்கிக்
கைத்தல மலரால் மார்புறப் புடைத்தாள்
எழுந்தது கலவையின் செந்தூள்.

(அ - ரை.) மத்தகக் கரியை உரித்தவன் - சிவபெருமான். மதன் - மன்மதன். வித்தகக் கமலை - அறிவு மிக்க திருமகள். கலவையின் செந்தூள் - காய்ந்த சந்தனக் குழம்பின் செந்நிற மான துகள்கள். (ருஎ)

[என்னையிடுக்கடி பாயைச் சுருட்டடி ஏகடியம்பலத்தே என்பதைக் கட்டளைக் கலித்துறையாகப் பாடியது.]

371. தடக்கட லிற்பள்ளி கொள்வோம் அதனைநற் சங்கரனுர்
அடற்புலிக் குட்டிக் களித்தன ராமது கேட்டு நெஞ்சில்
நடுக்கம்வந் துற்றது கைகா லெழாநளி னத்தியென்னை
இடுக்கடி பாயைச் சுருட்டடி யேகடி அம்பலத்தே.

(அ - ரை.) தடக்கடலில் - பெரிய பாற்கடலில். நற்சங்கரனுர் - நல்வரந்தரும் சிவபெருமானுர். அடற்புலிக் குட்டிக்கு -

வலிமையுடைய வியாக்கிரபாத முனிவன் புதல்வனாகிய உபமந்ய முனிவனுக்கு. நளினத்தி - தாமரைப் பூவிலுறையுந் தேவி. என்னை இடுக்கடி - எனக்குத் தாங்கலாகப் பற்றிக்கொள். (ருஅ)

[திருமலைராயன் வாளைப் புகழ்ந்து பாடியது.]

372. செற்றலரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்—மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவா ளிவாளவா ளாம்.

(அ - ரை.) செற்றலர் - பகைவர். (ருகூ)

[பன்றிக்கு மார்பிலே கொம்பு முளைத்தது என்று பாடியது.]

373. தெருமுட்டப் பாளை சிதறிவளர் பூகத்
தருமுட்டச் செவ்வாளை தாவும்—திருமுட்டத்(து)
ஊரிலே கண்டேன் ஒருபுதுமை பன்றிக்கு
மாரிலே கொம்பான வாறு.

(அ - ரை.) தெருமுட்ட - வீதி நிறைய. பூகத்தரு - கமுக மரம். முட்டப்போய் - தாக்குவதற்கு. செவ்வாளை - சிறந்த வாளை மீன். திருமுட்டத்தூரிலே - திருமுட்ணம் என்னுந் திருப்பதியிலே. பன்றி மார்பிலே கொம்பானவாறு - பன்றி அவதாரம் எடுத்த திருமாலின் திருமார்பிலே கொம்புபோன்ற திருமகள் தங்கி இருந்தவிதம். (சூ0)

[முச்சங்கத் தலைவரையும் புலவரையும் பாடியது.]

374. நூலாநா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்கும்
கர்த்தன் மதுரையிற்சொக் கன்.

(அ - ரை.) நூலாம் நாலாயிர நானூற்று நாற்பத் தொன்பான் - நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது நூல்களையும். பாலாம் நானூற்று நாற்பத்தொன்பான் - அவற்றை யியற்றிய நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது (4449) புலவர்களையும். மேலாம் நாற்பத்தொன்பான் - கடைச்சங்கப் புலவர் நாற்பத் தொன்பதின்மரையும். (சூக)

[அதிமதுர கவிராயன் உன் பெயரென்ன? பாடத் தெரியுமா? என்றதற்குப் பாடியது.]

375. இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ—சும்மா
இருந்தால் இருந்தேன் எழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிளாய்.

(அ - ரை.) இம்மென்னு முன்னே - இம் என்னும் ஓசையை ஒலிப்பதற்குள். பெருங்காளமேகம் - நீர் நிறைந்த பெரிய கருமுகில். (கூஉ)

[திருக்குடந்தையில் ஒரு சோழியப் பார்ப்பனனை இகழ்ந்து பாடியது.]

376. சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா—திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே உனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்.

(அ - ரை.) கோட்டானே - ஆந்தையே. (கூங)

[காஞ்சீபுரம் வரதராசர் கருடோற்சவத்தைக் குறித்துப் பாடிய இகழ்ச்சிப் புகழ்ச்சி.]

377. பெருமாளு நல்ல பெருமாள் அவர்தம்
திருநாளு நல்ல திருநாள்—பெருமாள்
இருந்திடத்திற் சும்மா இராமையினால் ஐயோ
பருந்தெடுத்துப் போகிறதைப் பார்.

(அ - ரை.) பருந்து - கருடன். (கூச)

[திருமலைராயன் அவைக்களப் புலவர்களை நீங்கள் யாரென்று காளமேகம் வினவ அவர்கள் கவிராயர் என்றதற்குப் பாடியது.]

378. வாலெங்கே நீண்டெழுந்த வல்லுகி ரெங்கேநாலு
காலெங்கே ஊன்வடிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்.

(அ - ரை.) புவிராயர் - அரசர்கள். சாலப் போற்றும் - மிகுதியாகப் பாராட்டுகின்ற. கவிராயர் என்றிருந்தக்கால் - குரங்குத் தலைவர்கள் என்னும்படி இருப்பீராயின். (கூ௫)

[கூத்தப்பிரான் திருவிழாவைப் பார்த்து இகழ்ச்சிப் புகழ்ச்சி யாகப் பாடியது.]

379. நச்சரவம் பூண்டதில்லை நாதரே தேவரீர்
பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்க்கடல்போ லேமுழங்கும்
மேளமேன் ராசாங்க மேன்.

(அ - ரை.) நச்சரவம் - நஞ்சையுடைய பாம்பு. உச்சித மாம் - சிறந்த காளம், எக்காளம். குஞ்சரம் - யானை. ராசாங் கம் - குடை கொடி முதலிய அரசாங்க சின்னங்கள். (கூ௬)

380. கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.

(அ - ரை.) வெள்ளி எழும் - விடி வெள்ளி தோன்றும். புகழ்ச்சியாகப் பொருள்கொள்ளும்போது, அத்தமிக்கும்போதில்- பஞ்சகாலத்தில், ஊர் அடங்கும் - உலகத்தார் பசி அடங்குவார் கள், வெள்ளி எழும் - சோற்றின் வெள்ளை நிறத்திற்கு நாணி சுக்கிரன் ஓடிப்போவான், என்க. (கூ௭)

[அங்கயற்கண்ணி ஊர்தியிலேறி வருவதை இகழ்ச்சிப் புகழ்ச்சியாகப் பாடியது.]

381. மாயனுர் போற்று மதுரா புரிச்சொக்க
நாயனுர் பித்தேறினுர் என்றோ—நேயமாம்
கன்னன்மொழி அங்கயற்கண் காரிகையாள் ஐயையோ
அன்னம் இறங் காமலலை வாள்.

(அ - ரை.) கன்னல் மொழி - கரும்பின் சாறுபோலச் சொல். அன்னம் - அன்னப் பறவை, சோறு. (கூ௮)

[காஞ்சீபுரம் வரதராசர் யானைவாகனத் திருவிழாவைச் சி, பித்துப் பாடியது.]

382. எட்டொருமா எண்காணி மீதே இருந்தகலைப்
பட்டொருமா நான்மாவிற் பாய்ந்ததே—சிட்டர்தொழும்
தேவாதி தேவன் திருவத்தியூர் வரதன்
மாவேறி வீதிவரக் கண்டு.

(அ - ரை.) எட்டொருமா எண்காணிமீதே - அரையின் மேல். கலைப்பட்டு - கட்டப்பட்டிருந்த பட்டாடையானது. ஒருமா நான்மாவில் - காலில். பாய்ந்தது - நழுவி விழுந்தது. மாவேறி - யானையின் மேலேறி. (சுசு)

[காஞ்சீபுரம் விநாயகர் திருவிழாவைச் சிறப்பித்துப் பாடியது.]

383. மூப்பான் மழுவும் முராரிதிருச் சக்கரமும்
பார்ப்பான் கதையும் பறிபோச்சோ—மாப்பார்
வலிமிகுத்த மும்மதத்து வாரணத்தை ஐயோ
எலியிழுத்துப் போகின்ற(து) என்.

(அ - ரை.) மா - பெரிய. பார் - பருமையான. மும்மதத்து வாரணத்தை - மும்மதமும் பொழியும் யானைமுகக் கடவுளை. மூப்பான் - முதற்கடவுளாகிய சிவபெருமான். முராரி - பெருமாள். பார்ப்பான் - நான்முகன். (எ0)

[முக்கால் முதல் கீழரைவரையுமுள்ள எண் வரும்படி காஞ்சீபுரத்தில் பாடிய சிலேடை.]

384. முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது.

(அ - ரை.) முக்காலுக்கேகாமுன் - மூன்றாவது காலும் சேர்வதன் முன்னே. விக்கி இருமா முன் - தொண்டையில் விக்கல் கண்டு இருமும் பருவம் வருவதற்கு முன்னே. மாகாணிக்கு ஏகாமுன் - பெரிய பொதுநிலமாகிய சுடுகாட்டிற்குப் போவதற்கு முன்னே. ஒருமாவின் - ஒப்பற்ற மாமரத்தின். கீழரை - கீழே வீற்றிருக்கும் திரு ஏகம்பநாதரை. (எக)

385. வண்ணங் கரியனென்றும் வாய்வேத நாறியென்றும்
கண்ணனிவ னென்றுங் கருதாமல்—மண்ணை
அடிப்பது மத்தாலே அளந்தானை ஆய்ச்சி
அடிப்பது மத்தாலே அழ.

(அ - ரை.) மண்ணை - நிலத்தை. அடிப்பது மத்தாலே - திருவடித் தாமரையாலே. வாய்வேத நாறியென்றும் - மறை மணக்கும் திருவாயினை உடையவரென்றும். மத்தாலே - தயிர் மத்தாலே. (எஉ)

[திருச்செங்காட்டு நாதரைச் சிறப்பித்துப் பாடிய இகழ்ச்சிப் புகழ்ச்சி.]

386. காலனையுங் காமனையுங் காட்டுசிறுத் தொண்டர்தரு
பாலனையுங் கொன்ற பழிபோமோ—சீலமுடன்
நாட்டிலே விற்றிருந்த நாதரே நீர்திருச்செங்
காட்டிலே விற்றிருந்தக் கால்.

(அ - ரை.) செங்காட்டிலே வீற்றிருந்தக்கால் - சிவந்த அழகிய திருச்செங்காட்டங்குடிப் பதியிலே தங்கி இருப்பதினாலே. (எங)

387. பூநக்கி யாறுகால் புள்ளினத்துக் கொன்பதுகால்
ஆனைக்குக் கால்பதினே ழானதே—மானேகேள்
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததுண்டு
கண்டதுண்டு கேட்டதில்லை காண்.

(அ - ரை.) பூ நக்கி - பூவிலுள்ள தேனை நக்கி உண்ணுகின்ற வண்டுக்கு. ஒன்பது கால் - இரண்டே கால். ஆனைக்குக் கால் பதினேழானதே - யானைக்கு நாலே கால்கள் உள்ளன. முண்டகம் - தாமரை. (எச)

[முருகரைப்பாடிய இகழ்ச்சிப் புகழ்ச்சி.]

388. அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்(கு)
என்னும் பெருமை யிவை.

(அ - ரை.) அப்பன் இரந்துண்ணி - தந்தையாகிய சிவபெருமான் ஐயம் எடுத்து உண்பவன். (எ௫)

389. கூத்தாள் விழிகள்நெடுங் கூர்வேலாம் கூத்தாள்தன்
மூத்தாள் விழிகள் முழுநீலம்—மூத்தாள்தன்
ஆத்தாள் விழிகள் அரவிந்தம் ஆத்தாள்தன்
ஆத்தாள் விழிகள்இரண் டம்பு.

(அ - ரை.) முழுநீலம் - முழுத்தன்மையையுடைய நீலோற்பலம்போன்றவை. அரவிந்தம் - தாமரைப் பூப் போன்றவை. இரண்டம்பு - இரண்டு அம்புகள் போல்வன. (எ௬)

390. என்னைக் கொடுத்தால் இரக்கமுனக் குண்டாமோ
வன்னக் கமலமுக வல்லியே—துன்னுமதக்
காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே நீபயந்த
கோட்டானைத் தானே கொடு.

(அ - ரை.) பயந்த-பெற்ற. கோட்டான்-ஆந்தை. (எ௭)

[விகடராமன் என்பவனுடைய குதிரையை இகழ்ந்து பாடியது.]

391. முன்னே கடிவாள மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போங் காத வழி.

(அ - ரை.) வேதம்போம் வாயான் - மறை ஓதுகின்ற வாயினை உடையவன். (எ௮)

[ஆமூர் வேங்கட முதலியார் குதிரையைப் புகழ்ந்து பாடியது.]

392. ஆறும் பதினாறும் ஆமூரில் வேங்கட்டன்
ஏறும் பரிமாவே ஏற்றமா—வேறுமா
வெந்தமா சும்மா வெறும்மா களிகிளற
வந்தமா சந்தமா மா.

(அ - ரை.) சந்தமாமா - அழகிய மாமாவே. ஆறும் பதினு றும் ஆமூரில் - பிழைப்பதற்கு வழியும் பதினறு பேறுகளும் ஏற் படக்கூடிய ஆமூரிலுள்ள. பரிமாவே - குதிரையே. ஏற்றமா - உயர்ந்த குதிரை. வேறுமா - மற்றக் குதிரைகள். (எகூ)

[பதினறு பேறு இவை யாமெனல்.]

393. துதிவாணி வீரம் விசயம் சந்தானம் துணிவுதனம்
அதிதா னியஞ்சௌ பாக்கியம் போக மறிவழகு
புதிதாம் பெருமை அறங்குல நோயின்மை பூண்வயது
பதினறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே.

(அ - ரை.) துதி - புகழ். வாணி - கல்வி. வீரம் - வலிமை. விசயம் - வெற்றி. சந்தானம் - பிள்ளைப் பேறு. துணிவு - உறுதி. தனம் - செல்வம். அதி தானியம் - மிகுந்த நெல் முத லிய தானியங்கள். சௌபாக்கியம் - சிறந்த சுகம். போகம் - நல்ல அனுபோகம். அறிவு - ஞானம். அறங்குலம் - தரும சிந்தையுடைய குடிப்பிறப்பு. நோயின்மை - நோயில்லாமை. பூண்வயது - நீண்ட ஆயுசு. (அ0)

[திருவாரூர்த் தியாகரது திருக்கூத்தை இகழ்வதுபோற் புகழ்ந்து பாடியது.]

394. ஆடாரோ பின்னையவர் அன்பரெலாம் பார்த்திருக்க
நீடாரூர் வீதியிலே நின்றுதான்—தோடாரும்
மெய்க்கே பரிமளங்கள் வீசுந் தியாகேசர்
கைக்கே பணமிருந்தக் கால்.

(அ - ரை.) கைக்கே பணம் இருந்தக்கால் - தமது கையில் பணம் (பாம்பு) இருக்கும்போது. (அக)

[மாயூரநாதர்மேற் பாடிய இகழ்ச்சிப் புகழ்ச்சி.]

395. வள்ளலெனும் பெரிய மாயூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு மேயிருக்கத்—தெள்ளுமையாள்
அஞ்சலஞ்சல் என்றுதினம் அண்டையிலே தானிருக்க
நஞ்சுதனை யேனருந்தி னர்.

(அ - ரை.) வெள்ளிமலை - கைலைமலை. பொன்மலை - மேரு. (அஉ)

[மதுரை மீனுட்சியம்மையார்மீது பாடியது.]

396. நல்லதொரு புதுமை நாட்டிற்கண் டேனதனைச்
சொல்லவா சொல்லவா சொல்லவா—தொல்லை
மதுரைவிக்கி னேச்சுரனை மாதுமையாள் பெற்ருள்
குதிரைவிற்க வந்தவனைக் கொண்டு.

(அ - ரை.) தொல்லை மதுரை- பழமையான மதுரைப் பதியில். குதிரைவிற்க வந்தவனைக் கொண்டு - மாணிக்க வாசகர் பொருட்டுக் குதிரை விற்க வந்த சிவபெருமானைச் சேர்ந்து. (அரு)

[கீரைக்காரச் சிறுமியின் இடையையும் தனத்தையும் வியந்தது.]

397. வெள்ளையான் ஏறும் விமலர் அடிபணியும்
பிள்ளையான் வாழும் பெருந்தெருவில்—வள்ளை
இலைக்கறிவிற் பாள்மருங்குல் இற்றுவிடும் என்று
முலைக்கறிவிப் பாரிலையே முன்.

(அ - ரை.) மருங்குல் - இடை. இற்றுவிடும் - ஒடிந்து விடும். (அச)

[அருணசலப் பெருமானை வணங்கும்போது புகழ்ந்து பாடியது.]

398. சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் திற்பாதி இட்டிருக்கத்—திட்டமுடன்
ஆடிவந்த சோணேசர் அன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தெவ்வா றுரை.

(அ - ரை.) சட்டுவம் - அகப்பை. இட்ட கலத்தில் - போட்ட இலையில். (அரு)

399. நேற்றிரா வந்தொருவன் நித்திரையிற் கைப்பிடித்தான்
வேற்றூரா னென்றே விடாயென்றேன்—ஆற்றியே
கஞ்சி குடியென்ருன் களித்தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்ருன் மறைந்து.

(அ - ரை.) விடாய் - விட்டுவிடு. ஆற்றியே - சற்றுப் பொறுத்தே. கஞ்சி குடி யென்ருன் - காஞ்சிபுரத்தில் குடியிருப்பது என்ருன். (அசு)

[ஆலவாய்ப் பெருமானை இகழ்வதுபோற் புகழ்ந்து பாடியது.]

400. கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனுர்
பெண்டீர் தமைச்சுமந்த பித்தனுர்—எண்டிசைக்கும்
மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பை யிட்டார்
அக்காளை யேறினு ராம்.

(அ - ரை.) கடம்பவனத்து ஈசனுர் - கடம்பவனத் திருப்பதியாகிய மதுரையில் வீற்றிருக்குஞ் சிவபெருமான். அங்கைக்கு- அழகிய திருக் கையின்மீது. அக்காளை - அழகிய காளை. (அஎ)

[சிதம்பரத்தில் சிவகாமியம்மையைக் கண்டு பாடியது.]

401. மாட்டுக்கோன் தங்கை மதுரைவிட்டுத் தில்லைநகர்
ஆட்டுக்கோ னுக்குப்பெண் டாயினுள்—கேட்டிலையோ
குட்டி மறிக்கவொரு கோட்டானையும் பெற்ருள்
கட்டுமலிச் சிற்றிடைச்சி காண்.

(அ - ரை.) மாட்டுக்கோன் தங்கை - மாடுகளைக் காக்குங் கோபாலனுடைய தங்கையாகிய உமையவள். தில்லைநகர் ஆட்டுக் கோனுக்குப் பெண்டாயினுள் - தில்லைப் பதியாகிய சிதம்பரத்தில் நடனம் செய்யும் கூத்தப் பெருமானுக்கு மனைவியாயினுள். (அஅ)

[தில்லைக் கூத்தப் பிரானைப் பாடியது.]

402. நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலுகால் ஐயாநின்
ஆட்டுக் கிரண்டுகால் ஆனலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனேஇவ் வாட்டைவிட்டுப்
போமோசொ லாயப் புலி.

(அ - ரை.) நின் ஆட்டுக்கு - உன்னுடைய கூத்திற்கு. அப் புலி - கீர்த்திபெற்ற புலிமுனியாகிய வியாக்கிரபாதர். (அக)

403. தாண்டி ஒருத்தி தலையின்மே லேறுளோ
பூண்டசெருப் பால்ஒருவன் போடானே—மீண்டொருவன்
வையானே வின்முறிய மாட்டானே தென்புலியூர்
ஐயாநீ ஏழையா னல்.

(அ - ரை) ஒருத்தி - கங்கையாகிய பெண். ஒருவன் - கண்ணப்பர். ஒருவன் - அருச்சுனன். (கo)

[சிதம்பரத்தில் அம்பலவாணரைப் பாடியது.]

404. கொங்குலவுந் தென்றில்லைக் கோவிந்தக் கோனிருக்கக்
கங்குல்பகல் அண்டர்பலர் காத்திருக்கச்—செங்கையிலே
ஓடெடுத்த அம்பலவா ஒங்குதில்லை உட்புகுந்தே
ஆடெடுத்த(து) எந்தஉபா யம்.

(அ - ரை.) கங்குல் பகல் - இரவும் பகலும். அண்டர் பலர் - தேவர் பலர். ஆடு எடுத்தது - கூத்தாடத் தொடங்கியது. (கக)

[திருவொற்றியூர்த் தியாகப் பெருமானது திருநடனத்தைக் இகழ்வதுபோற் புகழ்ந்தது.]

405. ஆடுந் தியாகரே ஆட்டமேன் தானுமக்கு
வீடுஞ் சமுசார மேலிட்டுக்—கூடிச்
செருக்கிவிளை யாடச் சிறுவர்இரண் டாச்சே
இருக்குமூ ரொற்றியாச் சே.

(அ - ரை.) ஒற்றியாச்சே - ஒத்திக்கு வைக்கப்பட்டிருக்கிறதே (அஃதாவது) திருவொற்றியூர் ஆயிற்றே. (கஉ)

[மாவடுவைப் பற்றிப் பாடியது.]

406. திங்கள் நுதலார் திருமனம்போ லேகீறிப்
பொங்குகட லுப்பைப் புகட்டியே—எங்களிடம்
ஆச்சாளுக் கூறுகாய் ஆகாம லாருக்காக்
காய்ச்சாய் வடுவாமாங் காய்.

(அ - ரை.) வடுவா மாங்காய் - மாவடு. ஆச்சாள் - தாய். (கூக)

[திருவரங்கத்தார் பெருமான் உலகத்தை உண்டபோது சிவன் எங்கே இருந்தார் என்றதற்குப் பாடியது.]

407. அருந்தினுன் அண்டமெலாம் அன்றுமால் ஈசன்
இருந்தபடி ஏதென் றியம்பப்—பொருந்திப்
பருங்கவளம் யானைகொளப் பாகனதன் மீதே
இருந்தபடி ஈசனிருந் தான்.

(அ - ரை.) பருங்கவளம்-பருமையான உணவு உருண்டை. (கூச)

408. ஆண்டி குயவா அடாஉன்பெண் டாட்டிதனைத்
தோண்டிஒன்று கேட்டேன் துரத்தினுள்—வேண்டியிரு
கைக்கரகங் கேட்டேனுன் காலதனைத் தூக்கியே
சக்கரத்தைக் காட்டினுள் தான்.

(அ - ரை.) ஆண்டி - ஏழை. தோண்டி - குடம். கைக் கரகம் - சிறு குடங்கள். காலதனைத் தூக்கியே சக்கரத்தைக் காட்டினுள் - காலை எடுத்துச் சும்மா கிடக்கின்ற தண்ட சக்கரத் தைக் காட்டிப் பாண்டங்கள் ஒன்றும் வனையவில்லை என்று குறிப் பித்தாள். இதற்கு இடக்கரடக்கற் பொருளும் உண்டு. (கூரு)

[ககர வருக்கப் பாட்டு.]

409 காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூக் காக்கைக்குக் கொக்கொக்க—கைக்கைக்குக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா.

(உரை) காக்கைக்கு ஆகா கூகை - காக்கைக்குப் பகை கோட்டான். கூகைக்கு ஆகா காக்கை - கோட்டானுக்கு அடங் காதது காக்கை: (பகலில் காக்கை கூகையை வெல்லும் இரவில் கூகை காக்கையை வெல்லும்). கோக்கு - அரசனுக்கு. கூ - பூமியை. காக்கைக்கு - காப்பாற்றுவதற்கு. கொக்கு ஒக்க - கொக்கைப் போலச் சமயம் பார்த்துக் காரியத்தை முடிக்க வேண் டும். கைக்கைக்கு - வெல்வதற்கு காக்கு ஐக்கு - கற்பகத் தருவுக்கு அரசனுகிய இந்திரனுக்கும். கைக்கு ஐக்கு - எவ்விடத் துத் தலைவனுக்கும். ஆகா-(காலவாய்ப்பின்றி) முடியாது. (கூசு)

[தகர வருக்கப் பாட்டு.]

410. தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைத்ததா தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தோது.

(உரை) வண்டே! தத்தி தாது ஊதுதி - பாய்ந்து மகரந்தத்தை ஊதுகின்றாய். தாது ஊதித் தத்துதி - மகரந்தத்தை ஊதிப் பாய்கின்றாய். துத்தி - தேனையுண்டு. துதைதி-(பூவினை) நெருங்குகின்றாய். துதைத்த தாது ஊதுதி - நெருங்கிய அந்தப் பூவை ஊதுகின்றாய். தித்தித்த தித்தித்த - மிகவும் இனிமையான. தாது எது - பூ எது. தித்தித்தது எத்தாதோ - இனிமையானது எந்தப் பூவின் மகரந்தம். தித்தித்தது ஓது - இனியதைச் சொல்வாய். (கஎ)

[வல்லினப் பாட்டு]

411. துடித்துத் தடித்துத் துடுப்பெடுத்த கோடல்
தொடுத்த தொடை கடுக்கை பொன்போற்—பொடித்துத்
தொடிபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் காட்டிற்று காடு.

(உரை) கோடல் - காந்தள். துடித்துத் தடித்து-வளர்ந்து பருத்து. தடித்து துடித்து - மின்னல் மின்னி என்றும் பொருள் கொள்ளலாம். துடுப்பெடுத்த - அரும்புகள் எடுத்தன. கடுக்கை-கொன்றையானது. பொன்போல் - பொன்மாலைபோல். தொடை தொடுத்த - பூமாலையைத் தொங்கவிட்டன. தொடி படைத்த தோள் - வளையலை அணிந்த தோளானது. பொடித்துத் துடித்த - சிலிர்த்துத் துடியா நின்றன. தோகை கூத்தாட - மயில்கள் கூத்தாடின. காடு கடிபடைத்துக் காட்டிற்று - காடானது வாசனை வீசிக் காட்டியது. (கஅ)

[மெல்லினப் பாட்டு.]

412. மானமே நண்ணு மனமென் மனமென்னும்
மானமான் மன்னு நனிநாணும்—மீனமா
மானு மினன்மின்னி முன்முன்னே நண்ணினும்
மானு மணிமேனி மான்.

(உரை) மானமே நண்ணு மனம் என் - பெருமையை விரும்பாத மனம் எத்தகையது. ஆனு மணிமேனி மான் - நீங்காத இரத்தினங்களை யணிந்த அழகிய உருவுடைய மான்போன்ற பெண். ஆனு மினல் மின்னின் - தன் நகைகளின் நீங்காத மின்னொளி வீசிக்கொண்டு. முன்முன்னே நண்ணினும் - மிகவும் முற்பட்டு வந்தடைந்தாலும். என்மனமென்னும் மானமான் - என்மனமாகிய பெரிய ஆணை. மன்னு - நிலைபெருது. நனிநாணும்- மிகவும் வெட்கப்பட்டு. ஈனமாம் - இழிந்து நிற்கும். (௬௬)

[இடையினப் பாட்டு.]

413. விரவலராய் வாழ்வாரை வெல்வா யொழிவா
பிரவுலவா வேலை யொலியே—வரவொழிவாய்
ஆயர்வா யேயரிவை ஆருயிரை ஈராவோ
ஆயர்வாய் வேயோ அழல்.

(உரை.) இரவு உலவா - இராத்திரியினும் நீங்காத. வேலை ஒலியே - கடலின் ஓசையே. விரவலராய் வாழ்வாரை - கணவரோடு கலவாமல் தனிமையாய் இருந்து வாழ்வோரை. வெல்வாய் - அடக்கி வெற்றிபெறுவாய். ஒழிவாய் - நீ நீங்குவாய் ஆக. வரவு ஒழிவாய் - வராமல் தொலைவாய். ஆயர்வாயே- தாயரின் வாய்ப்பேச்சே. அரிவை ஆருயிரை-மங்கையின் அருமையான உயிரை. ஈராவோ - பிளந்து கொல்லப் போதுமானதே. ஆயர்வாய்-இடையர் வாயில் வைத்து ஊதுகின்ற. வேயோ - புல்லாங்குழலிசையோ. அழல்-நெருப்புப்போலத் துன்புறுத்துகிறது ().

[தென்றற் காற்று வராமையாற் பாடியது.]

414. அம்பேந்து கையா னவன்பதியில் ஐம்மாவைக்
கொம்பேந்தி தந்தைபணி கொண்டதோ—அன்பாய்
அரிந்த மகவை அமுதுக் கழையென்(று)
இருந்தவன்றன் செங்காட்டி லே.

(அ - ரை.) அம்பு ஏந்து கையான் - தண்ணீர்க் கமண்டலத்தை (அல்லது ஏழு கடலையும்) தாங்கிய கையை யுடையவராகிய அகத்திய முனிவருடைய. பதியில் - இருப்பிடமாகிய பொதிய மலையிலுள்ள. ஐம்மாவை - தென்றற் காற்றை. கொம்பு ஏந்தி - ஒற்றைக் கொம்பைத் தரித்த விநாயகக் கடவுளுடைய. தந்தைபணி - தகப்பனாராகிய சிவபெருமான் தரித்திருக்கும் ஆபரணமாகிய பாம்பு. கொண்டதோ - முற்றிலும் உட்கொண்டு விட்டதோ. (௪0௧)

[ஆலைப்பதிப் பெற்றான் செட்டிமீது பாடியது.]

415. முற்றாத காஞ்சியினு முல்லையினும் பாலையினும்
கற்றான்பின் சென்ற கருணைமால்—பெற்றான்றன்
ஆலைப் பதித்தார் அளகத்தி யாட்கயனார்
வேலைப் பதித்தார் விழி.

(அ - ரை.) முற்றாத காஞ்சியினும் - என்றும் முடிவுபெறாத காஞ்சிப் பதியிலும். கற்றான்பின் - முறையே காஞ்சியில் செந்நாப் புலவர் பின்னும், முல்லை நிலமாகிய காட்டில் கன்றோடு கூடிய பசுக்களின் பின்னும். தார் அளகத்தியாட்கு - மாலையணிந்த கூந்தலையுடையவளுக்கு. (க0உ)

[இதுவும் அவன்மேற் பாடியது பாலனைப் பழித்தல்.]

416 கஞ்ச முகையுங் களிற்றானை யின்கொம்பும்
அஞ்சுமுலை நாலுமுலை யானதுவும்—மிஞ்சுபுகழ்
பெற்றான்றன் மாலை பிறர்க்களித்த துங்குதலை
கற்றான் பிறந்தபின்பு காண்.

(அ-ரை.) கஞ்சமுகையும் - தாமரை மொட்டும். களிற்றானையின் கொம்பும் - ஆண் யானையின் தந்தமும். அஞ்சு முலை - தாம் ஒவ்வாமை பற்றிப் பயப்படக் கூடிய தனங்கள். நாலுமுலையானதுவும் - தொங்கும் தன்மையானதும். மிஞ்சு புகழ் பெற்றான் - நிறைந்த புகழையுடைய பெற்றான் என்பவர் தன்மாலை - தனது பூமாலையை. (க0௩)

[திருவரங்கத்து வைணவர்கள் விநாயகருக்கு நாமமிட்டுப் பரம் திருமாலே யென்று விநாயகரும் நாமம் போட்டுக்கொண்டாரென்றதற்குப் பாடியது.]

417. தந்தை பிறந்திறவாத் தன்மையினால் தன்மாமன்
வந்து பிறந்திறக்கும் வன்மையினால்—முந்தொருநாள்
வீணிக்கு வேளை யெரித்தான் மகன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்.

(அ-ரை.) வீண் இக்கு வேளை - வீண் பெருமையையுடைய கரும்புவில் வைத்திருக்கும் மன்மதனை. வன்மையினால் - தன்மையினால். (க0ச

[தூது.]

418. தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்திதத் தூததே—தாதொத்த
துத்திதத் தாதே துதித்துத்தேத் தொத்தீது
தித்தித்த தோதித் திதி.

(அ-ரை.) தாதி தூதோ தீது - அடியாளுடைய தூது பயன் படாதது. தத்தை தூது ஓதாது - கிளி தூதுபோய்ச் சொல்லாது. தூதிதூது ஒத்த இதம் தூது அதே - தோழியாகிய உன் தூதானது எனக்குப் பொருந்திய நன்மையைத்தரும் தூதாகும். தாதொத்த துத்தி - பூந்தாதுபோன்ற தேமல். தத்தாதே - என் மேற் பாய்ந்து அதிகப்படாமல். துதித்து - புகழ்ந்து. தேத்து ஒத்து ஈது - இடத்திற்குப் பொருந்தியவாறு இச்செய்தியை. தித்தித்தது ஓதித்திதி - இனிமையான சொல்லி என்னைக் காப் பாற்றுக. (க0ரு)

[வெறி விலக்கல்.]

419. முந்நான்கில் ஒன்றுடையான் முந்நான்கில் ஒன்றெடுத்து
முந்நான்கில் ஒன்றின்மேல் மோதினுன்—முந்நான்கில்
ஒன்றரிந்தால் ஆகுமோ ஓஓ மடமயிலே
அன்றணைந்தான் வாராவிட் டால்.

(அ - ரை.) முந்நான்கில் ஒன்றுடையான் - பன்னிரண்டு ராசிகளில் ஒன்ருன மீன் கொடியுடைய காமன். முந்நான்கில் ஒன்று, தனுசு - வில்; (வில்லை எடுத்து) முந்நான்கில் ஒன்றின் மேல் மோதினுன் -கன்னியாகிய இவள்மேற் போர்புரிந்தான். முந்நான்கில் ஒன்று - மேடம். மேடம் ஆகிய ஆட்டினை அரிந் தால் - கொன்று பலியிட்டால். (க0சு)

[திருவாரூர்ப் பெருமான் தூது சென்றதைச் சிறப்பித்துப் பாடியது.]

420. ஆனூர்இலையே அயனுந் திருமாலும்
காணூர் அடிமுடிமுன் காண்பதற்கு—மேனுள்
இரவுதிரு ஆரூரில் எந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி.

(அ - ரை.) மேல்நாள் - முன் நாளில். எந்தை பிரான் சென்ற - என் தந்தையாகிய சிவபெருமான் தூதுபோன. பரவை திருவாயிற்படி - பரவை நாச்சியாரின் வீட்டின்படிகளாக. ஆனூர் இல்லையே - ஆயினூர் இல்லையே. வாயிற்படியாக ஆயினூர் இல்லையே என்று கூட்டுக. (கoஎ)

[கடவுளர்க்கும் சிவனடியார்களுக்கும் ஆறுதலையுண்டென்னும் சொன்னயம் அமைத்துப் பாடியது.]

421 சங்கரர்க்கும் ஆறுதலை சண்முகர்க்கும் ஆறுதலை
ஐங்கரர்க்கு மாறுதலை யானதே—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தாநின் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார்.

(அ - ரை.) ஆறுதலை - ஆருகிய கங்கை தலையில் உள்ளது. ஆறுதலை - திருமுடிகள் ஆறு உள்ளன. மாறுதலை - தேவ முகத்திற்கு மாருக யானைத்தலை. சங்கைப் பிடித்தோர்க்கும் மாறுதலை - சங்கேந்திய திருமாலுக்குப் பல பிறவிகளில் மீன் ஆமை சிங்கம் முதலிய வெவ்வேறு தலைகள் அமைந்தன. ஆறுதலை - பிறவிக் கடலினின்று இளைப்பாறுதல். (கoஅ)

[வைத்தீசுரரை வணங்கிப் பாடியது.]

422. வேதக்கா லாம்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
பேதப் பெருவயிரும் பிள்ளைதனக்(கு)— ஓதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரர்
எந்தவினை தீர்ப்பா ரிவர்.

(அ - ரை.) நீரிழிவு - நீராகிய கடலிலே படுத்திருப்பது. ()

[திருவரங்கத்து வைணவரும் திருவானைக்காக் குருக்களும் போரிட்டதைக் கண்டு பாடியது.]

423. சீரங்கத் தாரும் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதேன்—ஓரங்கள்
வேண்டாம்இ தென்ன விபரம் தெரியாதோ
ஆண்டானும் தாதனுமா னல்.

(அ - ரை.) போரங்கமாகப் பொருவதேன் - போர் செய்வதுபோல் வாதிட்டுக் கலாம் செய்வது எதற்கு? ஓரங்கள் வேண்டாம் - வஞ்சகமான சொற்கள் வேண்டியதில்லை. (ககｕ)

[கன்னபுரப் பெருமாள் பிறந்த நாளிதுவாமெனப் பாடியது.]

424. உத்திரத்துக் கோர்நாள் உரோகணிக்குப் பத்தாநாள்
சித்திரைக்கு நேரே சிறந்தநாள்—எத்திசையும்
காராரும் பூஞ்சோலைக் கன்னபுரம் வாழ்சவுரி
நாரா யணன்பிறந்த நாள்.

(அ - ரை.) உத்திரத்திற்கு ஓர் நாள் - உத்திரத்திற்கு அடுத்த நட்சத்திரம். ரோகணிக்குப் பத்தாம் நாள் - உரோகணி நட்சத்திரத்திற்குப் பத்தாவது நட்சத்திரம். சித்திரைக்கு நேரே சிறந்தநாள் - சித்திரை நட்சத்திரத்திற்கு முன் நட்சத்திரம். அஃதாவது அத்தநாள். (ககக)

425 சிரித்துப் புரமெரித்தான் சிந்துரத்தைப் பற்றி
உரித்துதிரம் பாய உடுத்தான்—வருத்தமுடன்
வாடும்அடி யாருடனே வானவரும் தானவரும்
ஓடுபயம் தீர்த்தநஞ்சு ணி.

[திருவாலங் குடியானைச் சிறப்பித்துப் பாடியது.]

426 ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியானென் றார்சொன்னார்—ஆலங்
குடியானே ஆயின் குவலயத்தோர் எல்லாம்
மடியாரோ மண்மீதி லே.

(அ - ரை.) ஆலங்குடியானை - திருவாலங்குடியில் வீற்றிருக்கும் சிவபெருமானை. ஆலாலம் உண்டானை - ஆலகால விடத்தை அமுது செய்தானை. (ககஉ)

[பரமசிவன் விடமுண்டதைப் பற்றிப் பாடியது.]

427. கடுக்கை முடியானே காலைமுடித் தான்போற்
கடுக்கைகுடி யானுகிற் கானார்—கடுக்கை
உரலடிமீ துற்றானு மும்பர்களு மற்றும்
உரலடிமீ துற்றானு மூர்.

(அ - ரை.) கடுக்கை - கொன்றை. காலே - காலனை. முடித் தான்போல் - அடக்கியதுபோல. கடுக்கை சூடியான் ஆகில் - விடத்தைத் தன்னிடம் அடக்கிக் கொள்ளாவிட்டால். கடு - வேகமுடைய. கை - துதிக்கையையுடைய. உரலடி - உரல்களைப்போன்ற கால்களையுடைய வெள்ளை யானையின்மீது - உற்ருனும் - தங்குபவனுகிய இந்திரனும். உம்பர்களும் - தேவர்களும், உரலடிமீது உற்ருனும் - உரலிலே கட்டப்பட்டுத் தன்மேல் அடிபட்ட கண்ணனுகிய திருமாலும். ஊர்காணூர் - தங்கள் இருப்பிடத்தில் தாங்கள் வாழ்வதைக் காணமாட்டார்கள். (கககச)

[கங்கைகொண்ட சோளேச்சர நாதரைச் சிறப்பித்துப் பாடியது.]

428. காவலன் எங்கள் கனவைப்பான் சோளேசன்
மாவலி கங்கை மணிவாரி—ஆவனலென்று
அப்புளங்கை தோய்க்க அதில்வா ரியமுத்தைக்
கொப்புளமென் றூதுங் குரங்கு.

(அ - ரை.) கனவைப்பான் - பெரிய நிதிக் களஞ்சியம் போன்றவனுகிய. மாவலி - மிகுந்த வலிமையுடைய. மணிவாரி - இரத்தினங்களை வாரிப் பார்த்து. ஆ அனல் என்று - தீ என்று சொல்லி. அப்புள் - தண்ணீருள். முத்தை - எடுத்த முத்துக்களை. கொப்புளம் என்று ஊதும் - நீர்க்குமிழி என்று வாயினுலே ஊதுவதாயிற்று. (கககரு)

[ஒரு விலைமகள்மீது பாடிய வசை.]

429. ஏய்ந்த தனங்கள் இரண்டுமிரு பாகற்காய்
வாய்ந்தஇடை செக்குலக்கை மாத்திரமே—தேய்ந்தகுழல்
முக்கலச்சிக் கும்பிடிக்கும் மூதேவி யாள்கமலைக்
குக்கல்இச்சிக் குங்கலைச்சிக் கு.

(அ - ரை.) கமலை - திருவாரூர். குக்கல் இச்சிக்கும் கலைச்சிக்கு - நாய் விரும்பும் கலைச்சி என்னும் தாசிக்கு. (கககசு)

[வசையை இசையாக்கியது.]

430. நஞ்சுகுடி கொண்டகணை நாலுந் தெரிந்துமதன்
இஞ்சிகுடி தன்னிலும்வந் தெய்வானே—விஞ்சு
முலைச்சிகரத் தாலமுத்தி முத்தமிட்டுச் சற்றே
கலைச்சிகரத் தாலணைத்தக் கால்.

(அ - ரை.) நஞ்சுகுடி கொண்டகணே நாலும் தெரிந்து - நால்வகை விடந்தங்கிய அம்பை ஆய்ந்தெடுத்து. (ககஎ)

[புள்ளிருக்கு வேளூர்ச் சிவபெருமானை இகழ்வதுபோற் புகழ்ந்து பாடியது.]

431. தீத்தானுன் கண்ணிலே தீத்தானுன் கையிலே
தீத்தானும் உன்றன் சிரிப்பிலே—தீத்தானுன்
மெய்யெலாம் புள்ளிருக்கு வேளூரா உன்னைஇந்தத்
தையலாள் எப்படிச்சேர்ந் தாள்.

(அ - ரை.) தீத்தான் உன் கண்ணிலே - உன் நெற்றிக் கண்ணில் இருப்பது தீயே. (ககஅ)

[கருவை நல்லூர்க் களாமரத்தின் கீழிருக்கும் பால்வண்ண நாதர்மேற் பாடிய மொழிமாற்று.]

432. வெண்ணெய் திருடிஉண்ட வேணியர னூர்இருக்கக்
கண்ணன்மேல் வைத்த களவேது—பெண்ணைத்
தலையிற் சுமந்தான்மால் சர்ப்பத்தி லேறி
அலையில் துயின்றான் அரன்.

(திருமாலுக்குச் சொல்பவைகளை யெல்லாம் சிவபெருமானுக்கும், சிவபெருமானுக்குச் சொல்பவைகளை யெல்லாம் திருமாலுக்கும் அமைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.) (ககக)

433. எட்டி குளத்தில் இருந்து சரக்குவிற்கும்
குட்டிசெட்டி தன்மகளைக் கொண்டுபோய்-நொட்டுதற்கே
ஆயிரம் யானை எழுநூறு கூன்பகடு
பாயும் பகடெண்பத் தைந்து. (கஉ0)

[தண்டாங்கூர் என்னும் ஊரில் பண்டங்கள் குறைய விற்றதைக் குறித்துப் பாடியது.]

434. தண்டாங்கூர் மாசனங்கள் சற்குணர்நீர் என்றிருந்தேன்
பண்டங் குறையவிற்ற பாவிகாள்—பெண்டுகளைத்
தேடியுண்ண விட்டீர் தெருக்கள் தெருக்கள்தொறும்
ஆடிமுதல் ஆனிவரைக் கும்.

(அ - ரை.) பண்டங் குறைய விற்ற பாவிகாள் - சரக்குகளை விலைக்குத் தக்க அளவு கொடுக்காமல் குறைவாகக் கொடுத்தவர்களே. (கஉக)

[கம்பரை ஏளனஞ்செய்து பாடியது.]

435. நாரா யணனை நரராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன உறுதியால்—நேராக
வாரென்றால் வர்ரென்பேன் வாளென்றால் வள்ளென்பேன்
நாரென்றால் நர்ரென்பேன் நான்.

(அ - ரை.) கம்பன் ஓராமல் சொன்ன உறுதியால் - கம்பர் ஆராயாமல் கூறிய மேற்கோளை வைத்துத் திட்டமாக. (கஉஉ

[நாகபட்டணம் விலைமகளை இகழ்ந்து பாடியது.]

436. வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணான்கண் டேன்கண்டே னென்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார்.

(அ - ரை.) வாகான - அழகான. பாழ்த்த - பயனற்ற. பழுதை - கயிறு. (கஉங)

[வைத்தீசுரன் கோயில் புற்று மண்ணின் பெருமையைப் புகழ்ந்து பாடியது.]

437. மண்டலத்தில் நாளும் வயித்தியராய்த் தாமிருந்து
கண்டவினை தீர்க்கின்றார் கண்டீரோ—தொண்டர்
விருந்தைப்பார்த் துண்டருளும் வேளூரென் னுதர்
மருந்தைப்பார்த் தால்சுத்த மண்.

(அ - ரை.) கண்டவினை - எந்த வினையையும். தொண்டர் விருந்தைப் பார்த்து உண்டருளும் - அடியார்கள் விருந்து எங்கே இடுவார்கள் என்று கவனித்துப் போய் அதனை உட்கொண்டருளும். (கஉ

[பாண்டிநாட்டுச் சிவத்திருப்பதிகள்.]

438. கூடல் புனவாயில் குற்றுலம் ஆப்பனூர்
ஏடகம்நெல் வேலி இராமேசம்—ஆடானை
தென்பரங்குன் றஞ்சுழியல் தென்றிருப்புத் தூர்காசி
வன்கொடுங்குன் றம்பூ வணம்.

(அ - ரை.) கூடல் - மதுரை. புனவாயில் - திருப்புன வாயில். ராமேசம் - இராமேச்சுவரம். ஆடானை - திருவாடானை. (கஉகூ)

[நல்லோர்க் குதவுவாய் எனப் பாடியது.]

439. பண்புளருக் கோர்பறவை பாவத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி—திண்புவியை
ஆள்வார் மதுரை அழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனநன் னிலம்.

(அ - ரை.) ஓர் பறவை - ஈ (அஃதாவது கொடு). ஓர் இலக்கம் - அஞ்சு (அஃதாவது பயப்படு). நாற்காலி - விலங்கு (அஃதாவது விலகு) அரவம் - பணி. வாகனம் - விடை. நன்னிலம் - செய் (பணிவிடை செய் என்பது கருத்து.) (கஉசு)

[கண்ணனின் சங்கமுழக்கத்தின் பெருமையைப் பாடியது.]

440. சதுரரங்கர் சங்கத் தழகர்தன்கைச் சங்கை
அதரமிசை வைத்திலரே யாயின்—முதலை
வருங்குளத்தின் முண்டகக்கை வைப்பரன்றே அன்று
பொருங்களத்தில் நூற்றுவர்முன் போய்.

(அ - ரை.) சதுர் - மேன்மை. சங்கத்தழகர் - சங்கினை யுடைய அழகராகிய பெருமாள். அதரமிசை வைத்திலரே யாயின் - தமது உதட்டில் வைத்து ஊதாராயின். முதல் ஐவரும் - முதன்மையான தருமன் முதலிய ஐந்துபேரும். குளத்தின் - தங்கள் தலையில். முண்டகக் கை வைப்பர் - தங்கள் தாமரைக் கையை வைத்துக் கொண்டு நிற்பர். முதலை, குளம், முண்டகம் என்ற சொற்கள் வந்து வேறு பொருள் தந்தன. (கஉஎ)

[கொண்டத்தூர்த் தண்டைக்காலம்மை சமைத்த பூசுணிக்காய்க் கறியை வியந்து பாடியது.]

441. கண்டக்காற் கிட்டும் கயிலாயம் கைக்கொண்டுட்
கொண்டக்கால் மோட்சம் கொடுக்குமே--கொண்டத்தூர்
தண்டைக்கால் அம்மை சமைத்துவைத்த பூசுணிக்காய்
அண்டர்க்காம் ஈசருக்கு மாம். (கஉஅ)

[திருவிடைமருதூர்ச் சிவபெருமான்மேல் காமனை எரித்ததைக் குறித்துப் பாடியது.]

442. கண்ணன் இடுங்கறியும் காட்டுசிறுத் தொண்டரன்பிற்
பண்ணுசிறு வன்கறியும் பற்ருதோ—தண்ணேடு
மட்டியையுஞ் சோலை மருதீச ரேபன்றிக்
குட்டியையேன் தீய்த்தீர் குறித்து.

(அ - ரை.) தண் - குளிர்ச்சி. மட்டு - தேன். பன்றிக்குட்டியை - வராக அவதாரம் எடுத்த திருமாலின் புதல்வனுகிய மன்மதனை. (கஉகூ).

[கடைமொழி மாற்று.]

443. மாடுதின்பான் பார்ப்பான் மறையோது வான்குயவன்
கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி
இரும்படிப்பான் செக்கான் எண்ணெய்விற்பான் வண்ணன்
பருப்புடவை தப்பும் பறை.

பறை என்பதைப் பாட்டின் முன்னே நிறுத்திப் பொருள் காண்க. (கநo)

[இதுவுமது.]

444. ஆயனுக்குக் கண்மூன்ரும் ஆதிசிவ னுக்கிருகண்
மாயனுக்குச் செங்கையிலே மான்மழுவாம்—நேயமுடன்
சங்கரர்க்குச் சங்காழி தான்மாலுக் காலமாம்
மங்கையிடத் தாற்காகு மண்.

மண் ஆயனுக்கு, கண்மூன்ரும் ஆதிசிவனுக்கு என்று இவ்வாறே கூட்டிப் பொருள் காண்க. (கநக)

[இதுவுமது.]

445. கொன்றை மலர்தரித்தான் கோபாலன் கோலெடுத்து
நின்றுகுழல் ஊதினன் நீள்சடையோன்—பொன்றிகழும்
அக்கணிந்தான் மாயன் அரவணையில் கண்வளர்ந்தான்
சிக்கலிலே வாழுஞ் சிவன்.

(அ - ரை) பொன் திகழும் அக்கணிந்தான் - பொன்போல விளங்கும் எலும்பினை ஆபரணமாக அணிந்தான். சிவன் கொன்றை மலர் தரித்தான் என்று மேற்கூறியவாறே கூட்டுக. (கருஉ)

[இதுவுமது.]

446. கடம்பற்கு(எ)ன் தோள்அயற்குக் கண்பதினைந்(து) ஆமால்
கடப்பற்கே நால்வாய்க்கை யைந்தே—கடம்பற்கோ(டு)
ஆனைமுகற் காயிரங்கண் ணாகண்ட லற்கிலம்பா
டானைமுகற் காறிரண்டு கை.

(அ - ரை.) கடம்பற்கு - கடம்ப மாலையை யணிந்த முருகப் பெருமானுக்கு. கடம்பற்கு - கடம்ப வனத்திலுதித்த சிவனுக்கு. கடம் - மதம். பல் - தந்தம். கோடு கொம்பு. ஆகண்டலற்கு - இந்திரற்கு. ஆன் ஐமுகற்கு - விடையுடைய ஐந்து முகங் கொண்ட சிவனுக்கு. இலம்பாடு - வறுமை. (கருரு)

[திருச்செங்காட்டுப் பெருமானைப் பாடியது.]

447. கண்ணபுரங் கோயிற் கதவடைத்துத் தாழ்போட்டார்
வெண்ணெயுண்ட மாயவனும் மண்ணையுண்டான்—என்னும்
சிரக்கப் பரையேந்திச் செங்காட்டி லீசன்
இரக்கப் புறப்பட்டான் என்று.

(அ - ரை.) சிரக் கப்பரை யேந்தி - நான்முகனது தலையோட்டை ஏந்திக்கொண்டு. திருமாலும் அவ்வாறு போய்விடா வண்ணம் கண்ணபுரக் கோயில் கதவடைத்துத் தாழ்போட்டார். அதனால் அத்திருமால் உண்பதற்குச் சோறு கிடையாமல் மண்ணை யுண்டான். (கருசு)

[திருவாரூர்த் தியாகராயப் பெருமானது திருக்கூத்தைப் பற்றிப் பாடியது.]

448. திருந்தா(டு) அரவணியும் தென்கமலை ஈசர்
இருந்தாடா தென்செய் திடுவார்—பொருந்த
ஒருகாலே அல்லவே ஒண்டொடிக்கா அன்று
இருகாலுஞ் சந்துபோ னல்.

(அ - ரை.) திருந்தாடு அரவணியுந் தென்கமலை ஈசர் - நன்ருக ஆடுகின்ற பாம்பினை அணியும் திருவாரூர்ச்சிவன். ஒண் தொடிக்காக - ஒளியுள்ள வளையல் அணிந்த பரவையின் பொருட்டு. சந்து போனல் - ஒருதடவை அல்லாமல் அவ்விரவில் இருமுறையும் தூதுபோனல். (கருடு)

[ஆமூர் முதலியார் என்னும் வள்ளலைப் புகழ்ந்து பாடியது.]

449. உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி
வெள்ளங்கா லம்திரிந்து விட்டோமே—உள்ளபடி
ஆமூர் முதலி அமரர்கோன் இங்கிருக்கப்
போமூர் அறியாமற் போய்.

(அ - ரை.) அமரர்கோன் - இந்திரன். ஒருகோடி வெள்ளங் காலம் - பன்னெடுங்காலம். (கருசு)

[ஆறு சாதி வரப் பாடியது.]

450. கம்பாள னங்கிக் கணக்கனென வேதுதித்தார்
செம்மான் சதுரத் திருவரசை—அம்மாகேள்
வாணியனும் பொன்னேரி வாழும்வெள் ளாழனுமே
சேணியனும் அன்றே தெரிந்து.

(அ - ரை.) வாணியன் - நான்முகன். பொன் ஏரி - திருமகளாகிய அழகி. வாழும் வெள்ளாழனும் - மார்பில் வீற்றிருக்கப் பெற்ற பாற்கடலையுடைய திருமாலும். சேணியனும் - இந்திரனும். செம்மான் - சிவந்த மானையுடைய சதுரை - சதுரப்பாடுடைய தலைவணுகிய. திரு அரசை - அழகிய நட்ராசப் பெருமானை. கம்மாளன் - கபாலத்தையுடையவன். அங்கிக்கண் நகன் - தீக்கண்ணையுடைய சோதியன். (கருஎ)

[திருமால் திருவடிப் பெருமை பாடியது.]

451. பாரளக்குந் தூதுசெல்லும் பையரவின் மேல்நடிக்கும்
சீரகலி சாபத்தைத் தீர்க்குமே—ஊரருகில்
சண்டச் சகடுதைக்கும் தையலாய் கார்நீல
கண்டத்தார் ஊரான் கழல்.

(அ - ரை.) கார்நீல கண்டத்தார் - கரிய நீலகண்டத்தை யுடைய சிவபெருமான். ஊர் ஆன் கழல் - ஏறி நடத்துகின்ற காளையாகிய திருமாலின் திருவடி. சண்டச் சகடு உதைக்கும் - வண்டி வடிவாய் வந்த அசுரனைக் கொல்லும். (கருஅ)

[திருவீழியப்பர்க்குத் திருமால் இடபமானானெனப் பாடியது.]

452. காலாற் படியளக்கும் கண்ணிடந்து பூசிக்கும்
சேலாங் கமடமாஞ் சிங்கமாம்—பாலாகும்
ஆழியப்பி லேதுயிலும் ஐவர்க்குத் தூதாகும்
வீழியப்பர் ஏறும் விடை.

(அ - ரை.) காலாற் படியளக்கும் - தனது திருவடிகளால் உலகத்தை அளந்து காட்டும். சேலாம் கமடமாம் சிங்கமாம் - மச்சாவதாரம் கூர்மாவதாரம் நரசிங்காவதாரம் எடுக்கும். (கருக)

[திருமாலே பரமென்று வைணவர் சொன்னதற்குப் பாடியது.]

453. கடம்பவனச் சொக்கருக்குக் கண்ணன்றான் வேறே
இடம்பெரிய கண்ணொன்றை ஈந்தான்—உடம்பதனிற்
செப்பாதி யானான் சுமக்க எருதானான்
அம்பானான் தேவியுமா னான்.

(அ - ரை.) கண் ஒன்றை ஈந்தான் - விசாலமாகிய இடத்தை யுடைய கண் ஒன்றைப் பிடுங்கிக் கொடுத்தார். செம்பாதி யானான் - நேர்பாதி ஆயினார். சுமக்க எருதானான் - அவரைத் தாங்குவதற்கு காளையாயினார். அம்பானான் - திரிபுரம் எரிப்பதற்கு அம்பாகவும் ஆயினார். தேவியுமானான் - சாத்தனாரைப் பெறுவதற்கு மனைவியுமாயினார். (கசூo)

[திருக்கண்ணபுரத்தில் மழைக்கு ஒதுங்கும்படி பெருமாள் கோயிலுக்குப் போனபோது அக்கோயில் நம்பியார் வரக்கூடா தெனத் தடைசெய்தார். அப்போது அவரை வஞ்சித்துப் பாடியது.]

454. கண்ணபுரம் மாலே கடவுளிலும் நீஅதிகம்
உன்னிலுமே யானதிகம் ஒன்றுகேள்—முன்னமே
உன்பிறப்போ பத்தாம் உயர்சிவனுக் கொன்றுமில்லை
என்பிறப்பெண் ணத்தொலையா தே.

(அ - ரை.) இச் செய்யுளில் புகழ்வதைப்போல் பழித்துப் பாடியிருத்தலைக்காண்க. பத்து - தசாவதாரம். (கசக)

[அமராவதிக் குருக்கள் விருந்தைப் புகழ்ந்து பாடியது.]

455. ஆனை குதிரைதரும் அன்னைதனைக் கொன்றகறி
சேனைமன் னரைக்காய்துற் றியவரை—பூநெயுடன்
கூட்டியமு திட்டான் குருக்களம ராபதியான்
வீட்டிலுண்டு வந்தேன் விருந்து.

(அ - ரை.) ஆனை - அத்திக்காய். குதிரை - மாங்காய். தரும் அன்னைதனைக் கொன்ற கறி - வாழைக்காய். சேனை - சேனைக் கிழங்கு. மன்னரைக்காய் - நெல்லிக்காய். அவரை - அவரைக்காய். (என்பவற்றில் துற்றி - தின்னுங் கறிகள். பூ நெய்யுடன் - தேனுடன்.) (கசஉ)

[திருவாரூர்த் தியாகராயர் கழுத்திலிருந்த வைரமாலை அறப் பாடியது.]

456. அன்னவயல் சூழ்ந்திருக்கு மாரூரன் நெஞ்சத்தில்
இன்னம் வயிரம் இருப்பதா—முன்னமொரு
தொண்டன்மக னைக்கொன்றுஞ் சோழன்மக னைக்கொன்றும்
சண்டன்மக னைக்கொன்றுந் தான்.

(அ - ரை.) அன்னவயல் - அன்னங்கள் உலாவும் வயல். ஆரூரான் நெஞ்சத்தில் - திருவாரூரில் இருக்கும் தியாகராயர் திரு மார்பில். இச் செய்யுளைப் பாடியவுடன் தியாகராயர் மார்பி லிருந்த வைரமாலை அறுந்து விழுந்துவிட்ட தென்பர். (கசங)

[பெண்ணைப்பற்றிய விவகாரத்தால் மாண்டவர்களைக் குறித்துப் பாடியது.]

457. வாலி முடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவும்
கோலமுடி மன்னர் குறைந்ததுவும்—சால
மதியுடைய நூற்றுவரும் மாண்டதுவும் ஐயோ
சதவிகரத் தால்வந்த தாழ்வு

(அ - ரை.) சதவிகரம் - இடக்கரடக்கல். (கசச)

[திருமலைராயன் பட்டணத்தில் மண்மாரி பெய்யப் பாடியது.]

458. செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
அய்யா அரனே அரைநொடியில்—வெய்யதழற்
கண்மாரி யான்மதனைக் கட்டழித்தாற் போற்றியோர்
மண்மாரி யால்அழிய வரட்டு.

(அ - ரை.) அய்யா அரனே - இறைவனாகிய சிவபெருமானே. தழற்கண் மாரியால் - நெற்றிக் கண் நெருப்பு மழையால். கட்டழித்தாற்போல் - உருவழித்தாற்போல. (கசரு)

[இதுவுமது.]

459. கோளர் இருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர்—நாளையே
விண்மாரி அற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்.

(அ - ரை.) கோளர் - கொலையாளிகள். கோள்கரவு - புறங் கூறுதலும் வஞ்சகமும். (கசசு)

[வறும்புனங்கண்டு வருந்தல்.]

460. கம்பத்தா னைக்கடையிற் கட்டினன் கால்சாய
அம்பைத்தா வித்தான்கால் ஆனதே—வம்புசெறி
பூவைகாள் கிள்ளைகாள் பூங்குயில்காள் அன்றில்காள்
பாவையாள் ஆண்ட பதி.

(அ - ரை.) வம்பு செறி - புதுமை பொருந்திய. பாவையாள் ஆண்ட பதி - பதுமைபோன்ற பெண் ஆட்சி செய்த ஊரானது. கம்பத்தானை - தலை பத்துடைய ராவணனை. கடையிற் கட்டினான் - வாலில் கட்டினான். வாலியானவன், கால் சாய - மடியும்படி. (கசுஎ)

[திருப்பனந்தாள் பட்டர்மேற் பாடியது.]

461. விண்ணீரும் வற்றிப் புவிநீரும்வற்றி விரும்பியழக்
கண்ணீரும் வற்றிப் புலவோர் தவிக்கின்ற காலத்திலே
உண்ணீர் உண்ணீர்என் றுபசாரஞ் சொல்லி உபசரித்துத்
தண்ணீரும் சோறும் தருவான்திருப்பனந் தாட்பட்டனே.

(அ - ரை.) விண்ணீரும் வற்றி - வானத்தில் உள்ள மழைநீரும் ஒழிந்துபோய் உண்ணீர் உண்ணீர் என்று - உண்ணுங்கள் உண்ணுங்கள் என்று. (கசுஅ)

[மதுரை அங்கயற்கண் அம்மையை வணங்கிப் பாடிய சிலேடை.]

462. விள்ளப் புதுமையொன் றுண்டால வாயிலில் மேவுதென்னன்
பிள்ளைக் கொருகுலை மூன்றே குரும்பை பிடித்ததிலே
கொள்ளிக் கணைன்திட்டி யாலோர் குரும்பை குறைந்தமிர்தம்
உள்ளிற் பொதிந்த இரண்டிள நீர்கச் சுறைந்ததுவே.

(அ - ரை.) விள்ள - சொல்லக்கூடிய. தென்னன் பிள்ளைக்கு - மலயத்துவசனுடைய குமாரத்தியாகிய தடாதகைக்கு. ஒருகுலை மூன்றே குரும்பை பிடித்து - ஒரு வரிசையில் தென்னங்குரும்பை போன்ற மூன்று தனங்கள் தோன்றி அவற்றிலே, கொள்ளிக் கணன் - நெருப்புக் கண்ணையுடைய சிவபெருமானது. திட்டி - பார்வை. கச்சு உறைந்ததுவே - ரவிக்கைக்குள் தங்கின. (கசுகூ)

[திருவொற்றியூர்த் தியாகராயப் பெருமானைக் கண்டு வணங்கிப் பாடியது.]

463. பாரூர் அறியப் பலிக்குழன் றீர்பற்றிப் பார்க்குமிடத்(து)
ஓரூரும் இல்லை இருக்கவென் றாலும்உள் ளூரும்ஒற்றி
பேரூ ரறியத் தியாகரென் றேபெரும் பேரும்பெற்றீர்
ஆரூரி லேயிருப் பீர்இனிப் போய்விடும் அம்பலத்தே.

(அ - ரை.) பாரூர் அறியப் பலிக்கு உழன்றீர் - மண்ணிலுள்ள ஊரார் எல்லாம் அறியும்படி ஐயம் எடுக்க அலைந்து திரிந்தீர். உள்ளூரும் ஒற்றி - நீர் இருக்கின்ற நடுவூரும் ஒத்திவைக்கப்பட்ட ஊராகும் (திருவொற்றியூர்). ஆரூரிலே இருப்பீர் - யாருடைய ஊரிலே நீர் இருப்பீர், (திருவாரூரிலே) வீற்றிருப்பீர். அம்பலத்தே - பொது வெளியில். (கடுO)

[சிவபெருமான் திருவீதி வருதலைப் பார்த்துப் பாடியது.]

464. வாணியன் பாடிட வண்ணான் சுமக்க வடுகன்செட்டி
சேணியன் போற்றக் கடற்பள்ளி முன்றோழத் தீங்கரும்பைக்
கோணியன் வாழ்த்தக் கருமான் துகில்தனைக் கொண்டணிந்த
வேணிய னவன்தட்டான் புறப்பட்ட வேடிக்கையே.

(அ - ரை) வாணியன் - நான்முகன். வண்ணான் சுமக்க - நந்தி சுமந்து வர, வடுகன்-வயிரவர். செட்டி - முருகப்பெருமான். சேணியன் - இந்திரன். கடல் பள்ளி - திருப்பாற் கடலிற் பள்ளி கொண்ட திருமால். திங்கரும்பைக் கோணியன் - இனிய கரும்பை வளைத்த வில்லாக உடைய மன்மதன். கருமான் - யானை. வேணியன் - சடைமுடியை உடையவன். தட்டான் - யாவர்க்கும் தட்டுப்படாத கடவுள். (கடுக)

[அதிமதுர கவிராயர் கட்டியக்காரர் கட்டியங்கூறியதற்குப் பாடியது.]

465. அதிமதுரம் என்றே அகிலம் அறியத்
துதிமதுர மாய்எடுத்துச் சொல்லும்—புதுமையென்ன
காட்டுச் சரக்குலகிற் காரமில் லாச்சரக்குக்
கூட்டுச் சரக்கதனைக் கூறு.

(அ - ரை) அகிலம் - உலகம். மதுரமாய் - இனிமையாய். கூட்டுச் சரக்கு - மருந்துக்குக் கூட்டப்படும் பொருள். (கடுஉ)

[கட்டியக்காரர் நீர் யாரென்றதற்குப் பாடியது.]

466. தறியும் பிறைபொருட் டள்ளிநன் னூலங் கடலினுண்டு
வறியும் பொதிய வரையினிற் கால்கொண்டு வன்கவிதை
மொறியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாளமேகம் புறப்பட்டதே.

(அ - ரை.) கழியும் பிழைபொருள் தள்ளி - கழியத்தக்க குற்றமுள்ள கருத்துக்களை நீக்கி. நன்னூல் அம் கடலில் உண்டு - நல்ல நூல்களாகிய அழகிய கடலிற் படிந்து. (கடுரு)

[தில்லை நடராசர்மீது பாடியது.]

467. வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கஇக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லை அம்பல வாணர்க்கொ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்ல வோவிங்ங னேஎளி தானதுவே.

(அ-ரை.) இருள்நிறைந்த சோலைகளையுடைய தில்லை. (கடுச)

[காஞ்சியில் காமாட்சியம்மையாரைப் பணியும்போது பாடியது.]

468. மாக்கைக் கிரங்கும் குருகும் வளர்சக்ர வாகப்புள்ளும்
தாக்கச் சரபங் குழைந்த தெவ்வாறு சகதலத்தை
ஆக்கிப் பெருக்கித் திருவறச் சாலையில் அன்னமிட்டுக்
காக்கைக் கொருகொக்கின் கீழே இருக்குங் கருங்குயிலே.

(அ - ரை.) மாக்கைக்கு - பெருமை பொருந்திய கைகளில். இரங்கும் - ஒலிக்கும். குருகும் - வளையலும். சரபங் குழைந்தது எவ்வாறு - சிங்கத்தைத் தாக்கும் வலிமையுடைய சிம்புள் வடிவெடுத்த சிவபெருமான் திருமேனி எப்படி இளகி மெல்லியதாயிற்று. காக்கைக்கு - காப்பாற்றுவதன் பொருட்டு. கொக்கின் - மாமரத்தின். கருங்குயிலே - கரிய நிறம் உடைய குயில்போன்ற குரலுடைய அம்மையே. (கடுகு)

[சிவபெருமான் காளையூர்தியின்மேல் திருவுலா வருவதைக் கண்டு பாடியது.]

469. கரியொன்று பொன்மிகும் பையேறக் கற்றவர் சூழ்ந்துதொழ
எரியொன்று செல்வன் துலாத்தினி லேற இருண்டமஞ்சு
சொரிகின்ற நாகமின் சோற்றினி லேறித் தொடர்ந்துவரக்
நரியொன்று சொந்தக் கனலேறி வந்தது நங்களத்தே.

(அ - ரை.) கரியொன்று-யானைமுகக் கடவுளாகிய ஒப்பற்ற பெருமான். பொன் மிகும்பை யேற - பெருச்சாளியில் ஏறிவர

எரியொன்று செல்வன் - தீ நிறம் பொருந்திய முருகப் பெருமான். துலாத்தினில் ஏற - துலாமுழுக்குக் கட்டமாகிய மாயூரம் அல்லது மயிலில் ஏறிவர. இருண்ட மஞ்சு - கரிய மழைமுகில். நாகமின் - இமயமலையின் அரசன் மகளாகிய உமையம்மை. சோற்றினில் ஏறித் தொடர்ந்துவர - அன்னப் பறவையில் ஏறிப் பின்வர. நரி ஒன்று - சம்புவாகிய ஒரு தனிக் கடவுள். சொந்தக் கனல் ஏறி - நந்திமேல் எழுந்தருளி. நங்களத்தே வந்தது - நம்மிடத்தே வந்தருளினர். (சொந்தக் கனல், சொந்தம்-நம், கனல்-தீ : நந்தீ.) (கறுகூ)

[ஆற்றூரில் வாழ்ந்த சோமியென்னும் பெயருடைய விலைமகளின் அழகை வியந்தது.]

470. ஆராயு முத்தமிழ் ஆற்றூரில் சோமி அழகுகண்டு
நாரா யணன்நெடு மாலாகி னன்அந்த நான்முகனும்
ஓரா யிரமடல் ஊர்ந்தான்வில் மாரன் உருவழிந்தான்
பேரான வானவர் கோனுங்கண் ஆயிரம் பெற்றனனே.

(அ - ரை.) நாராயணன் நெடுமாலாகினன் - பெருமான் பெரிய மயக்கம் கொண்டார்; அல்லது நீண்ட திருமேனியை உடைய திருமாலாயினர். நான்முகனும் - நான்முகன். ஓராயிரம் மடல் ஊர்ந்தான் - ஆயிரந்தரம் மடல் ஏறினன். அல்லது ஆயிரம் இதழுடைய தாமரைமீது சென்றார். (கறுஎ)

[திருவலஞ்சுழியிலுள்ள விநாயகக் கடவுளைப் பாடியது.]

471. பறவாத தும்பி கருகாத வெங்கரி பண்புரண்டே
இறுகாத தந்தி உருகாத மாதங்கம் இந்துநுதல்
நிறவாத சிந்துரம் பூசாக் களபம் நெடுஞ்சுனையில்
பிறவாத ஆம்பல் வலஞ்சுழிக் கேரைப் பெற்றனனே.

(அ - ரை.) பறவாத தும்பி - பறவாத வண்டு. கருகாத வெங்கரி - கருகிப் போகாத அடுப்புக் கரி. பண்புரண்டே இறுகாத தந்தி - பண்முறை தவறுவதற்குக் காரணமான கட்டமையாத வீணைக் கம்பி. உருகாத மாதங்கம் - அனலில் உருகாத பெரிய தங்கம். இந்து நுதல் நிறவாத சிந்துரம் - பிறைபோன்ற நெற்றியில் நிறங் காட்டாத செந்தூள். பூசாக் களபம் - மேலே பூசப்படாத சந்தனம். நெடுஞ்சுனையில் பிறவாத ஆம்பல் - நீண்ட சுனை நீரில் தோன்றாத ஆம்பற்பூ.

தும்பி, கரி, தந்தி, மாதங்கம், சிந்துரம், களபம், ஆம்பல் என்ற சொற்கள் வெவ்வேறு பொருளைக் குறிப்பதோடு யானையையும் குறிக்கும். அஃது ஈண்டு ஆனைமுகக் கடவுளை உணர்த்திற்று. (கடுஅ)

[தில்லைக் கற்பக விநாயகரைப் பற்றிப் பாடியது.]

472. கம்பமத கடகளிற்றுன் தில்லை வாழும்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டுவாடி
உம்பரெல்லாம் விழித்திருந்தார் அயில்வேற்செங்கை
உடையஅறு முகவனுங்கண் ணீராறுனன்
பம்பு சுடர்க் கண்ணனுமோ நஞ்சுண்டான்மால்
பயமடைந்தான் உமையுமுடல் பாதியானுள்
அம்புவியைப் படைத்திடுவ தவமதேயென்(று)
அயனுமன்னம் இறங்காமல் அலைகின்றனே.

(அ - ரை.) கண் ஈராறு ஆனன் - பன்னிரண்டு கண்களை உடையவரானார். (கண்ணீர் ஆறுனன் - கண்ணீர் ஆறுகப் பெருகப் பெற்றார்.) பம்பு சுடர்க்கண்ணனுமோ நஞ்சுண்டான் - நெருப்பு நிறைந்த நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் நஞ்சை உண்டார். மால் பயமடைந்தான் - திருமால் அஞ்சினார்; பாற்கடலிற் சேர்ந்தார். உமையும் உடல் பாதியானுள். உமாதேவியார் சிவபெருமான் திருமேனியிற் பாதியானாள் அம்புவியைப் படைத்திடுவது அவமதேயென்று - அழகிய பூமியைப் படைத்தல் வீணென்று கருதி. அயனும் - நான்முகனும். அன்னம் இறங்காமல் அலைகின்றனே - அன்ன வாகனத்தை விட்டு இறங்காமல்; சோறு உட்கொள்ளாமல் திரிகின்றான். (கடுகூ)

[முருகக்கடவுள் குறத்தியை மணந்தாரென்று வேடிக்கையாகப் பாடியது.]

473. மருகிருக்கும் வேளூரின் வயித்திமகன் குறமகளை மணந்தா னென்றே
உருகியரன் நஞ்சுண்டான் உமையவளும் தவம்புரிந்தாள் உயர்மான்
கருகிமிக மன்றின்முன் கமலன்முக நான்கானன் கடவுளோர்கள் [மேவி
இருவிழியும் இமையாமல் இரவுபகல் உறங்காமல் இருக்கின்றரே.

(அ - ரை.) மருகிருக்கும் வேளூரின் - நன்மணம் நிறைந்த வேளூரிலே. வயித்தி மகன் - வைத்திய நாதர் புதல்வராகிய முரு

கக் கடவுள். முகம் நாலானன் - திருமுகம் தொங்கப்பெற்றான்; அல்லது நான்முகம் உடையவனானன். கடவுளோர்கள் - தேவர்கள். (கசுO)

[குரங்கென்று தொடங்கி இடமென்று முடிக்கும்படி கேட்ட ஒருவர்க்குப் பாடியது.]

474. குரங்(கு) அனலில் விழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வ—விரைந்துபேய்
பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்.

(அ - ரை.) பாம்பு கரம் செறிய - பாம்பு கையில் தீண்டப்பெற்று. அலவன் கவ்வி - நண்டு காலினைக் கவ்வப் பெற்று. விரைந்து பேய் பற்றவே - விரைவாகப் பேய் பிடித்துக்கொள்ள. பச்சை மிளகைக் கடித்தால் - பச்சை மிளகாயையுங் கடித்துக் கொண்டால். (கசுக)

[பரமசிவனைப் பற்றிப் பாடியது.]

475. நீறுவாய் நெற்றி நெருப்பாவாய் அங்கமிரு
கூறுவாய் மேனி கொழுந்தாவாய்—மாறுத
நட்டமா வாய்சோறு நஞ்சாவாய் நாயேனை
இட்டமாய்க் காப்பாய் இனி.

(அ - ரை.) நீறுவாய் - திருநீற்று மேனியை உடையாய். மேனி கொழுந்தாவாய் - திருமேனி தீக்கொழுந்து மயமாகப் பெற்றாய். மாறுத நட்டமாவாய் - நிலைபெற்ற திருநடனஞ் செய்வாய். சோறு நஞ்சாவாய் - சோறு நஞ்சாகப் பெற்றாய். (கசுஉ)

[திருவரங்கத்தில் ஒருத்தி வீட்டிற் சாப்பிட்டதை இகழ்ந்து பாடியது.]

476. நீர்சாற் பெருத்திடு காவேரி ஆற்றை நிலைநிறுத்திச்
சாய்ச்சான் இலைக்கறிச் சாற்றையெல் லாம்அது தானும்அன்றிக்
காய்ச்சாப் புளியும்நற் கல்லுடன் சோறும் கலந்துவைத்த
ஆய்ச்சாளை யான்மற வேன்மறந் தான்மனம் ஆற்றிடுமே.

(அ - ரை.) நிலைநிறுத்தி - தடுத்து. சாய்ச்சாள் இலைக்கறிச் சாற்றை-கீரைச்சாற்றினில் அதன் நீரைச் செலுத்தினள். காய்ச் சாப் புளியும் - காய்ந்துபோன புளியையும் அக் கீரைச் சாற்றி னிற் சேர்த்தாள். (கசுங)

[ஒரு வேசை கதை சொல்லச் சொன்னபோது பாடியது.]

477. சோமன் புறப்படத் தென்றலும் விசத் துயிலொழிய
யாமங்கள் தோறுங் குயில்வந்து கூவிடந் நேரத்திலே
நாமும் பிழைத்து மனிதர்முன் பேசிட நாவுமுண்டாய்க்
காமக் கலகந் தெளிந்தபின் யானுங் கதைசொல்வனே.

(அ - ரை.) சோமன் - திங்கள். துயில் ஒழிய - தூக்கம் இல்லாமற்போய். (கசுச)

[கயத்தாற்றில் பெருமாளைத் தூக்கும்படி காளமேகப் புல வரை வருத்திச் சுமத்தியபோது பாடியது.]

478. பாளைமணங் கமழுகின்ற கயத்தாற்றுப்
பெருமாளே பழிகா ராகேள்
வேளை யென்றால் இவ்வேளை பதினாறு
நாழிகைக்கு மேலா யிற்றென்
தோளைமுறித் ததுமன்றி நம்பியா
னையுங்கூடச் சுமக்கச் செய்தாய்
நாளையினி யார்சுமப்பார் எந்நாளு
முன்கோயில் நாசந் தானே.

(அ - ரை.) பாளை மணம் கமழுகின்ற - கமுக மடலின் வாசனை வீசுகின்ற. பழிகாரா - பழிவிளைக்கின்றவனே. நம்பி யானையும் - குருக்களையும். (கசுரு)

[தில்லைக் கூத்தப்பிரான் பொருள்களைக் குறித்துப் பாடியது.]

479. ஏறு கட்டிய கொட்டி லரங்கமே
ஈரி ரண்டு முகன்வா யிலரயமே
மாறு கண்ணப்பன் வாய்மடைப் பள்ளியே
வாய்த்த வோடை திருமால் வதனமே

விறு சேர்சிறுத் தொண்டனில் லாளுந்தி
வேட்ட நற்கறி காய்க்கின்ற தோட்டமே
நாறு பூம்பொழில் சூழ்தில்லை யம்பல
நாரி பாகற்கு நாடக சாலையே.

(அ - ரை.) நாரிபாகற்கு - பெண்ணை ஒரு பாகத்தில் வைத்த சிவபெருமானுக்கு. ஏறு கட்டிய கொட்டில் அரங்கமே - காளை கட்டிய தொழு சீரங்கமாகும். ஈரிரண்டு முகன்வாய் இலாயமே - நான்முகனுடைய வாய் குதிரை கட்டும் இடம். கண்ணப்பன் வாய் மடைப்பள்ளியே - கண்ணப்பருடைய வாய் சமையலிடமாகும். வாய்த்த ஓடை திருமால் வதனமே - தாமரைப் பூப் பொருந்திய ஓடையானது திருமாலின் திருமுகமே. இல்லாள் உந்தி - மனைவி வயிறு. வேட்ட - விரும்பிய. நாடகசாலையே - கூத்தாடுமிடமாகும்.

முப்புரம் எரித்தபோது திருமால் காளையூர்தியாகச் சிவபெருமானைத் தாங்கினர். நான்முகன் ஓதுகின்ற நான்கு மறைகளும் சிவனாரின் தேரின் குதிரைகளாயின. கண்ணப்பர் தமது வாயிற் கொண்டுவந்த ஊனைக் கடவுளுக்கு ஊட்டினர் திருமால் தமது தாமரைக் கண்ணிலொன்றைச் சிவபெருமானது திருவடியிற் சாத்தினர். (கசூசு)

[நடுவெழுத்தலங்காரம்.]

480. திருமால்வா கனம்நாவாய் இராசி ஒன்று
சினைதெவிட்டார் மாதுலன்கோ கிலமிவ் வேழின்
உருவாமே ழெழுத்தினடு எனக்குச் செய்தான்
உகந்துபதி னுன்கினையுந் தானே கொண்டான்
ஒருபாகத் திருத்தினுன் கையில் ஏற்ருன்
ஒருமதலை தனக்களித்தான் உண்டான் பூண்டான்
பரிவாயோன் கரத்தமைத்தான் உகந்தான் இந்தப்
பைம்பொழிற்றில் லையுளாடும் பரமன் ருனே.

(அ - ரை.) திருமால் வாகனம் - நாகாரி, (கெருடன்). நாவாய் - கலம் (மரக்கலம்). இராசி ஒன்று =கன்னி, சினை = கவடு, (கிளை) தெவிட்டார் - ஆரார். மாதுலன் - மாமன். கோகிலம் - பல்லி. இவ்வேழின் உருவாம் ஏழெழுத்தின் நடு எனக்குச் செய்தான். இவற்றின் நடு எடுத்துக்கள் "காலன் வராமல்" என்

பது, எனக்குக் காலன் வராமற் செய்தான்; ஒரு பாகத்திருத்தினுன் நாரியை. கையில் ஏற்ருன் கம். ஒரு மதலை தனக்களித்தான் கனியை. உண்டான் கடு. பூண்டான் - ஆர். பரிவாய் ஒண்கரத்தமைத்தான் மான். உகந்தான் பலி. எனக் கூட்டுக. (கசுஎ)

[இடைச்சி தண்ணீர் கலந்த மோரைக் கொடுத்ததற்குப் பாடியது.]

481. காரென்று பேர்படைத்தாய் ககனத்துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததன்பின்
வாரொன்று மென்முலையார் ஆய்ச்சியர்கை வந்ததன்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்ருயே.

(அ - ரை.) ககனத்துறும்பொழுது - வானத்தில் இருக்கும் பொழுது. (கசுஅ)

[திம்மியென்னுந் தெலுங்குப்பெண் சொல்லியதைப் பாடியது.]

482. ஏமிரா வோரி யென்பாள் எந்துண்டி வஸ்தியென்பாள்
தாமிராச் சொன்னவெல்லாம் தலைகடை தெரிந்ததில்லை
போமிராச் சூழுஞ்சோலை பொருகொண்டைத் திம்மிகையில்
நாமிராப் பட்டபாடு நமன்கையிற் பாடுதானே.

(அ - ரை.) ஏமிரா ஓரி யென்பாள் - என்னடா அடே என்பாள். எந்துண்டி வஸ்தி என்பாள் - எவ்விடத்திலிருந்து வருகிருய் என்பாள். தலைகடை தெரிந்ததில்லை - முதல் முடிவு இன்னதென்று தெரியவில்லை. இராப்போய்ச் சூழும் சோலை - இருள் அடர்ந்து நிறைந்த சோலை. பொருகொண்டை - போன்ற கொண்டையையுடைய. (கசுகூ)

[தன்னை ஏளனஞ்செய்த பாடத்தெரியாத கிழத் தாசியை இகழ்ந்து பாடியது.]

483. இந்து முடிக்குஞ் சடையாளர்
இருக்குந் தொண்டை வளநாட்டில்
சிந்துபடிக்கக் கவிபடிக்கத்
தெரியா மடவாய் உன்றனக்குக்

கெந்தப் பொடியேன் பூமுடியேன்
கிழமாய் நரைத்து முகந் திரைத்தும்
இந்த முறுக்கேன் வீருப்பேன்
எடுப்பேன் உன்னைக் கொடுப்பேனே.

(அ - ரை.) இந்து முடிக்குஞ் சடையாளர் - திங்களைச் சூடிய சடைமுடியை உடைய சிவபெருமான். கெந்தப் பொடி - வாசனைப் பொடி. இந்த முறுக்கேன் - இவ்வகையான கெம்பீரம் எதற்கு. வீருப்பேன் - இறுமாப்பு எதற்கு. எடுப்பு - கிளர்ச்சி. (கஎ0)

[ஒருநாள் இரவு மதுரையில் பசியால் வாடிக் கொசுக் கடியால் தொல்லைப்பட்டபோது பாடியது.]

484. மசகம் இசைகாட்ட மாடுமணி காட்ட
நிசியும் ஒருக்காலே நீட்டப்—பசியால்
வாடினேன் வாடி மனந்தளர்ந்து நானுன்னைத்
தேடினேன் தென்னவரா யா.

(அ - ரை.) மசகம் - கொசு. இசைகாட்ட - இசையைப் போல் நொய்ய் என்னும் ஒலியைச் செய்ய. மாடு மணியாட்ட - மாட்டின் கழுத்து மணி அடிபட. நிசி - இரவு. தென்னவராயன் - பாண்டியன். (கஎக)

[அதிமதுரகவி முதலியோர் காளமேகப் புலவரைப் பார்த்து, நீ யார், உனக்கு என்ன தெரியும்? என்று கேட்டபோது பாடியது.]

485. தூதஞ்சு நாழிகையில் ஆறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலை சொல்லத்
துகளிலா அந்தாதி ஏழுநா ழிகைதனில்
தொகைபட விரித்து ரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனில்
பரணியொரு நாள்முழுதுமே
பாரகா வியமெலாம் ஓரிரு தினத்திலே
பகரக் கொடிக்கட்டி னேன்

சீதஞ்செ யுந்திங்கண் மரபினுல் நீடுபுகழ்
செய்யதிரு மலைராயன் முன்
சீறுமா றென்றுமிகு தாறுமா றுகள்சொல்
திருட்டுக் கவிப் புலவரைக்
காதங் கறுத்துச் சவுக்கிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்து வெற்றிக்
கல்லணையி னெடுகொடிய
கடிவாள மிட்டேறு கவிகாள மேகநானே.

(அ - ரை.) தூது - தூது என்னும் நூல். துகள்-குற்றம். பாரகாவியம் - பெரிய நூல். சீதம்செயும் - குளிர்ச்சியைச் செய்யும். கதுப்பில் புடைத்து - கன்னத்தில் அடித்து. கல்லணை-சேணம். (கஎஉ)

[தில்லைக் கூத்தப்பிரான் மழுவேந்தியதற்குக் காரணம் கற்பித்துப் பாடியது.]

486. தில்லைக்கா வுக்குட் சிதம்பரனுர் ஆட்டையெடுத்(து)
இல்லைகா ணென்றுமழு வேந்தினுர்—சொல்லக்கேள்
மெய்யிலே கண்டேன்யான் மீண்டுங்கே ளாயனுமே
நெய்யிலே கையிட் டானே.

(அ - ரை.) தில்லைக் காவுக்குள் - தில்லைச் சோலைக்குள். ஆட்டை - கூத்தாடலை. இல்லைகாண் - நான் எடுக்கவில்லை பார். நெய்யிலே கையிட்டான் - வெண்ணெயை கையால் வாரியுண் டான். (கஎங)

[சிரித்துப் புரமெரித்ததற்குக் காரணங் கூறிப் பாடியது.]

487 தில்லைக்குள் வாழும் சிதம்பர ரேஉமைச் செப்பவென்றுல்
அல்லற்பிழைப்பே பிழைத்துவிட் டீர்முப்புரா தியர்மேல்
வில்லைக் குனித்தெய்ய மாட்டாமல் நீரந்த வேளைதன்னில்
பல்லைத் திறந்துவிட் டீருவோநும் படைத்தொழிலே.

(அ - ரை.) முப்புராதிகளை - முப்புரம் முதலியவைகளை. அல்லற் பிழைப்பு - தொல்லையான பிழைப்பு பல்லைத் திறந்து விட்டீர் - சிரித்து எரித்துவிட்டீர். (கஎச)

[இறைவனது ஏழ்மையை எடுத்துப் பாடியது.]

488 மாடுகிடப் பாடி மனையாள் உடற்பாதி
தேடுதற்குப் பிள்ளை தினைக்கடம்பன்—நாடில்
அரவா பரணம்பூண் அம்பலவா பிச்சை
இரவாமல் நீரென்செய் வீர்.

(அ - ரை.) மாடு - காளை. கிடப்பாடி - ஊர்தி. தினைக் கடம்பன்-முருகன். அரவாபரணம் - பாம்பணி. (கஎரு)

[மதுரை இறைவனைப் பாடியது.]

489. காண்டரிய மேனியுமொன் கந்தரமுஞ் சுந்தரனுய்
ஆண்டதுவு மேனிக் கமைந்ததுவும்—நீண்டமுகில்
மைக்கலிங்க மாகமணி மாடமணி மாமதுரைச்
சொக்கலிங்கம் என்னும் சுகம்.

(அ - ரை.) கந்தரம் - கழுத்து. கலிங்கம்-ஆடை. மாடம்-மாளிகை. (கஎசு)

[திருமால் எருதாகச் சுமந்ததற்குக் காரணம் கூறிப் பாடியது.]

490. எருதாய்ச் சுமந்துபோய் ஏத்திக் கண்சாத்திப்
பொருதாழி வாங்கினதும் பொய்யோ—பெருமாள்
திருநாமம் என்னெற்றி தீட்டியதுங் கச்சி
ஒருமா விலக்கமல்ல வோ.

(அ - ரை.) ஆழி வாங்கினதும்-உருளை பெற்றதும். (கஎஎ)

[காஞ்சி ஏகாம்பரநாதரைப் பாடியது]

491. ஆரு தொருக்காலும் ஐயோவா கம்பருக்கு
மாரு வடுவாய் மறையாதே—பேருகச்
செங்கையினு லேயழுந்திச் செய்யகஞ்சிக் காமாட்சி
கொங்கையினுல் இட்ட குறி.

(அ - ரை.) வடுவாய் - தழும்பாய். குறி - அடையாளம். (கஎஅ)

[சிவனுக்கு முருகன் குரு என்று பாடியது.]

492. எவர்தமக்கும் ஞானகுரு ஏகாம்ப ரேசர்
அவர்தமக்கு ஞானகுரு ஆரோ—உவரியணை
கட்டினன் பார்த்திருக்கக் காதலன் தன்தலையில்
குட்டினன் தானே குரு.

(அ - ரை.) உவரியணை - கடல் அணை. காதலன் - மகன் (பிரமன்). குட்டினன் - குட்டியவனாகிய முருகன். (கஎகூ)

[திருவண்ணாமலையில் பாடியது.]

493. நடக்கவழி யாதுகால் நாலு முடக்கிக்
கிடக்கவழி யும்புன்னீர் கேளா—திடக்கை
அரைப் பணியார் சோணகிரி அத்தனார் ஒட்டில்
இரப் புணியார் ஏறும் எருது.

(அ - ரை) புல்நீர் கேளாது - புல்லும் நீரும் கேளாது. ஒட்டில் இரப்புணியார் - ஓட்டில் இரந்துண்பவர்; இடக்கை ஓட்டில் இரப்புணியார் என்று கூட்டுக. (கஅ0)

[கும்பகோணத்திற் பாடியன.]

494. அம்பாகி னன்பாதம் அன்றுபிடித் தாயவற்குன்
செம்பாதங் காட்டாத் திறமென்னே—உம்பர்தொழும்
நம்பகோ ணத்தானே நாகச் சிலைவளைத்த
நும்பகோ ணத்தானே கூறு.

(அ - ரை.) அம்பாகினன் பாதம் அன்று பிடித்தாய் - திருமால் அம்பாகியபோது அவனுடைய அடியைப் பிடித்து முப்புரத்தின்மீது எய்தாய். நம்ப - இறைவனே. கோள் நத்தானே - தீமைசெய்ய விரும்பாதவனே. நாகச்சிலை - மலைவில். (கஅக)

495 கப்பணைந்தந் தான்குடந்தைக் கார்வேளான் காசிதனில்
உப்பணந்தந் தான்கிரந்தம் ஒருவான்—முப்பணமும்
வப்பணமாய் மாற்றி மணிக்குழையில் தூங்கினேன்
அப்பணம்போ லாவா ரவர்.

(அ - ரை.) கப்பணம் - க பணம் (ஒரு பணம்) உப்பணம்- உ பணம் (இரண்டு பணம்) வப்பணம் - கால் (வ) பணம் (காற் பணம்). (கஅஉ)

[திருவிரிஞ்சையிற் பாடியது.]

496. வேண்டிய சைவனுர் விட்டதூ துக்கோமுன்
பாண்டியனுர் கையிலடி பட்டதற்கோ—ஆண்டவனே
வானோர் புகழ்விரிஞ்சை மார்க்க சகாயரே
ஏனோ தலையிறைஞ்சி வீர்.

(அ - ரை.) சைவனார்-ஆதி சைவராகிய சுந்தரமூர்த்தியடிகள். மார்க்கசகாயர்-திருவிரிஞ்சையில் எழுந்தருளிய இறைவன். தலையிறைஞ்சினீர் - தலைவணங்கினீர். (கஅ௩)

[திருவீரட்டானத்திற் பாடியது.]

497. இவரோவி ரட்டர் எனுநாமம் உள்ளோர்
இவரோ வழுவூரில் ஈசர்—இவரோ
கடத்தடக்க தக்கரிப்பி டித்திழுத்த ழுத்திமெத்த
அடித்தறுத் துரித்துடுத்த வர்.

(அ - ரை.) வீரட்டானம் - வீரத் திருப்பதிகள் எட்டில் ஒன்று. கடம் - மதம். தடம்-பெரிய. கதம்-சினம். கரி-யானை. உடுத்தவர் - கட்டியவர். (கஅச)

[திருவானைக் காவிற் பாடியது.]

498. கல்லால் அடித்ததற்கோ காலால் உதைந்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர்—சொல்லீரால்
மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென்முன் நாள்.

(அ - ரை.) மஞ்சு - முகில். (கஅரு)

[திருமழ பாடியிற் பாடியது.]

499. வலிய மழபாடி வயித்தியநா தற்குத்
தலைவலியாம் நீரேற்றந் தானும்—குலைவலியாம்
கையோடு சூலையாம் கால்வாத மாங்கண்மேல்
ஐயோ எழுஞாயி றும்.

(அ - ரை) நீரேற்றம் - கங்கை தலையில் உள்ளமையின் நீரேற்றம் என்றார். (கஅசு)

[அழகர் மலையிற் பாடியது.]

500. மீனமுகம் ஆமைமுகம் மேதினியெ லாமிடந்த
ஏனமுகம் சிங்கமுகம் என்னுமல்—ஞானப்
பழகரென்றும் சோலைமலைப் பண்பரென்றும் உம்மை
அழகரென்றும் பேரிட்டார் யார்.

(அ - ரை.) மேதினி - நிலவுலகம். இடந்த - தோண்டிய. ஏனம் - பன்றி. (கஅஎ)

[திருமங்கையிற் பாடியது.]

501. ஒரொரு மாஒன்றும் ஒன்பதுமா வின்கலையை
ஈரொருமா மும்மாவுக் கீந்ததே—பாரறியப்
பொன்மானின் பின்போன பூமங்கை யாள்வரரைக்
கன்மாவின் வீதிவரக் கண்டு.

(அ - ரை.) திருமாலின் திருஉலாவைக் கண்ட ஒரு மாதின் அரையிலிருந்த ஆடை நழுவிக் காலில் விழுந்ததென்பது பொருள். ஓர்ஒருமா ஒன்றும் ஒன்பதுமா - பத்துமா. அரை - இடை. ஈர் ஒருமாமும்மா - ஐந்துமா கால். (கஅஅ)

[குப்பச்சியாயி என்பவளுடைய இயல்பைக் கூறியது.]

502. சோற்றை அரசிலைமேல் தூவி வழுதுணங்காய்க்
கீற்றை அதன்மேற் கிடத்தியே—ஆற்றிமிக
அப்பச்சி கண்ணே அரசே அருந்தென்பள்
குப்பச்சி யாயி குணம்.

(அ - ரை.) அப்பச்சி - அப்பா. அருந்து - உண். (கஅக)

[கடைமொழி மாற்றாகப் பாடியன.]

503. இந்திரையை மார்பில் வைத்தான் ஈசன் உமையையிடத்
தந்தி பகலமைத்தான் அம்புயத்தோன்—கந்தமிகு,
வெண்டா மரைமயிலை வேண்டிவைத்தான் நாவிலுல(கு)
உண்டுமிழ்ந்த தாமரைக்கண் ணேன்.

(அ - ரை.) தாமரைக் கண்ணோன் இந்திரையை மார்பில் வைத்தான். ஈசன் உமையையிடத்தில், அந்தி பகல் அமைத்தான் என்று கூட்டுக. (ககூ0)

[இதுவுமது.]

504. அன்னந் திருமாலுக் காங்கருடன் சங்கரற்காம்
பன்னிடபம் இந்திரற்காம் பார்க்குங்கால்—துன்னு
மதவா ரணமளகை மன்னனுக்காம் பஞ்ச
கதிசேர் புரவிவிதிக் காம்.

(அ - ரை.) இடபம் - காளை. துன்னு - பொருந்திய. மதவாரணம் - மதயானை. அளகை மன்னன் - குபேரன். பஞ்சகதி சேர்புரவி - ஐவகைக் கதியையுடைய குதிரை. நான்முகனுக்கு அன்னம் திருமாலுக்கு கருடன் என்று கூட்டுக. (ககக)

[ஓர் அரசன் குதிரையைச் சிறப்பித்துப் பாடியது.]

505. கோக்குதிரை நின்குதிரை கோவன்மது ராவொன்னுர்
மாக்குதிரை யெல்லாம் மண்குதிரை—தூக்குதிரைத்
துங்கக் கரைக்குதிரை சொக்கன் குதிரைசது
ரங்கக் குதிரைகளே யாம்.

(அ - ரை.) கோக்குதிரை - சிறந்த குதிரை. கோவல் - திருக்கோவலூர். ஒன்னுர்-பகைவர். கரைக்குதிரை-நீருடைப்பை அடைப்பதற்கு வைக்கோல் முதலியவற்றோடு சேர்த்து நிறுத்தும் மரச்சட்டம். சொக்கன் குதிரை - நரி. பொய்க் குதிரை. (ககஉ)

[திருவாரூரிற் பாடியது.]

506. சேலை யுடையழகா தேவரகண் டாகழுநீர்
மாலை அழகா மணிமார்பா—வேலை
அடங்கார் புரமெரித்த ஆரூரா வீதி
விடங்கா பிரியா விடை.

(அ - ரை.) சேலையுடையழகர் - அழகிய ஆடையைக் கட்டியவர். வீதிவிடங்கர் - இறைவன் பெயர். (ககங)

[ஞானவரோதயர் என்னும் பெரியார் மதுரைக்குச் சென்றிருத்தலை உணர்ந்து அவருக்கெழுதி அனுப்பிய முடங்கற் பாட்டு.]

கட்டளைக் கலித்துறை

507. முதிரத் தமிழ்தெரி நின்பாடல் தன்னை முறையறிந்தே
எதிரொக்கக் கேட்பதற் கேழெழு பேரில்லை இன்றமிழின்
பதரைத் தெரிதரக் கோவில்லை ஏறப் பலகையில்லை
மதுரைக்கு நீசென்ற தெவ்வாறு ஞான வரோதயனே.

(அ - ரை.) முதிர - தேர்ச்சியாக. ஏழெழுபேர் - சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர். கோ - தலைவன். (கஉச)

[மாவலி வாணனைப் பாடிய வசை.]

வெண்பா

508. சொக்கன் மதுரையினில் தொண்டர்க்கு முன்னவிழ்த்த
பொய்க்குதிரை சந்தைக்குப் போகுமதோ—மிக்க
கரசரனு வந்தக் கரும்புறத்தார்க் கெல்லாம்
அரசரனு மாவலிவா னு.

(அ - ரை.) தொண்டர் - திருவாதவூரர். பொய்க்குதிரை - நரிக்குதிரை. (கஉரு)

[திருமலைராயனைப் புகழ்ந்து பாடியது.]

509. வீமனென வலிமிகுத்த திருமலைரா
யன்கீர்த்தி வெள்ளம் பொங்கத்
தாமரையின் அயனுடிச் சத்தியலோ
கம்புகுந்தான் சங்க பாணி
பூமிதொட்டு வானமட்டும் வளர்ந்து
நின்றுன் சிவன்கைலைப் பொருப்பிலேறிச்
சோமனையுந் தலைக்கணிந்து வடவரைத்தண்
டால்ஆழும் சோதித் தானே.

(அ - ரை.) அயன் - நான்முகன். சங்கபாணி - திருமால். சோமன் - திங்கள். கைலைப் பொருப்பு - கைலைமலை. (கசுசு)

[ஓர் ஊரில் ஏரியுடைந்து போகும்படி பாடியது.]

510. கலங்கல் துறையதனில் காராளர் போதத்
தெலுங்கப்ப நாரணன்தென் டிக்கச்—சலம்பெருகி
நட்டாறு கொண்டுகரை நன்ருய் உடைந்துநீர்
கட்டா தொழிதல் கடன்.

(அ - ரை.) கலங்கல் துறையதனில் காராளர் போத - கலங்கியோடும் நீர்ப்பெருக்கில் வேளாளர்கள் அடித்துக்கொண்டு செல்லப்படவும். நட்டாறு - நடு ஆறு. (கசுஎ)

[தெலுங்குப் பார்ப்பான் ஒருவன் இட்ட உணவை இகழ்ந்து பாடியது.]

511. ஏழாளை அடித்தபுலி தனையடித்தான்
வீரசென்னன் என்றே காட்டில்
வாழாமற் சிறுபுலிகள் ஈப்புலியோ
டெலிப்புலியாய் வடிவங் கொண்டு
பாழாகிக் காடெல்லாம் பரிதவித்து
வடுகர்அடுப் படியில் வந்து
கூழாகி வயிற்றினில்போம் பொழுதுகுணம்
போகாமற் குமுறுந்தானே.

(அ - ரை.) வீரசென்னன் - வீரசென்னன் என்னும் பெயருடையவன். ஈப்புலி - ஈ, எலிப்புலி - எலி. வடுகர் - தெலுங்கர். இட்ட உணவினால் வயிற்றில் இரைச்சலுண்டாகிக் குமுறவே இவ்வாறு பாடினர் என்க. (கசுஅ)

[செட்டிகள் பேசிக்கொள்ளும் வணிக மொழியைக் கேட்டுப் பாடியது.]

512. கருந்தலை செந்தலை தங்கான்
திரிக்கால் கடையிற்சுற்றி
வருந்திக் குடவற்குந் தாட்டிக்குங்
கொத்திட்டு மாய்வதல்லால்

கரந்தைகள் ஆண்டில் ஒருக்கால்
வருவது கண்டிருந்தும்
அரும்புக்குங் கொத்துக்கும் வந்தார்
பிழைப்ப தரிதென்பரே.

(அ - ரை.) கருந்தலை - கால், செந்தலை - அரைக்கால், தங்கான் - அரை, திரிக்கான் - முக்கால். குடவற்கும் - தேவடியாளுக்கும். தாட்டிக்கும் - வைப்பாட்டிக்கும். கொத்திட்டு - சோறிட்டு. கரந்தைகள் - குருக்கள். அரும்புக்கும் - அரிசிக்கும். கொத்துக்கும் - சோற்றிற்கும். பிழைப்பது - இனிமேல் நாம் பிழைப்பது. (கசுக)

[நெல்லிக்காய் ஊறுகாயைக் களவுசெய்த பெண்களைக் குறித்துப் பாடியது.]

513. பாடுபட்டுத் தேடிப் பலகாரம் உப்பமைத்தே
ஓடுவட்ட மாக உடைத்தடைத்து—வேடுகட்டும்
நெல்லிக்கா யைத்திருடும் நீலிகாள் உங்களிடை
இல்லிக்கார் ஆப்பேற்று வார்.

(அ - ரை.) வேடுகட்டும் - ஊறுகாய் போட்டு வேடுகட்டி வைத்திருக்கும். இடை இல்லி - இடைக் கரடக்கல். (உOO)

[தில்லைக்கூத்தப்பிரான்மீது பாடியது.]

514. பொன்னஞ் சடையறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
தன்னெஞ் சுவகையுறத் தாவுமே—அன்னங்கள்
செய்க்கமலத் துற்றுலவுந் தில்லை நடராசன்
கைக்கமலத் துற்றமான் கன்று.

(அ - ரை.) அறுகம்புல் - இறைவன் தலையில் அணிந்த அறுகம்புல். உவகை - மகிழ்ச்சி. செய்க்கமலம் - வயலில் உள்ள தாமரை. கைக்கமலம் - கைத்தாமரை. சிவபெருமான் கரத்தில் இருக்கும் மான்கன்று அவ்விறைவன் தலைமேலிருக்கும் அறுகம் புல்லைத்தின்ன வேண்டும் எனவும், கங்கை நீரைக்குடிக்க வேண்டும் எனவும் நினைத்துத் தாவிக்கொண்டேயிருக்கும் என்று கற்பனையாகக் கூறியது இது. (உOக)

[கூத்தப்பிரான் கூத்தியற்றும் பக்கத்தே திருமால் கால் நீட்டிப் பள்ளிகொண்டிருத்தலைக் கண்டீரா? என்று சிலர் கேட்ட போது பாடியது.]

515. ஆட்டுக் கிசைந்தவர் அம்பல வாணர் அவர்க்கெதிரே
நீட்டிற்று மால்வட பாலினிற் காலென நீநினையேல்
சூட்டுற்ற முப்புரம் செற்றவர் தம்மைச் சுமந்தலுத்த
மாட்டுக்கென் னேஇடம் கால்நீட்டல் சொல்ல
[வழக்கில்லையே.

(அ - ரை.) ஆட்டுக்கு - திருக்கூத்துக்கு. மால் - திருமால், சூட்டுற்ற - சுடுதலடைந்த. (உ0உ)

[சிலர் திருமாலே பரம்பொருள் என்று கூறியபோது பாடியது.]

516. சத்தாதி யைந்தையுந் தாங்காத
தெய்வந் தனிமறையும்
கத்தா எனுந்தெய்வம் அம்பலத்
தேகண்டுங் கண்கள் இரு
பத்தான வன்மைந்தன் பொய்த்தேவி
யைக்கொல்லப் பார்த்தழுத
பித்தான வன்தனை யோதெய்வ
மாகப் பிதற்றுவதே.

(அ - ரை.) சத்தாதி ஐந்தையும் - ஒலி முதலிய ஐந்து விடயங்களையும். கண்கள் இருபத்து ஆனவன் மைந்தன் - இந்திர சித்து. பொய்த்தேவி - மாயா சீதை. பித்தானவன் - இராம பிரான். (உ0ங)

[இடபவாகனக் காட்சியைக் கண்டு பாடியது.]

517. ஆடெடுத்த தில்லை அனவரதத் தாண்டவனை
மாடெடுத்துப் போவதென்ன மாயமோ—நீடுமுயர்
வானத்தார் போற்றுகின்ற வண்மைச் சிதம்பரத்துத்
தானத்தார் பார்த்திருக்கத் தான்.

(அ - ரை.) ஆடு எடுத்த - ஆடுதலை மேற்கொண்ட. அனவரத தாண்டவன் - எப்பொழுதுங் கூத்தியற்றுவோன். மாடு - காளை ஊர்தி. வானத்தார் - தேவர். தானத்தார் - இருப்பிடத்தையுடையவர். (உ0௪)

[முப்புரங்களையும் காமனையும் எரித்ததைக் கூறித்துப் பாடியது.]

518. சித்தசனை முப்புரத்தைச் செந்தழலாய் வீழவொரு
பத்தினியைக் கொண்டெரியப் பண்ணினன்—நித்தம்
மறையோத விற்றிருக்கும் மண்டலமென் தில்லைப்
பிறைசூடும் வேணிப் பிரான்.

(அ - ரை.) சித்தசன் - காமன். பத்தினி - நெற்றிக்கண். (உ0௫)

[மதுரையில் பாடியது.]

519. போலநிறம் ஆவார்க்குப் பூணரம் ஆவாரை
ஏலவதை செய்தால் இயல்பாமோ—சாலப்
பழிக்கஞ்சுந் தென்மதுரைப் பாவையிர் எட்டு
விழிக்கஞ்சன் ஈசனலை வேந்து.

(அ - ரை.) இருநான்கு விழிக்கஞ்சன், நான்முகன். சோமன்- திங்கள். அலைவேந்து - வருணன். போலநிறம் ஆவார்க்கு - இவர்களைப்போல் செம்மை, வெண்மை, கருமை என்னும் நிற வேற்றுமையுடைய இப்பெண்ணின் பொருட்டு. பூணாரம் ஆவார்- ஆடு. ஆட்டையறுத்துண்போர் சிறுக அரிந்து மாலையாகக் கட்டி வெயிலில் உலரவைத்தல் வழக்கம். இவ்வாறு செய்தல் ஆட்டுவத்தலின் பொருட்டு. இதனைக் கண்ணுற் கண்டிருந்த புலவர் ஆட்டினை இவ்வாறு பூணாரமாவார் என்று நகைச்சுவை ததும்பக் கூறினார். ஏல - பொருந்த. சால - மிகவும். பாவையீர்! - பாவையைப்போன்ற பெண்களே! (உ0௬)

[திருத்துருத்தியில் இறைவன் அணிகலனாகிய பாம்பைக் குறித்துப் பாடியது.]

520. காலையிலும் வேலை கடையக் கயிறுகும்
மாலையிலும் பூமுடித்து வாழுமே—சோலைசெறி
செய்யிலா ரம்பயிலும் செந்துருத்தி மாநகர் வாழ்
பொய்யிலா மெய்யரிடும் பூண்.

(அ - ரை.) கால் அயிலும் - காற்றைப் புசிக்கும். வேலை கடைய - கடலைக் கடைய. மால் அயிலும் - திருமால் உண்ணும். பூமுடித்து வாழும் - நிலத்தைத் தலையிலே தாங்கி வாழும். செய்யில் ஆரம் பயிலும் - வயலில் முத்துக்கள் மிகுந்திருக்கின்ற. பொய்யிலா - அழிவில்லாத. பூண் - அணிகலம். காலை - முற்பகல் மாலை - பிற்பகல். காலையிலும் அவற்றின் வேலை கடையக் கயிறுவது. மாலையிலும் மலரை முடித்து வாழும் வேலை என மற்றும் ஒரு பொருள் தொனிப்பது காண்க. (உ0எ)

[திருவரங்கர்மீது பாடிய வேற்றுமைச் சிலேடை]

521. பாங்கு பெறுந்திரு ஐந்நூற் றிரட்டிப் பணவிடையில்
தூங்கும் அதிலொரு மாவேற்றம் உண்டு சுரர்முனிவர்
ஆங்கவர் செப்பிற் கடங்கா துலகம் அனைத்தும்பெறும்
ஓங்கும் அரங்கத் திருப்பெட் டகத்துள் ஒருமணியே.

(அ - ரை.) பாங்குபெறும் - அழகு பெற்றிருக்கும். திரு ஐந்நூற்று இரட்டி பணவிடையில் தூங்கும் - (மணி) அழகாகிய ஆயிரம் பணத்தின் எடையென்னும் நிறைபெற்றிருக்கும்; (திருவரங்கமணி) அழகைக் கொண்டிருக்கின்ற ஆதிசேடனது அழகிய ஆயிரம் பண மகுடங்களிடையே பள்ளிகொண்டிருக்கும், அதில் ஒருமா ஏற்றம் உண்டு—(மணி) ஒருமாப் பொன் அதிகமாக இருக்கும் (திருவரங்கர்மணி) ஒப்பற்ற திருமகள் அமர்ந்திருத்தல் உள்ளது. சுரர் முனிவர் செப்பிற்கு அடங்காது—(மணி) தேவர் முனிவர் முதலியோர் வைத்திருக்கும் செப்புக்குள் அடங்க மாட்டாது. (திருவரங்கர்மணி) தேவர் முனிவர் முதலியோர்களால் இத்தன்மையன் என்று சொல்லக்கூடிய சொல்லுக்குள் அடங்காது. திருப்பெட்டகத்துள் - அழகிய பெட்டிக்குள். (உ0அ)

[திருவரங்கர் திருமுன்பு முருகர்வர அவருடைய மயில் ஊர்தியைக்கண்டு திருவரங்கரின் அணையாகிய பாம்பு அஞ்சியதாகப் பாடியது.]

522. இரண்டிமை யோர்தொழுந் தென்னரங்
கேசர்முன் செங்கைகளா(று)
இரண்டுடை யோனும் எதிர்சென்ற
தால்எதிர்ந் தார்தமைக்கண்(டு)

அரண்டெழும் ஐவர்க்குத் தேரூர்
பவன்கொள் அணைவெருண்டு
புரண்டொரு புற்றைக் கடந்தொரு
புற்றிற் புகுந்ததுவே.

(அ - ரை.) திரண்டு - கூடி. இமையோர் - தேவர். செங்கைகள் ஆறிரண்டுடையோன் - முருகன். எதிர்ந்தார் - எதிர்த்தவர். அரண்டுளழும் - அஞ்சியெழும். அணைவெருண்டு - படுக்கையாகிய பாம்பு அஞ்சி. (உ0௧)

[திருமோகூர்]

523. பொன்னனைவா ளரக்கனைநாற் றுவரைக் காவைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்னன் ஈன்ற
நன்மகற்காய்ச் சூர்க்காயை வருக்காய்க் காதல்
நட்பினுக்காய்ச் சானகிக்காய் நடவைக் காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்க ளாலும்
முன்னுடல்கீ றிச்சிரங்கொண் டமரில் விழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்தான் மோகூரானே

(அ - ரை.) பொன்னன் - இரணியன். வாள் அரக்கன்-இராவணன். கா - பாரிசாத மரச்சோலை. பொருசிலை - போர்புரிதற்குரிய வில். பொன்னன் ஈன்ற மகன் - பிரகலாதன். நடவை-வழி. சானகி - சீதை. மன்உகிர் - நிலைபெற்ற நகம். வளை - சங்கு. புள் - பறவை. உடல்கிறி - உடம்பைப் பிளந்து. முதலொடுங்கொண்டு-வேரொடு பெயர்த்து எடுத்து. பொன்னனை நன்மகற்காய் உகிரால் உடல்கிறி என்று கூட்டுக. இம்முறையே நிரனிறையாகப் பொருள் கொள்க. பொன்னனை, வாளரக்கனை, நூற்றுவரை, காவை, பொருசிலையை, சுனை கடலை என முதலடியில் வைத்த முறையை ஆய்ந்து அவ்வாறே பொருள் கொள்க. (உ௧0)

524. கூற்றுவனை வின்மதனை அரக்கர் கோவைக்
கூவிலவைக் குஞ்சரத்தை இஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்கள்
இறவெறிப்ப இமையப்பெண் வெருவ வேவக்

காற்றொழிலால் நயனத்தால் விரலாற் கற்றைக்
கதிர்முடியால் கரதலத்தால் கணையாற் பின்னும்
ஊற்றழிய உதைத்தெரித்து நெரித்துச் சுடி
உரித்தெரித்தான் அவனென்னை உடைய கோவே.

(அ - ரை.) கூற்றுவன் - நமன். வில்மதன் - காமன். அரக்கர்கோ - இராவணன். கூன்நிலவு - வளைந்த திங்கள். குஞ்சரம்- யானை. இஞ்சி-மதில். இற - முறிய. எறிப்ப - விளங்க. வெருவ- அஞ்ச. கால்தொழிலால்-காலின் வேலையால், அஃதாவது உதைத்தலால். நயனத்தால்-கண்ணால்; அஃதாவது பார்வையால். ஊற்று அழிய - வலிமை கெடுமாறு. கூற்றுவனை ஏற்று உலகின்புறக் காற்றொழிலால் உதைத்து எனக்கூட்டுக. இம்முறையே மற்றவைகளையும் நிரனிறையாகப் பொருத்திக்கொள்க. (உ௧௧)

[திருக்கண்ணமங்கை நம்பிமார்மீது பாடியவசை]

525. திருக்குலவு கண்ணமங்கைத் தானத்தா ரெல்லாந்
திருக்குளத்து மீனுழியத் தின்றூர்—குருக்கொடுக்கும்
நம்பிமார் என்றிருந்தோம் நாட்டில் அழிகூத்தி
தம்பிமா ராயிருந்தார் தாம்.

(அ - ரை.) தானத்தார்-திருப்பதியில் உள்ளவர்கள். கூத்தி- விலைமகள். (உ௧உ)

[புலிக்குட்டிசிங்கன்மீது பாடிய வசை.]

526. பேரனபோன விடந்தோறுந்தலைப் பொட்டெழுப்பிறர் குட்டவே
புண்படைத்த மனத்தனுகிய,பொட்டிபுத்திர னத்திரன்
மானவினன் இலச்சை கேடன்ஒழுக்கமற்ற புழுக்கையன்
மாசனும்புலிக் குட்டிசிங்கன் வரைக்குளே றியிறங்குவிர்
பேனுமீரு மெடுக்கவோசடை பின்னி வேப்ப நெய்வார்க்கவோ
பிவிழிக்கரி எழுதவோவொரு பிறுதுண்டம் உடுத்தவோ
கானகந்தவில் வைக்கவோ இருகால் விலங்கிடு விக்கவோ
காதகங்கொடு சாடவோவொரு காரியந்தனை யேவுமே.

(அ - ரை.) பொட்டி - விலைமகள், அறிவற்றவள். மான ஈனன் - பெருமையற்றவன். பீறுதுண்டம் - கிழித்த ஆடை. (உகங)

[குடவாசல்விண்ணுள்மீது பாடிய வசை.]

527. செக்கோ மருங்குல் சிறுபய ரோதனம் சிக்களகம்
வைக்கோற் கழிகற்றை யோகுழி யோவிழி வாவிதொறும்
கொக்கேறி மேய்குட வாசல்வின் ணுள்வரைக் கோம்பியவீர்
எக்கோ படைத்தது நீரேநெருப்பி லெரிந்தவரே.

(அ - ரை.) மருங்குல் - இடை, சிக்களகம் - சிக்குடைய கூந்தல். வாவி - தடாகம். (உகச)

௩௯. அதிமதுர கவிராயர்

[இவர் திருமலைராயன் பட்டினத்தில் அரசன் அவைக்களப் புலவராக இருந்து காளமேகப் புலவரை எதிர்த்தவர், அறுபத்து நாலு தண்டிகைப் புலவர்களுக்குத் தலைவராக இருந்தவர்.]

[காளமேகப் புலவருக்குமுன் தம்முடைய ஆற்றல் தோன்றப் பாடியது.]

வெண்பா

528. மூச்சுவிடு முன்னே முந்நூறு நானூறும்
ஆச்சுதென்றால் ஆயிரம்பாட் டாகாதா—பேச்சென்ன
வெள்ளைக் கவிக்காள மேகமே நின்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு.

(அ - ரை.) வெள்ளைக்கவி - பொருட்சிறப்பல்லாத கவி. கள்ளக்கவி - போலிப்பாடல். (க)

௪௦. பொய்யாமொழிப் புலவர்

[இவர் பிறந்த நாடு தொண்டைநாடு என்பர். இவர் சிவனையன்றி வேறு தெய்வங்களைப் பாடேனென உறுதி பூண்டிருந்த காலை, முருகக் கடவுள் அவருடைய உறுதியைக் குலைத்,

துத் தம்மைப் பாடும்படி செய்தனர். இவர் செய்துள்ள தஞ்சை வாணன் கோவை என்பது நாற்கவிராச நம்பி செய்த அகப் பொருளுக்குச் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றது. தஞ்சை வாணன் கோவையை யன்றி வேறு நூல்கள் இவர் பெயரால் வெளிவந்தில].

[குதிரை மாளப் பாடியது.]

529. வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே
ஆய்த்த மணலில் அணிவரையில்—காய்த்த
கதிரைமா ளத்தின்னுங் காலிங்கன் ஏறும்
குதிரைமா ளக்கொண்டு போ.

(அ - ரை.) *ஆய்த்தமணலில் - நுண்ணிய நிலத்தில். அணிவரையில் - மலைச்சாரலில், மாளத்தின்னும்-தொலையும்படி தின்கின்ற.* (க)

[சீனக்கன் இறந்தபோது பாடியன.]

530. வாழி சோழஎன் வாய்மொழி கேண்மோ
ஊழி நிலவெறி மாளிகை யின்வயிற்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்றறி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடமி னெனக்கிடந் தருகெனச்
சொல்லிய நண்பன் தனிச்செல் பவனே
நானும் ஏகுவன் நற்றுணை அவற்கே.

(அ - ரை.) *ஊழிநிலவெறி மாளிகையின்வயின் -முறையாக நிலவொளி வீசுகின்ற மாடத்தினிடத்தே. கவின்பெறுசேர்க்கை-அழகிய படுக்கை.* (உ)

[இதுவுமது.]

531. அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆருயிர்விட்(டு)
இன்றுநீ வானுலகம் ஏறினாய்—மன்றல் கமழ்
மானுக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்ச்
சீனக்கா செல்லக் கிட. (ங)

[பொற்றாமரைக் குளத்தில் மூழ்கிக்கிடந்த சங்கப்பலகை மேல்எழும்படி பாண்டியன் கேட்கப் புலவர் பாடியது.]

532. பூவேந்தர் முன்போற் புரப்பார் இலையெனினும்
பாவேந்தர் உண்டென்னும் பான்மையால்-கோவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
விறலேயே சற்றே மித.

(அ - ரை.) பூவேந்தர் முன்போல் புரப்பார் இலையெனினும் உலகத்திலுள்ள அரசருள் முற்காலத்திற்போலத் தமிழைப் பேணுபவர்களில்லையானாலும், வீறணேயே - தனிச்சிறப்புள்ள இருக்கையாகிய பலகையே, சற்றேமித -சிறிது நேரம் நீரின்மேல் மிதப்பாயாக, இப்பாட்டால் அணை நொடிப்போது மிதந்த தென்ப. (சு)

[சங்கப்புலவராகிய சிலேகள் தலையசைக்கப் பாடியது.]

533. உங்களிலே யாளுெருவன் ஒவ்வுவனே ஒவ்வேனே
திங்கட்குலனறியச் செப்புங்கள்—சங்கத்திர்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழும் ஒக்குமோ
ஏடெழுதார் ஏழ்எழுவிர் இன்று.

(அ - ரை.) ஏடு எழுதார் ஏழெழுவீர் - இதழ்கள் மலர்ந்த மாலையணிந்த நாற்பத்தொன்பதின்மரே. திங்கள் குலனறியச் செப்புங்கள்-மன்னனாகிய பாண்டியன் தெரியும்படி கூறுங்கள். (ரு)

[முட்டை என்று பெயர்கூறிய முருகன்மீது பாடியது.]

534. பொன்போலுங் கள்ளிப்பொறி பறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாருய தெவ்வர்போம்
கானவேன் முட்டைக்குங் காடு.

(அ - ரை.) மானவேல் - சிறப்புப் பொருந்திய வேல், தெவ்வர் - பகைவர், வேன்முள் - வேலமரத்து முள். பாற்கள்ளியே பொறியாகப் பறக்குங் கானலில் வேலமுள் கிடத்தல் பொருந்தா தென்று இப்பாட்டை முருகக் கடவுள் மறுத்தருளினர். (சு

[பாண்டியன், சொக்கநாதரைப் பணிந்து நின்றபோது பாடியது.]

535. குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுத முகையவிழ
நிழற்கால் மதியமன் ரேநின் திருக்குல நீயவன்றன்
அழற்கா லவிர்சடை மீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே.

(அ - ரை.) குழற்கால் - துளையுள்ள நாளம். அரவிந்தம் கூம்ப - தாமரை குவிய. குமுதமுகையவிழ - அல்லிமொட்டு மலர அந்தி வண்ணன் - செந்நிறமுடையவன். கழற்கால் - வீரக்கழலை யணிந்த திருவடி. கைதவன் - பாண்டியன். "பாண்டியனே! நின்குலம் திங்கட்குலம்; திங்கள் சிவன் சடையில் இருக்கின்றான்; நீ ஏன் சிவன் அடிகளை வணங்க வேண்டும் என்றார். (எ)

[பாண்டியன் நீரே உயர்ந்த புலவன் என்ற போது பாடியது.]

536. அறமுரைத் தானும் புலவன் முப்பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனின்.

(அ - ரை.) முப்பாலின் திறமுரைத்தான் - திருவள்ளுவர். குறுமுனி - அகத்தியன். தரணி - உலகம். (அ)

[ஆடை வெளுத்துக் கொடுத்த வண்ணாத்தியைப் புகழ்ந்து பாடியது.]

537. தூசுதூ சாக்குவார் பாவை சுடர்த்தொடிக்கை
ஆசிலாக் கண்டியூர் ஆரணங்கு—வாசமலர்க்
கண்ணங்கை கொங்கைமுகம் காலுங் கடிக்கமலம்
கண்ணங்கை கொங்கைமுகம் கால்.

(அ - ரை.) தூசு - ஆடை. தொடிக்கை - வளையலணிந்த கை, ஆசு - குற்றம். வாசமலர்க்கண் நங்கை - திருமகள். கடிக் கமலம் - புதுமை பொருந்திய தாமரை. கொங்கு + ஐ = கொங்கை முகம் காலும் = மணத்தைத் தன்னிடமிருந்து கக்குகின்ற, கடிக் கமலம்—கண் அங்கை கொங்கை முகம் கால் எனக் காண்க. (௯)

[திரிசிராமலையைப் பாடியது.]

538. அங்கம் புலியத ளாடையைச் சாத்திநல் லார்வமுடன்
பங்கம் புலிவைத்த பண்பார்க்கிடம்பணை வாளெயிற்று
வெங்கண் புலியைவிட் டியானையைத்தேடி விதம்விதமாச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே.

(அ - ரை.) அதள் - தோல். அம்புலிவைத்த - திங்களைச் சூடிய. பணை - பெருத்த. (கo)

[குலோத்துங்க சாவகன்மீது பாடியவசை.]

539. கோதில் குலமங்கை குலோத்துங்க சாவகனென்(று)
ஓதினேன் தன்னை ஒறுத்ததனுல்—மாது
துளையாத முத்துவடந் தூக்கினுள் ஆரம்
விளையாடு செப்பிரண்டின் மேல்.

(அ - ரை.) துளையாத முத்து வடம் - கண்ணீர். ஆரம் விளையாடு செப்பு இரண்டு - முத்து மாலைகள் அணிந்து விளங்குகின்ற கொங்கைகள். (கக)

[அம்பி என்னும் விலை மகள் மீது பாடியது.]

540. பத்தம்பிற் பாதி யுடையான் இரண்டம்பிற்
கொத்தம்பி யென்பாள்பாற் கோட்புக்குச்—சுத்தப்
பசும்பொன் அரவல்குல் பாவையர்க்குத் தோற்று
விசும்பிடைவைத் தேகினுன் வில்.

(அ - ரை.) பத்தம்பிற்பாதி - ஐந்து அம்புகளையுடைய காமன். இரண்டு அம்பு - கண். விசும்பு - விண். (கஉ)

---

௬௧. பொய்யாமொழிப் புலவர் ஆசிரியர்

[தம்மாணவராகிய பொய்யாமொழியாரைப் புகழ்ந்து பாடியது.]

541. பொதியில் அகத்தியனுய்ப் பொய்யா மொழியாய்ச்
சிதைவில் புலவர் மணியாய்த்—துதிசேரும்
செங்காட்டம் கோட்டத் துறையூர் எனுந்தலத்தில்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்.

(அ - ரை.) ஆட்டங் கொண்டிருப்பாய் - மக்கள் யாக்கையில் ஆடுதலைச் செய்திருப்பாய். (க)

சூஉ. ஒப்பிலாமணிப் புலவர்

[இவருடைய பிறப்பிடம் காலம் முதலியன விளக்கமாகவில்லை. இவர் பாடியதாக வழங்கும் சில பாடல்கள் வேறு பெயராலும் வழங்குகின்றன.]

[குமணன் காட்டில் இருந்த காலத்தில் அவன்பாலுற்றுப் பாடியது.]

542. ஆடெரி படர்ந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்பசி உழல
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைதொறும் சுவைதொறும் பால்கா ணுமல்
குழவி தாய்முகம் நோக்க
மனைவி என்முகம் நோக்க யாமும்
நின்முகம் நோக்கி வந்தனம் குமணு.

(அ - ரை.) ஆடு எரிபடர்ந்த - ஆடி அசைகின்ற தீ நாக்குகள் பரவிய. கோடு உயர் - பக்கங்கள் நிமிர்ந்திருக்கிற. ஆம்பி - காளான். இல்லி - துவாரம். குழவி - குழந்தை. (க)

[மாந்தைக் கம்மாளன் பொய்த்தலை செய்து கொடுத்ததைப் புலவர் வியந்து பாடியது.]

543. மாந்தையிலே வாழும் மகுடத்தியாகி யுனக்(கு)
ஏந்து தழும்போ இரண்டுளவே—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித் தழும்புன் கையிலே பார்.

(அ - ரை.) மகுடத்தியாகி - பொய்த்தலை செய்து கொடுக்கும் கொடையாளனே. ''வேந்தர் முடித்தழும்புன் காலிலே'' என்றது முடிவேந்தர்க்குச் செய்யும்போது காலில் அமுக்கி வைக்கப்படலால் தழும்புபடும் என்பதைக் காட்டியது. (உ)

[புலவர் தம் வறுமையை நீக்குவது அரிதோ என்று குமணனைப் புகழ்ந்து பாடியது.]

544. ஆறு பெருக்கற் றருந்திடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ உலகாற்றத்—தேற
வறியையோ யானுலும் என்கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமணு செப்பு.

(அ - ரை.) *ஊறல் அமையாதோ - ஆற்றினுடைய ஊற்று நீரானது வாராதோ.* (ங)

முருகக் கடவுள்மீது பாடியது (தலைவி கூற்று)

545. வில்லை வளையாதே மீசைமுறுக்கிச் சினத்து
முல்லைமல ரம்பையென்மேல் மோதாதே—நில்லடா
வந்தா ரடாமுருகர் வந்துகடப் பந்தாரைத்
தந்தா ரடாமன்ம தா.

(அ - ரை.) *முல்லைமலர் அம்பை மோதாதே - என்மீது முல்லைப் பூவாகிய கணை தாக்கும்படி செய்யாதே.* (ச)

[அன்னம் விடுதூது.]

546. செந்திக் குமரன் திருவழகைக் கண்டவுடன்
வந்திக்கு மாரன் வதைக்கின்ருன்—அந்திக்கு
முன்னமே சென்றென்றன் மோகமெல்லாஞ்சொல்லிவந்தால்
அன்னமே கும்பிடுவேன் யான்.

(அ - ரை.) *வந்து + இக்கு + மாரன் - கரும்பினை வில்லாக வுடைய மன்மதன் அந்திக்கு முன்னமே-மாலைகாலத்திற்கு முன்னதாகவே.* (ரு)

[தலைவி ஊடித் தூதனிடங் கூறியது.]

547. தங்கள் தனமிருக்கத் தார்வேந்தர் எல்லோரும்
எங்கள் தனத்துக்கே யிச்சிப்பார்—எங்கள்தனம்
கச்சிருக்கும் பாலிருக்கும் காமபா ணங்கள்பட்டுப்
பிச்சிருக்கும் வேண்டாம் பிளாய்.

(அ - ரை.) எங்கள் தனம்-எங்கள் கொங்கை. கச்சிருக்கும்-கைத்துப் போயிருக்கும். தனம் - பொருள் என்றும், ரவிக்கை அதன் மேல் மூடியிருக்கும் என்றும் பொருள் கொள்க. (௬)

[கூவத்து நாரணனென்னும் வள்ளல் இறந்ததறிந்த புலவர் வருந்திக் கூற்றுவனை இகழ்ந்து பாடியது.]

548. இடுவோர் சிறிதிங் கிரப்போர் பெரிது
கெடுவாய் நமனே கெடுவாய்—படுபாவி
கூவத்து நாரணனைக் கொன்றுயே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கரிக்கு.

(அ- ரை.) கற்பகப் பூங்கா வெட்டலாமோ - கற்பகச் சோலையைத் தறிக்கலாகுமா. (எ)

[செய்யூரில் வாழும் நயினர் என்னும் செல்வன்மீது தலைவி கூற்ருகப்பாடியது.]

549. மையூருங் கண்ணூர் மயங்கப் பொருகரும்பு
கையூருங் காமாவுன் கண்ணனை—செய்யூர்
வளவனையி னூர்பிரிந்த வாறுனக்குச் சொன்ன
உளவனையி னுரென் றுரை.

(அ - ரை.) பொருகரும்பு கையூரும் காமா - சண்டை செய்தற்குரிய கரும்புவில் கையில் நிலவப்பெற்ற மன்மதனே. உளவன் - ஒற்றன். இனுர் - இன்னவர். (அ)

[இரவு நீடுவதைக் குறித்துத்தலைவி இரங்கியது.]

550. ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ யான்வளர்த்த
கோழிவாய் மண்கூறு கொண்டதோ—ஊழி
திரண்டதோ கங்குல் தினகரனுந் தேரும்
உருண்டவோ பாதாளந் துள்.

(அ - ரை.) ஆழிவாய்ச் சத்தம் - கடலிலுள்ள ஒலி. ஊழி திரண்டதோ கங்குல் - ஊழியானது இந்த இரவாக உருவெடுத்ததோ. தினகரனும் தேரும் - பகலவனும் அவனுடைய தேரும். (௯)

[இதுவுமது.]

551. அரவங் கரந்ததோ அச்சுமரம் இற்றுப்
புரவிக் கயிறுருவிப் போச்சோ—இரவிதான்
செத்தானே இல்லையோ தீவினையோ பாங்கிளனக்(கு)
எத்தால் விடியும் இரா.

(அ - ரை.) அரவம் கரந்ததோ - பாம்பு கதிரவனை ஒளித்துக்கொண்டதோ. எனக்கு எத்தால் இரா விடியும் - எனக்கு எப்படி இந்த இரவு கழிந்துபோகும். (கo)

[நற்றாயிரங்கல்.]

552. முலையுங் குழலு முளைப்பதற்கு முன்னே
கலையும் வளையுங் கழன்றாள்—மலையில்
சிராப்பலியான் ஏறிவருஞ் சேவின்மணி யோசைக்(கு)
இராப்பளியுங் கொள்ளாள் இவள்.

(அ - ரை.) சே - எருது. கலையும் வளையும் - ஆடையும் வளையலும். இராப்பள்ளியுங் கொள்ளாள் - இரவிலும் படுக்கையிற் படுக்காதிருக்கிறாள். (கக)

[தலைவி தலைவனோடு புலத்தல்.]

553. பாண்டியன்தா ரானேன் பசலைமுலை பாலானேன்
ஆண்டிகையிலேந்தியதொன்றானேனே—வேண்டியபோ(து)
உள்ளங்கைத் தேனானேன் ஓர் மதலை பூத்தபின்பே
உள்ளங்கைத் தேனா னுனக்கு.

(அ - ரை.) உள்ளங்கைத்தேன் ஆனேன் - உன் உள்ளங்கையிலிருக்கிற தேன்போல உனக்குப் பயப்பட்டேன். உள்ளம் கைத்தேன் - உன்னுளத்தில் வெறுக்கத்தக்கவளானேன் - பாண்டியன்தார் - வேம்பு. (கஉ

[முட்டத்துப் பெருமான்மீது பாடியது.]

554. முட்டத்துப் பன்றி முளரித் திருப் பதத்தைக்
கிட்டத்துப் பன்றிக் கிடந்தேனே—தொட்டு
மருங்கிலே சங்கெடுத்த மாலே யெனக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா.

(அ - ரை.) பன்றி - வராகப் பெருமாள். முளரித்திருப் பதத்தை - திருவடித்தாமரையை கிட்ட துப்பு அன்றி - நெருங்கு வதற்கு வலிமையில்லாமல். கிலேசம் = துன்பம். (௧௩)

[அறிவாளிகள் செய்கின்ற தன்மை இவைகளாமெனப் பாடியது.]

555. மாதர்க் கிதங்கவி வாணர்க்குச்
சால வணக்கங்குரு
நாதர்க்கு நீதியோ டாசார நண்பில்
நயந்தவர்க்குக்
கோதற்ற வாசகம் பொய்க்குப்பொய்
கோளுக்குக் கோளறிவி
லாதர்க் கிரட்டிப் பறிவுடை
யோர்செய்யும் ஆண்மைகளே.

(அ - ரை.) கவிவாணர்க்குச் சாலவணக்கம் - பாவலருக்கு மிகுந்த வழிபாடு செய்தல். கோதற்ற வாசகம் - பிழை இல்லாத நன்மொழி பகர்தல். (௧௪)

[சண்பகவல்லியம்மையாரைத் துதித்துப் பாடியது.]

556. பாட்டா னதைவண்டு பாடுங்
குழற்சண் பகவல்லிதன்
தாட்டா மரையைத் தொழுதேன்
இனியென் தலையில்விதி
தீட்டான் கருமுகில் போலே
வருமந்தச் சேட்டெருமை
மாட்டான் இனிவர மாட்டான்வந்
தாலும் வணங்குவனே.

(அ - ரை.) விதி தீட்டான் - வினைப்பயனை வரைய மாட்டான், கருமுகில் போலே வரும் - கரிய முகிலைப் போல உயிர் கொண்டு போகவரும். அந்த சேட்டு எருமை மாட்டான் - அந்தப் பெரிய எருமை மாட்டு ஊர்தியை யுடையவனாகிய எமன். (௧௫)

557. சீமானு நாமகள் கோமானு மேத்தித் தினம்பணிந்து
பூமாலை சாத்திய ரத்ன சபாபதி பொன்னடிக்குப்
பாமாலை சாத்திநின் றேன்அவ னுல்மிகப் பாடுபட்ட
ஏமாவுன் னுலினி யாமாவென் பாலினி யெய்துதற்கே.

(அ - ரை.) ஏமா - ஏமனே. ஆமா - முடியுமா. (கசு)

[திருவொற்றியூர்த் தியாகராசப் பெருமானைத் துதித்துப் பாடியது.]

558. தடங்கொண்ட கல்வில்லின் மெல்லெனப்
பூட்டித் தமதுரத்தில்
வடங்கொண்டு சாத்தி விடங்கொண்டு
பார்த்து மணிகிளரும்
படங்கொண்ட பாம்பிற் பழகிய
பின்மலைப் பாவைதன்னை
இடங்கொண்ட வெற்றித் தியாகேசர்
புற்றி னிடங்கொண்டதே.

(அ - ரை.) மலைப்பாவை - உமையம்மை. புற்றினிடங் கொண்டது - பாம்புப் புற்றைத் தமக்குத் தங்குமிடமாக ஏற்படுத்தியது. தடம் கொண்ட கல்வில்லின் - விசாலமான மேரு மலையாகிய வில்லினிடமாக, உரத்தில் வடம் கொண்டு சாத்தி - மார்பினிடமாக மாலைபோலத் தரித்துப் பார்த்து, விடம் கொண்டு பார்த்து நஞ்சையுண்டு கவனித்து. (கஎ)

[திருவாரூர்ப் பெருமான் மீது பாடியது.]

559. விடங்காட்டிக் கண்டத்தில் தோலுரி
காட்டித்தன் மெய்யினைப்புற்(று)
இடங்காட்டி வாலை யொருபுறங்
காட்டிவண் டேறுமலர்த்
தடங்காட் டியபொழி லாரூர்த்
தியாகர் தமதுபொற்றுள்
படங்காட்டி யாடிநின் றூர்உல
கேழும் பணியென்னவே.

(அ - ரை.) தன் மெய்யினைப் புற்றினிடங்காட்டி - தன் திருமேனியைப் பாம்புப்புற்றினிடங் காட்டி. வாலை ஒருபுறம் காட்டி - இளம் செல்வியாகிய உமையம்மையை ஒரு பாகத்திற் காட்டி தமது பொற்றாள் படம் காட்டி - தமது அழகிய திருவடியின் நிழலைக்காட்டி, உலகேழும் பணியென்னவே - உலகமேழும் வணங்கும்படியாகவே. புற்றிடங் கொண்டார் பாம்புபோல ஆடி நின்றாரென்க. (கஅ)

[திருவொற்றியூர்ப் புற்றிடங் கொண்ட பெருமான் மீது பாடியது.]

560. புரந்தனை மாலைச் சதுரா னனத்தனைப் போகியைமுப்
புரந்தனைச் சாதித்திமையாத நாட்டப் புலோமசைவாழ்
புரந்தனை மானுந் திருவொற்றி யூரநின் பொன்மணிக்கோ
புரந்தனைக் கண்டனன் காணே னுதிக்கும் புரந்தனையே.

(அ - ரை.) நாட்டம் - கண். புலோமசை-இந்திராணி. புரந்தனைமானும்-அமராவதிப் பட்டினத்தை யொத்த. முப்புரந்தனைச் சாதித்து - திரிபுரத்தை யழித்து. மாலை - திருமாலை சதுரானனத்தனை - நான்முகனை. போகியை - இந்திரனை, புரந்தனை - காப்பாற்றினாய். உதிக்கும் புரந்தனைக்காணேன் - இனிப்போய்ப் பிறக்கும் உடம்பினைக் கண்டிலேன். (கக)

[நாணிக்கண் புதைத்தல்.]

561. நல்லம் புலியணிந்தோன் நாளதனுக் கெட்டாநாள்
வில்லம் புடன் கூடி விட்டாலும்—வல்லி
இடையாளே முன்னுலகம் ஏழளந்தோன் மைந்தன்
குடையான தன்றோ கொடிது.

(அ - ரை.) வல்லி - கொடி- நல் அம்புலி - அழகிய பிறை, நாள் - ஆதிரை நட்சத்திரத்திற்கு. எட்டாம் நாள் - எட்டாவது நட்சத்திரமாகிய, அத்தம் - அஃதாவது கையானது. வில் - வில் போன்ற புருவத்தினையும். அம்பு - அம்பு போன்ற கண்ணையும்; கூடிவிட்டாலும் - போய்ச் சேர்ந்து மூடிவிட்டாலும். குடையானது அன்றோ கொடிது - குடையான திங்களல்லவா கொடுமையாயிருக்கின்றது. (உ0)

[தென் புன்னை வனத்தானிடம் செல்லுவாயென நெஞ்சுக் கறிவுறுத்தல்.]

562. வாழ்நிலைசேர் பொன்னுலகம் வண்களந்தைக் கோபுரத்தில்
ஏழ்நிலைமேல் ஏறிடினு மேறலாம்—பாழ்மனமே
அன்புன்னைக் காட்ட அரனறிவ தேயருமை
தென்புன்னைக் காட்டனடி சேர்.

(அ - ரை.) வண்களந்தை - வளமான திருக்களந்தை. உன்னை அன்பு காட்ட அருமை - உனக்கு அன்புண்டாக்குவது அருமையாக இருக்கின்றது. அரன் அறிவதே அருமை - சிவ பெருமானை நீ அறிதல் அரிதாயிற்று. (உக)

[காஞ்சிபுரம் காமாட்சியம்மையார் தன்மையைப் பாடியது.]

563. கஞ்சி குடியாளே கம்பன்சோ றுண்ணாளே
வெஞ்சினங்க ளொன்றும் விரும்பாளே—நெஞ்சுதனில்
அஞ்சுதலை யாவாருக் காறுதலை யாவாளே
கஞ்சமுகக் காமாட்சி காண்.

(அ - ரை.) கஞ்சமுககாமாட்சி - தாமரை போன்ற திருமுக முடைய காமாட்சியம்மன். கஞ்சி குடியாளே - காஞ்சிபுரத்தில் குடியிருப்பவள், (கஞ்சி குடிக்கமாட்டாள்) கம்பன் சோறு உண்ணாளே - ஏகம்பவாணனுக்கு அன்னம் நிவேதித்தால் தானுண்ண மாட்டாள். (கம்பம்புல் சாதமுண்ணமாட்டாள்) வெம் சினங்கள் என்றும் விரும்பாளே - கொடிய கோபதாபங் களை எப்போதும் விரும்ப மாட்டாள். (கறிகாய் பதார்த்தங்களை விரும்ப மாட்டாள்) நெஞ்சுதனில் அஞ்சுதலையாவருக்கு-உள்ளத் தில் அச்சமுடையவர்களுக்கு, ஆறுதலை ஆவாளே - ஆறுதலை அளிப்பவள் (ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமானுக்குக் திருவுள்ளத்தில் நிறைவை உண்டாக்குபவள்.) (உஉ)

[வெறி விலக்கல்.]

564. சீதார விந்தைபுயன் தென்னவன்றன் திண்சிலம்பில்
போதாலுங் கண்ணாலும் போர்செய்வோர்க்—கோது
கொடியிடையார் தம்மாற் குணமாமோ இந்தத்
துடியிடையார் கொண்ட துயர்.

(அ - ரை.) சீதார விந்தை - குளிர்ச்சியான தாமரையிலிருக்கும் திருமகள். போதாற்போர் செய்வான்-காமன், கண்ணுற்போர் செய்வான் சிவன். காமன் கொடி - மீன், சிவன்கொடி - விடை. இடையார் தம்மால் - இடையே யிருக்கும் ஆட்டினால். (உரு)

சுரு. இரட்டையர்

[இவர்கள் ஒருதாய் வயிற்றிற் பிறந்தவர்களென்று சிலரும், வேறு உறவின் முறையினர் என்று பலரும் உரைப்பர். நொண்டியும் குருடும் ஆகிய இவர்கள், அஞ்சா நெஞ்சினர். இவர்கள் கலம்பகம் பாடுவதில் வல்லவர்களென்பது, 'கலம்பகத்திற் கிரட்டையர்கள் என்பதனுற் பெறப்படும். திருவாமாத்தூர்க்கலம்பகம், திருத்தில்லைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம் முதலியன, இவர்கள் செய்த நூல்களாம். இவர்கள் செங்குந்த குலத்தினர்.]

[ஆடையை ஆற்றுநீ ரடித்துக் கொண்டு போன போது பாடியது.]

565. அப்பிலே தோய்த்திட்(டு) அடுத்தடுத்து நாமதனைத்
தப்பினுல் நம்மையது தப்பாதோ—இப்புவியில்
இக்கலிங்கம் போனுலென் னேகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் தானிருக்கச் சொல்.

(அ - ரை.) அப்பிலே தோய்த்திட்டு (துணியை ஓடுகிற) தண்ணீரில் அமுக்கி. அடுத்து அடுத்து நாம் அதனைத் தப்பினுல் திருப்பித் திருப்பி அடித்து வெளுத்திட்டால், நம்மை அது தப்பாதோ - நம்மை விட்டு அது தப்பிப்போய் விடாதா? இப்புவியில் - இந்தப் பூமியில். ஏகலிங்கமா மதுரை சொக்கலிங்கம் தானிருக்க - இணையற்ற சிவலிங்கமாகிய திருவாலவாய்ச் சொக்கலிங்கப் பெருமான் நமக்குத் துணையாக இருக்கும்போது. இக்கலிங்கம் போனுல் என் சொல் - இந்தத் துணி தொலைந்து போனுல் என்ன புகல். (க)

[வீரசம்பு என்பவர் கொடுத்த பரிசை இரட்டையர் இடது கையால் வாங்கினதற்கு வீரசம்பு பாடியது, விடை.]

566. பதிவிர சம்புவென்று பாராமற் கல்விக்கு
இதமுடையி ரட்டையரே ஈகை—உதவில்வலக்
கைத்தலத்திற் கொண்டு களிக்காம லும்மிடது
கைத்தலத்திற் கொள்ளுவதேன் காண்.

(அ - ரை.) வீரசம்பு பதியென்று பாராமல் - வீரசம்பு வாகிய நான் ஒரு தலைவனென்று மதிக்காமல், ஈகை-கொடை. (உ)

[இரட்டையர் விடை.]

567. கூவரா யன்தியாகங் கொள்வோம் வலக்கைமுடி
யாவர் தரினுமிடக் கைகொள்வோம்—பூவுலகில்
மின்பணிமின் னூர்மதனே வீரசம்புவே யினிநாம்
அன்பெவர்பால் காண்போம் அடுத்து.

(அ - ரை.) முடியாவர் தரினு மிடக்கை கொள்வோம் - முடி மன்னர் யாதொன்றைக் கொடுத்தாலும் அதனை இடக் கையினால் நாமேற்றுக் கொள்வோம். (ங)

[வீரசம்பு வினா.]

568. என்னுடைய பேரும் புகழும் இருஞ்சீரும்
என்னுடைய ஈகையுங்கண் டெப்படிநம்—முன்னவனை
ஆவ லுடனதிகஞ் சொன்னீர் இரட்டையரே
கூவரா யன்னியல்பென் கூறு.

(அ - ரை.) முன்னவனை - அண்ணனை. (ச)

[இரட்டையர் விடை.]

569. மாதா பிதாவுமவன் மன்னுகுரு தெய்வமவன்
தாதா அவனே தருங்கீர்த்திக்—காதாரன்
தியாக சமுத்திரன் தென்கூவ ராயன்றன்
ஈகைதனைச் சொல்லவெளி தோ.

(அ - ரை.) தாதா அவனே - வள்ளலும் அவனே. தரும் கீர்த்திக்கு ஆதாரன் - தகுந்த புகழுக்கு ஆதரவாயிருப்பவன். தியாக சமுத்திரன் - கொடைக் கடலாக விருப்பவன். (ரு)

[திருவாங்கூர்ச் சிவ பெருமானை வணங்கிப் பாடியது.]

570. தேங்குபுக ழாங்கூர்ச் சிவனேயல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ—போங்காணும்
கூறுசங்கு தோன்முரசு கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்.

(அ - ரை.) தேங்கு புகழ் ஆங்கூர் - நிரம்பிய சீர்த்தியையுடைய திருவாங்கூர். அல்லாளி அப்பா - இரவிலும் எங்களைக் காக்கின்ற அப்பனே. (சு)

[சிதம்பரத்தில் ஓர் அறிவிலி பரிசளியாத போது பாடியது.]

571. மூடர்முன்னே பாடல் மொழிந்தால் அறிவரோ
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா—ஆடகப்பொற்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயக னானால்.

(அ - ரை.) ஆடு எடுத்த - கூத்தாடுதலைக் கைக்கொண்ட, புலியூர் - சிதம்பரம், அணங்கை - அப்பெண்ணை ஆடகப்பொன் உயர்ந்த பொன். செந்திருவைப் போல் - திருமகளைப் போல. அந்தகனே - குருடனே. (எ)

[திருநெல்வேலிப் பெருமாளைப் பாடியது.]

572. வேயின்ற முத்தர்தமை வெட்டினா னேஇடையன்
தாயின்ற மேனி தயங்கவே—பேயாகேள்
எத்தனைநா ளென்றே இடறுவான் பாற்குடத்தை
அத்தனையும் வேண்டும் அவர்க்கு.

(அ - ரை.) வேய் ஈன்ற முத்தர்தமை-மூங்கிலடியில் தோன்றிய முத்துப் போன்ற பெருமானை. (அ)

[மாங்காடென்னும் ஊரிலுள்ள வேளாளன் மருமகனாருக்குத் தன் மகளை யழைத்துச் சென்ற போது வழியில் அன்பின் பெருக்கால் அணைத்துச் சென்றதைக் குறித்துப் பாடியது.]

573. மாங்காட்டு வேளான் மகளை மருமகன்பால்
போங்காட்டில் இன்பம் புணர்ந்தானே—ஆங்கானும்
மக்கள் மெய்தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(அ - ரை) இன்பம் புணர்ந்தான் - (குழந்தை போல), எடுத்தணைத்து இன்புற்றான். (கூ)

[மலையடர்ந்தபாதையிலும் மரமடர்ந்த காட்டிலும் செல்லும் போது துன்புற்றுப் பாடியது.]

574. குன்றுங் குழியும் குறுகி வழிநடப்பது
என்று விடியுமெமக் கெங்கோவே—ஒன்றும்
கொடாதானைக் கோவென்றும் காவென்றும் கூறில்
இடாதோ நமக்கிவ விடி.

(அ - ரை.) எமக்கு என்று விடியும் - எமக்கு எப்போது ஒழியும். கோவென்றும் காவென்றும் கூறில் - காமதேனு வென்றும் கற்பகச்சோலை யென்றும் புகழ்ந்தால். (௧0)

[காளமேகப் புலவரும் இரட்டையரும் பாடியது.]

575. நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்தின்ற பாணமே—தாணுவே
சீராரூர் மேவும் சிவனே நீ எப்படியோ
நேரார் புரமெரித்த நேர்.

(அ - ரை.) தாணுவே - கடவுளே. நல்சாபம் கல்சாபம் - உமக்கு நல்ல வில் எது என்றால் மேருமலை (கல்லாகியவில்) மண் தின்ற பாணமே - மண்ணுலகத்தை விழுங்கிய திருமால். நாண் என்றால் நஞ்சு இருக்கும் - வில்லின் கயிறு யாதென்றால் அது நைந்திருக்கும்' (பாம்பாயிருக்கும்). (௧௧)

[காளமேகப் புலவர் இறந்து சுடப்படும்போது பாடியது.]

576. ஆசு கவியால் அகில வுலகமெங்கும்
வீசுபுகழ்க் காள மேகமே—பூசுரா
விண்கொண்ட செந்தழலில் வேகுதே ஐயையோ
மண்தின்ற பாண மென்ற வாய்.

(அ - ரை.) ஆசுகவியால் அகில உலக மெங்கும் - விரைந்து செய்யுள் பாடும் வன்மையினாலே. உலக முழுவதிலும் எந்த விடத்திலும், பூசுரா - அந்தணரே. இச்செய்யுள் மேற்குறித்த செய்யுளில் உள்ள, 'பாணந்தான்மண் தின்ற பாணம்' என்றதைக் குறித்தது. (௧உ)

[பாண்டியனிடஞ் சென்று பரிசு பெறும்போது அதனைத் தடுத்த அமைச்சன் மீது பாடியது.]

577. புராதன மான தமிழ்ப்புல வீர்இந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென் னேவகை கேட்டிலேயோ
தராதலம் வென்ற தமிழ்மா றனையுந்தன் தம்பியையும்
இராகவ னென்றும் இலக்குவ னென்றும் இருந்ததுவே.

(அ - ரை.) புராதனமான - பழமையான, மராமரம் விட்டு இங்கு வந்தது என்னே - மராமரத்திலிருக்காமல் இங்கே வந்த காரணமென்ன. தராதலம் வென்ற தமிழ் மாறனையுந் தன் தம்பியையும் - நிலவுலகு முழுதும் வெற்றி நாட்டிய தமிழ் மன்னனாகிய பாண்டியனையும் அவன் உடன் பிறந்தானையும். (௧௩)

[திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடச் சொன்ன பொழுது கூறியது.]

578. தொல்காப் பியத்தேவர் சொன்னதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைப்ப தேறிடுமோ
மல்காப் புனல்ததும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
பல்காற் பொருளார்க்கும் பாற்கடலோன் றீந்தார்க்கே.

(அ-ரை.) தொல்காப்பியத்தேவர் சொன்ன தமிழ்ப்பாடல்-திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம், மல் காப்புனல் ததும்ப - மிகவும் கண்ணீர் நிறைந்து வழிய. (௧௪)

[அபயன் மீது சினமுற்றபோது பாடியது.]

579. காவல ரீகை கருதுங்கால் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசேரவ்வா—பூவினிலே
யாகரப் பொருளை யபயனளித் தான்புகழாம்
ஏகாப்பொருள் அளித்தேம் யாம்.

(அ - ரை.) ஈகை - கொடை. காவலர் - அரசர், ஏகாப் பொருள் - கெடாத பொருள். பொருள் அழியுந் தன்மையுடைமையால் நிலைஆகாப் பொருள் என்றனர். ஏகாப் பொருள் என்றது கல்வியை. (௧௫)

[கண்ணுக்கினியானை இகழ்ந்து பாடியது.]

580. தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணுக் கினியானே—வான்சிறந்த
சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி ஏன்பிறந்தாள் முன்.

(அ - ரை.) தேன்பொழிந்த வாயான் - இனிமையாகப் பேசுகிறவாயையுடையவன். (கசு)

[தங்களை இழிவுபடுத்திய ஓமளநாதன் வீடு எரியப் பாடியது.]

581. ஒருகாவித் தண்டலம்வாழ் ஓமளநா தன்வி(டு)
இருகாலும் பற்றி யெரிக—அருகாரும்
கம்பத்தான் வீடுங் கலந்தெரிக மற்றிவர்கள்
சம்பத்தெல் லாமொழியத் தான்.

(அ - ரை.) கம்பத்தான் - கம்பத்தான் என்னும் பெயரை உடையவன். (கஎ)

[வறுமை நீக்கத் தெய்வங்களை வேண்டியும் அவர் அருளாமையால் வெகுண்டு பாடியது.]

582. கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்
கூட்டோடும் எங்கே குடிபோனீர்—பாட்டாய்கேள்
செல்கால மெல்லாஞ் செலுத்தினேம் அல்காலம்
கல்லானேம் செம்பானேங் காண்.

(அ - ரை.) கூட்டோடும் - இருப்பிடத் தோடும். பாட்டாய் - பாட்டை யுடையவனே. (கஅ)

[கயவர் தன்மையைப் பற்றிப் பாடியன.]

583. கண்ணாடி காட்டுங் களிறுஞ் சுரைப்பழத்தின்
உண்ணாடிப் புக்க உறுபொருளும்—மண்ணு
கனங்குறைந்த வாறென் கயவர்பாற் சென்று
தினந்திரிந்த வாறெனவே செப்பு.

(அ - ரை.) களிறு முதலியன போலக் கயவரும் பெருமை யற்றவர் என்பது கருத்து. (கசு)

584. வெள்ளிலேவே லற்பநிழல் மெத்தவே முட்டைக்கும்
துன்ளுநரு வாழைபலாச் சோலைக்குள்—மெள்ள
அடுக்கவொட்டா வாறுபோ லற்பர்சிலர் கூடிக்
கொடுக்கவொட் டார் தாமுங் கொடார்.

(அ - ரை.) வெள்ளிலேவேல் அற்பநிழலுடையது. அடுக்க வொட்டாவாறுபோல்—சேரவிடாத தன்மையைப் போல். (உ0)

[திருவக்கைக் கொங்கராயன் விருந்திட்டபோது பாடியது.]

585. சாணர்க்கு முன்னிற்கும் ஆட்கொண்ட
நாயன்த மிழ்க்கொங்கர்கோன்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை
நகராதி பக்கத்திலே
ஊனுக்கு வாரா திருப்பாய்
விருப்பாகி உயர்வானிலே
வினுக்கு நின்னுகம் மெலிகின்ற
தெவ்வாறு வெண்டிங்களே.

(அ - ரை.) சாணர் - போர்த்தழும்புள்ள வீரர். சாணம் - தழும்பு. ஆட்கொண்ட நாயன் - வரபதி யாட்கொண்டான் என்னும் கொங்கர்கோன். பாண் உற்ற - இசைபாடுதலையுடைய வக்கை - வக்கபாகை. இவ்வரசனே வில்லிபுத்தூராரைக் கொண்டு பாரதத்தைப் பாடச் செய்தவன். (உக)

[படைவீடுமுற்றியிருந்த பாண்டியனைப் பாடியது.]

586. காற்றல் அலைப்புண்டும் கண்ணன் கடல்கடைந்தும்
ஏற்றன் எடுத்து வளைத்தெய்தும்—ஆற்றுத
செம்பொன் மலையில்லை சேலுக் கிடங்கொடுக்கச்
சம்பன் மலைகை தவா.

(அ - ரை.) காற்றல் அலைக்கப்பட்டதும், திருமால் கடல் கடைந்த காலத்தில் மத்தாகப் பயன்படுத்தப்பட்டதும், (ஏற்றன்—சிவபெருமான்) இறைவனல் வளைக்கப்பட்டதும் பொன் மலையாகிய மகாமேரு மலையாகும். (உஉ)

௬௬. சத்தி முத்தப் புலவர்

[இவருடைய இயற்பெயர் தெரியவில்லை. சத்திமுத்தம் என்னும் ஊரில் வாழ்ந்த காரணத்தால் சத்திமுத்தப் புலவர் என்று கூறப்பெற்றார். இவர் மிக வறுமையால் வருந்தியவர்.]

[பாண்டியன் ஒருநாள் இரவு நகர் சோதனை செய்யும் பொருட்டு மதுரை நகரைச் சுற்றிவரும்போது ஓரிடத்திற் படுத்திருந்த புலவர் தமது நிலைமையைக் குறித்துப் பாடியது.]

587. நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவி ராயின்
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே.

(அ - ரை.) சத்திமுத்தம் - திருச்சத்தி முத்தம் என்னும் ஊர். வாவி - தடாகம். மாறன் - பாண்டியன். கூடல் - மதுரை பேழை - பெட்டி. உயிர்க்கும் - மூச்சுவிடும். (க)

[புலவர் தம் வறுமையைக் குறித்துப் பாடியதைக் கேட்ட மன்னன் அவர்க்கு வேண்டிய பரிசளித்ததைக் குறித்துப் பாடியது.]

588. வெறும்புற் கையுமரி தாங்கிள்ளை
சோறுமென் வீட்டில்வரும்
எறும்புக்கும் ஆற்பத மில்லைமுன்
னுள் என்னிருங் கலியாம்

குறும்பைத் தவிர்த்த குடிதாங்கி
யைச்சென்றுகூடியபின்
தெறும்புற் கொள் யானை கவளங்கொள்
ளாமல் தெவிட்டியதே.

(அ - ரை.) வெறும் புற்கையு மரிதாம் - வெறுஞ்சோறு கூடப்பெறுவது கடினம். கிள்ளை சோரும் - வளர்கின்ற கிளிப் பிள்ளை பசித்துத் தளர்வுறும், இரும் கலியாம் - மிகுந்த வறுமை யாகிய குறும்பைத் தவிர்த்த - தொந்தரவை நீக்கிய, குடிதாங் கியை - குடிகளையோம்பும் மன்னனை. தெறும்புற்கொள் - அரிந்து கட்டிய புல்லை உணவாகக் கொள்கின்ற. (உ)

சுரு. வரதுங்க ராம பாண்டியன்

[இவர் கல்வியிற் சிறந்து செங்கோல் செலுத்திய அதிவீர ராம பாண்டியனுடைய உடன் பிறந்தார். பிரமோத்திர காண்டம் கொக்கோகம் முதலியன இவர் செய்த நூல்கள்.]

[இறக்குங் காலத்தில் மனைவி அஞ்சுகிறீரோ என்றுகேட்ட போது பாடியது.]

589. அஞ்சலென்ற கரதலமுங் கணபண கங்கணமும்
அரைக்கிசைந்த புலியுடையும் அம்புலிச்செஞ் சடையு
கஞ்சமலர்க் சேவடியும் கனைகழலும் சிலம்பும்
கருணைபொழி திருமுகமும் கண்களொரு மூன்றும்
நஞ்சையுண்ட மணிமிடறு முந்நூலு மார்பும்
நலந்திகழ் வெண் ணீற்றொளியு மறிமானு மழுவும்
பஞ்சடிச்சிற் றடியுமையாள் ஒப்பனைபா கமுமாய்ப்
பால்வண்ணர் உளத்திருக்கப் பயமுண்டோ எமக்கே.

(அ - ரை.) அஞ்சலென்ற கரதலமும் - அஞ்சாதே என்று காட்டும் அபயக்கையும், கணபணகங்கணமும் - தொகுதியான படங்களையுடைய பாம்புக் காப்பும், கஞ்சமலர் சேவடியும் - தாமரைப் பூப் போன்ற திருவடியும். மணிமிடறும் - அழகிய கழுத்தும் முந்நூலும் - முப்புரிநூலும். மறிமானும் - மான் கன்றும். (க)

௬௬. வரதுங்கராம பாண்டியன் மனைவி

[இறைவணக்கமாகப் பாடியது.]

590. ஆக்கையெனும் புழுக்குரம்பை அணைந்தணையாப்
பொருளை அருள்ஒளியைப் பராபரத்துக் கப்புறமாம் அறிவை
நீக்கமற மயிர்முனைக்கும் இடமறவெங் கெங்கும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிலெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் செய்தனந்தந் தவக்குறைகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க்கற் பகத்தை
வாக்குமன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை
மாசற்ற வெறு வெளியை மனவெளியி லடைப்பாம்.

(அ - ரை.) புழுக்குரம்பை - புழு நிரம்பிய சிறு உடல். அணையாப் பொருளை - ஆதரவாகச் சார்ந்தும் அதில் சிக்கி யீடு படாத மெய்ப் பொருளை. பராபரத்துக்கு அப்புறமாம் அறிவை - மேலும் கீழுமான எல்லாப் பொருள்களையும் கடந்துள்ள பேரறிவை. மயிர் முனைக்கும் இடமற எங்கெங்கும் நிறைந்து நின்ற முழுமுதலை - மயிர்முனை கூட நாட்டுவதற்கு இடமில்லாதபடி எங்கும் நிறைந்துள்ள முழுமுதற் கடவுளை. எழும் சுடரை-தோன்றும் ஒளிவடிவான பொருளை. அனந்தம் தவக் குறைகள் முடிக்கும் - எல்லை யில்லாத நல்வினைக்குறைகளை நிறைவேற்றும். பசும்துணர் கற்பகத்தை - பசியமலர்த் தொகுதிகளையுடைய கற்பகமரம் போன்ற தெய்வத்தை. மாசற்ற வெறு வெளியை - குற்ற மற்ற வெட்டவெளியான பொருளை. (க)

[கணவனைப் பிரிந்திருக்க நேரிட்டபொழுது வருந்திப் பாடியது.]

591. என்னையவர் அறமறந்தும் யானவரை
மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்றானே இப்பிறப்பில்
செய்ததவம் முடிந்த வாறே
கன்னன்மதன் அபிராமன் வரதுங்க
ராமனியற் காசி நாட்டில்
அன்னவயற் குருகினங்காள் இனியெவ்வா
றுயிர்தரித்திங் காற்று மாறே.

(அ - ரை.) கன்னல் மதன் - கரும்பு வில்லையேந்திய காமன். அபிராமன் - அழகை உடையவன். குருகினங்காள் - பறவைகாள். (உ)

592. செப்பாருங் குவிமுலையா ரெல்லாருங்
கணவருடன் சேர்ந்து வாழ
ஒப்பாரு மில்லா வென்கணவருடன்
யான்கூடி உறவா டாமல்
வெப்பாரு மிகுகாமத் துயராலே
மனமுடைந்து மெலிந்து வாடி
இப்பாடு படவென்றே இறையவனென்
தலையோட்டில் எழுதி னானே.

(அ - ரை.) செப்பு - செப்புக் கிண்ணம். (ங)

593. எண்டிசா முகமுந் திங்கள் இளநிலா வெள்ளங் காய
கொண்டமால் பெருகுந் தோறுங் கொழுங்கனிர் முலையிற் கோப்பப்
பண்டுநாம் அறியாக் காமத் துயரினுற் படுவ வெல்லாம்
வண்டுகாள் உரையிர் உங்கள் வரதுங்க ராம னுக்கே.

(அ - ரை.) எண்டிசாமுகம் - எட்டுத் திக்கிலும் - மால் காமமயக்கம். கோப்ப - ஒழுக. (ச)

[பரத்தையிற் பிரிந்துவந்தகாலையிற் பாடியன.]

594. வேண்டிய போதின்பம் விளைக்கு மடந்தையரைத்
தீண்டியகையா லென்னைத் தீண்டாதே—பாண்டியா
முல்லைக் கதிபா முகம்பார்த் தகலநின்று
சொல்லக் கடவ வெல்லாஞ் சொல்.

(அ - ரை.) முல்லைக்கு அதிபா - முல்லை நிலத்திற்கு அதிபனே! (ரு)

595. கலையால் முலைமூடிக் கண்வலைக்குள் ளாக்கும்
விலைமாதர் தாம்வரவிட் டாரோ—விலைமாதர்
கொங்கையிலே தோய்ந்த குறைதீரத் துய்யசிவ
கங்கையிலே நீராடி வா.

(அ - ரை.) கலையால்-ஆடையால், துய்ய-தூய்மையான. (சு)

[அதிவீரராம பாண்டியன் போர் செய்யப் படை திரட்டிக் கொண்டு வந்தபொழுது பாடியது.]

596. *செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.

(அ - ரை.) செஞ்சுடரோன் மைந்தன் - கதிரவன் மகனாகிய சுக்கிரீவன். பஞ்சவரில் பார்த்தனை - பாண்டவரைவரில் அருச்சுனனை. (எ)

சுஎ. பட்டினத்து அடிகள்

[மெய்யறிவுச் செல்வராகிய பட்டினத்தடிகள் காவிரிப்பூம் பட்டினத்தில் வைசிய குலத்தில் தோன்றியவர். நல்வினை முதிர்ச்சியால் முற்றத் துறந்தவர். இவருடைய நூல்கள் திரு வேகம்பமுடையார் திருவந்தாதி, திருக்கழுமல மும்மணிக் கோவை, கோயிற்றிருவகவல், கச்சித்திருவகவல், திருவேகம்ப மாலை முதலியன. இவருடைய நூல்கள் பதினொன்றாந் திரு முறையிற் சேர்க்கப்பட்டுள்ளன. இவருடைய வரலாறு புராண வடிவமாகவும் விரிவாகவும் செய்யப்பட்டுள்ளது.]

[திருமணம் புரிவதை வெறுத்து வாழ்த்துக் கூறியது.]

597. நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
கவட்டுத்தொன் மரத்திடுக்கிற் கால்நுழைத்துக் கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்கு போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீர் நீரே.

---

* இப்பாடல் வரதுங்கராம பாண்டியனுடையது என்றும் கூறுப.

(அ - ரை.) நாப்பிளக்க - நாவானது பிளவுபடும்படியாக. நவநிதியம் தேடி ஒன்பது வகைப் பொருள்களுடன் புதிது புதி தாகப் பணம் தேடி. கவட்டுத் தொன்மரத்தில் - இரு பிளவு களாகப் பகுக்கப்பட்ட பழைய மரத்தின் சந்தில், ஆப்பு அத னைப் பிடித்தசைத்த பேய்க் குரங்கு போல - அப் பிளவுகளை வேறுபடுத்திய முளையை அசைத்து எடுத்துவிட்ட பேய்க்குரங் கைப் போல. குரங்கதனைப் போல என்று பாடம் உளது.

[இவர் மாந்தர் வாழ்வின் முதல் நடு முடிவு நிலைமையை உணர்த்தும் உடற்கூற்றுவண்ணம் ஒன்றையும் பாடினர். அதனைப் பாட்டின் நயத்திற்காகத் தருகின்றோம்.]

598. ஒருமட மாதும் ஒருவனு மாகி
இன்பசு கந்தரும் அன்புபொ ருந்தி
உணர்வுக லங்கி ஒழுகிய விந்து
ஊறுசு ரோணித மீதுக லந்து
பனியிலோர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்துபு குந்துதி ரண்டு
பதுமவ ரும்பு கமடமி தென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைக ளென்ற
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பது மொன்றும்நி றைந்தும டந்தை
உதரம கன்று புவியில்வி ழுந்து
யோகமும் வாரமும் நாளும றிந்து
மகளிர்கள் சேனை தரவனை யாடை
மண்பட உந்திஉ தைந்துக விழ்ந்து
மடமயில் கொங்கை யமுதம ருந்தி
ஓரறி வீரறி வாகிவ ளர்ந்து
ஒளிநகை யூறல் இதழ்மட வாரு
வந்துமு கந்திட வந்துத வழ்ந்து
மடியிலி ருந்து மழலைமொ ழிந்து
வாவிரு போவென நாமம்வி ளம்ப
உடைமணி யாடை அரைவட மாட

உண்பவர் தின்பவர் தங்களோ டுண்டு
தெருவிலி ருந்து புழுதிய ளைந்து
தேடிய பாலரோ டோடிந டந்து
அஞ்சுவய தாகிவிளை யாடியே,

உயர்தரு ஞான குருஉப தேச
முந்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும்வி ளம்ப
வாழ்பதி னறுபி ராயமும் வந்து
மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டைபு னைந்து
மணிபொனி லங்கு பணிகள ணிந்து
மாகதர் போகதர் கூடிவ ணங்க
மதனசொ ரூபன் இவனென மோக
மங்கையர் கண்டும ருண்டுதி ரண்டு
வரிவிழி கொண்டு சுழியவெ றிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனதுபொ றுமை லவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவம யங்கி யிதழமு துண்டு
தேடிய மாமுதல் சேரவ ழங்கி
ஒருமுத லாகி முதுபொரு ளாயி
ருந்தத னங்களும் வம்பிலி ழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறுபி ரிந்து
வளமையு மாறி இளமையு மாறி
வன்பல் விழுந்திரு கண்களி ருண்டு
வயதுமு திர்ந்து நரைதிரை வந்து
வாதவி ரோதகு ரோத மடைந்து
செங்கையினி லோர்தடியு மாகியே,

வருவது போவ தொருமுது கூனு
மந்தியெ னும்படி குந்திந டந்து
மதியும ழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல்வி டாமல்மொ ழிந்து
துயில்வரு நேர மிருமல்பொ ருது
தொண்டையு நெஞ்சுமு லர்ந்துவ றண்டு
துகிலு மிழந்து சுணையு மிழந்து
தோகையர் பாலர்கள் கோறணி கொண்டு
கலியுக மிதில் இவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சாரந டந்து
தெளிவுமி ராம லுரைதடு மாறிச்
சிந்தையு நெஞ்சுமு லைந்தும ருண்டு
திடமும லைந்து மிகவும லைந்து
தேறின லாதர வேதென நொந்து
மறையவன் வேதன் எழுதிய வாறு
வந்தது கண்டமு மென்றுதெ ளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வுநி லாதினி நின்ற
கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கிவி ழுந்துகை கொண்டுமொ ழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலுசு வாசமு நின்று
நெஞ்சுதடு மாறிவரு நேரமே,

வளர்பிறை போல வெயிறுமு ரோம
முஞ்சடை யுஞ்சிறு குஞ்சியும் விஞ்சு
மனதுமி ருண்ட வடிவுமி லங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து

வலைகொடு விசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்துகு ளிந்தழ நொந்து
மடியில்வி ழுந்து மனைவிபு லம்ப
மாழ்கின ரேயிவர் காலம கிந்து
பழையவர் கானு மெனுமய லோர்கள்
பஞ்சுப றந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேகவி சாரியு மென்று
பலரையு மேவி முதியவர் தாமி
ருந்தசு வங்கமு வுஞ்சில ரென்று
பனிதுகில் தொங்கல் களபம ணிந்து
பாவக மேசெய்து நாறுமு டம்பை
வரிசைகெ டாமல் எடுமென வோடி
வந்திள மைந்தர்கு ளிந்துசு மந்து
கடுகிந டந்து சுடலைய டைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி அழல்கொடு போட
வெந்துவி ழுந்துமு றிந்துநி ணங்கள்
உருகியெ லும்பு கருகிய டங்கி
ஒருபிடி நீறுமி லாதஉ டம்பை
நம்புமடி யேனையினி யாளுமே.

(அ - ரை) பண்டி - வயிறு. பதுமவரும்பு - தாமரை மொட்டு. கமடம் - ஆமை. உதரம் - வயிறு. பிராயம் - அகவை. அறுபதம் - வண்டு. துகில் - ஆடை. சுனை - சுரணை, உணர்ச்சி. பணி - அணிகலம். பாவகம் - அலங்காரம். மகளிர்கள் சேனை - பெண்கள் கூட்டம். தரவணையாடை - துணியாலாகிய தொட்டில். மயிர்முடி கோதி - கூந்தலை வாரிமுடித்து. தண் + தொடை — தண்டொடை - குளிர்ந்த பூமாலை. மதனசொரூபன் — மன்மதன் போன்ற வடிவழகுடையவன். செங்கலசம் திகழ் கொங்கை - செம்மையான குடம்போல விளங்கும் முலை. மதனசுகந்த விதனம் - காமவின்பத்தால் வந்த துன்பம். எயிறு - பல். விசாரியும் - ஆராய்ந்து பாருங்கள். களபம் - சந்தனச்சேறு.

௬௮. அருணகிரிநாதர்

[திருவண்ணுமலையில் தோன்றி முருகக் கடவுள் திருவருளைப் பெற்றுத் திருப்புகழ் பாடியவர். கந்தரந்தாதி, கந்தரநுபூதி, கந்தரலங்காரம், வேல் விருத்தம், மயில் விருத்தம், திருவகுப்பு முதலியன இவர் பாடிய நூல்கள். இவர் வில்லிபுத்தூராரைச் சொற்போரில் தோற்கடித்தவர் என்பர்.]

[வில்லிபுத்தூரார், சிவன் கோயில் கண்ணுக்குத் தோற்ருத வாறு திரையிட்டுச் சென்றதைச் சிலர் கூற அப்போது அருளியது.]

599. புரத்தைநர சிங்கத்தைப் போர்வேளைக் கூற்றை
எரித்தவர்க்குத் தாசன் எதிரே—நிரைத்த புகழ்த்
தேன்கொட்டுஞ் சோணகிரித் தேசிகனைப் போற்ருமல்
ஏன்கெட்டுப் போனுன் இவன்.

(அ - ரை.) புரத்தை முப்புரத்தை. கூற்றை - நமனை, சோணகிரித்தேசிகன் - அண்ணுமலையார்.

௬௯. சிவப்பிரகாச அடிகள்

[இவர் தொண்டைமண்டலத்தில் தோன்றியவர். தந்தையார் பெயர் குமாரசாமி தேசிகர். இத்தேசிகரும் கல்வியறிவிற் சிறந்து திகழ்ந்தவர். வேலாயுத அடிகள் கருணைப் பிரகாச அடிகள், என்னும் இருவரும், ஞானம்பிகை என்னும்பெண்மணியும் சிவப்பிரகாச அடிகளின் உடன்பிறந்தார்களாவர். சிவப்பிரகாச அடிகளைக் கற்பனைக் களஞ்சியம் என்றே கூற வேண்டும். இவர் அண்ணுமலை ரெட்டியார் என்னும் அன்பரால் போற்றப் பெற்றவர். இவரும் இவருடன் பிறந்தார்களும் பாடியருளிய நூல்களைப் பின் வருஞ் செய்யுளால் அறிக.]

[சிவப்பிரகாச அடிகளும் அவருடைய உடன்பிறந்தார்களும் அருளிய நூல்கள்.]

600. தெருள் சிவப் பிரகாச அடிகளரு ளியநூல்கள்
சீர்ச்சோண சைல மாலை
செந்திலந்தாதிவெங் கைக்கோவை வெங்கைக்
கலம்பகம் வெங்கையி னுலா

செப்பரிய வெங்கையின் அலங்காரமே சிவப்
பிரகாச நல் விகாசம்
சேர்தர்க்க பரிபாடை நால்வர் நான்மணிமாலை
திரிபில் சத மணிமாலையே
அருளுறுஞ் சிவஞானி நெஞ்சுவிடுதூதுதா
லாட்டுபிள் ளைத்தமிழ் கலம்
பகமொடும் பள்ளியி னெழுச்சி கூவப்புரா
ணம்பிரபு லிங்க லீலை
அமையும் வேதாந்தசூ டாமணிசித் தாந்த
சிகாமணிநல் பழமலை யினந்
தாதிபிட் சாடனந வமணிமா லையுடன்
அறைகொச் சகக்கலிப்பா
மருளதனை மாற்று பெரி யம்மைக் கலித்துறை
வளர்நெடு விருத்தம் ஏசு
மதநிராகரணநன் னெறியோடு சிவநாம
மகிமை தல வெண்பா முறை
வதியிட்ட லிங்கவபி டேகமா லையுநெடுங்
கழிநெடில் குறுங் கழிநெடில்
மாநிரஞ் சனமாலை கைத்தலம் பகர்மாலை
மற்றும்வே லையர் நூல்கள்
வெருளில்கைத் தலமாலை நல்லூர்ப் புராணமலர்
விரிபாரி சாத லீலை
விரசிங் காதனபு ராணமயி லாசல
இரட்டைமணி மாலையொடுலா
மிளிர்குகை நமச்சிவா யர்லீலை கருணைப்ர
காசர்மே லிட்ட லிங்க
விதியகவல் காளத்தி நன்புரா ணந்தனை
விரித்தனரிம் மூவரு மரோ.

(அ - ரை.) தெருள் - தெளிந்த அறிவினையுடைய. மருள் - மயக்கு. ஏசுமத நிராகரணம் - கிறித்து மத மறுப்பு. (௧)

[திருமண நிகழ்ந்தபோது பாடியன.]

601. ஐயநின் சென்னிமிசை உறைகின்ற மடமங்கை
யாரென்ன உமை வினவவும்
அன்னதொரு மடமங்கை அன்றுவெண் டிரைகொழித்
தழகொழுகு தண் புனலெனத்
துய்ய வொளி ஆனனங் கரியவிழி காதுவாய்
தோயத்தி லுண்டோ வெனச்
சொல்லருங் கமலமர் காவிமலர் கொடிவள்ளை
தூயசெங் குமுதம் என்னப்
பொய்யென நினைத்துநற் கொங்கையுங் கூந்தலும்
புனலிலிடை உண்டோவெனப்
புற்புதஞ் சைவலம தெனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்கா யெனத்
தையலவள் ஏனென்ன நாளுெடு வணங்கியென்
தன்பிழை பொறுத்திடென்றே
சங்கர னுரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரி உமைக் காக்கவே.

(அ-ரை.) வெண்திரை கொழித்து அழகு ஒழுகு தண் புனல் - வெள்ளிய அலைகளை எறிந்து அழகு செய்கின்ற தண்ணீர். துய்ய ஒளி ஆனனம்-புனிதமான ஒளியுடைய முகம். தோயத்தில்-தண்ணீரில். சொல் அரும் கமலமலர் காவிமலர் கொடி வள்ளை தூய செங்குமுதம் என்ன - வர்ணித்தற் கருமையான (முகம் போன்ற) தாமரையும், (கண் போன்ற) குவளைப்பூவும், (காது போன்ற) வள்ளைக் கொடியும், (வாய் போன்ற) சுத்தமான செவ்வாம்பல் பூவும் உள்ளன என்று சொல்ல. புற்புதம்-சைவலம்-நீர்க்குமிழி, நீர்ப்பாசடை.

நங்காய் என்று உமையை விளித்துக்கூறியதைக் கங்கை தவறுகத் தன்னையென்று எண்ணி ஏனென்றபடியால், சிவபிரான் கூறிய பொய்கள் உடனே வெளியாகி மன்னிப்புக் கேட்க வேண்டியவரானுர். இதனுல் கடவுளாகிய சிவபெருமான்கூட மறுமணைவியை மறைத்து வைத்திருக்கவேண்டியவரானுர் என்று சுட்டுதல் காண்க. (உ)

602. அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐயஎன் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினன் என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனைநோக்கி
விரைவுடன் வினவவே அண்ணனென் சென்னியில்
விளங்குகண் எண்ணினன்என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீஅப்படி
விகடமேன் செய்தாய்என
மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன
மயிலவ னகைத்துநிற்க
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராயெனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டங்
கருப்பமாய்ப் பெற்றகன்னி
கணபதியை அருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக்காக்கவே.

(அ - ரை.) சிணுங்கிடவும் - சொல்லி அழவும். அத்தன் - சிவபெருமான். மருவும் என் கை முழம் அளந்தான் என-பொருந்தியிருக்கும் துதிக்கையின் நீளத்தை எத்தனை முழமிருக்கிறதென்று தம்பி அளந்து பார்த்தானென்று சொல்ல. கருதரிய கடலாடை - மனத்தாலளவிட முடியாத கடலை உடையாக உடுத்த. கருப்பமாய்ப் பெற்ற கன்னி - கருப்பமுற்றுத் தோற்றுவித்த கன்னி. (௩)

603. அம்பிகை அரன்தன்னை நோக்கிஉன் னுபரணம்
அரவமென உமையைநோக்கி
அரியரவ சயனத்தை அரவுருவமானத்தை
அறியாய்கொல் சிறிதுமென்ன
நம்பிமனை தொறுமிரந் துணுமாண்டி நீயென்ன
நான்ருதன் அறிவேனென
நவையுறும் பொய்புகன் றீரெனப் பாரத
நடந்ததே கரியாமென

வெம்பியொரு வன்பிரம் பாலடித் தானென
விளங்கிழை ஒருத்திதாம்பால்
விசினது சொல்லென்ன என்னுயிரம் பெண்கள்
மிருகற்பை நீக்கினையெனப்
பம்புகற்பினிலோர் இரட்டிப்பு நீக்கினது
பதருமல் நீகேளெனப்
பரமருடன் இவ்வாறு விளையாடு பச்சைப்
பசுங்கொடி உமைக்காக்கவே.

(அ - ரை.) நம்பி - சிவபெருமான். அரிஅரவ சயனத்தை- திருமால் பாம்பைப் படுக்கையாகக் கொண்டதை. அரவு உருவ மானதை - பாம்புவடிவ மெடுத்ததையும். நவையுறும் - பிழை பொருந்திய. பாரதம் நடந்ததே கரியாமென - திருமால் பொய் சொன்னதற்குப் பாரத நிகழ்ச்சியே சான்றாகு மென்ன. விளங் கிழை ஒருத்தி தாம்பால் வீசினது சொல் என்ன - ஒளியுள்ள அணி அணிந்த ஓர் இடைச்சி கயிற்றால் கண்ணனை அடித்த செய்தி கூறுக என்றியம்ப பம்பு கற்பினில் ஓரிரட்டிப்பு நீக்கினது - நிறைந்த கற்பையுடைய எண்ணாயிரத்தில் இரட் டிப்பான மாதர்களின் நிறைந்த கற்பைத் தொலைத்தது. கண்ண பிரான் பதினாறாயிரம் கோபிகளைத் தழுவினவர். (௪)

604. அச்சுதனளிப் பனிலம் உமதுநேயன் வித்தை
அருளுவன் பலபத்திரன்
அலமுதவுவன் சமன் பகடீவன் நந்தமக்
கானதோர் எருதும்உண்டே
முச்சிர அயிற்படையினைக் கொழுவதாக்குவோம்
மொய்ம்புடன் இழுத்திறுக்க
முந்திய வடக்கயிற் றுடன்மற்று நமதன்பர்
முன்போய் இரந்துகொள்வோம்
இச்சையுடன் நமதிளைய தனையனாகிய கந்தன்
இனிமையொடு மாடுமேய்ப்பன்
இனியுழுது பயிரிடுதல் நன்றுநன் றிதைவிட்(டு)
இரந்துண் பதீனமெனவே

கச்சுமுலை மாதுமை உரைத்திடும் புத்தியைக்
கைக்கொண் டுளத்திலிதுநற்
காரிய மெனக்கருதி மெத்தக் களித்திடுங்
கண்ணுதல் உமைக்காக்கவே.

(அ - ரை.) அச்சுதன் - திருமால். உமது நேயன் வித்தை அருளுவன் - உம் நண்பனாகிய குபேரன் பயிரிடுதற்கு விதை கொடுப்பன். அலம் உதவுவான் - கலப்பை தருவான். சமன்பகடு ஈவன்-எமன் எருமையைத் தருவான். முச்சிர அயில் படையினைக் கொழுவதாக்குவோம்-முத்தலையுடைய சூலாயுதத்தைக் கொழு வாக அடித்துக்கொள்வோம். மொய்ம்புடன் இழுத்திறுக்க-வலிமை யாய்க் கொழு கலப்பை முதலியவற்றை நன்றாக இழுத்துக் கட்டு வதற்கு. கச்சு முலைமாதுமை - வாரணிந்த தனங்களையுடைய பார்வதி. (௫)

605. கவுரிகமலாய்அரன் இரந்தசோ றிதுவெனக்
கமலைமண் கண்டேனெனக்
காளையொன்றேஅரற் கெனமாடு மேய்த்ததைக்
கட்டிடைய னரோஎனச்
சிவனொருவர் தூதென்ன அத்தூது சென்றகதை
செப்பிலொரு பாரதமெனச்
சேரோடு திருடினன் அரனெனக் கட்டுண்ட
செய்திநாம் அறிவோமென
அவையில்நட மாடினு னரனென்ன அவ்வாடல்
அரவமறி யாதோவென
ஆலமதை யுண்டனன் அரனென்ன மண்ணுண்ட
அதனையறி யோமோவென
விவரமொடு மலைமகளு மலர்மகளு மிவ்வாறு
விளையாடு மிவர்கள்துணையாம்
மேவிவருபுத்ரமித் திரகளத் திரருடன்
மேன்மேலு மிகவாழியே.

(அ - ரை.) கவுரி கமலாய் அரன் இரந்த சோறு இதுஎன - உமையானவள் (திருமகளைப் பார்த்து) தாமரைத் தேவியே!

சிவனுர் பிச்சையெடுத்துக் கொண்டுவந்த சோறு இவ்வளவுதானென்று சொல்ல. கமலை - திருமகள். சிவன் ஒருவர் தூது என்ன - சிவனுர் ஒருவருக்குத் தூது போனுரென. சேரோடு திருடினுன் அரன் - சிவன் திருநீலகண்டரிடம் சேர்ப்பித்த ஓட்டைக் களவு செய்தான். அவையில் நடம் ஆடினுன் - சிவபெருமான் சபையில் கூத்தாடினுர். (சு)

[உப்புவிற்ற பெண்ணைப் பார்த்துப் பாடியது.]

606. நிறைய உளதோ வெளிதோ கொளுவோம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையும்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீஇங்(கு)
இருக்காட்டுப் பள்ளி யெமக்கு.

(அ - ரை.) இரு+காட்டு+உப்பு+அள்ளி=இருக்காட்டுப் பள்ளி. இங்கு இரு எமக்கு உப்பு அள்ளிக்காட்டு எனக் கூட்டுக. வெளிதோ - வெண்மையா யிருக்கிறதோ. (எ)

[தோட்டக்காரன் மாங்கனிக்காக இவர் மடியைப் பிடித்த போது பாடியது.]

607. அடுத்துவருந் தொண்டனுக்கா அந்தகனைத் தாளால்
அடர்த்ததுவுஞ் சத்தியமே யானுல்—எடுத்ததொரு
மாங்கனிக்கா என்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்.

(அ - ரை.) அடுத்துவரும் தொண்டனுக்கா - அடியாராகிய மார்க்கண்டருக்காக. அந்தகனைத் தாளால் அடர்த்தது - எமனை உம்முடைய காலினுல் தாக்கியது. கனிக்கு ஆதித்தன் வர தான் சாம் - கன்னிராசிக்கு சூரியன் வருகின்ற (புரட்டாசியில்) சாவானுக. (அ)

[வெள்ளி அம்பலவாணத் தம்பிரான் இவருடைய இலக்கணப் பயிற்சி அறியக் 'கு' என்றெடுத்து கு என்று முடியும்படி பாடச்சொன்னபோது பாடியது.]

608. குடக்கோடு வான்எயிறு கொண்டார்க்குக் கேழல்
முடக்கோடு முன்னம்அணி வார்க்கு—வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு.

(அ - ரை.) குடக்கு ஓடுவான் எயிறு-மேற்குத் திக்கு நோக்கி ஓடுகின்ற பகலவனது பல். கேழல் மூடக்கோடு - பன்றியின் வளைந்த கொம்பு. வடக்கு ஓடு தேருடையான் - வடதிசையை நோக்கிச் செல்லுகின்ற தென்றல் காற்றாகிய தேரையுடைய மன்மதன். தில்லை ஊர்-தில்லையம்பதியாகிய சிதம்பரம் அவருடைய பதியாகும். தோல் உடை - புலித்தோலாடையாகும். மேற் கொள்ளல் ஆன் - மேற்கொண்டு செல்லும் வாகனம் காளை. என்னும் உலகு - என்று உயர்ந்தோர் சொல்லுவர். (கூ)

[பெண் கொள்ளக் கூடாதென்று பாடியது.]

609. சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பனியும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலாம் நூறுவய தாமளவும்
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே.

(அ - ரை.) சேய்கொண்டாருங் கமலச் செம்மலுடனே - சிவப்பு நிறம் பொருந்தி அமைந்த தாமரைப்பூவில் தங்கும் நான்முகனோடு. அரவப்பாய் கொண்டானும் - பாம்பினைப் படுக்கையாகக் கொண்ட பெருமாளும். (க0)

[துறவற வியல்பையும் இல்லற வியல்பையும் பாடியது.]

610. நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கள் நிமலன்தாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்குங் காம
வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலை தானே.

(அ - ரை.) மனத்துறவு - உள்ளப்பற்று அறப்பெற்ற. நிமலன்தாளை கிட்டையிலே தொடுத்து - குற்றமற்ற கடவுளின் திருவடியை நெருங்கிய காலந்தொடங்கி, காமவெட்டையிலே மதிமயங்கி - காமச் சூட்டிலே அறிவுதிரிந்து. (கக)

[காளியின் தேர் சாய்ந்து முருங்கைமரம் ஒடிந்தபோது பாடியது.]

611. திருந்துதமிழ் இலக்கணைவைந் திணைக்கோவை
விருத்தகிரிச் செல்வற் கோதும்
பெருந்தகைமை உடையம்யாம் விடுமோலை
வெங்கனூர்ப் பிடாரி காண்க
இரும்புவியில் ஒருமுருங்கைக் கொம்பொடியா
மற்காத்திங் கிருக்குநீநம்
முருங்கைதனை வேரோடு களைந்தனையென்
ருல்உனக்கு முறைநன் ருமோ.

(அ - ரை.) திருந்து தமிழ் இலக்கண ஐந்திணைக் கோவை - பிழையற்ற தமிழிலக்கண அமைதியுடைய ஐந்திணைக்கோவை. பெருந்தகைமை உடையம்யாம் - பெருஞ்சிறப்பினைப் பெற்ற நாம். இரும்புவியில் - பெரிய நிலவுலகில். (கஉ)

[அறிவாசிரியருடன் இருக்கையில் ஒருநாள் இரவு திங்கள் தோன்றிற்று; அப்பொழுது பாடியது.]

612. கடன்முரசம் ஆர்ப்பக் கதிர்க்கயிற்றில் ஏறி
அடைமதி விண்கழைநின் ருடக்—கொடைமருவும்
எங்கள் சிவஞான ஏந்தல் இறைத்தமணி
தங்கியவே தாரகைகள் தாம்.

(அ - ரை.) கடல் முரசம்-கடலாகிய ஒலிக்கருவி. ஆர்ப்ப- ஆரவாரத்தோடு முழங்க. கதிர்க்கயிறு-திங்களின் சுடர்க்கயிறு. விண்கழை - விண்ணுகிய மூங்கில் மீது. தாரகைகள் - உடுக்கள். (கங)

[தங்களுக்குச் சிதம்பரபூபதி கட்டிக்கொடுத்த மடத்தைப் புகழ்ந்து பாடியது.]

613. வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியந்துரைக்கும்
எங்கட் கினிய சிவஞான தேவன் இசைவு கொண்டு
திங்கட் பவனி யிருகால் முதுகுன்றர் சேர் மறுகில்
மங்குற் சிதம்பர பூபதி நல்கும் மடமிதுவே.

(அ - ரை.) இசைவு கொண்டு - உடன்பாடு கொண்டு. முதுகுன்றர்-பழமலைநாதர். மறுகு-தெரு. மங்குல்-மேகம். (கச)

[தம் தம்பியாகிய கருணைப்பிரகாசர் இறந்தபோது பாடியது.]

614. முன்னமொரு தமிழ்ப்புலவன் றலையுண்டு
கண்டசுவை முதிர்ச்சி யாலே
தன்னியலை முழுதுமுரைத் தமையாமுன்
நினைக்கவர்ந்து தடங்கா ளத்தி
மன்னவனுண் டானெனது மாதவத்தின்
வலிதீர மண்ணின் மீதே
என்னுடன்வந் தவதரித்த இளங்கருணைப்
பிரகாசன் என்னுங் கோவே.

(அ - ரை.) முன்னம் ஒரு தமிழ்ப்புலவன் தலையுண்டு கண்டசுவை முதிர்ச்சியாலே என்பது ஒப்பற்ற தமிழ்ப்புலவராகிய அப்பர் திருப்புகலூரில் விழுங்கப்பட்டதைக் குறித்தது. காளத்திப்புராணம் முடிப்பதற்குமுன் கருணைப்பிரகாசர் உயிர் நீத்தமையால் இவ்வாறு பாடினர். (கரு)

[கற்காலை கடலை தின்னப் பாடியது.]

615. வில்லார் பொதுச்சபையின் வித்தகா நீயுமனங்
கல்லானைக் கிக்கருத்திக் காட்டியவுன்—வல்லாண்மை
கட்டுரையே யாயினிந்தக் கல்லே றெழீஇக் கடலை
இட்டவிவர் முன்தினச்செய்யே.

(அ - ரை.) வில்லார்-ஒளியமைந்த. வித்தகா-மேலானவனே கல்லானைக்கு + இக்கு + அருத்தி = கல்லானைக்கிக்கருத்தி. இக்கு - கரும்பு. அருத்தி - ஊட்டி. கட்டுரை - உறுதிச்சொல். கல்ஏறு - கற்காலை. (கசு)

[இப்பாடலைப் பாடிய சிவப்பிரகாசர் சித்தர் சிவப்பிரகாசர் எனவும் இவர் திருச்செங்கோட்டிற்குச் சென்ற காலத்தில் அங்குள்ளார் வேண்டுகோளின்படி புதுமையான செயலைச் செய்தனரெனவும் இவர் வேறு புதுமைகளும் செய்துள்ளார் எனவும் தெரிகிறது.]

௫0. திருக்காட்டுப் பள்ளிப் பெண்

[இப்பெண் திருக்காட்டுப் பள்ளியில் பழவினை வயத்தால் உப்பு விற்றுக்கொண்டிருந்தாள்; சிவப்பிரகாச அடிகள் தம் பெருமையால் அவளுக்குத் திருவருள் புரிந்தனர்.]

[சிவப்பிரகாச அடிகளுக்குப் பதிலளித்துப் பாடியது.]

616. தென்னுேங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னுேங்கு சேவடியைப் போற்றினேம்—அன்னேன்
திருக்கூட்டம் அத்தனைக்கும் தெண்டனிட்டோம் தீராக்
கருக்கூட்டம் போக்கினேம் காண்.

(அ - ரை.) *தென் - அழகு. தெண்டனிட்டோம் - வணங்கினேம். கருக்கூட்டம் - பிறவிப்பெருக்கு.*

௫௧. குமாரசாமியார்

(சிவப்பிரகாச அடிகளின் தந்தையார்)

617. கயல்வாய்த்த கண்ணி உலகீன்ற
வல்லிபங் காஉனது
செயல்வாய்த்த அன்பர்க்கும் அல்லா
தவர்க்குஞ் சிரிப்பலவோ
இயல்வாய்த்த எந்தைக்கி யான்வாய்த்
ததுவுமிங் கென்றனக்கு
வயல்வாய்த் ததுமனை வாய்த்தது
மைந்தர்கள் வாய்த்ததுமே.

(அ - ரை.) *கயல்வாய்த்த கண்ணி - கயல்மீன் போன்ற கண்ணை உடையவள். இயல் வாய்த்த எந்தைக்கு - நற்றன்மை வாய்ந்த என் தகப்பனுருக்கு. இவர் சிறந்த புலமையுடையவர். இவர் நூல்கள் செய்திருக்கலாம். ஆனுல் இவருடைய பெயரால் எத்தகைய நூல்களும் வழங்கக்கண்டிலம். பிள்ளைகள் சிறுவர் களாக இருக்கும்போதே காலமானுர்.*

ருஉ. கருணைப் பிரகாசர்

[மணஞ்செய்துகொள்ள விருப்பமுள்ளதா என்று கேட்ட பொழுது பாடியது,]

618. நாணியென்பதை நாரியென் றுரைத்திடு நசையால்
வேணுவானது வளைந்துபோய்ப் புகுந்தது என்றால்
காணலாவதோ ருருவமெய்ந் நாரியைக் கண்டால்
பூணுவார்மயல் காளைய ரென்பதும் புதிதோ.

(அ-ரை.) நாணி என்பதை நாரி என்று உரைத்திடும் நசையால்-நாணியென்ற சொல்லை உலகத்தார் நாரி என்று மருவி வழங்கவே நாரி யென்பதைப் பெண்ணென்றறிந்து விருப்பத் தோடு. வேணுவானது-மூங்கிலானது. காணலாவதோர் உருவம் மெய்நாரியைக் கண்டால் - பார்க்கக்கூடிய அழகான ஒப்பற்ற வடிவுடைய உண்மையான நாரியாகிய பெண்களைப் பார்த்தால்.

ருங. வேலைய அடிகள்

[இளவலாகிய கருணைப்பிரகாசர் காலமானபோது பாடியது.]

[இவர் சிவப்பிரகாசருக்கும் கருணைப்பிரகாசருக்கும் இடையே தோன்றியவர்.]

619. ஆண்டதனால் எனையொவ்வாய் வித்தையினில்
தமையனினும் அதிகம் என்றே
பூண்டவுல கதனினுள்ளோர் புகல்வதுகேட்
டிருந்துமென்ன புதுமைதானே
காண்டகுகண் மணியேநல் இளங்கருணைப்
பிரகாசக் காளாய் நீதான்
மாண்டனையென் றறிந்திருந்தும் உயிர்தரித்தேன்
யானுமிகு வன்னெஞ் சேனே.

(அ-ரை.) காண்டகு கண்மணியே - அழகிற் சிறந்த கண்மணி போன்றவனே. ஆண்டதனால் எனை ஒவ்வாய்-வயதில் எனக்கு ஒப்பாகமாட்டாய் என்றாலும். (க)

[அண்ணன் தம்பியாகிய இருவருங் காலமானதைக் குறித்துப் பாடியது.]

620. அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந் தறிகவிதை
சொல்லும் இருவரிடைத் தோன்றியயான்—முல்லை
அரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்!
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்.

(அ-ரை.) முல்லை அரும்பில் அணிமுறுவல்-முல்லைமொட்டு போல அழகான பற்கள். அல்லி மலர் பண்ணவனும் - உள் இதழ்களை உடைய கமலத்தில் தங்கும் நான்முகனும். கரும்பில் கணுநிகர்த்தேன் - கரும்பில் இனிப்பான பாகங்களுக்கு நடுவி லுள்ள கணுவை ஒத்தேன். (உ)

ருசுஎ. அந்தகக்கவி வீரராகவ முதலியார்

[இவர் பிறந்த நாடு தொண்டைநாடு. குலம் வேளாண் குலம். கண்பார்வை யிழந்தமையின் அந்தகக்கவி என்று வழங்கப்படலாயினர். திருக்கழுக்குன்றத் தலபுராணம், திருக் கழுக்குன்றமாலை, திருவாரூர் உலா முதலியன இவரியற்றிய நூல்கள். இவருடைய நூல்கள் வியக்கத்தக்க கற்பனை நலம் செறியப்பெற்றவைகளாகும்.

[யானை பரிசு பெற்று வந்தபோது முதலியாருக்கும் அவர் மனைவிக்கும் நடந்த உரையாடல்.]

621. இம்பர்வான் எல்லைஇரா மனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணநீ என்றாள் பாணி
வம்பதாங் களபமென்றேன் பூசுமென்றாள்
மாதங்க மென்றேன்யாம் வாழ்ந்தே மென்றாள்
பம்புசீர் வேழமென்றேன் தின்னு மென்றாள்
பகடென்றேன் உழுமென்றாள் பழனந்தன்னைக்
கம்பமா வென்றேன் நல்களியா மென்றாள்
கைம்மாஎன் றேன்சும்மா கலங்கி னாளே.

(அ-ரை.) பாணி - பாணன் மனைவி. இம்பர்வான் எல்லை - இவ்வுலகத்தையும் வானுலகத்தையும் தனது புகழ்க்கு எல்லையாக

உடைய. வம்பதாம் - மணமுடைய. பம்புசீர் வேழம் - நிரம்பிய புகழையுடைய யானை. பழனம் - வயல்.

களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா என்னும் சொற்கள் யானையைக் குறிக்கும் சொற்களாம். வெளிப் பொருள் : களபம் - சந்தனச்சேறு. மாதங்கம் - உயர்ந்த தங்கம். வேழம் - கரும்பு. பகடு - எருமைக்கடா. கம்பமா - கம்பு என்ற தானியத்தின் மா. (க)

[தானனென்பவன் தமக்கு யானையைப் பரிசாக வழங்கினதைக் கண்டு அவனைப் புகழ்ந்து பாடியது.]

622. இல்லெனுஞ்சொல் அறியாத சீகையில்வாழ்
தானனைப்போய் யாழ்ப்பா ணன்யான்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும்
பழந்தூசும் பாலி யாமல்
கொல்லநினைந் தேதனது நால்வாயைப்
பரிசென்று கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென(து) ஒருவாய்க்கு நால்வாய்க்கும்
இரையெங்கே துரப்பு வேனே.

(அ - ரை.) யாழ்ப்பாணன் யான் - யாழ் வாசிக்கும் பாணனாகிய நான். வெண்சோறும் பழந்தூசும் பாலியாமல் - சுத்தமான வெள்ளைச்சோறும் பழைய துணியும் தராமல். நால்வாயை - தொங்குகிற வாயையுடைய யானையை. துரப்புவேன் - நிரப்புவேன். (உ)

[பாலனைப் பழித்தலாகப் பாடியது.]

623. முன்னாள் இருவர்க்கும் யாக்கையொன் றாகமுயங்கினமால்
பின்னாட் பிரியன் பிரியையென் றாயினம் பேசலுறும்
இந்நாட் கொழுநன் மனைவியென் றாயினம் இன்னமுமோர்
சின்னாளில் எப்படியோ ஐயநீ இன்று செப்புவையே.

(அ - ரை.) ஐய - மகனே. பின்னாள் பிரியன் பிரியை என்றாயினம் - பிற்பாடு பிரியமுடையவன் பிரியமுடைவள் என்று பேசும்படியாக இருந்தோம். (௩)

[புலவர் அந்தகராயிருந்ததனுல் இலங்கை அரசன் வில்லும் அம்பும் எடுத்து வைத்துக்கொண்டு தான் இருக்கும் நிலைமையைக் கூறும்படி கவிஞரைக்கேட்க அவர் திருவருளால் உண்மையுணர்ந்து கூறியது.]

624. வாழும் இலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ ஈங்கில்லை—ஆழி
அலையடைத்த செங்கை அபிராமா இன்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு.

(அ - ரை.) இலங்கை வாழும் கோமான்-இராவணன். மான் இல்லை - மாரீசனிங்கில்லை. ஆழி அலை அடைத்த செங்கை அபிராமா - கடலலைகளை அணைகட்டி யடைத்த சிவந்த கைகளையுடைய அழகனே. (௪)

[அரசன் கண்டதைக் கண்டசுத்தியாற் பாடியது.]

625. வடவைக் கனலைப் பிழிந்து கொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப் பாடிப்
பரிசு பெறுமற் றிரும்பிவரும்
புலவர் மனம்போற்சுடு நெருப்பைப்
புழுகென் றிறைத்தாற் பொறுப்பாளோ
அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற்கிளிகள் பஞ்சரம் விட்(டு)
அகலா நிற்கும் அகளங்கா
திடமுக் கடவா ரணமு கைத்த
தேவே தேவ சிங்கமே
திக்கு விசயஞ் செலுத்திவரு
செங்கோல் நடாத்தும் எங்கோனே.

(அ - ரை.) திடமுக்கட வாரண முகைத்த தேவே - பல முடைய மும்மதம் பொழியும் யானையை ஏறிச் செலுத்திய தெய்வம் போன்றவனே. தேவசிங்கமே - விண்ணவர்க்குள் சிங்க மென்று சொல்லத்தக்கவனே. அடவிக் கதலிப் பசுங்குருத்தை - காட்டு வாழையின் இளங்குருத்தை. நச்சுக் குழல் - நஞ்சுடைய குழல். பஞ்சரம் விட்டு - கூட்டை விட்டு. வாடைத்துருத்தி வைத்து ஊதி - வடக்கே இருந்துவரும் குளிர் காற்றாகிய காற்றுப்பைக் கருகில் வைத்து ஊதி. மறுகக் காய்ச்சிக் குழம்பு செய்து - சுண்டும்படி காய்ச்சிக் குழம்பு வடிவாகச் செய்து. புடவிக் கயவர் தமைப்பாடி - உலகிலுள்ள புல்லரைப் புகழ்ந்து கூறி. (ரு)

[சிதம்பரபூபதியின் மீது நற்றுயிரங்குந் துறையமைத்துப் பாடியன.]

626. மாதரணி மென்முலைதோய் மாரா சிதம்பரபூ
மாதரணி ராசர்மகிழ் மாவசன—மாதர்
மறுகிடத்தே அம்பொன்மட வார்பழிக்க நெஞ்ச
மறுகிடத்தேங் குந்துரைப்பெண் வா.

(அ - ரை.) மாரா-மன்மதனே. தரணிராசர் மகிழ்மா வசன- மன்னர்கள் கேட்டு மகிழத்தக்க பெருஞ்சொற் கூறுபவனே. மாதர் மறுகிடத்தே - அழகான வீதியினிடத்தே. நெஞ்சம் உழல-மனம் மறுகிட. துரைப்பெண் தேங்கும் - எங்களரசியாகிய மாது அஞ்சி வருந்து கின்றாள். (சு)

627. சொல்லும்அல் லும்பகலும் சோருங் கிடைகிடக்கும்
கல்லும் உருகக் கனிந்தரற்றும்—புல்லியனை
விண்கலக் குங்கீர்த்தி வேள்சிதம்ப ரக்குமனு
பெண்கலக்கங் கொண்டுநின்றன் பேர்.

(அ - ரை.) விண் கலக்கும் கீர்த்தி - வானம் வரை பரவிய புகழையுடைய. கிடை கிடக்கும் - படுக்கையிலே கிடக்கின்றாள். கல்லும் உருக கனிந்து அரற்றும் - கல்லும் உருகும்படி மன முருகி அழுகின்றாள். (எ)

628. வந்தனந்த மென்பூ மணைந்தோய்ந்து பாயப்பா
வந்தனம்விம் மிச் சோர்ந்தாள் வாகோடி—வந்தனங்கல்
அன்னமனங் கொள்ளாமல் ஆள்சிதம்ப ரக்குமனு
அன்னமனங் கொண்டுயவே ஆங்கு.

(அ - ரை.) வந்து அனந்த மென்பூ மணந்தோய்ந்து பாய - தென்றற்காற்று அளவற்ற மெல்லிய பூக்களின் மணம் பொருந்தும்படி வந்து அவள்மேல் பாய்வதால். பாவம் தனம் விம்மி - பாவமாகக் கொங்கை பருத்து. அன்னம் அனம் கொண்டு உயவே - அன்னம் போன்ற இவள் சோறு உட்கொண்டு பிழைக்கும்படியாக. கல் அன்ன மனம் கொள்ளாமல் - கல்லுப்போன்ற இரக்கமில்லாத மனத்தோடு இராமல். வா - வருவாய். (அ)

629. மாவாரி முத்தவெண்பல் மாதுமயலைத் தனிசோ
மாவாரி முத்தளித்த வைபோகா—மாவுச்
சிதம்பர வையாநீ திக்குளுயர் பூமா
சிதம்பர வையாநீ திக்கு.

(அ - ரை.) சோமா - குளிர்ச்சியால் திங்களைப் போன்றவனே; சோமன் என்ற வள்ளல் போன்றவனே. ஆரிமுத்து அளித்த வை போகா - ஆரிமுத்து வள்ளல் பெற்ற சிறப்புடையவனே. மாஉச்சிதம் பரவு ஐயா - மிக உயர்வாக யாவரும் புகழ்கின்ற அப்பனே. நீதிக்கு-நீயே என் பெண்ணுக்குக் கதியாவாய். மாவாரி முத்த வெண்பல் - பெரிய கடலினின் றெடுக்கப்படும் முத்துப்போன்ற வெள்ளிய பற்கள். (௯)

630. பங்கசமேன் மேவியசௌ பாக்யசுப மானளித்த
அங்கசவேள் வெங்கணையால் ஆவிநொந்தாள்—எங்களிட
மாரஞ் சிதம்பரவு மாதினையாள் கோடிநமக்
காரஞ் சிதம்பரயோ கா.

(அ - ரை.) பங்கசமேல் மேவிய சௌபாக்கிய சுபமான் - தாமரைப் பூவின்மேல் தங்குகிற செல்வத்தையும் சுகத்தையும் தருகின்ற திருமகள். அங்கசவேள் - மன்மதன். மாரஞ்சிதம்பரவு - பெருமையும் இன்பமும் பரவிய. நமக்காரம் - வணக்கம். (௧0)

[பாஞ்சாலி மாமனுரைத் தழுவினுள் எனப் பாடியது.]

631. கோளரவேந்(து) உலகிலிந்தப் புதுமையுண்டோ
எனமொழிந்த குமனு கேளாய்
ஆளரைவர் தமைத்தோய்ந்த கற்புடைய
பாஞ்சாலி அணைந்த விமன்

வாளரிபோ லருகிருக்க மலயவெற்பில்
இருந்துவந்த மாம னுரைச்
சாளர வாசலைத் திறந்து வரவழைத்து
முலையாரத் தழுவி னுளே.

(அ - ரை.) கோள் அரவு ஏந்து-திறமை மிகுந்த பாம்பாகிய ஆதிசேடன் சுமக்கின்ற. ஆளர் ஐவர் தமைத்தோய்ந்த - கணவர்களாகிய பஞ்சபாண்டவர்களைத் தழுவிய. வாளரிபோல் அருகிருக்க - ஒளியுடைய சிங்கம்போலத் தன் பக்கத்திலே இருக்கவும். மலய வெற்பில் இருந்துவந்த மாமனுரை - பொதிய மலையில் தோன்றி உலாவி வந்த தென்றலாகிய மாமனுரை. சாளரம் - பலகணி.

தென்றற்காற்று வாயுவாதலினுலும் வீமனுக்கு வாயுவே தந்தையாதலாலும் பாஞ்சாலிக்குத் தென்றற்காற்று மாமனுராக உரைக்கப்பட்டது. (கக)

[பழநிச் செவ்வேளைப் பாடியது.]

632. பணியாரந் தோசையி லக்கொங்கை
தோய்ந்திடப் பார்ப்பர்பல்லி
பணியாரந் தோசையி லாச்செந்து
வாய்ப்பிறப் பார்களென்னே
பணியாரந் தோசைமுன் னேனுக்கிட்
டேத்திப் பழனிச்செவ்வேட்
பணியாரந் தோசை வராகாரன்
னேர்க்கென்ன பாவமிதே.

(அ - ரை.) பணி ஆரம் தோய் சையிலக் கொங்கை - நகையும் முத்துமாலையும் பொருந்திய மலை போன்ற முலை. பல்லி பணிஆர் அந்து ஓசையிலாச் செந்து - பல்லியும் பாம்பும் அருமையான அந்தும், ஒலியையறியாத பல உயிர்ப் பொருள்கள். பணியாரம் தோசை முன்னேனுக்கிட்டு ஏத்தி - பணியாரம் தோசைகள் என்பனவற்றை விநாயகருக்குப் படைத்து வழிபட்டு. செவ்வேள்-முருகனை. பணியார்-வணங்கமாட்டார்கள். அந்தோ-ஐயோ. சைவர் ஆகார் - சைவ சமயத்தவர்களாகமாட்டார்கள். (கஉ)

[விநாயகக் கடவுள் மீது பாடியது.]

633. விரஞ் சொரிகின்ற பிள்ளாய்
உனக்குப்பெண் வேண்டுமென்ருல்
ஆருங் கொடார்உங்கள் அப்பன்
கபாலிஅம் மான்திருடன்
ஊருஞ்செங் காடுநின் றன்முகம்
யானை உனக்கிளையோன்
பேருங் கடம்பன்உன் தாய்நீலி
நிற்கும் பெருவயிறே.

(அ - ரை.) உங்கள் அப்பன் கபாலி - உங்கள் தகப்பனுர் கபாலமெடுத்துப் பிச்சை ஏற்பவர். அம்மான் திருடன் - உன் மாமனுகிய கண்ணன் வெண்ணெய் களவு செய்தவன். (௩௩)

[கட்டுச்சோற்றைப் பறிகொடுத்தபோது பாடியது.]

634. சீராடை அற்ற வைரவன் வாகனம் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாராயண னுயர் வாகன மாயிற்று நம்மை முகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே.

(அ - ரை.) பாராரும் நான்முகன் வாகனம் தன்னை-நிலத்தி லிருந்த நான்முகன் ஊர்தியாகிய அன்னத்தை (சோற்றை). முன் பற்றிக் கௌவி - நாமெடுக்குமுன் எடுத்து வாயில் கவ்விக் கொண்டு. நாராயணன் உயர் வாகனம் ஆயிற்று - திருமாலின் பறக்கும் ஊர்தியாகிய கருடன்போல மறைந்தது. நம்மை முகம் பாரான் - நம்மிடத்திலே இரக்கம் வையாதவனுகி. மைவாகனன்- ஆட்டை ஊர்தியாகவுடைய தீக்கடவுள். (௩௪)

[கோதண்டராமனைப் பாடியது]

635. பாண்டியன் மாலைகண் டாய்மக ளேநினைப் பார்த்தவர்க்கு
வேண்டிய இன்பம் மிகவரு மோவெண்ணெ யேதிருடித்
தாண்டிக் குதித்தநற் கோதண்ட ராமன் தடவரைமேல்
ஆண்டி இருப்பிடந் தாத விருப்பிடம் ஆனபின்னே.

(அ - ரை.) ஆண்டி இருப்பிடம் - சிவனார் தங்குமிடமாகிய மலை போன்ற கொங்கை. தாதன் இருப்பிடமான பின்னே - திருமால் இருப்பிடமான ஆலிலை போன்ற வயிற்றினிடத்திற்கு வந்த பின்பு (கொங்கை திரங்கிச் சரிந்த பின்). பாண்டியன் மாலை கண்டாய் - பாண்டியன் மாலை போன்ற வேம்பாய் நீ இருக்கின்றாய்; (இன்பம் வருமோ பார்த்தவர்க்கு எனக் கூட்டுக.) (கரு)

[பெருமாள் துதி.]

636. சோனையுங் காத்துநல் லானையுங்
காத்துத் துரோபதைதன்
தானையுங் காத்தடைந் தானையுங்
காத்துத் தடத்தகலி
மானையுங் காத்தனு மானையுங்
காத்து மடுவில்விழும்
ஆனையுங் காத்தவ னேயெனைக்
காப்ப தரிதல்லவே.

(அ - ரை.) சோனையுங்காத்து - மழையையுந் தடுத்து. நல்லானையுங் காத்து - அதனாற் சிறந்த பசுக்களையுங் காப்பாற்றி. தானை - சேலை. அடைந்தானையுங்காத்து - சரணாகதியடைந்த விபீடணனையுங் காப்பாற்றி. தடத்து அகலி மானையுங் காத்து - காட்டு வழியே செல்லும்போது அகலிகையாகிய பெண்ணையும் காப்பாற்றி. (கசு)

637. பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியாம்
அவருக்குப் பொய்யா காத
மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறைபோல்
தவங்குறையு மிடியுண் டாகும்
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்
வறுமைபிணி தொலையா என்றும்
உய்யவருள் தேசிகற்குப் பொய்யுரைத்தால்
நரகமது உண்மை தானே.

(அ - ரை.) மிடி உண்டாகும்-வறுமை ஏற்படும். தேசிகற்கு-குருவுக்கு. (கஎ)

[ஈழநாட்டரசனை பரராசசிங்கனைக் காணச்சென்றபோது அமைச்சர்கள் சொற்படி திரையிட்டுக்கொண்டிருந்தான்; அப்போது பாடியது.]

638. நரைகோட் டிளங்கன்று நல்வயல் நாடு நயந்தளிப்பான்
விரையூட்டு தார்ப்புய வெற்பீழ மன்னனென் றேவிரும்பிக்
கரையோட்ட மீதில் மரக்கலம் போட்டுனைக் காணவந்தால்
திரைபோட்டு நீயிருந் தாய்சிங்க பூப சிரோமணியே.

(அ - ரை.) நரைகோடு - வெள்ளிய கொம்பு. விரை - மணம். அரசன் திரையிட்டிருந்ததற்குக் காரணம் அரசர்கள் குருடர்களைக் காண்டல் கூடாது ஆகலின் என்க. (கஅ)

[அரசன் பொற்பந்தங் கொடுத்தபோது பாடியது.]

639. பொங்குமிடி யின்பந்தம் போயதே என்கவிதை
எங்கும் விருதுபந்தம் ஏற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுயன் வீரபர ராசசிங்கம்
பொற்பந்தம் இன்றளித்த போது.

(அ - ரை.) மிடியின் பந்தம் - வறுமையின் சேர்க்கை வெற்பு அந்தம் ஆனபுயன் - மலையின் அழகும் தோற்றமும்படியான புயங்களை உடையவன். பொற்பந்தம் - பொன் முடிப்பு. (கசு)

[விசய்ராசன் பல்லக்கின் பின்வந்தபோது பாடியது.]

640. திருமாலும் ஈசனும் பின்போயுந் தூது செலத்துணிந்தும்
அருமா துரியத் தமிழ்வளர்த் தாரவ ரோடு பங்காய்
வருமா மறையவன் பேர்சாதித் தேமிக வண்டமிழ்க்குப்
பெருமான் சிவிகைப்பின் சென்றான் விசயப் பிரமனுமே.

(அ - ரை.) மாதுரியத் தமிழ் - இனிய தமிழ். திருமால் பின் சென்றது திருமழிசைப் பிரான் கட்டளைப்படி. ஈசன் தூது சென்றது சுந்தரர்க்கு. திருமாலும் சிவபிரானும் பின் போனதுந் தூதுசென்றதும் தமிழ்ப்பாடலின் பொருட்டு; விசயராசனாகிய நீயும் என்பின் வந்தபடியால் அத்தேவர்களை ஒப்பாய் என்பது குறிப்பு. (உ0)

[அரியலூர் மழவராயன் படிகொடுத்தபோது பாடியது.]

641. சேயசெங் குன்றை வருமோப்பி லாதிக்குச் செங்கமலத்
தூயசெங் கண்ணை வீணை யொப்ப ரேதன் டுரரயணிந்த
மாய னளக்கும் படிமூன்று கிட்டீனய மாமழவ
ராய னளக்கும் படியோத நாளைக் கிலக்கமுண்டே.

(அ - ரை) செங்குன்றை-திருச்செங்கோடு. அளக்கும்படி-அளக்கின்ற நிலம். (உக)

[மழவராயன் பாடிய இசையைக் கேட்டுப் பாடியது]

642. வாழொப்பி லாதவன் சேயொப்பிலாத மழவதிசை
ஆழக்கடல் விட்டு நீபாடுங் காலத் தரிசெலுங்கால்
நீழற் கவுத்துவ நீத்துச்செல் வானந்த நீண்மணிதான்
காழொப் பினுநின் னிசைகேட்குங் காற்கரைந் தேகுமன்றே.

(அ - ரை.) காழ் - வயிரம். அரி - திருமால். (உஉ)

[தீத்தான் இசையைக் கேட்டுப் பாடியது.]

643. வாவிய பொற்பரி யாவூரில் வீரையன் மைந்தபஞ்ச
காவியந் தேர்கின்ற தீத்தாநின் கீதத்திற் காவலர்தம்
ஓவிய சாலையெல் லாங்கொல்லி யாவுள் ளுருகும்ரத்ந
மேவிய கூடமெல் லாந்திரி கூடத்தின் மேற்படுமே.

(அ - ரை.) ஆவூர் - ஓர் ஊர். வாவிய பொற்பரி வீரையன் - தாவிச்செல்லும் அழகிய குதிரையையுடைய வீரையன். கொல்லியா - கொல்லிப்பாவையாக. திரிகூடத்தின் மேற்படும் - உவகைப் பெருக்கால் திரிகூடத்திற்கு அப்பாலும் வளர்ந்து செல்லுமென்க. (உ௩)

[சந்திரசேகரவாணன் மீது பாடியது.]

644. ஒப்பாரி யாய்நின் மகவைத்
தெருவில் ஒருத்தி கண்டே
அப்பா எனவெடுத் தாளணைத்
தாளன்னை தானுமென்றாள்

தப்பாதுன் மைந்தனென் றேனங்ங
வேதலை சாய்த்து நின்றுள்
செப்பாய் அவளெவள் காண்சேறை
வாழ்சந்த்ர சேகரனே.

(அ - ரை.) ஒப்பாரியாய் - அழுவதுபோல். தப்பாது உன் மைந்தனென்றேன் - தவறாது இது உன் மைந்தன்தான் என்று நான் சொன்னேன். ஊடற்காலத்துத் தலைவி கூறியது இது. நீ மற்றொருத்தியை வைத்திருக்கிறு யென்று இதனால் குறிப்பித்தாள். (உச)

[செழியனுக்குவிட்ட சீட்டுக் கவி.]

645. ஏடாயிரங்கோடி எழுதாது தன்மனத்(து)
எழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்த மெதிரிலாக்கவிவீர
ராகவன் விடுக்கு மோலை
சேடாதிபன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசே கரன்
தென்பாலை சேலம் புரந்து தாகந்தீர்த்த
செழியனெதிர் கொண்டு காண்க:
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பத்திகோ ணுத கோணம்
பறவாத கொக்கனற் பண்ணுத கோடைவெம்
படையிற் றொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாதமாவொடு
தொடுத்து முடியாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்கும்
துதிக்கவர விடல் வேண்டுமே.

(அ - ரை.) பாடாத கந்தருவம் எறியாத கந்துகம் முதலியன அடைமொழிகளால் குதிரையை உணர்த்தின. கந்தருவம் (இசை), கந்துகம் (பந்து), குந்தம் (சூலம்), பாடலம் (பாதிரி) சடிலம் சடை என்பன குதிரைக்குப் பரியாயப் பெயர்கள். (உரு)

[செழியன் பரிசில் கொடுத்தனுப்பியபோது மேலும் பொருள் வேண்டிப் பாடியது.]

646. சாலப் பழுத்த மரம்பார்த் தெறிவர்தண் ணீர்சுரக்கும்
ஞாலத் தகழ்வர் கறக்கின்ற ஆவைநற் கால்தளேவர்
நீலக் கடல்விட்டுப் பாலாழி மத்திட்டு நிற்பரிந்நீர்
சேலத்து வேந்தன் அகத்தாகந் தீர்த்த செழியனுக்கே.

(அ - ரை.) *சாலப்பழுத்த-மிகுதியாகப் பழுத்த. அகழ்வர்-தோண்டுவர். கால்தளேவர் - காலேப்பிணேப்பர். செழியனுக்கும் இந்நீர் (இத்தன்மையே) என்க.* (உ௬)

[காளத்தி கிருட்டிணப்பவாணனேப் பாடியது.]

647. இனிதினி தெனச்சேர சோழபாண் டியர்மெச்சி
இச்சித்த மதுரவாக்கி
ஈழமண் டலமளவும் இறைகொண்ட கவிவீர
ராகவன் விடுக்குமோலே
வனிதையர் விகாரமன் மதராச ரூபனன்
மயிலேயா திபதிசக்ர
வாளத்தி யாகிநங் காளத்தி கிருட்ணப்ப
வாண னெதிர் கொண்டுகாண்க
கனமுற்ற முத்தமிழ்த் துறையறி மரக்கலம்
கன்னிகா மாடநன்னூல்
கட்டுபொற் கொட்டாரம் வாணிசிங் காதனம்
கவிநா டகஞ்செய்சாலே
வினவுசிவ காதைச் சரக்கறை எனத்தக்க
விணேயேன் உடம்புநோயால்
மெலியுமோ மெலியாத வகையால் பெருத்ததொரு
மேதிவர விடவேண்டுமே.

(அ - ரை.) *கன்னிகாமாடம் - யாப்பருங்கலக்காரிகைப் பொருள் தங்குமிடம். வாணி சிங்காதனம் - கலேமகள் இருக்கை. மேதி - எருமை.* (உ௭)

[சந்திரவாணன் மீது பாடியது.]

648. மின்னு மாளிகை யனந்தை யாதிபதி
சந்த்ர வாணமகி பாலன்முன்
வீர ராகவன் விடுக்கும் ஓலைதன்
விருப்பி னுல்வலிய வேயழைத்(து)
உன்னு காவிய மதிற்பெ ருத்ததொரு
கோவை ஓதுகென ஓதினன்
ஓதி மாதமொரு மூன்று போகியொரு
நாலு மாதமள வாகவும்
இன்ன முந்தனது செவியி லேறவிலை
என்ன விந்தவுல கென்னுமோ
இராச ராசர்திறை கொள்ளு மென்கவிதை
இங்கு வந்துகுறை வாகுமோ
தன்னை என்சொலுவர் என்னையென் சொலுவர்
தான்த மிழ்க்குமனை மல்லவோ
தன்பு கழ்க்குமிது நீதி யோகடிது
தாமிந் நேரம்வர வேண்டுமே.

(அ - ரை.) துன்னு-பொருந்திய வலிய அழைத்துப் பாடச்சொன்ன கோவையை நான்கு மாத மளவும் அரங்கேற்றச்செய்து கேளாதிருந்தமையின் இவ்வாறு பாடினர். (உஅ)

[திம்மையவப் பையனைப் பாடியது.]

649. இந்நா விருந்தபேர் புதியபா கம்பண்
டிருந்தபேர் பழைய பாகம்
இருபாக மும்வல் இலக்கணக் கவிவீர
ராகவன் விடுக்குமோலை
அன்னுதி தானப்ர வாகன் ப்ரசங்கத்
தனந்தசே டாவதாரன்
அகிலப்ர காசன்திம் மய்யவப் பையன்தன்
அகமிக மகிழ்ந்து காண்க

தன்னுளும் ஒலியும் வரக்கண்டு நாம்வேத
சைலப்பு ராணத் தைஇத்
தனைநா ளிருந்தோதி னேமரங் கேற்றுவது
தான்வந் தலாமல் இல்லை
நன்னுவ லோருடன் இதைக்கேட் டெனர்சோழ
நாட்டுக் கனுப்ப வேண்டும்
நவிலோலை தள்ளாம லேசுக்ர வாரத்து
நாள்இங்கு வரவேண் டுமே.

(அ - ரை.) அன்னுதிதானப்ரவாகன் - சோறு முதலிய கொடையளிப்பதிற் புகழ் பெற்றவன். அனந்தசேடாவதாரன் - பல ஆதிசேடனின் கூருகத் தோன்றியவன். அகிலப்பிரகாசன் - உலகமெங்கும் விளங்கும் புகழுடையோன். (உக)

[சீவில்லிபுத்தூரைப் பற்றிப் பாடியது.]

650. வேசையரே மல்குமூர் விதியிலார் வந்தாலும்
பேசி வலைவிசிப் பிடிக்குமூர்—ஆசைமயல்
பூட்டுமூர் கையிற் பொருள்பறித்தே யோடுகொடுத்
தோட்டுமூர் சீவில்லிபுத் தூர்.

(அ - ரை.) மல்கும் - நிரம்பியிருக்கும். "மின்னர் தடமதில்சூழ்" என்றொரு பாடல் ஸ்ரீவில்லிபுத்தூரைப் பற்றிச் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது. அப்பாட்டிற்குப் போட்டியாகப் புலவர் இப்பாடலைப் பாடினர்போலும். (௫0)

[காஞ்சி வரதர் தேரை அம்மைச்சி வீட்டில் முட்டச் செய்த போது பாடியது.]

651. பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
தேர்ப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பாகக்
கொம்மைச்சிகர லங்கைக் கோட்டையென்று கொண்டீரோ
அம்மைச்சி வாழும் அகம்.

(அ - ரை.) கோப்பாக - தொடர்பாக. கொம்மை - வட்டமாகிய. சிகரம் - உச்சியுள்ள. அகம் - வீடு. (௫க)

[இலக்கண விளக்க நூலாசிரியராகிய வைத்தியநாத நாவலரைப் பாடியது.]

652. ஐம்பதின்மர் சங்கத்தார் ஆகிவிடா ரோநாற்பத்(து)
ஒன்பதின்மர் என்றே உரைப்பரோ—இம்பர்புகழ்
வன்மிக நாதனருள் வைத்தியநா தன்புடவி
தன்மீதந் நாட்சரித்தக் கால்.

(அ - ரை.) இம்பர் - இவ்வுலகத்தார். புடவிதன் மீது - உலகத்தின் மீது. சரித்தக்கால் - வாழ்ந்து கொண்டிருந்தக்கால். (௫௨)

[இடும்பவனத்திற் பாடியது.]

653. பசிமுடுக நோவதல்லால் பாழ்விட்டிற் பாழ்த்த
கொசுகுகடி யாலுங் குமைந்தோம்—இசையில்
நெடும்பாவம் யாஞ்செய்தால் நீரென்ன செய்வீர்
இடும்பா வனநாத ரே.

(அ - ரை.) பசி முடுக - பசி அதிகரிக்க. குமைந்தோம் - வருந்தினோம். (௫௩)

[நாகதேவன் என்பவன் இட்ட உணவைக் குறித்துப் பாடியது.]

654. வாயிலொன்று கல்லுமொன்று நெல்லுமான அன்னமும்
வாடலாக ஆறுமாதம் வைத்திருந்த கத்தரிக்
காயிலிட்ட கறியுமுப்பி லாதகஞ்சி அன்னமும்
காம்பொடிந்த ஓரகப்பை கைப்பிடித்த வண்ணமும்
தூயதாத் துலக்கலின்றி அழுக்கடைந்த பாத்திரம்
தூக்கியுள்ள சுத்தநீர் துறுத்துவந்த நேர்த்தியும்
ஓயலின்றி ஈக்கள் விழ்ந்து மொலுமொலென்ற சட்டியும்
உடன் கொணர்ந்த நாகதேவன் ஊண்மறப்பதில்லையே.

(அ - ரை.) துலக்கலின்றி - விளக்காமல். துறுத்துவந்த - அடைத்துக்கொண்டு வெளிப்பட்ட. நேர்த்தி - அழகு. ஓயலின்றி - ஒழிவில்லாமல். மொலு மொலு: ஒலிக்குறிப்பு. (௫௪)

[வீரராகவ முதலியாரின் மாணாக்கர்.]

655. இன்னங் கலைமகள் கைமீதிற் புத்தகம் ஏந்திஅந்தப்
பொன்னம் பலந்தனிற் புக்கிருந் தாளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றான் ஒருமுத் தமிழையுமே.

(அ - ரை.) களந்தைக்கவி வீரராகவன் - திருக்களந்தைப் பாவலராகிய அந்தகக்கவி வீரராகவ முதலியார். கச்சியிலே - காஞ்சிபுரத்திலே. தன்னெஞ்சம் ஏடு எனக் கற்றான் - தன துள்ளமே புத்தகமாக வைத்துப் படித்துத் தேர்ந்தார். (இது கண்ணில்லாதவரியல்பு காட்டியவாறு.) (ருரு)

[ஒரு தலைவியின் அழகை வியந்தது.]

656. வண்டோ விழிநுதல் வான்பிறையோ
அல்குல் மான்குளம்போ
செண்டோ முலைநித் திலமோ
நகைஇடை சேர்துடியோ
கண்டோ மொழிகுழல் காரோ
முகங்கம லம்பவளத்
துண்டோ இதழ்கன்னித் தண்டோ
தொடைஇந்தத் தோகையர்க்கே.

(அ - ரை.) நகை - பற்கள். நித்திலம் - முத்து. துடி - உடுக்கை. குழல் - கூந்தல். கண்டு - கற்கண்டு. கார் - மேகம். கன்னித்தண்டு - வாழைத்தண்டு. (ருசு)

[முருகனை வேண்டல்.]

657. ஆமா இகழ்ந்திட லாமா இனியுனை யன்றிவினை
போமா உனைவிட்டுப் போமா எனக்கிந்தப் புன்மைவர
லாமா பராமுக மாமா புயத்தி லணிகடப்பந்
தாமா குகனென நாமா அயிற்கரச் சண்முகனே.

(அ - ரை.) அணிகடப்பந்தாமா - அணிந்த கடப்பமாலையை யுடையவனே. வினை உனையன்றிப் போமா - தீவினைப் பயனானது உன்னுடைய அருளில்லாமல் நீங்குமா? (ருஎ)

[வறுமைக்குரியவரைப் பற்றிக் கூறியது.]

658. கவிகற் றவர்க்குங் கணிகற் றவர்க்குங்கம் மாளருக்கும்
ஓவிகற் றவர்க்கும் உபாத்தி களுக்கும் உயர்ந்தமட்டுங்
குவிவைக்கும் ஒட்டர்க்கும் கூத்தாடி கட்கும் குருக்களுக்கும்
இவரெட்டுப் பேர்கட்கும் நீங்காத் தரித்திரம் என்றைக்குமே.

(அ - ரை.) கவி கற்றவர்க்கும் - பாட்டுப் பாடத் தெரிந்தவர்களுக்கும், கணி கற்றவர்க்கும் - சோதிடம் கணிக்கத் தெரிந்தவர்களுக்கும். ஓவி கற்றவர்க்கும் - ஓவியம் எழுதத் தெரிதவர்களுக்கும். உயர்ந்த மட்டும் குவி வைக்கும் ஒட்டர்க்கும் - உயரமான அளவு சுவர் வைக்கின்ற தொழிலையுடைய ஒட்டச்சாதியினர்க்கும். (நடு அ)

[சந்திரவாணன் மீதுரைத்தது.]

659. மாலே நிகராகுஞ் சந்திர வாணன் வரையிடத்தே
பாலேரி பாயச்செந் தேன்மாரி பெய்யநற் பாகுகற்கண்
டாலே எருவிட முப்பழச் சேற்றின் அமுதவயல்
மேலே முளைத்த கரும்போ இம்மங்கைக்கு மெய்யெங்குமே.

(அ - ரை.) பாலேரிபாய - பாலாகிய குளத்துநீர் பாயவும். செந்தேன் மாரி பெய்ய-செம்மையாகிய தேன்மழை பொழியவும். நற்பாகு கற்கண்டாலே எருவிட - நல்ல கருப்பஞ்சாறு கற்கண்டு முதலியவற்றை உரமாகப் போடவும். (நடுகூ)

ருரு. கயத்தாற்றரசர்

[வீரராகவ முதலியார் காலமானபொழுது இரங்கிப் பாடியன.]

660. முன்னாட்டு தவமுனியுஞ் சேடனும்வான்
மிகனுமுன் முன்னில் லாமல்
தென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும்
புற்றிடத்துஞ் சென்று சேர்ந்தால்
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே
கவிவீர ராக வாநீ
பொன்னாட்டுப் புலவருடன் வாதுசெய்யப்
போயினையோ புகலு வாயே.

(அ - ரை.) முன் நாட்டு தவமுனியும் - முதன்மையாக நாட்டுகின்ற தவமுனிவராகிய அகத்தியரும். தென்னாட்டிலுள்ள பொதியமலையின் கண்ணும் பூமிக்குக் கீழும், புற்றிடத்தும். (க)

661. இன்னமுதப் பாமாரி இவ்வுலகத் திற்பொழிந்து
பொன்னுலகத் திற்பொழியப் போனதால்—மன்னும்
புவிவீர ராகமன்னர் பொன்முடிமேற் சூட்டுங்
கவிவீர ராகவமே கம்.

(அ - ரை.) பாமாரி - செய்யுள் மழை. (உ)

662. தோற்று தொளிந்திருந்த தூலக் கவிகளெல்லாம்
மேற்று ரகையின் விளங்கியவே—ஏற்றமுறுங்
கன்னுவ தாரன் கவிவீர ராகவனும்
பொன்னுரும் செங்கதிரோன் போய்.

(அ - ரை.) தோற்று தொளிந்திருந்த தூலக்கவிகள் - வீர ராகவ முதலியாருடைய கல்விப் பெருமையால் வெளியே தெரியாமல் பதுங்கிக்கிடந்த வெள்ளைக் கவிப் புலவர்கள். மேல் தாரகை - விண்மீன். (ங)

[திருவாரூர் உலாவைக் கேட்டபின் பாடியது.]

663. ஒட்டக்கூத் தன்கவியும் ஓங்கியகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டவே—அட்டதிக்கும்
வீசுங் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின்.

(அ - ரை.) வீரராகவ முதலியாருடைய செய்யுட்கள் எளிதில் பொருளறிய அருமையானவை என்பது கருத்து. (ச)

[கண்டிநாடு பஞ்சம்பட்ட காலத்தில் நெல்லனுப்பிக் காத்த சடையப்ப வள்ளல் மீது பாடியது]

664. இரவு நண்பக லாகி லென்பகல்
இருளறுஇர வாகிலென்
இரவி யெண்டிசை மாறிலென் கடல்
ஏழு மேறிலென் வற்றிலென்

மரபு தங்கிய முறைமை பேணிய
மன்னர் போகிலென் ஆகிலென்
வளமை இன்புறு சோழ மண்டல
வாழ்க்கை காரண மாகவே
கருது செம்பொனி னம்ப லத்திலோர்
கடவுள் நின்று நடிக்குமே
காவி ரித்திரு நதியிலே யொரு
கருணை மாமுகில் துயிலுமே
தருஉ யர்ந்திடு புதுவையம் பதி
தங்கு மானிய சேகரன்
சங்கரன்தரு சடைய னென்றொரு
தரும தேவதை வாழுமே.

(அ - ரை.) கருது செம்பொனின் அம்பலத்திலோர் கடவுள் - திருத்தில்லைக்கூத்தப்பிரான். கருணைமாமுகில் - திருவரங்கத் திருமால். மானியர் - பெருமையுடையவர். தரு உயர்ந்திடு - சோலைகள் உயர்ந்துள்ள. (ரு)

ருசுஅ. பரராசசேகரன்

[ஆருருலாவைக் கேட்டுப் புகழ்ந்து பாடியது.]

665. புவியோர் பெறுந்திரு வாரூர்
உலாவைப் புலவர்க்கெல்லாம்
செவியே சுவைபெறு மாறுசெய்
தான்சிவ ஞானவனு
பவியே எனுநங் கவிவீர
ராகவன் பாடியநற்
கவியே கவியவன் அல்லாத
பேர்கவி கற்கவியே.

(அ - ரை.) கற்கவி - கதவு நிலையின்மேலே போடப்பெறும் பாவுகல். (கவிகல் என மாற்றுக) கல்லைப் போன்ற கவி எனவும் பொருள் கொள்ளலாம். (க)

[தன்மீது பாடிய வண்ணத்தைக் கேட்டுப் பாடியது.]

666. விரகன்முத் தமிழ்க்கவி வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனும் ஒக்கக் கூடினல்
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே.

(அ-ரை.) வரகவி மாலை-மேன்மையான பாமாலை. உரகன்-ஆதிசேடன். வாணன்-வாணாசுரன். ஆதிசேடனும் வாணாசுரனும் ஒருங்கு சேர்ந்தால் தலையாட்டுதற்கும் கைதட்டுதற்கும் பொருத்தமாக இருக்குமென்பது கருத்து. (உ)

ருஎ. பரராசசேகரன் மனைவி

[அந்தகக் கவி வீரராகவ முதலியாரைப் புகழ்ந்து பாடியது.]

667. போத அழகன் கவிவீர ராகவன் போற்றுகவி
யோதையைக் கேட்டுக்கொண் டாடாத பேரில்லை யோங்குபுவி
மாதை யெடுக்கும் வலன்முடிச் சேட மகிபற்கன்றே
காதை வகுக்கிலன் வேதா சிரக்கம்பம் காண்பதற்கே.

(அ-ரை.) புவிமாது-நிலவுலக மாது. வேதா-நான்முகன். சிரக்கம்பம் - தலையசைத்தல். (க)

ருஅ. நிரஞ்சனநாதர்

[வீரராகவ முதலியாரின் சீட்டுக் கவியை வியந்து பாடியது.]

668. சீட்டுக் கவியென்று சொல்வார் சிலரந்தத் திட்டுக்கவி
காட்டுக் கெறித்த நிலவாகிப் போஞ்செங் கனகரத்நச்
சூட்டுக் கிரீட முடிவேந்த ருற்பத்தி சூறைகொள்ளும்
நாட்டுக் கிலக்கிய மாம்வீர ராகவ னற்கவியே.

(அ-ரை.) திட்டுக்கவி - கொடையாளர்களால் தீண்டப் பெறாத கவி. உற்பத்தி - பிறப்பு. இது பிறந்த மன்னர்களை யுணர்த்தியது. (க)

ருசுஅ. *கந்தபுராணம் கச்சியப்பர்

[வீரராகவ முதலியாரைப் புகழ்ந்து பாடியன.]

669. பொங்குதமிழ் அயோத்தியில்வாழ் தசரதனென்
போனிடத்தும் பூதூர் வேந்தன்
துங்கவடு கன்விடத்தும் விரரா
கவரிருவர் தோன்றி னூரால்
அங்கொருவன் ஒருகலைமான் எய்திடப்போய்
வசைபெற்றுன் அவனி பாலன்
இங்கொருவன் பல்கலைமான் எய்திடப்போய்க்
கவியினுல் இசைபெற் றுனே.

(அ - ரை.) ஒரு கலைமான் எய்யச்சென்ற இராமன் வசை பெற்றுன். பல்கலைமானுகிய கலைமகளை யடையச்சென்ற வீர ராகவனுகிய இராமன் இசை பெற்றுன். (க)

670. நாரேனும் பூவா னறுமணமாநின் கவிதை
ஆரேனும் கேட்கில் அவர்க்குந் தமிழ் வருங்காண்.

(அ - ரை.) பூவொடு சேர்ந்த நாரும் வளம்பெறுதலைப் போல நின் கவிதையைக் கேட்பவருக்குங் கல்வியறிவு உண்டாகும் என்க. (உ)

ருஎ0. படிக்காசுத் தம்பிரான்

[இவர் தொண்டை நாட்டுப் பொற்களந்தைப் பதியிற் பிறந்தவர், இராமநாதபுரம் இரகுநாத சேதுபதியின் அவைக் களப்புலவராக இருந்தவர். தொண்டை மண்டல சதகம், தண்டலையார் சதகம், புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம், முதலியன இவர் செய்த நூல்கள். இவர் காலம் கி. பி. 1686 முதல் 1723 வரை.]

[ஈயாரை வெறுத்துக் கூறியது.]

671. அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில்லாமல்
திடமுளமோ கனமாடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லை

---

* கந்தப்புராணச் சொற்பொழிவில் தேர்ந்த ஒரு புலவர்.

தடமுலேவே சையராகப் பிறந்தோ மில்லே
சனியான தமிழைவிட்டுத் தைய லார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோ மில்லே
என்னசென்மம் எடுத்துலகில் இருக்கின் ரேமே.

(அ-ரை.) மோகனம் ஆட - மயங்கச் செய்யும் தொழிலைச் செய்ய. கழைக்கூத்தாட - கம்பத்தின்மேல் நின்று ஆடுந்தொழில் செய்ய. செப்பிடு வித்தைகளாட - கண் கட்டிடு வேடிக்கைத் தொழில்கள் செய்ய. (க)

[கற்று வேண்டிப் பாடியது.]

672. பெற்ருள் ஒருபிள்ளே என்மனே
யாட்டியப் பிள்ளேக்குப்பால்
பற்ருது கஞ்சி குடிக்குந்
தரமல்ல பால்இரக்கச்
சிற்ருளும் இல்லேஇவ் வெல்லா
வருத்தமும் தீரஒரு
கற்று தரவல்லே யோவல்லே
மாநகர்க் காளத்தியே.

(அ-ரை.) கற்று தரவல்லேயோ - கன்ருேடு கூடிய ஒரு பசுவை நீ எனக்கு அளிக்கக் கூடுமா. (உ)

[பரிசு பெற்றபோது பாடியது]

673. வழிமேல் விழிவைத்து வாடாமல்
என்மனே யாளுமற்ருேர்
பழியாமற் பிள்ளேயும் பாலென்
றழாமற் பசிரேனுஞ்சொல்
மொழியாமல் என்னே வரவிட்ட
பாவி முசித்நச்சதை
கழியாமல் ஆவளித் தாய்வல்லே
மாநகர்க் காளத்தியே.

(அ - ரை.) பகிரெனும் சொல் மொழியாமல் - மனந் திகிலடையக் கூடிய வார்த்தையைக் கூறுமலும், முசித்துச் சதை கழியாமல் - அவள் வருந்தி உடம்பு மெலியாமலும். ஆ அளித்தாய் - பசுக் கொடுத்தாய். என்னைவர விட்ட பாவி என்பதும் மனைவியைக் குறித்தது. (ங)

[சீதக்காதி என்னும் வள்ளல்மீது பாடியன.]

674. ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி
லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி
லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம
லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக்
காதி வரோதயனே.

(அ - ரை.) தங்கள் காரியப்பேர் ஆர்தட்டினும் - தங்கள் சொந்தக் காரியத்தையே பார்க்கும் எவர் தடை செய்தாலும். தட்டுவாராமலே - தடை ஏற்படாமல். வரோதயன் - வரத்தினாற் பிறந்தவன். (ச)

675. நேசித்து வந்த கவிராசர்
தங்கட்கு நித்தநித்தம்
பூசிக்கும் நின்கைப் பொருளொன்று
மேமற்றப் புல்லர்பொருள்
வேசிக்கும் சந்து நடப்போர்க்கும்
வேசிக்கு வேலைசெய்யும்
தாசிக்கும் ஆகுங்கண் டாய்சீதக்
காதி தயாநிதியே.

(அ - ரை.) புல்லர் பொருள் - கீழ்மக்களுடைய செல்வம். சந்து நடப்பார்க்கும் - தூது செல்கின்றவர்களுக்கும். 'ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன எட்டிமரம், காயா திருந்தென்ன காய்த்தும் பலனென்ன கைவிரித்துப், போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய், ஓயாமல் ஈபவன் வேள்சீதக் காதி ஒருவனுமே' என்பதுங் காண்க. (ரு)

676. காய்ந்து சிவந்தது சூரிய
காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னூர்
நெடுங்கண் தொலைவில்பன்னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர்
நெஞ்சம் அனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக்
காதி இருகரமே.

(அ - ரை.) சூரிய காந்தி காய்ந்து சிவந்தது - சூரியன் ஒளி இடைவிடாது காய்ந்து சிவப்பு நிற மடைந்தது. மால்சீதக்காதி இருகரமும் ஈந்து சிவந்தது - காப்போனாகிய சீதக்காதி வள்ளலின் இரண்டு கைகளும் ஒவ்வொரு நாளும் இரப்பார்க் களித்துச் செந்நிற மடைந்தன. (௬)

[சீதக்காதி இறந்தபோது பாடியது.]

677. தேட்டாளன் காயல் துரைசீதக்
காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத்
தான்தமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி அவர்கள்தம்
வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனும் ஒளித்தான்
சமாதிக் குழிபுகுந்தே.

(அ - ரை.) தேட்டாளன் - பொருளீட்டுவதில் வல்லவன். புகழ்க் கம்பம் நாட்டி வைத்தான் - கீர்த்தியாகிய பெரிய தூணை நிலைநாட்டி வைத்தவன். (எ)

[ஒரு விலைமகள் சீதக் காதியைப் பாடியது.]

678. தினங்கொடுக்குங் கொடையானே தென்காயற்
பதியானே சீதக் காதி
இனங்கொடுத்த உடைமையல்ல தாய்கொடுத்த
உடைமையல்ல எளியாள் ஆசை

மனங்கொடுத்தும் இதழ்கொடுத்தும் அபிமானந்
தனைக்கொடுத்தும் மருவி ரண்டு
தனங்கொடுத்த உடைமையெல்லாங் கள்ளர்கையிற்
பறிகொடுத்துத் தவிக்கின் றேனே.

(அ - ரை.) இனம் கொடுத்த உடைமையல்ல - எனது சுற்றத்தார் எனக்குக் கொடுத்த செல்வமல்ல. (அ)

[தலைவன் பிரிவுக்காற்றாது ஒரு தலைவி வருந்திப் பாடியது.]

679. தரைகண்ட மட்டும் படர்ந்தண்ட
கோளமுந் தாவியெங்கும்
வரைகண்ட கீர்த்தி பெறுஞ்சீதக்
காதி உலகினில்வெண்
திரைகண் டெழுங்கடல் மீதேதன்
வங்கத்தைச் செல்லவிட்டுக்
கரைகண் டவனினங் காணுன்என்
ஆசைக் கடற்கரையே.

(அ - ரை.) தரைகண்ட மட்டும் படர்ந்து - நிலவுலக மெங்கும் சென்று அண்டகோளமுந்தாவி - அண்டத்தின் முகட்டிற்கும் அப்பாற் சென்று. வங்கத்தைச் செல்லவிட்டு - தன் கப்பலைச் செலுத்தி. கரை கண்டான்-அதனைக் கரை கண்டவனு யிருந்தும். இனம் - இன்னும். (க)

[அம்பிகைமீது எனக்கு யாதும் கொடுக்கவில்லையே என இரக்கமுறப் பாடியது.]

680. வேல்கொடுத் தாய்திருச் செந்தூரர்க்
கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவாள
னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய்மத வேளுக்கு
மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாயன்னை யேயெனக்
கேதுங் கொடுத்திலையே.

(அ - ரை.) கவுணியர்க்குப் பால் கொடுத்தாய் - திருஞான சம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பாலளித்தாய். மதவேள் - காமன். (௧0)

[இவைகள் முடியாவெனப் பாடியது.]

681. பொல்லாத மூர்க்கருக் கெத்தனை
தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க்குண் டான குணம்வரு
மோநடுச் சாமத்திலே
சல்லாப் புடவை குளிர்தாங்கு
மோநடுச் சந்தையினில்
செல்லாப் பணம்செல்லு மோதில்லை
வாழுஞ் சிதம்பரனே.

(அ - ரை.) சல்லாப் புடைவை - மெல்லிய உடை. (௧௧)

[வெற்றியிற் சிறந்த இரகுநாத வள்ளலைப் புகழ்ந்து பாடியது.]

682. மூவேந்தும் அற்றுமுச் சங்கமும்
போய்ப்பதின் மூன்றெட்டுக்
கோவேந் தரும்அற்று மற்றொரு
வேந்தன் கொடையும்அற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்பஞ்
சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு
நாத சயதுங்கனே.

(அ - ரை.) மூவேந்து - சேர சோழ பாண்டியர். முச் சங்கம் - முதலிடை கடை யென்னும் முச்சங்கம். பதின்மூன்றோடு எட்டு கோவேந்தரும் அற்று - இருபத்தொரு வள்ளல்களும் ஒழிந்து.

இருபத்தொரு வள்ளலாவார்: முதல் வள்ளல்கள் எழுவர்; இடைவள்ளல்கள் எழுவர்; கடைவள்ளல்கள் எழுவர் ஆகிய மூவகையாருங் கண்டு கொள்க. மற்றொரு வேந்தன் என்றது திருமலை நாயக்கரைக் குறிக்கும் என்பர். (௧௨)

[திருச்செந்தூர்க் கந்தநாதன்மீது பாடியன

683. முன்னநின் அன்னை முலையூட்டி
மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்னமுங் கிள்ளிய நாளல்ல
வேளன்னைக் காப்பதற்கே
அன்னமு மஞ்ஞையும் போலிரு
பெண்கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னமுஞ் சின்னவன் ருனேசெந்
தூரில் இருப்பவனே.

(அ - ரை.) அன்னமும் மஞ்ஞையும் போல் இரு பெண் கொண்ட ஆண் பிள்ளை நீ - அன்னமும் மயிலும் போன்ற தெய்வயானை வள்ளியம்மை ஆகிய இரு மாதரை மணந்த ஆண் மகனாகிய நீ. (௧௩)

684. முற்கரை அப்பரை ஏறவிட்
டாட்கொள் முதல்வர்உள்ளக்
கற்கரைக் கும்படி போதித்
திடுங்கரு ணைக்கடலைச்
சிற்பரைக் குட்டியை எங்கெங்குந்
தித்திக்குஞ் செங்கரும்பின்
சர்க்கரைக் கட்டியைக் கண்டேன்செந்
தூரெனுந் நாளத்திலே.

(அ - ரை.) முற்கரை அப்பரை ஏறவிட்டு ஆட்கொள் முதல்வர் - முன்னாளில் சமணர் கல்லொடு கட்டிக் கடலில் விட்ட திருநாவுக்கரசு நாயனுரைக் கல்லிலே மிதந்து கரையேறும்படி செய்து ஆட்கொண்ட பெருமானது. உள்ளக்கல் கரைக்கும்படி - நெஞ்சமாகிய கல்லினை உருகச் செய்வதற்கு. சிற்பரைக் குட்டியை - ஞானபராசக்தியின் மகனை. (௧௪)

685. சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப்
பிள்ளை சிவந்த பிள்ளை
பொன்னன் மணிப்பிள்ளை பூலோக
மெங்கும் புகழும்பிள்ளை

சொன்னெஞ் சுழல்கின்ற சூரனை
வென்றசொக் கேசர்பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்திற்
குறத்திக்கு மாப்பிள்ளையே.

(அ - ரை.) சின்னம் சிறுபிள்ளை - மிகுந்த இளம் பருவத்தி லிருக்கும் பாலன். செங்கோட்டுப்பிள்ளை - திருச்செங்கோட்டில் வீற்றிருக்கும் குமரன். சிவந்தபிள்ளை - செந்நிறமான முருகன். பொன்நன் மணிப்பிள்ளை - பொன் போன்ற பிள்ளை; நல்ல மணி போன்ற பிள்ளை. பொன், மணிபோலக் கிடைத்தற் கருமையான் பிள்ளை என்பது. சொல்நெஞ்சு உழல்கின்ற-மொழியும் மனமும் தடுமாறுகின்ற. (கரு)

[திருமலை நாயக்கர் என்பவர் தம்மைச் சிறைக்கூடத்தில் அடைத்தபோது பாடியது.]

686. நாட்டிற் சிறந்த திருமலையா
துங்க நாகரிகா
காட்டில் வனத்தில் திரிந்துழலாமல்
கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச னென்னுமோர்
பைங்கிளியைக்
கூட்டில் அடைத்துவைத் தாய்இரைதாவென்று
கூப்பிடுதே.

(அ - ரை.) துங்க நாகரிகா-உயர்ந்த புதுமையுடையவனே. சிறையில் அடைக்கக் காரணம் இவர் மிகுந்த ஆரவாரத்தோடு சென்றது. இப் பாட்டைக்கேட்ட நாயக்கர் இவரை விடுதலை செய்தார். (கசு)

[சீதக்காதி இறந்தபோது மனந்தளர்ந்து பாடியன.]

687. விண்ணுக்கு மண்ணுக்கும் பேராய்
விளங்குதே வேந்தனெனுங்
கண்ணுக் கினிய துரைசீதக்
காதி கமலநிகர்

தண்ணுக் கிசைந்த வதனசந்த்
ரோதய சாமியிந்த
மண்ணுக் குள்ளேயொளித் தான்புல
வோர்முகம் வாடியதே.

(அ - ரை.) விண்ணுக்கு மண்ணுக்கும் பேராய் விளங்கு - வானுலகத்திலும் பூவுலகத்திலும் கீர்த்தியொடு திகழுகின்ற. கமலம் நிகர் - தாமரை யொத்த. தண்ணுக்கு இசைந்த-குளிர்ச்சி யுடைய. வதன சந்த்ரோதய சாமி - முகத்தினால் நிலவொளி வீசும் தலைவன். (கஎ)

688. மறந்தா கிலுமரைக் காசுங் கொடாமட
மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன இருந்தாவ தென்ன
இறந்துவிண்போய்ச்
சிறந்தாளுங் காயற் றுரைசீதக் காதி
திரும்பிவந்து
பிறந்தா லொழியப் புலவோர் தமக்குப்
பிழைப்பில்லையே.

(அ - ரை.) மடமாந்தர் - அறிவில்லா மனிதர்கள். இறந்து விண்போய்ச் சிறந்து ஆளும் - இவ்வுலகை நீத்து விண்ணுலகம் சென்று அங்கே உயர்வுபெற்று ஆட்சி செய்கின்ற காயல்துரை சீதக்காதி - காயற்பட்டினத்துத் தலைவனாகிய சீதக்காதி வள்ளல்.
௬௯௦ (கஅ)

[திருச்செந்தில் முருகனைப் பாடியது.]

689. கல்லடிக்கும் உளியிரண்டு காதடிக்குள்
அடிப்பதெனக் கவிதை கேட்டுப்
பல்லடிக்கக் கிடுகி டெனப் பறையடிக்கும்
நெஞ்சர்தமைப் பாடு வேனே
வில்லடிக்கும் பிரம்படிக்கும் கல்லடிக்கும்
விரும்பிநின்ற மெய்யன் ஈன்ற
செல்லடிக்குந் தடவரையிற் சேறடிக்க
அலையடிக்குஞ் செந்திலானே.

(அ - ரை.) செல்லடிக்குந் தடவரையில் - இடியிடிக்கின்ற அகன்ற மலையைப் போல. சேறு அடிக்க அலை அடிக்கும் - சகதி படும்படியாக அலைமோதுகின்ற. கல் அடிக்கும் உளி இரண்டு காதடிக்குள் அடிப்பது என - கல்லைத் தகர்க்கின்ற உளியானது இரு செவிகளினடியில் அடிப்பதுபோல உணர்ந்து. பல் அடிக்கக் கிடுகிடு என - பல் கிடுகிடென நடுங்க. பறை அடிக்கும் நெஞ்சர் தமை - பாடினவர்கட்கு ஏதாவது ஈயவேண்டுமே என்றஞ்சிக் கலங்கும் மனமுடைய மனிதரை. (கசு)

[போலிப் புலவர்களைப் பற்றிப் பாடியது.]

690. குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியளவரக் காதைக் குடைந்து தோண்டி.
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்ருய் முடிந்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே.

(அ - ரை.) பிள்ளைப்பாண்டியன் என்பது, நைடத நூலாசிரியர் அதிவீரராமபாண்டியன் பெயர். வில்லியில்லை - வில்லிபுத்தூரார் இல்லை. தெட்டுதற்கோ - ஏய்ப்பதற்கோ. அறிவில்லாத்துரைகள் உண்டு - கல்வியறிவில்லாத தலைவர்கள் இருக்கிருர்கள். (உ0)

[இரகுநாத சேதுபதியைக் காணச் சென்றபோது பாடியது.]

691. விருதுபெறு கவிராச கவிச்சக்ர வர்த்திவாய்
விண்பேசு வார்கள்மிண்டன்
விஞ்சையர்கள் தம்பிரான் களந்தைப் படிக்காசு
விவரமுடன் எழுதுமோலை
பொருதுபிர பந்தமதில் நேர்கவிஞர் சேகரன்
புகழ்செய்தள வாய்குமாரன்
பூச்சக்ர மன்னர்பணி ரகுநாத சேதுபதி
பூரித்தெ மூந்துகாண்க

பரிதிமதி உள்ளளவும் நிற்கும் ப்ரபந்தங்கள்
பாடிநின் சீர்த்திகேட்டுப்
பஞ்சலட் சணதமிழ்க் காளிக்கை யுங்கொண்டு
பரிவாக உனைநாடியே
இருபதின் காதவழி கடலேறி வந்தனன்
இருந்தமிழ் கொள்ளவேண்டி
இந்நேர மேநம்மை இருகாத வழியளவும்
எதிர்கான வரல்வேண்டுமே.

(அ - ரை.) விருது - வெற்றிச் சின்னம். விஞ்சையர்கள் - அறிஞர்கள். தம்பிரான் - தலைவன். கவிஞர் சேகரன் - அறிஞர்களால் கொண்டாடப் பெறுபவன். பூரித்து - மகிழ்ந்து. பரிதி - ஞாயிறு. மதி - திங்கள். பரிவு - அன்பு. (உக)

[மாந்தை யென்னும் ஊர்த் தலைவருக்கு எழுதியது.]

692. தூளிபடவேவந்த கவிவாணர் கவியெலாம்
தூறையிடு கவிஞர்சிங்கம்
துட்ட நிட்டுரகவி சுப்ரதி பக்கவி
துறைக்கெலாந் துள்ளுசேட்டு
வாளைகுதி பாய்கின்ற மாந்தை குடிமேவிய
மகாசனத் தலைவருக்கு
மட்டுலவு சோலைக் களந்தைப் படிக்காசு
வரவிட்ட விக்கியாபனம்
காளமே கம்போல வசைபாட யாமுமிக்
காசினியில் அவதரித்தோம்
காளத்தி யப்பன்மேற் கவிதையும் மேலுமுள
கவிதையும் அறிந்ததிலையோ
ஆளனு மிருக்கவே செய்த கருமங்களுக்(கு)
அழிவுதே டுநலாகுமோ
ஆகாத காரியம் போகாது வினிலே
அபகீர்த்தி நிலைநிற்குமே.

(அ - ரை.) தூளிபட - விரைவுபட. மட்டு - தேன். (உஉ)

[தம் ஆசிரியரான வைத்தியநாத நாவலரின் மகன் சதாசிவ நாவலரைக் காண்பதற்குச் சென்ருர். அப்போது சதாசிவ நாவலரின் மாணவர்கள் சிலர் யாப்பருங்கலக்காரிகையை மனப்பாடஞ் செய்துகொண்டு தூதுளங்காய் பறித்துக் கொண்டிருந்தனர். அதனைக்கண்டு மகிழ்ந்து பாடியது.]

693. கூடுஞ் சபையில் கவிவா ரணங்களைக் கோளரிபோல்
சாடுஞ் சதாசிவ சற்குரு வேமுன்னுன் தந்தைதன்னுல்
பாடும் புலவர்க ளரனே மிளிச்செம்மற் பட்டியெங்கும்
காடும் செடியுமென் னேதமிழ்க் காரிகை கற்பதுவே.

(அ - ரை.) கவிவாரணங்கள்-பாவாணர்களாகிய யானைகள். கோளரி - அரிமா (சிங்கம்). தமிழ்க்காரிகை - யாப்பருங்கலக் காரிகை. (உங)

[சில புலவர்களை இழித்துப் பாடியது.]

694. அஞ்சாலி மக்களும் சாணுரும் பாணரும் அம்பட்டரும்
செஞ்சாயக் காரரும் வேசையர் மக்களும் செந்தமிழைப்
பஞ்சாகப் பன்னி ஒருகாசுக் கோர்வண்ணம் பாடலுற்ருர்
நஞ்சாகப் போயிற்று ராசாக்களுக் கெங்கள் நற்கவியே.

(அ - ரை.) அஞ்சாலி மக்கள் - இடையரில் ஒரு பிரிவினர். செஞ்சாயக்காரர் - துணி முதலியவைகளுக்கு நிறமேற்றுவோர். (உச)

[குமரேந்திர காங்கேயன் தந்தப்பல்லக்குக் கொடுத்த போது பாடியது.]

695. அந்திப் பிறைச்சடை யாரர வாசல ராலயத்தில்
கந்தப் பிரான்கதை கற்றிலே யாலமை காங்கெயரில்
விந்தப் புயக்கும ரேந்திர வேந்து வியந்தெமக்குத்
தந்தச் சிவிகை கொடுத்தான் பெரும்புகழ் தாங்கினனே.

(அ - ரை.) அந்திப் பிறைச்சடையார் - சிவன். விந்தப் புயம் - விந்தமலையைப் போன்ற தோள். அரவாசலர் - பாம்பு மாலை யணிந்த மலை போன்ற தோளை யுடையவர். (உரு)

[தொண்டைமண்டல சதகம் அரங்கேற்றிய பொழுது பாடியன.]

696. தகைவந்த சீர்த்தொண்டை மண்டலத்
 தார்தஞ் சரிதையையித்
தொகையென் றெருவர்க்குஞ் சொல்லப்ப
 டாதுசொன் னுளுமிக்க
நகைவந் திடுஞ்சொற் புலவோர்
 சபையிவில் நாமும்நம்மால்
வகைவந்த மாத்திரம் சொல்லிவைத்
 தோமிந்த மண்டலத்தே.

(அ - ரை.) தகை - மேன்மை. வகைவந்த மாத்திரம் - முடிந்த அளவு. (உகூ)

697. காவைவென் றிடுகத் தூரி கண்மணி கறுப்பன் என்னும்
மாவையம் பதியான் தொண்டை மண்டல சதகங் கேட்டு
நாவலர் புகழ்ந்து மெச்ச நவநிதி பொழிந்து நன்கு
பூவுல கெங்கும் போற்றப் புகழ்நிலை நிறுத்தி னுனே.

(அ - ரை.) காவை - கற்பகச் சோலையை. வென்றிடு - கொடையினுலே வெற்றிகொண்ட. (உஎ)

698. கன்மாரி காத்தமுகில் கத்தூரி அருண்மாவைக்
 கறுப்ப னென்னும்
வின்மாரி தனதுகிளை யத்தனையும் சபைகூட்டி
 வியந்து கேட்டுச்
சொன்மாரி பொழிந்திடவே சிரகரகம் பிதஞ்செய்து
 சுருளுந் தந்து
பொன்மாரி பொழிந்துதந்தப் பல்லக்குஞ் சுமந்துமிகப்
 புகழ்பெற் முனே.

(அ - ரை.) கல்மாரி காத்த முகில் - கல்மழையைத் தடுத்த முகில்வண்ணனுகிய திருமாலைப் போன்ற. கத்தூரி அருண் - கத்தூரி என்பவள் பெற்ற. வில்மாரி - ஒளியுடைய மேகம் போன்றவன். சிரகரகம்பிதம் - தலையாட்டலும் கைதட்டலும். (உஅ)

699. எல்லப்பன் அம்மையப்பன் தருதிருவேங் கடநாதன்
எழிற்சி ராமன்
வல்லக்கொண் டயன்மாதை வேங்கடே சுரன்போல
வரிசை செய்தே
செல்லத்தம் பியருடனே கத்தூரி மகன்கறுப்பன்
தெருவி திக்கே
பல்லக்குத் தான்சுமந்தான் அதுநமக்கோர் ஆயிரம்பொன்
பரிசு தானே.

(அ - ரை.) மாதை-திருவாமாத்தூர். வரிசை-சிறப்பு. (உக)

[சீதக்காதி இறந்தபோது பாடிய மற்றொரு பாட்டு]

700. ஈயாத புல்லர் இருந்தென்ன
போயென்ன எட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்துப்
பலனென்ன கந்தைசுற்றிப்
போயா சகமென் றிரந்தோர்க்குச்
செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் வேள்சீதக்
காதி ஒருவனுமே.

(அ - ரை.) புல்லர் - இழிந்தோர். யாசகம் என்று - இரத்தலுக்கு வந்திருக்கிறேன் என்று. (உ௦)

௬௬. சொக்கநாதப் புலவர்

[கறுப்பனென்னும் வள்ளலின் பெயரைச் சிறப்பித்துப் பாடியது.]

701. சீர்கறுத்த முகிற்கரத்தான் கத்தூரி
பூபனருள் சேயா வென்றும்
ஓர் கறுப்பும் இல்லாத தொண்டைவள
நாட்டிருக்கும் உசித வேளே!

ஆர்கறுப்பன் என்று சொல்லி அழைத்தாலும்
நாமுன்னை யன்பி னுலே
பேர்கறுப்பன் நிறஞ்சிவப்பன் கீர்த்தியினுல்
வெளுப்பன்எனப் பேசு வோமே.

(அ - ரை.) கறுத்த முகில் சிர் கரத்தான் - கார் மேகம் போன்ற வண்மைப் புகழ்ச்சியுடைய கையானுகிய. என்றும் ஓர் கறுப்பும் இல்லாத தொண்டைவள நாட்டிருக்கும் - எந்நாளிலும் ஒருவித குற்றமில்லாத செழிப்புடைய தொண்டை மண்டலத்தில் குடியிருக்கும். உசிதவேளே - உயர்ந்த வேளாளத் தலைவனே.

இவ் வள்ளல் கறுப்பன் என்னும் பெயருடையவராக இருந்தும் நிறத்தால் சிவப்பாக இருந்தமையின் இவ்வாறு பாடினுர். (க)

702. பிள்ளைவய தினிற்கல்வி கற்ருேம் பின்பு
பெரியநர வாகனமும் பெற்ருேம் பூமி
உள்ளளவுங் கீர்த்திநிலை நிறுத்திக் கொண்டோம்
ஒருகுறையு மில்லையினி உரைப்பக் கேண்மோ
தெள்ளிலகு சிதம்பரத்தைத் தெரிசித் தோம்பின்
சேற்கருங்கட் டவளநகைத் தெய்வ யானை
வள்ளிபுணர் சிவப்பனையும் துதித்தோ மெங்கள்
மாவைவளர் கறுப்பஉன்னை வாழ்த்தி னுேமே.

(அ - ரை.) பின்பு பெரிய நரவாகனமும் பெற்ருேம் - கல்வியின் பயனுக மனிதர் தூக்கிச் செல்லும் பல்லக்கும் ஏறப் பெற்ருேம். தெள் இலகு - தெளிவோடு விளங்குகின்ற. பின் சேல் கருங்கண் தவள நகை - சேல் மீன் போன்ற பெரிய கண்ணையும் வெள்ளிய பற்களையுமுடைய. (உ)

[திருச்செங்காட்டுப் பெருமானைப் பாடியது.]

703. மெய்யிலே ஒருபாதி உமைக்களித்த செங்காட்டு
விமல னுரே
மையிலே தோய்ந்தவிழிச் சந்தனமான் தலைக்கறியை
வளமா யாவின்

நெய்யிலே தான்சமைத்துக் கொடுத்திருந்தும் படைத்திருந்து
நீர்தா மின்று
கையிலே மழுவெடுத்நாற் பொய்யாமோ பிள்ளைகொன்ற
களவு தானே.

(அ - ரை.) மெய்யிலே-திருமேனியிலே. வளமா-செழிப்பாக. (௬)

[இதுவுமது.]

704. துப்பரையு மரகதத்தின் கொழுந்தரையு
மொன்ருகத் துலங்கு மெய்யா
செப்பரிய புலியதளைத் தரிக்குமுத்த
ராபதியிற் சிவனே நீதான்
அப்பரையும் விழுங்கியொரு பிள்ளையுந்தின்
ருற்ரும லையோ இன்னும்
கப்பரையும் கையுமாய்ப் புறப்பட்டாய்
நல்லதிருக் காட்சி தானே.

(அ - ரை.) துப்பரையும் - பவளமும். மரகதத்தின் கொழுந்தரையும் - பச்சையின் கொழுந்தும். ஒன்ருகத் துலங்கும் மெய்யா - ஒன்று சேர்ந்து திகழுகின்ற திருவடிவத்தை உடையவனே. அதள் - தோல். (௭)

[திருக்கழுக்குன்றப் பெருமான்மீது பாடிய நிந்தாத் துதி.]

705. அடிபட்டீர் கல்லாலும் எறிபட்டீர்
அத்தனைக்கும் ஆளா யந்தப்
படிபட்டும் போதாம லுதைபட்டீர்
இப்படியும் படுவா ருண்டோ?
முடிபட்ட சடையுடையீர் கழுக்குன்றீர்
முதற்கோணல் முற்றக் கோணல்
இடிபட்டும் பொறுத்திருந்தீர் சிவசிவா
உமைத்தெய்வ மென்ன லாமே.

(அ - ரை.) முடிபட்ட சடையுடையீர் - முடியப்பட்ட சடையினை உடையவரே. இடிபட்டும் பொறுத்திருந்தீர் - (திருக் கழுக்குன்றில்) இந்திரன் செய்யும் இடியபிடேகத்தையும் தாங்கி யிருந்தீர். (ரு)

[சிதம்பரம் நடராசப் பெருமானைப் பாடியது.]

706. செல்லாரும் பொழில்புடைசூழ் புலியூரம்
பலவாண தேவா உம்மைக்
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும்
பிரம்பாலுங் கடிந்து சாடும்
எல்லாரும் நல்லவரென் றெண்ணியரு
ளீந்ததென்ன இகழ்ச்சி யொன்றும்
சொல்லாமல் மலரால்விட் டெறிந்தவனைக்
காய்ந்ததென்ன சொல்லு வீரே.

(அ - ரை.) செல் ஆரும் பொழில் புடைசூழ் - மூகில் மண்டலத்தைப் பொருந்துகின்ற சோலைகள் அருகில் சூழ்ந் திருக்கும். கல்லாற் சாடியவர் - சாக்கியநாயனார். மலரால் விட் டெறிந்தவன் - காமன். (௬)

[சிவபெருமான் மீது நிந்தாத் துதியாகப் பாடியது.]

707. நல்லாளை யிடமருவுந் தியாகையா
உமதிடத்தில் நியாயங் காணேம்
கல்லாலே யெறிந்தோர்க்குஞ் செருப்படியால்
உதைத்தோர்க்குங் கடிந்து போரில்
வில்லாலே அடித்தோர்க்குங் கொடுத்ீரே
யல்லாது விழிநீர் சோர
எல்லாமுன் செயலென்றே யிருந்தேனுக்
கியாதேனும் ஈகி லீரே.

(அ - ரை.) நல்லாளை இடம் மருவும் தியாகையா - நன்மை மிக்க பார்வதி இடப்பாகத்தில் தங்கப்பெற்ற தியாகராசப் பெருமானே. (எ)

[திருவெண்காட்டு இறைவரைப் பற்றிப் பாடிய சிலேடை.]

708. பண்காணுந் தமிழ்ப்புலவிர் இனத்தோடே
இனஞ்சேரும் பரிசே போலத்
தண்காவி மலர்த்தடஞ்சூழ்க் காவிரிநாட்
டொருபுதுமை சாற்றக் கேளீர்
கண்காண நரையான்மேல் வெண்காடை
யிற்றிருக்கக் கண்டோ மந்த
வெண்காடை இடப்புறத்தே பச்சையன்னங்
கலந்திருக்கும் விதங்கண்டோமே.

(அ - ரை.) தண்காவி மலர் தடம்சூழ் - குளிர்ந்த நீலோற்பலப் பூக்களுள்ள பொய்கைகள் சுற்றியிருக்கப் பெற்ற. கண்காண நரையான்மேல் - (வெளிப்பொருள்) நேரிலே காணும்படி மீன்குத்திப் புள்ளின் மீது. (உட்பொருள்: வெள்ளைக் காளையின் மீது.) வெண்காடை விற்றிருக்கக் கண்டோம் - (வெளிப்பொருள்) வெள்ளை நிறமுடைய காடை தங்கியிருப்பதைப் பார்த்தோம். (உட்பொருள்: திருவெண்காட்டுத் தலைவராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கத் தரிசித்தோம்.) அந்த வெண்காடை இடப்புறத்தே-(வெளிப்பொருள்) அந்த வெள்ளைநிறமான காடைக்கு இடப்பாகத்தில். பச்சை அன்னம் கலந்திருக்கும் விதங்கண்டோம் - (வெளிப்பொருள்) பச்சைநிறமான அன்னம் உடனிருக்கும் முறையைப் பார்த்தோம். (உட்பொருள்: பச்சை நிறமுடைய அன்னம் போன்ற அம்மை இசைந்திருக்கும் முறையைப் பார்த்தோம். (அ)

[வறுமையைப் பற்றியது.]

709. இந்திரன் கலையாய் என்மருங் கிருந்தான்
அக்கினி உதரம்விட் டகலான்
எமனெனைக் கருதான் அரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்
அந்தமாம் வருணன் இருகண்விட் டகலான்
அகத்தினில் மக்களும் யாரும்
அநிலம தாகும் அமுதினை உண்போம்
ஆரெதிர் எமக்குளார் உலகில்

சந்ததம் இந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயும் எம்மை நிலைசெய் சற்கீர்த்திச்
சாளுவ கோப்பைய னுதவும்
மந்தர புயத்தான் திப்பைய ராயன்
மகிழ்வொடு விலையிலா அன்னோன்
வாக்கினுற் குபேரன் ஆக்கினன் அவனே
மாசிலீ ் சானபூ பதியே.

(அ - ரை.) இந்திரன் கலையாய் என் மருங்கு இருந்தான் - (குறிப்பு) ஆயிரங்கண் ணுடைய கிழிந்த ஆடை என் இடையி லிருந்தது. அந்தமாம் வருணன் இருகண் விட்டு அகலான் - அழகான நீர்க் கடவுள் இரண்டு கண்களையும் விட்டுப் போக மாட்டான். (கு-பு.) (கண்ணீர் ஒழுகிய வண்ணமா யிருக்கிறது.) அநிலமதாகும் அமுதினைக் கொள்வோம் - காற்றாகிய உணவைப் புசிப்போம். (கு-பு.) (உணவுப்பொருள் இல்லை வீட்டில்) தலை செயும் எம்மை - அவனுக்குப் பணியும் எங்களை. நிலைசெய் சற்கீர்த்தி - நிலைபெற்ற நற்புகழுடைய. சாளுவ கோப்பையன் உதவும் - சாளுவ கோப்பையன் பெற்ற. மந்தர புயத்தான் திப்பையராயன் - மந்தரமலை போன்ற கைகளை உடைய திப்பைய ராயனென்னும் வள்ளல். மகிழ்வொடு - களிப்புடனே. விலை இலா அன்னோன் வாக்கினால் - மதித்தற்கரிய தன்னுடைய உத்தரவுச் சொல்லால். எட்டுத்திக்குக் காவலர் ஆகிய தேவர் களும் இக் கவியில் வந்திருக்கும் நயம் காண்க. (கூ)

[திப்பையனைப் பாடியது.]

710. வண்டு கிண்டிய தொங்க லோதி
குணக்கெ ழுந்திடு மதிலமோ
மன்னு நூபுர மோப யோதர
மூரு வானவர் கனிகையோ
அண்டர் பூபதி வனிதை யோமுக
மமுத வாயிதழ் தும்பியோ
அரிகை யாயுத மோபி றந்திட
மன்ன மென்ன உலாவுவீர்

கொண்ட நண்பு முதார முந்தவ
ருத கோகன கானனன்
குத்தி பல்லவ ராயமேரு
குனுள திப்பையன் வரையின்மேல்
துண்ட வெண்பிறை வேணி கைச்சிலை
நானெ னப்புக லாவிடின்
தூர மோஅதி பார மோஒரு
சேர னுக்கொரு தொங்கலே.

(அ - ரை.) குத்தி பல்லவராயன் - குத்தி பல்லவராயனெனப் படுபவன். மேருகுனுளன் - மேருமலை போன்ற நல்லியல்புடையவன். வண்டு கிண்டிய தொங்கலோதி - வண்டுகள் சிறகால் தடவி நெகிழ்கின்ற மலர்மாலை யணிந்த குழலானது. குணக்கு எழுந்திடும் அநிலமோ - கிழக்கே தோன்றுகின்ற காற்ருகிய கொண்டலோ (மேகமோ.) பயோதரம் மன்னு நூபுரமோ - உன்னுடைய முலைகள் நிலையான சிலம்போ (சிலம்போ - மலையோ). ஊருவானவர் கணிகையோ - உனது துடை அரம்பையோ. (அரம்பையோ - வாழைத்தண்டோ.) முகம் - அண்டர் பூபதி வனிதையோ - உன் முகமானது இந்திரன் மனைவியாகிய சசியோ (சசியோ - சந்திரனே.) அமுதவாய் இதழ் தும்பியோ - அமுதம் ஊறும் உனது உதடானது வண்டோ. (வண்டோ-தேனே.) பிறந்திடம் அரிகை ஆயுதமோ - நீ பிறந்த இடம் விண்டுவின் கையிலுள்ள ஆழியோ. (ஆழியோ-திருப்பாற் கடலோ.) துண்ட வெண்பிறைவேணி கைச்சிலை நாண் எனப் புகலாவிடின் - வெள்ளிய பிறைத்துண்டை யணிந்த சிவன் கை வில்லின் நாணுகிய வாசுகி என்று நீ கூருவிடில். (வாசுகி=வா சுகத்தை யனுபவி யென்று கூருவிடில்.) சேரனுக்கு ஒரு தொங்கல் - சேர மன்னன் மாலைக் குரிய பனை. (பனை - பனை மடலால் ஆக்கப்பட்ட குதிரை.) தூரமோ அதி பாரமோ - எனக்குத் தூரமும் ஆவதில்லை அதிகச் சுமையாகவும் ஆவதில்லை (மடலேறுவேன் என்பது கருத்து.) (கO)

711. சந்திரனுக் குடலூனந் தனதனுக்கோர்
கண்ணூனந் தருவி வீழல்
இந்திரற்கோ பகக்குறியாம் இயமனுக்கோ
புழுக்காலாம் இரவி யீன்ற

மைந்தனுக்கோ கால்முடமாம் வளசனுக்கோர்
தலைக்குறையாம் வரலா றிதேல்
பந்தமுள மாவிடரை விதிவிடுமோ
ஆல்வாய்ப் பதியு ளானே.

(அ - ரை.) தனதனுக்கு ஓர் கண் ஊனம் - குபேரனுக்கு ஒரு கண் குருடு. தருவின் நீழல் இந்திரற்கோ - கற்பக மரத்தின் நிழலிலிருக்கும் இந்திரனுக்கு. பகக் குறியாம் - உடம்பெங்கும் பெண்குறி வடிவாம். இயமனுக்கோ புழுக்காலாம் - எமனுக்குக் காலில் புழுப்பற்றியுள்ளது. இரவி ஈன்ற மைந்தனுக்கோ கால் முடமாம் - பகலவன் பெற்ற பிள்ளையாகிய சனிக்கு ஒருகால் ஊனம். ஊழ்வினைவிட மாட்டாதென்று இவ்வாறு பாடினர். இப்பாடல் மதுரையில் பாடியது. (கக)

[தட்டானாகிய அரிகர புத்திரனைக் கடிந்து பாடியது.]

712. அட்டாவ தானமுந் தொல்காப் பியமும்
அகப்பொருளும்
தொட்டாதி தொட்டப்ர பந்தமெல் லாம்நம்மைச்
சொல்லச்சொல்லி
ஒட்டாரங் கட்டிநம் பல்லக்குக் கொம்பை
ஒடித்தெறிந்த
தட்டாரப் பையல் அரிகர புத்ரனைச்
சண்ணினனே.

(அ - ரை.) அட்டாவதானமும் - எட்டுக் காரியத்தை ஒரே சமயத்திற் பார்க்குந் திறமையும். ஒட்டாரம் கட்டி - முரட்டுத் தனம் பண்ணி. சண்ணினன் - வென்று தாக்கினேன். (கஉ)

[திருமாற்பேறு என்னுந் திருப்பதியில் பாடியது.]

713. பண்டனைப் பண்டனை யோதுபெம்
மானைப் பனிவரைக்கோ
தண்டனைத் தண்டனை செய்யுமுத்
தண்டனைத் தண்டனைமூ

தண்டனை யண்டர் தொழுந்திரு
மாற்பே றமர்ந்தமணி
கண்டனைக் கண்டனை யாயினெஞ்
சேமுத்தி கண்டனையே.

(அ - ரை.) பண்டனை-பழமையான தெய்வத்தை. பண்தனை ஓது பெம்மானை - பண்ணோடு கூடிய பாடலைப் பாடும் கடவுளை. பனிவரைக் கோதண்டனை -மேருமலையை வில்லாக வளைத்தவனை. தண்டனை செய்யும் உத்தண்டனை - தீயவர்களை ஒறுக்கும் உக்கிர முடையவனை. தண்டனை-வீணையையுடையவனை. மூது அண்டனை-பழமையான அண்டங்களுக்கு அதிபதியை. அண்டர் தொழும் திருமாற்பேறு அமர்ந்த - விண்ணவர் வழிபடும் திருமாற்பேறு என்னுந் தலத்தில் கோயில் கொண்ட. மணிகண்டனை - நீலகண்டப் பெருமானை. (கங)

[ஒட்டக்கூத்தர் செய்யுளைப் புகழ்ந்து பாடியது.]

714. துளைபடு மாமர மோரேழு மெய்தவன் றூதுகவி
உளைபடு வாரிதி யொன்றே கடந்த தொளிர்தரள
வளைபடு வாவி மணவைமன் கூத்தன் வகுத்தகவி
தளைபடு காலுட னேகட லேழையுந் தாண்டினதே.

(அ - ரை) தூதுகவி - தூதனாகிய அனுமானென்னுங் குரங்கு. உளைபடுவாரிதி ஒன்றே கடந்தது-சேற்று மண்ணுடைய ஒரு கடலையே தாவிச் சென்றது. ஒளிர் தரளம் - விளங்குகின்ற முத்துக்களையுடைய. வளைபடுவாவி-சங்குகள் இருக்கும் பொய்கையுள்ள. மணவை மன் கூத்தன் - மணவைப்பதிக்குத் தலைவனாகிய ஒட்டக்கூத்தன். வகுத்த கவி - இயற்றிய பாட்டானது. தளைபடு காலுடனே-தளை யென்னும் செய்யுளுறுப்பு அமைந்த அடியோடு. கடல் ஏழையும் தாண்டினதே - ஏழு கடலையும் தாண்டிச் சென்றது. (புகழ் உலகெங்கும் பரவிற்றென்பது கருத்து.) (கச)

[கங்காதரன் என்னும் செல்வனைப் பாடியது.]

715. துங்கா தராதல மெங்கு மொருமிக்கத் துய்த்தநர
சிங்கா தராதரந் தானறிந் தேநல்கச் சேலம்வந்த
கெங்கா தராநின் புகழ்கேட் டசைப்பன் கிரீடமென்றே
வெங்கா தராவுக்குச் செய்தான் இலன்மலர் வேதத்தனே.

(அ - ரை.) துங்கா - சிறந்தவனே! தராதலம் எல்லாம் ஒருமிக்க துய்த்த - உலக முழுவதையும் ஒருங்கு உட்கொண்ட. நரசிங்கா - நரசிங்கம் போன்ற கீர்த்தியுடையவனே! தராதரம் தானறிந்தே நல்க - புலவர்களுடைய தாரதம்மியந் தெரிந்து அதற்கேற்ற பரிசு அளிக்க. சேலம் வந்த கெங்காதரா-சேலத்தில் தோன்றிய கெங்காதரனென்னும் வள்ளலே! வெங்காது - விரும்பத்தகுஞ் செவியை. அராவுக்கு - ஆதிசேடன் என்ற பாம்புக்கு. மலர் வேதத்தன் - தாமரைப்பூவில் இருக்கும் வேதத்தை யாராய்ந்தவன் (பிரமன்.) (கடு)

[இரசை வடமலையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாடியது.]

716. புரசை வடமலை யப்பா விருட் கயம் பூண்டுகொண்டு
முரசை வடமலை யப்பாலும் செல்ல முழக்கம்செய்தோய்
சிரசை வடமலை யப்பாம்பின் வைத்துத் திருக்கண்வளர்
இரசை வடமலை யப்பாவிப் பாருக்கொ ரிந்திரனே.

(அ - ரை.) புரசை வடம் அலைய - கழுத்திலிட்ட கயிறு அசையும்படியாக. பாவு இருள் கயம் பூண்டு கொண்டு - பரவிய இருள் போன்ற யானைமேலேறிச் சென்று. வடமலை - இமயமலை. முரசை முழக்கம் செய்தோய் - கொடை முரசை அடிக்கச் செய்தவனே. சிரசை - தலையை. வடம் - ஆலிலையிலும். அலை - திருப்பாற்கடல். திருக்கண்வளர் - துயில்கின்ற திருமாலையொத்த. இரசை வடமலையப்பா - இரசைப்பதியில் வாழும் வடமலையப்ப வள்ளலே. (கசு)

[திருக்கழுக்குன்றிற் பாடியது.]

717. சொல்லுக் கினிய கழுக்குன்ற
ரேஉமைச் சொல்லவென்றால்
அல்லற் பிழைப்புப் பிழைத்துவிட்
டீர்முப்பு ராதியர்மேல்
வில்லைக் குனித்தெய்ய மாட்டாமல்
நீரந்த வேளைதனிற்
பல்லைத் திறந்துவிட் டீரிது
வோநும் படைத்தொழிலே.

(அ-ரை.) அல்லல் பிழைப்பு பிழைத்துவிட்டீர்-துயரமான வாழ்க்கை வாழ்ந்தீர். முப்புராதியர்மேல் - திரிபுரத் தலைவர்கள் மீது. வில்லைக்குனித்து எய்யமாட்டாமல் - வில்லை வளைத்து அம்பு எய்ய முடியாமல். (கள)

[திருமயிலையிற் பாடியன.]

718. துயிலையி லேஇடர் துன்னையி லேதெவ்வர் சூழையிலே
பயிலையி லேயிருட் பாதியி லேபசும் பாலனத்தை
அயிலையி லேவய தாகையி லேநமக் கார்துணைதான்
மயிலையி லேவளர் சிங்கார வேலர் மயிலையிலே.

(அ-ரை.) மயிலையிலே வளர் சிங்காரவேலர் - திருமயிலை என்னும் தலத்தில் வீற்றிருக்கும் அழகான முருகப்பெருமானுடைய. துயிலையிலே-தூங்கும்பொழுதும். இடர் துன்னையிலே-இடுக்கண் நெருக்கமாக வரும்பொழுதும். தெவ்வர் சூழையிலே-எதிரிகள் நம்மைச் சூழ்ந்துகொள்ளும்பொழுதும். பயிலையிலே - வழிநடக்கும் பொழுதும். பசும் பாலனத்தை - பசும்பாலோடு கூடிய சோற்றினை. அயிலையிலே - (நோய்க்காலத்து) அருந்தும் பொழுதும். ஆர் துணை - யார் துணையாக இருப்பார். மயில்+அயிலே—மயிலையிலே—மயிலும் வேலும்தாம் துணையாகும். (கஅ)

719. காப்பிட்ட பிள்ளைக் கறிக்கிச்சை
வைத்துவை யைக்கரைமேல்
மாப்பிட் டுவந்த மயிலேச
னேமலை யானநின்னைக்
கூப்பிட்டு நின்று குனிந்தொரு
கோலக்கொம் பாற்றடவிப்
பூப்பட்ட கண்ணிச் சயமாக்கி
னுன்மைப் புயல்வண்ணனே.

(அ-ரை.) காப்பிட்ட பிள்ளைக் கறிக்கு - கையில் காப்பு அணிந்த சிறு பிள்ளையின் ஊன் கறிக்கு. மா பிட்டு உவந்த - மாவினாற் சமைத்த பிட்டினை விரும்பிய. மயிலேசனே-திருமயிலைப் பெருமானே. குனிந்து ஒரு கோலக் கொம்பால் தடவி - கீழே தாழ்ந்து ஒரு பன்றியின் கோட்டினால் தடவிப்பார்த்து. பூப்பட்ட கண் நிச்சயமாக்கினான் - தனக்குப் பூவிழுந்த கண் இருப்பதை உறுதி செய்தான். (தாமரைப் பூப்போன்ற கண்ணைப் பறிக்க) உறுதி செய்தான்.) (கசு)

720. உம்பரை வாழ்வித்த நஞ்சங்கண்
டோம்ஒன் புரமெரித்த
அம்பரை யேற்றிய சூலங்கண்
டோம்அரு ளுங்குறைவில்
நம்பரைப் பாகமுங் கண்டோம்
அவர்திரு நாமஞ்சொல்லா
வெம்பரை யுங்கண்ணிற் கண்டோம்வெண்
காடனை வாழ்த்துங்களே.

(அ - ரை.) உம்பரை வாழ்வித்த நஞ்சம் கண்டோம் - விண்ணவர்களைப் பிழைக்கும்படி செய்வதற்கு உண்ட நஞ்சைக் (கண்டத்தில்) பார்த்தோம். ஒண்புரம் எரித்த அம்பர் ஐ ஏற்றிய சூலம் கண்டோம் - ஒள்ளிய திரிபுரத்தை அழிப்பதற்கு உதவிய அம்பு அழகு பொருந்திய சூலாயுதம் இவற்றைக் கையிற் கண்டோம். அருளும் குறைவில் நம்பரைபாகமும் கண்டோம்- நிரம்பிய அருளுடைய நம் பராசத்தி யமர்ந்திருக்கும் இடப் பாகமும் கண்டோம். (உ0)

[சிவகிரி முருகனைப் பாடியது.]

721. போதா சிவகுரு நாதா கலவை புழுகொடுசவ்
வாதார்ந்த கொங்கைக் குறமாது வள்ளிக்கு வாய்த்திடுமின்
பாதா ருகற்செற்ற வேல்விடுத் தாலென் பகையையறுக்
காதா மனமிரங் காதா சிவகிரிக் காங்கெயனே.

(அ - ரை.) போதா - அறிவனே. சிவகுருநாதா - சிவ பெருமானுக்குக் குருவாய் விளங்கக் கூடிய தலைவனே. தாருகன் செற்ற வேல் விடுத்தால் - தாருகாசூரனை அழித்த வேற்படையைச் செலுத்தினுல். (உக

[திருக்கழுக்குன்றத்திற் பாடியது.]

[வேறு]

722. மாடேறு தாளு மதியேறு சென்னியும் மாமலரோன்
ஓடேறு கையும் உடையார் தமக்கிட மோங்கியநெற்
கூடேறு சங்கஞ் சொரிமுத்தை முட்டையென் றேகமலக்
காடேறு மன்னம் சிறகால் அணைக்குங் கழுக்குன்றமே.

(அ-ரை.) மாடு ஏறு தாளும்-காளை வாகனத்திலேறுகின்ற திருவடியும். நெல்சூடு ஏறு சங்கம் - நெல்லின் குவியலின் மீதேறிய சங்குகள். கமலக்காடு ஏறு அன்னம் - தாமரைப்பூத் தொகுதியிற் சென்று தங்கும் அன்னப் பறவைகள். (உஉ)

[திருச்செந்தூர் முருகனைப் பாடியது.]

723. ஆலங் கிடக்கு மனத்தார்க் கொருநன்றி யம்பிலிட்ட
கோலங் கிடக்குங்கண் டாய்குறை யாத குணமுடைய
சீலங் கிடக்கு மனத்தார்க்கு ஒருநன்றி செய்யில்வெகு
காலங் கிடக்குங்கண் டாய்வளி காசெந்தில் காத்தவனே.

(அ-ரை.) ஆலம் கிடக்கும் மனத்தார்க்கு ஒரு நன்றி - நஞ்சின் தன்மை கலந்த நெஞ்சுடையவர்களுக்குச் செய்த ஒரு நன்மையானது. அம்பிலிட்ட கோலம் கிடக்கும் கண்டாய் - நீரில் எழுதிய எழுத்தைப் போல விரைவில் அழியும். (உரு)

[இறைவன்மீது பாடியது.]

724. சிந்தா மணிசங்கு தேனுமலர்த் தாமரைசீர்
ஐந்தருவு நின்னவே யாயிருக்க—வந்தேதான்
கச்சவிட மேயுண்ட கண்டா கடைதோறும்
பிச்சையிரந் துண்டதென்ன பேசு.

(அ-ரை.) கச்சவிடமே உண்டகண்டா-கசப்பான நஞ்சை யுண்ட கழுத்தை உடையவனே. கடைதோறும் - வீடுகள் தோறும். (உச)

[காளத்தி வள்ளல்மேற் பாடியது.]

725. அந்திக்கார் வந்துமய லாற்றுவார் அன்னையிடு
வந்திக்கார் வந்து வழக்குரைப்பார்—நந்திக்கார்
கச்சிக்கா ளத்திக்கார் காதலுரைப் பார்கனகக்
கச்சிக்கா ளத்திக்கார் காண்.

(அ-ரை.) நந்து இக்கு ஆர் - சங்குகளும் கரும்புகளும் நிறைந்த. கச்சி காளத்திக்கு - காஞ்சிபுரத்தில் வசிக்கும் காளத்தி வள்ளலுக்கு. ஆர் காதல் உரைப்பார் - (இந்த மாதின்) நிறைந்த வேட்கையை யார் போய்ச் சொல்லுவார்கள். கனகக் கச்சிக்கு -

பொன்னிறமான கச்சணிந்த அப்பெண்ணுக்கு. ஆள - மேற்பார்த்து ஆள்வதற்கு. திக்கு ஆர் - கதியாவார் யார். இடுவந்தி - இல்லாத பழியை யேற்றிச் சொல்லுதல். அந்திக்கு—மாலைப் பொழுதில். (உரு)

[கோவளம் சண்முகன்மீது பாடியது]

726. இருப்போ மென்றாலும் மிராதுளமா னேயிக்
கருப்போ மென்றாலுங் கசக்கும்—விருப்பாரும்
காசண் முகனை கடல்புடைசூழ் கோவளம்வாழ்
மாசண் முகனை மறந்து.

(அ - ரை.) விருப்பு ஆரும் காசு அண் மு - யாவரும் ஆசைப் படக்கூடிய மணிகள் கிடக்கும். கனை கடல் புடைசூழ் - முழங்குகின்ற கடலை அருகே வளையப்பெற்ற. கோவளம் வாழ் - கோவளத்தில் வசிக்கின்ற. மா சண்முகனை - பெரிய சண்முகப் பெருமானை. மறந்து இருப்போம் என்றாலும் உளம் இராது எனவும் கருப்போ மென்றாலும் கசக்கும் எனவும் கூட்டுக. (உசு)

[தலைவன் கூத்தாகப் பாடியது.]

727. பாரவிள நீர்சுமக்கப் பண்டே பொருதஇடை
ஆரவடஞ் சுமக்க ஆற்றுமோ—நேரே
புடைக்கனத்த கொங்கையின்மேற் பூங்களபஞ் சாத்தி
இடைக்கனத்தம் வைத்தவரார் இன்று.

(அ - ரை.) ஆரவடம் சுமக்க ஆற்றுமோ-முத்துமாலையைத் தாங்க முடியுமா. நேரே புடைகனத்த கொங்கையின்மேல் - தனங்களில் ஒன்றுக்கொன்று நேராகப் பக்கம்பருத்து நெருங்கிய அவற்றின் மீது. இடைக்கு+அனத்தம்—அனத்தம்-கேடு. (உஎ)

[திருவேரகத்து முருகனைப் பாடியது.]

728. வெங்காயஞ் சுக்கானல் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டி யாரே.

(அ - ரை.) ஏரகத்துச் செட்டியாரே - திருவேரகத்திலிருக்கும் செட்டி யெனப்படும் திருப்பெயருடைய முருகப்

பெருமானே! வெம்காயம் சுக்கு ஆனால் - விரும்பப்படுகின்ற இவ்வுடம்பு தவத்தினால் சுக்குப்போலப் பக்குவப்பட்டால். வெந்த அத்தால் ஆவது என்ன - வெம்மையான வினையினால் வரக்கூடிய தீங்கு என்ன. மங்காத சீர் அகத்தை தந்திரேல் - அழியாத சிறந்த வீட்டினைக் கொடுப்பீரானால். பெரும்காயம் தேடேன்-(இனி) பெரிய உடம்பினை நான் நாடமாட்டேன்.(உஅ)

[தலைவி கூற்றாகப் பாடியது.]

729. முன்னே இரண்டுமுலை முற்றியபின் னுமுலை
எந்நேரம் என்மதலைக் கெட்டுமுலை—எந்நாளும்
பைந்நாகஞ் சூழ்மதுரைப் பாணநின் பாகனுக்கிங்
கென்னாக மென்னும் இனி.

(அ - ரை.) எந்நாளும் பைந் நாகம்சூழ் மதுரைப்பாண - எக்காலத்திலும் படமுடைய நாகமானது எல்லையாகச் சுற்றி யுள்ள திருவாலவாயிலிருக்கும் பாணனே! நாலுமுலை - அவை தொங்குகின்ற தனங்களாயின. இனி என் ஆகம் என் ஆம் - இனி என்னுடைய உடல் எவ்வாறு பயன்படக் கூடியதாம்.(உக)

[தலைவன் வேறு கருத்தோடு இருந்ததைத் தலைவி கண்டு கூறிய கூற்றாகப் பாடியன.]

730. நங்கை யொருத்தியையும் நாமிருவர் மூவரையும்
பொங்கும் அமளி பொறுக்குமோ—சங்கம்
குழையவரால் பாயும் குருநாடர் கோவே
பழையவரால் என்ன பயன்.

(அ - ரை.) சங்கம் குழைய வரால் பாயும் - சங்குகள் சிதையும்படி வரால் மீன்கள் பாய்கின்ற. நங்கை ஒருத்தியையும் நாமிருவர் மூவரையும் என்றது உன் மனத்தில் ஒருத்தியை விரும்பியிருக்கின்றாய் என்பதைக் குறிப்பாலுணர்த்தியது. (ங0)

731. ஒருவர்க் கிடமாய் உகந்திருந்த பாயல்
இருவர்க் கிடமாய தென்னே—மருவலரைக்
கன்னுட்ட வில்நாட்டுங் கண்டன் கரிகாலன்
தன்னுட் டிகுபுநமை தான்.

(அ - ரை.) உகந்த ஒருவருக்கு இடமாய் இருந்த பாயல் - விரும்பிய பெண்ணுக்கு மாத்திரம் இடங் கொடுத்திருந்த

படுக்கையானது. மருவலரைக் கல் நாட்ட வில் நாட்டும் - பகைவரைக் கொன்று கல் நடுவதின் பொருட்டு வில்லை நிறுத்திப் பயன்படுத்தும். (௩௧)

[பிரிவையுரைத்து மறுத்த சமயத்தில் நேர்ந்ததாகப் பாடியது.]

732. நங்கை பயண நமக்கென் றுரைத்தளவில்
அங்கம் பசலைநிற மானதே—செங்கை
வளைநெகிழப் பாதி மறுத்தேனென் றோத
உளநெகிழப் பாதி உடைந்து.

(அ - ரை.) அங்கம் பசலைநிறம் ஆனதே - மேனியானது தேமல் படர்ந்து பசலை நிறம் பெற்றது. செங்கை வளை நெகிழ பாதி - அவள் கையிலுள்ள வளையல்கள் நெகிழும் போதே பாதியுடல் மெலிந்தது. மறுத்தேன் என்று ஓத உளம் நெகிழ - இப் பயணத்தை நான் மறுத்தேன் என்று சொல்ல நினைத்து. அவள் மனம் உருகபாதி - அவ்வாறு உருகும் போதே பாதியுடம்பும். உடைந்து - மெலிந்து உடைந்து பசலை நிறம் ஆனதே எனக் கூட்டுக. (௩௨)

733. அம்பலவா இன்னொருகால் ஆடினல் ஆகாதோ
உம்பரெலாங் கண்டதெனக் கோப்பாமோ—சம்புவே
வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்குந் தித்தியென
ஒற்றிப் பதஞ்சலிக்கும் ஊர்.

(அ - ரை.) வெம்புலிக்கும் - கொடுமையான புலியின் காலை யுடைய வியாக்கிரபாத முனிவருக்காகவும். தித்தி என ஒற்றி - தித்தி எனத் தாளம் போட்டு. பதஞ் சலிக்கும் - உம்முடைய திருவடிகள் வருந்திய. ஊர் - இவ்வூரின்கண். (௩௩)

734. இந்தவிடை நிற்பதரி தென்னுமை உம்மாணை
சந்தேக மாகச் சமைத்தானே—அந்தஅயன்
பாரதிரா மன்வரையிற் பைங்கொடியீர் கொங்கையிள
நீரதிரா மன்னடமின் னீர்.

(அ - ரை.) பாரதி ராமன் வரையில் பைங்கொடியீர்-பாரதி ராம னென்பவனது எல்லையிற் பயிலும் பசுமையான கொடி போன்ற மாதரே! நீர் கொங்கை இளநீர் அதிராமல் நடமின் -

உங்களுடைய தனங்களாகிய இளநீர்க் காய்கள் அலைந்து வருந்தாமற் செல்வீர்களாக. (௩௪)

735. உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றென்ப தின்றறிந்தேன்
மன்னுபுகழ் மச்சத்தார் மன்னவா—உன்னுடைய
பொன்னுகத் தெங்கையர்தம் போகநகச் சின்னங்கண்(டு)
என்னுகத் தேஎரிகை யால்.

(அ - ரை.) மன்னுபுகழ் மச்சத்தார் மன்னவா - நிலைத்த புகழையுடைய மச்ச நாட்டினர்க்கு வேந்தனே! உன்னுடைய பொன் ஆகத்து - உன்னுடைய அழகிய மார்பில். எங்கையர் - என் தங்கையர் (பரத்தையர்.) போகநகச் சின்னம் - கூடற் காலத்து நகத்தாற் கீறிய வடு. என் ஆகத்தே - என் மனத்தில். எரிகையால் - காந்துவதால். (௩௫)

736. காளத்தி கண்டத்தே காளத்தி நெற்றியிலே
காளத்தி உன்றன் கரத்திலே—காளத்தி
அங்கமெங்கும் வெவ்வழலை ஆற்றினுள் ஞானப்பூங்
கங்கையென்னும் பெண்ணெருத்தி கண்டு.

(அ - ரை.) காளத்தி - திருக்காளத்தி நாதரே! கண்டத்தே காளத்தி - உம்முடைய கழுத்திலே விடத்தின் வெப்பமிருக்கிறது. நெற்றியிலே காளத்தி - உம்முடைய நெற்றியிலே மன்மதனைக் கொன்ற விடத்தி இருக்கிறது. ஞானப் பூம் கங்கை எனும் - அறிவு வடிவமான அழகிய கங்கை யென்னும். (௩௬)

737. மேவில் உடனே விடியும் விடியாது
கோவைமணி மார்பாநீ கூடாநாள்—தேவர்
திரண்டா தரிக்கின்ற தென்னரங்க மாலே
இரண்டாலும் பொல்லா(து) இரா.

(அ - ரை.) நீ கூடா நாள் விடியாது எனக் கூட்டுக. இரா இரண்டாலும் பொல்லாது - இக்காலமானது இரண்டு வகையிலும் கொடிதாக இருக்கின்றது. (௩௭)

738. நிணம்போதத் தள்ளிப் பெரும்பூதம்
போலப்பின் நேற்றுச்செத்த
பிணம்போற் கிடந்து புரளுவர்
காண்பிறர்க் கிட்டிவைத்த

பணம்போன பின்பு விவேகமுன்
டாகுமப் பஞ்சைகள்வங்
கணம்போதும் போதுங் கறுப்பாதேன்
மாவையிற் காவலனே.

(அ - ரை.) நிணம் போதத் தள்ளி - கொழுப்பு மிகவுந் தள்ளி. பஞ்சைகள் - இழிந்தவர்கள். வங்கணம் - நட்பு. (௩அ)

[சவரிப்பெருமாள்மேற் பாடியது.]

739. சோதிச் சவரி விழிக்கோ கரவில்லை தூயகுழல்
கோதிச் சவரி முடிக்கறி யாள்கொண்ட கோலமென்னே
நீதிச் சவரிப் பெருமாளென் றோதி நினைந்துருகப்
போதிச் சவர்இவட் காரோ அறிகிலன் பூங்கொடியே.

(அ - ரை.) சோதிச்ச - நான்முகனால் ஆராய்ந்து படைக்கப் பட்ட. வரிவிழிக்கோ - இரேகைகளையுடைய கண்களுக்கோ. கரவு - வஞ்சனை. சவரி முடிக்க அறியாள் - கவரிமாமயிர்க் கற்றையை முடித்துக் கொள்ளவும் அறிந்திலள் (இளம் பருவப் பெண்). போதிச்சவர் - போதித்தவர். (௩௧)

[திருவெண்காட்டு இறைவன்மீது பல பறவைப் பெயர்கள் வருமாறு பாடியது.]

740. மன்னுநரை யானைவனப் பினுக்கொக் கானை
மாந்தியவுச் சிட்டனைமங் கைதங்காக் கையனை
பன்னரிய வலியானைத் தோல்விலங்கா டையனைப்
பஞ்சரங்கள் அமைப்பானைப் பகருமளி யானை
உன்னுநலி லாநெஞ்ச மடையானைப் புகழ்ந்தே
ஓதினர்க் கருளுகவு தாரியம்முன் னானைத்
தன்னிகரி லாக்கிழவிக் காட்காட்டி னானைத்
தமிழ்சேர்வெண் காடையருட் கருடனையேத் துவமே.

(அ - ரை.) நரையான் - வெள்ளிய இடபத்தையுடையவன். வனப்பினுக்கு ஒக்கானை - அழகில் இணையில்லாதவனை. மாந்திய - உண்ட. உச்சிட்டனை - எச்சிலை உடையவனை. (கண்ணப்பன் எச்சில் உண்டவனை.) மங்கை தங்கு ஆக்கையனை - உமைதங்கிய

உடம்புடையவனை. தோல்விலங்கு - யானைத்தோல். அருள் உதவு உதாரி - கருணையை விரும்பிக் கொடுக்கும் கொடையாளி. எம் உள்ளானை - எமது மனத்தில் இருப்பவனை. வெண்காடு அருட்கு அருள்தனை - வெண்காட்டுறையும் தலைவனாகிய கருணையிற் சிறந்த கருணைப் பொருளை.

நரையான், கொக்கு, சிட்டு, காக்கை, வலியான், சாடை, பஞ்சரம், கவுதாரி, உள்ளான், வெண்காடை, கருடன் என்று பறவைப் பெயர்கள் வந்திருப்பன காண்க. (சப)

741. வேளுக்கு வாம்பரியும் வில்லுக்கு நீலமுஞ்சேல்
வாளொக்குங் கண்மடவார் வாய்க்காடும்—நாளும்
மருதப் பணையே வளர்த்துவிட்ட தாலே
மருதப் பணைவணங்கு வாள்.

(அ - ரை.) வேளுக்கு - காமனுக்கு. வாம்பரி - தாவுகிற குதிரை. வேளினுடைய தேருக்குக் குதிரை மான் வில்லுக்கு நீலம் - காமன் வில்லுக்குக் கணை கருங்குவளை. மானையுங் கருங் குவளையையும் போன்ற கண்ணையுடையவளென்க.

சுஉ. பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

[இவர் சண்பகநல்லூர்ச் சிவபெருமான்மீது வண்டுவிடு தூது என்னும் நூல்பாடி அரங்கேற்றினார். அந்நாளில் இவருக்குப் பகையாயிருந்த சுப்பிரதீபக் கவிராயர் என்பவர் சண்பகமலரில் வண்டு படியாதென்னுஞ் செய்திகொண்டு அவ் வண்டுவிடுதூது பொருந்தாது என்று மறுத்தார். இவர் நாமகளை நினைத்து வணங்கிச் சண்பக மலரின்மீது வண்டு படியச் செய்தனர். இவர் சேதுபதி வேந்தரின் அமைச்சராகிய தெய்வ கன்னிமீது விஞ்சைக் கோவை என்று ஒரு கோவை பாடினார். கோவை யரங்கேற்றப்பெற்ற எட்டாம் நாளில், அத் தெய்வ கன்னி இறந்தார். மேற்கூறிய வண்டுவிடுதூது, விஞ்சைக் கோவை ஆகியவைகளைத் தவிரத் தேவையுலா என்றோர் உலாவும் இவர் பாடியுள்ளார். இவருடைய பிறப்பிடம் குலம் முதலியன விளக்கமாகத் தெரிந்தில. திருமலை நாயக்கர் அரசு புரிந்த காலத்தில் அவருடைய அவைக்களப் புலவராக விளங்கி யிருந்ததாக அறிஞர் கூறுவர். இவருடைய பாடல்கள் மிக நயம் பொருந்தியவைகளாய்க் கற்றோர்க்கின்பம் பயப்பனவாய்ச் சிறந்து திகழ்கின்றன.]

[திருக்குடந்தைச் சிவபிரான் மீது பாடியது.]

742. நின்று படியளக்கு நீலக் கொடிகளிரண்
டென்றுமுள வாங்குடந்தை யிச்சுரருக்—கொன்றுக்
குரைக்கு மரையீந்தா ரொன்றதனுக் கென்னே
அரைக்கு மரை யியா ரவர்.

(அ-ரை.) *நின்று படியளக்கும் நீலக்கொடிகள் - நிலையாக எவ்வுயிருக்கும் உணவு முதலியவற்றை வினைக்குத்தக்கபடி அளந்து கொடுக்கின்ற. நீலநிறமுடைய கொடிபோன்ற உமையம்மையும் பெருவடிவம் எடுத்து நின்று உலகத்தை அளந்த நீலநிறத்தையுடைய திருமாலாகிய சத்தியும் ஆக இருவர். ஒன்றுக்கு- ஒரு சத்தியாகிய உமையம்மைக்கு. உரைக்கும் அரையீந்தார்- புகழப்படுகின்ற தமது உடலிற் பாதியை அளித்தார். ஒன்றதனக்கு-மற்றொருவராகிய திருமாலுக்கு. எக்காரணம் பற்றியோ அவர் அரைக்கும் அரை ஈயார் - அரையிற் பாதியாகிய காலையும் கொடுக்கமாட்டார். (இது திருவடியைக் காட்டாததைக் குறித்தது)* (க)

[சிவபெருமானுக்கு அரைக் கண்ணென்று பாடியது.]

743. *முக்கண்ண னென்றரனை முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே—மிக்க
உமையாள்கண் ணொன்றரைமற் றான்வேடன் கண்ணொன்
றமையும் இதனால் அறி.

(அ - ரை.) *அக்கு அண்ணற்கு உள்ளது அரைக்கண்ணே - எலும்புதரித்த அப் பெருமானுக்குச் சொந்தமாக இருப்பது பாதிக்கண்ணே யாகும்.* (உ)

[திருமறைக்காட்டீசுவரர் மீது பாடியது.]

744. பாணியிலே புள்ளிமான் பாகத்தே பச்சைமான்
வேணி தனிலேயோர் வெள்ளைமான்—காணுமலர்ச்
செம்மா னுலவுந் திருமறைக்காட் டீசரே!
எம்மானுக் கெங்கே இடம்.

---

* இப்பாடல் வேறு சிலருடைய பெயராலும் வழங்கும்.

(அ-ரை.) காணும் மலர்ச்செம்மான்-அழகாகத் தோன்றும் தாமரைப்பூவில் வீற்றிருக்கும் திருமகள். பாணியிலே-கையிலே. வேணிதனிலே ஓர் வெள்ளைமான் - உம்முடைய சடையிலே வெள்ளை நிறமான கங்கை இருக்கிறாள். எம்மானுக்கு - என்னுடைய மகள் தங்குவதற்கு. (௩)

[சொக்கநாதப்பெருமான் மீது பாடியது.]

745. வான்பணிந் தாலவர் என்பே உரைக்கும் மலரில்அயன்
தான்பணிந் தாலவன் தன்தலை யேசொல்லுந் தாரணியுண்
பான்பணிந் தாலவன் கண்ணே பரிந்து பரிந்துரைக்கும்
நான்பணிந் தாலெனக் கார்சொல்லு வார்சொக்க நாயகர்க்கே.

(அ-ரை.) வான் பணிந்தால் - வானவர்கள் வழிபட்டால். அவர் என்பே உரைக்கும் - அவர் எலும்பே சான்று பகரும். தாரணி உண்பான் பணிந்தால் - மண்ணுண்ட மாயன் வழி பட்டால். அவன் கண்ணே பரிந்து பரிந்துரைக்கும்-அர்ச்சித்துச் சாத்திய அவன் கண்ணே மிக ஆதரவாய்ச் சான்று பகரும். மலரில் அயன் - பூவில் வாழும் பிரமன். (௪)

[சிவபெருமான் அணிந்திருக்கும் பாம்பு முதலிய அணி கலன்களைப் பற்றிப் பாடியது.]

746. மெய்க்கே அணியும் பணியேஎன்
பேமுடிமேற்கிடந்த
கொக்கேவெண் கூன்பிறை யேஅரை
சேர்ந்த கொடும்புலியே
அக்கே உமக்குக் கிடைத்த
உபாயங்க ளாஎமக்கும்
சொக்கேசர் பாதத்தைக் கிட்டும்
உபாயத்தைச் சொல்லுங்களே.

(அ-ரை.) பணியே - பாம்பே. கொக்கே - கொக்கிறகே. அரை சேர்ந்த கொடும்புலியே - இடுப்பில் உடுத்திய கொடுமை யான புலியின் தோலே. அக்கே - உருத்திராட்ச மணியே. மெய்க்கே - உடம்பில். என்பே - எலும்பே. கூன் - வளைந்த. (௫)

[மதுரைச் சொக்கநாதர் மீது பாடிய இகழ்ச்சிப் புகழ்ச்சி.]

747. தாண்டித் திரியும் விடையேறி ஓடொன்று தாங்கிப்பிச்சை
வேண்டிக் கலியுக காலந்தள் ளாமல் விரும்பிச்சொக்கர்
ஆண்டித் தொழிலைவிட் டையோ மதுரைக் கரசிருந்து
பாண்டித் துரைத்தனஞ் செய்தே பிரம்படி பட்டனரே.

(அ-ரை.) விடையேறி - காளையின்மேல் ஏறி. பாண்டித் துரைத்தனஞ் செய்து - பாண்டி நாட்டில் அதிகாரஞ் செலுத்தி. (சு)

[திருக்களந்தைப் பெருமான் மீது பாடியது.]

748. ஆகத்தி லேயொரு பாதியென்
எம்மைக் களித்தவள்தன்
பாகத்தி லேயொன்று கொண்டாய்
அவள்மற்றைப் பாதியுமுன்
நேகத்தில் பாதியுஞ் சேர்ந்தால்
இருவருண் டேசிவனே
ஏகத்தி ராமல் இருப்பாய்
களந்தையும் என்னெஞ்சுமே.

(அ-ரை.) ஆகத்தில் - உடம்பில். ஏகத்து இராமல் - ஒரு வடிவமாய் இராமல். களந்தையும் என்னெஞ்சுமே யிருப்பாய் - திருக்களந்தைப் பதியில் ஒரு வடிவமும் என்னுள்ளத்தில் ஒரு வடிவமுமாய்த் தங்கி அருளுவிராக. (எ)

[மதுரைச் சொக்கநாதர் யானைமீது பவனி வருவதைக் கண்டு பாடியது.]

749. முன்னானை கூப்பிட ஓடிவந் தானை முளரிமலர்ப்
பொன்னானை யேறி இருப்பானைப் பூழியன் கைக்கரும்பைத்
தின்னானை யென்றுகல் லானைக்கிட் டானைத் திருமதுரை
மன்னானை வீதியில் ஏறிவந் தானை வணங்குதுமே.

(அ-ரை.) முளரி மலர்ப் பொன்னானை - தாமரைப்பூவில் வீற்றிருக்கும் திருமகளை மனைவியாக உடையவனை. மன்னானை -

தலைவனுனவனே, மன் வீதியில் ஆனேயேறி வந்தானே - பெரிய வீதியில் யானை வாகனத்தில் உலாவந்த சிவபெருமானை. (அ)

[சீகாழிச் சிவபிரானைக் குறித்துப் பாடிய நற்றுயிரங்கல்.]

750. நமக்கின் றொருவர நீர்தர
வேண்டும் நலந்திகழுங்
குமக்கொங்கை பாகத்துக் கொச்சையுள்
வீர்கொடுங் கோளரவிற்
கிமைக்கும் பிறையை அளித்தா
லதற்கு மிரும்பசிபோம்
உமக்குந் தலைச்சுமை போமெங்கண்
மானு முயிர்பெறுமே.

(அ - ரை.) கொச்சையுள்ளீர் - சீர்காழியில் வீற்றிருக்கும் பெருமானே! கொடுங்கோள் அரவிற்கு - கொடிய வலிய பாம்பிற்கு. இமைக்கும் பிறையை அளித்தால் - ஒளி வீசுகின்ற பிறைச் சந்திரனைக் கொடுத்தால். (௯)

[மதுரைச் சொக்கநாதருக்குள்ள மாண்பெல்லாம் சொக்க நாயகியா லுண்டானதென்று பாடியது.]

751. ஆனை யுரித்தும் அதள்தனைப் போர்த்திட் டடியும்பட்டு
மான மழிந்தங் கிரந்தே திரிந்த மதுரைச்சொக்கர்
ஞான மிகப்பெற்று வாழ்வதெல் லாஞ்சொக்க நாயகியாள்
பானை பிடித்த முகூர்த்தத்தி னல்வந்த பாக்கியமே.

(அ - ரை.) அதள்தனைப் போர்த்திட்டு - அதன் தோலைப் போர்வையாகக்கொண்டு. (௧௦)

[திருநெல்வேலி வடிவன்னையைப் பற்றிப் பாடியது.]

752. ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுன் னருகிருந்து
நீமுத்தந் தாவென் றவர்கொஞ்சும்
வேளையில் நித்தநித்தம்

வேய்முத்த ரோடென் குறைகளெல்
லாமெல்ல மெல்லச்சொன்னல்
வாய்முத்தஞ் சிந்தி விடுமோ
நெல்வேலி வடிவன்னையே.

(அ - ரை.) வேய்முத்தரோடு-மூங்கிலடியில் முத்துப்போல் அருளொளி வீசும் பெருமானிடம். (கக)

[சொக்கநாதருக்கு அருளில்லையென்று பாடியது.]

753. குதியால் நமனை உதைத்துள்ளங் காலினிற் கூன்நிமிர
மதியாகந் தேய்த்தவ் விலங்கேசன் மாமுடி பத்துநக
நுதியால் மிதித்து முயலகன் மேனி நொறுங்கஇன்னும்
மிதியாநின் ருலரு ளெங்கேசொக் கேசர்தம் மெல்லடிக்கே.

(அ - ரை.) குதியால் நமனை உதைத்து - குதிங்காலினல் நமனை உதைத்துத் தள்ளி. நொறுங்க இன்னும் மிதியா நின்ருல்- சிதைந்து அழியும்படி இப்பொழுதும் மிதித்துக்கொண் டிருந்தால். (கஉ)

[பாண்டியன் சிவபிரானைப் பிரம்பால் அடித்ததைக் குறித்துப் பாடியது.]

754. மண்ணென்ற மண்டல மெல்லாம்
புரக்கும் வழுதிசற்றும்
தண்ணென்ற நெஞ்சம் தரித்தில
னேதனு வேடனெச்சில்
உண்ணென்ற போதுண் டவர்சொக்கர்
பாதி யுடலம்பச்சைப்
பெண்ணென் றறிந்தும் அடித்தானெவ்
வாறு பிரம்புகொண்டே.

(அ - ரை.) தனுவேடன் எச்சில் உண்ணென்றபோது - வில்லைத்தரித்த வேடராகிய கண்ணப்பர் தம்முடைய எச்சில் கலந்த ஊனை அருந்துக என்று வேண்டியபோது. வழுதி - பாண்டியன். மண் என்ற மண்டலம் - மண்ணுலகம். (கங)

[களந்தைப் பதிவாழிறைவனை யடைதற்கு நல்வினை எப்பொழுதுண்டாகுமோ எனப் பாடியது.]

755. இன்றேக்க வேண்டிலெவ் வாறேக்கு
மோவெழில் சேர்களந்தைக்
குன்றேக்குங் கோபுரம் கோபுர
மொக்குமக் குன்றதுபோல்
அன்றேக்க வேண்டுமென் னல்வினை
தீவினை யாமிரண்டும்
என்றேக்குமோ இனித் தென்களக்
காடனை யான்பெறவே.

(அ - ரை.) தென்களக்காடனை யான் பெறவே - தென் களந்தைப் பதியிலிருக்கும் சிவபெருமானை நான் போய் அடைவதற்கு. நல்வினை தீவினையாம் இரண்டும் என்றேக்குமோ என்றது, இருவினையொப்பு மலபரிபாகம் என்ற கருத்து. (கச)

[சிவந்தான் மல்லைப் பல்லவனைச் சிறப்பித்துப் பாடியது.]

756. மாதாம் படியுண்டு மெய்சிவந்
தான்குழல் வைத்திசைத்துச்
சேதாம் பலக்கனி வாய்சிவந்
தான்செம் மலர்த்திருவின்
சூதாந் தனந்தைத் துரஞ்சிவந்
தானவர் தூதுசென்று
பாதாம் புயஞ்சிவந் தான்சிவந்
தான்மல்லைப் பல்லவனே.

(அ - ரை.) மா - பெரிய. தாம்பு - கயிறு. குழல் - வேய்ங் குழல். சேதாம்பல் - செவ்வல்லி மலர். அக்கனி - அந்தக்கோவைப் பழம். இவைபோல வாய் சிவந்தான் என்க. சூது - சூதாடு கருவி. ஆம் தனம் தைத்து எனப் பிரித்துக் கொள்க. உரம் - மார்பு. மல்லைப் பல்லவன் - ஓரரசன். மன்னர்கள் திருமாலின் கூறுதலின் இவ்வாறு கூறினார். செம்மலர்த்திரு - செந்தாமரைப் பூவில் வாழும் இலக்குமி. (கரு)

[சோடிக் கடுக்கன் செய்துபோட்டதைக் குறித்துப் பாடியது.]

757. பாடுந் தமிழ்க்குச் சிவந்தெழுந்
தான்மல்லைப் பல்லவர்கோன்
காடுஞ் செடியுந் திரியா
திரட்டைக் கடுக்கன்செய்து
போடும் பொழுதென்ன பூட்டக
மோவற்பப் புல்லரைக்கொண்
டாடும் பொழுதிரு கன்னத்தி
லேநின் றடிக்கின்றதே.

(அ - ரை.) என்ன பூட்டகமோ - எவ்வகையான நுட்ப வேலை யமைத்தானோ, தெரியவில்லை. (கசூ)

[மீனாட்சியம்மையாரை வணங்கியபடியால் இயமனுக்கும் பயப்படேனெனச் செருக்குற்றுப் பாடியது.]

758. கான்றெண்ட விட்ட கனங்குழ
லாளையென் கண்மணியைத்
தேன்கொண்ட வாய்ச்சியைத் தென்கூடல்
வாழ்சிறு பெண்பிள்ளையை
யான்றெண்ட விட்ட பொழுதே
இயம னெனக்குமடி
யேன்றெண்ட விட்டவின் னப்பமென்
றோலை எழுதுவனே.

(அ - ரை.) கான்றெண்டவிட்ட கனங்குழலாளை அடர்ந்த காடு வணங்குதற்குரிய நீண்ட கூந்தலையுடைய அம்மையை. தொண்டைவாய்ச்சி - கொவ்வைக்கனி போன்ற வாயை யுடையவள். (கஎ)

[மீனாட்சியம்மையார் திருமணத்தைச் சிறப்பித்துப் பாடியது.]

759. அண்டத் தமரரு மாயனும் வேதனும் அந்தணரும்
பண்டெந் தனைதவஞ் செய்தன ரோமணப் பந்தலிலே
துண்டப் பிறையணி சொக்கர்கைத் தாலிக்கு நீதுணிந்து
கண்டத்தை நீட்டினையோகூடல் வாழுங் கயற்கண்ணியே.

(அ - ரை.) துண்டப் பிறையணி சொக்கர் கைத்தாலிக்கு- திங்களின் ஒரு கூறுகிய பிறையணிந்த சொக்கலிங்கப் பெருமான் திருக்கையினால் கட்டும் திருமங்கலநாணை யேற்றுக் கொள்வதற்கு. நீ துணிந்து கண்டத்தை நீட்டினையே - நீ உறுதி யுடன் உன் கழுத்தை முன்னாகக் காட்டியருளினை. (கஅ)

[உமாதேவியாரை நோக்கி உன்னுடைய திருவுள்ளம் கல்லைப்போலிருக்கிறதே யென்று பாடியது.]

760. பேயல்ல வோஒரு வேளை வரந்தந்து பேசிடுங்கல்
லாயல்ல வோநின் மனங்கெட்டி யானது மற்புதந்தான்
நீயல்ல வோமது ரேசர்பங் குற்றவள் நீயெனக்குத்
தாயல்ல வோபிள்ளை நானல்ல வோசிவ சாம்பவியே.

(அ - ரை.) பேயல்லவோ ஒருவேளை வரந்தந்து பேசிடும் - பேயும்கூட ஒருசமயத்தில் கேட்ட வரத்தை அளித்துப் பேசுவ துண்டு. (கக)

[மீனாட்சியம்மையாரை வணங்கி என் மனக்கவலையைக் கூறிவிட்டேனாதலால் இனி யான் எதற்கும் அஞ்சேன் எனச் செருக்குற்றுப் பாடியது.]

761. பண்டோ தரிய மறைபாடுங்
கூடற் பசுங்கிளியைக்
கண்டோ தினேன்என் கவலையெல்
லாமினிக் காலன்திண்டு
முண்டோதி வந்திடும் போதம்மை
கோயின்முன் னேதிரியும்
குண்டோ தரன்கண்டு கொண்டாற்
றெடைதட்டிக் கொள்ளுவனே.

(அ - ரை.) பண்டு ஓதரிய மறைபாடும் - முற்காலத்தில் ஓதப்பெற்ற அருமையான மறைகள் துதித்துக் கூறுகின்ற. திண்டு முண்டு ஓதி வந்திடும்போது - தாறுமாறு பேசி என்னிடம் வரும்போது. கூடல் - மதுரை. பசுங்கிளி - மீனாட்சி. கண்டு + ஓதினேன் - பார்த்துக் கூறினேன். (உ0)

[மதுரைச் சொக்கநாதர் அழகிய திருவடியைத் தொண்டர்கள் கண்டதைக் குறித்துப் பாடியது.]

762. வடிகொண்ட செந்தமிழ்க் கூடலில்
வாழ்சொக்கர் வந்திதரும்
பிடிகொண்ட பிட்டுக்கு மண்ணை
சுமந்து பெருமகரக்
கொடிகொண்ட வெற்றித் துரைப்பாண்
டியன்கைக் கொடும்பிரம்பால்
அடிகொண்ட போதில் அடியா
ரவர்பொன் னடிகண்டதே.

(அ - ரை.) பெருமகரக் கொடிகொண்ட - பெருமையுடைய மீனக்கொடியை உயர்த்திய. அடியார் அவர் பொன்னடி கண்டதே - தொண்டர்கள் அவருடைய திருவடியைப் பார்த்தார்கள் எனவும், சொக்கர் அடிகொண்ட போதில். அடியார்களும் அவ்வடியைப் பெற்றனர் எனவும் பொருள் கொள்க. பொன் அடி - பொன்போன்ற பாதம்; அழகிய அடித் தழும்பு. என இரு பொருள் காண்க. (உக)

[கூடற்பிராட்டி தம்மீது வைத்த அன்பின் பெருக்கைக் குறித்துப் பாடியது.]

763. பொன்போலுங் கூடற் பிராட்டியைச்
சேவிக்கப் போம்பொழுதில்
என்பால் வரவும் எதிர்நின்று
பேசவும் என்தலைமேல்
தன்பாதஞ் சூட்டவும் கேட்டதெல்
லாந்தந் தருளவுமே
அன்பாக வந்திடு வாள்கலி
காலமென் றஞ்சுவளே.

(அ - ரை.) பொன்போலுங் கூடல்பிராட்டியை-பொன்னைப் போலத் தூய்மையான மதுரைப் பதியிலுள்ள அம்மையை. கலியுகம் ஆதலால் என்பால் வருவதற்கு அஞ்சுகின்றாள் போலும். என்பது. (உஉ)

[சொக்கநாதரை விளித்து நான் என் வினைப்பயனை எவ்வாறு கடந்துசெல்வேனெனப் பாடியது.]

764. உரையேனுன் பேரை உணரேன்நின் சீரை உனைக்கருதிக்
கரையேனெவ் வாறு கடப்பேன் வினையைக் கடந்தகுண
வரையே யருட்பெரு வாரிதி யேமது ராபுரிக்குத்
துரையே அழகிய சொக்கே தமிழ்தந்த சுந்தரமே.

(அ - ரை.) உனைக்கருதிக் கரையேன் - உன்னையெண்ணி மனமுருகமாட்டேன். (உரு)

[சொக்கநாயகியை வணங்கினவர் சொர்க்கலோகத்தை அடைவாரெனப் பாடியது.]

765. முக்கட் பராபரை சொக்கப்பி ரானெனு முன்னவனே
டொக்கச் சிறந்த கயற்கண்ணி சந்நிதி யுற்றுமிகச்
செக்கச்சி வந்தபொற் றுமரைப் பாத தரிசனைக்கே
பக்கத் தடுத்தவர் சொர்க்கத் தினையெட்டிப் பார்ப்பவரே.

(அ - ரை.) முக்கட் பராபரை - மூன்று கண்களையுடைய முழுமுதற் செல்வி. கயற்கண்ணி - மீனாட்சி. திருவடியைக் கண்டு வழிபடச் சென்றவர் சொர்க்கத்தை அடைவார் என்பது கருத்து. (உச)

[மீனாட்சியம்மையின் திருவடிகளைத் தொழுதேனுதலின் மறலிக்கு அஞ்சேன் எனப் பாடியது.]

766. வண்டிட்ட கூந்தலும் வாரிட்ட
கொங்கை வரைகளுங்கற்
கண்டிட்ட சொல்லுங் கயற்கண்ணி
பாதமுங் கைதொழுதேன்
தண்டிட் டடிக்கு மறலிவந்
தாற்சன்னை யிட்டுநகைத்(து)
உண்டிட்டு வாசிறு பிள்ளாயென்
றாருக் கனுப்புவனே.

(அ - ரை.) சன்னை இட்டு நகைத்து - சைகைகாட்டி நகைத்து. (உகு)

[மீனும்பிகையைக் குறித்துப் பாடியன.]

767. தேட்டேது மில்லை கொடுப்பாரு
மில்லை திரத்துழவில்
பூட்டேறு மில்லை யிதெல்லாமென்
பாலிலை பூர்ணவரங்
கேட்டே னெதற்குப் பிரிதில்லை
யேயினிக் கேட்கவுநான்
மாட்டேனுன் மேற்பழி போட்டேன்
மதுரை மனேன்மணியே.

(அ - ரை.) தேட்டேதுமில்லை - தேடிய பொருள் யாதும் இல்லை. திரத்து உழவில் - திறமையான உழவு வேலைக்கு. (உகூ)

768. எப்படி யெப்படிச் சொன்னலு நானிரங் கேனெனவே
அப்படி யப்படி நீயிருக் கின்ற அதிசயத்தை
இப்படி இப்படி யென்ரு கிலுமெனக் கேதெரியச்
செப்படி செப்படி அம்மா மதுரைச் சிவாநந்தியே.

(அ - ரை.) இப்படி இப்படி என்ருகிலும் - இன்னின்ன முறையில் என்று விவரமாகவாவது. செப்படி செப்படி - சொல்லுவாயாக சொல்லுவாயாக. (உஎ)

769. செப்பத்தி லுன்னைத் தொழவா
யிரங்கண்ணுஞ் செல்லும்பொல்லேன்
தப்பத் தவறத் தொழுதாலுஞ்
சொக்கர் தடம்புயத்துக்
கொப்பத் திரண்டகொங் காயுன்
னவயம் ஒன்றுக்கொன்று
முப்பத் திரண்டுகண் வேண்டுங்கண்
டாயேன் முகத்தினுக்கே.

(அ - ரை.) செப்பத்தில் உன்னைத் தொழ - செவ்வையான முறையில் உன்னைக் கண்டு வழிபட. (உஅ)

[பிட்டு வாணிச்சியின் வல்வினைகளை யெல்லாம் வையை நதியில் நசிக்கச்செய்தீர் எனப் பாடியது.]

770. துடியார் கரத்து மதுரேச
ரேஉம்மைத் துள்ளியசேற்
கொடியா னடித்ததுங் குற்றமன்
றேகிழக் கோதையிவள்
அடியாளென் றேசுட்ட பிட்டையெல்
லாமள்ளி யள்ளித்தின்று
வடியா நதியிற் கரைத்துவிட்
டீர்அவள் வல்வினையே.

(அ - ரை.) துடி-உடுக்கு. சேற்கொடியான்-பாண்டியன். ()

[சிவகாமசுந்தரியைத் துதித்துப் பாடியது.]

771. கரஞ்சொன்னங் கண்டதெந் நாளோ
தொடுத்த கலிக்கெவர்கள்
உரஞ்சொன்ன தோவந் திறுத்ததிவ்
வேளை யுதவுனக்கே
பரஞ்சொன்னே னின்னம் பராமுக
மேதிது பத்துலட்சம்
தரஞ்சொன்ன தாயெண்ணு வாய்சிவ
காம சவுந்தரியே.

(அ - ரை.) கரம்சொன்னங் கண்டது எந்நாளோ - என்னுடைய கை எக்காலத்தில் பொன்னைப் பார்த்ததோ (தெரியவில்லை), தொடுத்த கலிக்கு-தொடர்ச்சியாய் உள்ள வறுமைக்கு, எவர்கள் உரம் சொன்னதோ - யார் என்னைத் திண்ணமாகப் பற்றும்படி கற்பித்தார்களோ. (௩௦)

[போசராசன் ஈகைத்தன்மையைப் பற்றிப் பாடியது.]

772. ஒருபாதி மால்கொள மற்றொரு பாதி உமையவள்கொண்
டிருபாதி யாலும் இறந்தான் புராரி யிருநதியோ
பெருவா ரிதியில் பிறைவானில் சர்ப்பம் பிலத்தில்கற்ப
தருவானபோச கொடையுன்கை ஒடென்கை தந்தனனே.

(அ - ரை.) புராரி இருபாதியாலும் இறந்தான் - முப்புர மெரித்த கடவுள் இரண்டு பாதியளவிலும் இல்லாதவனுனன். இருநதி - பெரிய கங்கை. பெருவாரிதியில் - விசாலமான கடலில். (௩க)

[பாலனைப் பழித்தல்.]

773. அரும்பால காமுனம் பூமனம்
சொற்பொருள் ஆகமுயிர்
கரும்பாஞ் சுவையெள்ளும் என்னையும்
போலொத்த காதலரைப்
பெரும்பாலில் நல்லன்னங் கங்கா
சலத்தைப் பிரிப்பதுபோல்
சுரும்பாம் புலவர் யமனுலே
செக்கெனத் தோன்றினையே.

(அ - ரை.) ஆகம் உயிர் ஒத்த காதலரை - என்னேடு உடலும் உயிரும் இணைந்து வாழ்ந்த தலைவரை.

தலைவனையும் தலைவியையும் வேறுபிரித்தலால் குழந்தை, சுரும்பு, புலவர், செக்கு முதலியவற்றிற்கு ஒப்பென்க. (௩உ)

[இதுவுமது]

774. அரும்பாக் கியகொங்கை பாலாக்
கியும்உங்க ளப்பனெஞ்சை
இரும்பாக்கி யென்னெஞ்சைப் பித்தனை
யாக்கியவ் வேந்திழையைக்
கரும்பாக்கி யென்னையும் வேம்பாக்கி
யிவ்வண்ணங் கண்டனையே
பெரும்பாக் கியமல்ல வோமக
னேயுனைப் பெற்றதுவே.

(அ - ரை.) அவ் வேந்திழையைக் கரும்பாக்கி-உன் தந்தை விரும்புகின்ற அந்தப் பெண்ணை அவருக்குக் கரும்புபோல இனியவளாக்கியும். (௩௩)

[ஒருவன் ஒரு பெண்ணை நோக்கிப் பாடியது.]

775. உனக்கின்று யான்செய்த குற்றமொன்
றில்லை உனைப்பிரிந்தால்
வனக்குன்றி லேறி விழவரி
யேன்வண்மை சேர்மயிலே
எனக்கென்று வட்டமிட் டண்ணுந்து
விம்மி யிருக்குமுன்றன்
தனக்குன்றி லேறி விழுவேன்நின்
அல்குற் றடாகத்திலே.

(அ - ரை.) வனக்குன்றில் - காட்டில் இருக்கும் மலைமீது. (கூச)

[திருச்செந்தூர் முருகக்கடவுளைக் குறித்துப் பாடியது.]

776. சுண்ணும்பு திட்டநல் லாட்காட்ட
மோதிரஞ் சூட்டமலர்க்
கண்ணுரைக் கூட்ட விரனுன்
கிருக்கக் கதிர்க்கம்பிபோல்
எண்ணு நடுவிரற் கேதா
முலோபருக் கேதுகண்டாய்
கண்ணுர் நுதலண்ணல் சேய்வணி
காசெந்தில் காத்தவனே.

(அ - ரை.) கண்ணுர் நுதல்அண்ணல்சேய்-கண்பொருந்திய நெற்றியையுடைய முதல்வனின் புதல்வனே. கதிர்க்கம்பிபோல் எண்ணு நடுவிரற்கு - கூரிய கம்பிபோன்ற பயன் கணிக்கப் படாத நடுவிரலுக்கு. (கூரு)

[கருப்பன் என்னும் செல்வனைப் பாடியது.]

777. ஏவைக்குங் கூன்சிலை தொட்டான்
அனங்கன் இருவிசும்பின்
தீவைக்குந் திங்கட் குடையெடுத்
தான்றென்றற் றேருகைத்தான்

காவைக்குங் கண்மணி கத்தூரி
யீன்ற கருப்பன்வர
மாவைக்கும் பாவைக்கும் பூவைக்கும்
போது வடுவைக்குமே.

(அ - ரை.) உகைத்தான் - நடத்தினன். காவைக்கும் கண்மணி கத்தூரி யீன்ற - கற்பகமரத்தின் தன்மையமைந்த கண்மணி போன்ற கத்தூரி யென்பவன் பெற்ற. மாவை கும்பா வைக்கும் - வண்டுகளைக் கூட்டமாக (நாணியாக). வைப்பன் பூவைக்கும் - (பின்) மலரம்புகளை வைப்பான். போது வடுவைக்கும் - (அடுத்து) மலரம்புகளால் வடுவுண்டாக்குவான். (ஙகூ)

[சிவபெருமானை இகழ்வதுபோல் துதித்துப் பாடியது.]

778. குண்டைக் கொருத்தனைக் கூத்தாடும்
பித்தனைக் குண்டுனியைக்
கண்டக் கறுப்பனைப் பிள்ளையைத்
தின்னியைக் காணும்அயன்
மண்டைக் கரத்தனைக் கண்ணப்ப
னெச்சிலை வாரிஉண்ட
பண்டைப் பரையனை யோதேவ
னென்று பகருவதே.

(அ - ரை.) குண்டைக்கு ஒருத்தனை - காளையூர்தியை யுடைய ஒரு கடவுளை. குண்டுணியை - புறங்கூறுபவனை. கண்டக் கறுப்பனை - கழுத்தில் கருநிறமுடையவனை. பிள்ளையைத் தின்னியை - பிள்ளைக்கறி தின்பவனை. (ஙஎ)

[அம்பிகைமீது பாடியது,]

779. அந்தங் கரும்பள்ளி பாசாங்கு சத்திகண் ணம்படைச்சி
நைந்த இடைச்சி குறத்திக்கு மாமி நவில்வலைச்சி
சந்தம் புழுக்கச்சி பாம்பனை யோனுக்குத் தங்கச்சியாம்
இந்தப் பரைச்சியை யோசிவ காமியென் றேத்துவதே.

(அ - ரை.) அந்தங் கரும்பு அள்ளி - அழகிய கரும்பு வில்லைக் கையில் கொண்டவள். பாசஅங்குசத்தி - பாசமும்

அங்குசமும் திருக்கையிலுடையவள். கன் அம்பு அடைச்சி - கன்ணுகிய அம்புகள் அடையப்பட்டவள். வல்லச்சி - வலைவீசிய கடவுள் மனைவி. சந்தம் புழுகுகச்சி - சந்தனமும் புழுகும் பொருந்தக் கச்சினை யுடையவள். இந்தப் பரைச்சியையோ - இந்தப் பராசத்தியையோ. (௩அ)

[தில்லை நடராசப்பெருமானைக் குறித்து என் மனச்சஞ்சலம் என்று தீருமெனப் பாடியது.]

780. நிலமே யளந்த நெடுமால் பணியு நிமலர்பொன்னம்
பலமேவு தில்லைப் பதிநட ராயர் பனிவரையிற்
கலமே திமிங்கில மேசங்க மேநற் கயலனமே
சலமே சலஞ்சலமேஎன்றுதீருமென் சஞ்சலமே.

(அ - ரை.) கலமே - கப்பலே, திமிங்கிலமே - திமிங்கிலம் என்னும் மீனே! சங்கமே - சங்குகளே, நல்கயல் அனமே - நல்ல கெண்டைமீனே; அன்னப்பறவையே! சலமே - நீரே, சலஞ்சலமே - ஆயிரம் வலம்புரி சூழ்ந்த சங்கே. (௩௯)

[சிவபெருமான்மீது பாடியது.]

781. சேராத வேடன் செருப்பா லடிக்கவும் தீண்டவுந்தன்
நீர்வாய் உமிழவும் உச்சிட்டம் போடவும் நீண்டசிலைத்
தாரா லடிக்கவுங் கண்ணீர் ததும்பவும் தாய்தமர்கள்
ஆரா கிலுமில்லை யோதிருக் காளத்தி யப்பனுக்கே.

(அ - ரை.) உச்சிட்டம் போடவும் - எச்சிலோடு கலந்த ஊனை நிவேதிக்கவும். நீண்ட சிலைத்தாரால் அடிக்கவும் - அர்ச்சுனன் நெடிய வில்தண்டினுல் தாக்கவும். (௪0)

[கம்மாளருக்கு அஞ்சிச் சிவபெருமான் பாம்பை அணிந்தாரெனப் பாடியது.]

782. ஒட்டாக ஒட்டியுங் காப்பொன்னில்
மாப்பொன் உபாயமதாய்த்
தெட்டா திரான்பணி செய்யாதி
ரான்செம்பொன் மேருவினைக்

கட்டாகக் கட்டிக் கடுகள
வாய்நிறை காட்டவல்ல
தட்டானுக் கஞ்சியல் லோஅணிந்
தான்சிவன் சர்ப்பத்தையே.

(அ - ரை.) ஒட்டாக ஒட்டியும் - உரைக்கல்லில் ஒட்டும் படியாகத் தேய்த்தும், உபாயமாகத் தெட்டாது இரான் - தந்திரமாய்த் திருடாதிருக்கமாட்டான், பணிசெய்யாது இரான் - நகைகளைச் செய்யாமலுமிருக்கமாட்டான். (சுக)

[தலைவி கூற்று]

783. ஏராட்டும் பூந்தொங்கல் மோகனக் காரர்க் கினியசுகம்
பாராட்ட நானினி ஆளல்ல வேபசு மென்குழவி
தாராட்டவுஞ் சங்கிற் பால்பிள்ளைக் கூட்டித் தடவிமஞ்சள்
நீராட்ட மையிடப் போமே எனக்குள்ள நேரமுமே.

(அ - ரை.) ஏராட்டும் பூந்தொங்கல் - அழகாக அசைகின்ற பூமாலையை அணிந்த. மோகனக்காரர்க்கு இனிய சுகம் பாராட்ட - மயல்விளைக்கும் காதலர்க்கு இன்பநலம் கொடுப்பதற்கு. (சுஉ)

[தென்களந்தைப் படிக்காசுப் புலவர் பாடலைச் சிறப்பித்துப் பாடியது.]

784. மட்டாருந் தென்களந்தைப் படிக்காச னுரைத்ததமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைம்மணக்குஞ் சொன்னாலும் வாய்மணக்குந்
துய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமேபாட்டினது
நளினந் தானே.

(அ - ரை.) மட்டாருந் தென்களந்தை - தேன் நிறைந்த சோலையுடைய தென்களந்தைப் பதியில் தோன்றிய. பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும் - பட்டினாலே மூடினாலும்

அதன் வாசனை உலகம் மூன்றிலும் பரவி மணம்வீசும், தூய்ய சேற்றில் நட்டாலும் - அதனைச் சுத்தமான சேற்றில் ஊன்றினாலும். (சங)

[செங்குன்றையூர்த் தலைவனிருக்குமிடத்தில் இரவலரெல்லாம் இருப்பாரெனப் பாடியது.]

785. ஆலெங்கே அங்கே அரும்பறவை ஆற்றுயிலும்
மாலெங்கே அங்கே மலர்மடந்தை—கோலஞ்சேர்
செங்கே தகைமணக்குஞ் செங்குன்றை யூரனெங்கே
அங்கே இரவலரெல் லாம்.

(அ - ரை.) ஆல் துயிலும் மால் எங்கே அங்கே மலர் மடந்தை - ஆலிலையில் பள்ளிகொள்ளும் பெருமாள் எங்கே இருக்கின்றாரோ அங்கே பூமகளாகிய திருமகள் இருப்பாள். கேதகை மணக்கும் - நல்ல தாழம்பூ வாசனை வீசும். (சச)

[தலைவி யிரங்கல்]

786. ஊரைச் சுடுமோ உலகந் தனைச்சுடுமோ
ஆரைச் சுடுமோ அறியேனே—நேரே
பொருப்புவட்டம் ஆனமுலைப் பூவையரே இந்த
நெருப்புவட்ட மான நிலா.

(அ - ரை.) பொருப்பு - மலை. (சரு)

[வல்லைநகர்க் காளத்திராயன் கற்றோர்க்குதவும் கையைப் புகழ்ந்து பாடியது.]

787. நற்றே ரணவிதி நண்ணும்வல்லைக் காளத்தி
கற்றோர் தமக்களிக்குங் கையேகை—மற்றையகை
வேங்கை யலகைமுகை வேட்கை பலகைநகை
காங்கை யமுகை விழுகை.

(அ - ரை.) வேங்கை முதலிய சொற்களிற் கை என்ற எழுத்து நிற்பதுபோல நிற்குங் கைகளேயாம். (கை செய்யும் தொழிலைச் செய்யாத கையென இகழ்ச்சி தோன்றியது.) (சசா)

[நாணிக் கண் புதைத்தல்]

788. காலையர விந்தங் கழுநீ ருடன்கலந்தால்
மாலையர விந்த மயக்காதோ—பாலைப்
பழிக்கின்ற மென்மொழியிர் பாண்டியனூர் ஊரை
அழிக்கின்ற தென்னே அது.

(அ - ரை.) காலை அரவிந்தம் - விடியற்காலத்துத் தாமரை போன்ற உனது கையானது, கழுநீருடன் கலந்தால் - செங்கழுநீர்ப் பூப்போன்ற உனது கண்ணோடு சேர்ந்து அதனை மூடினால், மாலை அரவிந்தம் மயக்காதோ - மாலைக்காலத்துக் கமலம் போன்ற உனது தனம் எனக்கு மயல் உண்டாக்காதா, பாண்டியனூர் ஊரை - கூடலை. (சஎ)

[சுப்ரதீபக் கவிராயர் பாதக்குறடிட்டு நடந்ததைக் குறித்துப் பாடியது.]

789. சானுருங் கள்ளைக் குடியார்கள் ஈழுவர் தாமுந்தொடார்
கோனுமற் பாதக் குறடுசெய் வார்க்கதன் கூலியல்லால்
நானும லேறி நடப்பதுண் டோநடு வீதியெங்கும்
வீணு வடாசுப்ர தீபவஞ் ஞான விளக்கொளியே.

(அ - ரை.) பாதக்குறடு - மிதியடி. வீணு - வீணனே. இது குலத்தைச் சுட்டி இகழ்ந்தது. (சஅ)

[சிவந்தான் மல்லைப் பல்லவன்மீது பாடியன.]

790. குளக்காவி மலர்த்தொடையான் சிவந்தெழுந்த பல்லவனைக்
கூடா நாளில்
இளக்கார மோபிரிந்த வாறுகண்டோ நான்பேதை
யென்று தானே
உளக்காதல் தூண்டுகோல் பனிநெய்யா யானுறங்கும்
ஊஞ்சல் தூக்கு
விளக்காக எனைத்திரியாய் விடியளவும் எரித்தனையே
வெண்ணி லாவே.

(அ - ரை.) காவிமலர்த் தொடையான் - கருங்குவளைமலர் மாலையையணிந்தவன். இளக்காரம் - இளைப்பம். (சகூ)

791. கண்டு பணியக் கடவேனே காதலுடன்
தொண்டை யிதழருந்தித் தோய்வேனே—கொண்டற்
கொடைச்சிவந்தான் கோடைக் குளிர்காவில் அன்ன
நடைச்சிவந்தாள் என்செய்வேன் நான்.

(அ - ரை.) தொண்டை-கொவ்வைக் கனிபோலுஞ் சிவந்த, கொண்டல் - முகில். குளிர்கா - குளிர்ந்த சோலை. நடைச்சி வந்தாள் - நடையையுடையவள் வந்தாள். (௯0)

[சிவந்தான் மல்லைப் பல்லவன் இறந்தபோது பாடியது.]

792. மல்லைப் பதியில் வழுதி சிவந்தெழுந்த
பல்லவனைக் கொன்றாய் பழிசுமந்தாய்—கல்வி
சிறந்தாரைக் காக்குமந்தச் சீமானை யென்றும்
மறந்தார்க்கு வாயிலே மண்.

(அ - ரை.) வழுதி - பாண்டியனைப் போன்று. (௯க)

[மதுரைச் சொக்கநாதரைப் பாடியது.]

793. உயிர்க்குயிரென் றேதும் உணர்வுசொக்கர்க் கல்லால்
அயற்கும் அரிக்கும் அரிதே—செயற்குக்
கறையடியிற் பட்டவடி கந்தனடி வைகைத்
துறையடியிற் பட்டதுண்டோ சொல்.

(அ - ரை.) அயற்கும் - நான்முகனுக்கும். அரிக்கும் - திருமாலுக்கும். கறையடியில் - உரலடியில். துறையடியில் - துறையடியைப்போல. (௯உ)

[கயற்கண்ணியைப் பாடியன.]

794. எழுவே னுதிக்குமுன் போற்று
மறைதனி லேபடிந்து
தொழுவேன் கயற்கண்ணி பாதத்தைக்
காலன்கைச் சூலத்தையே

கொழுவாய் மடக்கி யடித்துவன்
பாசத்தைக் கொண்டுகட்டி.
உழுவே னெருமைக் கடாவினை
நானிந்த வூர்முற்றுமே.

(அ - ரை.) எழுவேன்-படுக்கையை விட்டுக் கிளம்புவேன். உதிக்குமுன் - ஞாயிறு தோன்றுமுன். (௫௩)

795. செங்கலசக் கொங்கைச் செறிகுறங்கிற் சீறடிப்பேர்
பொங்கரவ வல்குற் பொருகயற்கட்—செங்கனிவாய்க்
காருருவக் கூந்தற் கதிர்வளைக்கைக் காரிகைத்தாம்
ஒருருவென் உள்ளத்தே உண்டு.

(அ - ரை.) கலசம் - குடம். குறங்கு - தொடை. பொரு - போர்செய்கின்ற. (௫௪)

796. ஆலம்போல் நீலவிழி அங்கயற்கண் அம்மையே
காலம்போம் வார்த்தைநிற்குங் கண்டாயே—சாலப்
பசித்தார் பொழுதும்போம் பாலுடனே அன்னம்
புசித்தார் பொழுதும்போம் போம்.

(அ - ரை.) ஆலம் - நஞ்சு. சால - மிகவும். (௫௫)

[சொக்கநாதர் கோபுரக் கொடி.]

797. அன்னமிட வாவென் றழைக்குமே ஆதுலர்க்குச்
சொன்னமெலாம் வாரிச் சொரியுமே—முன்னமே
மாபுரத்தைத் தீயெரித்து வாழ்சொக்க நாதரெழிற்
கோபுரத்தி லாடுங் கொடி.

(அ - ரை) ஆதுலர் - இரப்போர். சொன்னம் - பொன். மாபுரம் - முப்புரம். (௫௬)

[சுப்பிரதீபக் கவிராயர் இறந்தபோது பாடியது.]

798. செய்ய கொழுநைச் சிவசுப் பிரதிபா
வெய்ய கொழுந்தழலில் வேவுதே—ஐயகோ

நின்மலனூர் வெண்ணீற்று நெற்றிக்கண் காணாத
மன்மதன்கா ணென்றுசொன்ன வாய்.

(அ - ரை.) கொழுநை - கொழுநை என்னும் ஊர். (௯௭)

[சிவந்தான் மல்லைப் பல்லவன்மீது பாடியது.]

799. மடைக்கண் குவளை புனலுகுப்ப
வரம்பிற் குரம்பை மணிகொழிக்கும்
வயல்சூழ் மருதப் பெருநிலமும்
மரனுங் கருகிப் பரல்பெருகி
இடைக்கண் ணிறுத்தோர்க் கொருநிழலற்
றிருக்குங் கொடும்பா லையுஞ்சரியென்
றிணைக்கத் தகுமா மற்றொருவன்
இவனுக் கிணையா அடையலர்மேல்
கடைக்கண் சிவந்தான் வேயிசைத்துக்
கனிவாய் சிவந்தான் தமிழ்க்களித்துக்
கையுஞ் சிவந்தான் தூதெனப்போய்க்
காலுஞ் சிவந்தான் கமழ்முல்லைத்
தொடைக்கண் சிவந்தான் கிளிபயிற்றித்
தொளியுஞ் சிவந்தான் பொறைசுமந்து
தோளுஞ் சிவந்தான் சிவந்தான்போல்
துரையார் புலவீர் உரையீரே.

(அ - ரை.) மடை - நீர்பாயும் மடை. புனல் - நீர். உகுப்ப - சொரிய. குரம்பை - பறவைக்கூடு. பரல் - பருக்கைக் கற்கள். வேய் இசைத்து - மூங்கிற்குழல் ஊதி. முல்லைத்தொடைக் கண் - முல்லைமாலை தோய்ந்த இடமெல்லாம். (௯௮)

800. முகரிகை வேந்தன் சிவந்தான் வரையில் முகிழ்முளரி
நிகரிய கொங்கை முதுவெங் கராவொக்கும் நீண்டுயர்ந்த
புகரிப மொக்கும் எனதாவி கண்ணனப் போதுவிட்ட
திகிரியை ஒக்குநன் பாஇன்ப மேவு சிறுநகையே.

(அ - ரை.) முகரிகை வேந்தன் - நல்ல அறிவினையுடைய அரசன். முகிழ் முளரி - தாமரைமொக்குள். நிகரிய - நிகர்த்த. கரா - முதலை. புகர் இபம் - புள்ளிகளையுடைய யானை. திகிரி - சக்கரம். (ரு௯)

[போசராசன்மீது பாடியது.]

801. போசநீ ஓர்புயலாய்ப் பூமுழுதும் பொன்மாரி
விசுவாய் அங்கதிலோர் விந்தேனும்—பேசுமென்மேல்
பட்டதிலை என்வறுமை பாரக் குடையாகி
முட்டக் கவித்திடுத லால்.

(அ - ரை.) புயல் - மேகம். பூ - பூமி, உலகம். விந்து - துளி. பாரக்குடை - பெரிய குடை. முட்ட - முழுதும். (சு0)

[கவிமாதின் முறைமையைக் குறித்துப் பாடியது.]

802. கவியாகு மாதினைப் பெற்றேன்
புலவன்கற் றேனனையாம்
செவியாரக் கேட்டங் குணர்வான்
சகோதரன் செந்தமிழ்க்கு
தவியா அருமை அறிவான்
பதியவன் தானிலையேல்
புவியாகு மண்ணுக்கு ளென்பல
னுமந்தப் பூங்கொடிக்கே.

(அ - ரை.) கவியாகும் - செய்யுளாகும். பதி - கணவன். புவியாகும் - உலகமாகும. அந்தப் பூங்கொடி - கவி. (சுக)

[தலைவியை வியத்தல்.]

803. பொன்னுகத் தார்பணி மாயோன்
கரந்தைப் பொருப்பில்வரும்
மின்னுள் முகங்கண் தனஞ்சாயல்
போற்பெற வேண்டியன்றே

அந்நாட் கமல மலர்கடன்
மேரு அணிமயிலும்
தன்னல் அயனரி சங்கரன்
வேலனைத் தாங்கியதே.

(அ - ரை.) பொன் நாகத்தார் பணி மாயோன் - பொன்னுலகத்தார் வணங்குகின்ற மாயவன். கரந்தைப் பொருப்பு - திருக்கரந்தை மலை. மின்னுள் - மின்னற்கொடி போன்ற இடையினையுடையாள். தனம் - கொங்கை. கமலமலர் - தாமரை மலர். (௬௨)

[ஓதற் பிரிவு.]

804. விண்ணுக்கு மாமதி காயவெங் காம வெரிகொளுந்தப்
பண்ணுக்கு மாமொழி மாதங்க மாம்பஞ்ச பூதியம்போம்
கண்ணுக்கு மூக்குச் செவியாக்கை யற்ற கடத்திலங்கம்
பெண்ணுக்கு வார்தமைப் போலோதி வாரும் பிரிபவரே.

(அ - ரை.) விண்ணுக்கும் - விண்ணில் உள்ள. காம எரி - காமத்தீ. பண் ஆக்கும் - இசையைப்போல் விளங்கும். அங்கமாம் - எலும்பாவள். பஞ்சபூதியம்போம் - ஐம்பூதத்தினலாகிய உடம்பு அழியும். கடத்தில் அங்கம் - குடத்தில் இருந்த எலும்பு. பெண்ணுக்குவார் தமைப்போல் - திருஞானசம்பந்தரைப் போல். ஓதிவாரும் - படித்துக்கொண்டு வாரும். (௬௩)

[திருக்களந்தை.]

805. மற்றோ ரொருவரைக் கண்டதுன்
டோசத்ய வாசகராய்
உற்றோர்க ளஞ்சுவெண் ணெய்க்கின்ற
தாய்க்கொரு கோடிபொய்கள்
சொற்றேனுந் தாழை மலர்சாட்சி
என்றுசொன் னேனுமல்லாற்
கற்றோர்கள் வம்மின்கள் சொன்மின்கள்
நம்மின் களந்தையிலே.

(அ - ரை.) சத்யவாசகர் - மெய்பேசுவோர். கோடி பொய்கள் சொற்றேன் - கண்ணன். தாழைமலர் சாட்சி என்று சொன்னேன் - நான்முகன். வம்மின்கள் - வாருங்கள். (௬௪)

806. துணையான நாரி புவியையெல்
லாம்பெறுந் தொல்லைவடிக்
கணையா னதுபுவி யெல்லாம்
எடுத்துண்ணுங் கைச்சிலைகல்
அணையாக நின்று புவிபினைத்
தாங்குமென் ருலினியான்
பணையார் களந்தைப் பதியார்
செயாலையென் பன்னுவதே.

(அ - ரை.) துணையான நாரி - மனைவியாகிய உமாதேவி. தொல்லை வடிக்கணையானது புவியை எல்லாம் எடுத்து உண்ணும் - பழமையாகிய வடித்தலமைந்த அம்பானது நிலம் முழுவதையும் எடுத்து விழுங்கும். கைச்சிலை - கை வில். பணை ஆர் - கழனிகள் நிறைந்த. என்பன்னுவது - என்னென்றெடுத்துச் சொல்லுவது. (சுரு)

[மதுரை.]

807. அக்கு வடப்புனை ஆனந்த வெள்ளத்தை அங்கயற்கண்
பக்கத் திருந்த பவளா சலத்தைப் பழம்பொருளை
முக்கட் கனியைக் கடம்பா டவிக்கண் முளைத்தெழுந்த
சொக்கைக்கண் டாலன்றித் தீராது நெஞ்சில் துயரங்களே.

(அ - ரை.) அக்குவடம் - அக்குமாலை. பவளாசலம் - பவழமலை. பழம்பொருள் - அநாதிப்பொருள். கடம்பாடவி - கடம்பவனமாகிய மதுரை. சொக்கை - சொக்கலிங்கக் கடவுளை. (சுசு)

808. விரித்தான் சடையை மகாமேரு வாசுகி வில்லைவிட்டுச்
சிரித்தான் புரத்தை எரித்தான் பரகுரு தேசிகன்முன்
உரித்தான் கரியை உடுத்தான் பகிரண்டத் துள்ளுலகும்
பரித்தான் மதுரை தரித்தான் சவுந்தர பாண்டியனே.

(அ - ரை.) மகாமேரு வாசுகி வில்லைவிட்டு - மகாமேருவாகிய வில்லையும் வாசுகியாகிய நாணையுஞ் செலுத்தி. சிரித்தான் - நகைத்தான். பரகுரு தேசிகன் - மேலாகிய குருநாதன். பரித்தான் - தாங்கினான். (சுஎ)

809. அற்பின்ற தாயென் றுனைப்பணிந்
தாலென் அவதியெல்லாம்
பொற்பின்ற பூடணம் போற்குறித்
தாய்புகழ்க் கூடலில்வாழ்
கற்பின்ற கட்டிக் கரும்பே
யுனக்குக்கல் நெஞ்சதுதான்
வெற்பின்ற வாசனை யோஉள்ள
ஆறு விளம்பெனக்கே.

(அ - ரை.) *அற்பு - அன்பு. அவதி - தொல்லை. பொற்பு ஈன்ற பூடணம் - அழகைத் தரும் அணிகலம். கற்பு ஈன்ற - கற்புடைமையை உலகில் தோற்றுவித்த. வெற்பு ஈன்ற வாசனையோ - கல்லாகிய இமயமலை பெற்றெடுத்ததனால் உண்டாகிய குணமோ. உள்ளவாறு - உண்மையாக.* (௬அ)

810. செகத்தாய் எனவந்த தெள்ளமு
தேதென் கயிலையெனும்
நகத்தார் பணியுங் கயற்கணம்
மேநின் னயனத்தினுல்
மிகத்தான் கருநிறங் கொண்டமை
யாலும் விளங்குதிரு
முகத்தா மரைக்கொரு வண்டா
னதுமுத்து மூக்குத்தியே.

(அ - ரை.) *செகத்தாய் - உலகத்தை ஈன்ற தாய். தெள்ளமுதே - தெளிந்த அமுதத்தைப் போன்றவளே! தென்கயிலையெனும் நகத்தார் - திருக்காளத்தி மலையில் உள்ளவர்கள். வெள்ளிய நிறமுடைய முத்து மூக்குத்தி கரிய கண்ணொளியாற் கருமையாகிய வண்டைப்போல் திகழ்கின்றது. முகத்தாமரைக்கு மூக்குத்தி வண்டென்க.* (௬௯)

811. செகமதின் மிக்க மதுரையில் வந்தொரு செட்டியராய்
மிகமதி மாணிக்கம் விற்றசொக் கேசரை மேவியன்பாச்
சுகமதி தந்தெனை ஆள்கயற் கண்ணிநின் சுந்தரமா
முகமதி ஈன்ற கதிர்மணி யோமுத்து மூக்குத்தியே.

(அ - ரை.) வந்தொரு செட்டியராய் - மாணிக்கம் விற்கும் செட்டியாராகி. மிகமதி - மிகவும் விலைமதிக்கத்தக்க. சுகமதி - நல்லறிவு. கதிர்மணி - ஒளிதங்கிய மணியோ. (எ0)

812. பொன்னே மலையத் துசனு கியபுயல் ஈன்றெடுத்த
மின்னே யுனது வதனத்தை யேவெண் மதியமெனத்
தன்னேயத் தாலொரு தாரகை யானது தான்விரும்பி
முன்னே கிடந்தினம் பார்க்கின்ற தோமுத்து மூக்குத்தியே.

(அ - ரை.) பொன்னே - பொன்னைப் போன்றவளே! மின்னே - மின்னற்கொடியே! வதனத்தையே - முகத்தையே. தன் நேயத்தால் - தனது விருப்பத்தால். தாரகை - விண்மீன். (எக)

813. மட்டார் குழலங் கயற்கணம்
மோயிம்மட் டென்றுதொகைக்
கெட்டா தெனது துயரநின்
பாற்சொல்லி யேசலிக்க
ஒட்டார நீசெய்ய லாகாது
பாருன் னடிமைதனை
நட்டாற்றிற் கைவிட்டி டாதே
பழிவெகு நாள்நிற்குமே.

(அ - ரை.) மட்டார் குழல் - மணம்பொருந்திய கூந்தல். இம்மட்டு - இவ்வளவு. ஒட்டாரம் - முரட்டுத்தனம். (எஉ)

814. மைக்கார்க் குழல்பெண் வடிவாளைத்
தென்னவன் மாமகளை
அக்காளை யோன்பங்கில் ஆத்தாளை
மால்தங்கை யானவளைத்
திக்கார் தொழுங்கயற் கண்ணுளை
யோர்தினஞ் சேவைசெய்தால்
எக்கா லமுமவர் சொர்க்காதி
போகத் திருப்பவரே.

(அ - ரை.) மைக்கார்க்குழல்-மிகக் கருமைதங்கிய கூந்தல். தென்னவன் - பாண்டியன். அக்காளை - அந்த இடபவாகனம். ஆத்தாள்-தாய். மால்-திருமால். திக்கார்-திக்கில் உள்ளவர்கள். (எ௩)

815. பொன்னே பொருந்தற் புதமே
பொலிந்தமென் பூந்திருவே
தென்னே சிறந்தசெந் தேனே
திருந்தருட் சின்மயமே
அன்னே அமுதே யருளே
அமரர்க் கரும்பொருளே
மின்னே வியன்சுட ரேமது
ராபுரி மினம்மையே.

(அ - ரை.) பொன்னே - பொன்னைப் போன்றவளே. தென்னே சிறந்த - அழகிலே மிகச்சிறந்த. சின்மயம் - ஞானவுரு. வியன்சுடர் - பேரொளி. (எச)

816. உள்ளக் கவலையெ லாம்விள்ளும்
போதும் உனதுமனம்
எள்ளத் தனையிரங் காதிருந்
தாயெளி யேனினிமேல்
தள்ளப் புறத்தினில் என்றாலும்
போவது தானிலைபொன்
வள்ளத் தமுதுண்ணுங் கிள்ளாய்
கடம்ப வனவல்லியே.

(அ - ரை.) விள்ளும்போதும் - சொல்லுகிறபொழுதும். வள்ளம் - கிண்ணம். கடம்பவனம் - மதுரை. (எ௫)

817. பொரடக் கயம்பிடி என்றுன் மதனுமிப் பூவையுமா
தரடக்க முஞ்சற் றறிந்தில ளேதனைத் தாள்பணியா
முரடக் கவடக் கொடிமண்ட லீகர் முடிபிடுங்கும்
கரடக் கடாக்களிற் றுய்வல்ல மாநகர்க் காளத்தியே.

(அ - ரை.) பொர-போர்செய்ய. டக்கயம்-கொடி. மதன்-காமன். முரடக் கவுடக் கெடிமண்ட லிகர் - முரடராயினரும் கவுடதேயத்தினரும் வெற்றியுடையவர்களுமாகிய அரசர்கள். கரடக் கடாக்களிறு - மதம்பொருந்திய ஆண் யானை. (எசு)

சுகூ. சுப்ரதீபக் கவிராயர்

[இவர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமங்கலந் தாலூக்காவில் கம்மாளர் குலத்திற் பிறந்தவர். சிற்றின்பச் செய்யுள் பாடுவதில் மிக வல்லவர். நாகம கூளப்ப நாயக்கன் காதல், விறலிவிடு தூது முதலியன இவரியற்றிய நூல்கள். இவருக்கும் இவர் காலத்திய புலவராகிய பலபட்டடைச் சொக்கநாதப் புலவருக்கும் இறுதிவரை பகை மிகுதியு மிருந்ததாகத் தெரிகிறது.]

[பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய விஞ்சைக் கோவையைக் கேட்ட எட்டாம் நாள் அக் கோவைத் தலைவ ராகிய தெய்வகன்னி என்பார் இறந்தார். அப்பொழுது இவர் பாடியது.]

818. தேவைரகு நாதன்மெச்சும் தெய்வகன்னி மீதினிலே
கோவை யென்று பில்லிவைத்துக் கொன்றுயே—பாவியுன்றன்
இட்டடைச்சொல் யார்பொறுப்பார் ஏண்டா மடையபல
பட்டடைச்சொக் காமுரு வம் பா.

(அ - ரை.) இரகுநாதன் - இரகுநாத சேதுபதி. இட்டடைச் சொல் - துன்பந்தருஞ் சொல். (ச)

[குன்னரங்க னென்னும் அரசன் இறந்தபோது பாடியது.]

819. தென்னரங்கன் அரங்கனெனென்பார் வாய்திறவான்
கண்விழியான் திரும்பிப் பாரான்
என்னரங்கன் தூங்கரங்கன் ஏழையர் பாற் கருணை
யுடனீ ரங்கா ரங்கன்
மன்னரங்கன் தமிழ்ப் பெருமான் மழவரங்க
னளித்தருளு மைந்தனுன
குன்னரங்கா வெனக்கிரங்காய் கொண்டுவந்த
தமிழ்க் கிரங்கிக் குழைந்திடாயே.

(அ - ரை.) தென்னரங்கன் - அழகிய சீரங்கத்திலுள்ள பெருமாள், அரங்கன் என்பார் - சபைக்கதிபதி யென்பார்கள். தூங்கரங்கன் - துயில்கின்ற அரங்கன், மன்னர் அங்கன் - வேந்தர்களைத் தனக்கு உறுப்பாக உடையவன். எனக்கு இரங்காய் - என்பாற் கருணை வையாவிடினும், கொண்டுவந்த தமிழ்க்கிரங்கி - நானியற்றிக் கொணர்ந்த தமிழ்ப்பாட்டிற்கு இரக்கம்வைத்து. (௨)

[இதுவுமது.]

820. எண்டிசைக்கும் புகழ்படைத்த குன்னரங்க
மகிபாலா வினிமே லிந்த
மண்டலத்துக் கரசாள வொப்பிலாநின்
புதல்வன் மழவன் போதும்
விண்டலத்துக் கிந்திரனுக் கரசுநிலை
யில்லாமல் வெகுநா ளாக
நண்டளந்த நாழியாக் கிடக்குமந்த
விண்ணுளா நடந்திட் டாயே.

(அ - ரை.) மழவன் - மழவரங்கன். விண்ணுள - தேவருலகையாள. (௩)

[திருவாரூர்த் தியாகராயப் பெருமான்மீது காதல்கொண்ட தலைவி கூற்று.]

821. ஐயநீபு ரங்கள்வென்ற தொக்குமிக்க காலனூர்
அழியவென்ற தொக்குமிவ் வனைத்துமொக்கு மாயினும்
வெய்யகாம தகனரென்னும் விருதுசின்ன ஓசையில்
வெட்கினே னுமக்குமிந்த விருதுசின்ன மேற்குமோ
எய்யவா சுகங்கள்பட்டு வெருவியோடி யரணிலா
ஏழைவீடு புக்கொளித்து மின்னுமாரன் வருவனச்
செய்யமேனி பாதியும் வெளிப்படாத கமலைவாழ்
தியாகராய ரேசிறந்த் தென்றல்வாச லழகரே.

(அ - ரை.) கமலைவாழ் - திருவாரூரில் வாழ்கின்ற, சிறந்த தென்றல் வாசல் அழகரே - நல்ல தென்றற்காற்று வீசுகின்ற தெற்குச் சாளரவாசலையுடைய அழகிய பெருமானே! வெய்ய

காமதகனரென்னும் விருது சின்ன ஓசையில் வெட்கினேன் - கொடிய காமனை அழித்தவரென்று ஊதுகின்ற வெற்றிச்சின்ன ஒலியைக்கேட்டு நான் நாணமடைந்தேன். எய்ய ஆசுகங்கள் பட்டு - எய்ததால் அவ்வம்புகள் தைக்கப்பெற்று. வெருவியோடி அரண் இலா - அஞ்சியோடிப் பாதுகாப்பில்லாத, ஏழைவீடுபுக் கொளித்தும் - பெண் ஆகிய நான் இல்லிற்போய் மறைந்தும். இன்னும் மாரன் வருவன் ஆதலால் காமனை வென்றது பொய் என்பது கருத்து. (௪)

822. ஒருமாடு மில்லாமல் மைத்துனனுர் உலகமெல்லா
முழுதே யுண்டார்
நரைமா டொன் றுமக்கிருக்க உழுதுண்ணமாட்
டாமல் நஞ்சையுண்டீர்
இருநாழி நெல்லிருக்க இரண்டுபிள்ளை தாவிருக்க
இரந்தே உண்டீர்
திருநாளு முண்டாச்சோ செங்கமலைப்
பதிவாழுந் தியாக னுரே.

(அ - ரை.) மைத்துனனுர் - மைத்துனராகிய திருமால். நரைமாடோ ஒன்றிருக்க - காளையொன்று சொந்தமாக இருக்க. (ரு)

[தக்கா ராதரவைச் சாரவேண்டுமெனப் பாடியது.]

823. சிறிய ராயினேர் சார்பினை விழையன்மின்
றிறல்கெழு பெரியோராம்
அறிஞ ராயினேர் சார்பினை விழைமினே
வலரிதழ் விரிகொன்றை
வெறிந றுந்தொடை யெம்பிரான் சார்பினை
விழைதலா னுரகங்கள்
மறுவி லாற்றல்சால் கலுழனை வினவின
வாழ்ந்தனை யோவென்ன.

(அ - ரை.) அலர் இதழ் விரிகொன்றை வெறிநறுந் தொடை எம்பிரான் - மலர்ந்த இதழ்கள் விரியப்பெற்ற கொன்றைப்பூவின் தேன்மணங் கமழும் மாலையணியப்பெற்ற எமது கடவுளுடைய, சார்பினை விழைதலால் - ஆதரவை

விரும்புவதால், உரகங்கள் மறுவிலாற்றல்சால் கலுழனை - பாம்புகள் குற்றமற்ற திறமையுடைய கருடனை, வாழ்ந்தனையோ என்ன - நீ சுகமா என்று அஞ்சாமல் கேட்கலாயின. (௬

[சதுரானன பண்டிதன் மனைவி தமக்குச்செய்த வழி பாட்டால் அவளைப் புகழ்ந்து பாடியது.]

824. நடக்கில் அன்னமா நிற்கில் வஞ்சியாம்
கிடக்கில் ஓவியப் பாவை கிடந்தவா
தடக்கை யான்சது ரானன பண்டிதன்
மடத்து ளாளென் மனத்துறை வல்லியே.

(அ - ரை.) கொடிபோன்ற மாதானவள், தடக்கையான் சதுரானன பண்டிதன் மடத்துளாள் - கொடையான் விரிந்த கையையுடைய நான்முகப் புலவனது இல்லத்திலிருக்கின்றவளாவள். (எ)

[சீனக்கனைப் புகழ்ந்து பாடியது.]

825. அளிக்கொ ளுந்தொடை யானர சைக்குமன்
ஒளிக்கொள் சீனக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளிக்குஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளிக்குந் தோறெலாந் தித்தியா நிற்குமே.

(அ - ரை.) அளிக்கொளும் தொடையான் - வண்டுகள் தங்குகின்ற மாலையணிந்தவன், அரசைக்கு மன் - அரசுருக்குத் தலைவனாகிய, ஒளிக்கொள் சீனக்கன் - புகழ்மிகுந்த சீனக்கனென்னும் வள்ளல், இன்றுவந்து இட்டசீர் தெளிக்கும் சோறும் - இன்றைக்கு விருப்பத்தோடு புளித்த செம்பாகமான புளியன்னம், என்புந்தியில் செந்தமிழ் தெளிக்குந்தோறும் - என்னுடைய அறிவினால் செந்தமிழை யாய்கின்ற எந்நேரத்திலும், தித்தியா நிற்கும் - இனிமை தந்துகொண்டிருக்கும். (அ)

[தாசியை வியந்தது.]

826. படைத்த மதன் தனையெடுத்த பழமலையார்
நன்னுட்டிற் பாவையாள்தன்
கடையரிக்கண் ணுல்மருட்டி மயல்மூட்டி வரவழைத்துக்
கைக்குள் ளாக்கி

இடைதுவள முலைகுலுங்க யெனையணைத்த சுகத்தைநினைத்
தேங்கி யேங்கி
அடைமழையும் உளைவழியும் பொதியெருதும்
ஒருவனும்போ லலைகின்றேனே.

(அ - ரை.) கடையரிக்கண்ணால் மருட்டி - வரிகள் படர்ந்த கடைக்கண்ணினால் மயக்கி, மயல்பூட்டி வரவழைத்துக் கைக்குள்ளாக்கி - மோகவிலங்கு போட்டுத் தன்பால் வரும்படிசெய்து தன்வசப்படுத்தி. (௯)

[செகநாத வள்ளலிடம் சால்வைக்காகப் பாடியது.]

827. சூல்வைக்கு நெல்வயல்சூழ் சிங்கரிவாழ் செகநாத
சுகுண மேன்மைச்
சால்வைக்கு மனதுவைத்து மாலயன்சங் கரனையுற்
றுல் சலம்பூக் கல்லாம்
ஆல்வைக்குஞ் சயன னென்று நூல்வைக்கு மார்ப
னென்று மசையும்வேழத்
தோல்வைக்குந் தோளனென்று நாவியவருனைக்காட்
டிச் சொன்னார் மன்னே.

(அ - ரை.) சிங்கரிவாழ்-சிங்கேரிப்பதியில் வசிக்கின்ற. சலம்பூக்கெல்லாம் - முறையே தங்களிடம் பாற்கடல் தாமரைப்பூ மலையென்றும், ஆல்வைக்கும் சயனன் என்றும் - ஆலிலையிற் பள்ளிகொள்வோனென்றும், நூல்வைக்கும் மார்பன் - பூணூலைத் தரிக்கும் மார்பையுடையவன். (௧௦)

[கனவு உரைத்தல்.]

828. ஏழில் ஒருகிரியான் ஏழிலே ஒன்றணிவான்
ஏழிலே ஒன்றி யெனக் கேட்டான்—ஏழிலே
ஒன்றியென் றேனுண்ப தோடென்று னேடென்றேன்
என்றும் அறிந்தா ரிடம்.

(அ - ரை.) ஏழில் ஒரு கிரியான் - ஏழுமலைகளில் ஒருமலையாகிய கைலைமலையை உடையவன், ஏழிலே ஒன்று - ஏழு ஆறுகளில் ஒன்றாகிய கங்கை, ஏழிலே ஒன்று - ஏழு நாட்களில்

ஒன்றாகிய செவ்வாயை (சிவந்த வாயினை) ஏழிலே ஒன்று - ஏழுநாட்களிலொன்றாகிய வியாழன் (அதாவது பொன்னை) உண்பது ஓடு என்றான் - (பொன் கிடையாது) நான் உணவு கொள்வது ஓட்டிலே என்றான், என்றும் அறிந்தவரிடம் ஓடு என்றேன் - எக்காலத்தும் தெரிந்தவர்களிடத்தில் விரைந்து போய் இரு. இங்கு ஏன் வந்தாய்? என்றேன். (கக)

829. மாரன் படைத்தலைவி மங்கைசி ரோமணியாம்
தாரிலகு மானுள் தன தெழிலோ—ஏர்பெரிய
துன்னுவிழி நான்மூன்று தூயதன நாலிரண்டு
பன்னிரண்டு சிற்றிடையாம் பார்.

(அ - ரை.) தார்இலகு - மாலை விளங்குகின்ற. மானுள் - பெண். துன்னுவிழி - அவளுடைய கண்ணானது. நால் மூன்று - ஏழாவது இராசியாகிய மீன்போன்றது. தூயதனம் நால் இரண்டு - சுத்தமான கொங்கை ஆறாவது இராசியாகிய கும்பம் போன்றது. பன்னிரண்டு சிற்றிடையாம் - நுட்பமான இடையானது பன்னிரண்டாவது இராசியாகிய சிங்கம்போன்றது. நால் மூன்று - நாலும் மூன்று=ஏழு. நால் இரண்டு=ஆறு கன்னியிலிருந்து எண்ணிக் காண்க. (கஉ)

[பாலனையும் பரத்தையரையும் பழித்தல்.]

830. கச்சிருக்கும் போது கரும்பானேன் கைக்குழந்தை
வச்சிருக்கும் போது மருந்தானேன்—நச்சிருக்கும்
கண்ணார் கரும்பானார் காணவும்நான் வேம்பானேன்
அண்ணா மலையரசுக் கு.

(அ - ரை.) கச்சு இருக்கும்போது - என் கொங்கையிற் கச்சணிந்திருந்தபோது (இளமையில்), நச்சிருக்கும் கண்ணார் கரும்பானார் - நச்சு தங்கும் கண்களையுடைய விலைமகளிர் கரும்பு போலானார்கள். (கங)

௩௩. காளிமுத்துப் புலவர்

[இவரைப் பற்றிய வரலாறு சிறிதும் விளங்கவில்லை.]

(இது முதல் ஆறு பாட்டுவரை மயிலைக் குழந்தைவேலு முதலியார்மீது பாடியது.)

831. நெல்லைச்சொன் ஞபர ணத்தைக்கைம்
மாவை நிதநிதமும்
வெல்லச்சொன் ஞவலர்க் கீயுங்
குழந்தை விசயநின்பால்
செல்லச்சொன் ஞளென்னை யிப்போதென்
மையலைத் தீர்த்திடென்று
சொல்லச்சொன் ஞளந்த மின்ஞள்பன்
ஞள்மலர்ச் சோலையிலே.

(அ - ரை.) கைம்மா - யானை. வெல்லச்சொல் நாவலர்க்கு ஈயும் - சர்க்கரை போன்ற இனியமொழியை யுடைய புலவர் களுக்குக் கொடுக்கின்ற. (க)

[தலைவி கூற்று]

832. பழுத்தான் மரத்திற் பறவையைப்
போலநற் பாவலர்க்குக்
கொழுத்தான் வழங்கும் குழந்தையென்
கொங்கையைக் கூருகிறால்
அழுத்தாத வேளையில் வெந்நீர்பன்
னீர்மதி யும்மழல்சேர்
கொழுத்தான் மதனுங் கொழுத்தான்
பருவக் குறிப்பறிந்தே.

(அ - ரை.) பழுத்த ஆல்மரத்தில் பறவையைப்போல - பழம் நிறைந்த ஆலமரத்தில் ஒருங்கு கூடுகின்ற பட்சிகளைப் போன்ற, கொழுத்த ஆன் வழங்கும் குழந்தை - கொழுத்த (பருத்த) பசுக்களைக் கொடுக்கின்ற குழந்தை வேலன். (உ)

[தாயிரங்கல்.]

833. பொன்ஞர் மருமத்தன் பூம்பாவை
வேலப்ப பூபனருள்
மன்னு குழந்தைக் குருநாத
நீத வரோதயனே

பன்னுண் மலர்க்குழற் பின்னுளெந்
நாளும் பரிந்தணைய
நன்னுள்இந் நாள்வரச் சொன்னுள்இந்
நாள்மண நாளென்னவே.

(அ - ரை.) பொன்னூர் மருமத்தன் - இலக்குமி தங்குகின்ற மார்பையுடையவனுன. வரோதயனே - வரத்தால் பிறந்தவனே. பரிந்து அணைய - அன்பாய்த் தழுவுவதற்கு. (௩)

[நாணிப் புறங்காட்டல்.]

834. மாக மழைக்கரன் பூம்பாவை
வேலப்பன் மைந்தன்மின்னூர்
மோகன் குழந்தைக் குருநாதன்
வெற்பினில் மோடிவைத்துப்
பாகு மொழிக்குழல் மாதே
விரித்துப் படமெடுக்கும்
நாக மறைத்துக் குழல்நமக்
கீதல் நலமல்லவே.

(அ - ரை.) பாகுமொழிக் குழல்மாதே - சர்க்கரைப் பாகு போல இனிய சொல்லும் கூந்தலும் உடைய பெண்ணே! மாக மழைக்கரன் - வானிலுள்ள முகிலைப்போன்ற கையையுடையவன். மோடிவைத்து - சீற்றங்கொண்டு. (௪)

[கிள்ளைவிடு தூது.]

835. போதத்தை மேவு மயிலைக்
குழந்தைக்குப் போர்மதன்செய்
கேதத்தை யுங்குயில் நாதத்தை
யுந்தனக் கின்னுத்திநு
மோதத்தை யுந்துயி லாதத்தை
யும்மயல் மூட்டுதென்றல்
வாதத்தை யுந்தரியாதத்தை
யும்சொல்லி வாதத்தையே.

(அ - ரை.) போதம் - ஞானம். ஏதம் - துன்பம். தத்தையே - கிளியே. குயில் நாதத்தையும் - குயில் ஒலியினால் உண்டாகின்ற துயரத்தையும். தனக்கிண்ணத்தின் ஆமோதத்தையும் - முலையாகிய வள்ளத்தில் உண்டாக்கிய வளர்ச்சியையும். துயிலாதத்தையும் - தான் உறங்காமலிருப்பதையும். தரியாதத்தையும் - பொறுக்கமுடியாததையும். (ரு)

[வெறி விலக்கல்.]

836. வண்டாங் கிசைபயில் மாலையன்
வேலப்பன் மைந்தனிதி
கொண்டான் கிளையை வளர்த்தான்
குழந்தைக் குவட்டின்மின்னே
பண்டாங் கிசையினள் மால்கொண்டு
பாம்பன் குளத்தினடுக்
கண்டாங் கியைக்கிழித் தாலென்ன
பாவங் கருதுவதே.

(அ - ரை.) கிளை - சுற்றத்தார் குவட்டில் - மலையின்மீது. பாம்பன் - பாம்பைத் தரித்த பரமசிவனுடைய. குளத்தின் - நெற்றியிலுள்ள. நடுக்கண் - நடுக்கண்ணாகிய நெருப்புக் கடவுளின். தாங்கியை - ஊர்தியாகிய ஆட்டை.

கண்டாங்கியைக் கிழித்தால் என்பதற்குச் சேலையைக் கிழித்தால் என்னும் ஒரு பொருள் தொனிக்கின்றது. (சு)

[பூஞ்சோலையில் வசிக்கும் தஞ்சி யென்னும் பெண்ணினுடைய கொங்கைகளை வர்ணித்துப் பாடியது.]

837. வனக்கொந் தளவஞ்சி பூஞ்சோலைத்
தஞ்சி வளருமிரு
தனக்குன்று செய்யுந் தொழில்சொல்ல
வோதமி யேனைக்கண்டால்
கனக்கும் புளகிக்கும் பாரிக்கும்
பூரிக்கும் கண்கறுக்கும்
சினக்குந் தனக்கும் எனக்குமுன்
டாக்குந் தினஞ்சண்டையே.

(அ - ரை.) வனக்கொந்தள வஞ்சி - அழகிய குழலையுடைய கொடிபோன்றவளாகிய. கனக்கும் - பளுவுள்ளதாகும். புளகிக்கும் - மயிர் சிலிர்க்கும். பாரிக்கும் - விரிவடையும். பூரிக்கும் - விம்மியுயரும். (எ)

[பாண்டியனைப் புகழ்ந்து பாடியது.]

838. ஆர்க்குங் குளிரு நிலவுயர்
கோனின் னலங்கல்பெரு
வார்க்குங் குமமுலை யாட்கன
லாகும் வடக்குந்தெற்கும்
மேற்குங் கிழக்கு மொருவெளுப்
பாய்நின்று விண்ணையெட்டிப்
பார்க்கும் புகழுக் கிறைவா
பராக்ரம பாண்டியனே.

(அ - ரை.) ஆர்க்குங் குளிரு நிலவு உயர்கோள் - யாவருக்குங் குளிர்ச்சியுண்டாக்குகிற திங்களாகிய உயர்ந்த கோள். நின் அலங்கல் பெரு - உன்னுடைய மாலையைப் பெற்றுக்கொள்ளாத; (உன்னைக்கூடப் பெருத) அனலாம் எனக் கூட்டுக. (அ)

[இதுவுமது.]

839. வெறிக்குங்குமக் கொங்கை மீதே யிளம்பிறை
வெள்ளைநிலா
எறிக்கும் பொழுதுவந் தாயிலை யேயிலங்
காபுரியைக்
குறிக்கின்ற ராவணன் பொன்முடி பத்துங்
குரங்கைவிட்டுப்
பறிக்கின்ற சண்பக மாரு பராக்கிரம
பாண்டியனே.

(அ - ரை.) குரங்கைவிட்டுப் பறிக்கின்ற - அனுமானை அனுப்பிப் பின்னர் போர்புரிந்து வெட்டின. சண்பகமாரு - திருமாலின் கூருன சண்பக மாறனே! வெறி - மணம். (கூ)

[இதுவுமது.]

840. சுரும்பேய்க்கும் வாட்கண்ணி பங்காளர்
கண்கொண்டு சுட்டுவிட்ட
பெரும்பேய்க்கு வேப்பிலைக் காப்புத
வாய்பிணர் சேர்பசுங்கோங்
கரும்பேய்க்கு மென்முலை யாரமு
தூட்டி யடர்ந்துகொல்ல
வரும்பேய்க்கு வானுத வுங்குல
சேகர மன்னவனே.

(அ - ரை.) பங்காளர் கண் - சந்திரன். பிணர்சேர் பசும் கோங்கு அரும்பு ஏய்க்கும் - இறுக்கமுடைய பச்சைநிறமுள்ள இளங்கோங்கம்பூவின் மொட்டினையொத்த. வான் உதவும் - கொன்று வானுலகம் தந்த. சுரும்பு ஏய்க்கும் - வண்டுகள் போன்ற. வேப்பிலைக்காப்பு உதவாய் - வேப்பமாலையாகிய காக்கும் பொருளை அளிப்பாயாக. பெரும்பேய் - காதல்கொண்ட பெண். (௧0)

[பாண்டியன் கல்வித்திறத்தைப் புலவரெல்லாங் கண்டு நாணடைவரெனப் பாடியது.]

841. பூணித் திலத்துப் புயல்வீர மாறன் புகல்கவிக்கு
நாணிப் புலவர்செல் லாதென்செய் வாரிந்த நானிலத்தில்
ஆணிக் கனக மணந்தரிற் பூமணம் யார்கொள்ளுவார்
மாணிக்கந் தித்திக்கில் என்னுகும் மற்ற மதுரங்களே.

(அ - ரை.) பூண் நித்திலத்துப் புயல்-முத்தணிகளைத் தரித்த முகில் போன்ற. ஆணிக்கனகம் மணம் தரில் - முதல்தரமான பொன்வாசனையுடையதாகில். மாணிக்கம் தித்திக்கில் என் ஆகும் மற்ற மதுரங்களே - மாணிக்கமானது இனிய சுவையையுடைய தானுல் அதற்குமுன் பிற இனிப்புப்பொருள்கள் என்ன நிலையிலிருக்கும்.

அரசசெல்வத்தோடு கல்விச்செல்வமுஞ் சேரின் மிகச் சிறப்படையும் என்பதற்கு வந்த எடுத்துக்காட்டு, கனகம் மணந்தருவது; மாணிக்கந் தித்திப்பது. (௧௧)

[இதுவுமது]

842. என்னிர்மை நூலுக் ககத்திய னுமிவ னென்பதெல்லாம்
வெண்ணீர்மை யல்றி விரகல்ல வேயிவ் வியனுலகில்
பண்ணிர்மை நேரும் பராக்ரம மாறன் பதங்கழுவும்
தண்ணீர் குடித்தல்ல வோகும்ப யோனி தமிழ்கற்றதே.

(அ - ரை.) எண்ணீர்மை நூலுக்கு-யாவரும் மதிக்கும் இயல்புடைய நூல்களில். இவன் அகத்தியன் ஆம் என்பது எல்லாம்- 'இவன் அகத்தியன் ஆவன்' என்று அகத்தியனை உவமை காட்டிப் பிறர் அவ் வகத்தியனைப் புகழ்வதற்குக் காரணம் எல்லாம். வெண்ணீர்மையன்றி விரகு அல்ல - வெளிப்படையதாகத் தெரிவது அல்லாமல் சூழ்ச்சியல்ல (மறைவான பொருள் அல்ல). பராக்கிரம மாறன் பதங்கழுவிய தண்ணீர் குடித்ததுதான் அகத்தியமுனிவன் தமிழிற் சிறந்தவன் என்று புகழப்படுவதற்குக் காரணம் என்றார். பதங்கழுவிய தண்ணீர் என்றது கடனீரை யுணர்த்தியது. பராக்கிரமபாண்டியன் முன்னோன் ஆகிய சுந்தரபாண்டியன் மாமிக்காக ஏழு கடல்களையும் மதுரைக்கு அழைத்தபோது அப் பாண்டியன் பாதத்திற் கடல் படிந்ததைக் குறிப்பால் உணர்த்தியது. மூதாதையின் செயலைப் பராக்கிரமனுக்கேற்றிச் சிறப்பித்தனர் எனக் காண்க. (௧௨)

843. காம்பு வனம்புக்க தோளாட்கு நின்றன் கழுத்திலிட்ட
வேம்பு தனக்கும் விதியில்லை யோவெகுண் டாய்ச்சியர்கள்
தாம்பி னடிக்க உரலோடு கட்டத் தடைப்பட்டுச்சிப்
பாம்பில் நடிக்கின்ற மாலே பராக்ரம பாண்டியனே.

(அ - ரை.) காம்பு வனம்புக்க தோளாட்கும் - மூங்கிலின் அழகு பொருந்திய தோளினையுடைய மாதுக்கும். நின்றன் கழுத்திலிட்ட வேம்பு தனக்கும் - நின் கண்டத்திலணிந்த வேப்ப மாலைக்கும், விதியில்லையோ - சம்பந்தப்பட்ட ஊழினமைப் பில்லையோ. (௧௩)

[நாரைவிடுதூது.]

844. சடம்பமூக் குங்கிறட் டுக்குரு
கிர்தலை சாய்த்துநின்று
முடம்பமூக் குங்கைதை நற்றுறை
யிற்றெங்கு முப்புடைக்காய்க்

குடம்பழுக் குங்கொற்கை யார்குல
சேகரன் கூடலிலென்
உடம்பழுக் குஞ்சிறை யும்பழி
காரர் உணர்ந்திலிரே.

(அ - ரை.) சடம்பழுக்கும் கிழட்டுக் குருகீர் - உடம்பு முதிர்ந்த வயது முதிர்ந்த அன்னங்களே. கைதை தலை சாய்த்து நின்று - தாழைகள் ஒரு பக்கமாகச் சாய்ந்து நின்று. முடம் பழுக்கும் - அவற்றின் வளைவான இலைகள் பழுத்த நிறத்துடன் விளங்குகின்ற. தெங்கு முப்புடைக்காய் குடம்பழுக்கும்-தென்னை மரத்தின் மூன்று பக்க முடைய காய்கள் குடம் போலப் பழுத்துத் தொங்குகிற. உடம்பு + அழுக்கும். குருகீர்! பழிகாரர் உணர்ந்திலிரே எனக் கூட்டுக. (கச)

[தலைவி யிரங்கல்.]

845. மற்றேப் பிலாக்குடைச் சண்பக மாற வரோதயநின்
வெற்றிக் கிரண்டுண் டடங்காத காரிய மேருகிரிச்
சுற்றிலுங் கீர்த்தி அடங்காது நின்னுடைத் தோள்தழுவாக்
கற்றைக் குழலிக்கு மாலடங்கா துகை கண்டதுவே.

(அ - ரை.) மேருகிரிச் சுற்றிலுங் கீர்த்தி அடங்காது - உன் புகழானது மேருமலை முற்றிலும் கடந்தும் அதற்கப்பாற் பட்டுஞ் செல்வது. (கரு)

௬ரு. நமச்சிவாயப் புலவர்

[இவர் ஏறக்குறைய கி. பி. 18 ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டிலிருந்தவரென்பர். இராமநாதபுரத்தில் அமைச்சரா யிருந்த முத்திருளப்ப பிள்ளை மீது பிள்ளைத்தமிழ், தூது, உலகம்மை யந்தாதி, திருவரங்கச் சந்நிதி முதலிய நூல்கள் செய்துள்ளார். இவர் சைவ மரபைச் சார்ந்தவர்.

[தஞ்சைச் செவிசெட்டி என்னும் செல்வனிடம் சென்றால் நம் குறைகளெல்லாம் நீங்கிவிடுமெனப் பாடியது.]

846. அவிசெட்டி வாங்குசூரர்க் கிறைநிகராய் வளமருவு
அமர ரேன்றோ
தவிசெட்டி மரம்போல வளர்ந்திருப்போர் தமைப்பாடோம்
தனிநக் கீரன்

கவிசெட்டி திருவடியைப் புகழ்வணிக விசையுடனாற்
        கவினுர் தஞ்சைச்
செவிசெட்டி பாலடைந்தால் நமதுகுறை விட்டோடுஞ்
        சேற்கண் மானே.

(அ - ரை.) அவிசு எட்டி வாங்கு சுரர்க்கு இறை நிகராய்- வேள்வியாகும் ஆகுதியை எட்டி வாங்குகின்ற தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனுக்குச் சமமாய். தவிசு இருப்போர் தமைப் பாடோம் - இருக்கை விட்டெழாதிருக்கும் உலுத்தர்களை நாம் பாடமாட்டோம், தனி நக்கீரன் கவி செட்டித் திருவடியைப் புகழ் - ஒப்பற்ற நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை முதலிய பாடல்களால் முருகப்பிரான் திருப்பாதத்தைத் துதிக்கின்ற. இதுமகடூஉ முன்னிலையாகப் பாடியது. (௧)

[திருக்கோவலூர்க்கு அதிபனாகிய தாண்டவராயனென்னும் வள்ளல்மீது பாடியது.]

847. பாங்குயர் பளிக்கு மேடைகோல் லூலையா
        மாருதந் துருத்தியா நீடும்
பகர்நிலாக் கற்றை பதடியா மூடும்
        படரிருட் குழாங்குடை கரியா
ஓங்கிய செக்க ருள்ளிடுங் கனலா
        வுயிர்பெரும் பனிகோடும் புகையா
உருவிலி யென்னுங் கொல்லனென் பொன்னை
        யுருக்குமா றென்கொலோ உரையாய்
தூங்கிய விழியுந் தாம்புடைக் கயிறுந்
        தூம்புறு காம்பியற் குழலும்
துவருடைத் துகிலுங் கவருடைக்கழியுந்
        தொறுவிய ருறிபடு குடமும்
தாங்கிய கையும் மெய்யுமாய் நின்று
        தண்ணளி பெய்யுமா முகிலே
தாண்டவராயா பாண்டவர்தூதா
        தாழ்வில்சீர்க் கோவலா திபனே.

(அ - ரை.) துவருடைத்துகிலும் - சிவப்பு நிறமுடைய உடையும், கவருடைக் கழியும் - பிளவுடைய கோலும், தொறுவியர் உறிபடு குடமும் - ஆயர் மகளிர் உறியில் வைத்த குடமும். மாருதம் துருத்தியா - தென்றலானது காற்றுப் பையாகவும், நீடும்பகர் நிலாக் கற்றை பதடியா - நெடுநேரம் விளங்குகின்ற திங்கள் ஒளிக்கதிர்களின் கூட்டமானது உமியாகவும், மூடும் படர் இருள் குழாம் - பக்கத்திற் பரவிய இருளின் செறிவானது, குடைகரியா - குடைந்துவைத்த கரியாகவும், ஓங்கிய செக்கர் - மிகுந்த செவ்வானமானது, உள்ளிடும் கனலா - உலையிட்ட தீயாகவும், உருவிலி என்னும் கொல்லன் - உருவற்ற மன்மதனாகிய கொல்லன், என் பொன்னை - பொன் போன்ற என் பெண்ணை, உருக்குமாறு என் கொலோ உரையாய் - உருக்குகின்றதற்குக் காரணம் யாதென்று கூறுவாயாக. பொன் - பெண். உருக்குவது - வருத்துவது. அவளை வருத்தாமலிருக்கும்படி நீ வந்து கூடுக என்பது குறிப்பு. (உ)

[கருவைப்பதியில் வீற்றிருக்கும் களவீசர்மேற் பாடிய நிந்தாத்துதி.]

848. மெய்யாரப் புலிகாணப் பொதுவி லாட்டை
மிகவெடுத்தீர் உமையாளுக் கொருபங் கீந்தீர்
பய்யாரப் பணமெடுத்தீர் ஐயா நீர்நாம்
பாரறியச் சக்கரத்தை மாலுக் கீந்தீர்
செய்யாரத் தடம்புடைசூழ் கருவை வாழும்
திருக்களா வீச்சுரரே தேவ ரீர்தாம்
கய்யார மழுவெடுத்துக் காட்டி னாலும்
களவும்மைக் கொண்டேநான் காண்பிப் பேனே.

(அ - ரை. ஆட்டைமிக எடுத்தீர் - கூத்தை மிகுதியாகச் செய்தீர். பய்யாரப் பணம் எடுத்தீர் - பை போன்ற படம் பொருந்திய நாகத்தை எடுத்து அணிந்தீர். தேவரீர் தாம் கையார மழுவெடுத்துக் காட்டினாலும் - சுவாமியே! நீர் உமது கையில் பொருந்தும்படியாக மழுவாயுதத்தை எடுத்துக் காட்டினாலும். களவு உம்மைக்கொண்டே நான் காண்பிப்பேன் - நீர் களவு செய்ததை உம்முடைய செய்கையினாலே மெய்ப்பிப்பேன்.

ஆட்டைக் களவு செய்தீர்; பைப் பணத்தை எடுத்தீர் களவிலே இருக்கின்றீர்; என்றும் பொருள் தொனிக்கின்றது.

(௩)

[காளத்திநாதர் மீது பாடியது.]

849. மான்பிடித்தீர் முயன்மிதித்தீ ரெவருங் கான
மன்றுதனில் ஆடெடுத்தீர் மகத்து வந்த
ஊன்பெருத்த யானையைக்கொன் றுரித்தீ ரிப்பால்
உரப்பான தலைக்கறிக்கு முவந்தீ ரையா
மீன் பொதிந்த விழிமடவாட் கொருபங் கீந்தீர்
மேலான வேடனெச்சில் மிகவே கொண்டீர்
கான் பொதிந்த காளத்தி நாதா உம்மைக்
கழுக்கள் வந்து சுற்றுவதுங் காணத் தானே.

(அ - ரை.) கான் பொதிந்த - காடடர்ந்த, எவருங்காண மன்றுதனில் ஆடு எடுத்தீர் - எல்லாரும் பார்க்கும்படி சபையில் நடனம் செய்தீர், மகத்து வந்த - தாருகாவனத்து முனிவர்கள் செய்த வேள்வியினின்றும் புறப்பட்டு வந்த. உரப்பான - வலிய, ஐயா மீன் பொதிந்த விழிமடவாட்கு ஒரு பங்கு ஈந்தீர் - அழகுள்ள மீனினியல்பு பொருந்திய கண்ணையுடைய பார்வதிக்கு ஒரு பாகம் அளித்திர். ஆடு எடுத்திர் - ஆட்டைக் கையிலே தூக்கினீர் என்கிற பிறிதொரு பொருளும் நயம்பெற அமைந்துள்ளது.

[முத்திருளப்ப பிரபு செய்த ஆலயத் திருப்பணியைப் புகழ்ந்து பாடியது.]

850. பருப்பதங்கள் ஒவ்வொருதூண் பாவுக்கல்
வளையாத பாரமேரு
சுரிப்படங்காப் போதிகைநீ செய்தபணி விடையை
யென்ன சொல்வேனையா
தருப்பொலியுங் கரதலமுத் திருளப்பசாமி நின்றன்
தாய்பா லுன்னைக்
கருப்பணிமுன் திருப்பணிக்கென் றுருப்பணினுன்
மருப்பொலியுங் கமலத்தோனே.

(அ-ரை.) பாவுக்கல் - மேலே பரப்பும் கல். தருப்பொலியும் கரதலம் - கற்பக தருவைப்போல் விளங்குங் கை. கருப்பண்ணி - கருவாகச் செய்து. உருப்பணினுன் - வடிவாக்கினுன். (௰)

[சேதுபதி முத்துராமலிங்கதுரைமீது பாடியது.]

851. சேதூபதி காத்தமுத்து ராமலிங்க
துரைராசர் சிங்க மந்திரி
மாதுபதி முத்திருளப் பன்கொடிய
வரிவேங்கை வளரா திக்கம்
கோதுறுபா மரக்காடு கருணிகர்
மும்மதக்கொல் யானை மற்றோர்
மோதுபெரும் புலிக்காடு கல்விமான்
களுந்திரிந்தால் மோசந் தானே.

(அ - ரை.) சேதுபதி காத்த முத்து ராமலிங்கதுரை ராச சிங்கம் - சேதுபதியானவர் பெற்று வளர்த்த முத்து ராமலிங்க துரை என்பவர் அரசசிங்கமாவரர். மாதுபதி - அழகு பொருந்திய, வளர் ஆதிக்கம் - அவர்களுடைய தழைத்த ஆட்சி நிலம், கோதுறு பாமரக்காடு - குற்றமுள்ள அறிவில்லா மக்களின் தொகுதியிருக்கும் காடாகும், கருணீகர் - கணக்கு வேலை பார்க்கின்றவர்கள், கல்விமான்களுந் திரிந்தால் மோசந்தானே - கற்றவர்களாகிய மான்கள் நடமாடினுல் இடையூறு ஏற்படக்கூடியதே. ஆதலாற் புலவர்கள் அச்சமுடன் செல்லவேண்டும் என்பது. இகழ்ச்சிப் புகழ்ச்சியாகப் பாடியது. (௬)

[சோலைமலை அழகர்மீது பாடியது. வெறி விலக்கல்.]

852. வண்டுறை சோலை மலைப்பரி காரிவந் தாலிவளுக்
கண்டு படாதவிக் காமச்சுரம் விடும் ஆதலினுல்
பண்டு பழகினர் போலிந்த வேளையிற் பாயசத்தைக்
கொண்டுவந்தீர் இதிற் றோடம் பிறந்திடுங் கோதையரே.

(அ - ரை.) அண்டு படாத - வரக்கூடாத, வண்டுறை சோலை மலைப் பரிகாரி - வண்டுகள் தங்கும் சோலைமலையிலுள்ள மருத்துவராகிய அழகர். பாய் அசத்தைக் கொண்டுவந்திர் - பாய் இன்ற ஆட்டைப் பலியிடுவதற்காகக் கொணர்ந்தீர்கள். தோடம் - குற்றம். அழகர் வந்தால் இவள் காமநோய் தீரும் என்பது கருத்து. பாயசத்தை - பாயசம் என்னும் இன்சுவையுணவைக் கொண்டுவந்தீர் என்னும் பொருளுந் தொனிக்கிறது. (எ)

[சொக்கநாதர்மீது பாடியது; தாயிரங்கல்.]

853. படைத்தாம வேற்கண்ணி கண்ணீர்ப்ர
வாகப் பரவைபொங்கி
உடைத்தால் அடைத்தற் குபாயமுண்
டோநறை யூற்றிதழித்
தொடைத்தார் மவுலியிற் சும்மாடு
கட்டிச் சுமந்துசுமந்
தடைத்தால் அடைபடச் சொக்கே
இதுவையை யாறல்லவே.

(அ-ரை.) படைத்தாம வேல் கண்ணி - ஒளியுடைய ஆயுதமாகிய வேல் போன்ற கண்ணையுடையவள். கண்ணீர்ப் பிரவாகப் பரவை பொங்கி - கண்ணீர் வெள்ளமாகிய கடல் உயர்ந்து கிளம்பி. (அ)

[சீதக்காதிமீது பாடியது.]

854. தடக்கும்ப கிம்புரிக் கொம்பா சலப்பெருந் தந்திபட
நடக்குந் துரங்கத் துரைசீதக் காதிநன் னுட்டில்நல
வடக்குங் குமக்கொங்கை மின்னே யவன்தெரு வாயிலிலே
கிடக்குங் கவியும் பரராச ரத்ந கிரீடமுமே.

(அ-ரை.) தடக்கும்ப கிம்புரி கொம்பாசலம்-விசாலமான மத்தகமும், பூண் அணிந்த தந்தமும் உடைய மலை. பெருந்தந்தி-பெரிய யானை. துரங்கத் துரை - குதிரையையுடைய தலைவன். (க)

[சீதக்காதி இறந்ததைக் குறித்துப் பாடிய இரங்கற்பா.]

855. பூமா திருந்தென் புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னுவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.

(அ-ரை.) நாமாது இருந்தென்ன-கலைமகளிருந்தும் யாது பயன், அழகு அமர்மால் - எழில் பொருந்திய திருமால் போன்ற

வன்- புலமையும் செத்தது - கல்விச் சிறப்பும் ஒழிந்தது. (௧0)

[சோதிடரைத் தாய் பழித்துக் கூறியது.]

856. மாகத்தத் தும்புக ழான்பகை வேந்தர் மகுடம்பொடி
ஆகத்தத் தும்பரி யான்சீதக் காதி யணிமலரின்
ஏகத்தத் தும்பி யிசைபாடு மார்பனி லென்மகட்கோர்
மோகத்தத் துண்டென்று சொன்னு நிலைமுன் மொழிந்தவரே.

(அ - ரை.) மாகம் தத்தும் புகழான் - விண்ணை அளாவுகின்ற சீர்த்தியையுடையவனும். தத்தும் பரியான் - பாய்ந்து செல்லுகின்ற குதிரைகளையுடையவன். அணி மலரினை கத்து அத்தும்பி இசைபாடும் மார்பனில் - சூடிய பூமாலையினிடத்தே ரீங்காரம் செய்யும் அந்த வண்டானது இசைப்பாடல் பாடும் மார்பினை உடையவனுல். மோகத்தத்து - காமத்தால் வரும் இடையூறு. (௧௧)

[ஈயாதோரிடம் சென்றபோது சீதக்காதியின் கொடையை வியந்து பாடியது.]

857. மைப்போ தகமும் வளநாடுஞ்
செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக்
காதியைக் காத்திருந்த
அப்போ தறிந்திலம் இப்பாழும்
பணத்தின் அருமையெல்லாம்
இப்போ தறிந்தனம் ஈயாத
லோபர் இடத்திற்சென்றே.

(அ - ரை.) மைப் போதகமும் வளநாடும் - முகில் போன்ற யானையும் செழிப்பான ஊரும். (௧௨)

[திருப்பரங்குன்றம் முருகக்கடவுள்மீது பாடியது. தாய்க்கூற்று.]

858. கிட்டாது பெண்குடி மார்க்கங் கணவன் கிழவனல்லன்
பட்டாணிச் சேவகன் அல்லும் பகலும்அப் பாற்பிசக
ஒட்டான் பொய் யல்ல மலைமே லிருக்கு மமக்குமிவள்
எட்டாத கொம்பிற் கனிகாண் பரங்குன் றிருப்பவரே.

(அ - ரை.) அல்லும் பகலும் அப்பால் பிசக ஒட்டான் - இரவும் பகலும் வீட்டை விட்டு அப்புறம் தவறிப்போக இடங்கொடான். (௧௩)

[ஒரு மாதின் கண்ணழகை வியந்து பாடியது.]

859. மஞ்சுமஞ் சுங்கைப் பரராச சேகர மன்னன்வெற்பில்
பஞ்சுமஞ் சும்பதப் பாவைநல் லாய்படை வேள்பகழி
அஞ்சுமஞ் சுங்கயல் அஞ்சுமஞ் சுங்கடல் அஞ்சுமஞ்சும்
நஞ்சுமஞ்சும் வெற்றிவேலோ உனது நயனங்களே.

(அ - ரை.) மஞ்சும் அஞ்சுங்கை-முகிலும் அஞ்சும்படியான ஈகையுடைய கையினனுகிய, கயல் அஞ்சும் அஞ்சும் - கயல் மீன்கள் மிகுதியும் பயப்படும். கடல் அஞ்சும் அஞ்சும் - கடலும் மிகுதியாகப் பயப்படும். நஞ்சும் அஞ்சும் - நஞ்சும் மிகுதியாகப் பயப்படும். நயனங்கள் - கண்கள். உன் கண்களுக்கு இவைகளெல்லாம் பயப்படும். வேல்தான் அஞ்சாது. அதுதான் ஒக்கும். (௧௪)

[தாய் மகளைப் பார்த்துக் கூறியது.]

860. திரைவேலை சுற்றிய குற்றால நாதர் தினம்பவனி
வரவேலை நீயு மயல்கொள வேலையம் மாரனம்பு
பொரவேலை நீசங்கம் போட்டிடவேலை புதியவளை
தரவேலை யாச்சு மகளே யுனைப்பெற்றதா லெனக்கே.

(அ - ரை.) திரைவேலை - அலையையுடைய கடல், அம் மாரன் - அந்தக் காமன், பொர - போர் செய்ய, சங்கம்-சங்க வளையல். (௧௫)

[சொக்கன் என்னும் ஒரு வைத்தியனைப் புகழ்ந்து பாடியது.]

861. மிக்கமது ரைச்சிவனும் வீரபத்தி ரன்சுதனும்
சொக்கர் இருவரெனத் தோன்றினர்—அக்கோன்
பிறவாமற் காப்பான் பிறந்தாரை மண்மேல்
இறவாமற் காப்பான் இவன்.

(அ - ரை.) சுதன் - மகன். அக்கோன் - மதுரைச்சிவன். (௧௬)

[மஞ்சம்புத்தூர் ஆவுடையான்மேற் பாடியது.]

862. நன்னீரை நன்னீரை நாடோறும் வாராமல்
வெந்நீரைக் காய்ச்சிவிட வேண்டாமா—முந்நீர்
அடுக்குமஞ்சம் புத்தூரில் ஆவுடையா னேவேள்
எடுக்கு மஞ்சம் புத்தூரி லே.

(அ - ரை.) முந்நீர் - கடல். வேள் - காமன். அஞ்சு அம்புத்தூரில் - ஐந்து மலர்க்கணைகள் உண்டாகும் முல்லை கருங்குவளை முதலிய மரம் செடி கொடிகளின் வேரில். (கள)

௯௯. மதுரகவிராயர்

[இவர் பிறப்பிடம் தொண்டைநாட்டிலுள்ள அமரம்பேடு. புதுவை ஆநந்தரங்கப் பிள்ளை காலத்தினர். திருக்கேச்சுர நொண்டி என்னும் நூல் இவர் இயற்றியது.]

[துரைரங்க பூபதிமேற் பாடியது.]

863. துங்கவரை மார்பா துரைரங்க பூபதியே
இங்கோர் புதுமை இயம்பக்கேள்—பங்கயக்கை
ஆயிழைக்கு நான்குநுதல் ஐந்துகுழை ஆறுமுலை
மாயவிழி யேழாம் மதி.

(அ - ரை.) ஆயிழைக்கு - தெரிந்தெடுத்த அணியணிந்த கன்னிக்கு. நுதல் நான்கு - கன்னிக்கு நான்காவது இராசியான வில் போன்ற நெற்றியும், குழை ஐந்தும் - கன்னிக்கு ஆறுவது இராசியாகிய கும்பம் போன்ற தனங்களும், மாயவிழி ஏழ் - கன்னிக்கு ஏழாவது இராசியாகிய மீன் போன்ற மயக்கம் செய்யும் கண்ணும், மதி - உள்ளனவென்று அறிவாயாக. (க)

['கொண்டுவந்து போட்டுக் கொளுத்து' என ஈற்றடி முடியப் பாடென்று ஒருவர் கேட்டபோது பாடியது.]

864. அந்திவெடி முல்லை அரும்பெடுத்து நான்வந்தேன்
விந்தையதா நாயகற்கு மெல்லியலே—சுந்தரஞ்சேர்
செண்டுகட்ட வேண்டும் திருவிளக்கி லேதிரியைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

(அ - ரை.) அந்திவெடி முல்லை - சாயங்காலத்திற் பூக்கின்ற முல்லை, விந்தை-புதுமை, செண்டு-மலர்ச்செண்டு. (உ)

[தலைவி கூற்று.]

865. சித்திரமா மண்டபங்கள் தென்றல்வரு சாளரங்கள்
பத்தி யுலாவும் பளிக்கறைகள்—இத்தனைவிட்டு
இக்குச் சிலையான் இருப்பிடமென் றார்சொன்னார்
இக்குச் சிலையானுக் கின்று.

(அ - ரை.) பத்தி உலாவும் பளிக்கு அறைகள்-சுற்றிச் சுற்றிச் செல்லுதற்குரிய பளிங்கினாற் கட்டப்பட்ட அறைகள். இக்குச்சிலை-இந்தக் குடிசையை. இக்குச் சிலையானுக்கு ஆர் சொன்னார்-கரும்பு வில்லையுடைய மன்மதனுக்கு யார் சொன்னார்கள்? (௩)

[தன்னுடனுழலும் நல்குரவுக்குச் சொல்லியது.]

866. நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே இரு.

(அ - ரை.) நின்றைக்கே-திருநின்றையூருக்கே. (௪)

[பிரம்பூர் ஆனந்தரங்கனென்னும் பிரபுமீது பாடியது.]

867. உலங்கொண்ட மணிப்புயனே பிரம்பூரா னந்தரங்கா
உன்பாற் செல்ல
வலங்கொண்ட கருடனையா மிடங்கண்டோ மெறிவரையான்
வலத்தே கண்டோம்
பொலங்கொண்ட மணிமாட மிமிசையிற் புயல்தவழும்
புதுவை யென்னும்
தலங்கண்டோம் நினதுநகை முகங்கண்டோ மினி
வேண்டும் தனங்கண்டோமே.

(அ - ரை.) உலங்கொண்ட மணிப்புயனே - திரண்ட கல்லின் தன்மையையுடைய அழகிய தோள்களை உடையவனே. எழில் நரையான் வலத்தே கண்டோம்-ஊக்கமுள்ள காகம் வலப் பக்கம் செல்வதைப் பார்த்தோம். பொலம் கொண்ட மணிமாட மீமிசையில் - பொற்சிகரங்களையுடைய அழகிய மாடங்களின் மேல். (௫)

[இதுவுமது.]

868. கார்படைத்த கரதலத்தான் துரைதிருவேங் கடமலித்த
கன்னு லெங்கும்
பேர்படைத்த ஆனந்த ரங்கமகி பாலாநின்
பிரம்பூர் நாட்டில்
நேரிழைக்கு விழியேழு முலையாறு காதைந்து
நெற்றி நான்கு
பாரிடத்தி லிப்புதுமை கண்டுவந்தே னிதன்பயனைப்
பகர்ந் திடாயே.

(அ - ரை.) நேரிழைக்கு-ஒரு கன்னிக்கு. கன்னிக்கு ஏழாவது இராசி மீன், ஆருவது ராசி கும்பம், ஐந்தாவது ராசி மகரம், நான்காவது ராசி தனுசு (வில்). (௬)

[பறக்கிறீரே, என்றதற்குப் பாடியது.]

869. கொக்குப் பறக்கும் புருபறக்கும்
குருவி பறக்கும் குயில் பறக்கும்
நக்குப் பொறுக்கி களும்பறப்பர்
நானேன் பறப்பேன் நராதிபனே
திக்கு விசயம் செலுத்திஉயர்
செங்கோல் நடத்தும் அரங்காநின்
பக்க மிருக்க ஒருநாளும்
பறவேன் பறவேன் பறவேனே.

(அ - ரை,) நக்குப் பொறுக்கிகளும் பறப்பர் - இழிந்த பயனைக் கவர்ந்து செல்லக் கருதும் மக்களும் விரும்பியது கிடைத்தவுடன் ஓடிப் போவார்கள். (௭)

[ஒரு காரிகையைக் கண்டு காதலித்துப் பாடியது.]

870. மூவொன்ப தென்பதிலோர் நாளில்லை மொய்வனத்தில்
தாவுந்தனி மிருகந் தானில்லை—நேரே
வளையா நடையில்லை வாரிறுக விம்மும்
முலையாளை யான்முயங்கு தற்கு

(அ - ரை.) மூவொன்பது என்பதில் ஓர் நாளில்லை-இருபத்தேழு நட்சத்திரத்திலொன்றாகிய உத்தரம் (அஃதாவது அவள் மறுமொழி) இல்லை, மொய் வானத்தல் தாவும் தனி மிருகம் தானில்லை-அடர்ந்த காட்டில் தாவிச்செல்லும் இணையற்ற விலங்காகிய வேங்கை (அஃதாவது பொன்) இல்லை. நேரே வளையா நடை இல்லை-நேராக வளையாது செல்லும் அன்னம் (அஃதாவது சோறு) இல்லை. (அ)

[வேதாசலப் பிரபுமீது பாடியன.]

871. தனம்பொன் பணம்படைத்த சம்புஅரி பாப்புஇன்னோர்
முனம்பிச்சை கள்வன் நிலமூட்டை—கனம்பெற்ற
மீதலத்தும் போற்றுகின்ற வேதா சலாநினைப்போல்
ஈதல் அத்தம் ஆர்கிலரே யென்.

(அ - ரை.) தனம் படைத்த சம்பு, பொன் படைத்த அரி, பணம் படைத்த பாப்பு என நிரனிறையாகக் கூட்டுக. தனம் - பொன். இது தங்க மலையையுடைய சம்பு என்று பொருள் தந்தது சம்பு - சிவன் பொன் - திருமகள் (இலக்குமி பணம் - படம். பாப்பு - பாம்பு (ஆதிசேடன்). சிவனும் திருமாலும் சேடனும் தனம், பொன், பணம் இவற்றையுடையவராயிருந்தும் பிச்சைக்காரனாகவும், கள்ளனாகவும், நிலச் சுமை சுமப்பவனாகவும் இருக்கின்றனர். நினைப் போல் கொடைக் கையையுடையவரல்லர் என்பது கருத்து. ஈதல் அத்தம் - கொடைக்கரம் ஆர்கிலர் - பொருந்திலர். (௧)

872. மதுமேவு குவளையணி புயனென் றேனே
மருவனஞ்சூழ் கலசைநகர் மன்னென் றேனே
முதுநீதி தெய்வசிகா மணிமா லுக்கு
மூத்தவொரு மகனெனநான் மொழிந்திட் டேனே

பதுமாச னத்திமக னென்மேற் சண்டை
பண்ணுகின்ரு னவனுற் படுந்துன் பத்தால்
இதுவேதா சலமென்றே னிதற்கென் னன்னை
ஏதேதோ வைதுபழி இடுகின் ருளே.

(அ - ரை.) பதுமாசனத்தி மகன் என்மேல் சண்டை பண்ணுகின்ருன் - தாமரைக் கிழத்தி புதல்வனுகிய மன்மதன் என்னோடு போர் தொடுக்கின்ருன். இது ஏது ஆசலம் என்றேன் - இது என்ன ஆசங்கடமென்று கூறினேன். (௪0)

873. பூங்கமலன் கலசைவே தாசலன்போல் உருவமைக்கும்
பொற்பி லானென்
ருங்கயலார் சொலக்கேட்டு வானியரி பாலுரைக்க
அடைந்தா ளன்னேன்
தூங்கவனம் போயிருந்தான் அரனிடத்திற் சொலப்
பித்தாய்ச் சுழலலுற்ருன்
ஏங்கியந்தத் திறங்கற்பா னிவனுவில் விற்றிருந்தா
ளெழிற்கண் மானே.

(அ - ரை.) அன்னேன் தூங்கவனம் போயிருந்தான் - தான் நித்திரை செய்யக் கடனீருக்குட் போனுன். அரன் பயித்தியமுடையவனுய்த் திரிந்தான். அதனுல் அக் கலைமகள் இவன் நாவில் வந்திருந்தாள். எழில் கண் மானே - அழகிய கண்ணையுடைய கலைமகள், அந்தத்திறம் கற்பான் - அந்த ஆற்றலைக் கற்க.

கூஎ. சவ்வாதுப் புலவர்

[பாண்டிநாட்டில் பரம்பைக்குடிக்கடுத்த எமனே சுரத்தில் தோன்றியவர். முகமதிய மதத்தினர். முகையத்தீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் என்னும் நூல் இவரால் இயற்றப்பெற்றது.]

[இரகுநாத சேதுபதிமீது பாடியது.]

874. கிளையாளன் சேது பதிரகு நாயகன் கிஞ்சுகவாய்
இளையார் கலவி இடத்தும்நம் மீச ரிடத்துமென்றும்
வளையாத பொன்முடி சற்றே வளையும் மகுடமன்னர்
தளையா டியகையிற் காளாஞ்சி யேந்துஞ் சமயத்துமே.

(அ - ரை.) இளையாளன்-சுற்றநங் தழுவுவதிற் சிறந்தவன். காளாஞ்சி ஏந்தும் சமயத்தும்-தம்பலப் படிகத்தை யெடுத்து நீட்டும் பொழுதும், கலவியிடத்தும் ஈசரிடத்தும் ஏந்தும் சமயத்தும் வளையும் எனக் கூட்டுக. (க)

[புதுச்சேரி ஆனந்தரங்கப் பிள்ளையைப் பாடியது.]

875. பானுகிர ணம்பார்க்கும் பங்கே ருகநிலவு
தானும்வரப் பார்க்கும் சகோரங்கள்—வானமரும்
மையைப்பார்க் கும்மயில்கள் மாவிசயா னந்தரங்கன்
கையைப் பார்க் கும்புலவோர் கண்.

(அ - ரை.) பானு-சூரியன். பங்கேருகம்-தாமரை. சகோரம்-சக்கரவாகப்புள் இது நிலவின் கதிரையுண்ணும் இயல்புடையது. வான் அமரும் மையை பார்க்கும் - வானிலுள்ள முகிலை நோக்கி யிருக்கும். (உ)

876. பாலையிலாள் பின்னங்காற் பஞ்சுளியென் றேசுளிப்பாள்
பாலையிலாள் பின்னென் படுவளோ—சோலையிலே
ஆடு மயிற்பிரம்பூ ராநந்த ரங்கதுரை
நாடுதனி லென்னிளமின் னுள்.

(அ - ரை.) பால் அயிலாள்-பால் குடிக்க மாட்டாள். பாலையில் ஆள்பின் என்படுவளோ - அவள் பாலை வழியில் தலைவன் பின்னே செல்லுங்கால் என்ன துன்பப் படுவாளோ? (ங)

கூஅ. நையாண்டிப் புலவர்

[இவர் வேடிக்கையாகவும் நையாண்டித்தனமாகவும் செய்யுள் செய்வதில் வல்லவராயிருந்தமையின் இயற்பெயர் மறைந்தொழிந்து காரணப்பெயர் நிலைத்தது.]

[ஆரூர்ப்பெருமானைப் பணிவோர்க்காம் பயனைக் குறித்துப் பாடியது.]

877. விற்கம்பத் தடியாலு மடியுண்டான் விண்ணவரை
ஏவல் கொள்ளும்
நற்கம் பத்தடியானுந் தூக்கவசை யானுரூர்
நாதன் கோயில்

பொற்கம்பத் தடியில்நின்று வன்மீகத் தானையுன்னிப்
போற்றி னேர்க்குச்
சொர்க்கம்பத் தடியப்பால் மோட்சம் பத்தடியாகத்
தோற்றுந் தானே.

(அ-ரை.) கம்பத்து வில் தடியாலும் அடியுண்டான் - விசயனது தாண் போன்ற வில்லுத்தடியால் அடிபட்டவனும், நல்கம்பத்து அடியானும் தாக்க அசையான்-நல்ல தலை பத்துடைய அடியான் ஆகிய இராவணனும் தாக்க அசையாதவன். கோயில் பொன் கம்பத்து அடியில் நின்று-ஆலயத்திலுள்ள அழகிய கொடி மரத்தின் கீழ்ப் பாகத்தினருகே நின்று, வன் மீகத்தானை உன்னிப் போற்றினேர்க்கு புற்றிடங் கொண்டானைத் தியானித்து வழிபட்டவர்களுக்கு, சொர்க்கம் பத்தடி - வீட்டுலகம் அதிலிருந்து பத்தடி தூரம். மிகவும் எளிது என்பது. (க)

[மேலாடை யில்லார்க்கு மேன்மையில்லையெனப் பாடியது.]

878. மேலாடை யின்றிச் சவைபுகுந் தால்இந்த மேதினியோர்
நாலா யிரம்படித் தாலுமெண் ணூர் நாவல் பாற்கடலோ
மாலா னவரணி பொன்னுடை கண்டு மகளைத்தந்தே
ஆலால மீந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே.

(அ-ரை.) மேதினி-உலகம். எண்ணூர்-மதியார் மாலானவர் அணி பொன் ஆடை கண்டு-விண்டு அணிந்திருக்கும் பீதாம்பரத்தைப் பார்த்து, ஆலாலம்-நஞ்சு. தோலாடை அரன்-சிவன். (உ)

[பள்ளிகொண்டானென்னும் செல்வனைப் பாடியது.]

879. வள்ளிகொண் டான்மயி லேறிக்கொண்
டான்மதி போலுமலை
வெள்ளிகொண் டான்விடை யேறிக்கொண்
டான்விண் ணவர்க்கமுதம்
துள்ளிகொண் டான்புள்ளி லேறிக்கொண்
டான்சுப சோபனஞ்சேர்
பள்ளிகொண் டான்புக ழேறிக்கொண்
டானென்று பார்க்கவென்றே.

(அ - ரை.) வள்ளி கொண்டான் - வள்ளியம்மையை மணந்து கொண்டவன் (முருகன்) மதிபோலுமலை வெள்ளி கொண்டான்-சந்திரன் போன்ற வெண்மையான வெள்ளி மலையை இடமாகக் கொண்டவன் (சிவன்) விண்ணவர்க்கு அமுதம்துள்ளி கொண்டான்-தேவருக்காக அமுதங் கடைந்து அத் துளியை உடலிற் கொண்டவன் (மால்) புள்-கருடன். (௯)

௬௬. சுப்பிரமணியப் புலவர்

[இவர் பாண்டிநாட்டிலே யுள்ள சிவகங்கையிலிருந்தவர். விரைவாய்ப் பாடுவதில் வல்லவர். பிரசங்கரத்திஞகரம் என்னும் நூல் இவர் செய்தது என்பர்]

[நற்ருயிரங்கல்]

880. வாரிட்டு விம்மிப் புடைத்திறுகி
யிளகிமணி மார்பிடமெ லாங்கவர்ந்து
வட்டமிட் டடியிட்டு நாளுக்கு நாள்மேல்
வளர்ந்துபூ ரித்து முத்து
மாலையிட் டிறுமாந்து பட்டவர்த்
தனயானை மத்தகத் தோடெதிர்த்து
வாதிட்டு மல்லிகைப் பூச்செண்டினைத்தினம்
வரட்டப் படுத்தி வரையைப்
போரிட்டு மைந்தர்கள் மனஞ்சூறை
யிட்டுமேற் புளகித்து வச்ரரத்நப்
புதுச்செப்பி னைத்தோழ மைக்கொண்டு
பொன்வினைப் பொடியாவ ராவிமீதிற்
பொட்டிட்ட தென்னவே தேமற் படர்ந்துசெம்
பொற்சரிகை வேலையிட்டுப்
புனைதரு ரவிக்கையை யிறுக்கிக் கிழித்துப்
புறப்பட்டு வாசனைப்பூந்
தாரிட்டு வரவரப் பளபளப் பாகியுயர்
தங்கக்கி ணத்தையொத்துச்

சந்தனம் புனுருகஸ் தூரிகர்ப் பூரஞ்சவ்
வாதுகுங் குமமணிந்து
சந்த்ரகா விச்சேலை வல்லவாட் டுக்குள்
ததும்பியண் ணுந்திடையிலித்
தாங்கா தெனக்கனத் தோங்கிமன் மதனுஞ்
சலாமிட்டு நிற்கவுந்தான்
சீரிட்டு நின்றுதந் தலைவணங் காமற்
றிரண்டபூண் முலைகளுன்றன்
திருமார்பி லணையவோ ரூசிமே லேதவஞ்
செய்கின்ற தொக்குமென்னும்
சிறுரோம ரேகையாள் வந்தாள் பராக்கென்று
சேவித்து நிற்கிருள்பார்
திகழ்வடுக நாததுரை மெச்சுபிர தாவிசிவ
சுப்பிரம ணியராசனே.

(அ-ரை.) வாரிட்டு-கச்சுக் கட்டப் பெற்று. பூரித்து-நிறை வடைந்து. பட்டவர்த்தன யானை மத்தகத்தோ டெதிர்ந்து வாதித்து-பட்டத்து யானை போன்ற வலியுள்ள யானைத் தலைக்கு மேலான வன்மையுடையதாய் அதை எதிர்த்துப் போர் செய்ய வல்லதாய். பொன்னிணைப் பொடியா அராவி மீதில் பொட்டிட்ட தென்னவே - பொன்னிணைப் பொடியாகத் தேய்த்து அப் பொடியை மேலே தூவினுற்போல, சந்த்ரகாவிச் சேலை வல்ல வாட்டுக்குள் ததும்பி அண்ணுந்து - மேலாடையாகத் தரித்த சந்திர காவிச் சேலைக்குள் நிறைந்து நிமிர்ந்து, வந்தாள் பராக்கு என்று சேவித்து நிற்கிருள்-வந்து அசட்டை செய்யாதீர்கள் என்று குறிப்பித்துக் கும்பிட்டு நிற்கின்ருள். (க)

௭௦. கடிகை முத்துப் புலவர்

[இவர் பாண்டிநாட்டில் எட்டையபுரத்தில் தோன்றியவர். எட்டையபுரத்துப் பெருநிலக்கிழாராகிய சகவீரராம வேங்கடேசுவர எட்டப்ப நாயக்கரின் அவைக்களப் புலவராக அமர்ந்திருந்தவர். மதனவித்தாரமாலை, காமரச மஞ்சரி, சமுத்திர விலாசம் என்னும் நூல்கள் பாடியதுடன், 'திக்கு விஜயம்' என்னும் பெயருடன் ஒரு நூலும் திருவிடைமருதூ ரந்தாதியும் இவர் பாடியிருக்கின்ருர்.]

[இளசைப்பதிக்குத் தலைவனாகிய வேங்கடேசுரெட்ட னென்னும் செல்வன்மீது பாடியது]

881. கராமடியச் சக்கரந்தொட் டெய்தவெங்க
டேசுரெட்டன் கமலப்பூநி
கராமடிதொட் டானும் வரவழைப்பார்
காணேனங் கனைமார்சேவ
கராமடிபட் டிடுபேரி வாரிதியா
மிவளைவெவர் காப்பாரோசங்
கராமடிவிட் டிறங்காத பேதையின்மேற்
கணைதொடுத்தான் காமவேளே.

(அ - ரை.) நிகராம் அடி - ஒப்பாகிய பாதம். கராமடியச் சக்கரம் தொடடு எய்த - யானையைப் பிடித்த முதலை சாகும்படி சக்கரப் படையை வீசிய. அங்கனைமார் சேவகராம் - பெண்கள் படைகளாகவும், அடிபட்டிடு பேரிவாரிதியாம் - அடிக்கத் தக்க முரசம் கடலாகவும் (மன்மதனுக்கு அமைந்திருக்கின்றன.) (க)

[தலைவி கூற்று]

882. கன்று தொட்டுக் கனியுகுத்த கீர்த்திவெங்கடேசுரெட்டா
கமலக்கண்ணு
கன்று தொட்டதத்தனையுங் கைநெகிழ்ந்ததறியாயோ
கலையுஞ் சோர்ந்த
கன்றுதொட்ட ரவிக்கையெல்லாம் காமனம்புகிழித்ததுபார்
கருத்துந்தானே
கன்று தொட்டுப் பட்டசிட்டுப் போன்மெலிந்துவாடுவதுங்
கண்டிலாயே.

(அ -ரை.) கலையும் சோர்ந்து அகன்று-உடையும் நெகிழ்ந்து விலக. தொட்ட ரவிக்கை யெல்லாம் காமன் அம்பு கிழித்தது பார்-அணிந்த கச்சு முழுவதையும் மன்மதனுடைய பாணம் கிழித்து விட்டதைப் பார்ப்பாயாக. கன்றுது-உள்ளம் வெம்பிப் போகின்றது. ஒட்டுப் பட்ட சிட்டுப்போல்-ஒட்டிக் கொள்ளக் கூடிய பிசின் முதலியவற்றில் அகப்பட்டுக் கொண்ட சிட்டுக் குருவியைப் போல. அரசர்கள் திருமாலின் கூறுதலின் அவர்கள் திருமாலாகக் கூறப் பெறுகிறார்கள். (உ)

[தலைவி காமனை அச்சுறுத்தல்]

883. கலக்கடமா னத்தொனியை முழக்கமன மலைந்தடையார்
கால்சாய்ந் தோடப்
பெலக்கடமா நகக்களிற்றை நடத்தும்வெங்கடேசுரெட்டன்
பிணைய லீந்தான்
சிலக்கடமா மரக்குயிலை யொடுக்குகடற் றெனியடக்கு
தென்றற் றேரை
விலக்கடமா மதப்பயலே தலைக்கடைவா சலைக்கடக்க
வெருட்டு வேனே.

(அ - ரை.) மனம் மலைந்தடையார் கால் சாய்ந்தோட-பகைவர்கள் நெஞ்சம் நடுங்கி நிலை கலங்கி ஓடும்படி. பெலக்கடமா நகக் களிற்றை நடத்தும்-பெலமான பெரிய மலை போன்ற யானைமீதேறி அதனைச் செலுத்தும். சில கடமாமரக் குயிலை ஒடுக்கு-சில தோப்புக்களிலுள்ள மாமரத்திலிருந்து கூவுகின்ற குயிலைக் கூவாதடங்கும்படி செய்வாய். பிணையல்-மாலை; ஈந்தான். அதனால் விலக்கு அட மாமதப்பயலே! உன்னை வெருட்டுவேனே எனக் கூட்டுக. (௫)

[வண்டுவிடு தூது]

884. பொரக்கலக்க முற்றவரக் கிரங்கும்வெங்க டேசுரெட்டன்
புயங்கண் டாள்மேல்
உரக்கலக்க மற்றகணை மதன்விடுத்தா லென்னசெய்வாள்
ஒகோ கின்னச்
சரக்கலக்கம் மியன்கடைந்த செப்பலத்தா னேதிரண்ட
தனத்தி னூடே
வரக்கலக்க ணிருகுத்தாள் வண்டினங்காள் கண்டசெய்தி
வழுத்து வீரே.

(அ - ரை.) பொரக் கலக்க முற்றவர்-போர் புரிவதற்கு மனங்கங்கியவர். லக்கம் அற்ற கணை-எண்ணற்ற பாணங்களை. கம்மியன் கடைந்த செப்பு அல-தச்சன் கடைந்து செய்த செப்பு அல்ல கின்னம் சரக்கு அல-கின்னமாகிய ஒரு பொருளன்று. கலம்கண் நீர்-கலம் என்ற ஓரளவுள்ள கண்ணீர். (௬)

[தலைவி திங்களைப் பழித்தல்]

885. கொட்டமிடு மருவலர்கள் இட்டகற்கோட் டைகளனைத்துங்
கொழிதூ ளாக
வட்டமிடும் பரிநகுல னெட்டமரா சேந்த்ரனென்னை
மருவா நாளில்
துட்டமதன் கணைதுளைத்த துளைவழியே தென்றல்வந்து
சுவைத்துத் தள்ளி
விட்டவெறுங் கூட்டையினிச் சுட்டதனு லென்னபயன்
வெண்ணி லாவே.

(அ - ரை.) இட்டகற் கோட்டைகள் அனைத்தும் கொழி தூளாக-கட்டிய கல்லினுலாகிய அரண்மனைகளெல்லாம் புடைக்கப் படும் புழுதிபோலாகும்படி, வட்டமிடும் பரி நகுலன்-வட்ட மிட்டோடுகின்ற குதிரைத் தலைவனுகிய நகுலன் போன்றவன். (௫)

[தோழி இரங்கல்]

886. புவிக்காதி பதியிளசை புரந்த வெங்கடேசுரெட்டன்
புலவோர் சொல்லும்
கவிக்காதி வள்ளலைக்கண் டாசைகொண்டா ளுக்கமுதைக்
கரைத்துப் பால்வார்த்
துவிக்காதிவ் வளவேனும் புகட்டுசகியே முகத்தைத்
துடைதன் னிரு
தவிக்காதி லேசுக்கா னுலும்வைத்தா திவள்காமத்
தகைக்குத் தானே.

(அ - ரை.) விக்காது இவளவேனும் புகட்டு சகியே-விக்கா மலிருக்கும்படி ஒரு சிறிய அளவாவது பருகும்படி செய்வாயாக. (௬)

[தலைவி காமனை விளித்துக் கூறல்]

887. புடவிகட கடெனவுடை படவடவை
சிதறவரு பொருதார்ச்சீறும்
தடவிகட களிற்றுதய விளசைவெங்க
டேசுரெட்டன் தருவான்முல்லை

அடவிகட வுனதுகுடை அகலமத
கயபோக வலிலத்தேரை
நடவிகட நிமிர்முகடு தொடுபரிதி
யுதயமிதோ நான்கண்டேனே.

(அ - ரை.) அடவிகட-அடே மன்மதனே. புடவி கட கட என உடைபட-நிலமானது கடகட வென்ற ஓசையுடன் பிளவு படவும். வடவை சிதற-வடவாமுகாக் கினியானது பொறி வீச வும். தடவிகட களிற்று உதயன்-பெரிய முரண்பாடு உடைய யானையின் மேல் பகலோன் போல் வருகின்ற. முல்லை மாலை தரு வான் குடை அகல மதகயம் ஏக தேரை நடவு இகு அடம் உத யம் நான் கண்டேன் என வினை முடிவு செய்க. அடம் இகு - பொல்லாங்கை நீக்கு. (எ)

[நற்றாயிரங்கல்]

888. ஆளுக்கே யழகனெங்கள் இளசைவெங்க டேசுரெட்டன்
அன்பை யிசன்
தாளுக்கே விருந்திட்டான் ஒன்னலர்கள் செங்குருதித்
தசையைச் செங்கை
வாளுக்கே விருந்திட்டான் மாதரா ராவியெல்லா
மலர்க்கை வாளி
வேளுக்கே விருந்திட்டான் வெண்மதிக்கென் பெண்மதியை
விருந்திட் டானே.

(அ - ரை.) வெண்மதிக்கு என் பெண் மதியை விருந்திட் டான் வெள்ளிய திங்களுக்கு என் மகளின் அறிவை உரிய தாக்கி னன். திங்களைக் கண்டு மதிமயங்கினள் என்பது கருத்து. (அ)

[தோழி இரங்கல்]

889. அனங்கலக்க ணம்தெரியாள் சிறுபேதை
விரகமிவட் கதிக மையோ
மனங்கலக்கம் பக்கமில்லை யுன்னையன்றி
யாதலினல் வாராதாலே

தினங்கலக்க விருகுத்துத் தேடுகிருள்
வாடுகிருள் திரண்ட கும்பத்
தனங்கலக்க வருள்புரிவா யிளசைவெங்க
டேசுரெட்ட தமிழ்க்கோமானே.

(அ - ரை.) அனங்க லக்கணம்-மன்மதனுடைய இயல்பு. தினம் கலக் கண்ணீர் உகுத்து-ஒவ்வொரு நாளும் கலக் கண்ணீர் சொரிந்து. மனம் கலக்கம் - மனது கலக்கமானுள். தனம் கலக்க-கொங்கையிற் கூடுவதற்கு. (௯)

[தலைவி பாங்கியிடம் வருதல்]

890. எனக்குடந்தை யாளவெங்க டேசுரெட்ட னருகிலழைத்
திருத்தி வைத்துத்
தனக்குடங்கை யாரவெனைத் தழுவாத மனக்குறையைச்
சகியேசொன்னேன்
உனக்குடம் பெலாம்பசக்கும் பாலனமுங்கசக்குமழ
குற்ற கொங்கை
கனக்குடங்காத் தொனிகேட்க மதவ்படையும் வந்திவிக்கை
கலக்குந் தானே.

(அ - ரை.) உடந்தை-உரிமை. கொங்கை கனக்கும் டங்காத் தொனியும் கேட்கும். (டங்கா-முரசு.) மதன் படையும் இனி வந்து கை கலக்கும் என்க. சகியே உனக்குச் சொன்னேன் எனக் கூட்டுக. (௧0)

[தோழி இரங்கல்]

891. மாலைமணி முடிதரித்த மருவலர்கள்
சேனைதனை மடியத் தாக்கும்
கோலமத களிற்றுதய விளசைவெங்க
டேசுரெட்டன் கூடா நாளில்
பாலனந்தி வலையருந்தாள் சிறியாட்கு
மதிக்குமென்ன பகையோ மேனி
வேலைநடுக் கலத்தைவிட்டே எழுந்தலைந்த
காகமென்ன மெலிகின்றுளே.

(அ - ரை.) மருவலர்கள்-பகைவர்கள். பால் அனம் திவலை-பாலும் அன்னமும் சிறிதும். அருந்தாள்-உண்ணுள். வேலை நடுக் கலத்தைவிட்டுளழந்து அலைந்த காகம் என-கடலின் நடுவிலிருந்த மரக்கலத்தை நீங்கி வெளியே போய்த் திரிந்த காக்கை போல. (௧௧)

[தலைவியைத் தாய் தேற்றல்]

892. தரும்பலிக்கு மருவலரைத் தாக்கும்வெங்க
டேசுரெட்ட சாமி மாலை
வரும்பலிக்கு நினைத்தபடிக் கிப்போது
தப்பாது வலத்தி ருந்த
திரும்பலிக்கு ரலைப்பார்க்கிற் செயமடிபெண்
ணேமதனன் செங்கை யாலெய்
அரும்பலிக்கு மென்னபயஞ் சுகமாக
வாழ்வாயுன்அதிட்டந் தானே.

(அ - ரை.) பலிக்குத் தரும் மருவலரைத் தாக்கும்-எமனுக்குப் பலியாகத் தருவதற்காகப் பகைவர்களை மோதுகின்ற. மாலை வரும் - பூமாலையானது வரும். பலிக்கும் நினைத்தபடிக்கு - நாம் நினைத்தபடி பலன் தரும். வலத்து இருந்து அதிரும் பலிக்குரல் பார்க்கில்-வலப் பக்கத்தில் நின்று ஓசை செய்கின்ற பல்லியினுடைய சொல்லின் பயனைக் கவனித்துப் பார்த்தால், மதன் செங்கையால் எய் அரும்பு அலிக்கும் என்ன பயம்-காமன் தனது சிவந்த கையாற் செலுத்தும் அவ்வல்லி மலர் அரும்புக்கும் நாம் ஏன் அஞ்ச வேண்டும்? (௧௨)

[நற்றுயிரங்கல்]

893. மின்னமருங் கொடியனைய சின்னமருங்
கொடியமுலை விம்ம மானுள்
முன்னமரும் பெடுத்துமதன் றன்னமருந்
தொடுக்கவெகு மோக மாகி
அன்னமருந் தென்னினுமீ தென்னமருந்
தென்னவுண்ணு தயர்கின் றளே
சொன்னமருந் தமிழ்ப்புலவர்க் குதவும்வெங்க
டேசுரெட்ட சுகுண மாலே.

(அ - ரை.) மின் அம் அருகொடி-மின்னலும் அழகிய அருமையான பூங்கொடியும் போன்ற. முன்னம் அரும்பு எடுத்து-முன்பு மலராகிய அம்பை எடுத்து, மருங்கு ஒடிய-இடை முறியும் படி. தன் அமரும் - தனக்குரிய போர்த் தொழிலையும் அன்னம் அருந்து என்னினும் - சோற்றை உண் என்று சொன்னாலும். ஈது என்ன மருந்து என்ன-நீங்கள் தருகின்ற இது என்ன மருந்து என்று வினவி. சொன்னம் அரும் தமிழ்ப் புலவர்க்கு உதவும்-அருமையான தமிழ்ப் புலவர்கட்குத் தங்கத்தைத் தருகின்ற. (௧௩)

[தலைவிக்குத் தாயுரைத்தல்]

894. குருவடியை வணங்கும்வெங்க டேசுரெட்ட
வேந்திரன்முன் கூசா மற்போய்
இருவடிவெல் லாம்பாரு வினையைமீட்
டனுராக மிசைத்த வேகந்
தருவடிதேன் ளமுதநவ ரசமொழுகும்
படிபடிசவ் வாது பூசி
மருவடிபெண் ணேயினிமேல் மகராசி
யாய்ச்சுகித்து வாழ்கு வாயே.

(அ - ரை.) வடிவு எல்லாம் பாரு-அவனுடைய திருமேனி முழுவதையும் நோக்கு. அநேகம் தரு - பல சுருதிகளை ஒழுகும் படி. தரு படி எனக் கூட்டுக. (௧௪)

[நற்றாயிரங்கல்]

895. கன்னியுன்றன் மேற்பிரிய மையாமற்
றேரையிவள் கண்டான் மூன்று
மன்னர்தனி லேயொருவன் பெயரையடிக்
கடிவழுத்து வாள வத்தைத்
தென்னவன்றன் மாலையென்றாள் மதியையதிற்
கடையெழுத்தாய்த் தீர்த்தா ளைய
நன்னயகு ணகரகு மாரவெட்ட
ராசேந்த்ர நளின மாலே.

(அ - ரை.) ஒருவன் பெயரை அடிக்கடி வழுத்துவாள்-ஒருவன் பெயராகிய சேரன் என்பவனைக் கூறுவாள். அனத்தைத்

தென்னவன்றன் மாலை யென்ருள்-சோற்றைத் கண்டால் பாண்டியன் வேப்பமாலை போலக் கசக்கின்ற தென்பாள். மதியை அதிற் கடை எழுத்தாய்த் தீர்த்தாள் - சந்திரனை அச் சொல்லின் கடையெழுத்தாகிய தியெனவே கருதி நீக்கினள். தீ என்பது திளென நின்றது. (கரு)

[தலைவி கூற்று]

896\. மெலக்கணைக்காப் பொருந்துவோம் எளவேளை மனங்குறிக்கும்
வேளை பார்த்து
நிலக்கணைக்கா மன்னம்பு குந்துகுந்தாப் பாயவென்மேல்
நிரைத்தா னென்னிச்
சொலக்கணைக்கா வழக்காநா னறிந்தவளா தெரிந்தவளா
துயர மெல்லாம்
இலக்கணைக்கா ரிகைதேர்ந்த குமாரவெட்ட பூபதிபால்
இயம்பு வாயே.

(அ - ரை.) மெல-மெள்ள, கணக்கா-முறையாக. வேளை - விருப்பத்தை. நிலக்கன்-இப் பூமியின் மேல் வந்து. குந்து குந்தாப்பாய வென்மேல் நிறைத்தான்-குவியல் குவியலாகப் பாயும்படி என் மீது வரிசையாகச் செலுத்தினன். சொல-சொல்வதற்கு. இலக்கணக் காரிகை தெரிந்த-இலக்கண நூலாராய்ந்து தேர்ச்சி பெற்ற. (கசு)

897\. அரைத்தசந்த னம்பொருந்தா ளமளியின்மேற்
கண்டுயிலாள் அரக்கன் மௌலி
நிரைத்தசந்த னம்பாலே துடைத்தமரு தப்பன்வர
நினையாள் அன்னே
இரைத்தசந்த னம்பசலைக் காற்றுமென்று
ளேபரவை யிடத்தி லேசென்
றுரைத்தசந்த னம்பாருக் குள்ளிலையோ
திவாகரனு ரொளிக்கின் ருரே.

(அ - ரை.) இரைத்த சந்தன் அம்பு அசலைக்கு ஆற்றும் என்ருள்-ஒலித்துக் கொண்டு வருகிற மன்மதனுடைய பாணமலையைத் தாங்குவள் என்ருள்.

பரவை யிடத்திலே சென்று உரைத்த-கடலினிடம்போய்த் தூது சொன்ன. சந்து அனம்-தூதனாகிய அன்னமானது. திவாகரனார்-பகலவன். (௧௭)

[பாங்கி கூற்று]

898. அரமியஞ்சேர்ந் திளவாரைக் குருந்தைவிரித் ததிற்கிடந்த
வதுவுஞ் சூடா
கரமியங்கொள் ளாதெழுந்து தரையில்விழுந் தாளதனைக்
கண்டு தாய்மார்
சரமியங்கு தோவிலையோ வெனமூக்கிற் கையைவைத்தார்
சத்ய வாய்மைத்
திரமியங்குங் கிளுவைமரு தப்பனுக்குச் செய்திசொல்லித்
தெரிவிப் பிரே.

(அ - ரை.) அரமியம்-நிலா முற்றம். ரமியங் கொள்ளா தெழுந்து தரையில் விழுந்தாள்-சுகப்படாமல் கிளம்பி வெறு நிலத்திலே விழுந்தாள். சரமியங்குதோ-சுவாசம் இருக்கின்றதா. (௧௮)

[தலைவி கூற்று]

899. திருந்தலரி கலையடக்குங் கிளுவைமரு
தப்பசெய சிங்க மென்னைப்
பொருந்தலரி தாயிருந்தால் பூந்தானஞ்
செய்யானோ போர்வே லையா
வருந்தலரி குளையலரி மாவலரி
பூவலரி மாதர் கீழ்பால்
இருந்தலரி வாராமுன் விரவிதனின்
மதியம்வந்தா லென்செய் வாளே.

(அ - ரை.) திருந்தலர் இகலை அடக்கும்-பகைவர் முரண் பாட்டை ஒழிக்கும். போர்வேள் பூ தான் அஞ்சு எய்யானோ - சண்டையிடும் மன்மதன் மலராகிய ஐந்து அம்புகளையும் எய்ய மாட்டானோ (எய்வான்). வருந்தலர் இகுளை-தோழியர் துன்பப் பட மாட்டார்கள். அலர் மாவலர்-பழி தூற்றுகின்ற வல்லமை யுடையவர்கள். (௧௯)

[நற்றாயிரங்கல்]

900. செருத்தாக்கு மதப்புலியே திருமலைவே
லப்பாநின் செவ்வா யூறல்
அருத்தாக்கு மரிக்கமுதங் கசப்பாகு
மணைவேண்டா ளையோ வாழைக்
குருத்தாக்கு மதைவிரித்துக் கிடத்தினுஞ்சு
டெனவெழுந்து கொள்வாள் காமக்
கருத்தாக்கு முதநாதன் கங்குல்வரக்
கண்டுமுனைக் கண்டி லாளே.

(அ - ரை.) குமுத நாதன் கங்குல் வரக் கண்டும் - செவ்வல்லி மலர்க்குத் தலைவனாகிய திங்கள் தோன்றுவதைப் பார்த்தும். செருதாக்கும்-போரிற் பகைவரைத் தாக்குகின்ற அருத்தா குமரிக்கு - ஊட்டாத இளமைப் பெண்ணுக்கு. குருத்து ஆக்கும் அதை-குருத்தாகிய அதனை. ஆகும் என்பது ஆக்கும் என விரிந்தது. (௨0)

[தலைவி பாங்கியிடம் இரங்கல்]

901. திருகலகு வாய்ப்பறந்து சிறகொடுக்கி
யிருந்துகடற் சேலை வாரிக்
குருகலகு வளையொதுக்குங் கூடலில்வாழ்
திருமலைவேல் கொலுவில் நீபோய்
இருகலகு தலைமொழியா ளித்தனைமா
லானுளேன் றிசைத்தே யன்னம்
பருகலகு வளைத்தாரை யாகிலுங்கேட்
டாளெனச்சோ பனஞ்சொல் மானே.

(அ - ரை.) குருகு - நாரைகள், திருகலகுவாய் பறந்து சிறகு ஒடுக்கி யிருந்து சுழன்று எளிதாக மேலே பறந்து சிறகுகளை ஒடுக்கிப் பதுங்கியிருந்து. கடற் சேலை வாரி-கடலிலுள்ள சேல்மீன்களை வாரிக் கொண்டு, அலகு வளை ஒதுக்கும்-மூக்கினாலே சங்குகளை யொதுக்கி விடுகின்ற (வளம் பொருந்திய கூடல்) இரு-அமர்ந்திரு. கல-கலந்து பேசு. அன்னம் பருகு - சோற்றை யுண். சோபனம்-தாது நன்மை. (௨௧)

[தலைவி வண்டு விடுதூது]

902. பொருவதற்குச் சிலைக்காமன் வருமுனமே
மதுரையிற்போய்ப் பொறிவண் டீர்காள்
செருவதற்குப் புகழ்விசயன் திருமலை
நரேந்த்ரன்வரச் செய்வி ரிங்கு
வருவதற்குத் தாமதித்தால் மாலையொன்று
கேளும்அந்த மாலை தானும்
தருவதற்கு மதியானேல் மையலையா
யினுந்திரும்பத் தரச்செய் வீரே.

(அ - ரை.) பொறி-புள்ளி, பொருவதற்கு-சண்டையிடுவதற்கு. செருஅதற்கு-போர் ஆகிய அதற்கு. மையலையாயினும் - காமமயக்கத்தையாவது. (உஉ)

[தலைவி தோழியோடு இரங்கல்]

903. தெந்தனம்பே சுங்கொழுநர் மயல்கொள்ளுஞ்
சேல்விழியிர் திரண்ட மேரு
பந்தனம்போற் றனமுடையிர் இன்சொலுரை
யானுரைக்கும் படிநீர் கேண்மின்
எந்தனஞ்சே ராதவெங்க டேசுரெட்டன்
தனையழைக்க எழுந்து போன
சந்தனஞ்சும் மாவந்தாற் பூசலா
மெனக்குமதன் தனக்குந் தானே.

(அ - ரை.) தெந்தனம் பேசுங் கொழுநர்-வேடிக்கை பேசுகின்ற கணவர்கள். மேரு பந்தனம் போல் தனம்-இமய மலையைக் கட்டி வைத்தது போன்ற கொங்கை. சந்தனம் சும்மா வந்தால் - தூது அன்னம் அவரை அழையாமல் வந்தால். பூசலாம் எனக்கும் மதன் தனக்கும் தானே-எனக்கும் மன்மதனுக்கும் சண்டை உண்டாகும். சந்தனம் பூசலாம் என்ற சொன்னயம் காண்க. சந்தனம் என்னும் மணப்பொருள் விலையின்றிக் கிடைத்தால் மகிழ்ச்சியோடு பூசிக்கொள்ளலாம் என்னும் பொருளும் தொனிக்கின்றது. (உ௩)

[நற்றாய் இரங்கல்]

904. விருத்தப்பா கலித்துறையும் வெண்பாவுங் கொச்சக
மும் விரிவாய்ச் சொல்லக்
காத்தப்பா வெனதுமகள் காமனர விந்தமலர்க்
கணையா னெஞ்சில்
இருத்தப்பா லனம்வெறுத்தா ளெனையுமவள் சகிதனையு
மேசு ருள்நீ
வருத்தப்பாத் திரமலவே யணைந்திடுவாய் திருமலைவேல்
வரிசை மாலே.

(அ - ரை.) அரவிந்த மலர்க்கணையால்-தாமரைப் பூவாகிய அம்பைக் கொண்டு. நீ வருத்தப் பாத்திரமலவே-நீ அவளைத் துன்புறுத்தக் கூடியவனல்லன். பாலனம் வெறுத்தாள் - பாற் சோற்றை வெறுத்தாள். சகிதனையும் ஏசுருகிள்-தோழியையும் இகழ்ந்துரைக்கிருள். (உச)

[நற்றாய் இரங்கல்]

905. இக்கோடி வளைப்பனென விருகோடி யிளம்பிறைக்கிற்
றெழுந்து வானில்
முக்கோடி வளைப்பமதன் நாற்கோடி கணைதொடுத்தால்
முன்விற்பாளோ
கொக்கோடி யிரையெடுக்கும் இளசைநகர் செழிக்க
வரும் குமண எட்டுத்
திக்கோடிப் புகழ்படர்ந்த வடமலையா கடமலைமுன்
சென்ற மாலே.

(அ - ரை.) கடமலை முன் சென்ற மாலே-மதமலையாகிய (முதலையால் பிடிபட்ட) யானையைக் காப்பதற்கு முன்னே எழுந்தருளிய திருமாலின் கூருனவனே, இக்கு ஓடி வளைப்பனென - கரும்பை விரைந்து வந்து வில்லாக வளைப்பேனென்று வளைத்து. மதன் நாற்கோடி கணை தொடுத்தான்-மன்மதன் நாலுகோடி அம்புகளைச் செலுத்தினன். கொக்கு+ஓடி. குமணு-குமணனைப் போன்று வள்ளலாக விளங்குகிறவனே! (உரு)

[தலைமகள் கூற்று]

906. இப்பளப்பா றையிற்படுக்கச் சொல்லுகிறீர் செடிமறை
வோ வில்லைச் சூழ
உப்பளப்பா றையுமாச்சு கனைவனே வெகுகோபி
உம்மைக் கண்டால்
கோப்பளப்பார்க் கினும்பார்ப்பன் பேனைப்பார்க்கினும்
பார்ப்பன் குணமி லாத
தப்பளப்பா விருக்குதையா கினுவைமரு தப்பமன்னு
தமிழ்க்கோ மானே.

(அ - ரை.) இப்பளப் பாறையிற் படுக்கச் சொல்லுகிறீர் - இந்தப் பள்ளமான கல் நிலத்தில் படுக்கும்படி கட்டளை இடுகிறீர். உப்பளப் பாறையுமாச்சு- உப்பளத்திடல்களே சுற்றிலும் இருக்கின்றன. உம்மைக் கண்டால் கொப்பு அளப்பார்க்கிலும் பார்ப்பன்-உம்மைப் பார்த்தால் கிளையோடு தொலைத்தலாகிய கொலை செய்ய எண்ணினும் எண்ணுவான். பேனைப் பார்க்கினும் பார்ப்பன்-பேன் பார்ப்பதுபோல எளிதாக எண்ணினும் எண்ணுவன். (உசு)

[தலைவி யிரங்கல்]

907. நேற்றிருந்த நிலவுமந்நேரமென் னினைவிருந்த நினைப்பு
மிளந்தென்றற்
காற்றிருந்த சுகமுமுன் னுனையென் கருத்திருந்ததும்
யாதென்று சொல்லுவேன்
சேற்றிருந்தசெந் தாமரைப் பூவின்மேற் றிருவிருந்தது
போலச்சிம் மாசனம்
வீற்றிருந்த துரையே திருமலை வேலுராச விவேககு
லேசனே.

(அ - ரை.) சேற்று இருந்த செந்தாமரை - சேற்றிலே முளைத்திருக்கும் சிவந்த தாமரைப் பூ. திரு - திருமகள், சிம்மாசனம் - அரியணை. விவேக குலேசன் - அறிவுடைய குல முதல்வன். (உஎ)

[பாங்கியிரங்கல்]

908. உன்னக் காவடிப் பூப்பறி யாள்நதி யும்பு காள்வடி
பாலை யருந்தென
என்னக் காவடி வேண்டாமென் றேதினு லேதுக் காவடி
யங்காமற் சேருவாய்
அன்னக் காவடி யாற்கழு காசலத் தாதிக் காவடி
மைத்திறம் பூண்டுக
வின்னக் காவடி வேலாவென் னுஞ்செக வீர ராமகு
மாரவெட் டேந்த்ரனே.

(அ - ரை.) கவின்ன-அழகாக. வடிவேலாகா என்னும்-கூரிய வேலா காப்பாய் என்று துதிக்கின்ற. உன் அகா அடி-சிறப்பாக நினைத்தற்குரிய அந்த நந்தவனத்தின். என்அக்கா-என்அக்காளே. அடி-ஏடி. ஏதுக்கு ஆவள் தியங் காமல்-என்ன பயன் பெறுவாள். அவள் வருந்தாமல். (உஅ)

[நற்றாயிரங்கல்]

909. ஆரிச் சந்த நயம்படிப் பார்மத னுலச் சந்தனக்
குண்டாகி யேபினும்
தேரிச் சந்தன மேசொலு வாயெனச் செப்பிச் சந்தனங்
கைதனைச் சேருவாய்
பூரிச் சந்தனம் விம்மிய மாதரைப் புலப்பச் சந்தன
தாக உளத்தில்லை
வேரிச் சந்தன மார்பகத் தாய்செய வீர ராமகு
மாரவெட் டேந்த்ரனே.

(அ - ரை.) ஆர் இச்சந்த நயம் படிப்பார், (இவளைப் போல) யார் இந்தச் சந்தப் பாடலைப் படிப்பவர் இருக்கின்றார், (ஒருவரும் இலர்.) சந்து அனமே சொலுவாய் எனச் செப்பு இ சந்தநங் கைதனை-அன்னமே தூது சொல்வாயென்று கூறிய இந்த அழகிய நங்கையை. பூரிச்சு அம் தனம் விம்மிய-அழகிய கொங்கை பருத்து உயர்ந்த. புல பச்சம் தனது ஆக-புல்லுவதற்கு அன்பு தன்னுடையதாக (உளத்தில்லை) வேரிச்சந்தனம்-மணம் பொருந்திய சந்தனம் பூசிய. (உக)

[செவிலி கூற்று]

910. செல்லுக்கு மல்லுக்கு நேரோதி மங்கலச் சித்தசவேள்
வல்லுக் கிணையில்லை வல்லிக் கிணைகந்த மாதனஞ்சொல்
முல்லைக்கு மானுக்கு மாந்த ளிருக்குமிம் மூன்றினுக்கும்
பல்லக்கு மேல்வரு மன்னு வெங் கடேந்திர பாண்டியனே.

(அ - ரை.) செல்லுக்கும் அல்லுக்கும் நேர் ஓதி-மேகத்திற்கும் இருளுக்கும் ஒப்பான கூந்தலையுடையாள். சித்தச வேள் வல்லிக்கு இணையில்லை - மன்மதனுடைய மனைவியாகிய இரதி போன்ற இவளுக்கு ஒப்பு ஒருவரும் இலர். வல் இக்கு இணை கந்தம்மா தனம் சொல் - சூதாடு கருவியும் கரும்பும் ஒப்பாகும் (இவளுடைய) மணம் பொருந்திய பெரிய கொங்கைக்கும் சொல்லுக்கும். முல்லை, மான் மாந்தளிர் ஆகிய இம் மூன்று பொருள்களும் ; பல் அக்கு மேல், (இவளுடைய) பற்களுக்கும் கண்களுக்கும் மேனிக்கும் இணையாம் என்க. அக்கு-கண். மேல் - மேனி. வல்லிக்கிணை யில்லை வல்லிக்கிணை. கந்தமா தனம், பல்லக்கு மேல்வரும் என்பவை சொற் சூழ்ச்சியாக அமைக்கப்பட்டிருத்தல் காண்க. (௯௦)

[செவிலி யிரங்கல்]

911. புத்தியின்பேர்க் குள்ளாய்வேள் பொற்கொடிக்கு முன்புவந்து
சத்தியப்பேர் மீது சரந்தொடுத்தான்—நித்தம்
குருபதம்ப ராவுமனு கூலாபோன் மாது
மருவும்வெங்க டேசுரெட்ட மா.

(அ - ரை.) புத்தியின் **பேர்**க்குள்ளாய்-மதிக்குடைக்குக் கீழ் நின்று, சத்தியப் பேர்மீது சரந் தொடுத்தான் - அவள் மெய்மீது அம்பு செலுத்தினன். சத்தியம் - மெய். (௯௧)

[தலைவி யிரங்கல்]

912. அத்திதனை யூர்ப்பசுப்பே ராக்கிச் சினந்தடித்துச்
சித்தசனென் மேற்சமரஞ் செய்தானே—முத்தமிழ்க்கெந்
நாளும் பசுங்கனக நல்கிமுதல் வள்ளலென
வாழும் வெங்க டேசுரெட்ட மா.

(அ - ரை.) அத்திதனை - கடலை. ஊர்ப்பசுப் பேராக்கி - நகர் ஆ-நகரா, (முரசு) ஆகச் செய்து, சினந்து அடித்து - சினம் மிகுந்து முழக்கி. என்மேற் சமரஞ் செய்தானே - என்மீது போர் தொடுத்தான். (௩௨)

[செவிலி யிரங்கல்]

913. தன்னமுத பாடிதவித் தாரன்வெங்க டேசுரெட்ட
புன்னியவான் வந்து புணராநாள்—உன்னமுது
மாமனத்தை யேகுமட்ட வம்புவிட்டாள் பால்கொடுக்க
விமனத்தை பேரெடுத்தாள் மின்.

(அ - ரை.) உன் அமுது மாமனத்தையே குமட்ட - உட் கொள்ளும் அன்னமானது பெரிய நெஞ்சைப் புரட்டுதலால், வம்பு விட்டாள்-கச்சுவிட்டாள். கைத்து விட்டாள்-வெறுத்து விட்டாள், வீமன் அத்தைபேர் எடுத்தாள் - பூவிலிருக்கும் நான் முகன் அத்தையின் பேர்; சத்தி எடுத்தாள் - சத்தி எடுத்தல் வாந்தி எடுத்தல். பால் ஊட்ட அதனையும் கக்கினாள் எனக் காதலின் மிகுதி கூறியது இது. (௩௩)

[நற்றாயிரங்கல்]

914. தண்டமிழ்தே ருத்தமத யாளுவெங்க டேசுரெட்ட
மண்டலிகன் கூடி மருவாநாள்—சென்டு
முலைமானுட் கின்னமுது முன்கொடுக்க ஆட்டுத்
தலையானாள் மால்மயக்கத் தால்.

(அ - ரை.) ஆட்டுத்தலையானாள்-ஆடுகின்றதலை (வேண்டா மென்று அசைக்கின்ற தலையை) உடையவளானாள். (௩௪)

[இதுவுமது]

915. தெள்ளுதமி ழுக்கருள்தி யாகிவெங்க டேசுரெட்ட
வள்ளன்மேல் ஆசைகொண்ட மானுள்மேல்—துள்ளும்
கயவாளி வேட்குவரி கைமுரசா னல்பங்
கயவாளி யேவானே காண்.

(அ - ரை.) துள்ளுங் கயவாளி வேட்கு - துள்ளி விளையாடும் அற்பக் குணவானான மன்மதனுக்கு, உவரிகை முரசானல் -

(பெரிய) கடல் கைக்கொட்டு முரசம் ஆகுமானல். பங்கயவாளி-(செருக்கினுல்) தாமரை மலர்க் கணையை, ஏவானே-செலுத்த மாட்டானே (செலுத்துவன்). (௩௫)

916. கொங்கை கும்ப கோணமா கூந்தலுமோ கூடலா
தங்கும்விழி அம்பா சமுத்திரமா—பைங்கனக
மேருவெங்க டேசுரெட்ட மேந்த்ரா யிவள்சசிபுற்
ருருடையா ரூரிடைய தாம்.

(அ - ரை.) இவள் சசி - இவள் இந்திராணி போல்வாள், இடையது புல்தார் உடையான் ஊர் ஆம் - இடையானது பனை மாலையணிந்த சேரன் பதியாகிய வஞ்சியாம். (வஞ்சிக்கொடி போன்றது) கும்பகோணமா - குடத்தின் வட்டமானது. கூந்தலுமோ கூடலா - குழலானது சேர்ந்த இருளா? (கூடு+அல் - கூடல்) தங்கும் விழி அம்பா சமுத்திரமா-முகத்திற் பொருந்திய கண்ணுனது அம்புதானு? கடலா? என்று ஐயுறத்தக்கன. (௩௬)

[நற்ருயிரங்கல்]

917. பூத்தூக்கி உண்டவனைப் போந்தேறிக் கொண்டவனே
மாத்தூக்கி யைத்தூக்கி வந்தானே—நேர்த்திதரும்
பொன்னு பரனு புயசயிலா தென்விளசை
மன்னு குமாரவெட்ட மா.

(அ - ரை.) பூத்தூக்கி-நிலத்தைத் தூக்குபவனுகிய பாம்பு, உண்டவனே - உண்ணுங் காற்ருகிய தென்றலே, போந்தேறிக் கொண்டவன்-போய் ஊர்தியாகக் கொண்ட காமன். மாத்தூக்கி-திருமகளைச் சுமப்பதாகிய தாமரைப் பூவை. தூக்கி - எடுத்துக் கொண்டு. தாமரைப்பூ, மன்மதனுக்கு அம்பு ஆதலால் போர் செய்ய வந்தான் எனக் காண்க. (௩௭)

எக. நாகூர் முத்துப்புலவர்

[இவர் சோழ நாட்டில் நாகூரில் பிறந்தவர். எட்டைய புரத்தில் புலவராக இருந்தவர். இவரும் கடிகைமுத்துப் புலவரும் ஒரு காலத்தினர். தனி நூல்கள் இவரால் செய்யப் பட்டதாகத் தெரியவில்லை. இவருடைய புலமைத்திறம் மிகுந்த சிறப்புடையது.]

[தலைவி கூற்று]

918. வருது கட்டுமுட் டெல்லாங் கடந்துபூ
வாளிவேள்கய வாழி முரசம்
திருது கட்டு வசன மலமலை தென்ற
லாங்கொடுந் தேரை நடாத்தியே
பொருது கட்டு வதனத்திற் சாடவே
பூத்தொ டுத்தனன் சந்திர காவிடால்
விருது கட்டு மதிபா இளசைவாழ்
வெங்க டேசுரெட் டேந்த்ரம கீபனே.

(அ - ரை.) சந்திரகாவி டால் விருது கட்டு மகிபா-சந்த்ர காவி நிறமுடைய ஒளி வீசும் கொடி கட்டிய பூபதியே! கட்டு முட்டெல்லாம் கடந்து பூவாளி வருது - எல்லாத்தடைகளையும் கடந்து மலரம்பானது வருகின்றது. வேள்கய ஆழி முரசம் அதிருது - ஆழமான கடலாகிய மன்மதனுடைய பேரிகையானது முழங்குகிறது. கட்டு வசனம் அல - பொய்யுரை யல்ல இது. கண் துவ தனத்தில் சாடவே-கண்களையுடைய இரண்டு கொங்கைகளிலும் பாயும்படி. (க)

[தோழி கூறல்]

919. தந்து கந்துகந்தாகந் தணிக்குநீர்த் தடம ருங்கு
தனமல்குற் றையலே
முந்து கந்துகந் தாகனைப் போழ்திலுன் மோகத்தூது
மொழிவனென் றேவந்தேன்
வந்து கந்துகந் தாகழு காசல வாச காவென
வாழ்த்துமுன் பாகட்டுங்
கந்து கந்துகந் தாகப் புரட்டுங்க டாசலா
வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) தந்து கந்துகம் தாகம் தணிக்கும் நீர்த்தடம் - நூல், பந்து, தாகத்தை நீக்கும் நீரையுடைய பொய்கை. மருங்கு தனம் அல்குல் - இடை கொங்கை, கடிதடம் முறையே உவமை கொள்க. முந்து கந்து உகந்து ஆ-முதலில் உன்பற்றுக் கோட்டினை விரும்பி. வந்து உகந்து கந்தா (கழுகு மலைக்கு) வந்து

விரும்பி முருகா! முன்பா - தலைவனே. கட்டும் சந்து கந்து கந்து ஆகப் புரட்டும் கடாசலா - கட்டியிருக்கும் தூணினைத் துண்டு துண்டாக ஒடித்துப் புரட்டிவிடும் பலமுடைய மதயானையுடைய வனே. (உ)

[தோழி தூது]

920. உபைய ராசியை யூரும் பிரான்வள ரோங்கல்
நேருந் தனத்தாள் உனைமகிழ்ந்
துபைய ராசிய மாய்க்கூட்டி வாவென்று சொல்லி
யென்னையுன் பால்விடுத் தாள்பொன்னூர்
சபைய ராசிற்சொ ரூபாவென் றிசரைத்தன்கை
யாற்றெழூந் துங்ககை விடணாற்
கபைய ராசி யருள்வல்ல வாபுக ழாக
ராவெங்க டேசுரெட் டேந்திரனே.

(அ - ரை.) பொன்னூர் சபையரா - பொன்னம் பலத்தில் நடனம் செய்கின்ற அரனே, புகழ் ஆகரா - கீர்த்திக்கு இருப்பிட மானவனே, உபையராசியை ஊரும் பிரான் - இரண்டாவது ராசி யாகிய இடபத்தை வாகனமாக உடைய சிவபெருமானது வளர் ஓங்கல் நேரும்-தங்கிய மலையை யொத்த. பையராசியமாய்-மெது வாக அந்தரங்கமாய். அபையராசியருள்-அஞ்சாதே என்று இணக் கம் தந்த. (ஙு)

[தார் வேண்டல்]

921. சங்க தாதர ளங்கால் கமுகதா தன்க முத்தினை
யென்றாட்குன் றாநின்று
துங்க தாதரத் தாமதஞ் செய்யிலத் தோகை தேகத்தை
மாரன் வருத்துவான்
அங்க தாதர நீதூது செல்லென்ற வாரி யாரண
விர்யப்ர தாபனே
வெங்க தாதர விமா செயதரா வெங்க டேசுர
வெட்டம பூபனே.

(அ - ரை.) சங்குஅதா - சங்கு தானாக? (அல்லது, தரளங் கால் கமுகு அதா முத்து சொரிகின்ற கமுகா? என்றாட்கு என்று

சொல்லத்தக்க அழகுடையவளுக்கு. துங்க - சிறந்தவனே. அங்கதா தரம் நீ தூது செல் என்ற ஆரியா - அங்கதனே நீயே தகுதியானவன் தூது செல்வாயாக என்று கூறிய இராமன் போன்றவனே. வெம்கதாதர வீமா-கொடிய தண்டாயுதம் தரித்த வீமன் போன்றவனே. (ஏ)

[செவிலி கூறல்]

922. பூவ லாரைமுத லானகற் பங்கள் புரிந்து நிட்டை
வசித்திருந் தாலுமென்
ஆவ லாரையும் விட்டு விடாதந்த அரிப்பிர மாதிகள்
ஆனலுந் தானென்ன
மாவ லாரை மலரதி னலெய்பின் மங்கை யுள்ளம்
மயங்கா திருக்குமா
மேவ லாரை யடக்கிச் செயம்பெற்ற விசய னேவெங்க
டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) பூவலாரை முதலான கற்பங்கள் புரிந்து - பூமியிலே விளையும் வல்லாரை முதலிய பூண்டுகளினலாகிய ஆயுள் நீடிக்கும் மருந்துகளைத் தயார் செய்தருந்தி. ஆவல் ஆரையும் - காமம்யாவரையும். மாஅலார் ஐ மலர் அதினல் - யானையாக இருளைக் கொண்ட காமனுர் ஐந்து பூவாகிய அம்பினல். (ஞ)

[தோழி தூது]

923. அந்த ராசல வன்பன்றி போற்பகை யார்ப்ப ரிக்க
வவர்க்கிசைந் தெய்துமின்
பந்த ராசல னேபயந் தாள்வெறுப் பாயு ரைக்கிற்
பலரென்சொல் வாருல
கந்த ராபல வாவூரின் வாய்மறைக் கவுலை மூடியுண்
டாகொண்ட காதல்தீர்
மந்த ராசல வாகா சயதரா வாச வாவெங்க
டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) அந்தர் ஆ - கீழ்மக்கள் ஆ. சல வன்பன்றி போல் பகை ஆர்ப்பரிக்க-வலிய முள்ளம் பன்றியைப் போல்

எதிரிகள் ஆரவாரஞ் செய்ய உலகம் தராசலவா-உலகம் துலாக்கோல் அல்லவா. பந்து அராசலனே-சுற்றத்தார் சிவனே! கோபமுடையவராயிருக்கின்றனர். பயந்தாள்-தாய். மந்தர அசல வாகா-மந்தரமலை போன்ற தோளுடையவனே. (சு)

[தலைவி யிரங்கல்]

924. முனச நங்கை முகன்கண் ணிருந்துற
முற்றும் வெந்தவன் வந்திகல் செய்யவே
தினச நங்கைக் குதுகஞ்சி தட்டுது
சேலை சோர்ந்திரு காலையும் பின்னவே
இனச நங்கை யதுகொட்டிக் கொட்டிவந்
தேச வேமயல் மீசுர மாகுது
வனச நங்கை மருவும் புயாசலா
வாசவா வெங்க டேசுரெட் டேந்திரனே.

(அ - ரை.) முன் அசன் அங்கு ஐமுகன் கண்ணிருந்து - முற்காலத்தில் ஆட்டை வாகனமாகவுடைய தீக்கடவுள் ஐந்து முகங்களையுடைய கடவுளுடைய நெற்றிக் கண்ணிலிருந்து. உற-புறப்பட. தின் அசனம் கைக்குது-தின்கின்ற சோறு கசப்பாயிருக்கின்றது. இனசனம்-சுற்றமாகிய மக்கள். வனசநங்கை-திருமகள்.

[செவிலி கூறல்]

925. படங்கு மாதங்க ரேக்காற் சமைத்திட்ட
பாரக் கொங்கைக் குறியுஞ் சமீபந்தான்
சடங்கு மாதங் கழிக்குமுன் னுமிது
சமயங் கட்டித் தழுவா விடிலவா
அடங்கு மாதங்கள் சித்தமென் பாக்கிய
மணைய வேண்டுமுன் னுள்ளமுல மென்னவே
தொடங்கு மாதங்க முன்வந்த மாதவா
துங்க னேவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) படங்கு மாதங்கரேக்கால் சமைத்திட்ட-மேலாடையானது உயர்ந்த தங்கத்தாளினால் ஆக்கப்பெற்ற. மாதங்கம்-யானை (கஜேந்திரன்). (அ)

[நற்றுயிரங்கல்]

926. பொருப்புக் குஞ்சரி யாகப் புடைத்தெழும்
பூண்மு லைக்கன்னி மீதேசமர் செய்யத்
துருப்புக் குஞ்சரி யேறிமெய் யெங்கனும்
துளைக்க மாரன் வளைக்க வவன்செங்கைக்
கருப்புக் குஞ்சரி சாமநி முற்றுந்திங்
கட்கு டைக்குங் கலங்குவ ளோமன
விருப்புக் குஞ்சரி காந்தற்கு வைத்தவா
விர னேவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) பொருப்புக்கும் சரியாக - நிகராக. மனவிருப்பு குஞ்சரி காந்தற்கு வைத்தவா - உள்ளப் பற்றினைத் தெய்வயானையின் மணவாளனாகிய முருகப் பிரானிடத்துச் செலுத்தியவனே. துருப்பு - படைகளுடன். குஞ்சு அரிஏறி - இளங்கிளியாகிய குதிரையின் மீதேறி. கருப்புக்கும் - கரும்பு வில்லுக்கும். சரிசாமம் - நள்ளிரவு. (கூ)

[செவிலிக் கூற்று]

927. அடிதங் கச்சி யிவளென்ன மோதெரி
யாதுசிந்தை யயரு கிருளிந்தா
பிடிதங் கச்சிவி கையிலி ருந்தநம்
பிள்ளை தான்கிளிப் பிள்ளையல் லோமயல்
கொடிதங் கச்சிப் பரிபோற்சென் றேவரக்
கூறென் றுளிகல் கொண்டோ ரமர்கண்டு
துடிதங் கச்சிமை யப்புயங் கொட்டுமுத்
துங்க னேவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) துடிதங்கச் சிமையப் புயங்கொட்டும் - துடிக்கின்ற பொன்மலை போன்ற தோள்களைத் தட்டிய. உத்துங்கனே - மேலோனே. அடி தங்கச்சி இவள் என்னமோ தெரியாது சிந்தை அயருகிருள் - ஏ தங்கையே இவள் யாது காரணத்தாலோ தெரியவில்லை மனந் தளர்ந்து சாய்கிருள். அங்கு அச்சி பரிமேல் சென்று வரக் கூறு என்றுள் - அங்கே காதலனை அச்சி நாட்டுக் குதிரைபோல் வரும்படி சொல்லுக என்றுள். (௧0)

[தலைவி யிரங்கல்]

928. அரக தத்தை மதன்சிந்தை தன்னில்வைத்
தம்ப ரத்தை யடித்தார்ப் பரித்துமே
துரக தத்தை நடத்தியப் பாலுமே
வதுத னத்தைத் துளைத்து விட்டான் கொண்ட
விரக தத்தை யெவர்தனிப் பார்மலர்
மெத்தை மீதினில் வைத்தனை வாய்ப்பணி
மரக தத்தை அணியும் புயாசலா
வாச வாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) அர-சிவனே. மதன் சிந்தை தன்னில் கதத்தை வைத்து எனக் கூட்டுக. அம்பரத்தை அடித்து-கடலாகிய முரசை அடித்து. கதம்-கோபம். விரக தத்து-காமமாகிய துன்பம். பணி - ஆபரணம். துரகதத்தை - குதிரையை. (கக)

[தாயிரங்கல்]

929. அனங்க னம்பனந் தந்தொட மெய்பசந்
தசந்து வாடுவ தல்லால் இடைக்கிரு
தனங்க னம்பனந் தார விருக்குநற்
றலத்தின் பேர்க்கொடி தாங்காது பெற்றதாய்
மனங்க னம்பனம் பின்போ மிகுத்தந்த
மாதர் சொல்லும் வசைக்கிலக் காகிய
மினங்க னம்பனஞ் சேர்சூத மாயினள்
வேங்க டேசுர வெட்ட நரேந்த்ரனே.

(அ - ரை.) அனங்கன் அம்பு அனந்தம் தொட-மன்மதன் பல பாணங்களைத் தொடுக்க. பனந்தாரான் இருக்கும் நற்றலத்தின் பேர்க்கொடி - பனம் பூமாலை யணிந்த சேரனது தலை நகரின் பேராகிய வஞ்சிக் கொடியாகிய இடை. மனம் கல் நம்பு மனங் கல்லாகும் (என் சொல்லை) நம்புவாய். அனம்பின்போம்-அன்னமும் (இவள் நடையழகு கண்டு) பின்றொடர்ந்து செல்லும். அந்த மாதா மிகுத்துச் சொல்லும் வசைக்கு எனக் கூட்டுக. இலக்கு ஆகிய அமின் அங்கனம்-குறிப்பாகிய அப்பெண் அவ்விடத்தில். பனம் சேர் சூதமாயினள்-இலைகள் செறிந்த மாமரம் போலாயினள். (பசலை நிறமானாள்). (கஉ)

[தாயிரங்கல்]

930. இரு தனங்கனிக் குச்சிலை போற்புடைத்
தெழுந்து விம்மி யிறுமாந் திடக்கயல்
விருத னங்கனிக் குச்சிலை வாங்கிமா
விசைகொண் டுடுரு விப்பாய வாளியாற்
பொருத னங்கனி வர்க்கமுண் ணுமல்மால்
பூண்டிருக் கச்செய் தான்றமிழ் வாணர்க்கு
வருத னங்கனி வாய்த்தரு மன்னவா
வாசு வாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) சிலைபோல் புடைத்து எழுந்து விம்மி இறுமாந்திட - மலைபோல் பருத்துக் கிளம்பி மேலோங்கி இறுமாப்புக் கொள்ள. கயல் விருது அனங்கன் - கயல் மீன் கொடியுடைய காமன். மாவிசைக் கொண்டு ஊடுருவிப்பாய - மிகுந்த விரைவோடு உட்புகுந்து செல்லும்படியாக. காமன் இக்குசிலை - கரும்பு வில். பொருது அனம் கனிவர்க்கம் உண்ணுமல் - போர் செய்து சோறும் பழங்களும் உண்ணுமல். மால்-மயக்கம் (காமம்). வருதனம் - வந்த பொருள்களை. (கரு)

[தலைவி கூற்று]

931. அரக ராசலங் கொண்டபுண் போன்முலை
யானை விம்ம அதிற்றென்றல் தாவவே
உரக ராசல வன்குளி ராதனல்
உருக்கி ருனந்த மாரற்கிம் மாதருந்
தரக ராபல ராசிய தாமயல்
தானே னைப்புண்ர் வாய்மூல மென்றதோத்
திரக ராசலங் காத்தசக் ரேசுரா
சீத ராவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) சலங் கொண்ட புண்தோல்-நீர் கோத்த சிரங்கு போல. உரகர் ஆசு வலவன்-பாம்புகளுக்கு அஞ்சுகின்ற திங்கள். மயல் தான் சலராசியதாம்-மோகந்தான் கடல் போலிருக்கிறது. மாதரும் தரகரா-பெண்கள் இடை நின்று பேசுவோரா. (ஏன் பழி கூறுகிருர்கள்.) (கசு

[செவிலி கூறல்]

932. மாம னுக்கு மகனுக வந்தகா
 மனுக்கும் பெற்று வளர்த்தவட் குங்கலைச்
சோம னுக்கு மினத்தார்க்கும் அஞ்சிமெய்
 சோர்ந்து வாடினள் சேர்ந்தனை வாயினித்
தாம னுக்கு மினிய குமாரரெட்ட
 தரும னுக்குங் குமாரமுத் தேந்திர
பூம னுக்குஞ் சகோதர னேதிட
 போசனே வெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) கலைச்சோமன்-கலைகளையுடைய திங்கள். இனத்தார் - உறவினர். தாமன் - தாமன் என்னும் பெயரையுடையவன். தருமன் - அறங்களைச் செய்பவன். மாமன் - திருமகளின் கணவனுகிய திருமால். (கரு)

[தாயிரங்கல்]

933. என்ன வாவிது ராசிய மாநடை யேலு மாமகள்
 காலொடு கான்மிகப்
பின்ன வாவிது ராவனல் தூவவா பிரம னிப்படிச்
 செய்தானென் னுர்கள்வாய்
கொன்ன வாவிது ராகதத் தென்றிசை குடிபு கக்கையிற்
 கோதண்டம் வாங்கிய
மன்ன வாவிது ராபுக ழாகரா வாச வாவெங்க
 டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) ஒன்னார்கள் வாய் கொன்ன ஆவிதுராகத தென்றிசை குடிபுக-பகைவர்கள் வாய்குழற உயிர்கள் துன்பந்தரும் தெற்குத் திக்கிலுள்ள உலகிற் போய்த் தங்கவும், புகழாகரா - புகழ்க்கிருப்பிடமானவனே. என் அவா இது ராசியமா-என்ன வேட்கையிது ரகசியமா-ஆ விது ரா அனல் தூவவா-ஆ திங்கள் இரவில் தியைச் சிதறவா. காலொடுகால் மிகப் பின்னவா தூவவா பிரமன் படைத்தான் எனக் கூட்டுக. ராசியம் - இரகசியம் என்பதன் திரிபு. (கசு)

[தாய்க் கூற்று]

934. சரந்த ராதரங் கண்டா மதன்விடுந் தானெனது
குழந்தை தனியேமால்
பரந்த ராதர ளக்கச் சிறுக்கும்பொற் பார்ப யோதர
பாரத்தைத் தாங்கவே
உரந்த ராதர வம்போற்று வள்மருங் கொசியு முள்ளமூர்
வசியா மனைந்திடாய்
புரந்த ராதர னிக்கதி பாசெய பூத ராவெங்க
டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) சரம்-அம்பு. தராதரம் - தகுதி தகுதியின்மை. தரளக் கச்சு இறுக்கும்-முத்துள்ள வாரினையழுத்தும். அரவம் போல் துவள் மருங்கு ஒசியும்-பாம்புபோல நுடங்குகின்ற இடையானது ஒடியத் தக்கதாக இருக்கின்றது. பரந்து-பரவி. அரா - சிவனே. பயோதரம்-தனம். உரம் தராது-வலிமை பொருந்தாது.

[செவிலி கூற்று]

935. பீலிக் குஞ்சர வங்களைக் கொத்திப்
பிடித்துத் தாக்கும் பெரும்பகை யின்றிக்கால்
ஆலிக் குஞ்சர பஞ்சிங்க மீதுசென்
றடிப்ப போல்வந் தடிக்குது தாயென்ற
நீலிக் குஞ்சர சப்பேச்சு மாச்சிவள்
நினைவுங் கானுங் கனவுமிங் கேயொரு
வாலிக் குஞ்சர மேவிய ராகவா
வாச வாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) பீலிக்குஞ்சு பெரும் பகையின்றி அரவங்களைக் கொத்திப் பிடித்துத் தாக்கும்-மயிற் குஞ்சுகள் மிகுந்த பகையில்லாமலே பாம்புகளைப் பிடித்துக் குத்திக் கொல்லும். ஆலிக்கும் சரபம் சிங்கமீது சென்று அடிப்பதுபோல் - ஆரவாரஞ் செய்கின்ற சிம்புள் பறவையானது சிங்கத்தின்மேற் பாய்ந்து அதைக் கொல்வதுபோல, தாயென்ற நீலிக்கும் சரசப் பேச்சு மாச்சு-அன்னையாகிய கொடியவளுக்கும் வேடிக்கைப் பேச்சுக் கிடமாயிற்று. கொல்லும் அதுபோலவும், அடிப்பதுபோலவும் கால் வந்து அடிக்குது எனக் கூட்டுக. கால்-தென்றற் காற்று.

[தோழி கூற்று]

936. அராவுக் கேகணை யேசெவி யென்பர
தல்ல பெற்றவ னுக்கே மின்னுரும்வம்
பராவுக் கேகணை யேகுழ லாக்கிய
பண்ணுக்கே நொந்த பெண்ணுக் கிரங்கியின்
றிராவுக் கேகணை மேற்சென் றிருந்துநல்
லின்பலீலை செய் தன்பாய் மருவுவாய்
மராவுக் கேகணை யேவிய ராகவா
வாச வாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) அராவுக்கே-பாம்புக்கே. கணையே-கண்ணையே. என்னைப் பெற்ற அன்னைக்கே கண் செவியாயுள்ளது. ஆவுக்கே கணையே குழலாக்கிய பண்ணுக்கே-பசுவின் பொருட்டு மூங்கிலி னாற் செய்த குழலினின்று வெளிப்பட்ட இசையைக் கேட்டு. மின்னுரும் வம்பர்-(அங்குள்ள) மங்கையரும் வம்பு பேசுவோர். மராவுக்கேகணை ஏவியராகவ - மராமரங்களின் மேல் அம்பு தொடுத்த இராமன் கூறுனவனே. இன்று இராவுக்கு ஏகு. அணைமேற் சென்றிருந்து எனப் பிரிக்க. (௧௯)

[நற்றுயிரங்கல்]

937. தடிக்க வில்லை முலைதிரண் டேமகள்
சமைய வில்லை மணந்தான் குமுகுமென்
றடிக்க வில்லை பொடிபுனு கத்தர்சேர்ந்
தனிய வில்லை அதற்குமுன் மாரன்போர்
முடிக்க வில்லை வளைத்தாற் குழந்தைதான்
மோகந் தாங்க முடியாதொன் னூர்துடி
துடிக்க வில்லை வளைக்கும கோரவுத்
துங்க னேவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) தடிக்கவில்லை - பெரிதாகவில்லை. சமையவில்லை (இவள்) - பருவமடையவில்லை. மாரன் - காமன். ஒன்னூர் துடி துடிக்க - பகைவர்கள் பதைபதைக்க அகோரஉத்துங்கன் - மிகுந்த ஆத்திரமுடைய மேலோன். (௨௦)

[செவிலி கூறல்]

938. மஞ்ச லக்கணங் கன்புற வேகட்டி
மருவு தற்குள வாவைத் திருக்குநாள்
அஞ்ச லக்கனை லார்க்கே தெரியுநின்
னுவ லோஅடங் காதிரங் காதவன்
நெஞ் சலக்கண பெற்றியின் வெண்ணெயாம்
நிலவில் வந்து கலவிசெய் வாயையா
பஞ்ச லக்கன முத்தமி ழாகர
பாடி தாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) மஞ்சு அலக்கு அணங்கு - அழகு திகழுகின்ற பெண்ணனவள். அலக்கண் நலார்க்கே தெரியும்-அதன் துன்பம் பெண்களே அறிவர். இரங்காத வல் நெஞ்சு அல - உருகாத வலிய மனம் அல்ல. கணம் பெற்றியில்-ஓர்கண நேரத்தில்(இவள்) மனம். (உக)

[தாயிரங்கல்]

939. சத்திக் கும்பணி லக்கையி னுன்பெற்ற
தனையன் போர்க்கு வினையமின் னுரைச்சு
மத்திக் கும்பணி யாம்நிறைத் துச்சர
மாரி பெய்யவென் மானுரை தானுரைக்
கத்திக் கும்பணி சோர்ந்ததுங் காண்கிலாள்
காதல் தீரஇப் போதனை வாயையா
எத்திக் கும்பணி வேந்தா மகாமண்ட
லேசு ராவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) சத்திக்கும் பணிலக் கையினன் பெற்ற தனையன்-முழங்குகின்ற பாஞ்ச சன்னியத்தைக் கையிலுடைய திருமாலின் மகனாகிய மன்மதன். போர்க்கு வினைய மின்னுரைச்சுமத்தி-சண்டைக்குச் சூழ்ச்சியுடைய பெண்களைப் பொறுப்புக் கட்டி, கும்பு அணியாய் நிரைத்து-கூட்டங் கூட்டமாக அணி வகுத்து. என் மான்-என்னுடைய மகள். உரைக்க நிக்கும்-சொல்வதற்கு வாய் குழறும். பணி - ஆபரணம். எத்திக்கும் பணி - எந்தத் திக்கிலும் உள்ளவர்கள் வணங்குகின்ற. (உஉ)

[செவிலி கூற்று]

940. தனது மெய்க்கு மலரணை யானது
தழலிறைக்குந் தனச்சுமை யாலிடை
மினது மெய்க்குந்துவளுமிம் மானந்த
மேனகைக்கும் வெகுமிச்ச நானுண்மை
சொனது மெய்க்கும ரன்பொற் பதாம்புயந்
தொழுந் தொழும்பன் குமாரெட்ட பாண்டியன்
மனது மெய்க்கு முயிர்த்துணை வாபுகழ்
வாச வாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) மெய்க்குமரன் பொற் பதாம்புயம் தொழும்பன்-உண்மை வடிவாகிய முருகக் கடவுளின் அழகிய திருவடித்தாமரைகளை வழிபடுகின்ற அடியான். மேனகைக்கும் வெகு மிச்சம் - தெய்வப் பெண்ணாகிய மேனகையைப் பார்க்கிலும் மிக உயர்ந்த அழகுடையவள். தனது மெய்க்கு - தன் உடம்புக்கு. இடைமின் அதுவும் எய்க்கும் துவளும் - இடையாகிய மின்னும் இளைக்கும் வளையும். (உ௩)

[நற்றாயிரங்கல்]

941. இட்டங் கட்டிய வாறேயல் லாதுவே
றில்லை சிந்தையி தெல்லாஞ் சுவாமிய
திட்டங் கட்டி யபரஞ்சி யாற்செய்த
சித்ர மஞ்சத்திற் சேர்வாய் தினஞ்சட்ட
வட்டங் கட்டியங் கக்குடிக் கின்றரா
வணை வென்றன்பு வைத்தவன் றம்பிக்குப்
பட்டங் கட்டிய ராமா நவரச
பாடி தாவெங்க டேசுரெட் டேந்த்ரனே.

(அ - ரை.) தினம் சட்ட வட்டம் கள் தியங்கக் குடிக்கின்ற-ஏற்பாடும் கூட்டமும் அமைத்துக்கொண்டு கள்ளினை வெறியுண்டாகும்படி அருந்துகின்ற. இட்டங் கட்டியவாறே அல்லாது வேறில்லை சிந்தை-விருப்பப்படியே அமைந்த வழியே அல்லாமல் மனம் வேறு வழியிற் செல்லவில்லை. அபரஞ்சிக் கட்டியாற் செய்த-உயர்ந்த தங்கக் கட்டியினாலாக்கப் பெற்ற. (உ௪)

எஉ. இராமச்சந்திரக் கவிராயர்

[இவர் சென்னை நகரில் இருந்தவர். நாடகப் புலமையிற் சிறந்தவர். சகுந்தலை விலாசம், பாரத விலாசம், தாருகா விலாசம், இரணிய வாசகப்பா, இரங்கூன் சண்டை நாடகம் முதலியன இயற்றியவர்.]

[ஈயாரிகழ்ச்சி]

942. வணக்கம்வரும் சிலநேரங் குமர கண்ட
வலிப்புவரும் சிலநேரம் வலியச் செய்யக்
கணக்குவரும் சிலநேரம் வேட்டை நாய்போற்
கடிக்கவரும் சிலநேரம் கயவர்க் கெல்லாம்
இணக்கம்வரும் படிதமிழைப் பாடிப் பாடி
எத்தனைநாள் திரிந்துதிரிந் துழல்வே னையா
குணக்கடலே அருட்கடலே அசுர ரான
குரைகடலை வென்றபரங் குன்று ளானே.

(அ - ரை.) வணக்கம் வரும் சில நேரம் - சில காலங்களில் வணங்கும் தன்மை யுண்டாகும். குமர கண்ட வலிப்பு வரும் சில நேரம்-சில காலங்களில் குமர கண்ட இழுப்பு நோயுண்டாகும். வலியச் செய்ய கணக்கு வரும் சில நேரம் - புலவர் இரந்து வேண்டாமலே தானே கொடுப்பதற்கு முறை தெரியும். கயவர்க்கு-கீழ்மக்களுக்கு. (க)

[அருணாசலராய வள்ளலைப் பாடியது நற்றாயிரங்கல்]

943. மாசற்றிடு திருமேனியின் மறுவுற்றது போல
மாரப்பயல் கணைதைத்திட வந்தெய்தன னையோ
காசத்தனை புண்ணுனது துட்டத்தனை யளவாய்க்
கையத்தனை யானுள்மகள் மெய்யெத்தனை நோமோ
வாசற்படி கடவாதவள் மனதெப்படி யானுள்
மதனன்சிலு கறியாதவள் மயலெப்படி யானுள்
ஆசைப்படு வாரோபுரு டரின்மேன் மடவார்கள்
அருணாசல ராயாதமிழ் அறியும்பெரு மானே.

(அ - ரை.) காசத்தனை புண்ணனது துட்டத்தனை யள வாய்க்கையத் தனையாளுள்-சிறிய நாணய அளவாயிருந்த புண்ணு னது பெரிய நாணய அளவாய் விரிந்து கையளவு மெலிந்த உருவமானுள்; மதனன் சிலுகு அறியாதவள் - காமன் போரினைத் தெரியாதவள். (உ)

[பெரியம்மை மீது பாடியது]

944. புல்லுக்கட்டும் விறகும் சுமந்தபேர்
பூர்வகாலத்துப் புண்ய வசத்தினுல்
நெல்லுக்கட்டும் பணக்கட்டுங் கண்டபின்
நீலக்கல்லிற் கடுக்கனும் போடுவார்
சொல்லுக்கட்டும் புலவரைக் கண்டக்கால்
தூறிப்பாய்ந்து கதவை யடைத்தெதிர்
மல்லுக்கட்டும் மடையரைப் பாடவோ
மலையச்சாரலில் வாழ்பெரி யம்மையே.

(அ - ரை.) சொல்லுக் கட்டும் புலவரைக் கண்டக்கால் - சொற்களாற் கவி புனையும் பாவலரைப் பார்த்தபோது, தூறிப் பாய்ந்து கதவையடைத்து - ஏசி யிகழ்ந்து சீறி வரவேண்டா மென்று தடுப்பதற்காக வீட்டுக் கதவைத் தாளிட்டு. (௩)

[பழனியாண்டவர் மீது பாடியது]

[நற்றுயிரங்கல்]

945. வெண்ணைக் கட்டியுஞ் சீனியும் ஊட்டலாம்
விக்கிக் கொள்வதற் கென்செய்ய லாமொரு
பெண்ணைக் கட்டிக் கொடுத்திட லாம்பிள்ளை
பெறுவதற்கும் உடன்படு வார்களோ
பண்ணைக் கட்டிய மென்மொழி யாளுந்தம்
படுக்கை வீட்டில்வந் தாளே யவள்தனைக்
கண்ணைக்கட்டி யணையாமல் ஏன்விட்டீர்
கழனி சூழும் பழனியில் வேலரே.

(அ - ரை.) கண்ணைக் கட்டி - கண்ணைக் கையால் மூடி. (௪)

[குருவப்ப பூபன் மீது பாடியது]

946. ஏதிலே வறியவர்க்கு மினியகவிப்
புலவருக்கு மிரங்கி யந்தப்
போதிலே தனங்கொடுக்குந் தஞ்சைநகர்க்
குருவப்ப பூப னெற்குக்
கோதிலே கிடந்துழலும் பலரிடத்திற்
சென்றுதமிழ் கூறு வண்ணம்
காதிலே யொட்டிட்டுத் தாடையில்மோ
தக்கடுக்கன் ருவிட் டானே.

(அ - ரை.) அந்தப் போதிலே தனங் கொடுக்கும் - வேண்டிய அவ்வப் பொழுதே பொருள் அளிக்கின்ற. கோதிலே கிடந்துழலும் - குற்றத்திலே தோய்ந்து திரிகின்ற. காதிலே ஒட்டிட்டு - செவியிலே இரகசியம் கூறி. தாடையில் மோத - கன்னத்தில் அடிக்கும்படி. (ரு)

[நாகைக் காரோணர் மீது பாடியது]

[நற்றாயிரங்கல்]

947. வம்பிறைக்கும் கடம்பிறைக்கும் பெரும்பிறைக்கு
நிகராகா வளர்ந்த வொற்றைக்
கொம்பிறைக்குந் தாதையராங் கடனாகைக்
காரோணர் கொன்றை நல்கார்
அம்பிறைக்கும் விழிப்பரவை யாயர்குழல்
கொல்லனுலை யனலிற் காய்ந்த
செம்பிறைக்கும் வெண்பிறைக்குங் கரும்பிறைக்கு
மொருத்திதனித் தென்செய் வாளே.

(அ - ரை.) வம்பு இறைக்கும் - மணங் கமழும். கடம்பு இறைக்கும் - கடப்பந் தாரணிந்த குமரப் பெருமானுக்கும். அம் பிறைக்கும் விழிப் பாவை - நீர் சிந்துகின்ற கண்ணையுடைய பெண். செம் பிறைக்கும் - செந்நீருகுக்கும். வெண் பிறைக்கும் - வெள்ளிய பிறைச் சந்திரனுக்கும். கரும் பிறைக்கும் - கரும்பு வில்லையுடைய மன்மதனுக்கும். (சு)

[திருமயிலை வேங்கடசாமியென்னும் வள்ளலின் மீது பாடியது]

948. மூங்கிலிலே யொளித்திருந்தான் முக்கண் சாமி
முதியகடற் போய்ப்படுத்தான் முகுந்த சாமி
தாங்கமலப் பொருட்டுறைந்தான் தலைநாற் சாமி
தடைவரையிலுமன்று நின்றான் தகப்பன் சாமி
வாங்கியுன்னை வழிகாத்தான் வயிற்றுச் சாமி
வாணருக்கிங் குதவுவரார் மற்றோர் சாமி
ஓங்கியசீர் மயிலையிற்பொன் னப்ப சாமி
உதவியவேங் கடசாமி உசித வேளே.

(அ - ரை.) முகுந்தசாமி முதிய கடல் போய்ப் படுத்தான்- விண்டுவாகிய கடவுள் பழைய திருப்பாற் கடலிற் போய்ப் பள்ளி கொண்டார். வாணருக்கு - தமிழ் கற்றவர்களுக்கு. உசிதவேளே- சிறந்த வள்ளலே. (எ)

[திருப்பரங்குன்றம் கற்பக விநாயகர் மீது பாடியது]

949. வஞ்சகத்தி லொன்றானைத் துதிக்கைமிகத்
திரண்டானை வணங்கா ருள்ளே
அஞ்சரணை மூன்றானை மறைமொழிநால்
வாயானை யத்த னுகித்
துஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னியணி
ஆறானைத் துகள்ஏ ழானைச்
செஞ்சொல்மறைக் கெட்டானைப் பரங்கிரிவாழ்
கற்பகத்தைச் சிந்தை செய்வாம்.

(அ - ரை.) வஞ்சகத்தில் ஒன்றானை - கள்ளமான உள்ளத்திற் சாராதவனை. அம் சரணம் - அழகிய திருவடியை. துஞ்சு அவுணர்க்கு அஞ்சானை - அழிகின்ற அசுரர்களுக்கு அஞ்சாதவனை. சென்னி அணி ஆறானை - தலையில் தரித்த நதியை யுடையவனை. துகள் எழானை - குற்றங்கள் தோன்றப் பெறாதவனை. ஒன்று முதல் எட்டு எண்கள் வெளிப்பட்டு நிற்பன காண்க. எட்டான் - எட்டாதவன். (அ)

[அருணாசலேசுவரர் மீது பாடிய தலைவியிரங்கல்]

[திரிபங்கி]

950. சலமேதோ சங்கந்தா பூணாரந் தாமே
கலைதாநற் புங்கவன்மால் காணுப்—புலவுடைய
சங்கரா கோணு கலாமதியக் கோடீர
சங்கரா சோணு சலா.

951. சங்கந்தா பூணாரந் தாமே கலைதாநற்
புங்கவன்மால் காணுப் புலவுடைய—சங்கரா
கோணு கலாமதியக் கோடீர சங்கரா
சோணு சலாசலமே தோ.

952. பூணாரந் தாமே கலைதாநற் புங்கவன்மால்
காணுப் புலவுடைய சங்கரா—கோணு
கலாமதியக் கோடீர சங்கரா சோணு
சலாசலமே தோசங்கந் தா.

(அ-ரை.) புலவுடைய கம்கரா - ஊன் வாசனையுடைய தலையைக் கபாலமாகக் கையிலுடையவனே. கோணு கலாமதியக் கோடீர - குறைந்து அழிவுபடாத ஒரு கலையுடைய திங்கள் வைக்கப் பெற்ற சடை முடி உடையவனே. சங்கரா - சுகங் கொடுப்பவனே. சலம் ஏதோ - நீ சினம் கொள்வது எதனாலோ. சங்கந்தா- வளையலை அளிப்பாயாக. பூணாரம்தா - அணிகின்ற மாலையை அளிப்பாயாக. மேகலைதா - ஆடையை அளிப்பாயாக. (௬)

[தில்லைக் கோவிந்தராசர் மீது பாடியது]

953. சீரிலங்கு மாடகூட
விதிவிறு தில்லையான்
திருவிருக்கு மார்பனெங்கள்
திருமலைக்கு முன்புபோய்
நீரிருந்து மாலைகேளும்
அவன்மறுத் துரைக்கிலென்
நெஞ்சுசொல்லும் வார்த்தையாக
நீங்கள்சொல்லும் வண்டுகாள்

வாரியொன்று பாயிரண்டு
மாலைமூன்று நாலுவேய்
மதியமைந்து கங்குலாறு
மாரனேழு வாடையெட்
டாரமொன்ப தன்றில்பத்
தடங்கலும் ஒறுக்குமால்
அத்தனைக்கெ லாம்இலக்கெ
னுவியொன்று காணுமே.

(அ - ரை.) நீர் இருந்து மாலை கேளும்-நீங்கள் காத்திருந்து அவனுடைய தாரினைக் கேளுங்கள். வாரி ஒன்று - கடலொன்று. பாய் இரண்டு-படுக்கை இரண்டு. மாலை மூன்று - அந்திப் பொழுது மூன்று. வேய் நாலு - புல்லாங்குழல் நான்கு. மதியம் ஐந்து - திங்கள் ஐந்து. கங்குல் ஆறு - இரவு ஆறு. மாரன் ஏழு - மன்மதன் ஏழு. வாடை எட்டு - வடக்கினின்று வரும் குளிர் காற்று எட்டு. ஆரம் ஒன்பது - முத்துமாலை ஒன்பது. அன்றில் பத்து - அன்றில் புள்ளொலி பத்து. இப் பத்தும் என்னை ஒறுக்கும் என்க. (௧0)

[திருவானைக்காவில் சிவபெருமான் பவனியைப் பாடியது]

954. ஓரானை வனத்தேதிரு வெண்ணாவ லிழற்கீழ்
உறையும்பெரு மான்விதி யுலாவும்பவ னிக்கே
நேராக நடப்பேன்வளை பறிபோவது கேட்பேன்
நில்லென்று தடுத்தால்வகை சொல்லென்று மறிப்பேன்
போரானையை விட்டான்முலை யிரானையை விடுவேன்
பொழியம்பு தொடுத்தாலிரு விழியம்பு தொடுப்பேன்
தோராவழக் கிட்டால்வகை வாராவழக் கிடுவேன்
தொல்லைக்கனை கொண்டேவகை வெல்லப் பெறுவேனே.

(அ - ரை.) ஓர் ஆனை வனத்தே - தனிச் சிறப்புடைய திரு வானைக்கா என்னும் பதியின் கண். திருவெண்ணாவல் நிழல் கீழ் - வெள்ளிய நாவல் மரத்தினடியில். போரானையை விட்டால் - என் னோடு சண்டையிடுதற்கு யானையை அனுப்பினால். தோரா வழக் கிட்டால் - தோற்றுப் போகாதபடி விவகாரம் பண்ணினால். வகை வாரா வழக்கிடுவேன் - ஒரு வகையிலும் முடிவுக்கு வாராத விவ காரத்தை நான் செய்வேன். (௧௧)

[திருவாரூர் பிட்சாடன மூர்த்தியைப் பாடியது]

955. அடல்கொண்டெழு சூலப்படை யாரூர்ப்பெரு மானூர்
ஐயம்பக ரென்றேயெம தகவாசலில் வந்தார்
கடுகும்படி சென்றேபலி கொண்டேயெதிர் நின்றேன்
கைவந்தன மென்றாரிது கைவந்தன மென்றேன்
மடவன்னம தென்றாரிது மடவன்னம தென்றேன்
வல்லோதன மென்றாரிது வல்லோதன மென்றேன்
கொடுவந்தன மென்றாரிது கொடுவந்தன மென்றேன்
கொள்ளார்பலி செல்லாரவர் கோட்பாடறி யேனே.

(அ-ரை.) ஐயம்பக ரென்றே எமது அக வாசலில் வந்தார் - பிச்சை போடு என்றே ஐந்து அம்புகளைத்தன்னிடத்திற் கொண்ட மன்மதன் என்று கூறும்படியே. எம்மில்லத்தில் வாசலுக்கு எழுந்தருளினார். கை வந்தனம் என்றார் - கையினால் வணக்கமென்றார். இது கை வந்த அனம் என்றேன்- இது கையிற் கொண்டு வந்த சோறு என்றேன். மட அன்னமது என்றார் - இளைய அன்னம்போன்ற பெண்ணே என்றார். இது மட அன்னமது என்றேன் - இது மடத்திற் சமைத்த சோறு என்றேன். வல்லோதனம் என்றார் - நின் முலையானது சூதாடு கருவியோ என்றார்: இது அல்லோதனம் என்றேன் - இது இராத்திரியிடும் பிச்சைச் சோறு என்றேன். கொடுவந்தனம் என்றார்-தாரும் உமக்கு வணக்கம் என்றார். இது கொடு வந்தனம் என்றேன் - இதோ கொண்டு வந்த சோறு என்று சொன்னேன். (கஉ)

[முறைமாறுகத் தோன்றப் பாடியது]

956. விமனுக்கு மைந்தனார் வேத னாகும்
வேதனுக்கு மைந்தனார் ஈச னாகும்
காமனுக்கு மைந்தனார் விமன் தம்பி
கந்தனுக்கு மாமனார் காமன் றானே
மாமனுக்கு முன்றமையன் தந்தை காலன்
வையகத்திலிம் முறைமை வழங்க லாலே
ராமனுக்குச் சீதைதங்கை யாக வேண்டும்
ராவணனுக் குத்தகப்பன் ராமன் றானே.

(உ - ரை.) வீமனுக்கு மைந்தனர் வேதனுகும் - பறவையாகிய கருடனுக்கு எசமானனுகிய விட்டுணுவின் மகன் அயனுவர், வேதனுக்கு மைந்தனர் ஈசனுகும் - மூங்கிலிற் பிறந்தவர் சிவபெருமானுவர், காமனுக்கு மைந்தனர் வீமன் தம்பி - கற்பகச் சோலையின் தலைவனுகிய இந்திரனுக்கு மகன் வீமன் தம்பியாகிய அர்ச்சுனன், கந்தனுக்கு மாமனுர் காமன் தானே - முருகப் பெருமானுக்கு மாமனுராயிருப்பவர் இந்திரனே, மாமனுக்கு - குதிரைத் தலைவனுகிய நகுலனுக்கு, முன் தமையன் - முற்பட்ட அண்ணனுகிய தருமருடைய, தந்தை காலன் - தகப்பன் எமனுவன். வையகத்தில் இம்முறைமை வழங்கலாலே - உலகத்தில் இம்முறைவைப்புப் பேசப் படுவதினுல், ராமனுக்கு - இராத்திரிக்குத் தலைவனுகிய சந்திரனுக்கு, சீதை தங்கையாக வேண்டும் - திருப்பாற் கடலில் உடன் பிறந்த இலக்குமியாகிய சீதை தங்கையாக இருத்தல் வேண்டும், இராவணனுக்குத் தகப்பன் ராமன் தானே - இரவினுடைய நிறத்தையுடைய மன்மதனுக்குத் தந்தை இராமனுய் வந்த திருமாலேயாவர். (௧௩)

[பாக்கு வெட்டி காணுது போனது பற்றிப் பாடியது]

957. விறகு தறிக்கக் கறிநறுக்க
வெண்சோற் றுப்புக் கடகுவைக்கப்
பிறகு பிளவு கிடைத்ததென்றல்
நாலா றுகப் பிளந்துகொள்ளப்
பறகு பறகென் றேசொறியப்
பதமா யிருந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப் போவதுண்டோ
எடுத்தீ ராயிற் கொடுப்பீரே.

(அ - ரை.) பறகு பறகென்றே சொறிய - உடம்பு தினவெடுத்தால் பறகு பறகு என்று ஓசை வரும்படி சொறிந்து கொள்ளவும். (௧௪)

[திருவேங்கட நாதன்மீது பாடிய வினுவுத்தரம்]

958. இரவல னேஉனக் கில்லாத
தென்ன இதயமென்ன
பரவுண வேது சுவையற்ற
தென்னசொற் பான்மையென்ன

தரவுரை செய்திட வென்றான்
அதற்கொன்றுஞ் சாற்றிலன்யான்
வரதிரு வேங்கட நாதாவென்
றேன்பொன் வழங்கினனே.

(அ - ரை.) இல்லாதது என்ன? உத்தரம் - இரு. இதயம் என்ன - உன் மனம் எப்படி யிருக்கிறது? (கொதிக்கிறதென்ற கருத்தில்) உத்தரம் வேம். பரவுணவு ஏது - உணவுக்கு வேறு வழியென்ன? உத்தரம் - கடன். சுவையற்றது என்ன - ருசி யற்றுப் போனது என்ன? உத்தரம் - நா. சொற்பான்மை யென்ன - நீ சொல்லக் கூடிய சொல் யாது? உத்தரம் - தா. திரு வேங்கட நாதா என்றேன். வர - மேன்மையுடையவனே! திரு வேங்கட நாதா என்று கூறினேன். வினக்கட்கெல்லாம் அவன் பெயரில் விடையமைந்திருப்பது காண்க. (சுரு)

[தன் குற்றங் கூறியது]

959. கல்லாத ஒருவனைநான் கற்ரு யென்றேன்
காடெறியு மறவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனைநான் வள்ள லென்றேன்
இல்லாத சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென்றன் குற்றத்தால் ஏகின் றேனே.

(அ - ரை.) சூம்பல் தோளை மல்ஆரும் புயன் என்றேன் - தேய்ந்து ஒடுங்கிப்போன புயமுடையவனை மல்யுத்தத்திற்குத் தக்க தோள்களையுடையவனே என்றேன். (சுசு)

[இடுக்கண்களெல்லாம் ஒருங்கு வருமெனப் பாடியது]

960. ஆவின மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாக
மாவிரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்

சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடுவென் ருரே.

(அ - ரை.) மா ஈரம் போகுது என்று விதை கொண்டு ஓட - நிலத்திலுள்ள ஈரம் காய்ந்துபோய் விடுகிறதென்று வித்தையெடுத்துக் கொண்டு விரைந்து செல்ல. (கஎ)

[வறுமையினுல் அயனை நிந்தித்துப் பாடியது]

961. கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானு
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித் தானு
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தா
னேவத்தா னையோ வெங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்ருன் பண்ணி னுனே.

(அ - ரை.) பதுமத் தான் - தாமரைப் பூவிலிருக்கும் நான்முகன். அல்லைத்தான் சொல்வித்தான் - படுந் துயரத்தைக் கூறி, தான் என்பன அசைகள். (கஅ)

962. வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பால் சேர்ந்தே னப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணுங் கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன்வில்லால் அடித்த புண்ணும்
பாரென்று காட்டிநின்ருன் பரமன் ருனே.

(அ - ரை.) வாசல்தொறும் முட்டுண்ட தலையில் புண்ணும் - ஒவ்வொரு வீட்டு வாசலிற் போய்த் தலைதட்டியதனுலேத்

பட்ட நோவும். செஞ்சொல்லை யினைந்துருகும் நெஞ்சில் புண்ணும்-செம்மையான நல்ல மொழிகள் அமைத்துப் பாடவேண்டும் என்று எண்ணுவதாலுண்டாகும் என் மன வருத்தமும். (௧௯)

[மழவரங்கனை இகழ்ந்தது]

963. கள்ளிக்கேன் முள்வேலி கழுதைக்கேன் கடிவாளங்
கறுப்பி லாத
உள்ளிக்கேன் பரிமளங்கள் உவர்நிலத்துக் கேன்விதைகள்
ஒடித்துப் போடுஞ்
சுள்ளிக்கேன் கோடாலி துடைப்பத்திற் கேன்கவசம்
சும்மா போகும்
பள்ளிக்கேன் அதிவீர மழவரங்க பூபனெனும்
பட்டந் தானே.

(அ - ரை.) கறுப்பிலாத உள்ளிக்கேன் பரிமளங்கள் - வெள்ளை உள்ளிக்குச் சுகந்த வாசனைப் பொருள்கள் ஏன் கலக்க வேண்டும். துடைப்பம் - விளக்குமாறு. கவசம் - சட்டை. (௨௦)

[ஆரோதன் மைந்தன்மீது பாடியது]

964. கயக்காவி நாறுங்கு ழம்பிற்ப்ர சண்டா
காரார்கொ டைச்செங்கை யாரோதன் மைந்தா
இயக்காநின் மார்பிற் செழும்புன்னை யந்தார்
இப்போது நீநல்கில் என்பேதை மார்பில்
சயக்காம வேளம்பு தையாது முத்துத்
தாமஞ்சு டாசந்த னம்பூசி னும்
செயக்காது வேயோ செவிக்கும் பொறுக்கும்
தீயென்ன மீளாது திங்கட் கொழுந்தே.

(அ - ரை.) கயக் காவி நாறும் குழம்பிற் பிரசண்டா - குளத்திற் பூக்கும் குவளைப் பூமாலையையும் வாசனை பொருந்திய சந்தனக் குழம்பையும் அணிந்த வீரனே, செயக் காது-துன்புறுத்தாது, முத்துத் தாமம் - முத்துமாலை. வேயோ செவிக்கும் பொறுக்கும் - புல்லாங்குழலோசையைக் காது கேட்கவுங் கூடும். (௨௧)

[சிவந்தானென்னும் வள்ளலின்மீது பாடியது]

965. சொன்னமன்ன மாடைதந்தான் வீதியில்வெற்
றிலைமடித்துச் சுருளுந் தந்தான்
கன்னவில்மோ திரந்தந்தான் சரப்பணிதந்
தான்இரட்டைக் கடுக்கன் தந்தான்
செந்நெல்விளை யூர்தந்தான் பேர்தந்தான்
மல்லையில்வாழ் சிவந்தான் உங்கட்
கென்னதந்தா னென்றவர்கட் கெத்தனையுந்
தரந்தந்தான் இயம்பத் தானே.

(அ-ரை.) சொன்னம் அன்னம் ஆடை தந்தான் - பொன் உணவு உடை யிவைகளைக் கொடுத்தான். என்ன தந்தான் என்று ஒருவர் வினவில் விடை பல மொழிகளிற் கூறும்படி கொடுத்தான் என்க. (உஉ)

[சீதா ராமனென்னும் வள்ளலைப் பாடியது]

[நடுவெழுத்தலங்காரம்]

966. அத்திரம்வே லாவலயம் இராசி யொன்றிற்
கமைந்தபெயர் மூன்றினிடை யக்க ரத்தால்
மெத்தநடுக் குற்றவைந் தடைந்தே வீந்த
விதனமகற் றிடுமற்றை எழுத்தோ ராறில்
பத்துடையா னைத்தடிந்து பெண்ணுய்ச் செய்து
பரிவினுகர் வோனிருதாள் பணிந்து போற்றும்
சித்தசனே தெளியசிங்கன் தவத்திற் றேன்றும்
சீதாரா மப்ரபல தியாக வானே.

(அ-ரை.) அத்திரம் வேலா வலயம் இராசி யொன்றிற்கு அமைந்த பெயர் மூன்று - ககம் கடல், கன்னி, இந்த மூன்று சொற்களில், நடுவில் உள்ள எழுத்துக்களைக் கூட்டின் "கடன்" என் வரும். மற்றை எழுத்தோராறில் - பிற எழுத்துக்கள் ஆறும் மூன்று சொற்களாகச் சேர்த்தால் - அவை: கம், கல், கனி என்றும். அவற்றிலொன்று கம் (தலை) பத்துடையானைத் தடிந்து - பத்துத் தலை இராவணனைக் கொன்று, பெண்ணுய்ச் செய்து - மற்றொன்றாகிய கல்லை அகலிகையாக மாற்றி, பரிவின்

நுகர்வோன் - மூன்ருவது சொல்லாகிய கனியைச் சவரி அன்பினுற் கொடுக்க உண்டவனுகிய இராமபிரான். (௨௩)

[உலோபியை இகழ்ந்து பாடியது]

967. கல்லா லயமாந் தேவருமாங்
கழுதை கசடர் பொதிசுமக்கும்
கடாவோ உழுது பயிரிடற்காங்
கட்டம் பன்றிக் கிரையாகும்
புல்லே றீசர் வாகனமாம்
பொதியுஞ் சுமக்கும் பிணமெனிலோ
பூசி முடித்து மறையோர்க்குப்
பொருளை யீந்து புகழெய்தும்
மல்லார் குட்டிச் சுவரெனிலோ
மாடு முறைஞ்சு மறைவாகும்
மதியாத் துடைப்பந் தானெனிலோ
மாட கூடங் களைவிளக்கும்
அல்லா துலுத்தன் றனக்கிணையா
யாரை யுரைப்பேன் புவிமீதில்
அவனைக் குறித்துக் கூறுமிடத்
தவனுக் கவனே சரிதானே.

(அ - ரை.) புல் ஏறு - சிறிய காளை. (௨௪)

[திருவாரூர்ப் பெருமான் பவனி கண்டு புள்ளிடங் கூறியது]

968. விரவெண்டை யப்ரதாபர் தியாகராசர் கமலைசூழ்
விதிகண்டு பவனிகண்டு விந்தைகண்டு பந்தியாய்த்
தூரநின்ற பூவைகாள் அடுத்துநின்ற கிள்ளைகாள்
துன்பமே யலாதுபாவி சுகமறிந்த தில்லையால்
மாரனம்பு பட்டகாய மாறுதில்லை யிரவெலாம்
மங்கைமார் தொடுத்தசண்டை மாறுதில்லை யென்செய்வேன்
ஆரிருந்தும் உதவியில்லை யென்றனுசை யொழியுமோ
அதுவுமில்லை விதியைநொந்து மாவதில்லை காணுமே.

(அ - ரை.) கமலை சூழ் வீதி கண்டு - திருவாரூர்த் தெருவின் அழகைப் பார்த்து. பந்தியாய் - வரிசையாய். (உ௯)

௭௩. எல்லிசு துரை

[இவர் இராமச்சந்திரக் கவிராயரின் மாணவராக அமர்ந்து கல்வி கற்றுத் தேறிச் செய்யுள் பாடுந் திறமையை அடைந்தவர். இவர் இயற்றியதாக இந்தப் பாடல் ஒன்று கிடைப்பதைத் தவிர வேறு சில சிறு இலக்கண நூல்களையும் இவர் இயற்றியுள்ளாரென்று தெரிகிறது. தமிழறிஞரான வெள்ளையர்களில் இவரும் ஒருவர்.]

[இராமச்சந்திரக் கவிராயர் மீது பாடியது]

969. செந்தமிழ்ச் செல்வனும் ஓரா
யிரந்தலைச் சேடனும்யாழ்
சுந்தரத் தோடிசை வல்லோனும்
யாவருந் தோத்திரம்செய்
கந்தனைச் சொல்லுங் கவிராமச்
சந்த்ரனைக் கண்டுவெட்கி
யந்தர வெற்பிழி பாதாளத்
தோடி அடங்கினரே.

(அ - ரை.) செந்தமிழ்ச் செல்வனும்-செம்மையான தமிழ்க்குத் தலைவராகிய அகத்தியரும், யாழ் சுந்தரத்தோடு இசை வல்லோனும் - வீணை அல்லது யாழினை அழகாக வாசித்து இசை பாடவல்ல நாரதனும், யாவரும் தோத்திரஞ் செய் கந்தனைச் சொல்லுங் கவி ராமச்சந்த்ரனை - எல்லாரும் துதிக்கின்ற முருகனைப் பாடும் பாவலராகிய இராமச்சந்திரனை.

௭௪. தாச்சி அருணாசல முதலியார்

[சென்னையைச் சேர்ந்த திருமயிலை இவரது பிறப்பிடம். பிரமராம்பிகை பதிகம், திருமுல்லைவாயில் மாசிலாமணி யீசர் பதிகம், சிதம்பரம் சிவகாமியம்மை பதிகம், கொடியிடை மாலை முதலியன பாடியவர்.]

[வேங்கடாசலன் என்னும் வள்ளல்மீது பாடியது]

970. சிற்பரி நிரந்தரி துரந்தரி யம்பிகை
சிதம்பரி பதம்பணிகுவோன்
சித்தமக லாதபரி சுத்தபரி பூரணி
திருக்குளந் தன்னிலனுகாச்
செங்கண்மால் தங்கையெங் குலதெய்வ மாய்வந்த
செல்விசிவ காமவல்லி
திருவடிக் கடிமைதிரு மயிலை யருணசலன்
செங்கையா லெழுதுமோலை
மற்புயா சலனெழில் விற்பன விவேகன்மட
மாதர்மட லாருமாரன்
வளர்கங்கை குலதிலகன் மதியூகி நிறைசெல்வ
வளமைசெறி யாற்றாரினுன்
மருமலர்க் குவளையணி மார்பினுன் தனைநம்பி
வருபவர்க் கொருசார்பினுன்
மங்களா கரவிசய வெங்கடா சலசமுக
வள்ளலெதிர் கொண்டுகாண்க
சற்பனைக் காரர்துர்ப் போதனையி லென்தம்பி
சாலவு மயங்கிநெஞ்சம்
சஞ்சலப் பட்டுளந் தடுமாறி வேறுமொரு
சார்புமில் லாமலேங்கித்
தளர்வெய்தி வந்தவனை யஞ்சலஞ் சேலெனத்
தயவுவைத் தன்றுமுதலாச்
சகலமுந் தந்தினிது செய்கின்ற செய்திகள்
சமத்தமும் கேட்டுகந்தேன்
சொற்பனத் திலுமுனை மறப்பதிலை யவனையொரு
தொழிலில்வைத் தாளாக்கிறுன்
தொந்தரையை நீக்கிமிக வும்புனித னுக்கியுன்
சொல்வழி நடப்பதாக்கிச்

சோலியொன் றில்லாது கூழமுதொ டாகிலுஞ்
சுகமே யிருக்கவைத்துத்
தொல்லுலகில் மாளாத செல்வமுந் தந்தெனது
துதியுநீ பெறல் வேண்டுமே.

(அ - ரை.) சற்பனை - வஞ்சனை, சமத்தம் - எல்லாம். (க)

[பாலனைப் பழித்தல்]

971. செய்யாள் வளர்மயி லையிலென்
ஆசைத் திரவியமே
மெய்யாந் தனங்குடத் தேவைத்து
வாழ்ந்தனர் மேவுதந்தை
கையா டியதனம் பிள்ளை
புசிக்கக் கடனெனவே
ஐயா உனக்களித் தேனத
னுல்வெறுப் பாயினரே.

(அ - ரை.) செய்யாள் - திருமகள். மயிலை - மயிலாப்பூர். மெய்யாந்தனம் - ஆசைப்பொருள் குடத்தே - குடம்போன்ற கொங்கைகளில். கையாடிய தனம் - அவர் கையாற் றொட்ட கொங்கையை. (உ)

ஏரு. சொக்கநாதப் புலவர்

972. எண்பட்ா தெதிரிட்ட பாவலர்க் கிடியேறு
நாவலோர் கனகமேரு
இந்திரன் பணிசுந்த ரேசரருள் சேர்சொக்க
நாதனின் றெழுதுமோலை
திண்படா மதியொத்த முகபடாந் தொடுகின்ற
திரிகடா சலேசன்முத்துத்
திருவுடைய மகிபாலன் மங்கைநக ராதிபன்
சிந்தையொ டெழுந்துகாண்க

கண்படா வத்திரங் கொம்புகொள் ளாதகலை
கழிபடாக் கோடிநஞ்சு
காணாத நாகமுட் டையாத உடைபண்டு
கட்டுப்படாக் கலிங்கம்
பண்படாக் கோசிகம் நெய்படா வாடைபறை
கொட்டாத தானைமுதுகு
பட்டிடாத்தூசொன்று மட்டிலாவிலையிற்
பரிந்துவர விடல்வேண்டுமே.

(அ-ரை.) எண்படாது - மதியாது. புலவர் கேட்கும் பொருள் ஆடையாகும். வத்திரம், கலை, கோடி, நாகம், உடை, கலிங்கம், கோசிகம், ஆடை, தானை, தூசு, ஆகியவை ஆடையை யுணர்த்தும். ஆயினும் அவை வேறு பொருளையும் உணர்த்தும் ஆதலால் அவற்றை அடைமொழிகளால் விலக்கியிருப்பது காண்க. வத்திரம் - முகம். கலை - மான். கோடி - ஓர் எண். நாகம் - பாம்பு. உடை - ஒரு முள்மரம். கலிங்கம் - குதிரை. ஆடை - பாலாடை. தானை - சேனை. தூசு - புழுதி.

எசுஎ. திருக்கண்ணபுரம் தாசி

[முனையதரையன் என்ற அரசனுக்கு எழுதியது]

973. இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யிற்றைக்கு
நின்று வரிலதுவும் நீயறிவை—வென்றி
முனையா கலவி முயங்கியவா றெல்லாம்
நினையாயோ நெஞ்சத்து நீ.

(அ-ரை.) வென்றி - வெற்றி, முனையா - முனையதரைய மன்னனே.

எஎ. திருவழுந்தூர்த் தாசி

[சோழன் எந்த ஊர் என்று கேட்டதும் பாடியது]

974. கம்பன் பிறந்தவூர் காவிரியி லங்குமூர்
கும்பமுனி சாபங் குலைந்தவூர்—செம்பதுமத்
தாதகத்து நான்முகனுந் தாதையுந்தே டிக்காணு
தோதுமத்தர் வாழுமழுந் தூர்.

(அ - ரை.) கும்பமுனி - அகத்தியர். செம்பதுமம் - செந்தாமரை. தாது + அகத்து. மகரந்தமுடைய இடத்தில். காணாது + ஓதும் - காணாமல் துதித்த. தாதை - திருமால். அத்தர் - சிவபிரான்.

எஅ. சோணாசல தேவர்

[இவர் நீண்ட காலந் திருவருணையை வலம்புரிந்து கொண்டிருந்தார். பின் இறைவனாணையால் சிதம்பர அடிகளை யடைந்து அருட்பேறு பெற்றார்.]

[சிதம்பர அடிகளின் மீது பாடியது]

[வெண்பா]

975. எடுத்தசன னங்கடோறும் ஈன்றெடுத்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில்—அடுத்தமணிப்
பைந்நா கணைதுயில்மால் பாலாழியுஞ் சிறிதாம்
மன்னு சிதம்பரதே வா.

(அ - ரை.) சனனங்கள் - பிறப்புக்கள். பைந்நாகணை - படத்தையுடைய பாம்புப் படுக்கை. பாலாழி=திருப்பாற்கடல். முலைப்பால் குடித்தது திருப்பாற்கடலினும் அதிகம் என்பது. இப் பிறவியை ஒழிப்பாய் என்பது கருத்து.

எகூ. சின்னத்தம்பிப் புலவர்

[இவர் யாழ்ப்பாணத்து நல்லூர் வில்லவராயருடைய மகனாகத் தோன்றியவர். கலைமகள் திருவருள் பெற்றவர். மறைசையந்தாதி, கல்வளையந்தாதி முதலியன இவர் பாடிய நூல்கள்.]

[தம் தந்தையாகிய வில்லவராய முதலியாரின் வீடு யாது? என்று கேட்ட புலவரை நோக்கிப் பாடியது.]

976. பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரன் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்.

(அ - ரை.) தாது - மகரந்தம். மின் - மின்னல் ஒளிபோல.

௮௦. புவனேகவாகு

[தமக்குச் சின்னமனத்தார் செய்த விருந்தைப் புகழ்ந்து பாடியது.

[வெண்பா]

977. சின்ன மனைத்தார் செயும்விருந்தின் சாற்றுருசி
அன்னதினம் விண்ணோர் அறிந்திருந்தால்--முன்னலைந்து
வெற்பானைக் காவியுய்த்து வேலைவிட்டு நின்றுலைதல்
அற்பமெனத் தள்ளுவரே யாம்.

(அ - ரை.) விருந்தின் சுவையைக் கண்டிருந்தால் கடல் கடையும் வேலையில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள் என்பது கருத்து. காவி - சுமந்து. வேலை - கடல். உலைதல் - வருந்துதல்.

௮௧. பரமேசுவரப் புலவர்

[ஆசுகவிராசசிங்கம் என்னும் புலவர் அண்ணாமலையார் பேரில் வண்ணம் பாடி அரங்கேற்றிப் பரிசு பெற்றதைக் குறித்துப் பாடியது.]

[கலித்துறை]

978. கண்ணார் மதிக்குங் கவிராச
சிங்கம் கனிந்துதிரு
வண்ணா மலையப்பர் மேல்வண்ணம்
பாடிமுத் தாலத்திகொண்
டெண்ணா பிரமட வார்சூழப்
பல்லக்கி லேறிவந்தான்
உண்ணா முலையெல்லன் மூலைக
டோறும் ஒதுங்கினரே.

(அ - ரை.) மடவார் - பெண்கள். உண்ணாமுலையும் எல்லப்ப நயினாரும் ஆங்கிருந்த புலவர்கள். அவர்கள் ஒளிந்தனர் என்பது கூறப்பட்டது.

அஉ. உண்ணாமுலை எல்லப்ப நயினார்

[தம்மை யிகழ்ந்து பாடிய பரமேசுவரப் புலவரைத் தாம் இகழ்ந்து பாடியது]

979. பார்ப்பார் மடத்துப் பரமாஉன் பாழ்ங்கவிதை
கேட்பாரெல் லாம்புத்தி கெட்டபேர்—தோட்பாங்கில்
ஓணான் விழுந்தாலும் உண்டுபரி காரமிலை
வாணாள் அளவே வரும்.

(அ - ரை.) தோட்பாங்கு - தோள்பக்கம். (க)

அங. கழைக் கூத்தி

[கல்வி கேள்விகளிற் சிறந்த ஒரு கழைக்கூத்தி, கழையின் மேல் நின்று ஆடிக் கொண்டிருக்குங்கால் பூப்படைந்தாள். உடனே கீழேயிறங்கத் தொடங்கிப் பாடிக்கொண்டு இறங்கியது]

980. கல்லுருகுங்காலம் கழுகறியு மக்காலம்
வையகமெல்லாம் மலர்ந்தபூ வண்டறியும்
ஒங்கலறியும் உயர்கடலின் உள்ளாழம்
பாங்கனுக்குப் பாங்கன் பயனறிவான்மன்ற
அறிவார் அறிவார் அறியார் அறியார்
ஒருகாம்பு இருதலையும் பூ.

(அ - ரை.) ஓங்கல் - கப்பல். மன்ற - உறுதியாக. ஒருகாம்புக்கு என்றது பெண்ணாகிய தனக்கு. இருதலையும் - மேலேயும் கீழேயும். பூ - மலர்; பூப்பு : தலையில் மலர்; கீழே பூப்பு. (க)

[விச்சுளிப் பாய்ச்சல் என்னும் அரிய வித்தையை ஆடிக் காட்டியபோது, அரசன் பெண் ஒருத்திபால் மனம் ஈடுபட்டுப் பராமுகமாக இருந்துவிட்டு மற்றுமொரு முறை அவளைச் செய்யச் சொன்னான். அவ்வித்தையை ஒரு நாளில் இருமுறை செய்யின் உயிருக்கு ஆபத்து நேரிடும். அரசன் ஆணையை மறுத்தற்கஞ்சி மற்றுமொரு முறை செய்யத்தொடங்கிய பொழுது பாடியது.]

[கலித்துறை]

981. மாகுன் றனையபொற் றோளான்
வழுதிமன் வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப்
பார்த்தென்னைப் பார்த்திலன் பையப் பையப்

போகின்ற புள்ளினங் காள்புழற்
கோட்டம்புகுவ துண்டேல்
சாகின்றன ளென்று சொல்லீர்
அயன்றைச் சடையனுக்கே.

(அ - ரை.) புழற் கோட்டம் - தொண்டை மண்டலத்து இருபத்து நான்கு கோட்டங்களுளொன்று. மாகுன்று - பெரியமலை. (உ)

[மேலும் அயன்றைச் சடையன் தன்மையைப் பாடியது]

[அகவற்பா]

982. இரவ லாளரே பெருந்திரு வுறுக
அரவுமிழ் மணியும் அலைகடல் அமுதும்
சிங்கப் பாலுந் திங்கட் குழவியும்
முதிரை வாலுங் குதிரை மருப்பும்
ஆமை மயிரும் அன்னத்தின் பேடும்
ஈகென இரப்பினும் இல்லென அறியான்
சடையனை அயன்றைத் தலைவனை
உடையது கேண்மின் உறுதி யோர்ந்தே.

(அ - ரை.) இதிற் கூறியன கிடைத்தற்கரிய பொருள்கள்

அ௬. வீரை அம்பிகாபதி

[இவர் சேது நாட்டில் வீரசோழன் என்னும் ஊரில் வாழ்ந் திருந்தவர்.]

[தென்காசி, மதுரை, திருநெல்வேலி, கருவை என்னும் நான்கு ஊர்ப் பெயரும் சுவாமி பெயரும் அம்மை பெயரும் அமைத்துப் பாடும்படி பாண்டியன் கூறப் பாடியது.]

[கலித்துறை]

983. இலகே ழுகிலத்தர் சொக்கர்முத் தீசர் இபந்தொழுவோர்
கலைதேர்தென் காசி மதுரைநெல் வேலி கருவை வந்த
பலகேள்வ ருள்ளிரெம் பங்குநிற் பீர்வந்து பாதந்தொழ
உலகே கயற்கண்ணி யேவடி வேயெங்கள் ஒப்பனையே.

(அ - ரை.) அகிலத்தர் - விசுவேசர். முத்திசர் - கழை முத்தர்; திருநெல்வேலிச் சிவபிரான். இபந்தொழுவோர் - கருவையீசர். இபம் - யானை. கருவை - கரிவலம் வந்த நல்லூர். (க)

[நெல்லைச்சொல் வருக்கக் கோவையின் பயனைப் பற்றிப் பாடியது.]

984. கண்ணூறு சாத்து மரியயன்
போற்றுங் கழைமுத்தர்க்குப்
பண்ணூறு சொல்வருக் கக்கோவை
தன்னைப் பரிவுடனே
வெண்ணீ றணியம்பி காபதி
விரையில் வேதியன்சொற்
றெண்ணூறு மெட்டும் படிப்பார்
தமக்கில்லை துன்பங்களே.

(அ - ரை.) சொல்வருக்கக்கோவை - ஒரு நூல். (உ)

அரு. வீரை ஆசுகவிராயர்

[இவரும் சேது நாட்டில் வீரசோழன் என்னும் ஊரைச் சேர்ந்தவரே. இவர் பாடிய நூல் அரிச்சந்திர புராணம். இவருடைய செய்யுள் நடை தமிழ் மக்களுக்கு மிகுந்த இன்பம் பயப்பதாகும்.]

[வல்லைமா நகர்க் கச்சியப்ப முதலியார் மீது பாடியன]

[வெண்பா]

985. மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ அன்பாகக் கற்றவர்கள்—மண்புகழு
மெச்சியப்பா லும்புகழும் விறுவல்லை யாளவந்த
கச்சியப்ப னையுதைத்த கால்.

(அ - ரை.) முதலியாரை உதைத்தது அவருடைய இளங் குழந்தை என்பர். புல்லர் - அற்பமான கீழ்மக்கள். மேன் மக்களே காலினைக் காண்பர். கச்சியப்பனை யுதைத்தகால் மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு கண்படுமோ எனக் கூட்டுக. (க)

986. கடல்கிழிய ஓடுங் கலம்போல ஒன்னார்
உடல்கிழிய ஒள்வாள் விதிர்த்து—மடல்கிழியும்
பைம்பொற்ருர் மன்னர் படைநடுவே ஓடிற்றே
செம்பொற்றண் டேந்தினுன் தேர்.

(அ - ரை.) கலம் - மரக்கலம். ஒன்னார் - பகைவர். விதிர்த்து - அசைத்து. (உ)

அகூ. சீர்காழி அருணாசலக் கவிராயர்

[இவர் சோழ நாட்டிலே தில்லையாடியில் பிறந்தவர். தருமபுர ஆதீனத்து அம்பலவாணக் தம்பிரானிடம் கல்வி கற்றுத் தேறினர். சீர்காழியில் சிதம்பரம்பிள்ளை என்பவருடைய ஆதர விலே தங்கியிருந்தார். அசோமுகி நாடகம், இராம நாடகம், சீர்காழிக்கோவை, சீர்காழித் தலபுராணம், அனுமார் பிள்ளைத் தமிழ் முதலியன இவரியற்றிய நூல்கள்.]

[மணலி முத்துக்கிருட்டின முதலியார் மீது பாடியன]

987. சித்திதரு கிறவல்லி புத்திதரு கிறவல்லி
தேவர்கள் வணங்குவல்லி
தில்லைநா யகவல்லி சிவகாம வல்லியிரு
திருவிழிக் கருணையாலே
சத்யவா சகனென்று பூமண்ட லாதிபர்கள்
தாமெங்க ணுந்துதிக்குஞ்
சகலபா ஷாநிபுண மணலிமுத் துக்கிருட்ண
சதுரநீ வாழிகண்டாய்
நத்துமலர் குவளைநான் மதியநீ செஞ்சாலி
நான்கருவி மழைமேகநீ
நளினநான் பரிதிநீ பிள்ளைநான் அன்னைநீ
நான்கவிஞன் வழுதிநீகாண்
சுத்தமுள ராமா யணந்தனைக் கொண்டுனது
சுமுகமது பெறவருகிறேன்
சொற்பொரு ளறிந்தளவு சொல்லுவேன் கேட்கவே
துணையாக வேண்டு நீயே

(அ - ரை.) நத்து மலர் குவளை நான். மதியம் நீ - சங்குகள் தங்கும் குவளைப்பூப்போல்வன் நான். அதற்கு மலர்ச்சி தருகின்ற திங்களைப்போல் வாய் நீ. செஞ்சாலி நான் கருவி மழை மேகம் நீ - செந் நெற் கதிர்நான்; கார் காலத்து மழை பொழிகின்ற மேகம் நீ. நளினம் நான் பரிதி நீ - தாமரைப்பூ நான் கதிரோன் நீ. சுமுகமது - நன்மதிப்பு. (க)

988. கனந்தந்தான் கனகாபி டேகந் தந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை யழைத்துத் தந்தான்
மனந்தந்தான் முடிசூட்டு மாலை தந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசை தந்தான்
இனந்தந்தான் இராமகதை யெவர்க்குந் தந்தான்
எனைராமா யணக்கவிரு னெனப்பேர் தந்தான்
அனந்தந்தான் மணலிமுத்துக் கிருட்ண பூப
னகந்தந்தான் இருமையிலுஞ் சுகந்தந் தானே.

(அ - ரை.) கனம் தந்தான் - எனக்கு மதிப்புக் கொடுத்தான். கனகாபிடேகந் தந்தான் - பொன்னினாலே முழுக்காட்டினான். களங்கம் இலா கருப் பொருளை யழைத்துத் தந்தான் - குற்றமற்ற மூலப் பொருளைத் தோன்றும்படி செய்தான். மனம் தந்தான் - தன்னுடைய உள்ளத்தைக் கொடுத்தான். வாணி சிங்காதனத் திருத்தி வரிசை தந்தான் - கலைமகளின் சிம்மாசனத்தில் என்னை யிருக்கும்படி செய்து தகுதியான பரிசளித்தான். இனம் தந்தான் - பசுக் கூட்டத்தைப் பரிசாக அளித்தான். அனம்தந்தான் - உணவு கொடுத்தான். அகம் தந்தான் - குடியிருப்பதற்கு வீடும் கொடுத்தான். (உ)

[பாப்பைய வேள் மீது பாடியது]

989. பத்துரு பாயனைநேர் பாப்பையவே ளேயுனக்குப்
பத்துரு பாயென்ன பஞ்சமோ—முத்தநகை
விழிவாய்ப் பாலுண்ட வேந்தன் பிறந்தசீ
காழியரு ணசலன் யான்காண்.

(அ - ரை.) முத்த நகை விழிவாய்ப் பாலுண்ட வேந்தன் - முத்துப் போன்ற பல்லும் விழிக் கனி போன்ற வாயுமுடைய அம்பாளிடம் ஞானப் பாலுண்ட மன்னனாகிய திருஞான சம்பந்தர், பத்து உருப ஆயனை நேர் பாப்பையவேளே - பத்து வடிவ மெடுத்த கண்ணன் போன்ற பாப்பைய வள்ளலே. (௩)

[பொதுவாகப் பாடியன]

[வெண்பா]

990. தன்னைப் புகழ்வானுஞ் சாட்சிசொல்லி நிற்பானும்
பொன்னைமிகத் தேடிப் புதைப்பானும்—ஒன்னலர்தம்
நண்புத்தி கேட்பானும் நாணமில் லாதானும்
பெண்புத்தி கேட்பானும் பேய்.

(அ - ரை.) ஒன்னலர் தம் நண்புத்தி கேட்பானும் - பகைவருடைய பொய் நட்பாகக் கூறும் அறிவுரையை நம்புவானும். (ச)

991. பொன்தேடி மண்புதையான் போரதனி லம்புதையான்
மன்தேடி வந்தவரை வாழ்விப்பான்—நன்றேடும்
எப்பா வலரும் இயம்பும் புதுவையில் வாழ்
அப்பாசா மிக்குநிக ரார்.

(அ - ரை.) போர் அதனில் அம்பு தையான் - சண்டையிடத்தில் புறங்காட்டிக் கணையினுற் றுளைக்கப்படாதவன், மன் தேடி வந்தவரை வாழ்விப்பான் - வள்ளல்களாகிய மன்னரைத் தேடியலைந்து தன்பால் வந்தவர்களை வாழ்விக்கின்றவன். நன் தேடும் - நலத்தை நாடுகின்ற. (ரு)

992. வெற்றிலைக்கு முன்னே வெறும்பிளவை வாயிலிட
நற்றிருவா மங்கை நடப்பளே—வெற்றிலையை
முன்னிட்டுப் பின்பிளவை மெல்குவரே யாமாயின்
மன்னரைப்போல் ஆவார் மகிழ்ந்து.

(அ - ரை.) பிளவு - பாக்கு. (சு)

993. மிகப்பட்ட வெம்பசியால் வெம்பருந்தின் வாயில்
அகப்பட்ட கோழிப்பார்ப் பானேன்—நகப்பட்ட
கல்லையோ கைதொழுதேன் காகமனு காமலையில்
இல்லையோ ரத்னகிரி யே.

(அ - ரை.) நகப்பட்ட கல்லையோ கை தொழுதேன் - மலையிற் பொருந்திய கற்றெய்வத்தையோ நான் வழிபட்டேன். இரத்னகிரி இல்லையோ - இரத்தினமலை போன்ற சிவபெருமான் இல்லையோ. (எ)

994. சோமனுடா வாழ்வுஞ் சோறிடா நல்லுறவும்
நாமநீ ரில்லாத நன்னுதலும்—ஓம
நெருப்பில்லா வேதியரும் நெய்பா லுடனே
பருப்பில்லாப் போசனமும் பாழ்.

(அ - ரை.) சோமனுடா வாழ்வும் - உயர்ந்த ஆடைகட்டாத பிழைப்பும். (அ)

[பரிசு பெருது தன்னைத்தானே நொந்தது]

995. கால்விழ்ந்து நம்மைக் கவிபாடச் சொன்னுனே
மேல்விழ்ந்து நாமே விளம்பினேம்—நூலறிந்து
தந்தக்காற் றந்தான் தராக்கால் நமதுமனம்
நொந்தக்கால் என்னுரு மோ.

(அ - ரை.) நூலறிந்து - பாட்டின் நயந்தெரிந்து. தராக்கால் நமது மனம் நொந்தக்கால் என்னுருமோ - அவன் தராத போது நம்முடைய மனம் வருந்தினுல் அது எவ்வாறு முடியுமோ. (கூ)

996. கடம்பவனஞ் சூழ்கூடற் கன்னிமத னம்பை
அடர்ந்தவிழி யங்கயற்க ணம்மை—நடந்த
நடைக்குவமை யன்ன நகைக்குவமை முல்லை
இடைக்குவமை யில்லை யினி.

(அ - ரை.) மதன் அம்பை அடர்ந்தவிழி அங்கயற் கன் அம்மை - காமன் கணையைத் தோற்கடித்த கண்களையுடைய அங்கயற் கண்ணம்மையானவள். நகைக்குவமை முல்லை - அவளுடைய பல்லுக்கு இணையாகக்கூடியது முல்லையரும்பு. (க0)

997. கூப்பிட்டேன் செங்கைதனைக்
கூற்றுவனைக் கண்டஞ்சிக்
கூப்பிட்டேன் என்னையாட்
கொண்டருள்வாய்—கூப்பிட்டே
ஏனமாச் சென்றுற் கிளையவளே யட்டியின்னம்
ஏனமா காமாட்சி யே.

(அ - ரை.) செங்கைதனைக் கூப்பிட்டேன் - சிவந்த கைகளைக் குவித்து வணங்கினேன். கூப்பிட்டு ஏனமா சென்றாற்கு இளையவளே - பூமியைப் பிளந்து கொண்டு பன்றி வடிவெடுத்துச் சென்றவராகிய திருமாலுக்குத் தங்கையே. அமா இன்னம் அட்டி ஏன் - என்னையாள்வதற்கு இன்னும் கால தாமதம் எதனால்? அமா - அம்மா. (௧௧)

998. வானவரும் இந்திரரும் மால்பிரம ருஞ்செத்துப்
போனவிடம் புல்முளைத்துப் போகாதோ—ஞானமருள்
அத்தர் அருணேசர் அன்பாக நஞ்சதனைப்
புத்தியுடன் கொள்ளாத போது.

(அ - ரை.) புத்தியுடன் கொள்ளாதபோது - இரக்கம் வைத்து நஞ்சைத் தன்னறிவு மயங்காமல் உண்ணாதிருப்பாராயின். (௧௨)

999. நெஞ்சடைந்த வேட்கையெல்லாம் நீங்கி யிருவிழியும்
பஞ்சடைந்துள் ளாவி படுமுன்னே—செஞ்சடைமேல்
வெள்ளாரு வெந்நாளும் வேள்விப் புகைமாரு
நள்ளாரு வென்றே நவில்.

(அ - ரை.) செஞ்சடைமேல் வெள்ளாறு - சிவந்த சடைமேல் வெண்கங்கையைச் சூடியவனே, எந்நாளும் வேள்விப் புகை மாறு - எப்போதும் வேள்விப்புகை நீங்காத, நள்ளாறு - நள்ளாற்றுப் பெருமானே. (௧௩)

1000. செங்கமலப் போதலர்ந்த செவ்விபோ லும்வதனம்
தங்குமொழி சந்தனசீ தம்போலும்—பங்கியெறி
கத்தரிகை போலுமுளங் காரிகையே வஞ்சமனக்
குத்திரர்பால் மூன்று குணம்.

(அ - ரை.) குத்திரர்பால் - பொய்யரிடத்தில், வதனம் செங்கமலப்போது அலர்ந்த செவ்விபோலும் - முகம் செந்தாமரைப்பூவின் மலர்ச்சிபோல் அழகுடையது. பங்கியெறி கத்தரிகை போலும் - (உள்ளம்) மயிரைத் துண்டிக்கும் கத்தரியைப் போல்வதாகும். உள்ளம், உளம் எனக் குறைந்து நின்றது. உள்ளம் - மனம். வதனம், மொழி, உள்ளம் இவை மூன்றும் முக்குணம் உடையவை என்க. (௧௪)

[தோழி தூது]

1001. அனங்கனம்பால் அன்னநடை யங்குழல்சொற் றையல்
அனங்கனம்பால் மெய்சோர்ந் தயர்ந்து—மனங்கலங்கி
வாடியென்றாள் பற்றியெழின் மாயவனைப் போயழைத்து
வாடியென்றாள் சேர்ந்தனைய வா.

(அ - ரை.) அனம் அன்ன நடை - அன்னம் போன்ற அழகிய நடை. கனம் அன்ன அம் குழல் - முகிலைப் போன்ற அழகிய கூந்தல். பால் அன்ன சொல் - பால்போன்ற இனிய சொல். என் தாள் பற்றி - என் காலைப் பிடித்துக்கொண்டு. எழில் மாயவனை அழைத்து வாடி என்றாள். அனங்கன் அம்பால்...வாடி- மன்மதன் பாணத்தினால் வருந்தி, அழகுமிக்க மாயவனைக் கூட்டிக் கொண்டு வருக என்று என்னை வேண்டினாள். (கஅ)

1002. வாமாது போகே மனமே து து து து து
ஆமா பசுமாதை யத்தனார்—தாமாய்
நடித்தவர் பாகர் நடந்தவர் வேணி
முடித்தவர் கங்கணர்கேண் மோ.

(அ - ரை.) மா பசுமாதை யத்தனார் - பெருமை பொருந்திய பசுமாதையில் வீற்றிருக்கும் தலைவராகிய சிவபெருமான். போது வேணிமுடித்தவர் - கொன்றைப் பூவைச் சடை முடியிற் றரித்தவர். கேது கங்கணர் - பாம்பைக் கடகமாக அணிந்தவர், (வாது, மாது, தூது, போது, கேது) என்பவற்றை (நடித்தவர், பாகர், நடந்தவர், வேணிமுடித்தவர், கங்கணர் என்பவற்றோடு முறையே கூட்டுக. (கசு)

1003. கங்கொன்னு சோதுமறு கைறைகம் மன்பைகு
துங்கச் சடைமேற் றுலங்கவைத்தார்—மங்கையிடப்
பாகத்தார் மாதைப் பதியார் பசுபதிப்பேர்
ஆகத்தார் வைக்கும் அவை.

(அ - ரை) கங், கொன், நா, சோ, தும், அறு என்பவற் றுடன் கை, றை, கம், மன், பை, கு என்பவற்றை முறையே கூட்டி கங்கை, கொன்றை, நாகம், சோமன், தும்பை, அறுகு எனக் கொள்ளுக. நாகம் - பாம்பு. சோமன் - சந்திரன். சடைமேல்...வைக்கும் அவை என்க. (கஎ)

1004. வெண்ணெயுற்றும் நெய்தேட வேண்டுமா தீபமுற்று
நன்னு கனல்தேடல் நன்றுமோ—என்மனத்தை
நாடிச் சிவனிருக்க நாடாமல் ஊர்தோறும்
தேடித் திரிவதென்ன செப்பு.

(அ - ரை.) என் மனத்தை நாடிச் சிவன் இருக்க - தன்னை நினைக்கின்ற உள்ளத்தை விரும்பித் தங்குவதற்குச் சிவபெருமான் இருக்கும் பொழுது. (கஅ)

1005. நல்லவர்கள் வாயால் நவிலுமொழி பொய்யாமல்
இல்லையெனு துள்ளமட்டும் ஈவார்கள்—நல்லகுணம்
அல்லவர்கள் போவாவென் றுசைசொல்லி நாட்கழித்தே
இல்லை யென்பார் இப்பாரிலே.

(அ - ரை.) அல்லவர்கள் - தீக்குணமுடையவர்கள். (கக)

1006. ஞானம் பெருமை நயங்கருணை யுண்மையபி
மானம் பொறுமை வணக்கமுயர்—தானமுடன்
சற்குணமா சாரம் தகுகல்வி நீதிநெறி
துர்க்குணருக் கில்லென்றே சொல்.

(அ - ரை.) அபிமானம் - பற்று. நயம் - நன்மை. (உ0)

1007. ஞானம் பெருமை நயங்கருணை யுண்மையபி
மானம் பொறுமை வணக்கமுயர்—தானமுடன்
சற்குணமா சாரந் தகுகல்வி நீதிநெறி
சற்குணருக் குண்டென்றே சாற்று.

(அ - ரை.) ஞான முதலிய வெல்லாம் நற்குணமுடையவர்களுக்கு உள்ளன வென்று கூறுக. (உக)

1008. நினைத்த வதுவொழிந்து நேரிடும்வே றென்று
மனித்த கருமங்கள் வாயா—கனத்த
அயன்அமர ராலும் அரியாலுந் தெய்வச்
செயலினைக்கா ணப்படா தே.

(அ - ரை.) மனித்த கருமங்கள் வாயா - மக்களுடைய செயல்கள் நினைத்தபடி நடைபெறுவதில்லை. கனத்த - மேலான. (உஉ)

1009. உன்னைப் பணிந்தேன் உனக்கடிமை யாயினேன்
என்னைக் கருணைபுரிந் திடேற்ருய்—கன்னியுமை
வாமா பசுமாதை வாசா அலர்ந்த கொன்றைத்
தாமா பசுபதிநா தா.

(அ - ரை.) வாமா - இடப்பாகத்திலுடையவனே. பசுமாதை வாசா - ஆமாத்தூரில் வீற்றிருப்பவனே. (உ௩)

1010. குவளைத்தார்த் தேவர்கள்தங் கோவே தனிகைக்
கவளக் கரிக்கிளைய கந்தா—தவளச்
சலசத்தாள் கோவைத் தளைபூட்டி யாக்கை
அலையச்செய் தாய்நன்மை யா.

(அ - ரை.) குவளைத்தார் - நீலோற்பலமாலை, தவளச்சல சத்தாள் கோவை - வெண்டாமரையிலிருக்கும் கலைமகளின் கணவனாகிய நான்முகனை. தளைபூட்டி - விலங்கிட்டு. (உ௪)

1011. பிஞ்ஞக திங்கள் பிறங்க வரும்புனல்
அஞ்சவி கொன்றை யமர்ந்திட—வுஞ்சுத
பஞ்செய் தனவோ பசுபதி நாயக
விஞ்சிய செஞ்சடை மேல்.

(அ - ரை.) விஞ்சிய - சிறப்புற்ற. அம்சவி கொன்றை அழகிய ஒளியுடைய கொன்றைப்பூ. சுதபம் - நற்றவம். (உ௫)

1012. தென்னுலங் காட்டத்தா சேயிழைமேல் நாட்டத்தா
நன்னுயிறு திங்கள் நாட்டத்தா—வன்னிகையா
காலகா லாநாக கங்கணு கண்டத்தில்
ஆலகா லாசங்க ரா.

(அ - ரை.) தென்ஆலங்காட்டு அத்தா - அழகிய திருவாலங் காட்டில் நடனம் செய்யும் அப்பனே. சேயிழைமேல் நாட்டு அத்தா - சிவந்த அணியணிந்த உமையம்மையைத் திருமேனியில் வைத்துக்கொண்ட பாதிப் பாக முடையவனே. நாட்டத்தா -

கண்களாக உடையவனே. வன்னி கையா - நெருப்பைக் கையிலுடையவனே. (உ௬)

[மொழி மாற்றுப் பொருள்கோள்]

1013. சாரங்க பாணி தலையில் இரந்துண்டான்
சீரங்கம்பாதி சிவனுண்டான்—பாருங்கள்
பாற்கடலை யாண்டான் பசுபதிநா ராயணன்றன்
ஏற்கயிலை யாண்டான் இவன்.

(அ - ரை.) அங்கம் சார்பாணி - தலையோடு அமைந்த கையில் தலையில் - இடந்தோறும் - சீரங்கம் பாதியாண்டான் - சிறப்புடைய திருமேனியிற் பாதியைத் தனக்குரிமையாக்கிக் கொண்டான். (உஎ)

1014. மையிருண்ட சோலை வளர்கச்சி ஏகம்பன்
கையிரண்டுஞ் சேர்த்துக் கலவாநாள்—ஐயிரண்டு
தேரோன் மதலைத் திருமஞ்சன மாடும்
நீரோ வெழுந்த நிலா.

(அ - ரை.) மை இருண்ட சோலைவளர் - மை போலக் கறுத்த பொழில்கள் ஓங்கிய. ஐயிரண்டு தேரோன் - தசரதன். திரு - சீதை, மஞ்சனமாடும் நீர் - தீ. (உஅ)

[பெருமாள் செட்டியார் என்பவருக்கு எழுதிய சீட்டுக்கவி]

1015. கனிகொண்ட பஞ்சலட்சணமும்ரா மாயணக்
கடலையும் உணர்ந்தபுலவன்
கவிராசர் புகழ்கின்ற காழியரு ணாசலக்
கவிராயன் எழுதுமோலை
மணிகொண்ட மார்பிலிங் கப்பமகி பாலன்
மகிழ்ந்தசுதன் வணிகாதிபன்
வருசீர் படைத்தநற் பெருமாள் நரேந்திரன்
மனமுவந் தினிதுகாண்க
அணிகொண்ட தியாகேசர் வண்மைமுரை செய்ததும்
அதற்குவெகு மதிசெய்ததும்

அதுநமக் குபகார மானதுவும் இப்புவியில்
அறியாத பேரும்உளரோ
பணிகொண்ட ராமகீர்த் தனையுமப் படியே
பரிந்துநீ கேட்கவேண்டும்
பாரிலோ ராயிரம் பிறைகண்டு நீபொருள்
படைத்துவாழ்ந் திடுகமாதோ.

(அ - ரை.) கணிகொண்ட - கணக்கைக்கொண்ட. சுதன் - மகன். நரேந்திரன் - மக்கள் தலைவன். ஆயிரம்பிறை என்பது ஆயிரந்திங்கள் எனப் பொருள்படும்; ஒரு பிறை தோன்றி அது மறைந்து மறு பிறை தோன்றுவது முப்பதுநாட் சென்றபின் ஆதலால். ஆயிரம் திங்கட்கு ஆண்டு 83 திங்கள் நான்கு ஆம். நீடித்து வாழ்க என்பது கருத்து. (உக).

[முதுகுளத்தூர் முத்துவீரப்ப பிள்ளைக் கெழுதியது]

1016. எத்திசையு மேபரவு தக்கணு சலமுனி
எதிர்த்தபா வலர்குடாரி
இராமா யணக்கவியை நாடகஞ் செய்தவன்
இலக்கணம் உணர்ந்தபுலவன்
முத்தமிழ்க் காழியரு ணசலக் கவிராய
முகில்வர விடுக்குமோலை
முந்துபுகழ் தென்குளத் தூர்முத்து விரப்பன்
முகமலர்ந் திவிதுகாண்க
வித்துவ சனங்களுக் காதார மாகியவர்
வேண்டிய வெலாமக்கணம்
விரகுடன் அளித்தனை எனக்கேட்டு நாமுமுனை
மேவினேங் கவியெழுதினேம்
உத்தமசி காமணிநீ யாதலால் இவ்விடம்
ஊன்றுபெரு மழைதொடருமுன்
ஓராயி ரங்கரும் பதுவேண்டு நீமன
முகந்துவர விடல்வேண்டுமே.

(அ - ரை.) விரகு - விருப்பம். உகந்து - மகிழ்ந்து.

[வெண்பா]

1017. கொடுப்பார் அருகிருந்து குற்றங்கள் சொல்லிக்
கெடுப்பாரைத் தெய்வங் கெடுக்கும்—நடுக்கடலில்
பள்ளிகொண்ட மாலிரக்கப் பண்டு கரந்திருந்த
வெள்ளிகண்ணைப் பாரீர் விரைந்து.

(அ - ரை.) கரந்திருந்த - மறைந்திருந்த. வெள்ளி - சுக்கிரன். மாபலிமன்னன் மாலுக்குத்தானம் வழங்கியகாலை. சுக்கிரன் நீர்ச்செம்பில் வேற்றுருக்கொண்டு சென்று நீர் வரா தடைத்துக் கண் இழந்தான் என்பது கதை. (௩௦)

அஎ. குருநமச்சிவாய தேவர்

[திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த குகை நமச்சிவாய தேவருடைய மாணவர்; திருவருள் நலம் சிறக்கப் பெற்றவர். சிதம்பர வெண்பா, பரமராசியமாலை முதலியன இவரியற்றிய நூல்கள்.

[திருவண்ணாமலையில் அம்பிகையைத் தமக்குச் சோறு கொண்டு வரும்படி வேண்டியது]

1018. அண்ணா மலையா ரகத்துக் கினியாளே
உண்ணா முலையே உமையாளே—நண்ணு
நினைதோறும் போற்றிசெய நின்னடியா ருண்ணு
மனைதோறுஞ் சோறுகொண்டு வா.

(அ - ரை.) சோறு கொண்டுவா என்ற சொற்றொடரை ஈற்றிலமைத்து ஐந்து வெண்பாக்கள் உமையம்மையை விளித்துப் பாடியதாகத் தெரிகிறது. பின்வரும் வெண்பாக்களையும் காண்க. (க)

[இதுவுமது]

1019. தாயிருக்கப் பிள்ளை தளருமோ தாரணியில்
நீயிருக்க யான்றளரல் நீதியோ—வேயிருக்கும்
தோளியே விண்ணோர் துதிக்குந் திருமுத்து
வாளியே சோறுகொண்டு வா.

(அ - ரை.) வேயிருக்கும் தோளியே - மூங்கிலின் தன்மை யமைந்த தோள்களை உடையவளே. (உ)

[விருத்தாசலம் என்னும் பழமலையில் உணவு கொண்டு வருமாறு பாடியன]

1020. நன்றிபுனை யும்பெரிய நாயகியெ னுங்கிழத்தி
என்றுஞ் சிவன்பால் இடக்கிழத்தி—நின்ற
நிலைக்கிழத்தி மேனிமுழு நீலக்கிழத்தி
மலைக்கிழத்தி சோறுகொண்டு வா.

(அ - ரை.) மேனிமுழு நீலக்கிழத்தி - உடம்புமுழுதும் நீல நிறமுடைய தாய். (௩)

1021. முத்தநதி சூழு முதுகுன் றுறைவாளே
பத்தர் பணியும் பதத்தாளே—அத்தர்
இடத்தாளே மூவா முலைமேலே ஆர
வடத்தாளே சோறுகொண்டு வா.

(அ - ரை.) முத்தநதி சூழும் முதுகுன்று - மணி முத்தா நதி சூழப்பெற்ற திருமுதுகுன்றத்தில். மூவா - இளமைத் தன்மையுடைய. (௪)

[உணவு கொண்டு வருமாறு சிவகாமியம்மையைக் குறித்துப் பாடியது.]

1022. ஊன்பயிலுங் காயம் உலராம லுன்றனது
வான்பயிலும் பொன்னடியை வாழ்த்துவேன்-தேன்பயிலும்
சொல்லார் தொழுது துதிக்குஞ் சிவகாம
வல்லியே சோறுகொண்டு வா.

(அ - ரை.) ஊன் பயிலும் காயம் உலராமல் - இந்தப் புலாலுடம்பு வாடாதபடி. (௫)

[சிதம்பர தரிசனப்பலன்]

1023. கோபுரங்கள் நான்கினையும் கண்டமட்டிற் குற்றமெலாந்
தீபரந்த பஞ்சதுபோற் சென்றதே—தூபுரங்கள்
ஆர்க்கின்ற செஞ்சரண அம்பலவா நின்பாதம்
பார்க்கின்றார்க் கென்னே பலன்.

(அ - ரை.) நூபுரங்கள் ஆர்க்கின்ற செஞ்சரண அம்பலவா- சிலம்புகளொலிக்கின்ற செவ்விய திருவடிகளையுடைய அம்பல வாணரே. (௬)

[தீர்த்தப்பலன்]

1024. கண்டமட்டிற் கண்டவினைச் சத்தம்போம் கையிலள்ளிக்
கொண்டமட்டிற் கொண்டவினைக் கொள்ளைபோம்—
[வண்டமிழோர்
வாயார வேபுகழும் வண்ணச் சிவகாமித்
தாயார் திருமஞ் சனம்.

(அ - ரை.) கண்டமட்டில் கண்ட வினைச் சத்தம்போம் - பார்த்த அளவில் தத்துக்குக் காரணமாகிய கருமமென்ற ஓசையே யில்லாமற்போகும். (எ)

[கடவுள் திருவுளம் அறிய முடியாதென்றல்]

1025. அல்ல லாகிய விருவினை தளையறுத்
தடியிணை தருவாரோ
மல்லல் நீடிய புவியின்மேல் இன்னமும்
வரும்பிறப் பறுப்பாரோ
நல்ல மாமுலை மாதுமை நாயகர்
நானிதம் நவின்றேத்தும்
தில்லை நாயகர் அம்பலத் தாடுவார்
திருவுளந் தெரியாதே.

(அ - ரை.) அல்லலாகிய இரு வினை தளையறுத்து - துன்பத்திற்குக் காரணமான நல்வினை தீவினையென்னும் இரு கட்டுக் களையும் அறுத்து. (அ)

[திருக்கூத்தைப் பற்றிப் பாடியது]

1026. தூக்கியகால் நோகாதோ துட்ட முயலகன்மேல்
தாக்கியகால் தானும் சலியாதோ—வாக்கார்
தினவரதா தில்லைத் திருத்தாண்ட வாநீ
அனவரதங் கூத்தாடி னல்.

(அ - ரை.) வாக்குஆர் - புகழ்ச்சி பொருந்திய. (௯)

அஅ. சிவஞான முனிவர்

[பாண்டி நாட்டில் விக்கிரம சிங்கபுரம் என்னும் ஊரில் தோன்றியவர். தொல்காப்பியச் சூத்திர விருத்தி, சிவஞான போதச் சிற்றுரை, சிவஞான பேதாமாபாடியம் தருக்க சங்கிரக அன்னம் பட்டிய மொழி பெயர்ப்பு, காஞ்சிப் புராண முதற் காண்டம் முதலியன இவருடைய நூல்களாகும்.]

[தம் விருப்பப்படி அடியார்கட்கு உணவளித்த தாயாரைப் புகழ்ந்து பாடியது]

1027. *அருந்ததியென் னம்மை அடியவர்கட் கென்றும்
திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெய்யும்
மானந் தவாத மயில்.

(அ - ரை.) மானம்தவாத - பெருமை குறைவுபடாத. (சு)

[சமையல்காரனுடைய வினுவுக்குக் கூறிய விடை.]

1028. சற்றே துவையலரை தம்பிஒரு பச்சடிவை
வற்றலே தேனும் வறுத்துவை—குற்றமிலை
காயமிட்டுக் கீரைகடை கம்மென்ன வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி.

(அ - ரை.) காயம்இட்டு - பெருங்காயம் போட்டு.

[திருப்பாதிரிப் புலியூர்க் கோயிலில் சமத்தி பாடி முடிப் போர்க்குக் கொடுப்பதாகக் கட்டிவைத்த பொற்கிழியை வறிய அந்தணன் ஒருவன் அடையும்படி பாடிக் கொடுத்தது.]

1029. வரையேற விட்டமுதஞ் சேந்தனிட
வுண்டனைவல் லினமென்றுலும்
உரையேற விட்டமுத லாகுமோ
வெனைச்சித்தென் றுரைக்கி லென்னும்

---

*இப் பாட்டு திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரான்களுள் ஒருவர் பாடியது எனவும் பேசப்படும்.

நரையேற விட்டமுத னுளவனுக்
கொண்டுநறும் புலிசைமேவும்
கரையேற விட்டமுதல் வரவுன்னை
யன்றியுமோர் கதியுண் டாமோ,

(அ - ரை.) வரையேல் - நீக்காது. வல்லினமென்றாலும் உரையேறவிட்ட முதலாகுமோ? - டற என்னும் எழுத்துக்கள் வல்லினமாயினும் மொழிக்கு முதலில் வருமா? நரையேறு - வெள்ளிய காளை. அவிட்ட முதனுளவன் - திருமால். நறும் புலிசை - நல்ல திருப்பாதிரிப் புலியூர். (உ)

அகூ. சிவஞான முனிவர் முதலிய நால்வர்

[திருவாவடுதுறை யாதீனத்தில் மிக மட்டமான உணவை உண்ண நேர்ந்தபோது வருந்தி ஆளுக்கோ ரடியாகப் பாடியது. அப்போது சிவஞான அடிகள் திருவாவடு துறைக்குப் புதியவராகலின் இவ்வாறு அல்லற்பட்டுப் பாட நேர்ந்தது.]

1030. கொங்கன் வந்து பொங்கினன்
கொழிய ரிசிச் சோற்றினைச்
சங்க மங்கள் கூடியே
சாப்பி டத்தொ டங்கின
அங்கு மிங்கும் பார்க்கிறீர்
அமுதி னிற்கண் இல்லையே
எங்கள் பாவம் எங்கள்பாவம்
எங்கள் பாவம் ஈசனே.

(அ - ரை.) கொங்கன் - கொங்கு நாட்டான். கொழியரிசி - குறுநொய் யரிசி. சங்கமங்கள் - அடியார்கள். (க)

கூ0. தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர்

[சிவஞான முனிவர் மாணவர் பன்னிருவரில் ஒருவர். துறைசைக் கோவை, கலைசைக் கோவை, கலைசைச்சிலேடை வெண்பா, சிதம்பரேசர் வண்ணம், திருத்தணிகைத் திருவிருத்தம் முதலியன இவருடைய நூல்கள்.]

[குருதிருச் சிற்றம்பலவெங்கோ என்று ஒருவர் ஈற்றடி கொடுக்கப் பாடியது]

1031. முனிக்குமுனி யானை முனிந்தே பொதியின்
முனிக்குமுனி யாதளித்த மூர்த்தி—முனிக்குப்
பொருகளிறு நீரூட்டும் பொன்னித் துறைசைக்
குருதிருச் சிற்றம்பலவெங் கோ.

(அ - ரை.) முன் இக்கு முனியானை முனிந்து - முன்பு கரும்பு வில்லையுடைய காமனைச் சினந்து. முனி - வில். பொதியின் முனி - அகத்தியர். முனியாது - சினவாது. முனி - யானைக் கன்று. பொரு - போர் செய்கிற. பொன்னி - காவிரி. துறைசை - திருவாவடுதுறை. (க)

[ஆதீனத்தில் தேவாரப் பணிபுரிந்த குருசாமி யோதுவார் என்பவரைப் புகழ்ந்து பாடியது.]

[கட்டளைக் கலித்துறை.]

1032. ஒருசாமி வாழ்திருக் கோமுத்தி யூர்தனில் உற்பவித்து
வருசாமி யெங்கள் வயித்திய லிங்கம் வலம்புரிந்து
தருசாமி முத்தமிழ்ச் சங்கீத சாமிநற் சாந்தகுணக்
குருசாமி தீங்குரல் எந்நாளும் கோகிலம் கோகிலமே.

(அ - ரை.) கோமுத்தியூர் - திருவாவடுதுறை. தீங்குரல் - இனிய குரல். கோகிலம் கோகிலமே : அடுக்குத் தொடர். கோகிலமே - குயிலிசையே யாம். (உ)

[சில ஆண்டுகள் பிறவிடங்களில் தங்கியிருந்து திருவாவடு துறையை அடைந்த சுப்பிரமணிய முனிவரைப் பார்த்துச் சிலர் தாங்கள் இவ்விடத்தை மறந்துவிட்டீர்கள்போலும் என்றபோது முனிவர் பாடியது.]

[பன்னிருசீர் விருத்தம்]

1033. தெய்வப் பொன்னித் திருநதிசூழ்
சிறப்பும் இருநான் கொருகோடிச்
சித்தர் வாழுந் திருவரசும்
அதன்கீழ் ஒருமா சிலாமணியும்

மைவைத் தனைய இருட்டறையில்
குருட்டா மானும் ஆன்மாக்கண்
மலநோ யகற்றிக் கதியமைப்பான்
வந்தங் கவர்புன் தலைமிது
கைவைத்தருளி முறையேபோற்
கழலுஞ் சூட்டுங் கோமுத்திக்
கருணைக் கடல்பஞ் சாக்கரதே
சிகன்சீர் அடியார் கலந்திருக்குஞ்
சைவத்திருவோ லக்கமுமங்
குண்டேல் கைலை தனையொருகால்
சார்ந்து மீள்வேன் மற்றங்குத்
தரியேன் அங்குத் தரியேனே.

(அ - ரை.) இரு நான்கு ஒரு கோடிச் சித்தர் - ஒன்பது கோடிச் சித்தர்கள். மைவைத்தனைய - மையை வைத்தாற் போன்ற. குருட்டா - குருட்டுப் பசு. (ரு)

நான் திருவாவடுதுறையை விட்டுக் கைலையிற் கூடச் சென்று நிலைத்திருக்கமாட்டேன் என்பது கருத்து.

[திருவாவடுதுறையைப் புகழ்ந்து பாடியது]

[அறுசீர் விருத்தம்.]

1034. எத்தலமும் எந்நதியும் எத்தளியும்
திருமூர்த்தம் எனைத்தும் போதி
மெய்த்தருவோங் கியதுறைசைத் திருநகரும்
காவிரியும் விடையுருச்சோ
அத்திருக்கோ யிலுமாசி லாமணியும்
அதனருகா னந்தவைப்பில்
உத்தமபஞ் சாக்கரசற் குருமணியும்
ஆகியெனை உருக்குமன்றே.

(அ - ரை.) தளி - கோயில். போதி - அரசு. விடை - நந்தி. உருச்சோ - இல்லாத மதில். நாரசிங்கன் என்னும் கொடிய

அசுரன் ஒருவனை வெல்லுமாறு கோமுத்தீசர் திருக்கோயிலின் மதின்மேலிருந்த நந்திகளைத் திருமாளிகைத் தேவர் ஒருருவாக்கி அனுப்பினர் என்பது வரலாறு. (௪)

[வெறி விலக்கல்]

[நேரிசை வெண்பா]

1035. இத்தை யலைநையவுரு வில்லான் விடும்போதே
வைத்த கரை யோதடுக்க மாட்டாதே—கொத்துலவும்
அங்கமுகங் காத்துறைசை அம்பலவா ணன்புயத்தில்
செங்கழுநீர்த் தாரினையே தேடு.

(அ - ரை.) இத் தையல் நைய் - இம் மங்கை மெலியும்படி. உருவு இல்லான் - காமன். விடும்போது ஏவை - ஏவும் மலர் அம்பை. தகர் - ஆடு. ஐயோ தடுக்கமாட்டாது - அம் கமுகம்கா - அழகிய பாக்குப் பொழில். தாரினையே - மாலையையே. (௫)

[இதுவுமது]

1036. இந்தவச மந்தவசந் தன்மலைதற்
கேது செய்யும்
நொந்தவச முற்றுட்கே நோக்குங்கால்—
பைந்தொடியாய்
ஆண்டகுருத் தென்துறைசை
அம்பலவா ணன்புயத்தில்
பூண்டநிறச் செங்கழுநீர்ப் பூ.

(அ - ரை.) இந்த அசம் - இந்த ஆடு. அந்த வசந்தன் மலைதற்கு ஏது செய்யும். நொந்து அவசம். அவசம் - காம மயக்கம். (௬)

[திருவொற்றியூர்ச் சிவபிரான் மீது இயற்றியது]

1037. வல்லவ குளத்திருக்கு மன்னவா வாசமலி
நல்லவ குளத்திருக்கு நாதனே—மெல்ல
வடிவாளைக் கொண்டமணை வாளா கனிச்சி
வடிவாளைக் கொண்டே விடர் மாற்று.

(அ - ரை.) வல்லவ - அளவிலா ஆற்றலுடையவனே. குளம் திருக்கு - நெற்றிக் கண். வகுளத்து இருக்கும் - மகிழ மரத்தினடியில் இருப்பவனே! வடிவாளை - வடிவுடையம்மையை. கணிச்சி வடிவாள் - கூரிய மழுவாயுதம். இடர்மாற்று - துன்பத்தைப் போக்கு. (எ)

[சில செல்வர்களுடன் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்றபோது அவர்கள் வேண்டுகோளின்படி பாடியது.]

[கட்டளைக் கலித்துறை]

1038. திருவல்லிக் கேணி வடிவந்
தனஞ்சொற்கட் சீர்ச்சிலம்ப
திருவல்லிக் கேணிய லல்குமுன்
னேயருள் செய்யவெழுந்
திருவல்லிக் கேணிபஞ் சொல்லிற்கண்
முத்தங்கள் சிந்துங்கண்டாய்
திருவல்லிக் கேணி மருவிய
சங்கத் திருக்கரனே.

(அ - ரை.) திருவல்லிக்கேணி மருவிய சங்கத்திருக்கரனே! திருவல்இக்கு ஏணி - முறையே திருமகளையும் சூதாடு கருவியையும் கரும்பையும் மானையும் போன்ற, வடிவம் தனம் சொல் கண் - வடிவத்தையும் தனத்தையும் சொல்லையும் கண்ணையுமுடைய. சீர் சிலம்பு அதிர்உ வல்லிக்கு - சிறப்புப் பொருந்திய சிலம்புகள் முழங்கப் பெற்ற இந்தக் கொடிபோல்வாளாகிய தலைவிக்கு; ஏண் இயல் அல்கும் முன்னே - வலிமைத் தன்மை கெடும்முன்னே. அருள் செய்ய எழுந்திரு. வல்இக்கேள்-விரைந்து இந்த உறவினர். நிபம் சொல்லின் - பழிமொழிகளைக் கூறுவாராயின், முத்தங்கள் சிந்தும் - முத்துப் போன்ற நீரினைப் பொழியும், சங்கத்திருக்கரன் - சங்கைக் கையிலுடைய திருமால். (அ)

சிலர், முனிவரைப் பார்த்துத், 'தாங்கள் திருமாலைப் பாடலாமா?' என்று கேட்டனர். அதற்கு முனிவர், 'நான் சிவபிரானைத்தான் பாடியுள்ளேன். சங்கத் திருக்கரன் என்பதைச் சங்கம் - நெற்றி, திருக்கு - கண், அரன் - சிவன் என்று பொருள் செய்து பாருங்கள்' என்றார். அவர்களும் அவ்வாறே பார்த்து முனிவர் ஆற்றலைக் கண்டு மகிழ்ந்தனர்.

[சிவஞான முனிவரை வணங்கிப் பாடிய விருத்தங்கள்]

1039. ஓதரிய வாய்மைச் சிவாகமங் கட்கெலாம்
உற்றபே ராகர மதாய்
ஓங்குதிரு வாவடு துறைப்பதியில் அற்புதத் (து)
ஒருவடிவு கொண்டருளியே
பேதமறு சமயவா திகள்உள மயக்கைப்
பெயர்க்கும் ரச குளிகையாகிப்
பிரியமுட னேவந் தடுத்தவர்க் கின்பப்
பெருங்கருணை மேருவாகி
ஆதரித் தடியேங்கள் உண்ணத் தெவிட்டாத
அமிர்தசா கரமாகியே
அழகுபெறுகலைசைச் சிதம்பரே சுரரடிக் (கு)
அதிமதுர கவிதைமாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி என்றுமவர்
மன்னிவளர் சந்நிதியிலோர்
மணிவிளக் கென்னவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்கு வாமே.

(அ - ரை.) ஓதரிய - சொல்லுதற்கரிய. வாய்மை - மெய்மை ஆகரம் - தோன்றுமிடம். அமிர்தசாகரம் - உண்டவரை இறவாது காப்பாற்றும் மருந்துக் கடல். மாரி - மழை. வழுத்த - போற்ற. மன்னி - நிலை பெற்று. (௬)

1040. திண்ணவின்பச் சேவடியும் திருவிழியும் திருமார்பும்
செல்வக் கையும்
நண்ணும்அன்பர்க் கருள்கருணைத் திருமுகமும் பசுங்குழவி
நடையே யாகிப்
புண்ணியத்தின் பொலிவாகி அற்புதக்கோ லக்கொழுந்தாய்ப்
புலைநா யேற்குக்
கண்ணைவிட்டு நீங்காத சிவஞான சற்குருவே
கருணை வாழ்வே.

(அ - ரை.) தின்ண இன்பச் சேவடி - மிகுந்த இன்பத்தைச் செய்யும் திருவடி. புண்ணியம் - நல்வினை. பொலிவு - விளக்கம். புலைநாயேற்கு - இழிந்த நாயேனுக்கு. (௧0)

௯௧. அம்பலவாணத் தம்பிரான்

[சதாசிவ நாவலரின் சொற்பொழிவைப் பாராட்டிப் பாடியது]

1041. வன்மிக நாதன் வரத்தால் அவதரித்த
வன்மிக நாதன் மரபினேன்—வன்மீகர்
தாமோர் தமிழுருவாய்ச் சார்ந்த சதாசிவனை
யாமோ புகழவல்லேம் ஈண்டு.

(அ - ரை.) இவர் இலக்கண விளக்கப் பரம்பரையைச் சேர்ந்தவர், (௧)

௯௨. திருவாவடுதுறைத் தம்பிரான்

[திருவநந்தபுரம் அரசரைக் கண்டு பாடியது]

1042. மாறிடத் துலவு வேற்படை வஞ்சி
மன்னவ செந்தமிழ் மயில்யாம்
கூறுமு வேந்தர் திருமுடி துளக்கக்
குலவினேம் நின்குலத் தொருவன்
ஆறுசேர் சடையான் அவைமுனம் நம்மை
அணிசெய்தான் ஆரியப் பொதுப்பெண்
சீறுமென் றுணர்ந்தாய் நீயிவன் மதியாய்
திருமுனி மலயமே குதுமே.

(அ - ரை.) மாறிடத் துலவு-பகைவர்கள் கூட்டத்திடையே உலாவுகின்ற. திருமுடி துளக்க - தலையசைக்க, நின் குலத்தொருவன் - சேரமான் பெருமாள் நாயனார். அணி செய்தான் - திருக்கைலாய ஞான உலா அரங்கேற்றத்தால் பெருமைப்படுத்தினான். ஆரியப் பொதுப்பெண் - வடமொழி. மலயம் - பொதியமலை. தமிழ் மொழியை மதிக்காது வடமொழியை மதிக்கின்றாய் ஆதலாற் பொதியமலை செல்கின்றேம் என்பது கருத்து. (௧)

௯௩. களவுக்குச் சென்ற புலவர்

[புலவர் ஒருவர் கள்ளர்களுடன் களவாடுதற்குச் சென்றார். பெருநிலக் கிழவர் ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்து வீட்டினரின் உடன்பாட்டோடு ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு சென்று திறந்து பார்த்தார். உள்ளே வாண உப்பு இருந்தது. அப்பொழுது பாடியது.]

1043. நாடெலாஞ் செந்நெல் விளையினும் நாட்டின்
நதியெலாம் நவமணி தரினும்
காடெலாம் ஆடை காய்க்கினும் மேகம் கனகமே
பொழியினும் மடவாய்!
ஆடலே புரியும் அம்பல வாணர் அவரவர்க்
கமைத்ததே யல்லால்
வீடெலாம் கிடந்து புரண்டுருண் டழினும்
விதியலால் வேறுமொன் றுளதோ.

(அ - ரை.) கனகம் - பொன். ஆடல் - திருக்கூத்து. எல்லாம் ஊழ்வினைப்படி நடக்கும் என்பது கருத்து. நல்ல ஊழ் இல்லாத ஒருவனுக்கு, நாட்டில் நெல் விளையினும் கிடையாது; நதிநவமணிகொண்டுவரினும் கிட்டாது; காட்டில் ஆடை காய்த்தாலும் உடை கிடையாது; பொன் மழை பொழிந்தாலும் பொன் கிட்டாது என்பது. (க)

௯௪. நம்பிகாளி

[இவர் வாழ்ந்திருந்த காலம் இடம் முதலியன விளங்கவில்லை]

[பட்டமரந் தழைக்கப் பாடியது.]

1044. தெய்வத்தமிழென்னுஞ் செம்மொழியும் அம்மொழிநேர்
செய்விப்பர் தேவ ரெனல்தேறத்—தெய்வஞ்
சுரந்தவிக்கு மாநெருவூர்ச் சோலையிலே பட்ட
மரந்தவிர்க்க இன்று வளர்ந்து.

(அ - ரை.) நெருவூர் - ஓர் ஊர். இச் செய்யுளைப் பாடிய அளவிற் பட்டமரந் தழைத்ததென்பர். (க)

௬௫. மதுர கவிகள்

[உடையான் என்பவன் தமக்குச் செய்த தீமையை நீக்கி உதவிய ஆருயிரம் என்பவனைப் புகழ்ந்துரைத்தது.]

1045. காக்கைக் குளமாங் கடிமலர்ப்பூம் பொய்கை
ஊர்க்குட் கராவாம் உடையானே—நீர்க்குவந்த
வாரணமே நல்ல மதுரகவி நேமிதொட்ட
ஆரணனே ஆரு யிரம்.

(அ - ரை.) இதனுட் புலவர் தம்மை நீர்க்குச் சென்ற யானையாகவும் தமக்குத் தீமை செய்தானை முதலையாகவும் தீமையை விலக்கிய ஆருயிரத்தைத் திருமாலாகவும் அவருடைய ஊராகிய காக்கைக் குளத்தைப் பொய்கையாகவும் உவமை செய்துள்ள அழகைக் காண்க. கரா - முதலை. (க)

௬௬. சிறிய இரத்தின கவிராயர்

[இவர் பாண்டிவளநாட்டில் திருவைகுண்டத்தில் வாழ்ந்திருந்தவர் என்பர்]

[இரசை. வடமலைப்பிள்ளை மீது பாடியன]

1046. ஏர்விற்றுப் பார்விற் றுடைமையெல்
லாம்விற் றிருந்தமனைச்
சீர்விற் றனமுன்னைக் காணுத
முன்தெரி சித்தபின்பு
போர்விற் றடக்கை யிரையூர்
வடமலைப் பூபதிநின்
பேர்விற்று முன்விற்ற தெல்லாம்
மறுபடி பெற்றனமே.

(அ - ரை.) பார் - பூமி. மனைச்சீர் - வீட்டிலிருந்த சிறந்த பொருள்கள். இரையூர் - இரசை. (க)

1047. கூலிக்கு நான்செல்வ தோவெம்ம
ஹோர்நின் கொழுங்கருணை
வேலிக்குள் நின்ற பயிரல்ல
வோவெறுங் கான்புகுந்த

நீலிக்கும் ராவணன் மோலிக்கும்
கும்ப நிகும்பனுக்கும்
வாலிக்கும் வாளிதொட்டாயிரை
யூரில் வடமலையே.

(அ - ரை.) வேலி - அடைப்பு. கான் - காடு. நீலி - அரக்கியான தாடகை. மோலி - முடி. வாளி - அம்பு. திருமாலின் கூறாகப் பாடுகிறார். (உ)

1048. பாடுவன் பாடுவ தல்லாமல்
பாவலர் பாடலுங்கொண்
டாடுவன் செய்ய விரையூர்
வடமலை யன்றிப்புல்லன்
தேடுவன் தேடிப் புதைப்பா
னவனுக்குச் செந்தமிழென்
வேடுவன் சேரியி லெவ்வாறு
நானம் விலைச்செல்வதே.

(அ - ரை.) வேடுவச் சேரியில் கத்தூரி விலையாகாது. நானம் - கத்தூரி. (ந)

1049. கோதிச்சிக் கின்றி முடிக்கின்ற
மாலைக் குழலிவிடு
தூதிச்சிக் கின்றுசெங் காவிநல்
காய்துணைக் கண்கறுத்து
மோதிச்சிக் கென்று பணைத்திறு
மாந்த முகிழ்முலைப்பூ
மாதிச்சிக் கின்றபொன் மார்பா
விரசை வடமலையே

(அ - ரை.) கோதி - சிக்கு. தூதிச்சி - தூது செல்பவள். சிக்கென்று பணைத்தல் - வலிதாய்ப் பெருத்தல். சிக்கு + இன்றி - முடிச்சு இல்லாமல். முகிழ் - அரும்பு. பூமாது - திருமகள். இச்சிக்கின்ற - விரும்புகின்ற. திருமகள் விரும்புமார்பா என்பது. (ச)

1050. ஈர்க்கிடை போகாப் பெருமுலை
மாலை யிளம்பிறையால்
பார்க்கிடையானது பார்க்கிலை
யேபொதிர் பாறிட்டொன்னர்
நீர்க்கிடை போனெகி ழாமனம்
பேதிக்க நேரிடும்போர்
வார்க்கிடை வேற்கை யுடையா
யிரசை வடமலையே.

(அ - ரை.) பார்க்கிடையானது-நிலத்தில் படுக்கையானது. நீர்க்கிடை - நீரிலுள்ள நெட்டி. வார்க்கு இடைவேல் - தோல் உறையுள் இடப்பெற்ற வேல். ஈர்க்கு+இடை எனப்பிரிக்க. ஈர்க்கு - இலை நடுவேயிருக்கும் ஒரு சிறிய நரம்புபோன்ற உறுப்பு. ஒன்னார் - பகைவர். பேதிக்க - வேறுபட. (இ)

1051. முடக்கால் வளைக்கும் பிறைக்கிற்றுக்
கண்டபின் மோகமென்னல்
அடக்கா வகைகை கடந்ததெண்
ணுனமர்க் குந்தமிழ்க்கும்
இடக்கா லெனினு மொருக்கால்
மனங்கொண் டெடுத்தவடி
மடக்கா முழுவல் லமையா
ளிரசை வடமலையே.

(அ - ரை.) முடக்கால் - வளைவின்படி. கை கடந்தது - அளவு கடந்தது. அமர்க்கு இடது காலெனினும் அவ்வடியை மடக்காமல் செல்லும் முழுவல்லமை என்க. தமிழ்க்கு மறைக் குஞ் சொல்லினும் அடி மடக்காகவும் பாடும் முழுவல்லமை என்க. (கூ)

1052. இரவசப் பதியில் வடமலை ராயன்றே
வேந்திரனென்னப்
புரவசக் கவிற்றிற் பவனிவந் தான்வந்த
போதிலென்பெண்

ணரசைக் குறித்தின்று போர்க்கோலங்
கொண்ட அனங்கன் வெற்றி
முரசைப் பறித்துடைப் பாரில்லை
யோவமர் மூளுமுன்னே.

(அ - ரை.) பவனி - திருவுலா. அனங்கன் - காமன். வெற்றி மூாசு - கடல். பெண்ணரசு - பெண்களிற் சிறந்தவள். (எ)

௯௭. முத்துக்குட்டிப் புலவர்

[இராமநாதபுரத்திலுள்ள பரத்தை வயல் என்பது இவருடைய ஊர். வசைபாடுதலில் வல்லவர். வாக்குப் பலிதமுள்ளவராதலின் ஒருவரை வாழச் செய்யவுந் தாழச் செய்யவும் வல்லவர்.]

[திருவருளால் உணவு கிடைக்கப் பெற்றபொழுது பாடியது.]

1053. ஊருண் டுறங்கி ஒருசாம மாயிற்றிவ் வூர்தனிலே
நீரும் பருக்கையும் ஆர்தருவார் இந்த நேரமென்றேன்
மூரன் மலர்மங்கை மார்பா! சவுமிய மூர்த்தி! உன்றன்
தேருந் தருங்கட்டிச் சோறுங் கடற்கரைச் சீனியுமே.

(அ - ரை.) மூரல் - பல்.

[தாய் தந்தையரைப் புகழ்ந்து பாடியது]

1054. தருமனி யாந்தான் டவராய சாமியென் தந்தையவன்
திருமனை யான்முத்துத் தாயுல கேத்துஞ் செயலக்குமி
இருவரு மீன்ற தமிழ்முத்துக் குட்டியென் பேனவர்தம்
பெருமையை நீடுழி காலமு மேத்திப் பெருகுவனே.

(அ - ரை.) பெருகுவன் - ஏத்துதலால் பெருமையை அடைவேன். (க)

[நல்ல தம்பி என்பவன் பொல்லாதவனுக இருந்தான். அவன் மீது பிள்ளைத் தமிழ் பாடினுல் பரிசு பெறலாமென்று சிலர் கூறினர். அவன் மீது பிள்ளைத்தமிழ், பாடுவதைவிடக் கொள்ளைத் தமிழ் பாடுவதுதான் நல்லது என்று இவர் பாடியன.]

1055. பட்ட விளக்கு மாற்றினுக்கோர்
பட்டுக் கயிறு தரித்தாற்போல்
இட்ட பெயரே நல்லதம்பி
என்றே நினக்கிட் டிசைத்தவரார்
எட்டிப் பழமே பழஞ்செருப்பே
எள்ளத் தனையு நாணமிலா
மட்டிப் பயலே நல்லதம்பி
மடவோய் சாகாய் வாழ்வாயோ

(அ - ரை.) மட்டிப்பயல் - அறிவில்லாதவன். (உ)

1056. நல்லதம்பி யென்றொருவன்
நாட்டரசன் கோட்டையிலே
அல்லனென்று போனனென்
றுள்வந்தான் அம்மானை
அல்லனென்று போனனென்
றுள்வந்தா னுமாயின்
சொல்லவந்த தூதுவனுந்
தோட்டிகாண் அம்மானை
தோட்டியலன் கூடநின்று
கூட்டவன்காண் அம்மானை.

(அ - ரை.) அல்லனென்று போனன் - இல்லையென்று ஒழிந்தான். (ங)

கூஅ. நமசிவாயக் கவிராயர்

[சேதுபதியைக் காணும் பொருட்டுப் பல நாள் காத்திருந்தும் காண முடியாமற் பாடியது.]

1057. முத்தலை சிந்தும் பொருநா நதித்துறை மூழ்கியெழுந்
தத்தலை நின்று விடாயாறிக் கல்வி யளைந்துநறுங்
கொத்தலர் சண்பகக் காவோடு நின்று குலாவியயான்
இத்தலை வந்துன் கடைத்தலை காத்த திளந்தலையே.

(அ - ரை.) முத்தலை சிந்தும் - முத்துக்களைச் சிதறுகின்ற அலைகளையுடைய. அத்தலை - அவ்விடம். விடாய் - வேட்கை. கடைத்தலை - தலைவாசல். இளந் தலை - இழிவு. (க)

[தம்முடைய பெருமையால் தம் பணியாள் ஒருவனைப் பாடச் செய்விக்க அவன் பாடியது.]

1058. பாவுக்குள் ளேயரன் பாதிக்குள் ளேபன் னிரண்டுமடற்
பூவுக்குள் ளேநவ கோணத்தி லேதன் பொதியவரைக்
காவுக்குள் ளேவந்து நின்றதல் லாலுல காம்பிகையென்
நாவுக்குள் ளேவந்து நின்றுடன் கீர்த்தி நடத்தவென்றே.

(அ - ரை.) பாவுக்குள்ளே - பாடலுக்குள்ளே. (உ)

[தமது இறுதிக் காலந்திற் பாடியது]

1059. பாரிலே நமக்கொருவர் நிகரோ தென்றல்
பருவத்து வருதாம்ப்ர பரணி யாற்று
நீரிலே மூழ்கிவினை யொழிந்தோஞ் சைவ
நெறியிலே நின்றுநிலை பெற்றேஞ் சிங்கை
யூரிலே குடியிருந்தோ மெமது கீர்த்தி
உலகமெலாம் புகழ்ந்தேத்த உலக மாதின்
பேரிலே கவிதையெலாஞ் சொன்னேஞ் சொன்னேம்
பிறப்பிலெழு பிறப்புமறப் பெறுகின்றேமே.

(அ - ரை.) சிங்கை-விக்ரம சிங்கபுரம். இப்புலவர் சிவஞான முனிவரின் பெரிய தந்தையாரென்ப. உலகமாது - இறைவி.

ருகைல. சைவக் குருவும் செட்டியாரும்

[ஒரு சைவக் குருவும் செட்டியாரும் குறுக்குத் துறையில் பூசனை புரியும்போது, செட்டியாருடைய பரிவட்டத்தில் ஒன்றை விரும்பிச் சைவக்குரு பாடியது.]

1060. நரிவட்டம் இடுங்களத்தில் அந்தகா சுரனைவென்ற
நம்பா செம்பொற்
கிரிவட்டத் தனத்துமையாள் பங்காளா எளியன்மொழி
கேளா தேனே

கரிவட்டத் துரிபுனைந்த குறையோ நஞ்செட்டியார்
கையின் மேவும்
பரிவட்டந் தனில்நினைவோ வேண்டுமென்றால் அவரதனைப்
பாலிப் பாரே.

(அ - ரை.) நம்பா - சிவனே. கரிவட்டத்துரி - யானைத் தோல் பரிவட்டம் - இறைவனுக்குச் சாத்தும் ஆடை. (க)

[பரிவட்டம் கொடுக்க முடியாதென்பதைச் செட்டியார் புலப்படுத்திப் பாடியது.]

1061. கொத்தாரும் குழலுமையாள் வாழும் பங்கில்
கோமானே எளியன்மொழி கொள்ளா தேனே
அத்தார்க ளாணையென தையன் ஆணை
அம்மைமேல் ஆணைஉயர் அண்டர் ஆணை
பத்தார்கள் ஆணையுன்றன் பாதத் தாணை
பண்டாரந் தொண்டைகட்டப் பாடிப் பாடிச்
செத்தாலும் எலும்பெலும்பாய்த் தேய்ந்திட் டாலும்
தேவரீர் உடைமை யொன்றுஞ் செலவி டேனே.

(அ - ரை.) அண்டர் - தேவர். பத்தார்கள் - பக்தர்கள். அத்தார் - பெரியோர். (உ)

கூ00. சிந்தாமணிப் புலவர்

[ஒரு பெரு நிலக் கிழவரைக் கண்டு தம்முடைய வறுமைப் புலியைக் கொல்ல வேண்டுமென்று பாடியது]

1062. பையா டரவணி சொக்கேசர் கூடற் பதியைவிட்டு
வையா புரிக்கு வரும்வழி யேவழி தான்மறித்து
மெய்யா வறுமைப் புலிதான் மிகவும் வெருட்டுகின்ற
தையாதென் போடை யதிபா புலவர்க் கருள்நிதியே.

(அ - ரை.) பை ஆடு அரவு அணி - படமெடுத்து ஆடுகின்ற பாம்பினையணிந்த. போடை -போடி நாயக்கனூர்.

௧௦௧. சுப்பையர்

[இலட்டுத் தின்றபொழுது இலட்டுச் சுவையைத் தூக்கக் கூறிய பிச்சுவையரை நோக்கிப் பாடியது. இவர் பிச்சுவையரின் மாணவர்.]

1063. எச்சகமும் புகழ்படைத்த தென்னூற்று மலைமருதப்
பேந்த்ரன் போற்றும்
நச்சரவில் நடிப்பவர்க்கு நைவேதித் திட்டதிவ்ய
லாடு லட்டு
வெச்சுவச்சுத் தின்றுதின்று வயிறுகுறையாமல்மிக
வருந்தும் வேளை
இச்சுவையைப் பிச்சுவையா என்தலையில் ஏற்றுவதும்
இயல்பு தானே.

(அ - ரை.) நச்சரவு - நஞ்சுப் பாம்பு. (௧)

[சுப்பம்மாள் என்னும் ஒரு பார்ப்பனி வைத்த ரசத்தை வியந்து பாடியது.]

1064. சோம ரசம்பேட்டைச் சுப்பம்மாள் வைத்தரசம்
காமரச மெல்லாங் கசக்குமே—நேமமுடன்
அன்னத்தைக் கண்டக்கால் அன்னம் வெளுப்படையும்
என்னத்தைச் சொல்வேன் இனி.

(அ - ரை.) நேமம் - ஒழுங்கு. அன்னம் - சோறு. அன்னம்-வெளுப்படைதல், சோற்றின் வெண்மைக்குத் தோற்று. (௨)

௧௦௨. மகாதேவ பாரதி

[புலவர்கள் கூடிய அவையில் பங்காவை யிழுத்தபோது அந்தணராகிய நீவிர் இவ்வாறு இழுக்கலாமா? என்று கேட்டவர்களைப் பார்த்துப் பாடியது.]

1065. கொங்கார் பொழில்புடை சூழ்முக வாபுரிக் கொற்றவனும்
மங்காத சீர்த்தி வளர்பாற் கரமுகில் மாப்பிள்ளையின்
சிங்கார மாளிகை யிற்புல வோர்க்குச் சிரத்தையுடன்
பங்கா இழுப்பதென் முன்னோர்கள் செய்நிட்டபாக்கியமே.

(அ- ரை.) முகவாபுரி - இராமநாதபுரம். மங்காத - கெடாத. பங்கா - காற்றெழுப்புங் கருவி. (க)

க0௩. சின்ன நல்லப்ப உடையார்

[தம் குருவாகிய குரு நமச்சிவாயரைப் பாராட்டிப் பாடியன]

வெண்பா

1066. நன்னூலுங் காரிகையும் நன்ருந் திவாகரமும்
பன்னூலும் ஆராய்ந்து பார்ப்பதேன்—எந்நூலும்
கொண்டாடும் தில்லைக் குருநமச்சி வாயர்முகம்
கண்டாலும் உண்டே கதி.

(அ - ரை.) பன்னூல் - பல நூல்கள். (க)

1067. கீதம் பரதங் கிளருங் கலைஞானம்
வேதம் பரிமளிக்க வீசுமே—சீதக்
கொழுந்திருக்கும் தில்லைக் குருநமச்சி வாயர்
தழைந்திருக்கு மாத்தானந் தான்.

(அ - ரை.) கீதம் - இசை. பரதம் - கூத்து. கிளரும் - விளங்குகின்ற. தழைந்திருக்கும் - செழித்திருக்கும். மாத்தானம் - சிறந்த இடம். (உ)

க0௪. பாலசரசுவதி சுப்பிரமணியக் கவிராயர்

[இவரைப்பற்றிய செய்தி விளங்கவில்லை. உடையார் பாளையம் முதலிய விடங்களில் வசித்திருந்தார் ஏன்று தெரிகிறது]

[கச்சிரங்கதுரையைப் புகழ்ந்து பாடியது]

1068. கல்லாட மேமுதலாக் கற்றுணர்ந்தாய் கல்விபெற்ருேர்
பல்லாடக் கூடுமோ பார்வேந்தே—சொல்லாடும்
கச்சிரங்க சாமியெனுங் காலாட்கள் தோழாநீ
வச்சிரதே கம்பெற்று வாழ்.

(அ - ரை.) பல்லாடக் கூடுமோ - எதிர் மொழியாடக் கூடுமோ? (க)

1069. திருமால்மண் உண்ணுமல் சிவனும் நஞ்சைத்
தின்னுமல் செங்கமலப் பொருட்டு வேதன்
உருமாறி யன்னமெனப் பறந்தி டாமல்
உயர்மறையோன் வடிவின்வந்தே யன்ன முண்ணக்
கருமால்நேர் கரதலக்கல் யாண ரங்கக்
காலாட்கள் தோழமன்னர் கருத்து வந்தே
வருமாம தனத்தூரில் அன்ன சத்ரம்
வைத்திட்டார் எவரும்வந்து துய்த்திட் டாரே.

(அ - ரை.) மறையோர் வடிவில் வந்து-பார்ப்பனக் கோலத்தோடு வந்து. கருமால் - கரிய திருமால். (உ)

கஙரு. சண்பக மன்னர்

[தம்மிடம் ஒழுங்காகப் பாடங் கேட்காத அதிகாரியின் நடத்தையைக் குறித்துப் பாடியது]

(வெண்பா)

1070. பொருள்போம் புகழ்போம் புலேத்தன்மை சேரும்
அருள்போம் அழகுபோம் அல்லால்—தெருள்போகும்
கல்லாத நெஞ்சக் கயவர்பாற் சேர்ப்பிக்கும்
பொல்லாத மாந்தர் புணர்ப்பு.

(அ - ரை.) தெருள் - அறிவு. புணர்ப்பு - சேர்க்கை. (க)

கஙசு. ஐயா வையங்கார்

[அரியிலூர் நரசிங்கப் பெருமாளேப் பாடியது]

கட்டளேக் கலிப்பா

1071. வஞ்ச மாரு மனத்தரைக் காவென்று
வாழ்த்தி வூழ்த்தி மனதுபுண் ணுகவே
பஞ்ச காலத்தில் பிள்ளேவிற் பார்கள்போல்
ப்ரபந்தம் விற்றுப் பரிசுபெ ருமலே

நெஞ்சம் வாடி இளைத்துநொந் தேனையா
நிந்த நின்மல நின்னடி தஞ்சங்காண்
செஞ்சொல் நாவலர் போற்றவெந் நாளிலும்
செழித்து வாழரி யில்நர சிங்கமே.

(அ - ரை.) ஆரும் - பொருந்திய. கா-கற்பக மரம், அல்லது காப்பாற்றுவாயாக. பிரபந்தம் - புகழ் நூல். அரியில் நரசிங்கமே - அரியிலூரில் எழுந்தருளிய நரசிங்கப் பெருமாளே. (க)

கoஎ. பூதைத்தாயார்

[ஊற்றுமலைப் பெருநிலக் கிழார் மனைவியார் இவர். தம்முடைய மூத்த மகனால் அடிக்கப் பெற்ற இளைய மகன் அழுதுகொண்டு ஓடி வந்து, 'அண்ணன் அடித்துவிட்டான்' என்று சொன்னபொழுது பாடியது.]

1072. தேரோடு நின்று தெருவோ டலைகிற செய்திதனை
ஆரோடு சொல்லி முறையிடுவோ மிந்த அம்புவியில்
சீரோடு நாமும் நடந்துகொண் டாலிந்தத் தீவினைதான்
வாரா தடாதம்பி சீவல ராய மருதப்பனே.

(அ - ரை.) அம்புவி - உலகம். கணவர், பகைவர்களால் கொல்லப்பட்ட பிறகு தென்காசியில் தனித்திருந்தபொழுது பாடியதாகலின் இவ்வாறு பாடினார். (க)

[தமக்குப் பேருதவி செய்த பொன்னம்பலம் பிள்ளையின் நன்றியைப் பாராட்டிப் பாடியது.]

1073. கூட்டினுன் மிருந்தபா ளையக்காரர்
சேகரத்தைக் குறைவா ரமல்
சூட்டினுன் மணிமகுடந் துரைபெரிய
சாமிசெய்யுஞ் சுகிர்தத் தாலே
தீட்டினுன் அம்பலம்பொன் னம்பலத்தான்
திரிகூட மலையிற் கீர்த்தி
நாட்டினுன் ஊற்றுமலை நாட்டரசு
தழைக்கநிலை நாட்டி னுனே.

(அ - ரை.) சுகிர்தம் - நன்மை. அம்பலம் - திருக்குற்ருலத்திலுள்ள சித்திர சபை. (௨)

௧௦அ. இராமசாமிக் கவிராயர்

[இவர் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர். தனிப் பாடல்களைத் தவிர வேறு நூல்கள் இவர் பெயரால் வெளிவந்தில.]

[மணலி சோலையப்ப முதலியார் மீது பாடியது]

[தலைவி கூற்று]

1074. மாலைதனைப் புனைந்தாலும் மலரணையில் படுத்தாலு
மருவார் பன்னீர்
ஏலமுறத் தெளித்தாலு மெவ்வளவே னுங்குளிர
விலையென் செய்வேன்
கோலமுறு மணலியிலே கிளைகளொடு சுகம்படைத்துக்
குலாவு மெங்கள்
சோலைதனைச் சேராமற் காமவிடாய் தணியாதே
தோகை மாரே.

(அ - ரை.) மருவார் பன்னீர் ஏலமுறத் தெளித்தாலும் - வாசனை நிறைந்த பன்னீரைப் போதுமான அளவு நன்ருகத் தெளித்துக் கொண்டாலும், சிறிதுகூட உடம்பு குளிர்ச்சி அடையவில்லை. (௧)

[தோழிதூது]

1075. பாலைநிகர் மொழிமாதே யென்னிடத்திற்
பூரணமாய்ப் பட்சம் வைத்துக்
காலமுகில் அனையகரன் மணலியில்வாழ்
சோலையெனுங் கன்னன் பாற்போய்
மாலைகேள் மறுத்தாலென் மனத்தைக்கேண்
மறுக்கில்மதன் வாரா வண்ணம்
ஓலைகேள் மறுத்தக்காற் கிள்ளைக்குக்
கேள்வேருென் ருேதி டாயே.

(அ - ரை.) காலமுகில் அனையகரன் - பருவத்திற் பெய்யும் மழையைப் போன்ற கையையுடையவன். மதன் வாராவண்ணம் ஓலைகேள் - மன்மதன் வந்து துன்புறுத்தாதபடி அவனைக் கண்டிக்க ஓலைச் சுருள் கேட்பாயாக. கிள்ளாக்குக் கேள் - சிறு சீட்டுக்கேள். (உ)

[திருத்தணிகைப் பெருமான் மீது தலைவி கூற்று]

1076. அரக்கனலை யிலங்கையைவென் றோன்மருகன்
றணிகேச னன்பர் பானெஞ்
சிரக்கனலை யாமலனைக் காப்பானென்
றனையடிதே மொழியே மாலை
வரக்கனலை மதிவிசப் படுமோவவ்
வேளைதனில் வாதுக் கேம
துரக்கனலை மதப்பயலென் முனங்குனிக்கத்
தருமோசொற் றேகை நீயே.

(அ - ரை.) அரக்கன் அலை இலங்கை - இராவணனுடைய கடல் சூழ்ந்த இலங்கை. அன்பர்பால் நெஞ்சு இரக்கன் - அன்பரிடத்திற் கனிவான உள்ளமுடையவன். மாலைவர மதிகனலை வீசப்படுமோ - சாயங்காலம் வரும்போது திங்கள் தீயைக் கிரணமாக விடலாமா. மதுரக் கனலை - இனிய கரும்பை. குனிக்கத் தருமா - வளைப்பது தக்கதா. கனல் - கன்னல்; இடைக்குறை.

[சிவன் திருமால் தொடர்பைப்பற்றியது]

1077. தன்மனை யிரத மாக்கித் தன்மகன் வலவ னுக்கித்
தன்மகன் பேர னேடு தனக்குமைத் துனன்கா லாக்கித்
தன்னனை நாரி யாக்கித் தானுமோ ரம்பு மானுன்
தன்மன மிடங்கொண் டுய்த்த சங்கரன் றனக்கு மாயன்.

(அ - ரை.) தன்மனம் இடம்கொண்டு உய்த்த சங்கரன் தனக்கு மாயன் - தன் மனக் கருத்தின்படி தனது இடப்பாகத்தில் தன்னை வைத்துக் காப்பாற்றிய சிவபெருமானுக்கு விண்டுவானவர், தன்மனை இரதமாக்கி - தன்னுடைய மனைவியாகிய பூதேவியைத் தேராயிருக்கும்படி செய்து. தன்மகன் வலவனுக்கி - தன்னுடைய புதல்வனாகிய அயனைத் தேர்ப்பாகனாக்கி, தன்மகன் பேரனோடு தனக்கு மைத்துனன் காலாக்கி - தன் புதல்வனுக்குப்

பேரனாகிய பகலவனையும் தனக்கு மைத்துனனாகிய சந்திரனையும் அதற்குச் சக்கரங்களாக்கியும், தன் அணை நாரியாக்கி - தன் படுக்கையாகிய ஆதிசேடனை நாணாக்கி, தானும் ஓர் அம்பும் ஆனான் - தானும் ஒப்பற்ற கணையாக விளங்கினான். (ச)

1078. முன்னொரு ஊரின் பேரா முதலெழுத் தில்லா விட்டால்
நன்னகர் மன்னர் பேரா நடுவெழுத் தில்லா விட்டால்
கன்னமா மிருகத்தின்பேர் கடையெழுத் தில்லா விட்டால்
உன்னிய தேனின் பேரா மூரின் பேர் விளம்பு வாயே.

(அ - ரை.) (மதுரை - துரை - மரை - மது.) (ரு)

[புதுக்கோட்டைத் தொண்டைமானைப் புகழ்ந்து பாடியது]

1079. புதுவை முத்துக்குமரதொண்டன் றமிழ்போலக் கவிமதுரம்
பொழியப் பாடும்
சதுரருண்டோ வெனவிரிஞ்சன் வினவினுன் சேடனுன்
ருனென் ருனோர்
பதமெனினுந் தோன்றுமல் மால்கொண்டு கடல்விழ்ந்தான்
பதுமன் சீறி
மதமுறுநா வைப்பிளந்து காதறுத்து மண்சுமக்க
வைத்திட் டானே.

(அ - ரை.) ஓர் பதமெனினுந் தோன்றுமல் மால்கொண்டு கடல் வீழ்ந்தான் - பாடல் சொல்லத் தொடங்கியபோது ஒரு சொல்லும் வாயிலுதிக்கப் பெறுமல் மயக்கங்கொண்டு (திருமாலைச் சுமந்துகொண்டு) திருப்பாற் கடலிற் கிடந்தான். பதுமன் சீறி - நான்முகன் சீற்றங்கொண்டு. மதமுறு - செருக்குடைய. (சு)

[கிளிவிடு தூது]

1080. மதுகரத்தை யிகழ்ந்துகுயில் வடிவேலர் தமையழைத்து
வருவே னென்றே
இதமுரைத்துச் சென்றதென்ன வின்னமுங்காணேனதனுக்
கிரக்க மேது

சதமிதென வளர்த்தெடுத்த தாய்க்குதவா தார்க்குதவுந்
தத்தை யேநீ
முதுமறைதேர் குமரர்தமை யழைத்துவா மதப்பயலே
முடுக்கத் தானே.

(அ - ரை.) மதுகரத்தை யிகழ்ந்து - வண்டைக் குறைகூறி. சதம் இது என - இதைத் தஞ்சம் என்று எண்ணி. முடுக்க - ஓட்டுவதற்காக. தாய்க்குதவாதது-தாயாகிய காக்கை கொத்தி. எ)

[தியாகரைப் புகழ்ந்து பாடியது]

1081. குருமூர்த்த மாய்வந்து வினையொழித்து
முத்திதனைக் கொடுக்கத் தியாகர்
ஒருமூர்த்தி யல்லாமல் மற்றுமொரு
மூர்த்திகளு முண்டோ நெஞ்சே
திரிமூர்த்தி யென்பார்கள் அவரவர்வா
கனமேறிச் சேணிற் சும்மா
திரிமூர்த்தி யல்லாமல் ஒருமூர்த்தி
யுங்கதியிற் சேர்த்தி டாரே.

(அ - ரை.) திரிமூர்த்தி யென்பார்கள் - மும் மூர்த்தியென்று சொல்லப்படுகின்றவர்கள். அவரவர் வாகன மேறிச் சேணில் சும்மா திரி மூர்த்தியல்லாமல்-தத்தம் ஊர்திகளிலேறி வானத்திற் பயன் தராது திரிகின்ற மூர்த்திகளேயல்லாமல். (அ

[நற்றுயிரங்கல்]

1082. இருக்கோல மிடுங்கலைசைத் தெய்வசிகா மணிமுகில்வந்
திணங்கா நாளில்
உருக்கோல வடிவானுன் மைந்தனுமைத் துன்னுநிந
மோய்வி லாமல்
மருக்கோலஞ் செய்வதினும் வடவனலைச் சொரிவதினு
மயக்க முற்றுத்
திருக்கோலங் கொண்டமகள் தயங்குகின்றாள்
மயங்குகின்றாள் தினமுந் தானே.

(அ - ரை.) இருக்கோலம் இடுங்கலைசை - வேதங்கள் கடவுளை ஓலமிட்டுக் கூவுகின்ற கலைசைப் பதியில். உருக்கோல வடிவானுன் மைந்தனும் மைத்துனனும் - பன்றி வடிவெடுத்த திருமாலின் புதல்வனுகிய மன்மதனும் மைத்துனனுகிய திங்களும். திருக்கோலங் கொண்ட மகள் - திருமகள் போன்ற வடிவுடைய என் மகள். (மைந்தன்) மருகோல் அஞ்சு எய்வதினும் - மணம் பொருந்திய அம்பு ஐந்தை எய்வதாலும். (மைத்துனன்) வடவனலைச் சொரிவதினும். (கூ)

[தலைவி கூற்று]

1083. முந்தனத்தைத் தூதுவிட்டேன் வரவுமில்லை
மதராசன் முனிந்தே வில்லால்
எந்தனத்துக் கிலக்காக மலர்வாளி
யெய்கின்ரு னினியென் செய்வேன்
கந்தனத்தை யகலாத பூம்பாவை
வேலப்பன் கையாற் பூசுஞ்
சந்தனத்தைச் சவ்வாதை நினைந்துமன
துருகுதடி தையலாரே.

(அ - ரை.) கந்தனத்தை அகலாத பூம்பாவை வேலப்பன் - முருகனுடைய அத்தையாகிய திருமகளை நீங்காத (செல்வம் நீங்காத) பூம்பாவை வேலப்பனென்னும் வள்ளல். (கо)

[வெறி விலக்கல்]

1084. குருத்துக் கதலிப் பசுந்தேனை
யள்ளிக் குரங்குகுட்டிக்
கருந்திக் களிக்குங் குறுங்குடி
வாழ்தரு மன்னல்வெற்பில்
பருத்திப் பொதிக்கிட்ட தீப்போலக்
காமம் படைத்தவிந்த
ஒருத்திக் கொருவன் பகையோ
நடுச்சொல்லு மூரவரே.

(அ - ரை.) ஒருவன் பகையோ-ஆடு வலுத்த எதிரியாகுமோ (ஏன் கொல்லுகிறீர்கள் என விலக்கினள் பாங்கி) ஒருத்திக்கு ஒருவன் பகையோ என்ற வெளிப்பொருட் சொன்னயம் காண்க.

க௦சஅ. அட்டாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர்

[பாண்டி நாட்டில் முதுகுளத்தூரிலே வேளாளர் குலத்தில் பிறந்தவர். சிவஞான முனிவரின் மாணவராகிய சோமசுந்தரம் பிள்ளையிடம் கல்வி கற்றுத் தேர்ந்தவர். முத்துராமலிங்க சேதுபதி காலத்தில் அவரிடம் புலவராக விளங்கியவர். செய்யுள் பாடுவதிலே திறமை மிகுந்தவர். பணவிடு தூது, தருமர் அசுவமேதயாகப் புராணம், விநாயகர் திருமுக விலாசம் முதலியன இவரியற்றிய நூல்கள்.]

[பிசினரை வெறுத்துப் பாடியன]

1085. வெண்பாச்சொல் கவிஞரே வந்ததே தும்மிது
மெய்த்தமிழ் பாடிவந்தோம்
வெகுநேர்த்தி முன்னமே நானூறு கோவையொரு
வித்துவான் பாடிவந்தான்
தண்பாக மனம்வைத்து மூன்றுபடி பெருவரகு
நான்கொடுத் தேனதற்கிந்
நாடெலாந் தெரியுமென் மனையாட்டி மூன்றுதர
நான்றுகொண் டுயிர்பிழைத்த
புன்பா டெலாமறிந் தின்னநீர்கவி சொலும்
புலவரென் றிங்குவந்தீர்
போம்போ மெனச்சொலிப் புலையாடு புலையரொடு
போராடவோ படைத்தாய்
தென்பாவெ னும்பொருட் பாமாலை பூண்டுபத
சேவைதந்தருள் புரிகுவாய்
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்னமே.

(அ - ரை.) தேசிகம் - அழகு. மூன்றுதரம் நான்று கொண்டு - மூன்று முறை தற்கொலை செய்யத் தொடங்கி. புலையாடு புலையரொடு - இழிவான சொற் சொல்லுகின்ற கீழ் மக்களொடு. தென்பா எனும் பொருள் பாமாலை பூண்டு பத சேவை தந்தருள் புரிகுவாய் - தெளிந்த பாட்டாகிய பொருள்

நிறைந்த பாட்டுக்களின் மாலையணிந்து உன்னுடைய திருவடிக் காட்சியை எனக்கு அளித்தருள்வாயாக. (க)

1086. வந்தவரி யாவர்காண் கவிராச ரெந்தவூர்
வடகாசி யெங்குவந்தீர்
மகராச னென்றுனது கீர்த்தியைக் கேட்டுன்மேன்
மதுரகவி பாடிவந்தோம்
சந்ததமும் வித்துவா னல்லநீர் என்னுடைய
தாதைமூ தாதைவழியிற்
றமிழ்கேட்ட தியாவர்காண் டலைமுறை யிலில்லாத
தாழ்விதைச் செய்துவந்தீர்
இந்தமொழி மற்றுமொரு தரநீ ருரைக்கிலோ
விரணகள மாகுமப்பா
லேகுமென் றேநிடும் புல்லர்தம் பாற்செலா
தெனையாள விதுதருணமே
சிந்திக்கு மன்பருக் கருண்மழை சொரிந்ததிக
செல்வங் கொடுக்குமுதலே
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்னமே.

(அ - ரை.) சந்ததமும் வித்துவான் அல்லநீ - நீ எப்போதும் கல்விமானாக இருக்கிறவனில்லை. இரணகளமாகும் - போர்க்களமாகும். இப்பாடல் வினாவிடையா அமைந்தது. (உ)

1087. வாருநீ ராரென்ன வித்துவா னென்னலும்
மதிமோசம் வந்ததென்றே
வாய்குழறி மெய்யெலா மிகநடுக் குற்றுநீர்
வந்தகா ரியமேதெனச்
சீருலா வியகாம தேனுவே தாருவே
சிந்தாம ணிக்குநிகரே
செப்புவசனத்தரிச் சந்த்ரனே யென்னலுஞ்
சினந்திருக ணுஞ்சிவந்தே

ஆரைநீ மாடுகல் மரமென் றுரைத்தனை
யலாதரிச் சந்த்ரனென்றே
அடாதசொற் சொற்றனை யார்க்கடிமை யாயினேன்
ஆர்கையிற் பெண்டைவிற்றேன்
தீருமோ இந்தவசை யென்றுரைசெய் வெகுகொடிய
நியரைப் பாடிநொந்தேன்
திருமன்றுள் நடுநின்று நடமொன்று புரிகின்ற
தென்றில்லை நடராசனே.

(அ-ரை.) யாரை நீ மாடுகல் மரம் என்று சொன்னதும் அலால் அரிச்சந்திரன் என்று அடாத சொல் சொன்னை - காமதேனுவைப் போல் மாடென்றும் கற்பகம் போல் மரமென்றும் சிந்தாமணியைப் போல் இரத்தினக் கல்லென்றும் வைததுமல்லாமல் அரிச்சந்திரனென்றும் பொருந்தாச் சொல்லைக் கூறினீர். (ரு)

1088. நீதிபெறு கல்விப்ர தாவந் தெளிந்திடு
நிதான ஞானப்பிரகாசம்
நித்தியசு மங்களக் கவிதாப்ர சங்கமன்
னேயசுந் தரவிலாசம்
வேதாந்த சாகரஞ் சித்ராவ தானதமிழ்
மேகஞ்ச பாரஞ்சிதம்
வித்வசன சேகரஞ் சேதுபதி வாசலில்
விளங்குநவ ரத்னதீபம்
சீதரன் சோமசுந் தரகுரு சுவாமிபிரு
திருவடி துதிக்குமடிமைச்
சீர்பெறுஞ் சரவணப் பெருமாள் கவிச்சுரச்
செயசிங்க மெழுதுமோலை
மாதவன் விசயசயரகு நாததுரை தொண்டை
மானெதிர் நடந்துகாண்க
வரிசைபெறு தரதொன்று பாடிவந் தனமுனது
மனகிழ்ந் தருள் புரிவையே.

(அ - ரை.) பிரதானம் - முக்கியமடைந்தவன். தெளிந்திடு நிதானம் - ஆராய்ச்சி பண்ணித் தேர்ந்த நடுவு நிலைமையுடையவன். ஞானப் பிரகாசம் - அறிவு விளக்கு. நித்திய சுமங்கல கவிதாப் பிரசங்கம் மன் - என்றும் மங்கலமான பாக்களைச் சொற்பொழிவாகப் பொழிகின்ற பாவேந்தன். நேயர் சுந்தர விலாசம் - அன்பும் அழகும் பரவிய தன்மையுடையவன். வித்வசனசேகரன் - கல்விமான்களுடைய கூட்டத்திற்குத் தலைவன். சீதரன் - திருமகள் தங்குபவன். (ச)

[பிசினர்கள் தன்மையைக் குறித்துப் பாடியன]

1089. ஏதுபுல விர்விளைவு தழைவிலாக் காலத்தில்
எமதூர் பெயர்விசாரித் (து)
இவ்வளவு தொலைவந்த தொல்லையென அப்பொழு (து)
இரண்டுபதி னுறுபல்லில்
எவ்வளவு மறையாமல் அவ்வளவு மேதெரிய
இருகரமும் ஏந்திவாய்விட் (டு)
இன்புறப் புன்சிரிப் புற்றுமது சற்கீர்த்தி
எல்லாந் தெரிந்துளத்தில்
காதல்வைத் துத்தமிழ் பாடிவந் தோமெனக்
கழறினுஞ் செம்பிருதுலாங்
காய்ச்சியே காதிலிட் டதுபோலும் இம்மொழி
கலக்கமாய்க் கேட்டும் ஐயா
கவிராச ரேவிட்டில் ஒருமாத மாகநோய்
கண்டுபெண் பிளைபிழைத்தல்
கடினம்வெகு கடினமத னுல்வரும் விருந்துகள்
கணக்கில்லை இவ்வூரிலோர்
பாதக வயித்தியன் கைத்தாது பற்றுமுன்
பைத்தாது பற்றியின்னம்
பற்றுது பற்று தெனச்சொலியென் அடிவயிறு
பற்றநான் நூறுகொத்துப்
பனையே டெலாம்வாரி வாரிமுன் வாகடப்
பாவிலுள அவுழ்தமெல்லாம்

பாவிமகன் எழுதியொரு காசும்வை யாமல்
பருங்கரடி பிசல்வனையின்
மோதியே வாய்வைத் துறிஞ்சியது போல்தடையம்
முழுவதும் உறிஞ்சிவிட்டான்
மூத்தகுடி யான்நமக் கேற்றகுடி யலவென்று
முறைமுறை யெடுத்துரைக்கும்
முழுமூடராங் கொடிய லோபியர்கள் மேல்தமிழ்
மொழிந்தவர் இடஞ்செலாமல்
முப்பொழுது போற்றுமெற் கருள்புரிவை எங்குநிறை
முதலான பரமசிவமே.

(அ - ரை.) சற்கீர்த்தி - நல்ல புகழ். கழறினல் - கூறினல். கைத்தாது - கைந்நாடி. பைத்தாது - பையிலுள்ள பொருள். வாகடம் - வைத்திய நூல். தடையம் - பொருள். (ரு)

1090. ஆரடி வீதியிலொ ரேடுகொண் டோடியே
அவசரம தாய்வருகிறர்
ஐயையோ புலவர்மார் போலேயிருக் கின்ற (து)
யாரென்று மெள்ளவெட்டிப்
பாரடி தலைமறைய நின்றுகொண் டவர்நெடும்
பாதைவழி போகிறதுதான்
பரண்மேல் எனைத்தூக்கி விட்டுவிடு தாழையடை
பழிகாரி கதவுபோடு
கூர்மைமொழி கேட்டதிக சீக்கிரம் வந்திடுவர்
குதிருக்குள் ளேயொளித்துக்
கொள்ளடி யெனப்புகலும் லோபியர்கள் மேல்தமிழ்
கொண்டுபோய் அலையாமலே
சீரடி துதித்துநற் பாமாலை சாற்றியே
தெரிசிக்க முத்திதருவாய்
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்னமே.

(அ - ரை.) அவசரம் - விரைவு. கூர்மை மொழி - மெதுவான சொல். தேசிகம் - அழகு. சிரோரத்நம் - முடிமணி. (௬)

1091. தலைவாச லின்கதவை யாரடி திறந்தவர்கள்
தமிழ்வாணர் வரில்விடுவரோ
தாரமல நீகிரக சாரமோஅட்டமச்
சனியனோ வேதுகுறையோ
அலையா தலைந்துநான் கவிவாணர் தங்களால்
ஆனந்த வருடத்திலே
யான்பட்ட பாடையோ யாவரறி வாரந்த
ஆதிபக வானறிகுவார்
மலையாமல் உன்மனம் இருப்பதேன் புலவர்மார்
வரிற்சுமா போவரோதான்
மனம் பதறு தேயெனப் புகல்பவர் இடஞ்செலா
மல்காக்க இதுதருணமே
சிலையாரு நுதல்விழிக் கௌரிகௌ மாரிசெக
தீச்வரி வராகிநிமலி
தேசிகம் பூத்தஉமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்னமே.

(அ - ரை.) தமிழ்வாணர் - தமிழ்ப் புலவர்கள். தாரம் - மனைவி. கிரகசாரம் - சனி. மலையாமல் - கலங்காமல். சிலையாருநுதல் - வில்லைப் போன்ற நெற்றி. (எ)

1092. உலகிலெதிர்ப் பட்டவன் நான்தானே உங்களுக்(கு)
ஒருதொழில் தானும்இலையோ
ஒட்டாரங் காட்டியே நித்தநித் தம்வந்(து)
உபாதிக்கி றீர்களேயோ
புலவரென் றுல்தனம் கொட்டிவைத் தீர்களோ
புதையல்யான் எடுத்ததுண்டோ
புளுகுகற் றதுபோலொர் தொழில்கற்க வொண்ணுதோ
புகழ்வதால் பயனேதுகாண்

கலைகற்ற வர்களெனில் நெஞ்சம்மெரி கின்றதே
கவிராச ரேசெல்லுவீர்
காசென் விடத்திலை சபிக்கிலஞ் சேனேனும்
கசடர்மேல் தமிழ்பாடியே
செலும்வழி மறித்தென்னை யாள விதுதருணமே
சிற்சபை நடிக்குமுக்கண்
தேசிகம் பூத்தஉமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத்னமே.

(அ - ரை.) ஒட்டாரம் - ஏமாற்றுதல். உபாதிக்கிறீர்கள் - தொல்லைப்படுத்துகிறீர்கள். புளுக - பொய் சொல்ல. கசடர் - அற்பர். (அ)

[மகமது தம்பி மரைக்காயருக்கு வழிச்செலவுக்குப் பணங் கேட்டு எழுதியனுப்பியது]

1093. அவ்வொன்று மவதானி தமிழொன்று வெகுமானி
அறிவொன்று சேதுபதிபால்
அணியொன்று வெகுமானி சோமசுந் தரகுருவின்
அருளொன்றும் அடிமைவெள்ளைக்
கவ்வொன்று மலைநாவ னதியொன்று கோத்திரன்
கனியொன்று குவளைமார்பன்
கதியொன்று சரவணப் பெருமாட்க விசுரன்
கையொன்று மெழுதுமோலை
தெவ்வென்று சமர்வென்ற திகழ்மகம் மதுதம்பி
தீரனெதிர் கொண்டுகாண்க
செழுஞ்சென்ன பட்டண மதிற்கேகு வோம்வழிச்
செலவுக்கு வேண்டுமதனுல்
உவ்வொன்று யவ்வொன்று லவ்வொன் று டவ்வொன்று
சவ்வொன்று மவ்வொன்றுவவ்
வொன்றுரவ் வொன்றுரவ் வொன்றுகவ் வொன்றுனவ்
வொன்றுவர விடல்வேண்டுமே.

(அ - ரை.) அவ்வொன்றும் அவதானி - அட்டாவதானி. உவ்வொன்று முதலிய சொற்களின் முன்னேயுள்ள எழுத்துக்களை ஒன்று படுத்திக் கூட்டு மிடத்தில், உ௦ (20) லட்சம் வராகன் என்று அமைதலைக் காண்க. (௯)

[முத்துக்கருப்பண்ணனுக் கெழுதிய சீட்டுக்கவி]

1094. கல்விச் சமுத்திரங் கமலால யந்தமிழ்க்
கடல்மடை திறந்தவெள்ளம்
கற்பனை பிறப்பிடங் கலைமக ளிருப்பிடம்
கவிமாரி பொழியுமேகம்
சொல்விற் பனம்விளையு மதுரக் களஞ்சியம்
தோன்றுகற் பூரதீபம்
சுகிர்தகுண வவதானி சரவணப் பெருமாள்கை
தொட்டெழுதி விட்டசனது
வில்லுக் கருச்சுனன் சொல்லுக் கரிச்சந்த்ரன்
வெற்றிக்கு விக்ரமார்க்கன்
வித்தைக் ககத்தியன் முத்துக் கறுப்பண
விலட்சண னெதிர்ந்துகாண்க
மல்வெற்றி யாயென்று தாயென்று நீயென்று
மாலென்று வேலென்றுகா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருள்புரிகவே.

(அ - ரை.) மல் வெற்றியாய் - மற்போரில் வெற்றியை யுடையவன். தாயென்று - தாய் போன்றவன் என்று. காவென்று - காப்பாயாக வென்று. (௧௦)

[திருமலைராயன்பட்டினத்தார்க்கு எழுதியது]

1095. எவ்வன மனேன்மணி பதப்பணி கொள்சேதுபதி
இறைவன்மணி வாசல்மணிவாய்
இலகுமணி சைவமணி சோமசுந் தரகுருவென்
ஐயன்மகிழ் சிந்தாமணி

செவ்வசன மொழிதமிழ்ச் சரவணப் பெருமாள்
சிரோமணி யனுப்புமோலை
செய்யதிரு மலைராயன் பட்டினத் தவரெலாம்
சிரசின்மேற் கொண்டுகாண்க
இவ்வூரில் வந்துதிரு மலைராய ணைப்போற்றி
இலகுகவி காளமேகம்
எமகண்டம் ஒருதினுசு பாடினுன் நாமுமிங்(கு)
ஈரெட்டு வகைபாடுவோம்
ஒவ்விதனை யறிந்துகன தனவரிசை உதவினுல்
உமதுகுடி வாழிவாழி
உதவா திருப்பிரெனில் உமதுபட் டினமின்னும்
ஒருமிக்க மண்மாரியே.

(அ - ரை.) எவ்வனம் - இளமை. பதப்பணி - வழிபாடு.

[சென்னைத் தெளிய சிங்கன் அவர்களுக்கெழுதியது]

1096. பைங்குவளை மார்பனெடு வையைவள நாடனுயர்
பார்த்திவர்கள் புகழ்நலூரன்
பாக்கியநதி குலதிலகன் யோக்கியபரன் மேழிப்ப
தாகையன் பூமிபாலன்
மங்கலக் கவிராசன் வித்வசன சேகரன்
மணத்தமிழ்ச் சம்ப்ரதாயன்
வச்ரதே கன்பத்ம நாபன்வே லாயுத
மகாமந்த்ரி குருபுத்திரன்
துங்கமிகு சேதுபதி மகிழுநே சன்சோம
சுந்தர சுவாமிதாசன்
சோடச வவதான சரவணப் பெருமாள்
சுயம்ப்ரகா சன்கையோலை
பொங்கிவளர் செல்வச் செழுஞ்சென்ன பட்டினப்
பொன்னகர்த் தெளியசிங்க

பூப வெதிர் வந்துகண் டுன்சபையி லவதான
புனிதமறி வுறல்வேண்டுமே.

(அ - ரை.) பார்த்திவர்கள் - அரசர்கள். மேழிப் பதாகை - கலப்பைக் கொடி. வித்வசன சேகரன் - அறிஞர்களாற் போற்றப் படுமவன். (கஉ)

[கட்டப்பொம்மன் அவர்களுக்கெழுதியது]

1097. நாவலவ ருக்குளொரு நடுநாய கம்புவியில்
ராசரா சர்க்குமகுடம்
நதிகுல வரோதயஞ் சகலகலை ஞாபகம்எந்
நாளும்வித் யாடம்பரம்
பூவில்விலை மதியாத மாணிக்க மவதாந
புனிதபாற் றேங்குதங்கம்
புகழுமனு விக்யான நாற்கவி விலாசமெய்ப்
புத்தமு தடைத்தகும்பம்
மாவள மிகுங்கொலுச் சேதுபதி வாசலில்
வயங்கு கற்பூரதீபம்
வளர்தமிழ்ச் சோமசுந் தரகுரு பதத்தின்மா
மலரருச் சனைசெயன்பன்
மேவுபுகழ்ச் சரவணப் பெருமாள்கை யோலைசெய
வீரபாண் டியவுதார
விருதரசு கட்டபொம் மேந்த்ரதுரை யெதிர்கொண்டு
வெகுவரிசை வரவிடுகவே.

(அ – ரை.) நதிகுல வரோதயம் - கங்காகுலத்தில் மேன்மை யாகப் பிறந்தவன். சகல கலை ஞாபகம் - எக்கலைகளும் நினைவி லிருப்பவன். (கங)

[நவகிரி வரகுணராம செந்தொட்டி அவர்களுக்கெழுதியது]

1098. வார்பெறுங் கலசமுலை யார்மதன் சேதுபதி
வாசல்ப்ர சண்டவாக்கி
வடிதமிழ்க் கும்பன்சு வாமிநாதன் துணைவன்
வளர்நெல்லை யப்பன்மைந்தன்

பார்பெறுங் குணஞான சோமசுந் தரகுரு
பதாம்புயம் பரவுதாசன்
பைந்தமி ழிலக்கண விலக்கியக் கடலுண்டு
பாரெலாம் பொழியுமேகம்
கார்பெறுங் கையனுயர் சரவணப் பெருமாள்
கனிந்தெழுது கின்றவோலை
கதிகொள்நவ கிரியில்வர குணராம செந்தொட்டி
காளையெதிர் கொண்டுகாண்க
சீர்பெறுப னென்றுலட் சங்கோடி பொன்பெறச்
செய்துனைத் தேடிவந்தோம்
திண்புய மதிற்புனைந் தென்றனை யனுப்பிடிற்
செகமெலாங் கொண்டாடுமே.

(அ - ரை.) வார் - கச்சு. கலசம் - குடம். மதன் - காமன் பதாம்புயம் - திருவடித் தாமரை. கார் பெறும் - முகிலின் வண்மை பெற்று. (கச)

[சிவகங்கைவாசிகளுக் கெழுதியது]

1099. தண்ணமுத சாகரம் கவிதாப்ர சங்கம்
தமிழ்க் கடலையுண்ட மேகம்
சற்குண விலாசமெய்க் கவிராச சிங்கம்வெண்
டாமரை மடந்தைவாசம்
வண்ணப்ர பந்தத்து மும்மதக் குஞ்சரம்
மணத்தவட் டாவதானம்
வாசாம கோசரம் கல்விப்ர வாகந்தெய்
வச்செயல் வரப்ரசாதம்
கண்ணிலவு முல்லையணி சேதுபதி வாசலில்
கனகாபி டேகயோகம்
கற்றவர்கள் கொண்டாடு சரவணப் பெருமாள்
கவிச்சக்ர வர்த்தியோலை

பண்ணுலவு சிவகங்கை யம்பதிப் பேட்டையில்
பலரெதிர் நடந்துகாண்க
பரிவுறு புராதனமி வூரென்று வந்தனம்
பணந்திரள வரவிடுகவே.

(அ - ரை.) அமுதசாகரம் - அமுதக் கடல். குஞ்சரம் - யானை. கண்ணிலவு - கள் + நிலவு = தேன் தங்கிய. புராதனம் இவ் வூர் என்று - இவ்வூர் பழமையானது என்று. (கஙி)

[காரைக்கால் இலட்சுமண மந்திரி அவர்களுக்கெழுதியது]

1100. மரபுதவி ராதவன் சோமசுந் தரகுரு
மலர்ப்பதம் பரவுதாசன்
வண்டமிழ்ச் சரவணப் பெருமாள் கவிச்சக்ர
வர்த்திநேர்ந் தெழுதுநிருபம்
வளர்காரை யம்பதியின் மேவுதுரை லட்சுமண
மந்த்ரியெதிர் கொண்டுகாண்க
வரணருக் குபகாரி நீயாகை யாலெமது
வல்லமையு மகிமையுங்கேள்
கருணீகர் நால்வர்க்கு நாற்கவிதை சொல்வாய்
கனவேலு மயிலுமென்னக்
காலிலொரு கவிதையுயர் தோளிலொரு கவிதையிரு
கையிலொரு கவிதையெழுதக்
கணக்கொரு புறஞ்சொல விலக்கொரு புறஞ்சொலக்
கானுத திரைமறைவிலே
கனசூது சதுரங்க மொடுகுதிரை யடிசொலக்
கன்னெல்லு முதுகிலெண்ணப்
பரிவுபெற் றப்புதுச் சேரியில் சென்றினிய
பண்பரிற் சினையவாத்தி
பண்புள குமாரபா ரதிமதுர கவிவிர
பத்ரகவி கொண்டாடவே

பாக்கியன்ஆ நந்தநா தன்சபையி லுஞ்செய்து
பல்லக்கு வரிசைபெற்றேன்
பலகா வியங்களுந் தெரிவே னளப்பரிய
பஞ்சலட் சணமுமறிவேன்
அரசரில் உயர்ந்ததுரை யாரெனிற் சேதுபதி
ஆகுமவன் மனிவாயிலில்
அகத்திய முனிக்குமதி கங்கற்ற கவிகளாய்
ஆயிரங் கவிவாணருண்(டு)
அவரிலொரு சிறுவன்யான் பாடவறியேனென்
றகற்றிவிட் டார்களென்னை
ஆதலாற் பூமியில் சஞ்சரித் தேன்நின்
னகந்தனில் மகிழ்ந்தருள்வையே.

(அ - ரை) மரபு - முறைமை. முதலிரண் டடிகளால் அட்டாவதானம் விளக்கப்படுகின்றது. (கசு)

[சிங்கப்பூர்க் குமாரவேல் அவர்களுக்கெழுதியது]

1101. மகபதி நராதிபதி நீதிபதி சேதுபதி
வாசற்ப்ர சண்டவாக்கி
வடிதமிழ்ச் சோமசுந் தரகுருசு வாமியடி
மைக்குமடி மைக்குமடிமை
மயில்வாக னக்கடவுள் அருளினல் உபயசா
மரவிருது கொண்டதுல்யன்
மலையாள ராசனருள் தந்தப்பல் லக்குவெகு
மதிபெற்ற சார்வபூமன்
இகமெலா மகிமைபெறு தஞ்சைமக ராசனையோர்
ஏழடி யழைத்தநிபுணன்
உசிதனச ரதுநபா பிருகையால் தருவரிசை
ஒருகையால் வாங்குகவிஞன்
உற்றசிவ கங்கையில் கௌரி வல்லபராசன்
உதவுவள நாடுபெற்றேன்

உயரிலங் கைப்பூமி ராசசமு கத்தினிலும்
ஒருகோடி வரிசைபெற்றோன்
ககனமு தண்டவே தண்டபிர் மாண்டமுங்
கவிபுகழ் படைத்தஉரவோன்
காசிமுத லாகரா மேச்சுர வரைக்கும்
கவித்துவசம் நாட்டுவிசயன்
கற்றுச்சொ லிக்கும்வெகு நானுப திக்குமிரு
கனகதண் டிகைகொடுத்தோன்
கவிமதக் குஞ்சரம் சரவணப் பெருமாட்
கவிச்சக்ர வர்த்தியோலே
புகழ்மேவு சிங்கைநகர் வளருங் குமாரவேல்
பூபனெதிர் கொண்டுகாண்க
பொரவரா வேங்கைகை பாராத தாதுசெம்
புங்குளமை யாதசாமி
புவியிலிரு ளாவேம மேய்ந்துவள ராமாடு
பொங்கிவே காதகாணம்
பூண்டொடி படாவத்தம் அறுபடா உடலேழு
பொதிதந்து நீவாழியே.

(அ - ரை.) மகபதி - இந்திரன். நராதிபதி - அரசன். பொரவரா-போரிட வராத. வேங்கை-புலி, பொன். கைபாராத தாது - பொன். பொன், சாமி - கடவுள், பொன். ஏமம் - இரவு, பொன், மாடு - ஓர் விலங்கு, பொன். காணம் - கொள், பொன். அத்தம் - கை, பொன். உடல் - உடல், பொன். பொரவரா வேங்கை என அடை மொழிகொடுப்பவே அது பொன் என்பது தோன்றும், இவ்வாறே மற்றவைகளையும் காண்க. (கஎ)

[இரவணப்ப பூபன்பேரில் எழுதிய சீட்டுக்கவி]

1102. தொடையெலாந் திரிபுசொற் பொருளெலாங்கற்பனையெ
துகையெலா மாலைமாற்று
சொல்லெலாம் மதுரம்வெண் பாவெலாங் கதைகலித்
துறையெலாம் ஏகபாதம்

தூதெலாஞ் சந்தமஞ் சரியெலாங் கௌடமா
சுகளெலாந் தனிநிரோட்டம்
சுயமெலாம் நிமிடமெய்க் கணமெலாம் கணம்வனத்
துறையெலாம் நாகபந்தம்
அடையெலாஞ் சிவசரிதை சிந்தெலா நீதிகோச்
சகமெலாம் அடிமடக்கவ்
வடியெலா மேமகமுயர் பதமெலாங் கட்டுநா
டகமெலாம் நவசித்திரம்
அசையெலா மிருபொருள்சொ னூலெலாம் வேதமட்
சரமெலாம் பிர்மலிகிதம்
அளபெலாந் தராசுநிறை முடிவெலாம் பொருளா
வமைத்தெலாம் பாடுகவிஞன்
பெடையெலாஞ் சேரனப் புடையெலாஞ் செறிவயற்
பெருநலார் தேவைமுல்லைப்
பிணையலாஞ் சேதுபதி புகழெலாம் போற்றிவரு
பெட்பெலாந் திகழ்சிலாக்யன்
பெறுநலாஞ் சோமசுந் தரகுரு பதத்தைப்
பிறப்பெலாம் போற்றுமடிமை
பேச்செலாம் அமுதமொழி யாச்சொலுஞ் சரவணப்
பெருமாள் விடுங்காகிதம்
படையெலாங் கொண்டுபொரு பகையெலாம் வென்றுநற்
பண்பெலாம் அறியுநிபுணன்
பாரெலாம் போற்றவரு ரவணப்ப பூபனெதிர்
பண்பெலாங் கொண்டுகாண்க
பலனெலாம் பெலனெலாம் நலனெலாம் கலனெலாம்
பரியெலாங் கரியெலாம்பொற்
பணியெலா மணியெலாந் துகிலெலாம் நெல்லெலாம்
பணமெலாந் தரல்வேண்டுமே.

(அ - ரை.) தொடை - தொடுக்கப்படுவது. ஏகபாதம் - நான் கடியும் ஓரே தன்மையாக அமைவது. ஆசு - விரைந்து பாடப் பெறுவது. நிரோட்டம் உதடுகள் பொருந்தும் எழுத் தின்றி வருவது. (கஅ)

[பாகை நகர் சொக்கலிங்கம் அவர்களுக்கெழுதியது]

1103. அட்டதிசை பணிசெயுஞ் சேதுபதி மணிவாசல்
அட்டாவ தானசிங்கம்
அருந்தமிழ்ச் சோமசுந் தரகுரு சுவாமியடி.
மைக்குமடி. மைக்குமடி.மை
அசரது நபாபுவை வரச்சொலிக் காகிதமோர்
ஆள்வசம் அனுப்பிவைத்தோன்
ஆயிரத் தெட்டடி. வரச்சொலிச் சனதுதன
வாய்முதலி யார்க்குவிட்டோன்
எட்டடி. வரச்சொலித் தஞ்சை ராசர்க்குமுன்
னிலகுசீட் டுக்கொடுத்தோன்
ஏழடி. வரச்சொல்லி மலைராச னுக்கோலை
எழுதியுத் தரவுசெய்தோன்
இனியபா லையகார ருக்கெலாம் ஒப்பமிட்(டு)
எழுதுதிரு பங்கொடுத்தோன்
இக்கரையு மல்லாமல் அக்கரையில் யாழ்ப்பாணம்
எல்லாங்கிள் ளாக்குவிட்டோன்
கொட்டமிடு லோபரைப் புத்திவர வன்கவிக்
கொறடாவி னலடிப்போன்
கூறிய கவிக்கர்த்தம் அறியார்கள் தலையிலே
குட்டிப் பயன்சொல்லுவோன்
குற்றஞ்சொல் வோர்களைச் சோழன்மக னைப்போலக்
குத்திச் சினந்தவிர்ப்போன்
கோளர்களை வசையெனுங் கவிதைக் கயிற்றாடு
கோத்துத்தோ ரணங்கட்டுவோன்

கட்டிமா ணிக்கமுயர் சரவணப் பெருமாட்
கவிச்சக் ரவர்த்தியோலை
கனபாகை நகர்மேவு சொக்கலிங் கக்கொடைக்
கன்னனெதிர் கொண்டுகாண்க
கணபதி தருந்திரு முகத்தைமுன் சொன்னபடி
கண்டரங் கேற்றியன்பாய்க்
கனகமும் பவளமும் தரளமுங் கோமேத
கங்களுந் தந்தருள்வையே.

(அ - ரை.) கிள்ளாக்கு - ஓலைச்சிட்டு. கோளர் - புறங் கூறுவோர். கனகம் - பொன். தரளம் - முத்து. (௧௧)

[பாலசா ராவுத்தர் குமாரர் முத்தத்துலுமுருபாதர் ராவுத் தருக்கெழுதியது]

1104. பனகசய னத்தன்ப்ர சித்தன்மகி மைச்சேது
பதிமகிழ் தமிழ்ப்ரசங்கன்
பைந்தமி ழகத்தியன் சோமசுந் தரகுரு
பதாம்புயம் பரவுமுரவோன்
பாரகா வியமதொடு லட்சாதி லட்சப்ர
பந்தமொரு நாழிகையிலே
பாடியெவ ருக்குமரி தான வவதானம்
பகுக்குமுயர் சம்ப்ரதாயன்
தனகனக வாகன விநோதசர் வக்ஞான
சாம்ராச்ய சார்வபூபன்
சற்புத்ர சன்மார்க்க சற்ப்ரபல சற்கீர்த்த
சத்சிநே கப்ரதாபன்
சகலகுண சம்பன்ன சிரோரத்ன முக்யபுனி
தப்ரதா னச்சிரேட்டன்
சரவணப் பெருமாட் கவிச்சரப மெனுஞான
சனகனெமு துங்காகிதம்

குனிவில்மக தத்தர்வட கந்தர்நிட கத்தர்குட
கத்தர்மூனை மக்கர்மச்சர்
கொச்சிய குலத்தர்குளு வத்தர்துளு வத்தர்குரு
தத்தர்மிது லைக்குளரசர்
கொங்கணர் கவுந்தியர் தெலுங்கரொடு டங்கணர்
குலிங்கரடல் சிந்துமகிபர்
கொங்கர்சில வங்கர்பல கங்கர் செறி யங்கரணி
கொண்டுநிலை நின்றுபணியக்
கனதைபெறு மசரதுந பாபுபா லாசாவுட்
கருணையா யுதவுமினிய
கனியுமுமு தத்துலு முருபாதர் மகாராச
காவல னெதிர்ந்துகாண்க
கடலெலாஞ் சூழ்ந்திடும் புவிச்சக்ர வர்த்திநீ
கவிச்சக்ர வர்த்தியாமே
கண்டாய் சொல் அவதான முறைபார்க்கி லுன்புகழ்
கதிக்குமல குளமட்டுமே.

(அ - ரை.) பனகசயனத்தன் - திருமால். பதாம்புயம் - அடித்தாமரை. குனிவில் - வளைக்கின்றவில். மகதத்தர் முதல் கங்கர் வரையுள்ளவை அவ்வந் நாட்டினரைக் குறிப்பிடும் இடத்தால் வருபெயர். (உ0)

[செல்லையம்பதி முத்தழகு சாமிராவுத்தர் அவர்களுக் கெழுதியது]

1105. வெண்ணப்ர பந்தத்து முத்தமிழ்ப் பாமும்ம
தத்தைக் கரத்தொழுக்கி
வறப்பினும் வளந்தரு பொருப்பொப் பௌச்சித்ர
வாய்விட் டதட்டிவேட்டு
மதுரகவ ளத்தைத் திரட்டித் திரட்டிச் செவ்
வாய்மடுத் துண்டுகோட்டு
வம்பெழூத் தாளிகொண் டுற்றெழுகல் விக்கடல்
வயங்குப்ர ளயத்தின்மூழ்கி

அண்ணவரு வெவ்வினைக் கொப்பத்தை யெற்றிநால்
அடிகொண்ட பண்ணடத்தி
அழகியந ஹற்பணிக் கச்சமிட் டெக்களித்
தாக்ரமித் துக்ரமுற்றி
அட்டாவ தானமெனு முன்மத்த மேறியறி
யாமைமிக வந்தறித்தே
ஆறுந் துதிக்கைபெற் றுக்கட் கடைப்பொழி
அனற்பிறக் கச்சினந்தே
பண்ணார செனத்திறைகொ டாமனவு லூத்தப்
பசாசரை வளைந்துகொண்டே
பழமொழி யிருப்புலக் கைப்படையி னுற்சிதறு
பஞ்சுபஞ் சாவடித்துப்
பரகுரு வெனும்பாக னடிமலர் சுமந்தவன்
பனிமலர்த் தோட்டிநுனியாற்
பரிவுடன் வணங்கிடுஞ் சரவணப் பெருமாட்
பருஉக்களி றனுப்புமோலை
தன்னமிர்த வாரியுயர் செல்லையம் பதியரசு
சங்கநிதி சேதுபதிவர
சன்மார்க்கன் மகன்மகன் தலைமுறைக ளாகப்ர
தானியாம் யூகிமந்த்ரி
தந்த்ர முத் தளகுமரு மகனுன முத்தளகு
சாமியெதிர் கொண்டுகாண்க
சார்வான தூதொன்று பாடிவந் தனமுனது
தயவுகூர்ந் தருள்புரிவையே.

(அ - ரை.) முத்தமிழ் - இயல், இசை, நாடகம். கரம் - கை. வறப்பினும் - காய்ந்தாலும். பொருப்பு - மலை. கோட்டு - கொம்பு. அண்ண - நெருங்க. கொப்பம் - படுகுழி. நிகளம் தறித்து - விலங்கினை யறுத்து. பனிமலர்த் தோட்டி நுனியால் - குளிர்ச்சியான பூவாகிய அங்குசத்தின் நுனியால். பருஉக் களிறு - பெரிய யானை. (உக)

[கேரள தேசத்து அரசர்க்கெழுதியது]

1106. மாதுபதி தாதுபதி யாதுபதி சேதுபதி
வாசற் கவிப்ரசங்கன்
மங்களா கரபுஞ்ச நாற்கவிகள் நிறைகும்ப
மதுரப்ர பந்தமேகம்
வடிதமிழ்க் குஞ்சரம் கவிராச சிங்கமது
ராகமவ தானசரபம்
வண்ணக் களஞ்சியம் சிந்துச் சமுத்திரம்
மணக்குந் தமிழ்ப்பொக்கிடம்
சோதிப்ர காசஞ் சிலாக்யசற் பாத்திரம்
சுகிர்தசற் சைவதுல்யம்
சுகாதிக சுசாதிக சுதாகர சுயாகம
சுபாகசற் புருடரத்னம்
சுதந்தர சுமங்கல சுரஞ்சித சுமந்திர
சுயம்ப்ரகா சப்ரதாபம்
சுபத்திர சுலட்சண சுகற்புத சுகற்சன
சுகப்ரபல ரத்னகரம்
காதல்செய் சிவக்யான விற்பன தடாகஞ்ச
கலகலைக் யானபீடம்
கல்விப்ர வாகம்வித் யாடம்ப ரந்தமிழ்க்
கடல்மடை திறந்தவெள்ளம்
கனசபா பூடணம் சோமசுந் தரகுரு
கடாட்சவிட் சணவிலாசன்
கங்கைகுல திலகனுஞ் சரவணப் பெருமாள்
கவிச்சக்ர வர்த்தியோலை
ஆதிகே ரளராம வன்மைமக ராசனேழ்
அடியெதிர் நடந்துகாண்க
அசரது நபாபுசரி பேட்டிபெற் ரேமியாம்
அறியாத தேசமில்லை

அரியதென் திசை வந்த தேதெனிற் பொதிகையில்
அகத்தியன் இருக்கிருனும்
அவனையுங் கண்டுனது மகிமையுங் கண்டுநாம்
அறியலாம் எனவந்ததே.

(அ - ரை.) மாதுபதி-செல்வத்திற்குத் தலைவன். தாதுபதி-பொன்னுக்குத் தலைவன். மதுரப்ரபந்த மேகம்-இனிய பாக்களைப் பொழியும் முகில். (உஉ)

[முத்திருளப்ப வள்ளல்மீது எழுதியது]

1107. மாருமல் வாய்வேலு மயிலுமெனவே சொல்ல
வாசகங் கைகள்எழுத
வருகணக் கொருபுறம் தீரமற் ருெருபுறம்
வரைந்திடு மிலக்கமாற
வளைதிரைக் குட்சிறிது கல்லணி வகுக்கின்ற
வன்கணக் கினிதுபகர
மருவு சொக் கட்டானும் விளையாட மறைவாக
வைத்தசது ரங்கமாடக்
கூருக எட்டெழுத் தாணி எழுதும்படிக்
குங்கவிதை பகரவதிலோர்
கூரெழுத் தாணிசது ரங்கமுது குப்புறம்
குதிரையடி வெண்பாவரக்
கூறுபுல வோர் சபையில் அட்டாவ தானமுல
கோர்புகழ வேநடத்தக்
கோடிலாச் சதுரங்க மாடவய லிருக்
குஞ்சூது மாடவொருபால்
ஏருகி வண்ணப்ர பந்தமெட் டுப்பேர்க்
கெழுத்தெழுத் தாவுரைக்க
இவ்வாறு நாற்புறக் கவிதாப்ர சங்கம
திசைக்கும்ப்ர சண்டவாக்கி

இலக்கண இலக்கியக் கடலை முழுதுங் குடித்
தேப்பமிடு காளமேகம்
இனிய கவி யவதானி சரவணப் பெருமாள்கை
பெரூதுமொப் பத்தினேலை
சேருடு குங்குமக் கொங்கையார் மடலெழுது
திவ்யரம ணிகமோகன்
சேதுபதி வாசற்ப்ர தானிமுத்தி ருளப்ப
சிங்கவே றெதிர்ந்துகாண்க
சித்தபரி பூரண கடாட்சவிட் சணகுண
தியாகபரன் நியாகையால்
செந்தமிழ்க் காதற்ப்ர பந்தமொன் றுன்மீது
செய்துவந் தனமகிழ்ந்தே.

(அ - ரை.) இச்செய்யுளிலும் அட்டாவதான முறைகூறப் பெறுகிறது. பிரதானி - முதன்மையையுடையவன். தியாகபரன் - கொடையில் உயர்ந்தோன். காதல் பிரபந்தம் - நூல்வகைகளில் ஒன்று. (உரு)

[இராமநாதபுரத்தரசருக் கெழுதியது]

1108. நானூறு வண்ணமற் றைஞ்ஞூறு மஞ்சரி
நடத்துமறு நூறுதூது
நாலாயி ரம்பரணி ஐயாயி ரங்கோவை
நாடகம் பதினுயிரம்
நாற்பத்து நாலாயி ரத்துநா னூறுபத
நாலிலட் சங்கொச்சகம்
நாற்பத்தி ரண்டிலட் சந்தாழி சைகளொரு
நாழிகை தனிற்பாடுவோன்
தேனூறு மதுரச் செழுந்தமிழ்க் கெல்லையாய்ச்
சித்தாந்த வேதாந்தரஞ்
சிதவுசித சிரேட்டசக லாகம புராதன
சிலாக்யசெள சன்யாதிகன்

திடசித்த சற்குண சற்சன வரப்ரசா
திபசம்ப்ர தாயதுல்யன்
செய்யநவ கண்டமூ தண்டவே தண்டவித்
யாடம் பரப்ரசண்டன்
வானூர் பெரும்புகழ தலவிதல சுதலநிகி
லங்களில் வயங்குமுசிதன்
மைக்கட் கடற்பொற் புவிக்குட் ப்ரசித்தத்
தவக்கொற் றவர்க்குரியவன்
மகராச ராசருந் திறைதருஞ் சேதுபதி
வாசற் கவிப்ரசங்கன்
வண்டமி ழிலக்கணச் சோமசுந் தரகுருசு
வாமியடி மைக்குமடிமை
பானூறு மென்மொழிச் சரவணப் பெருமாள்ப்ர
பலகவிஞ னெழுதுமோலை
பாவைதென் தேவைரா மீசனருள் பெறுபரா
பரராம நாதமுனிவன்
பாதமற வாதவன் ராமநா தேந்த்ரசம்
பன்னனெதிர் கொண்டுகாண்க
பனிமதிச் சடிலன்மேல் இனியபண விடுதூது
பாடிவந் தனமகிழ்ந்தே.

(அ - ரை.) வயங்கும் உசிதன் - விளங்குகிற மேன்மையை உடையவன். பானூறு மென்மொழி - பாலும் இனிமை கெடும்படியான இனிய சொல்லை உடையவன். பனிமதிச்சடிலன் - குளிர்ந்த திங்களையணிந்த சடையையுடைய இறைவன். (உச)

[யாழ்ப்பாணம் வைத்தியலிங்கம் அவர்களுக்கெழுதியது]

1109. செயராம நாதனே தெய்வந் தனுக்கோடி
தீர்த்தமே தீர்த்தமெங்கள்
சேதுபதி யேராச னெனவனைங் கார்களைச்
சீறிவா யைக்கிழித்துச்

செள்ளையை நொறுக்கிவளர் பல்லையு முடைத்துச்
செழுங்குட ரையும்பிடுங்கிச்
சிரசையு மறுத்துக்ர முகவிருது பெறுவிசய
சிங்கடா கைப்ரசண்டன்
நயமதுர மறியாத முழுமடையர் செவியென்னு
நல்லபாம்புப் புற்றிலே
நவினத் திருந்தமிழ்ச் செந்தேன் குழம்பையொரு
நாளுங் கவிழ்த்திடாதோன்
நாவலந் தீவிலுள நாடெலாம் புகழ்பெறு
நராதிபர் வணங்குதுய்யன்
நாவலர் குழாம்பல துதிக்குமட் டாவதா
னப்ரபல சார்வபூமன்
இயலா யிரங்கோடி பிரபந்த முழுதுமோர்
இமைப்பொழுதி னிற்பாடுவோன்
இலக்கண சமுத்திரஞ் சோமசுந் தரகுருவென்
ஐயனடி மைக்குமடிமை
ஏகசக் ராதிபதி சரவணப் பெருமாட்க
விச்சுரன் செங்கையோலை
இந்த்ரதரு யாழ்ப்பாணம் மேவிய வயித்தியலிங்
கேந்த்ரனெதிர் கொண்டுகாண்க
வயமான கையிலே மூக்குள்ள தொன்றுதிரு
மாயன் பிறப்பிலொன்று
வாற்புறமொர் கொம்புந் தலைப் புறமொர் கொம்புமுள
வாகனந் தன்னிலொன்று
வலியார் புரங்களைச் சுடுகின்ற பொருளொன்று
வாரமது தன்னிலொன்று
வரமுடன் வெளுத்தசந் திரனென்று நீயின்ன
வரிசைதந் தருள்புரிவையே.

(அ - ரை.) செள்ளை - கன்னம். நளினத் திருந்தமிழ் - அழகிய செந்தமிழ். நராதிபர் - அரசர். கையிலே மூக்குள்ளது - யானை. மாயன் பிறப்பிலொன்று - குதிரை. வாற்புறமொர் கொம்பும் தலைப்புறமொர் கொம்பும் உள வாகனம் - பல்லக்கு. வலியார் புரங்களைச் சுடுகின்ற பொருள் - பொன். வாரமதில் ஒன்று - வெள்ளி. வெளுத்த சந்திரன் - வெண்மையான கலை. ஆடை - வேட்டி. (உரு)

[சிவகங்கை யரசரை முன்னிலைப் படுத்தித் தாம் ஆங்காங்கு நிகழ்த்திய வியத்தகு செயல்கள் இவை இவை என்று பாடியது]

1110. அரியலூர் வீரன்மேல் பாடியவ னெருவிட்டை
ஆயிரம்வி டாக்கிவைத்தோம்
அம்மைநா தன்பேரில் வண்ணம் படித்தவனை
அரசுநிலை யிட்டுவைத்தோம்
ஆப்பனூர்க் குறவஞ்சி பாடியே கோடையுடன்
ஆடையும் விளையவைத்தோம்
ஆநந்த நாதனுக் குப்புதுச் சேரிதனில்
அறியாச்செல் வங்கொடுத்தோம்
கருதியச ரதுநவா புவையெதிர் வரச்சொலிக்
காகிதம் அனுப்பிவைத்தோம்
கடலாடி முத்துக் கருப்பணன் வணந்தனைக்
கற்றோர்க்க முதமாக்கினோம்
காரைநகர் லட்சுமண முதலிபுகழ் பெறநங்
கடைக்கணாற் பார்த்துவிட்டோம்
கவித்தலந் தன்னின்முத் தையனூப் பனைக்கற்ப
காலமும் இருக்கவைத்தோம்
வரிசைபெறு பஞ்சமால் பண்டார முத்யோகம்
மாரு திருக்கவைத்தோம்
மற்றுமவ னுக்கிளைய பிச்சாண்டி செட்டிக்கு
வச்ரதே கங்கொடுத்தோம்
வாடும் பயிர்க்குத் திருக்கூட லூரிலே
மழைபெய்ய நாம்பாடினோம்

மகம்மது தம்பிக்கு நிறை சாகா
 வரத்தைக் கொடுத்துவிட்டோம்
திருவையாற் றுச்சுப்ர மண்யபிள் ளைக்குச்
 சிரஞ்சீவி தனையளித்தோம்
சேதுபதி வாசலவ தானியாம் நம்மகிமை
 தெரியாத பேருமுண்டோ
தெள்ளமுது போலவென் னுளமீது பாடிவரு
 செந்தமிழ் நிறுத்தலாமா
சிவகங்கை யரசுபுரி கவுரிவல் லவராச
 செகமண்ட லாதிபதியே.

(அ - ரை.) வணம் - வண்ணம், அஃதாவது நிறம். கவித் தலம் - ஓர் ஊர். (உசு)

கககo. வசைகவி ஆண்டான் புலவர்

[பாண்டி நாட்டில் ஒட்டப் பிடாரம் என்னும் ஊரில் தோன்றியவர். வாக்குப்பலித முள்ள வசை கவி. வசை பாடு தலையே மேற்கொண்டிருந்தமையின் வசைகவி என்னும் அடை பெற்றார். அரசர்களும் இவருடைய பெயரைக் கேட்ட அளவில் அஞ்சி நடுங்கினர்.]

[ஆவுடை என்னும் தாசிக்குப் பொட்டுக் கட்டியபோது கூறியது.]

[கலித்துறை]

1111. நீண்ட பிரான்கட்டி னுன்றிரு மாதுக்கு நெட்டரவம்
பூண்ட பிரான்கட்டி னுமை மாதுக்குப் புண்டரிக
மூண்ட பிரான்கட்டி னுன்கலை வாணிக்கு முன்னற் சிக்கல்
ஆண்ட பிரான்கட்டி னுன்றிரு நாணிந்த ஆவுடைக்கே.

(அ - ரை.) திருநாண் - திருமங்கிலியம். முன்னர் சிக்கல் ஆண்டபிரான் கட்டினுன் இந்த ஆவுடைக்கே - முன்னே சிக்கல் என்னும் பதியினையாண்ட குமரப்பெருமான் இந்த ஆவுடை யென்னுந் தாசிக்குக் கட்டினுன். (க)

1112. பேசிக்கல் லாரமுந் திங்களும் போனட்புப் பேளியரை
வாசிக்கல் லாலரைக் காசுங்கொ டார்கடன் வாங்கினதை
யேசிக்க லாகவெ டாதுவி டாரிவ ரென்னசென்மம்
சீசிக்க லாருற வாகாது காளிச் செகத்தென்றுமே.

(அ-ரை.) கல்லாரம் - நீர்க்குளிரி. வாசி - வட்டப்பணம். கடன் வாங்கினதையே சிக்கலாக எடாது விடார் - கடன் கொடுத்த பணத்தைத் தொல்லைப்பட்டாகிலும் வசூல் செய்யாது விடமாட்டார்கள். சீசி - இகழ்ச்சிக் குறிப்பு. கலார்-கல்லார். (உ)

1113. கானை நகர் கண்டேன் கன்மவினையைத் தொலைத்தேன்
ஆனைமடுவிற் றீர்த்த மாடினேன்—ஞானம்
பொருந்தினேன் காளீசர் பொற்றுண் மரையில்
வருந்தினேன் பெற்றேன் வரம்.

(அ-ரை) கானைநகர் - திருக்கானப்பேர். ஆனைமடு - திருக்கானப்போரில் உள்ள ஒரு பெரிய புனித நீர்த்தடாகம். (ங)

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண்-பாட்டு எண்]

கழகப் புதிய வெளியீடுகள்

தமிழ்ப் புலவர் அகரவரிசை : (தொகுதி உ, பகுதி உ)

—சு. அ. இராமசாமிப் புலவர்

தமிழ்ப் புலவர் வரலாறுகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இந்த அகரவரிசை நூல்களின் முதற்றொகுதியைத் தொடர்ந்து இரண்டாம் தொகுதியின் 2 ஆம் பகுதியாக வெளி வந்துள்ள இந்நூல் மிக்க பயனுள்ள நூல்.

கலிக்காக்கட்டு விலை ரூ 5 00

பெருங்கதை-உரை

—பெருமழைப் புலவர். பொ. வே. சோமசுந்தரனார்

சொற்சுவையும் பொருட்சுவையு மிக்க பெருங்கதைக்குச் சிறந்த பொழிப்புரையும் விளக்கவுரையும் அடங்கியுள்ளன. இது நான்கு புத்தகங்களாக வெளிவந்துள்ளது. தமிழன்பர்கட்குப் பயன்படும் இந்நூல் 4 பகுதிகளும் சேர்ந்து

விலை ரூ 28 00

தேவார ஒளிநெறிக் கட்டுரை (சுந்தரர்)

—தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ.,

தேவாரத்தை ஓதி ஆய்வார்க்கும், அதனை ஏனைச் சிறந்த செந்தமிழ் நூல்களோடு ஒப்பிட்டுக் காணவிழைவார்க்கும் பெரிதும் பயன்படும் நூல். கலிக்காக்கட்டு விலை ரூ 5 00

'எது இன்ப வாழ்வு?'

—யோகி. என். இராஜன்

உடல்நலம் பேணும் வழிகள் பல. அவற்றுள் யோகாசனப் பயிற்சி முதன்மையானதாகும். அதனைச் செய்வது எங்ஙனம் என்பது பல படங்களுடன் இதன்கண் விளக்கப்பட்டுள்ளது. டாக்டர் சர். சி. பி. இராமசாமி ஐயரவர்கள் அணிந்துரையுடன் கூடியது. விலை ரூ 3 75; பரிசுப் பதிப்பு 5 00

சட்டமன்ற நடைமுறை

—பு. இரா. பக்கிரிசங்கர் எம்.ஏ.பி.எல்.

சட்டமன்றங்களின் நடைமுறைகள் எப்படி எப்படி அமைந்துள்ளன, சட்டங்கள் எப்படி உருவாக்கப்படுகின்றன, சட்டமன்ற உறுப்பினர் கடமைகள் யாவை என்பன இதன்கண் நன்கு விளக்கப்பட்டுள்ளன. கலிக்காக்கட்டு விலை ரூ 6 50